இந்திய வரலாறு

(கி. பி. 1000—1707)

ஆசிரியர்

டாக்டர் ந. சுப்ரமண்யன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—704

இந்திய வரலாறு

(கி. பி. 1000—1707)

[மேற்பட்டப் படிப்பிற்குரியது]

ஆசிரியர்

டாக்டர் ந. சுப்ரமண்யன், எம்.ஏ., பிஎச்.டி.,

வரலாற்றுத் துறைத் தலைவர்,

மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1976

T N.T.B.S. (C.P.) No. 704

© Government of Tamilnadu

HISTORY OF INDIA

(A.D. 1000—1707)

DR. N. SUBRAHMANIAN

Price Rs. 8-80

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

Printed by:
Yasotha Printers,
48, Vaithiyanatha Mudali Street,
Madras-600001.

பதிப்புரை

இந்திய வரலாறு (கி.பி. 1000—1707) என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 704ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 739 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

பொருளடக்கம்

பகுதி I

		பக்கம்
	தோற்றுவாய்	... 1
1.	இந்திய அரசுகள் (கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டுகள்)	... 20
2.	சோழர் பேரரசு (1000-1279)	... 32
3.	பாண்டியர், சேரர், கங்கர் (920-1327)	... 41
4.	தமிழக அரசுகளின் ஆட்சி முறைகளும் சமுதாய வாழ்க்கையும்	... 46
5.	டெல்லி சுல்தானிய காலத்து வரலாற்று மூலங்கள்	... 50
6.	கஜினி மம்மூது (998-1030)	... 55
7.	கோரி முகம்மது (1173-1206)	... 70
8.	டெல்லி சுல்தானியம் (1206-1526)	... 77
	(அ) அடிமை சுல்தான்கள் (1206-1290)	
	(ஆ) கில்ஜிகள் (1290-1320)	
	(இ) துக்ளக்குகள் (1320-1412)	
	(ஈ) சையிதுகள் (1414-1451)	
	(உ) லோடிகள் (1451-1526)	
9.	டெல்லி சுல்தானியத்தின் வீழ்ச்சி	... 156
10.	சுல்தானியக் காலத்து ஆட்சி முறைகளும் சமுதாய மரபுகளும்	... 158
11.	தக்காணத்து அரசுகள்	... 168
	(அ) ஹொய்சளர்கள்	
	(ஆ) யாதவர்கள்	
	(இ) காகதியர்கள்	

பக்கம்

12. வட இந்தியச் சிற்றரசுகள் (மொகலாயர் ஆட்சி பரவும் வரை) ... 175

13. பாமனி அரசு (1347-1493) ... 181

14. தக்காண, தமிழகச் சிற்றரசுகள் ... 192

(அ) ஒரிஸ்ஸா நாட்டுக் கஜபதி (1435-1565)

(ஆ) மதுரை சுல்தான்கள் (1335-1378)

15. விசயநகர அரசு (1336-1565) ... 196

16. விசயநகர ஆட்சி முறைகளும், சமுதாய வாழ்க்கையும் ... 210

17. நாயக்க அரசுகள் ... 214

18. தக்காணத்துச் சுல்தானியர்கள் ... 222

(அ) பீஜபூர்

(ஆ) அகமது நகர்

(இ) கோல்கொண்டா

(ஈ) பேரார்

19. இந்தியப் பண்பாடு கடல்கடந்து பரவியமை ... 230

பகுதி II

20. மொகலாயர் ஆட்சித் தொடக்கம் ... 234

(அ) வரலாற்று மூலங்கள்

(ஆ) பாபர்

21. ஹுமாயூன் (1530-1540) ... 241

22. சூர்வமிசம் (1540-1555) ... 245

23. அக்பர் (1556-1605) ... 252

24. ஜஹாங்கீர் (1605-1627) ... 275

25. ஷாஜஹான் (1628-1658) ... 285

26. அரசுரிமைப் போர் ... 294

27. சீக்கியர் தோற்றம் ... 299

28. ஔரங்கசீப் (1658-1707) ... 303

29. மொகலாயர் ஆட்சிமுறை; சமுதாய நிலை; கலையும் இலக்கியமும் ... 317

பக்கம்

பகுதி III

30. மராட்டியர் தோற்றம் ... 334
(அ) சிவாஜி
(ஆ) தஞ்சையில் மராட்டியர்
31. இந்தியாவில் ஐரோப்பிய வணிகர் ... 347
(அ) போர்த்துகீசியர்
(ஆ) டச்சுக்காரர்
(இ) டேனிஷ் வணிகர்
(ஈ) பிரெஞ்சுக்காரர்கள்
32. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ... 354
மரபுவழிப் பட்டியல் ... 359
மேற்கோள் நூற்பட்டியல் ... 373
கலைச்சொற்கள் ... 375

பகுதி I

தோற்றுவாய்

கி.பி. 1000 ஆண்டுக் காலத்திலிருந்து இந்திய வரலாற்றினை முழுமையாக அறிந்துகொள்ள விரும்புவோர்க்கு, கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10ஆம் நூற்றாண்டுவரை அரசியல், சமூகத்துறைகளில் நாட்டின் வரலாற்றை முன்னோடியாக அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாம். அவ் வரலாற்றினை இந் நூலின் தோற்றுவாயாகக் கீழே தருகிறோம்.

வட இந்தியா

ஹர்ஷர் இறந்தபிறகு, வடஇந்தியா பல சிறு இராச்சியங்களாகச் சிதறிற்று. பேரரசர்களோ, அன்றி அவர்கள் மரபில் வந்த வலுவுள்ள பிற அரசர்களோ ஆண்டு மறைந்தபிறகு எப்போதும் நாடு சிற்றரசர்களால் கைப்பற்றப்பட்டுச் சிதறுதல் அரசியல் இயற்கைகளில் ஒன்று. குப்தப் பேரரசு காலத்திற்குப் பிறகு வடஇந்தியாவில் வலுவுள்ள அரசு மறைந்து பல சிற்றரசர்கள் மலிந்த நிலையில் ஹர்ஷவர்த்தனர் தோன்றி ஒரு வகை அரசியல் ஒருமையை வடநாட்டில் நிறுவினார்; ஆயினும், அவருக்குப் பின் வர்த்தனர் குலத்தில் தக்க வல்லார் இன்மையால் மறுபடியும் சிற்றரசர் ஆட்சி மிகுந்தது.

கி.பி. 647-ல் ஆதித்யசேனர் என்பவர் மகதத்தில் ஒரு பேரரசு நிறுவியதோடு ஹர்ஷரைப் பின்பற்றிப் 'பரமபட்டாரகர்' என்னும் பட்டத்தையும் புனைந்துகொண்டார். அவர் விஷ்ணுவிற்கு ஒரு கோவில் நிறுவினார்; அவர் குடும்பத்தவர் யாவருமே பொதுமக்கட்கு நன்மை புரிவதில் பெருவிருப்புக் கொண்டவராயினர். இரண்டாம் ஜீவிதகுப்தர் என்பார் ஒருவரைப்பற்றியும் பேரரசர் என்னும் முறையில் கேள்வி

யுறுகின்றோம். இம் மகத மன்னர்கள் யாவரும் பேரரசுப் பட்டங்கள் புனைந்துகொண்டனர்; அவர்களது பெருமித அரசியல் வாழ்க்கையும் பெருமையாகப் பேசப்படுகின்றது. ஆயினும், இம் மன்னர்களை ஹர்ஷரது அடியொற்றி எழுந்த வடஇந்தியப் பேரரசர்கள் என்று மதித்தல் கூடாது. இந்து, பௌத்தப் பேரரசு மரபுகள் மறைந்தமையால் ஏற்பட்ட குழப்பம் தோற்றுவித்த அரசுகளே இவை.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிறுதியில் இந்தியாவிற்கு வந்து சென்ற ஈ-சிங் என்னும் சீனர் அக் கால இந்திய அரசியல், சமூக நிலைகளைப்பற்றி எழுதிவைத்த குறிப்புகள் வரலாற்றாளர்க்கு மிகுந்த பயனுடையவை. இக் குறிப்புகளிலிருந்து பௌத்த மதம் அப்போதே குன்றிவிட்டது அல்லது குன்றத் தொடங்கி விட்டது என்பது வெளியாகின்றது. ஆயினும், இக் குறிப்புக்களை எழுதியவர் ஒரு பௌத்தர் என்பதையும் நினைவுகூர்தல் வேண்டும்.

ஹர்ஷர் ஆண்டுவந்த தானேசுவரில், அர்ச்சுனர் என்னும் ஓர் அமைச்சர் அரசை வலியக் கைப்பற்றியாளத் தொடங்கினார். ஆனால், பௌத்தப் பேரரசரான ஹர்ஷரின் அரசை ஆளத் துணிந்த இவ் வமைச்சரை யொறுப்பதே முறை என்று கருதிய சீனர் பிற பௌத்தர்களை ஆதரித்து, அவ் வாட்சியைக் கவிழ்த் தனர். ஆயினும், சி. வி. வைத்யா போன்ற சில வரலாற்றாசிரி யர்கள் தானேசுவரின் அரசியல் விவகாரங்களில் சீனர் குறுக் கிட்டதாகக் கூறப்படுவதை நம்புவதில்லை.

கிருகவர்மன் இறந்த பிறகு ஹர்ஷர் தமதாக்கிக்கொண்டு ஆண்டுவந்த கனோஜியின் வரலாறு அப் பேரரசர் இறந்து ஒரு நூற்றாண்டுவரை இருள் சூழ்ந்து நிற்கின்றது. இவ் விருண்ட காலத்திற்குப் பிறகு கனோஜை ஆண்ட முக்கியமான மன்னர்களில் முதன்மையானவர் யசோவர்மர் (730-770) என்பவர். இம் மன்னர் வாழ்க்கையின் முற்பகுதி எத்துணைப் பெருமையோடு அமைந்ததோ அத்துணை வருந்தத்தக்க முறையில் அமைந்தது, அவ் வாழ்க்கையின் பிற்பகுதி. இம் மன்னரின் வாழ்க்கையைப் பற்றி யாமறிவதெல்லாம் பெரும்பாலும் வாக்பதிராஜா என்பார் இயற்றிய ‘கௌடமன்னரின் இறுதி’ என்னும் கவி வாயி லாகவே. இக் கவி யசோவர்மரின் திக்குவிசயத்தைப்பற்றிக் கூறு கின்றது. இத் திக்குவிசயத்தில் இம் மன்னர் கௌட மன்னரை வென்று வங்காளத்தைக் கைப்பற்றிக் கனோஜி திரும்பிய வரலாறு கூறப்படுகின்றது. இந் நூலை இயற்றிய இப் புலவர் முன்பு கௌடர் அவைக்களத்தே இருந்தவர். யசோவர்மர் வெற்றிக்குப்

பிறகு வங்காளத்தைவிட்டு நீங்கி வெற்றி வீரரான யசோவர்மரோடு கனோஜிக்கு வந்துவிட்டார். இந் நூலிற் கண்ட இவ் விவரங்கள் தவிர நாளந்தாவில் கிடைத்த ஒரு கல்வெட்டுச் சான்றுதான் இம் மன்னரைப்பற்றி நாமறிய உதவுகின்றது. இந்த யசோவர்மரைச் சிலர் யசோதவர்மர் என்னும் மன்னரொடு தொடர்புபடுத்தி இருவரும் ஒருவரே என்று கூறுவர். ஆனல், இது பொருந்துவதாகத் தோன்றவில்லை. இம் மன்னரின் வெற்றி வாழ்க்கை துன்பகரமான முடிவு எய்துவதற்குக் காரணமாயிருந்த முக்கியமான நிகழ்ச்சி காஷ்மீரத்து மன்னரான முக்தாபீட லலிதாதித்யர் என்பவர் கனோஜியின் விவகாரங்களில் தலையிட்டமையேயாம். இது நிகழ்ந்தது கி.பி. 731-க்கும் 747-க்கு மிடையே எனலாம்.

காஷ்மீர நாட்டு வரலாற்றிற்குத் தலைசிறந்த ஆதாரநூலும், சான்றும், கல்ஹணர் என்பார் இயற்றிய ராஜதரங்கினி என்னும் நூலே யாம். அந் நூலில் முக்தாபீட லலிதாதித்யர் கனோஜியை வென்று கைப்பற்றிய வரலாறும் அந் நிகழ்ச்சியின் காரணமாக யசோவர்மர் இறந்துபட்டமையும் கூறப்படுகின்றன. இந்த யசோவர்மர் அரசியல் உலகில் மின்னல்போல் தோன்றி மின்னல் போல் மறைந்தவர். ராமாப்யுதயம் என்னும் நாடக நூலை இயற்றியவராக அவர் கருதப்படுவதால், அவருக்கு இலக்கியப் பயிற்சி மிக்கிருந்தமை புலப்படும். ஆயினும், அந் நூல் மறைந்து போயினமையால் அவரது இலக்கியப் பயிற்சியை அளவிட இயலாது. அவர் தாமே நூலியற்றியதோடு நில்லாமல் பிற அறிஞர்களையும் ஆதரித்தவர். வாக்பதிராஜரும், மாலதி மாதவம், மகாவீர சரிதம், உத்தரராம சரிதம் என்னும் அரிய வடமொழி நாடக நூலை இயற்றிய பவபூதியும் அவரால் போற்றப்பட்டவர்கள். பவபூதியை வடமொழி இலக்கிய விமர்சகர்கள் காளிதாசருக்கு அடுத்தபடியாகக் கருதுவர். அவர்தம் நாடகங்களில் சோகரசம் மிக்குக் காட்டும். அவர் ஆங்கிலப் புலவரான மில்ட்டனுரைப் போலக் கல்வி கேள்விகளிலும் மிக்கு விளங்கியவர். விண்டர்நிட்ஸ் என்னும் ஆசிரியர் பவபூதியை 'இந்திய ஷேக்ஸ்பியர்' என்று கருதுவார்.

யசோவர்மர் காலத்திற்கும், கனோஜியை ராஜபுத்ரர்களான கூர்ஜ்ஜரப் பிரதிகாரர்கள் கைப்பற்றிய காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில், வடஇந்தியாவில் ஒன்றுக்கும் உதவாத சிற்றரசர்கள் ஆட்சியே மேம்பட்டது. காஷ்மீரத்து ஜயபீடவிநயாதித்யரால் வெல்லப்பட்ட வஜ்ராயுதர், சுமார் கி.பி. 810-ல் வங்காளத்துத் தர்மபாலரால் வெல்லப்பட்ட

இந்திராயுதர், ஏறத்தாழக் கி.பி. 816-ல் கூர்ஜ்ஜரப் பிரதிகாரர் இரண்டாம் நாகபட்டர் என்பவரால் தோற்கடிக்கப்பெற்ற சக்ராயுதர் என்பார் போன்றவர்களே இக் காலத்தில் ஆண்ட மன்னர் பெருந்தகைகள். இவ்வாருகக் கி.பி. 10ஆம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் கனேஜி சுதந்தரத்தை இழந்து ராஜபுத்ரர் ஆட்சியிற்பட்டது.

கூர்ஜ்ஜரப் பிரதிகாரர்கள் என்பார் இராசபுத்ரரில் ஒரு பிரிவினர். இவர்களுக்கும் கூர்ஜரம் ஆகிய குஜராத்துக்கும் தொடர்பு உண்டு. இராஜபுத்ரர்கள் இந்திய வரலாற்றில் இக் காலத்தில்தான் முதன் முதலாகக் கேள்வியுறுகின்றனர். அவர்களை ஹூணர்களின் வழித்தோன்றல்கள் என்று பெரும்பான்மையோர் கருதுவர். ஹூணர்கள் மத்திய கிழக்கு ஆசியப் பகுதிகளிலிருந்து தென்ஆசியாவை யடைந்து பல வெற்றிகளைக் கண்டவர்கள். அவர்களிற் சில குழுவினர் வடமேற்கு இந்தியாவிலேயே தங்கி விட்டனர். அவர்கள் நாளடைவில் இந்தியப் (இந்து) பழக்க வழக்கங்களை மேற்கொண்டுவிட்டனர். இராசபுத்ரர்களை க்ஷத்திரியர்கள் என்று கருதுவது ஒரு மரபு; ஆயினும், அவர்கள் ஆரியரது நான்கு வருணங்களில் இரண்டாவதான க்ஷத்திரியர் வகுப்பைச் சேர்ந்தவர்களல்லர் என்பது தெளிவு. பிரித்விராஜ சௌஹான் என்னும் அவரது வாழ்க்கை வரலாற்றினைக் காவியமாகச் செய்த சாந்த் என்னும் புலவர் ராஜபுத்ரர்களை க்ஷத்திரியர்கள் என்று கருதுவரேனும், அதனைக் கவிமரபு என்று ஒதுக்கிவிடுதலே முறையாகும். இராசபுத்ரர் வமிசங்களில் மத்திய ஆசியக் குழுக்கள் பலரின் தொடர்பு தொடக்ககாலத்தில் இருந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமின்று. இராசபுத்ர வமிசங்கள் பலவற்றுள்ளும் கூர்ஜ்ஜரப் பிரதிகாரர்கள் சிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கூர்ஜ்ஜரர்களும் ஹூணர்களும் வெளியிட்ட நாணயங்களிடையே காணப்படும் ஒற்றுமையைக் கொண்டும், கூர்ஜ்ஜரரையும் ஹூனர்களையும் ஒரே நிலையில் வைத்துப் பாணர் என்னும் கவிஞர் கூறு மாற்ருலும் இவர்களிடையே ஒற்றுமை காண்பர் சிலர். ஆனால், மேற்கூறிய இக்காரணங்களை மறுத்து, ஹூணர்களும் இராசபுத்ரர்களும் வேறு வேறு இனத்தைச் சேர்ந்தவராகையால் அவர்களை ஒரு கூட்டத்தினர் என்று கருதுதல் பொருந்தாது என்பர் ரிஸ்லி என்னும் மானிடஇயல் அறிஞர். ஆயினும், ஹூணர் வேறு; இராசபுத்ரர் வேறு என்று நிறுவப்பட்டாலும் இராசபுத்ரர்கள் இந்தியர்களல்லர்; வெளிநாட்டிலிருந்து இந் நாட்டினுட் புகுந்து இந்துக்களின் மரபுகளை மேற்கொண்டவர்கள் என்று கருதுதற்கு இடையூறு ஒன்றும் இன்று. கி.மு. 8ஆம் நூற்ருண்டைச் சார்ந்த க்ஷத்திரியர்களுடைய நேர்வழித்தோன்றல்களே கி.பி. 8 ஆம்

நூற்றுண்டைச் சேர்ந்த இராசபுத்ரர்கள் என்று கருதுதல் சற்று மிகையே யாகும் என்க.

கூர்ஜ்ஜரப் பிரதிகார அரசகுலத்தை நிறுவியவர் முதலாம் நாகபட்டர் (கி.பி. 725-740) என்பவரே. அவருக்குச் சற்றுப் பிற்காலத்தில் தோன்றி மிகுந்த புகழோடு ஆண்டவர் வத்ஸராசர் (775-800) என்பவர்; அவர் வங்காளத்தை வென்று கைப்பற்றியவர். ஆயினும், பிற்காலத்து ராஷ்டிரகூட மன்னரான துருவர் என்பவரால் தோற்கடிக்கப்பட்டவர். அன்றியும், இறுதியில் வங்காளத்து மன்னராலேயே வெல்லவும் பெற்றூர். அவருக்குப் பிறகு மன்னரான இரண்டாம் நாகபட்டர் (கி.பி. 800-834) காலத்தில் கூர்ஜ்ஜரப் பிரதிகாரரின் செல்வாக்கும் பெருமையும் மறுபடியும் தலைதூக்கின. கனோஜி அவர்களுடைய தலைநகரமாயிற்று. இடையே ராஷ்டிரகூட மூன்ரும் கோவிந்தர் என்பாரோடு பொருது இவர்கள் தோற்றனராயினும் இவர்களது ஆட்சிப் பெருமை குன்றவில்லை. இரண்டாம் நாகபட்டரைத் தொடர்ந்து இராமபத்ரர் (834-840) என்பார் மன்னரானூர்; அவருக்குப்பின் அவர் மகன் மிகிரபோஜர் (840-890) என்பவர் அரசுகட்டிலேறினுர். இம் மிகிரபோஜர் என்பாரே கூர்ஜ்ஜரப் பிரதிகார மன்னர்கள் யாவருள்ளும் வல்லவர். அவர் காலத்தில் அவர்களது பேரரசின் பரப்பும் மிகுந்தது. அவர் பேரரசில் பஞ்சாப், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தானம், பண்டேல்கண்டு முதலிய பகுதிகள் அமைந்தன. மாளவமும் குஜராத்தும் கத்தியவாரும் அவர்தம் சந்ததியர்களின் பேரரசின் பகுதிகளாயமைந்தன. அவர் வெளியிட்ட காசுகளிற் பெரும்பாலானவை வெள்ளி நாணயங்களாம். அவர் போஜபுரம் என்னும் மாநகரத்தை நிருமாணித்தார் என்று கூறுவர். அவர் காலத்தில் வங்காளத்துப் பாலர்கள், இராஷ்டிரகூடர்கள் ஆகியோர் தாக்குதல்களின்றிக் கூர்ஜ்ஜரப் பிரதிகார இராச்சியம் அமைதியாக இருந்தது. ஆயினும், காஷ்மீரத்து மன்னரான சங்கரவர்ம உத்பலர் என்பவர் வெற்றியோடு இவர்கள் அரசினைத் தாக்கியமை நினைவுகூரற்பாலது. இவர் காலத்தில் இராச்சியத்தின் பரப்பு பேரரசுக் குப்தர்களுடைய ஆட்சிப் பரப்பினும் எவ்வாற்றூனும் குறைந்ததன்று.

மிகிரபோஜரை யடுத்து அவர்தம் மகன் முதலாம் மகேந்திரபாலர் (890-908) என்பார் மன்னரானூர். இவர் பெரும்புகழ் படைத்தவர். தந்தையார் விட்டுச்சென்ற அரசை ஓரளவு வலுப்படுத்தி விரிவாக்கியவர் இவர். இவரது ஆட்சியில் வங்காளத்தின் வடபகுதியும் அடங்கிற்று. பாலராமாயணம், பாலபாரதம்,

கர்ப்பூர மஞ்சரி முதலிய நூல்களின் ஆசிரியரும், சிறந்த நாடக ஆசிரியருமான இராசசேகரர் என்னும் புலவர் இம் மன்னர்தம் ஆசிரியரும் அவைக்களக் கவிஞரும் ஆவர். அவர்தம் நாடகங்கள் எளிமையும் இனிமையும் மிக்கவை. அவர் செய்யுளியலைப்பற்றிய நூல் ஒன்றையும் புவனகோசம் என்னும் பெயரிய புவியியல் நூலொன்றையும் ஆக்கினர். அவர் நூல்களிற் காணப்பெறும் பல குறிப்புகள் வரலாற்றாசிரியர்கட்குப் பயன்படுவனவாம்.

இரண்டாம் போஜர் (908-914) என்பவர் மகேந்திர பாலரின் மகன்; தந்தையை யடுத்து அரசுரிமை பெற்றவர். அவருக்குப்பின் அவரது ஒன்றுவிட்ட சகோதரர் முதலாம் மகிபாலர் (914-943) என்பவர் மன்னரானர். அவர் காலத்தில்தான் கூர்ஜ்ஜரப் பிரதிகாரரின் ஆட்சி வீழ்ச்சியுற்றது. கி.பி. 916-ல் ராஷ்டிரகூட மன்னர் மூன்றும் இந்திரர் என்பார் முதலாம் மகிபாலரைத் தோற்கடித்து அவ் வரசகுலத்திற்கு இறுதி கண்டார். மூன்றும் இந்திரர் கி.பி. 917-ல் இறந்தார்; கூர்ஜ்ஜரப் பிரதிகாரர்களும் தமது அரசின் பெரும்பகுதியைத் திரும்பக் கைப்பற்றும் வாய்ப்பும் பெற்றனர். ஆயினும், அவ் வரசகுலம் அதன் பண்டைய பெருமையை மறுபடியும் எக் காலத்திலும் பெறவில்லை. முதலாம் மகிபாலர்க்குப் பிறகு அவ் வரசை இரண்டாம் மகேந்திரபாலர், தேவபாலர், விநாயகபாலர், இரண்டாம் மகிபாலர், இரண்டாம் வத்ஸராஜர், விஜயபாலர் ஆகிய மன்னர்கள் ஆண்டார்கள். இவ் வரசர்கள் அரசுரிமை பூண்டு ஆண்டனர் என்பதைத் தவிர வேறு விவரங்களை வரலாறறியாது. ராஜ்யபால கூர்ஜ்ஜரர் என்பவர் கனோஜியைக் கி.பி. 960-லிருந்து 1018 வரை ஆண்டார். அவர் அரசு கங்கைக்கும் யமுனைக்கும் இடைப்பட்ட சிறு நாட்டையே குறிப்பதாயிற்று. கி.பி. 1018-19 என்னும் ஆண்டில் கனோஜியைக் கஜனி மம்மூது என்னும் முஸ்லிம் மன்னர் தாக்கித் தகர்த்தார்; ராஜ்யபாலர் எதிரிக்கு அஞ்சி முன்னெச்சரிக்கையோடு கீழ்ப்படிந்துவிட்டாராயினும் மம்மூதின் படையெடுப்பையும் தாக்குதலையும் அவரால் தவிர்க்கமுடியவில்லை. மம்மூது தாம் வந்த வினை முடித்துக் கொண்டு திரும்பியபின் சண்டேல மன்னரான வித்யாதரர் என்பவர் 'கோழைத்தனமாக எதிரிக்கு அடிபணிந்த' ராஜ்யபாலரைக் கொன்றுவிட்டார். இத் துன்ப நிகழ்ச்சியோடு கூர்ஜ்ஜரப் பிரதிகாரரின் ஆட்சி வரலாறு முடிவுறுகின்றது.

மேற்கிந்தியாவில் சிறப்பாக அரசு புரிந்துவந்த கூர்ஜ்ஜரப் பிரதிகாரரின் வரலாறு இவ்வாறாக, வடகிழக்கு இந்தியாவின் பகுதிகளான பீகார், வங்காளம், அஸ்ஸாம் என்னும் நாடுகளும்

சசாங்கர் என்னும் கௌடர் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு பல மாறுதல்களை யடைந்தன. கங்கைக் கரையிலோ, சிந்து நதிக் கரையிலோ அமைந்த அரசுகள் கிழக்குக்கோடியில் இருந்த பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளை வென்று தம் அரசில் அடக்கும் எண்ணத்தைப் பெரும்பாலும் மேற்கொள்ளவில்லை. ஆதலால், இந் நாடுகளால் வேற்றூர் இடையூறின்றி அரசியல் வளர்ச்சியை மேற்கொள்ள முடிந்தது.

வங்காளம் கௌடருடைய நாடு. அதனைக் கௌடதேசம் என்றும் வழங்குவர். இக் கௌடர்களில் சசாங்கர் என்பவர் முக்கியமானவர். அவர் மௌகாரி மன்னர்களோடு பொருதார். மகதநாட்டுக் குப்தர்களோடு சேர்ந்து இவர் கிருஹவர்மன் மௌகாரி என்பாரையும் தானேசுவரையாண்ட ராஜ்யவர்த்தன ரையும் கொல்லுவித்தார். ஆதலால், ராஜ்யவர்த்தனருக்குப் பிறகு தானேசுவரையாண்ட ஹர்ஷவர்த்தனரின் தீராப் பகைவர் ஆனார். ஹர்ஷர் புத்தமதத்தை எவ்வளவு போற்றினாரோ அவ்வளவு சசாங்கர் சைவத்தை மேற்கொண்டு பௌத்தத்தை எதிர்த்தார். அவர் புத்தகயையில் உள்ள போதி மரத்தை வேரறுத்தார். அஸ்ஸாமில் மன்னராயிருந்த பாஸ்கரவர்மர் என்பாரோடு சேர்ந்து ஹர்ஷர் சசாங்கருடைய ஆதிக்கத்தை யொடுக்க முயன்று சிறிது வெற்றி கண்டாரேயன்றி அவரையோ, அவர் ஆதிக்கத்தையோ அழிக்க முடியவில்லை. சசாங்கர் கி.பி. 637-ல் இறந்துபோனார். கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்காளம் மகதத்துக் குப்தர்கள் ஆட்சிக்கு உட்பட்டது. ஆயினும், 8ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வங்காளத்தில் அரசியற் குழப்பம் மிகுந்து அராஜகம் ஏற்பட்டது. இந் நிலையில்தான் வங்காளம் கனோஜியைச் சார்ந்த யசோ வர்மரால் கைப்பற்ற முடிந்தது. காஷ்மீரை யாண்ட முக்தா பீடர், ஜயபீடர் என்பாரும் வங்காளத்தை வென்று கைப் பற்றியதாகக் கூறிக்கொள்ளுகின்றனர். கி.பி. 8ஆம் நூற் றாண்டின் இடைக்காலம் கழிந்த பிறகு வங்காளத்தில் பாலர்குலம் அரசுரிமை ஏற்றது. அந் நிகழ்ச்சிக்குப் பின் அந் நாட்டில் அமைதி நிலவுவதாயிற்று.

வங்காளத்தில் ஆண்ட முதற் பாலமன்னர் முதலாம் கோபாலர் என்பவர். அவரை மக்கள் 'தேர்ந்தெடுத்தனர்' என்பர். அவர் கி.பி. 765-லிருந்து 769 வரை ஆண்டார். அவர் அரச குலத்தைச் சேர்ந்தவ ரல்லராயினும் நாட்டைக் குழப்பத்தினின்றும் காப்பாற்றிய பெருமையைக் கருதி அவருக்கு மன்னர் பதவி கிட்டியது போலும். அவர் நாளந்தா அருகில்

ஒரு பௌத்தர் பல்கலைக்கழகத்தை நிறுவினூர். கோபாலருக்குப் பிறகு வங்காளத்தை ஆளவந்த தருமபாலர் என்பவர் அரசைப் பரப்புவதில் நோக்கம் கொண்டவர். அவர் கனோஜின் அரசியல் விவகாரங்களில் தலையிட்டு இந்திராயுதர் என்னும் அரசரைப் பதவிநீக்கம் செய்து சக்ராயுதர் என்பவரை மன்னராக்கினூர். தருமபாலரை ராஷ்டிரகூட அரசர் மூன்றும் கோவிந்தர் என்பார் போரில் தோற்கடித்தார். இங்ஙனம் ராஷ்டிரகூடரால் தடுத்து நிறுத்தப்பட்டும் இப் பாலர் ஆட்சி பாடலிபுத்திரத்திலிருந்து ராஜ்ஷாஹிவரை பரந்திருந்தது. தருமபாலரை யடுத்து அவர்தம் மகன் தேவபாலர் (ஏ. கி.பி. 875-884) அரசாண்டார். கூர்ஜ்ஜரப் பிரதிகார இரண்டாம் நாகபட்டரும் ராஷ்டிர கூட மூன்றும் கோவிந்தரும் இறந்துவிட்டமையால் இம் மன்னர் பகைவர் தொந்தரவின்றி ஆள முடிந்தது. அவரை எதிர்க்கக் கூடிய திறமை வாய்ந்த பெருமன்னர் ஒருவரும் அக் காலத்தில் இல்லை. ஆயினும், கூர்ஜ்ஜரப் பிரதிகார மிகிரபோஜர் அரியணை ஏறியதும் பால மன்னரது பேரரசு நோக்கங்கள் கைகூடக்கூடிய வாய்ப்புகள் மறைந்தன. தேவபாலர் பௌத்தத்தைக் கடுமை யாகப் பின்பற்றியவர். அவர் சுமத்ரா, ஜாவாத் தீவுகளை யாண்டு வந்த சைலேந்திர மன்னர்களுடைய நட்புப் பூண்டிருந்தார். தேவபாலரை யடுத்து மன்னரான முதலாம் விக்ரகபாலர் (ஏ. 854-ஏ. 857) ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திற்குள்ளாகவே அரசு துறந்தார். அவரை யடுத்து அவர் மகன் நாராயணபாலர் அரசுகட்டிலேறினூர் (ஏ. 857—ஏ. 911). அவர் ஆட்சிக் காலத் திலேயே பாலர் ஆதிக்கம் குன்றத் தொடங்கிற்று. அவர் மகன் ராஜ்யபாலர் (ஏ. 911—ஏ. 935) கூர்ஜ்ஜரப் பிரதிகாரரது ஆதிக்கச் செல்வாக்கால் பாதிக்கப்பட்டுச் சோர்ந்திருந்தார். அவருக்குப்பின் வங்காளத்தை யாண்ட இரண்டாம் கோபாலர், இரண்டாம் விக்ரகபாலர் என்பவர்கள் பாலர் ஆட்சிக்குச் சிறிது புத்துயிர் ஊட்டினர்.

இதற்கிடையே வடவங்காளத்தில் ஆட்சிபுரிந்த கம்போஜர் கள் தென்வங்காளத்தில் ஒரு பகுதியைக் கவர்ந்துகொண்டனர். இவ் வாக்கிரமிப்பை ஓரளவு தடுத்து நிறுத்தியவர் முதலாம் மகிபாலர் (992-1040) என்பவர். இவர் பெருமை மிக்க மன்னர். இவர் அரசு மேற்கே காசியிலிருந்து கிழக்கே பிரம்ம புத்ராவரை பரவியிருந்தது. அக் காலத்தில் தக்காணத்திலும் தென்இந்தியாவிலும் ஆட்சிபுரிந்த சாளுக்கிய, சோழ மன்னர் களது திறமை காரணமாகப் பாலர் ஆட்சி அவ்வளவிலேயே நிற்க வேண்டுவதாயிற்று. சோழப் பேரரசரான முதலாம் ராஜேந் திரர் கோதாவரியைக் கடந்து வடகிழக்கு இந்தியாவினுட்

புகுந்து கங்கைவரை போந்து தமது வெற்றிக் கொடியை நாட்டினர். அவர்தம் படைத்தலைவர் முதலாம் மகிபாலரைப் போரில் தோற்கடித்துச் சோழர் தலைநகரத்திற்கு மீண்டார். முதலாம் மகிபாலருக்கும், 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் மகமதுபின் பக்தியார் என்னும் முஸ்லிம் படைத்தலைவரால் பதவிநீக்கம் செய்யப்பட்ட இந்திரத்யும்னபாலர் என்பார்க்கும் இடையே, அஃதாவது ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுக் காலத்திற்குப் பல பாலமன்னர்கள் வங்காளத்தை யாண்டனர். இவர்களைப்பற்றிய வரலாற்றினைப் பிறிதோர் அதிகாரத்திற் கூறுவோம்.

நேபாளத்தின் வரலாற்றினை இந்திய வரலாற்றின் ஒரு பகுதியாகவே கருதுவது வரலாற்று மரபினின்றும் சற்றுப் பிறழ்ந்தது என்றே கூறவேண்டும். சிங்களத்தைப்போல நேபாளத்தையும் இந்தியாவைச் சார்ந்த நாடாகக் கருதுவதே முறை. ஆயினும், இந்திய உபகண்டமாகிய பெருநிலப்பரப்பின் ஒரு புவியியற் பகுதியாக அஃது அமைந்திருந்ததால் அதன் வரலாற்றையும் சுருக்கமாகவேனும் ஈண்டுக் காணவேண்டும். நேபாளம் அசோகரது பேரரசின் ஒரு பகுதியாகவும், சமுத்ரகுப்தரின் நட்பு நாடுகளுள் ஒன்றாகவும் அமைந்தது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் அது லிச்சாவியர் குலம் ஒன்றால் ஆளப்பெற்றது. நேபாளம் ஹர்ஷரது ஆட்சிக்குட்பட்டிருந்தது என்று சிலரால் கருதப்படுவதுண்டேனும், அவர் காலத்து அம்சுவர்மன் என்பவர் அந் நாட்டை ஆண்டு வந்தது வரலாறறிந்தது. அவர் ஹர்ஷரது பேரரசு நிலையை ஒப்புக்கொண்டிருக்கக்கூடும். ஹர்ஷர் ஆட்சியை அவருக்குப்பின் கைப்பற்றிய அர்ஜுனன் என்பாரைத் தானேசுவரினின்றும் விரட்டியதில் நேபாள மன்னர்களுக்கும் பங்குண்டு. அம்சுவர்மன் காலத்தில் தானேசுவரின் மேலாதிக்கத்தை நேபாளர்கள் ஏற்றுக்கொண்டிருந்ததை யொப்ப, அவருக்குப் பிறகு திபேத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை அந் நாட்டிற்கு ஏற்பட்டது. ராகவதேவர் என்னும் நேபாள மன்னர் திபேத்தின் ஆதிக்கத்தினின்றும் நேபாளத்தைச் சற்று விடுவித்துக்கொண்டார். அசோகர் ஆட்சிக்காலத்திலிருந்தே நேபாளத்தில் பௌத்தமதம் புகுந்து விட்டது. ராகவ தேவருக்குப் பிறகு அந் நாட்டை யாண்டவர்களில் ஒருவரான குணதாமர் என்பவர் காந்திபுரம் (காட்மண்டு) என்னும் நகரத்தை நிருமித்தார். அந் நகரமே பிற்காலத்தில் நேபாளத்தின் தலைநகர மாயிற்று. ராகவ தேவரின் ஆட்சி நேபாளத்திற்கு மிகுந்த நன்மை பயந்தது. அவர் நேபாளத்தின் நாணய முறையைச் சீர்திருத்தி யமைத்தார். அக் காலத்தில்

வங்காளம், பீகார், நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையே பண்பாட்டு உறவுகள் பயனுள்ள வகையில் மிகுந்தன. விக்ரமசீலப் பல்கலைக்கழகம் அப் பிராந்தியத்தின் கலாசார முன்னேற்றத்திற்கும் உயர்கல்விப் பரப்பிற்கும் பெரிதும் உதவிற்று. கி.பி. 1046-க்குப் பின் பாஸ்கர தேவர் என்பார் மன்னரானார். அவரது குலத்தவர்கள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டிறுதிவரையாண்டனர். அக் காலத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த கனட குலத்தார் ஒருவர் நேபாளத்திற்குப் போந்து அங்கு ஓர் அரச குலத்தை நிறுவி அரசுரிமை பூண்டார். இவ்வாறே வங்காளத்திலும் தென்இந்தியர்களான சேனர்கள் என்போர் ஆட்சி நிறுவிக்கொண்டமை ஈண்டு நினைவுகூரற்பாலது. இவ்வாறு தென்னிந்தியா-நேபாளக் கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டமையால் நேபாளத்திற்கே உரித்தான ஒருவகை மகாயான பௌத்தமும் தென்னிந்தியச் சைவமும் சமய நிலையில் உறவு பூண்டன.

இந்தியாவின் வடகிழக்குக் கோடியில் அமைந்திருப்பது அஸ்ஸாம். அந் நாட்டினைப் பண்டையோர் காமரூபம் என்றனர். அதன் தலைநகரம் கௌஹாத்தி அருகேயுள்ள பிராக்ஜ்யோதிபுரம் என்பது. மௌரியர் ஆட்சிக்கும் உட்படாமல் சுதந்தரமாக இருந்த பெருமை அந் நாட்டிற்கு உண்டு. அஸ்ஸாமிய அரசை முதன்முதலில் நிறுவியவர் பகதத்தர் என்பார் என்று மரபுச் செய்தி கூறும்; ஆயினும், வரலாற்று வாயிலாக நாமறிவது புஷ்யவர்மன் என்னும் மன்னர் ஒருவர் நிறுவிய அரசு கி.பி. 350-லிருந்து 650 வரை ஆண்டது என்பதே. இக் குலத்தில் வந்த கடைசி மன்னர் பாஸ்கரவர்மர் என்பவர். இவர் ஹர்ஷருடைய நண்பர்; இவரை அம் மன்னரது ஆட்சிக்குட்பட்டவர் என்று சிலர் கூறுவர். யுவான்சுவாங் என்னும் சீன யாத்ரிகர் அவரது அவைக்களத்திற்கும் சென்றார் (கி.பி. 643). அவ் யாத்ரிகர் அஸ்ஸாமில் பௌத்தமதம் ஆதரிப்பாரற்ற நிலையிலிருந்ததாகக் கூறுவர். அங்குப் பௌத்தமடாலயம் ஒன்றையும் அவர் காணவில்லை.

அஸ்ஸாமில் கி.பி. 650-லிருந்து 800 வரை ஸலஸ்தம்பகுலம் ஆதிக்கம் செலுத்தியது. பிரலம்பர் என்பவர் கி.பி. 800-லிருந்து 829 வரையிலும், ஹர்ஜரர் என்பவர் கி.பி. 829 முதல் 875 வரையும், அவர் மகன் வனமாலர் என்பவர் கி.பி. 875-லிருந்து 900 வரையும் ஆண்டனர். ஜயமாலர், பலவர்மர், தியாகசிம்மர் என்னும் மூன்று மன்னர்களும் சேர்ந்து கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அஸ்ஸாமில் ஆண்டனர். கி.பி. 9, 10ஆம் நூற்றாண்டுகளில்

அந் நாட்டின் சுதந்தரம் வங்காளத்துப் பால மன்னர்களின் செல்வாக்கால் ஓரளவு பாதிக்கப்பட்டது.

மேற்கூறிய இந் நாடுகளைப்போல அத்துணைச் சிறப்பாக வரலாற்றில் இடம் பெறாத நாடுகளும் அவற்றை யாண்ட அரச குலங்களும்கூட, ஹர்ஷர்க்கும், கி.பி. 1000 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கேள்வியுறப்படுகின்றன. அந் நாடுகள் காஷ்மீரத்திற்கும் விந்திய மலைச்சாரலுக்கும் இடையிலும், பீகாருக்கு மேல்பாலும் அமைந்து கிடந்தன. இவற்றில் சில வடஇந்திய வரலாற்றில் அதிக முக்கியத்துவம் பெற்றவை; சில அத்துணைச் சிறப்பில்லாதவை. அன்ஹில்வாரை யாண்ட சோலங்கிகள், உஜ்ஜயினியையும் தாரையும் சேர்ந்த பாரமாரர் கள், திரிபுரியைச் சேர்ந்த காலசூரிகள், பண்டேல்கண்டைச் சேர்ந்த சண்டேலர்கள், காசியையும் கனோஜியையும் ஆட்சிப் பீடங்களாகக் கொண்டு அரசாண்ட ககதவாலர்கள், சாம்பார்-அஜ்மிர் பிரதேசத்தில் ஆட்சிபுரிந்த சகமானர்கள் (சௌகான்கள்) என்போர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இறுதியில் இராசபுத்ரர்கள் கையிலிருந்து முஸ்லிம்கள் கைக்கு ஆரியவர்த் தத்தின் அரசாட்சி மாறுவதற்கு உடனடிக்காரணமாக இருந்தவர் கள் கடைசியில் கூறப்பட்ட சாம்பார்-அஜ்மிர் மன்னர்களே. அவர்களும் இராசபுத்ரர்கள்தாம். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு ஆரியா வர்த்தம் இந்துஸ்தானம் ஆயிற்று. கி.பி. ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளின் வடஇந்திய வரலாறு இந்திய வரலாறு முழுமையிலுமே ஓரளவு முக்கியத்துவம் பெற்றது. முதற்கண், இக் காலத்திற்றான், நாட்டை ஆளும் உரிமை, நாட்ட வரான இராசபுத்ரர்களிடமிருந்து புறத்தாரான முஸ்லிம்கள் கைக்கு மாறிற்று. இரண்டாவதாக, இத்தகைய மாற்றத்திற்குக் காரணம், முஸ்லிம்களிடையே காணப்பட்ட சமயக் கட்டுப் பாட்டு உணர்ச்சி ஒருபுறமிருக்க, இராசபுத்ர அரசகுலங்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையும் ஒருவர்க்கொருவர் கொண்ட பகைமையும் என்றே கூறவேண்டும்.

பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கூர்ஜ்ஜரப் பிரதிகாரர், ராஷ்டிரகூடர்கள் என்னும் அரசகுலங்களின் ஆதிக்கமும் குன்றிப் போயின. அந் நிலையில் குஜராத்தில் அன்ஹில்வார் என்னுமிடத் தில் சோலங்கிகள் என்னும் ஒரு குலத்தவர் சிற்றரசு ஒன்றை நிருமித்துக்கொண்டனர். 'சோலங்கி' என்னும் சொல் 'சாளுக் யர்' என்பதன் திரிபு என்று சிலர் கூறுவர். இவ் வமிசத்தை நிறுவியவர் முதலாம் மூலராஜர் (ஏ. 961-996) என்பவர். இவர் அண்டை அயல் குலங்களான சகமானர்கள், பாரமாரர்கள்;

கல்யாணியில் ஆண்ட மேலைச்சாளுக்கியர்கள் என்பாரோடு பல காலும் பொருதார். சாமுண்டராஜர் (996—1010), துர்லப ராஜர் (1010-1022) என்போர் ஆண்ட பிறகு, முதலாம் பீமதேவர் என்பவர் 1022-லிருந்து 1064 வரை ஆண்டார். அவர் ஆட்சிக் காலத்தில் கஜினியை யாண்ட மம்மூது சோமநாத புரத்தைத் தாக்கி அங்கிருந்த கோவிலைச் சேதப்படுத்தினர். மம்மூதின் வெற்றித் தாக்குதல் காரணமாகப் பீமதேவர் சோம நாதபுரத்தில் சிலகாலம் செல்வாக்கின்றி இருந்தார்; சின்னுட் கழித்து அவருடைய அரசியல்நிலை அங்குச் சற்றுச் சீர்திருந்திற்று யினும், அவர் பிறகு பாரமாரர்கள், காலசூரிகள் ஆகியோரோடு பயனற்ற போர்களில் ஈடுபட்டார்.

திரிபுரியில் ஆண்ட காலசூரிகள் ஹைஹயர்கள் குலத்தில் தோன்றியவர்கள் என்று கூறிக்கொண்டனர். வாதாபி சாளுக் யர்கள் புகழ் பெறுவதற்கு முன்பே, காலசூரிகள் ஓரளவு அரசாட்சியில் ஊன்றிக்கொண்டனர். ஆயினும், பிற்காலத் தெழுந்த சாளுக்யர்களும் கூர்ஜ்ஜரப் பிரதிகாரர்களும் கால சூரிகளை முந்திக்கொண்டு அவர்களை எதிர்த்து மேல்நிலை எய்தினர். காலசூரிகள் ஜப்பல்புரி யருகில் ஆண்டனர். முதலாம் கோக்கல்லர் (ஏ. 875-925) என்பார் காலத்தில் இவ் வமிசம் மிகுந்த புகழ் எய்திற்று; அவர்கள் ராஷ்டிரகூடரோடு மணஉறவு பூண்டனர். பத்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஆண்ட லக்ஷ்மணராஜர் என்பவர் கத்தியவார், வங்காளம் முதலிய நாடுகள்மீது படை யெடுத்துத் தமது ஆதிக்கத்தை மிகுவித்துக்கொண்டார். இரண் டாம் யுவராஜர் பாரமாரமுஞ்சரை எதிர்த்துத் தோற்றுர். முஞ்சர் காலசூரிகள் தலைநகரைக் கைப்பற்றிச் சூறையாடினுர். இரண்டாம் கோக்கல்லர் மகனுன கங்கையதேவ விக்ரமாதித்யர் நல்ல முறையில் ஆண்டு கல்யாணிச் சாளுக்கியரை வென்று தமது ஆட்சியைப் பரப்பிக்கொண்டவர். அவர் தீவிர சைவர். பொன், வெள்ளி, தாமிரக்காசுகளை வெளியிட்டார். அவர் இறுதியில் முதலாம் போஜர் பாரமாரரைத் தோற்கடித்தார். அவர் மகன் லக்ஷ்மிகர்ணர் (1041-1073) காலசூரிகளில் பெரு மன்னர். அவர், தம் தந்தையை வென்ற பாரமார போஜரை யும் சண்டேலர்களையும் வென்றுர். அவரது பேரரசு குஜராத்தி லிருந்து வங்காளம்வரை பரந்திருந்தது.

தாரா நகரத்தில் ஆண்ட பாரமாரர் அரசகுலம் உபேந்திரர் என்பவரால் நிறுவப்பெற்றது. அவர்களிடையே புகழ் பெற்ற முதலாம் வாக்பதிராஜர் என்பார் காலத்தில் அவ் வரசகுலம் ஆதிக்கத்தில் தழைத்தது. பத்தாம் நூற்றுண்டின் முற்பகுதியில்

ஆண்ட இரண்டாம் வைரிசிம்மர் கூர்ஜ்ஜரப் பிரதிகாரர்களால் தோற்கடிக்கப்பட்டார்; பிறகு ராஷ்டிரகூடர்களின் சிற்றரச ராகவும் விளங்கினூர். ராஷ்டிரகூடர், பிரதிகாரர் என்பாரின் ஆதிக்கம் சரிந்தபிறகு, இரண்டாம் ஹர்ஷர் சீயகர் (ஏ. 948-974) பாரமாரர் ஆதிக்கத்தை மறுபடியும் மாளவத்தில் நிறுவினூர். அவரது தலைநகரம் உஜ்ஜயினி. இரண்டாம் வாக்பதி ராஜர் முஞ்சர் (974-995) பெரிய வெற்றி வீரர்; அவர் காலசூரி களையும் சோலங்கிகளையும் வென்றூர். ராஷ்டிரகூடர்களை வென்ற மேலைச்சாளுக்ய இரண்டாம் தைலர் பாரமார முஞ்சரையும் தோற்கடித்தார். முஞ்சர், தாமே ஒரு பேரறிஞரா யிருந்ததோடு புலவரைப் போற்றிய புரவலராகவும் திகழ்ந்தார். அவரை யடுத்து அவர்தம் சகோதரரான சிந்துராஜர் மன்னரானூர். அவருக்குப்பின் முதலாம் போஜர் மன்னரானூர் (1010-1055). இவரே பாரமாரர்களிடையே மாபெரும் வேந்தராக விளங்கியவர். அவர் கல்யாணிச் சாளுக்கிய இரண்டாம் ஜயசிம்மரை வென்றூர்; காலசூரிகளையும் கங்கர்களையும் அடிமைப்படுத்தினூர். அவர் சோலங்கிகளைத் தோற்கடித்துக் கனோஜியையும் கைப்பற்றினூர். ஆயினும், இறுதியில் கல்யாணி, அன்ஹில்வார், திரிபுரி மன்னர் கள் ஒன்றுசேர்ந்து அவரை வென்றனர்.

போஜர் தமது தலைநகரை உஜ்ஜயினியிலிருந்து தாரா நகரத் திற்கு மாற்றிக்கொண்டார். அவரும் கஜனி மம்மூதும் சம காலத்தவர்களாயிருந்தும் அவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடவே இல்லை என்பது வியப்பிற்குரியது. முஞ்சரைப் போலப் போஜரும் பேரறிஞர்; அவர் பிற அறிஞர்களைப் பெரிதும் போற்றினூர். அவர் பல பொருள்களைப்பற்றி நூல்களியற்றினூர். அரசியல், இலக்கியம், போர், காதல் முதலிய பல பொருள்கள் பற்றி அவர் எழுதிய நூல்கள் புகழ்பெற்றவை. அவர் பல நகரங்களை நிருமாணித்தார். போப்பால் என்னும் நகரத்தின் அருகே அவர் போஜபுரம் என்னும் ஒரு நகரை நிறுவினூர்.

இந்தியாவின் வடகோடியில் அமைந்துள்ள காஷ்மீரின் வரலாறு மிகப்பழமையானது. அசோகர் காலத்திலேயே கங்கைக் கரை சாம்ராஜ்யங்களின் பகுதியாக அஃது அமைந்தது. ஆதி காலத்திலிருந்து கி.பி. 1339 வரை நான்கு அரசகுலங்கள் அந் நாட்டை யாண்டன. நான்காம் குலத்தின் கடைசி ஆட்சியாளர் கோட்டாதேவி என்னும் அரசி. அவளைப் பதவிநீக்கம் செய்து 1339-ல் ஷாமிர் என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினூர். அந் நான்கு அரச குலங்களாவன: கார்க்கோட, உத்பல, குப்த, லோஹார என்பனவையே.

கி.பி. 724 முதல் 760 வரை யாண்ட முக்தாபீட லலிதாதித்யர் என்பவர் காலத்தில்தான் காஷ்மீரம் சீரும் சிறப்பும் பெற்றது. அவர் திக்குவிசயம் செய்து கனோஜி மன்னரான யசோவர்மரை இருமுறை வென்றார். அவர் வடக்கே திபெத், படக்ஷான் முதலிய நாடுகள்மீது சிறிது வெற்றியோடு பொருதார். சிந்துவை யாண்ட அரபுகளையும் அவர் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது; ஆயினும், சிந்து மாகாணம் என்றும் காஷ்மீர் அரசின் பகுதியாக அமையவில்லை. அவர் வங்காளத்தின்மீது வெற்றிகரமாகப் படையெடுத்தார் என்னும் கூற்று, படையெடுப்பைப் பொறுத்தவரையில் ஒப்புக்கொள்ளக்கூடியதே; ஆயினும், அந்நாட்டை வென்று காஷ்மீரத்தோடு இணைத்தார் என்று கூறுவது பொருந்தாக் கூற்றாகக் காண்கிறது. ஆயினும், அவர் ஒரு பெரிய வெற்றிவீரர் என்பதில் ஐயமின்று. அவர் காலத்தில் காஷ்மீரம் ஆசியாவிலேயே வலுவுள்ள நாடுகளில் ஒன்றாக விளங்கிற்று. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அல்பெரூனி என்னும் அறிஞர் முக்தாபீடரை 'உலகப் பேரரசர்' என்று கூறுகின்றார். இப்பொழுது இடிகரையாகக் கிடக்கும் மார்த்தாண்டர் கோவில் அவருக்குக் கோவில் திருப்பணியில் இருந்த ஆர்வத்தையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. அம் மன்னர் பரிகாசபுரம் என்னும் நகரத்தை நிருமாணித்தார். அந் நகரமும் இன்று இடிந்து கிடக்கின்றது. அவர் பௌத்தக் கோவில்கள் பலவற்றிற்கான விகாரங்களையும் தூபங்களையும்கூடக் கட்டுவித்தார்.

முக்தாபீடரின் பெயரரான ஜயபீட விநயாதித்யர் அந்நாட்டைக் கி.பி. 775 முதல் 806 வரை ஆண்டார். அவரும் அவரது பாட்டனாரைப் போலவே புகழ்பெற்று விளங்கினார். அவர் (யசோவர்மருக்குப் பிறகு கனோஜியில் ஆண்ட) வஜ்ராயுதர் என்பவரை வென்றார். அவர் பொதுவாகக் கல்வியையும் சிறப்பாக வடமொழிப் பயிற்சியையும் போற்றினார். அவர் வாமனர், தாமோதரர் போன்ற கவிஞரை ஆதரித்தார். அம் மன்னருக்குப் பிறகு ஆண்ட அரசர்கள் புகழ் பெற்றவர்க ளல்லர்; அவர்களில் சிலர் இகழ்ச்சிக்கு உரியரே யாவர்.

கார்க்கோடர்களுக்குப் பிறகு உத்பலர் என்பவர்கள் ஆட்சியில் அமர்ந்தனர். அவர்களில் முதல் மன்னரான அவந்திவர்மர் உத்பலர் என்பவர் கி.பி. 855 முதல் 883 வரை யாண்டார். அவர் பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமல் காஷ்மீர மக்களின் தேவைகளை யுணர்ந்து தீர்ப்பாராயினர். அவர் பல நகரங்களை ஆக்கினார். அவர்தம் அமைச்சர் ஒருவர் சுரா என்னும் பெயரினர்; அவர் பெயரால் ஒரு நகரத்தை நிருமாணித்து

அதற்குச் சுரபுரி என்று பெயரிட்டார். தம் பெயரை வைத்து அவந்திபுரி என்று ஒரு நகரை ஆக்கினர். அவருடைய பொறி யாளர் ஒருவர் ஜீலம் ஆற்றை அடைத்து ஓர் அணை கட்டினர்; அவ் வணை அப் பகுதியில் வேளாண்மைக்குப் பயன்பட்டது. அவந்திவர்மர் அறிஞர்களைப் போற்றினர். அனந்தவர்த்தனர் என்பவர் 'த்வன்யாலோகம்' என்னும் ஓர் அணியியல் நூலை இயற்றினர். ரத்நாகரர் என்பவர் 'ஹரவிஜயம்' என்னும் நூலை ஆக்கினர். அலிநந்தர் என்பார் பாணருடைய காதம்பரியைச் செய்யுள் உருவில் அமைத்தார்.

அவந்திவர்மரைத் தொடர்ந்து சங்கரவர்மர் (883-902) மன்னரானர். அவர் கூர்ஜ்ஜரப் பிரதிகார மிகிரபோஜரோடு பொருதார். அவர் மக்களிடமிருந்து கடுமையாக வரிகளை வசூலித்தும் தகாத முறைகளில் அவர்களை வற்புறுத்தியும் வருத்தினர்; அவர் சங்கரபுரி என்னும் ஊரை ஆக்கினர். கொடுங்கோலரான இம் மன்னரும் ஒரு நகரை நிருமாணித்தார் என்பதிலிருந்து, பொதுவாகக் காஷ்மீர மன்னர்களே ஊர்களை ஆக்குவதில் முனைந்தவர்கள் என்பது பெறப்படும். அவர் போர்க்களத்தினின்றும் திரும்பி வருங்கால் இறந்தார்.

சங்கரவர்மரைத் தொடர்ந்து அவர் மகன் கோபாலவர்மர் (902-904) மன்னரானர். அவர் சிறிது காலமே அரசாண்டார். அவர் சிறிதும் திறமையற்றவர். உண்மையில் நாட்டின் ஆட்சி சுகந்தா என்னும் பெயரிய அவரது தாயாரால் நடத்தப் பெற்றது. அவள் நடத்தை ஐயத்திற்குரியது என்பர். அவள் மகன் இறந்த பிறகும் அவள் வாழ்ந்தாளாயினும், அரசவையில் இருந்த 'தந்திரி'களின் கூட்டத்தில் சிக்கி அவள் உயிரிழந்தாள். பிறகு அரசாள வந்த உன்மத்தவந்தி என்பவர் கி.பி. 937-939 வரை ஆண்டார். அவரை மனித உருவில் திரிந்த ஒரு பேய் என்று கூற வேண்டும். அவர், தம் சொல்லொணுத் தீய பழக்கங்களில் ஈடுபடுவதற்காகச் செய்யாத கொடுமையே இல்லை. கோபாலவர்மருடைய அமைச்சர் பிரபாகர தேவர் என்பவர் ஒருவர் இருந்தார்; அவருடைய மகன் யசஸ்கந்த தேவர் (939-948) இவ் வுன்மத்தவந்தியைப் பதவிநீக்கம் செய்து (அன்றிக் கொன்று) ஆட்சியைக் கைப்பற்றி ஒன்பது ஆண்டுகள் ஆண்டார். இவர் தம் பாலிய மகனை சங்கராம தேவர் என்பவனை அமைச்சர் பர்வ குப்தர் கொன்று, தாமே அரியணை ஏறிக் காஷ்மீரில் குப்தர் குலத்தை ஆளும் குலமாக்கினர். மன்னனைக் கொன்று மந்திரி அரியணை ஏறுதல் காஷ்மீரில் பலகாலும் பயின்ற செய்தி என்பது இதனுற் பெறப்படும்.

பார்வகுப்தருக்குப் பிறகு க்ஷேமகுப்தர் என்பவர் அரசு கட்டிலேறினர். அவர் சிற்றின்பப் பிரியர் ; அவர் மனைவி தித்தா என்பவள் வெளிப்படையாகவே கற்பைத் துறந்தவள். அவள் ஆட்சியிற் கலந்துகொண்டு திறமையோடு செயற்பட்டாள். தன் கணவன் இறந்தபிறகும் கி.பி. 1003 வரை ஆட்சிபுரிந்து அவள் இறந்தாள்.

வட இந்தியாவில் மேற்கூறிய நாடுகள் சிற்றரசுகள் பல வற்றின் ஆட்சிக்குள்ளாகி இருந்த நிலையில், ஹர்ஷர் காலத்திற்குப் பின்பு தக்காணத்திலும் பல அரசுகள் தோன்றிச் சில நூற்றுண்டு கள் ஆட்சிபுரிந்து பிறகு மறைந்தன. இவ் வரசுகள் வட நாட்டு அரசுகளைவிடக் கலாசாரப் பெருமையிலும் பேரரசு நிலையிலும் சிறந்து விளங்கின.

தக்காணத்தின் மேலைப்பகுதியில் வாதாபி என்னும் நகரத்தில் சாளுக்கியர்கள் ஆண்டுவந்தமை ஹர்ஷர் ஆட்சி நிகழ்ந்ததற்கு முன்பே நடந்தது. ஹர்ஷருக்கு உடனுண்ட தக்காணத்து மேலைச் சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசி என்பவர். அவர் ஹர்ஷரைத் தோற்கடித்து நருமதை யாற்றிற்கு வடபாலே நிறுத்தியவர். ஆனல், அவர் முதலாம் நரசிம்மவர்மர் என்னும் பல்லவரால் தோற்கடிக்கப்பட்டு அவர் தலைநகரமான வாதாபி யில் நடைபெற்ற போரில் இறந்துபட்டார். அவர் இறந்தபின் அங்கு ஏற்பட்ட குழப்ப நிலை, அவர் மகன் முதலாம் விக்ர மாதித்யர் (655-680) என்பவர் ஆட்சியை மறுபடியும் அங்கு அமைத்தவரையில் தொடர்ந்தது. இரண்டாம் புலிகேசி காலத் தில் ஏற்பட்ட பல்லவர்-சாளுக்கியப் பகைமைப் போர்கள் தக்காண அரசுகளுக்கும் தமிழக அரசுகளுக்கும் இடையே நிலவிய நிரந்தரப் போர்களாக மாறி என்றுமே தென்இந்திய வரலாற் றின் ஓர் இன்றியமையாச் சிறப்பின்மையாக அமைந்தது. இரண் டாம் புலிகேசி தமது அரசு மிகப் பெரிதாக வளர்ந்துவிட்ட தைக் கருதி அதன் கீழைப்பகுதியைத் தம் தம்பி குப்ஜா விஷ்ணு வர்த்தனர் என்பவரது ஆட்சியில் நிறுவினர். அப்பொழுதிலி ருந்து தக்காணம் கீழைச்சாளுக்கியர் அரசு, மேலைச்சாளுக்கியர் அரசு என்று இரண்டுபட்டு நின்றது. வாதாபியிலிருந்து ஆண்ட மேலைச்சாளுக்கிய மன்னர்களில் கடைசியாக ஆண்டவர் இரண் டாம் கீர்த்திவர்மர் (746-753) என்பவர். அவரது சிற்றரசர் களில் ஒருவரான தந்திதுர்க்கர் என்பவர் அவரைத் தோற்க டித்து ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார். அவர் ராஷ்டிர கூட குலத்தைச் சேர்ந்தவர்.

இராஷ்டிரகூடர்கள் யாதவகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டனர். பிற்காலத்தில் மேலைத் தக்காணத்தில் தோன்றி யாண்ட மகாராஷ்டிரர்களின் முன்னோர் கள் என்று கருதலாம். ஆயினும், அவர்களைக் கருநாடகநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கருதவும் இடம் உண்டு. அவர்கள் பெரும் பாலும் கன்னட மொழியைப் போற்றினர் என்பது கருதற்பாலது. அவர்கள் கி.பி. 753-லிருந்து கி.பி. 973 வரை ஆண்டனர். அவர் களில் முதலாம் கிருஷ்ணர், துருவர், மூன்றும் கோவிந்தர், மூன்றும் இந்திரர், மூன்றும் கிருஷ்ணர், அமோகவர்ஷர் என்பவர்கள் தலை சிறந்த மன்னர்கள். இம் மன்னர்களின் ஆட்சி மிக உன்னத நிலையில் இருந்தபோது தென்னிந்தியாவின் பெரும்பகுதியும் வட இந்தியாவின் சில பகுதிகளும் இவர்கள் ஆட்சியில் அடங்கின. சிந்துவில் ஆண்ட அரபுகளின் நட்பும் இவர்களுக் கிருந்தது. தொடக்கத்தில் சிந்துவில் (8ஆம் நூற்றுண்டில்) தோன்றிய முஸ்லிம் ஆட்சி இந்தியாவிற் பெரும்பகுதியிற் பரவாமலிருந்த தற்குக் காரணம் இராஷ்டிரகூடர்களே எனலாம். இவர்கள் எய்திய பெருமைகள் அரசியல் வன்மையும் போர்க்கள வெற்றியு மாக அமைந்தனவேயன்றி அமைதிக்காலப் பெருமைகளில் எல்லோராக் குகைக்கோயில்களை ஆக்கியதை நீக்கிஞல் சிறப்பாகக் கூறக்கூடியது பிறிதொன்றும் இல்லை எனலாம். ஆயினும், எல் லோராக் குகைக்கோயில்களைப்பற்றி ''இந்தியாவில் குடைந் தாக்கப்பெற்ற குகைக்கோயில்களில் மிகப்பெரியவையும் சிறந்தவையும் எல்லோராக் கோயில்களே'' என்று வின்ஸென்ட் ஸ்மித் புகழ்ந்து கூறுவார். இவ் விராஷ்டிரகூடர்கள் மேலைச் சாளுக்கியர்களைப்போலவே, காஞ்சியிலிருந்து ஆண்ட பல்லவர் களோடு சண்டையிட்டு வந்தனர். இரண்டாம் பல்லவ நந்தி வர்மர் என்பவர் ராஷ்டிரகூட அரசை நிறுவிய தந்திதுர்க்கரின் மகளை மணந்துகொண்டு அவ் விரு அரசுகளிடையே நட்புறவை ஆக்கமுயன்றும் பலிக்கவில்லை. முதலாம் ஆதித்தியர் என்னும் தஞ்சைச் சோழமன்னர் அபராஜித பல்லவரை வென்று சோழப் பேரரசை நிறுவியபின், ராஷ்டிரகூடருக்கும் சோழருக்கும் முதற் பராந்தகர் காலத்தில் போர் மூண்டு பகைமை நீண்டது. ஆனால், இந் நிலை கி.பி. 973க்குப்பின் சற்று ஓய்ந்தது; ஏனெனில் இராஷ்டிரகூட மன்னர்களில் 972-973-ல் ஆண்ட இரண்டாம் கர்க்கர் என்பவரைக் கல்யாணி சாளுக்கிய அரசை நிறுவிய இரண்டாம் தைலர் என்பவர் அரசு நீக்கம் செய்து தாமே அவரது ஆதிக்கத்தையும் அரசையும் பறித்துக்கொண்டு மறுபடியும் மேலைச்சாளுக்கியர் ஆட்சியை நிறுவினுர். இராஷ்டிரகூடர் ஆட்சி சரேலென நீங்கிப் புதுச்சாளுக்கியர் ஆட்சி தோன்றிற்றாயினும்,

தக்காணத்து அரசுகளுக்கும் சோழப் பேரரசர்கட்கும் முன்பிருந்த பகைமை மேலும் தொடர்ந்தது.

கல்யாணி சாளுக்கியரான இரண்டாம் தைலர் 973-ல் தமது அரசை நிறுவிக்கொண்டார். இவரது உடன் காலத்தவரான பாரமாரமுஞ்சரிடம் இவர் ஆறுமுறை தோல்விகண்டார்; ஆயினும், ஏழாம் முறை தைலரால் தோற்கடிக்கப்பட்ட முஞ்சர் இறந்தார். இவருக்குப் பிறகு கல்யாணியில் ஆண்ட சாளுக்கியர் சத்யாச்சிரயர் (997-1008) என்பவர். இவர் காலத்திலேயே முதலாம் ராஜராஜர் (சோழப் பேரரசர்), கங்கவாடி, நொளம்வாடி (அதாவது தற்காலத்தில் மைசூர் எனப்படும் பிரதேசம் முழுவதும்) ஆகிய இடங்களை வென்று கைப்பற்றிக்கொண்டார்.

தக்காணத்தில் ஆண்ட அரசுகளில் கங்கர்கள் ஒரு பிரிவினர். அவர்கள் தொடக்கத்தில் கோலாரில் ஆண்டவர்கள். பிறகு (சிவசமுத்திரத்திற்கு அருகிலுள்ள) தலைக்காட்டிற்கு நீங்கிச் சென்று அதனைத் தங்கள் தலைநகராக்கிக்கொண்டனர். இவர்களில் ஒரு பிரிவினர் கஞ்சம் மாவட்டத்திலுள்ள கலிங்க நகரத்திற்குச் சென்று அங்கு ஆண்டனர். அவ் வம்சத்தினரைக் கீழைக் கங்கர் என்றும் தலைக்காட்டுக்கங்கர்களை மேலைக்கங்கர்கள் என்றும் வரலாறு அறியும்.

வாதாபியில் இரண்டாம் புலிகேசியின் ஆட்சி முடிந்தபின், வேங்கியில் ஆண்ட கீழைச்சாளுக்கியர் சுதந்தரமடைந்தனர். ஆனால், அவர்களது தொடக்ககால வரலாற்றைப்பற்றி ஒரு நூற்றாண்டிற்கு நாம் யாதும் அறியோம். கீழைச்சாளுக்கியர்களில் நான்காம் விஷ்ணுவர்த்தனர் என்பவர் முதலாவது இராஷ்டிரகூடகிருஷ்ணரின் சிற்றரசரா யிருந்தார். அவரது மகன்இரண்டாம் இராஜாதித்தர் (799-843) இராஷ்டிரகூடரது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாமையால் மூன்றாம் கோவிந்தர் என்னும் இராஷ்டிரகூட மன்னர் அவரைப் பதவிநீக்கம் செய்துவிட்டார்; ஆனால், 814-ல் மூன்றாம் கோவிந்தர் இறந்தபிறகு இரண்டாம் விஜயாதித்தர் மறுபடியும் கீழைச்சாளுக்கிய மன்னராகி இராஷ்டிரகூட முதலாம் அமோகவர்ஷரையும் வென்றார். மூன்றாம் விஜயாதித்தர் காலத்தில் அமோகவர்ஷர் கீழைச்சாளுக்யரை வென்றார் இத்தகைய குழப்பநிலை முதலாம் பீமர் (880-918) என்பார் காலத்தில் நீங்கின. இராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணர் காலத்தில் கீழைச்சாளுக்கியர் சுதந்தரமாக ஆள முடிந்தது. முதலாம் பீமருக்குப் பிறகு நான்காம் விஜயாதித்தர் வேங்கியில் ஆண்டார். அவருக்குப்பின் அவர் மகன் முதலாம் அம்மா (918-925)

ஆட்சிபுரிந்தார். அவர் காலத்திற்குப்பின் இராஷ்டிரகூடர் தலையீடு மறுபடியும் தொடங்கிற்று. இந் நிலையில் முதலாம் அம்மா உடன்பிறந்தாரான இரண்டாம் பீமர் இராஷ்டிரகூடர்களை எதிர்த்துத் தடுத்து நிறுத்திக் கீழைச்சாளுக்கியர் ஆட்சியைக் கைப் பற்றினர். இரண்டாம் பீமர்க்குப் பிறகு முதலாம் அம்மா அரச ராஞர். இம் மன்னரை இராஷ்டிரகூட மூன்றும் கிருஷ்ணர் வேங்கியை விட்டுக் கலிங்க நாட்டிற்கு விரட்டிவிட்டார். 956-ல் இராஷ்டிரகூடர்களால் நியமிக்கப்பெற்ற படபர் என்பவர் வேங்கியில் ஆளத் தொடங்கினர். இவ்வாறு இடையீடாக வேங்கி யில் ஆண்ட வேற்று மன்னர்களில் கடைசியில் ஆண்டவர் மூன்றும் யுத்தமல்லர் என்பவர். சோழப் பேரரசரான முதலாம் இராஜ ராஜர் அவரை அரசுநீக்கம் செய்துவிட்டுப் பழைய வேங்கிய வம்சத்தில் வந்த முதலாம் சக்திவர்மர் (999-1011) என்பாரை வேங்கியின் அரசுகட்டிலில் அமர்த்தினர்.

1. இந்திய அரசுகள்
(கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டுகள்)

(அ) வட இந்தியா

கி.பி. 908-914 வரையாண்ட இரண்டாம் போஜர் என்பார், முதல் மகேந்திர பாலருக்குப்பின் கூர்ஜ்ஜரப் பிரதிகாரரின் மன்னராஞர். அவருக்குப்பின் முதல் மகிபாலர் (914-943) அரசராகி அவ் வாட்சியின் சரிவிற்குக் காரணராஞர். கி. பி. 916-ல் இராஷ்டிரகூட மூன்ரும் இந்திரர் அவரைப் போரில் தோற்கடித்தார். ஆயினும், கி. பி. 917-இல் மூன்ரும் இந்திரர் இறந்தார். அந் நிகழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு கூர்ஜ்ஜரப் பிரதிகாரர் இழந்த பகுதிகளை மறுபடியும் வென்றுகொண்டனர். ஆயினும், பிரதிகாரர் ஆட்சியின் பெருமையும் பருமையும் முன்னிருந்த நிலையை எய்தவே இல்லை. முதல் மகிபாலருக்குப்பின் ஆண்ட மன்னர்களின் வரிசை கீழ்க்காணுமாறு: இரண்டாம் மகேந்திரபாலர், தேவபாலர், விநாயகபாலர், இரண்டாம் மகிபாலர், இரண்டாம் வத்ஸராஜர், விஜயபாலர். இம் மன்னர்களைப்பற்றி மிகுதியாக யாதொன்றும் அறியோம். இராஜ்யபால கூர்ஜ்ஜரர் கி. பி. 960-க்கும் 1016-க்கும் இடையே கஞேஜியை ஆண்டார். அவருடைய ஆட்சிப் பிரதேசம் கங்கை, யமுனை ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதிகளைமட்டும் அடக்கிற்று. கி. பி. 1018-19-ல் கஜினி மம்மூது கஞேஜியைத் தாக்கிஞர்; ஆஞல், இராஜ்யபாலர் தாக்கியவருக்கு அடிபணிந்தார். மம்மூது நீங்கிய பின், சண்டேல அரசரான வித்யாதரர் கஞேஜியைத் தாக்கி இராஜ்யபாலரைப் போரிற் கொன்ருர்; இதற்கு அவர் கூறிய காரணம், 'ராஜ்யபாலர் துருக்க மன்னரான மம்மூது கஜனியிடம் வெட்கமின்றிச் சரணடைந்து விட்டமையே'. இத் துன்ப நிகழ்ச்சியோடு வடஇந்தியாவில் கூர்ஜ்ஜரப் பிரதிகாரரின் ஆட்சி முடிவுற்றது.

காஷ்மீரத்தில் லோகாரா அரசு குலத்தவர்களில் முதன் முதலாக ஆண்ட அரசர் சங்கிராமராஜர் (1003-1028) என்பவர். அவர் தித்தாவின் மருமகன் லோகாராவைச் சேர்ந்த சிம்மராஜன் பெயரன். இக் காரணத்தாலேயே அவ் வம்சம் அப் பெயர் பெற்றது. அவருடைய அமைச்சரான துங்கா என்பவர் கஜனி மம்மூதோடு போரிட்டுத் தோற்றார் (1013). காஷ்மீரை வென்று தமது அரசில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் மம்மூதும் முயற்சி செய்தார்; ஆனால், அம் முயற்சி பலிக்கவில்லை. சங்கரராமராஜருக்குப் பிறகு ஆண்டவர் அனந்தர் (1028-1063) என்பவர். அவர் நிதி நிர்வாகத்தைச் செம்மை யாகச் செய்யமுடியாமல் தவித்தார். அவருடைய மனைவியார் அறிவுடையராதலின் அவரை அரசு துறக்க அறிவுறுத்தினார். அவ் வறிவுரையை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவருக்கு அறி விருந்தது. அவருடைய மகன் கலசர் (1063-1089) என்பவர் தமது பெற்றோர்களுக்கே பெருந்துன்பம் விளைத்தாராதலால் அவர்கள் தற்கொலை செய்துகொண்டனர். ஆயினும், அவர் வினை அவரைச் சுடாமல் விடவில்லை. கலசர் மகனை ஹர்ஷர் மனித உருவில் திரிந்த ஒரு பேய் என்னும் விளக்கத்திற்கு இலக்க மாயினார். ஹர்ஷர் (1089-1101) மன்னர் என்னும் முறையில் சற்று ஏற்றுக்கொள்ளத் தக்கவராயினும், அதாவது அரசியல் ஆட்சி நிர்வாகத் திறமை முதலியன அவர் படைத்திருந்தாரா யினும், அவர் மிகவும் தன்மை கெட்டவர். மிகச் சில நற்பண்பு களும், மிக ஏராளமான துர்க்குணங்களும் அவரிடம் ஒருசேரக் குடியிருந்தன. இவருடைய ஆட்சியின் பிற்காலத்தில் வாழ்ந் தவரே கல்ஹணர். அவர் இராசதரங்கிணி என்னும் காஷ்மீர வரலாற்றினை இயற்றியவர். ஹர்ஷருக்குப் பிறகு காஷ்மீரத்தில் அரசுகட்டில் ஏறியவர் ஜயசிம்மர் (1128-1155). ஹர்ஷர் ஆட்சி முடிவுற்றதற்கும் ஜயசிம்மர் ஆட்சி தொடங்கியதற்கும் இடைப்பட்ட காலத்தில் உள்நாட்டுப் போரும் ஒரு பஞ்சமும் நிகழ்ந்தன. லோகாரா அரசகுலம் கி.பி. 1170-ல் முடி வுற்றது. அதற்குப் பிறகு சில இந்து மன்னர்கள் கி.பி. 1339 வரை ஆண்டனர். அவர்களில் கடைசியாக ஆண்டவர் கோட்டாதேவி என்னும் அரசியார். அவரை ஆட்சியினின்றும் நீக்கியவர் ஷாமீர் என்னும் முஸ்லிம்.

வங்காளத்தில் ஆண்ட பாலர்களில் நயபாலர் (1040-1055) என்பவர் ஒருவர். அவர் ஆட்சி பீகாரோடு அடங்கிநின்றது; ஏனெனில், லக்ஷ்மிகர்ணகாலசூரி என்பார் தமது ஆதிக்கத்தால் பாலர் ஆட்சி விரிவதற்குத் தடைபோட்டார். ஆயினும், பிறகு

வந்த மூன்றும் விக்ரகபாலர் (1055-1081) என்பவர் காலசூரியை வென்று அவர் மகளை மணந்துகொண்டார். 11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாலர் ஆதிக்கம் சரியலாயிற்று. விக்ரக பாலர் இறந்தபிறகு அவரது மூன்று மக்களும் அரசுரிமைப் போட்டியில் இறங்கிப் போரிட்டனர். கி. பி. 1082-ல் இரண்டாம் மகிபாலர் அரசு கட்டிலேறினார்; ஏறித் தமது உடன் பிறந்தவர்களான இரண்டாம் சிவபாலர், இராமபாலர் என்பாரைச் சிறையிலிட்டார். இராமபாலர் இறுதியில் மன்னராகி 42 ஆண்டுகள் ஆண்டார். சந்தியாகாரநந்தி என்னும் புலவர் இராமபாலரைப்பற்றி இராமசரிதம் என்னும் விநோதமான தொரு நூலை இயற்றினார். இராமபாலர் அஸ்ஸாமை வென்றார். ஆயினும், அவர் தமது குடும்பத் தொல்லைகள் தாங்காமையால் கங்கையில் வீழ்ந்து உயிர்நீத்தார். அவர் மகன் குமாரபாலர் (1126-1130) காலத்தில் அஸ்ஸாம் மறுபடியும் சுதந்தரம் எய்திற்று. அவருடைய மகன் மூன்றும் கோபாலர் கொலையுண்டு இறந்தார்; அவருக்குப்பின் மதனபாலர் அரசரானார் (1130-1150). அவருக்கும் சேனர்களுக்கும் போர்கள் நிகழ்ந்தன. கோவிந்தபாலர் (1150-1162) என்பார் கயாவில் இருந்து ஆண்டார்; அவருடைய வங்காளப் பிரதேசம் அவர் ஆட்சியினின்றும் நீங்கிவிட்டமையால் பீகாரையாண்ட இந்திரத்யும்ன பாலர் என்பவரை மகம்மதுபின் பக்தியார் கி. பி. 1197-ல் ஆட்சியினின்றும் விரட்டினார்.

பாலர்கள் பௌத்தர்கள்; ஆயினும் அவர்கள் இந்துக்களைத் துன்புறுத்தவில்லை. அவரின் பௌத்தக்கலைகளைப் போற்றினர்.

பாலர்கள் ஆட்சியின் பிற்காலத்தில் வங்காள ஆட்சி ஓரளவு சேனர்கள் என்னும் இன்னுமொரு குலத்தார் கைக்கு மாறிற்று. சேனர்கள் தக்காணத்திலிருந்து வங்காளத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள்; சாளுக்கியர்களோ, சோழர்களோ வங்காளத்தின்மீது படையெடுத்த காலத்தில் இவர்கள் அங்குச் சென்றிருக்கக்கூடும் என்பது வரலாற்றுளர் கருத்து. சேனர் என்னும் அவர்கள் பெயரினை நோக்கி அவர்களைச் சைனர் என்று சிலர் கருதுவர். பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அவர்கள் ஆட்சி வங்காளத்தில் தொடங்கிற்று. அக் குலத்தில் ஆண்டவர்களில் முக்கியமானவர்கள் சாமந்த சேனர் (1050-1075), ஹேமந்தசேனர் (1075-1097), விஜயசேனர் (1097-1159) என்போரே. விஜயசேனர் ஆட்சிக்காலத்தில் நேபாளம், அஸ்ஸாம், வங்காளம் ஆகிய பகுதிகள் சேனர்

பேரரசில் அடங்கின. இராமபாலர் இறந்த பிறகு வங்காளத்தில் தோன்றிய அரசியல் பாழில் இப் பேரரசு உருவெடுத்தது. அவருக்குப் பின் ஆண்டவர் வல்லாளசேனர் (1159-1185) என்பவர். அவர் காலத்திலும் சேனர் ஆட்சிப்பரப்புக் குன்றுமலே இருந்தது. அவர் சைவர். அவர் மகன் இலக்ஷ்மணசேனர் (1185-1206) தமது ஆட்சியினை மேலும் பரப்பிக்கொண்டு கலிங்கத்தையும் சேர்த்து ஆண்டார். அவர் காலத்தில் வாழ்ந்தவர் கீதகோவிந்தம் என்னும் அரிய இசை வழிபாட்டு நூலினை இயற்றிய ஜயதேவர். கி. பி. 1199-ல் மகம்மது பின் பக்தியார் வங்காளத்தை வென்று இலக்ஷ்மணபுரியில் தமதுதலைநகரை நிறுவிக் கொண்டார். இஸ்லாமியர் படை திடீரென்று சேனர் தலைநகரில் புகுந்தபோது, இலக்ஷ்மணசேனர் 'தமது அரண்மனையின் புறக்கடைவாயிலாகக் காலணியும் இன்றி விரைந்து வெளியேறினர்' என்பர். சேனர் அரசியல் ஆதிக்கம் இவ்வாறு முற்றிற்று.

பாலர் ஆதிக்கம் பிருண்டு முடிந்துவிட்டதாயினும், கௌஹத்தியிலிருந்து ஒரு பாலச்சிற்றரசர் பதினேராம் நூற்றுண்டிலும் ஆண்டுவந்தார். அவர் பெயர் இரத்னபாலர் என்பது. அவர் வங்காளத்துப் பாலர்களோடு பொருது, தமிழகத்துப் படைகளோடும் சண்டையிட்டார். அவர் வைதிக சமயத்தைச் சேர்ந்தவர். 12 ஆம் நூற்றுண்டில் சிறிது காலத்திற்கு இராமபாலர் அஸ்ஸாமையும் ஆண்டார். 12 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அஸ்ஸாமில் பாஸ்கரர் என்பவர் ஓர் அரசகுலத்தை நிருமித்தார். அக் குலத்தைச் சேர்ந்த வல்லபதேவர் என்பாரது ஆட்சிக் காலத்தில் மகம்மது பின் பக்தியாரின் படையெடுப்பு முறியடிக்கப்பெற்றது (1205).

பத்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் கூர்ஜ்ஜர பிரதிகாரர்கள், இராஷ்டிரகூடர்கள் என்பார் தம் ஆட்சி குன்றியபொழுது, சோலங்கிகள் என்னும் பெயரிய சாளுக்கிய அரச குலத்தினர் ஒருவர் குஜராத்தில் அன்ஹில்வார் என்னுமிடத்தில் ஓர் ஆட்சியை அமைத்தார். 'சாளுக்கியர்' என்னும் சொல்லேதான் 'சோலங்கி' என்று மருவிற்று என்பர் சிலர். இக் குலத்தைத் தோற்றுவித்தவர் முதலாம் மூலராஜர் (961-996). அவர் தம்மைச் சுற்றியிருந்த சௌகானர்கள், பாரமாரர்கள், கல்யாணிச் சாளுக்கியர்கள் என்பாரோடு பொருதவண்ணம் இருந்தார். சாமுண்டராஜர், துர்லபராஜர், முதலாம் பீமதேவர் என்பார். கி. பி. 996க்கும் கி. பி. 1064க்கும் இடையே ஆண்டனர். முதலாம் பீமதேவர் காலத்தில்தான் கஜனி மம்மூது

சோமநாதபுரிமீது படையெடுத்து அவ்வூர்க் கோவிலுக்குப் பெருஞ்சேதம் விளைவித்தார். அதற்குப் பிறகும் முதலாம் பீமதேவர் அந் நாட்டினை யாண்டாராயினும் அவர் ஆட்சி முற்றிலுமே வேண்டாப் போர்களை இடுவதில் கொன்னே கழிந்தது.

முதலாம் பீமதேவர்க்குப் பிறகு முதலாம் கர்ணதேவ (1064-1094)-ரும், அவருக்குப் பிறகு ஜயசிம்ம சித்தராஜரும் ஆண்டனர். இவர்களில் பிந்தியவர் மாளவத்தை வென்றார். அவர் அரசு குஜராத், கத்தியவார், தென்ராஜபுதனம், கச்சு, மாளவம் ஆகிய பகுதிகளை யடக்கிற்று. அவர் சைவர்; ஆயினும், ஹேமச்சந்திரர் போன்ற சைனர்களையும் போற்றினார். அவரே 'சிம்மர்' ஆண்டைத் தோற்றுவித்தவர். அவருக்குப் பிறகு குமாரபாலர் அரசரானார். அவர் சைனராக மதம் மாறினார். அவர் குடியை விலக்கினார்; கொலையைக் கடிந்தார். ஆயினும், இவற்றை மேற்கொண்ட பிற சமயங்களை வெறுக்கவில்லை. அவருக்குப் பிறகு அவரது மருமகனான அஜயபாலர் (1173-1176) மன்னரானார். அவருக்குப்பின் இரண்டாம் மூலராஜர் என்பாரும், அவரைத் தொடர்ந்து இரண்டாம் பீமதேவர் என்பாரும் ஆண்டனர். பிற்கூறப்பட்டவர் கோரி மகம்மதுவைத் தோற்கடித்தாராயினும் குத்புதீன் ஐபெக்கிற்கு அடங்க வேண்டியவரானார். இவ்வரசின் முடிவு அலாவுதீன் கில்ஜியால் கி.பி. 1297-ல் காணப்பட்டது.

பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட காலசூரி மன்னரான இலக்ஷ்மணராஜர் கத்தியவாரையும் வங்காளத்தையும் கூட வென்று தமது அரசைப் பரப்பிக்கொண்டார். இரண்டாம் யுவராஜர் என்னும் பெயரிய வேறொரு மன்னர் பாரமார முஞ்சரை எதிர்த்துத் தோல்வியுற்றார்; காலசூரியர் தலைநகரம் பாரமாரமுஞ்சர் வசமாயிற்று; வென்றவர் நகரைச் சூறையாடினார். ஆயினும், கங்கயதேவ விக்ரமாதித்யர் என்னும் மன்னர் தமது நாட்டை நன்கு ஆண்டார்; அவர் கல்யாணிச் சாளுக்கியர்களையும் வென்றார். அவர் சைவர். அவர் வெளியிட்டு வழங்கிய காசுகள் பொன்னாலும், வெள்ளியாலும், தாமிரத்தாலும் இயன்றன. ஆயினும், அவரும் இறுதியில் முதலாம் பாரமார போஜர் என்பாரால் வெல்லப்பட்டார். அவர் மகன் இலக்ஷ்மி கர்ணர் என்பவர் (1041-1073) முதலாம் போஜரை வென்று காலசூரிகள் முன்பு கண்ட தோல்வியை மாற்றினார்; அன்றியும், சண்டேலரையும் வென்றார். இவ்வகையில் அவர் நிறுவிய பேரரசு குஜராத்திலிருந்து வங்காளம்வரை பரவிற்று.

அவர் மகன் யசகர்ணர் (1073-1125), சண்டேலர், பாரமாரர் என்பார் கூட்டால் வெல்லப்பெற்ருர். 12, 13 ஆம் நூற்ருண்டு களில் ஆண்ட காலசூரிகளைப்பற்றி வரலாற்றில் வரையும்படி யான பெருமை யாதொன்றும் இல்லை. பதின்மூன்ரும் நூற்ருண் டின் பிற்பகுதியில் அவர்களை டெல்லி சுல்தானிடம் வென்று அடிப்படுத்தியது.

இனிப் பாரமர் ஆட்சியின் கதியைச் சற்றுக் காண்போம். முஞ்சர் இறந்த பிறகு மன்னரானவர் முதலாம் போஜர் (1010-1055) என்பவர். அவரே பாரமார மன்னர்கள் யாவருள்ளும் தலைசிறந்தவர். அவர் சாளுக்கிய இரண்டாம் ஜெயசிம்மர் என்பவரை வென்ருர்., அன்றியும் காலசூரிகளையும் கங்கரையும்கூடத் தோற்கடித்தார்; அவர் கனோஜைக் கைப் பற்றினுர்; சோலங்கிகளை அடிப்படுத்தார். ஆயினும், இறுதியில் கல்யாணி, அன்ஹில்வார், திரிபுரி என்னுமிடங்களில் ஆண்ட மன்னர்களின் கூட்டுமுயற்சியால் அவர் வெல்லப்பட்டார். போஜர் தமது தலைநகரை உஜ்ஜயினியிலிருந்து தாரா நகரத்திற்கு மாற்றினுர். இவர் காலத்தில்தான் கஜனி மம்மூது இந்தியாமீது பன்முறை படையெடுத்தார்; ஆயினும், அவ் விருவரும் போர்க் காலத்தில் சந்திக்காமலிருந்தது விந்தையே. முஞ்சரைப்போல போஜரும் கல்விமான்; புலவர்களைப் போற்றியவர். அவர் பல பொருள்களைப்பற்றி அழகிய நூல்களை இயற்றியுள்ளார். அவர் போஜபுரி என்னும் நகரத்தை யாக்கினுர்.

முதலாம் போஜரை அடுத்து முதலாம் சிம்மர் (1055-1060) என்பவரும், அவருக்குப்பின் உதயாதித்தியர் என்பவரும் ஆண்ட னர். பின்னவர் போஜரின் சகோதரர். அவர் பாரமாரர் ஆதிக்கத்தை மீண்டும் ஓங்கச்செய்து பல கோயில்களையும் கட்டி னுர். இலக்ஷ்மணதேவர் (1087-1097) என்னும் மன்னர் அவர் முன்னேர் வழியைப் போற்றி வெற்றிகளைக் கண்டார். கி.பி. 1100க்கும் 1175க்குமிடையே மாளவம் சோலங்கிகளின் ஆதிக்கத்தில் அடங்கிற்று; ஆயினும், வித்யாவர்மர் என்னும் பாரமாரர் 1192-ல் தாரா நகரத்தைத் திரும்பக் கைப்பற்றி ஆண்டார்; அவருக்குப் பின் அவர் மகன் அர்ஜ்ஜுனவர்மர் ஆண்டார் (1211-1215). அவரே மாளவத்தை ஆண்ட இந்து மன்னர்களில் கடைசியில் வந்த வலியார். அவருக்குப் பின் பாரமாரர் ஆட்சி குன்றியது. இல்தூத்மிஷும், அலாவுதீன் கில்ஜியும் மாளவத்தைச் சூறையாடினர். இறுதியில் 1805-ல் மாளவம் அலாவுதீனுல் கைப்பற்றப்பட்டது.

பண்டேல்கண்டில் ஆண்ட சண்டேலர்களில் வித்யாதரர் என்பவர் கி.பி. 1019-லிருந்து 1051 வரை ஆண்டார். அவர் பிரதிகார மன்னரான இராஜ்யபாலரை, அவர் கஜனி மம்மூதிடம் சரணடைந்த குற்றத்திற்காக, நைய ஒறுத்தார். அவர் பாரமாரர் களையும் காலசூரிகளையும் வெற்றியோடு எதிர்த்தார். அவர் மம்மூது கஜனியால் சற்றே தோற்கடிக்கப்பட்டார். வித்தியாதர ருக்குப்பின் ஆண்ட சண்டேலர்களான விஜயபாலர், தேவவர்மர், கீர்த்திவர்மர் என்போர் இலக்ஷ்மிகர்ண காலசூரிக்கு அடங்கினர். அக் காலசூரிமன்னர் இறந்தபிறகு கீர்த்திவர்மர் என்பவர் சண்டேலர் ஆதிக்கத்தை மறுபடியும் ஊக்கினர். அவர் பிரபோத சந்திரோதயம் என்னும் நூலை இயற்றிய கிருஷ்ணமிச்சிரர் என்பாரை ஆதரித்தார். அடுத்து வந்த முக்கியமான அரசர் மாதவவர்மர் என்பார். அவர் காஜிராஹோ, கலிஞ்சார், அஜய்தார் உட்படப் பல பகுதிகளை யாண்டார். அவர் இராஜ புத்திர ககதவாலர்களோடு நட்பு முறையில் உறவுகொண்டார். கி. பி. 1202-ல் குத்புதீன்ஐபெக் கலிஞ்சாரைக் கைப்பற்றினர். அம் மன்னர்களில் இறுதியில் ஆண்ட முக்கியமானவர் திரை லோக்கியவர்மர் என்பவர். அவர் தம்மாலியன்ற அளவு தமது அரசிற்குப் புத்துயிரளிக்க முயன்ருர். ஆனல், கி. பி. 1309-ல் அலாவுதீன் கில்ஜி சண்டேலரை ஒழித்துக்கட்டினர். அவர்கள் வலுவில் எஞ்சியிருந்த மிகச் சிறு பகுதியையும், சண்டேல ராணி துர்க்காவதி காலத்தில் (1564) அக்பர் ஒழித்துவிட்டார்.

சௌஹானர் குலத்தைச் சேர்ந்த முதலாம் பிருதிவிராஜர் என்பவர் கி.பி. 1105-ல் ஆண்டார். அவருடைய மகனை அஜயராஜா, அஜயமேரு (தற்காலத்தில் அஜ்மீர் என்பது) என்னும் நகரத்தை ஆக்கினர். நான்காம் விக்கிரகராஜர் (1153-1164) என்பார் வெற்றி வீரர். அவர் கஜனி மம்மூ திற்குப் பிறகு வந்த துருக்க அரசப் பிரதிநிதிகளை வெற்றி யோடு எதிர்த்தார். அவர் டெல்லியையும் கைப்பற்றினர். (1177-1192) வரையாண்ட மூன்ரும் பிருதிவிராஜர் அக் காலத்து வடஇந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான பங்கு கொண்டார். அவருடைய 'பெருமை'களைப் பேசுகிறது, சந்த் என்பார் இயற்றிய பிருதிவிராஜ்-ரயிஸா' என்னும் காப்பியம். பிருதிவி ராஜ விஜயம் என்னும் ஒரு வடமொழி நூலும் அவரைப் புகழ்ந்து கவி பாடுகின்றது. இந் நூல்கள் கூறும் கதைப்படி கி.பி. 1175 பிருதிவிராஜர், ஜயச்சந்திர ககதவாலர் என்பவருடைய மகளான சம்யுக்தை என்பாளை அவளது சுயம்வர சமயத்தில் தூக்கிச் சென்று மணந்துகொண்டார் என்பது; ஆதலாலேதான் அவர்

களுக்கிடையே முன்பே இருந்த பகைமை மேலும் வலுத்தது என்பது அக் கதையின் கூற்று. ஆயினும், இது ஒரு கட்டுக்கதை என்பது வரலாற்றுளர்களுடைய துணிபு. இம் மன்னர் கி.பி. 1191-ல் தராயின் என்னுமிடத்தில் முதலில் நடந்த போரில் கோரி மகம்மதுவை வென்று வாகை சூடியதும், மறுபடியும் 1192-ல் அதே இடத்தில் நிகழ்ந்த இரண்டாம் தராயின் போரில் அதே கோரி மகம்மதுவால் போர்க்களத்தே தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டமையும் வரலாற்று உண்மை நிகழ்ச்சிகளேயாம். அதன் பிறகு சௌஹானர்கள் அஜ்மீரை இழந்துவிட்டனர்; அன்றியும் சௌஹானர் அரசகுலமே முடிவுற்றது. பிருதிவிராஜரின் மகனான கோவிந்தராஜர் என்பவர் ரந்தம்போர் (ரணஸ்தம்பபுரி) என்னுமிடத்தில் புதியதோர் ஆளுங்குலத்தை ஆக்கினார். கி.பி. 1301-ல் அலாவுதீன் கில்ஜி ரந்தம்போரை வென்று சௌஹானர்களை முடித்தார்.

ககதவாலர்களும் இராஜபுத்ரர்களே. அவர்களுக்கு முதன் முதல் புகழ் தேடிக் கொடுத்தவர் சந்திரதேவர் என்பவர் (1080-1100), அவர்கள் காசி, கனோஜி, அயோத்தி என்னும் பகுதிகளை யுட்படுத்தி ஆண்டனர். மாதவசந்திரர் என்பாரின் மகனான கோவிந்தசந்திரர் (1114-1153) பாடலிபுரம்வரையுள்ள பெரும் பிரதேசத்தை யாண்டார். அவர் 'துருஷ்க தண்டம்' என்னும் ஒரு வரி விதித்தார்; துருக்கர்களிடமிருந்து ஏனையோரைக் காப்பதற்காக அவ் வரி விதிக்கப்பட்டதாகக் கூறுவர். அவருக்குப்பின் அவரது மூன்றும் மகன் விஜயசந்திரர் என்பவர் அரசராகி 1170 வரை ஆண்டார். அவருக்குப்பின் அவர் மகன் ஜலசந்திரர் அரசு பூண்டு 1193 வரை ஆண்டார். அவர் 'நைடத'த்தை வடமொழியில் இயற்றிய ஹர்ஷரை ஆதரித்தார். அம் மன்னரையும் கோரி மகம்மது தோற்கடித்தார். அதற்குப் பிறகு ககதவாலர் ஆட்சி முடிவுபெற்றது.

(ஆ) தென்னிந்தியா

வட இந்தியாவில் நாம் மேற்கண்ட அரசுகள் தத்தம் பகுதிகளில் ஆண்டுவந்த காலத்தில், தென்னிந்தியாவில் முக்கியமாக மேலைச் சாளுக்கியர்கள் கி.பி. 1000-க்குப்பிறகு எவ்வாறு ஆண்டு வந்தனர் என்று காண்போம். சத்யாச்ரயர் என்னும் மன்னர் (997-1008) ஆண்டபிறகு ஐந்தாம் விக்ரமாதித்தர் (1009-1014) என்பார் ஆண்டார். அக் காலத்தில் தஞ்சையில் முதலாம் ராஜராஜர் ஆண்டுவந்தார். அவர் மேலைச் சாளுக்கியரோடு பொருது

கங்கவாடி, நொளம்பவாடி ஆகிய மைசூர்ப் பிரதேசங்களைக் கைப்பற்றிச் சோழப்பேரரசில் சேர்த்து ஆண்டார். முதலாம் ஜகதேகமல்லர் என்னும் மறுபெயர் கொண்ட இரண்டாம் ஜயசிம்மர் சோழப்பேரரசர் முதலாம் இராஜேந்திரர் என்பாரால் மாஸ்கி என்னுமிடத்தில் வெல்லப்பட்டார். முதலாம் சோமேசுவரர் (ஆகவமல்லர்) சோழ-சாளுக்கியப் பகைமை மரபைக் கைவிடாமல் மேற்கொண்டார். அவர் காலத்தில் கொப்பம், கூடல் சங்கமம் என்னுமிடங்களில் போர்கள் இடப்பட்டன. ஆனால், அவை சோழர்க்கே வெற்றியளித்தன. ஆயினும், முதலாம் சோமேசுவரர், முதலாம் பாரமாரர் போஜரையும் காலசூரிகளையும் வென்றார். ஆனால், அவர் துங்கபத்திரையில் வீழ்ந்து தற்கொலை புரிந்துகொண்டார். அவருக்கு இரண்டாம் சோமேசுவரர், ஆறும் விக்ரமாதித்யர் என இரு மக்கள் இருந்தனர். இவர்களிடையே போட்டி இருந்தது. விக்ரமாதித்யர் தம் அண்ணனை வென்று சாளுக்கிய நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி 1016 முதல் 1127 வரை ஆண்டார். அவர் விக்ரமசகாப்தத்தைத் தொடங்கினார்; விக்ரமாங்கர் என்னும் பெயரும் அவருக்கு இருந்தது. அவரால் ஆதரிக்கப்பட்ட பில்ஹணர் என்னும் காஷ்மீரத்து அந்தணர் அவரைப் புகழ்ந்து 'விக்ரமாங்கதேவசரிதம்' என்னும் 'வரலாற்றுக்' காப்பியத்தை இயற்றினார். அவர் காலத்தில்தான் விஷ்ணுவர்த்தனர் என்பார் தலைமையில் ஹொய்சளர்கள் கங்கவாடியைக் கைப்பற்றிச் சோழர் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டனர். விக்ரமாதித்யர் வேங்கியை வென்று கீழைச்சாளுக்கிய நாட்டையும் தமது அரசோடு இணைத்துக்கொண்டார். அதனால் அப்போது முதற்குலோத்துங்கரால் ஆளப்பெற்றுவந்த சோழப் பேரரசு மேலும் நலிந்தது. அவரது மகன் மூன்றும் சோமேஸ்வரர் (1127-1136) காலத்தில் மேலைச்சாளுக்கியர் பெருமையும் ஆதிக்கமும் குன்றலாயின. இரண்டாம் ஜகதேக மல்லர், மூன்றும் தைலர், மூன்றும் ஜகதேக மல்லர் (1165-1184) என்பார் சாளுக்கியரில் இறுதியாக ஆண்டவர்கள். நான்காம் சோமேசுவரர் சாளுக்கியர் ஆட்சிக்குப் புத்துயிர் அளிக்க மிகவும் முயன்றாராயினும், அது கைகூடவில்லை. யாதவர்களும் ஹொய்சளர்களும் தனி அரசுகளாகப் பரிணமித்தபின் மேலைச்சாளுக்கியர் அரசியல் வானிலிருந்து மறைந்தனர்.

மூன்றும் தைலர் (1157-1163) ஆண்ட காலத்தில் தோன்றியது வீர சைவமதம். அதைத் தோற்றியவர் பிஜ்ஜலர் என்பவருடைய அமைச்சரான பஸவர். அவர் சாளுக்கியர் நாட்டின் ஒரு

பகுதியை வலியக் கைப்பற்றி ஆண்டார். இம் மதம் நாளடைவில் மைசூர்ப் பிரதேசத்தில் வலுவடைந்தது.

(இ) சமுதாய நிலை

பௌத்தம் செழித்திருந்த காலத்திற்கும் இஸ்லாம் புகுந்து நிலைத்துக்கொண்ட காலத்திற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளில் பௌத்த, சைனசமயங்கள் அழிந்து இந்துசமயம் மேலும் வளர்ச்சியுற்றது. இந்துசமயம் தன்னைப் பெருமளவிற்குச் சீர்திருத்திக்கொண்டமையாலும், பக்தி இயக்கத்தாலுமே இம் மாறுதல் நடைபெற்றது. முன்பு வர்த்தனர்கள் பௌத்தத்தை ஆதரித்துக் கௌடர்கள், சைவத்தைப் போற்றினார்கள்; பிறகு பாலர்கள் பௌத்தத்தைப் பின்பற்றினார்கள்; ஆனால், சேனர்கள் அதை எதிர்த்தனர். சிந்துவைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் அரபுகள் ஆண்டனர்; கி. பி. 12ஆம் நூற்றாண்டில் மகம்மது பின் பக்தியார் வங்காளத்தின்மீது படையெடுத்தார். இவ் விரு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பௌத்தத்தின் வீழ்ச்சி உறுதியாயிற்று.

சைனர்கள் பௌத்தசமயத்தின் கோட்பாடுகளில் முக்கிய அம்சமான அஹிம்சையை மிகுதியாக வற்புறுத்தினர். ஆயினும், அவர்களால் முதலில் பௌத்தத்தோடோ அன்றி பிறகு இந்து சமயத்தோடோ போட்டியிட முடியவில்லை. பாரமாரர்கள் சைனத்தைப் போற்றினர்; ஹேமசந்திரர் ஒரு சைனர். தென்னிந்திய வீரசைவம், வைணவம் முதலிய சமயங்களால் சைனம் நலிந்தது. கி. பி. 1000-ல் பௌத்தம் ஏறத்தாழ இந்தியாவிலிருந்தே மறைந்துவிட்டதாயினும், சைனம் இராஜபுதனம், குஜராத், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் ஆங்காங்குப் பழைய மரபைப்பற்றித் தொடர்ந்து பயின்றுவந்தது. சமயத்துறையில் தமது பிடிதளர்ந்துவிட்டமையை நன்கு உணர்ந்த சைனர்கள், இலக்கிய இலக்கணத் துறைகளில் தாமறிந்த மொழிகளிலெல்லாம் பல அரிய நூல்களை இயற்றினர்.

இவ் விருசமயங்களும் இந் நிலையை அடையவே இந்து சமயம், பக்தி இயக்கத்தின் வாயிலாக நன்னிலை யடைந்தது. பக்தி இயக்கம் கி.பி. 1000 ஆண்டு அளவில் ஒருவாறு நிலைபெற்றுவிட்டது. அதன் பிறகு எழுந்த சமயாசாரியர்கள் (சங்கரர் ஒருவர் அக்காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்) அவ் வியக்கத்திற்குத் தேவையான தத்துவ ஊட்டத்தை யளித்தனர். ஆயினும், இராமாநுசர் தோன்றி வைணவத்தை வளர்த்தபிறகு சைவ, வைணவ உட்பூசல்கள் வலுத்தன.

சாதிகள் மிகுந்தன; அவை ஒன்றையொன்று புறக்கணித்துத் தாமே சிறந்தவை என்று கருதின. மகளிர் நிலை இழிந்தே இருந்தது. கணவனை யிழந்தோர் சதிகளாயினர்; அன்றிக் கைம்மை நோன்பு நோற்றனர். முஸ்லிம் படையெடுப்புகளால் அவர்களுடைய ஆசாரங்கள் நாட்டினுட் புகுந்தமையால், முகமூடி யணியும் மரபு தோன்றியது. இந்துக்கள் பலர் மதமாற்றப் பெற்றனர். பிறசமயத்தார் இந்துக்களாக மாறுதல் இயலாத தாயிற்று.

பண்டைக் காலத்து நாளந்தா, தக்ஷசீலம் முதலிய உயர்கல்வி நிலையங்களைப்போல, வங்காளத்துப் பாலர்கள் தோற்றுவித்த விக்கிரமசீலப் பல்கலைக் கழகம், இராமபாலர் ஆக்கிய ஜகத்தலா உயர்கல்வி நிலையம், தெற்கே பேரரசுச் சோழர்கள் நிறுவிய எண்ணாயிரம் முதலிய கல்வி நிலையங்கள் செழித்தன.

இலக்கிய வளர்ச்சியை நோக்குங்கால் கிருஷ்ணமிசிரருடைய 'பிரபோத சந்திரோதயம்', லீலாசுகர் இயற்றிய 'கிருஷ்ணகருணாமிருதம்', 'பிருகத் கதாமஞ்சரி', 'தசாவதார சரிதம்' என்னும் நூல்கள் சிறப்புடையவை. காஷ்மீரத்துச் சோமதேவர் புகழ் வாய்ந்த 'கதாசரித்சாகரத்'தை இயற்றினார். சாளுக்கிய ஆறும் விக்ரமாதித்யர் பில்ஹணரை ஆதரித்தார். அப் பில்ஹணர் இயற்றிய 'விக்ரமாங்கதேவசரிதம்' ஓரளவு வரலாறும் பெரிய அளவு காப்பியமுமாகும். யாஜ்ஞுவல்கியஸ்மிருதிக்கு விஜ்ஞாநேசுவரர் இயற்றிய 'மிதாக்ஷரம்' இந்து தனியார், குடும்பசாத்திர சட்டத்திற்கு வரையறை வகுத்தது. 12 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வடமொழியில் செயற்கை யாப்புகள் மிகுந்து இயற்கை யழகு குறைந்தது. தனஞ்சயர் என்பாரது 'இராகவபாண்டியம்', சந்தியாகாரநந்தி இயற்றிய 'இராமபாலசரிதம்', ஹர்ஷரது 'நைஷதம்' என்னும் நூல்கள் இத்தகையவை. இராதையிடம் கிருஷ்ணன் கொண்ட காதல் ஜயதேவரது 'கீத கோவிந்த'த்தில் இலக்கிய, பக்தி மெருகு பெற்றது. 'இராஜதரங்கிணி'யை ஆக்கிய கல்ஹணர் காஷ்மீரத்தைச் சேர்ந்தவர்; இந்தியா கண்ட ஒரே வரலாற்றாளர். க்ஷேமசந்திரர் என்பவர் பலவகை நூல்களை இயற்றினார்; சைனர் தத்துவத்திலிருந்து அசுவசாத்திரம்வரை, நிகண்டுகள்வரை அவர் நூல்களில் காணலாம். பிரம்ம சூத்திரங்களுக்குப் புதியதொரு உரை வகுத்த நிம்பார்க்கர் அத்வைதத்தையும் துவைதத்தையும் ஒப்பு நோக்கினார். 'சித்தாந்த சிரோமணி' என்னும் ஆரிய கணிதத் தத்துவநூலை இயற்றிய பாஸ்கராச்சாரியார் அக் கலையில் முன்னணியில் நின்றவர். வடமொழி நீங்கலாக முக்கியமான இலக்கியங்கள் தமிழிலேயே இயற்றப்

பெற்றன; பிறமொழிகளில் மிகச் சிறப்பான நூல்கள் பல இயற்றப்படவில்லை.

தமிழில் பத்தாம் நூற்றுண்டில் ஜைனத் துறவியான திருத்தக்கதேவரின் சிந்தாமணி தொடங்கிக் கம்பரது 'இராமாயணம்' ஈருகப் பல அரிய நூல்கள் இயற்றப்பெற்றன. இவற்றில் சயங்கொண்டாரது 'கலிங்கத்துப் பரணி'யும், ஒட்டக்கூத்தரது 'இராமாயண உத்தரகாண்டம்', 'மூவருலா', 'தக்கயாகப் பரணி' என்னும் நூல்களும், சேக்கிழாரின் 'பெரிய புராணமும்', புகழேந்தியின் 'நளவெண்பா'வும் புகழ்பெற்றவை. அக் காலத்தில்தான் பண்டைய இலக்கண நூல்களுக்கு உரைநடைப் பேருரை இயற்றும் மரபும் வளர்ந்தது.

2. சோழர் பேரரசு (1000–1279)

பண்டைய சோழர் வரலாறு சங்க காலத்தோடு முடிவு பெற்றது. அது ஏறத்தாழக் கி.பி. மூன்றும் நூற்றுண்டின் இறுதியில் நிகழ்ந்தது. அதற்குப் பிறகு ஆறு நூற்றுண்டுகளுக்குச் சோழர்தம் ஆதிக்கத்தை இழந்து சிற்றரசு நிலையில் இருந்தனர். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் குடந்தைக்கு அருகில் உள்ள பழையாறை என்னுமிடத்தில் சிற்றரசு ஓச்சி வந்த விசயாலயன் என்பவன் தஞ்சையில் ஆண்டுவந்த முத்தரையரைப் போரில் வென்று தஞ்சைச் சோழ இராச்சியத்தை நிறுவினுர். அவர் மகனுன முதலாம் ஆதித்தர், பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் இடையே நிகழ்ந்த போரில் தலையிட்டுப் பாண்டியரைத் தோற்கடித்துப் பல்லவர்க்கு வெற்றி தேடித் தந்தாராயினும், விரைவில் அப் பல்லவரையும் காஞ்சியருகே வென்று சோழ மண்டலத்தோடு தொண்டைமண்டலத்தையும் சேர்த்து ஒரு பெரிய அரசாக்கி அதனை யாண்டார். அப்பொழுது உருவெடுத்தது பேரரசுச் சோழர் ஆட்சி. அவருடைய மகன் முதலாம் பராந்தக சோழன் ராஷ்டிரகூட மூன்றும் கிருஷ்ணரோடு பொருது தோற்று அரசை இழக்கும் நிலைக்கே வந்துவிட்டார். ஆயினும், எவ்வாறோ நாடும் அரசும் இராஷ்டிரகூடர் ஆதிக்கத்தினின்றும் தப்பின. பராந்தகர் வடபுலத்தரசரான இராஷ்டிரகூடரோடு பொருது தோற்றுராயினும் பிற அரசுகளோடு அவர் நடத்திய போர்களில் வெற்றி கண்டார்.

முதலாம் பராந்தகர் பாண்டியர் நாட்டை வென்று 'மதுரை கொண்ட' என்னும் பட்டம் புனைந்தார். இரண்டாம் இராசசிம்மரான பாண்டியர் கி.பி. 920-ல் விலக்கப்பட்டு, அவருக்கு உதவி செய்த சிங்களரும் தோற்கடிக்கப்பட்டனர். அதன்மேல் சோழப் பேரரசர் 'மதுரையும் ஈழமும் கொண்ட'

என்னும் பட்டத்தை மேற்கொண்டார். எஞ்சியிருந்த பல்லவர் ஆட்சியையும் முடித்துவிட்டுத் தொண்டை மண்டலம் முழுவதை யும் சோழர் பேரரசில் அடக்கினுர். மேலைக்கங்க மன்னரான இரண்டாம் பிருதுவீபதி அவருக்குக் கீழ்ப்பட்டு ஆண்டார். இத் துணையும் சாதித்த பராந்தகருடைய வாழ்க்கை போர்க்களத் தோல்வியாலும் கசப்படைந்தது. தக்கோலம் என்னுமிடத்தில் சோழர்க்கும் இராஷ்டிரகூடர்க்கும் போர் நடந்தது (கி.பி.949). அப் போரில் சோழர் தோற்ருர். அன்றியும், அரசகுமாரரான இராஜாதித்தர் போர்க்களத்தில் உயிரிழந்தார். சோழர் பேரரசிற் குப் பேரடி இவ்வாறு இருந்தது. இதனுல், பராந்தகர் முடியிழந்து விடவில்லை; அவர் அரசும் அழிந்துபோகவில்லை. தவிரவும் அவர் செய்த பல அமைதிக்காலப்பணிகள் இன்றும் நினைவுகூரத் தக்கவை. ஊர், சபா என்னும் கிராம நிர்வாகக்குழுக்கள் நடத்திய தலஆட்சி முறை இவர் காலத்தில் நன்னிலை எய்திற்று. அம் முறையை விளக்கும் விவரங்கள் உத்திரன்மேரூர் முதலிய இடங்களில் கிடைக்கும் சில கல்வெட்டுகளில் உள்ளன. பராந் தகர், விஜயாலயர் காலந்தொட்டு நடைபெற்றுவந்த கோயில் திருப்பணிகளைத் தொடர்ந்து நடத்திவந்தார். இவர் சிதம்பரத்து நடராசர் கோவிலுக்குத் தங்கக்கூரை வேய்ந்துகொடுத்தார்; பொன்வேய்ந்த பராந்தகர் என்னும் பட்டமும் பெற்ருர்.

அவர் கி.பி. 953-ல் இறந்தார்; அவருக்குப் பிறகு அவரது இரண்டாம் மகனுன கண்டராதித்தர் அரசரானுர்; கண்டராதித் தருக்குப் பிறகு சிறிது காலம் அவர்தம் தம்பியான அரிஞ்சயர் ஆண்டார்; அரிஞ்சயருக்குப்பின் அவர் மகன் சுந்தர சோழர் என்னும் இரண்டாம் பராந்தகர் அரியணை ஏறிக் கி.பி. 973-லிருந்து கி.பி. 985 வரை ஆண்டார். கண்டராதித்தருக்கு உத்தம சோழர் என்று ஒரு மகன் இருந்தார். ஆயினும், அவரே அவர் தந்தைக்குப் பிறகு சோழ அரசை ஆண்டிருக்கவேண்டுமாயினும் அரிஞ்சயரும் அவர் மக்களுமே சோழராச்சியத்தை ஆண்டு வந்தனர். இரண்டாம் பராந்தகருக்கு இரண்டாம் ஆதித்தர், அருண்மொழி என்று இரு ஆண்மக்களிருந்தனர். அவர்களில் ஆதித்தசோழர், பாண்டியர்களோடு பொருது வெற்றிகண்டாரா யினும், இன்னுரென்று ஒருவருமறியாத சிலரால் கொல்லப் பட்டார். சில வரலாற்றுசிரியர்கள் ஆதித்த (கரிகால)ரைக் கொன்றவர்கள் கண்டராதித்தரின் மகனுன உத்தமசோழரால் தூண்டிவிடப்பட்டவர்களே என்று கூறுவர். ஆயினும், இது ஆதாரமற்ற கூற்று. உத்தமசோழர் ஆட்சிக்காலத்தில் சோழர் பேரரசு நன்கு நிலைப்பட்டது. அவர் இறந்தபின் அவருடைய

மகனை கண்டராதித்தர் என்பவர் மன்னராகவில்லை; ஆனால், இறந்துபோன ஆதித்த கரிகாலருடைய தம்பி அருண்மொழி முதலாம் இராஜராஜர் என்னும் பட்டப்பெயரோடு அரசரானார்.

முதலாம் இராஜராஜர் சேரர் கடற்படையைக் காந்தளூர்ச் சாலையில் அழித்துத் தமது திக்விசயத்தை தொடங்கினார். அவர் சேரர்களையும் பாண்டியர்களையும் தென்னாட்டுப் போர்களில் புறங்கண்டு, சிங்களரையும் தோற்கடித்தார். கி.பி. 1004-க்கு முன்பாக அவர் மலைநாட்டையும் கங்கபாடியையும் வென்றார். கல்யாணிச்சாளுக்கியரான சத்யாசிரயரைத் தோற்கடித்து அவர் நாட்டின் தென்பகுதிகளைச் சூறையாடினார். சோழர் பேரரசின் வடஎல்லை துங்கபத்திரையில் அமைந்தது. வேங்கியில் ஆண்ட கீழைச் சாளுக்கியர்கள் இவரது செல்வாக்கிற்கு உட்பட்டனர். அந் நாட்டு இளவரசரான விமலாதித்தர் என்பவர் இராஜராஜ சோழருடைய சகோதரியான குந்தவையை மணந்தார். சேரர் கடற்படையை அழித்துச் சிங்களத்தையும் வென்று கொண்ட சோழர் கடற்படை இப்பொழுது மாளயத் தீவுகளையும் கைப் பற்றியது. அக் காலத்திய இந்தியாவிலேயே அக் கப்பற்படை மிகப்பெரியதும் வலுவுள்ளதுமான கப்பற்படையாக விளங்கிற்று.

முதலாம் இராஜராஜர் மும்முடி சோழர், ஜயங்கொண்ட சோழர், சிவபாதசேகரர் முதலிய பட்டங்களைப் புனைந்தார். அவர் சிவபக்தியில் சிறந்து விளங்கினார்; ஆயினும், வைணவம், பௌத்தம் முதலிய பிற மதங்களையும் செம்மையாக ஆதரித்தார். சைலேந்திரப் பேரரசர் வேண்டுகோளுக்கிணங்கி அவர் நாகப் பட்டினத்துப் புத்தவிகாரத்திற்குச் செப்பனிடும் திருப்பணியைச் செய்தார். அவர் தஞ்சாவூரில் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிதாயமைந்த சிவன்கோயிலைக் கட்டினார் (1010). அதுவே தஞ்சைப்பெருவுடையார் கோயில். வரிவசூலைக் கருதி நாட்டி லிருந்த உழவர் நிலத்தைச் சரிவர அளவிடச் செய்தார். தலை நகரிலிருந்த மன்னராட்சியும், கிராமங்களில் செயல்பட்ட தல ஆட்சியும் வலுப்படுத்தப்பட்டன. நிலப்படையும் கடற்படையும் மிகுவிக்கப்பட்டு வலுவும் பெற்றன. அவர் பெரிய சைவராக விளங்கினார். அவர் காலத்தில் சிதம்பரம் இராச்சியத்தின் சமயத் தலைநகரென விளங்கிற்று. கோவில் சுவர்க்கற்களில் நாட்டு நடப்பு களையும் மன்னருடைய சாதனைகளையும் பொறித்துவைக்கும் பழக்கம் அவரால் விரிவாக ஏற்படுத்தப்பட்டது. அக் காலத்தில் அது அரசியல், சட்டத்துறைகளில் பயன்பட்டிருக்குமாயினும், இக் காலத்தில் வரலாற்றாளர்களுக்கு அது மிகவும் பயன் படுகின்றது.

அவருக்குப்பின் அவர் மகன் முதலாம் இராஜேந்திரர் (1012-1044) ஆண்டார். சோழர் ஆட்சிமுறையில் தந்தை ஆண்டுகொண்டிருந்தபோதே மூத்தமகனையும் கூடவே மன்னராக முடிசூட்டுவித்து 'இருவராட்சி' நடத்துதல் ஒரு மரபாக வளர்ந்தது. அதன்படி கி.பி. 1012-லிருந்து 1014 வரை முதலாம் இராஜராஜரும் அவர் மகன் இரண்டாம் இராஜேந்திரரும் ஒருசேர ஆண்டனர். இராஜேந்திரர் தமது தந்தை கண்ட அரசை மேலும் பெருக்கினர். மகனுடைய பேரரசாட்சியினைத் தந்தையின் ஆட்சியின் தொடக்கமாகவே கருதலாம். இராஜேந்திரர் இளவரசராக இருந்தபோதே தந்தைக்காகத் தாமே போர்ப்படைகளுக்குத் தலைமை பூண்டு மேலைச்சளுக்கியரோடு பொருது பல சண்டைகளிலீடுபட்டு வென்றார். கி.பி. 1018-ல் அவர் பாண்டியரை வென்றதோடு சிங்களத்தையும் முற்றிலும் வென்று சோழர் பேரரசில் சேர்த்தார். சேரர் நாடு முழுவதும் வெல்லப்பட்டது. அவர் தம் மகனை மதுரையில் தமது அரசப்பிரதிநிதியாக நியமித்தார். அவ்வாறு சோழருடைய பிரதிநிதியாக மதுரையில் ஆண்டவர்களுக்குச் சோழ பாண்டியர் என்னும் பட்டம் தரப்பட்டது. இராஜேந்திரர் மாஸ்கி என்னுமிடத்தில் கல்யாணிச் சாளுக்கியரான இரண்டாம் ஜயசிம்மர் என்பவரை வென்றார்; வடநாட்டைப் படையெடுத்துக் கங்கைக் கரைக்கே தமது படைகளை யனுப்பி வங்காளத்தில் ஆண்ட மகிபாலர் என்னும் அரசரை வென்றார். அவர் அப்பொழுது புதிதாக நிர்மாணித்துக்கொண்டிருந்த தலைநகரை கங்கை நீரால் புனிதமாக்கி அந் நகருக்குக் கங்கைகொண்ட சோழபுரம் என்று பெயரிட்டார். அவர் பெயரும் கங்கைகொண்டசோழர் ஆயிற்று. இதனையடுத்து இராஜேந்திரருடைய கடற்படை ஸ்ரீவிசயத்தின்மீது படையெடுத்து அப் பேரரசின் கப்பற்படையைத் தோற்கடித்துச் சோழருடைய வன்மையைக் கடல்கடந்த நாடுகளிலும் நிலநாட்டிற்று. இத் தாக்குதல் சீனாவோடு சோழநாடு நடத்திவந்த வாணிகத்தைக் காக்கும்பொருட்டே மேற்கொள்ளப்பட்டது என்பர். ஆயினும், நாட்டினைக் கைப்பற்றவேண்டும் என்னும் கொள்கையுடனேயும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். இப் போருக்கும் வெற்றிக்கும் பின் இராஜேந்திரர் கடாரம் கொண்டசோழர் என்னும் பட்டமும் பூண்டார். அவருக்கு முடிகொண்டசோழர், பண்டிதசோழர் முதலிய பிற பட்டங்களும் உண்டு. இதற்கிடையே சிங்களவர் தங்கள் சுதந்தரத்திற்குப் போராடினர்; அப் போராட்டத்தை இளவரசரான முதலாம் இராஜாதிராசர் அடக்கினர். இம் மன்னர் (முதலாம் இராஜாதிராசர்) (1018-1052) மேலைச்சாளுக்கியர் நாட்டின்மீது படையெடுத்துக் கல்யாணியையும் தாக்கினர். இவர் சோழர் பேரரசைக் கி.பி. 1044-லிருந்து 1052 வரை

தனியாகவே ஆண்டார். இவர் ஆட்சிக்காலத்தில் சாளுக்கியரோடு போர் தொடர்ந்து நடைபெற்றது. மேலைச்சாளுக்கிய அரசரான முதலாம் சோமேசுவரர் கொப்பம் என்னுமிடத்தில் இராஜாதி ராஜரோடு பொருதார். அப் போரில் இராஜாதிராஜர் கொல்லப் பட்டார். ஆயினும், சோழரே போரினை வென்றனர். அவர் தமது அரசவாழ்க்கையில் போரையே பெரிதாகக் கருதி வாழ்ந் தவர்; ஆண்டவர். அதற்கேற்பக் கி.பி. 1044-ல் அவர் ஒரு பரி வேள்வியும் நடத்தினர்.

இராஜாதிராஜரை யடுத்து அவரது தம்பியான இரண்டாம் இராஜேந்திரர் சோழ மன்னரானர்; அவர் கொப்பம் போர்க்களத் திலேயே முடிசூட்டிக் கொண்டார். கி.பி. 1062-ல் கூடல் சங்கமம் என்னுமிடத்தில் நடந்த போரில் இரண்டாம் இராஜேந் திரர் இரண்டாம் சோமேசுவரரை வென்றார்.

இம் மன்னரை யடுத்து இவர் தம்பியான முதலாம் வீரராசேந் திரர் (1063-1070) (முதலாம் ராஜேந்திரரின் மூன்றும் மகன்) சோழப் பேரரசரானர். அவர் சோமேசுவரரை மறுபடியும் கூடல் சங்கமத்திற்கு வந்து தம்மோடு சண்டையிடுமாறு கூறினர். ஆனல், சோமேசுவரர் போர்க்களத்திற்கு வாராமல் துங்கபத்திரை யில் வீழ்ந்து உயிர் நீத்தார். வெற்றி தனது என்று சோழர் கருதிக் கொண்டாடினர். வீரராசேந்திரரும் போரே புகழுக் கெல்லாம் காரணம் என்று கருதியவர் என்று தோன்றுகிறது. அவர் காலத்திலும் சிங்களம் சோழப்பேரரசின் பகுதியாகவே இருந் தது. அவர் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து ஆண்ட காலத்தில் இரண்டாம் சோமேசுவரர் என்பாரும் அவர் தம்பி ஆறும் விக்கிரமாதித்தர் என்பாரும் மேலைச்சாளுக்கிய நாட்டை ஆண்டனர். வீரராஜேந்திரர் பின்னவரை யாதரித்து முன்னவரை எதிர்த்தார். அவர் தீவிர சைவரா யிருந்தார். சிதம்பரம் பெரிய கோவிலுக்கு அவர் ஏராளமான தருமங்களைச் செய்தார்.

அவர் மகன் அதிராஜேந்திரர் என்பவர் கி.பி. 1070-ல் சிறிது காலத்திற்கே தனியரசோச்சினர். அவர் ஆட்சிக் காலத்தில் தான் ஸ்ரீ வைணவ ஆசாரியரான இராமானுசர் தமது மதத் தைப் பரப்பினர் என்றும் அவர் சைவத்தை எதிர்த்துச் செய்த பிரசாரத்தைப் பொறுக்காத சோழமன்னர் வைணவர்களைத் துன்புறுத்தினர் என்றும் அப்பொழுதுதான் இராமானுசர் ஸ்ரீரங்கத்தை விட்டு நீங்கி ஹொய்சளர் மைசூருக்குப் போய் விட்டா ரென்றும் இச் செயற்பாடுகளின் விளைவாகச் சோழ நாட் டில் பெரியதொரு புரட்சி நடந்து அதன் முடிவாக அதிராசேந்திரர்

சில கலகக்காரர்களால் கொல்லப்பட்டார் என்றும் சில வரலாற்றுளர்கள் கூறுவர். ஆனல், இராமாநுசர் முதலாம் குலோத்துங்கர் அல்லது இரண்டாம் குலோத்துங்கர் காலத்தவர். 'ஆதலால், அவருடைய சமய இயக்கத்திற்கும் அதிராசேந்திரர் இறந்ததற்கும் தொடர்பே இல்லை' என்றும் பிறர் கூறுவர். விசயாலயர் நிறுவிய சோழர் அரசகுலத்தில் ஆண்ட கடைசி மன்னர் அதிராசேந்திரரே. அவர் கி.பி. 1070-ல் இறந்தபோது சோழநாட்டில் குழப்பம் தோன்றிற்று. சோழப்பேரரசின் ஆட்சியை மேற்கொள்ளக்கூடிய திறமையுள்ள இளவரசர் ஒருவரும் அந் நாட்டில் இல்லை.

முதலாம் இராஜராஜர் காலத்திலிருந்தே சோழர் குலத்திற்கும் வேங்கியில் ஆண்ட கீழைச் சாளுக்கியர் குலத்திற்கும் மணத்தொடர்பு ஏற்பட்டிருந்தது. முதலாம் இராஜராஜரின் சகோதரியான குந்தவை என்பாளை வேங்கிமன்னருக்கு மணம்முடித்தார் அம் மன்னர். அக் குந்தவையின் மகனான கீழைச்சாளுக்கிய முதலாம் இராஜேந்திரர் சோழர் பேரரசரான இராஜேந்திரரின் மகளான அம்மங்காதேவி என்பாளை மணந்தார். அவர்களுடைய மகன் கீழைச்சாளுக்கிய இராஜேந்திரர். இவ் விரு இராஜேந்திரர் தாம் இளவரசராக இருந்தகாலத்தில் ஸ்ரீவிசயத்தில் வீரராஜேந்திரரின் பிரதிநிதியாக ஆண்டிருக்கக்கூடும் என்று வரலாற்றுளர்கள் கருதுகின்றனர். சோழநாட்டில் தோன்றிய கலகத்தையும் குழப்பத்தையும் கேள்வியுற்ற கீழைச்சாளுக்கிய இராஜேந்திரர், அதுவே தமக்குத் தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கேற்ற தருணம் என்று கணக்கிட்டு, கங்கைகொண்ட சோழபுரத்தை யடைந்து சோழர் ஆட்சியைக் கைப்பற்றினர். இவர் அப்போது புனைந்துகொண்ட பெயர் முதலாம் குலோத்துங்கர் என்பது.

முதலாம் குலோத்துங்கர் தமது ஆட்சிக்காலத்தில் சோழப் பேரரசின் பல முக்கியமான பகுதிகளை இழந்தார். சிங்களம், சாளுக்கியநாட்டின் தென்பகுதி. இறுதியில் கீழைச்சாளுக்கிய நாடு என்பவற்றையெல்லாம் அவர் இழந்தார். தொடக்கத்தில் சோழ-சாளுக்கிய மன்னராகத் தோன்றி வீரராசேந்திரர் விட்டுச் சென்ற பேரரசைக்கொண்டு ஆளத் தொடங்கினராயினும் அவருக்குப் பின்வந்த மன்னர்கள் சோழநாட்டையும் சிறிது பிரயாசையோடு பாண்டிய நாட்டையும்மட்டும் ஆளும் நிலைக்கு வந்துவிட்டனர். முதலாம் குலோத்துங்கர் மேலைச்சாளுக்கிய மன்னரான ஆறும் விக்கிரமாதித்தரின் பெருவிரோதியா யிருந்தார். இவர் நாடுகளை இழந்தமைக்குக் காரணம் திறமைக்

குறைவன்று; 'மிகப் பேரரசினை ஆளுவதற்குத் தேவைப்படும் படைச்செலவு முதலியவற்றை மக்கள் நலனுக்காகச் செலவிட்டால் அதுவே சிறந்த ஆட்சி' என்று அவர் கருதினமையே யென்று சிலர் கருதுவர். இக் கருத்தில் பொருளுண்டு. இவர் பாண்டி நாட்டை ஆளுதற்கு அரசியல் ராணுவ அமைப்பு ஒன்றை ஆக்கி, அதன்படி இராணுவ அதிகாரிகளைக்கொண்டு அந் நாட்டை ஆள ஏற்பாடு செய்தார். இவருக்குப் போர்த்திறமை நிரம்ப உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர் கலிங்கத்தை வென்று சோழர் பெருமையை நாட்டியமையே போதும். கலிங்கர் கப்பம் கட்டாத குற்றத்திற்காக அப் போர் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது (1110). அவ் வெற்றியைக் கொண்டாடிக் கலிங்கத்துப்பரணி என்னும் தமிழ்நூல் புகழ்கின்றது. கி.பி. 1076-ல் கீழைச்சாளுக்கிய ஏழாம் விஜயாதித்தர் இறந்துபோகவே, அவர் விட்டுச்சென்ற அரியணையில் தமது மகனை இராசப்பிரதிநிதியாக நியமித்தார். கி.பி. 1117-ல் விஷ்ணுவர்த்தன ஹொய்சளர் என்னும் மைசூர் அரசர் கங்கவாடியைச் சோழரிடமிருந்து பறித்துக்கொண்டார். கி.பி. 1118-ல் ஆறும் விக்கிரமாதித்தர் வேங்கியைக் கைப்பற்றிக் கொண்டார்.

இவ்வாறு பேரரசின் பல பகுதிகளையும் இழந்துவிட்டபோதிலும், முதலாம் குலோத்துங்கரைச் சோழப்பேரரசர்களில் தலை சிறந்தவர்களில் ஒருவராகவே வரலாற்றுளர்கள் கருதுவர். அவர் தம் குடிமக்களுக்குப் பல அமைதிக்கால நன்மைகளைச்செய்தார். அவர் பல வரிகளைத் தள்ளிக்கொடுத்தமையால் 'சுங்கம் தவிர்த்த சோழர்' என்று பெயர்பெற்றார். கி.பி. 1086-ல் அவர் சோழ நாட்டிலிருந்த சாகுபடி நிலங்களை அளவிட்டார்.

அவரை யடுத்து அவர்மகன் விக்கிரமசோழர் (1118-1135) அரசரானார். கி.பி. 1127-ல் மேலைச்சாளுக்கிய மன்னரான ஆறும் விக்ரமாதித்தர் இறந்துபோனார்; ஆகையால், வேங்கியையும் கங்கவாடியின் ஒரு பகுதியையும் திரும்பவும் கைப்பற்றியாளும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. இவரும் தீவிர சைவரே. இவருக்குத் தியாகசமுத்திரர், அகளங்கர் என்னும் பட்டங்கள் வழங்கின.

விக்கிரமசோழருக்குப் பிறகு இரண்டாம் குலோத்துங்கர் (1133-1150) மன்னரானார். அவர் வைணவசமய இயக்கத்தை வெறுத்தார். தில்லையிலிருந்த கோவிந்தராசர் படிமம் இவர் காலத்தில் அங்கிருந்து அகற்றப்பட்டுத் திருப்பதியில் நிறுவப் பட்டது. அவர் ஆட்சிக்காலத்தை இடைக்காலத் தமிழிலக்கியத்தின் பொற்காலம் என்று வருணிப்பர். இராமாயணத்தைத்

தமிழில் ஆக்கிய கம்பரும் ஒட்டக்கூத்தரும் சேக்கிழாரும் தமிழிலக்கியத்தை அணிசெய்த காலம் அது.

இரண்டாம் குலோத்துங்கரின் மகனுன இரண்டாம் இராஜராஜர் கி.பி. 1146-லிருந்து 1173 வரை ஆண்டார். அவர் ஆண்டகாலத்தில் பாண்டிய நாட்டில் ஒரு நாட்டுக்கலகம் (போர்) நடந்தது. பாண்டியர் அரியணை ஏற முயன்ற பராக்கிரமபாண்டியர், குலசேகரபாண்டியர் என்னும் இருவர் ஒருவரோடொருவர் போட்டியிட்டனர். இதன் முடிவாக முன்னவர் இறந்தார்; பின்னவர் மன்னரானுர். இப் போரில் தோற்றவருக்கு உதவி புரியச் சிங்கள மன்னரான முதலாம் பராக்கிரமவாகு என்பார் முன்வந்தார்; முன்வந்து பாண்டிநாட்டை நாசஞ்செய்து சூறையாடினுர்; குலசேகரரைத் தோற்கடித்துப் பராக்கிரமபாண்டியரின் மகனுன வீரபாண்டியரை அரியணை ஏற்றினுர். இந் நிலையில் இரண்டாம் இராஜராஜர் (சோழர்) பாண்டியர் அரசியலில் குறுக்கிட்டுக் குலசேகரரைப் பாண்டிய மன்னராக்கினுர். இதன் பிறகு சிங்கள பாண்டிய சோழர் அரசியல் உறவில் ஒரு புரட்சியே தோன்றி, சிங்களமன்னர் குலசேகரரை ஆதரித்துச் சோழரைப் பகைக்கும் நிலை ஏற்பட்டது. கி.பி. 1163-லிருந்து 1179 வரை ஆண்ட இரண்டாம் இராஜாதிராஜர் காலத்தில்தான் இவ் வுள் நாட்டுப்பூசல் ஒருவாறு முற்றுப்பெற்றது.

இரண்டாம் இராஜாதிராஜருக்குப்பின் சோழமன்னரானவர் மூன்றும் குலோத்துங்கர் (1178-1216). இவரே சோழமன்னர்கள் யாவருள்ளும் கடைசியாக ஆண்ட திறமையுள்ள அரசர். இவர் காலத்திலும் சோழ-பாண்டிய-சிங்கள முக்கூட்டுப் போர் தொடர்ந்தது. வீரபாண்டியர் சிங்களரைச் சேர்த்துக்கொண்டு சோழரை எதிர்த்தார். மூன்றும் குலோத்துங்கர் 1182-ல் வீரபாண்டியரைப் பதவிநீக்கம் செய்து விக்கிரமபாண்டியரை மதுரையில் மன்னராக்கினுர். ஆயினும், வீரபாண்டியர் தொடர்ந்து தொல்லை கொடுத்துவந்தார். அவருக்குச் சற்று ஆதரவுதந்தவர் கேரளமன்னர். ஆயினும், சோழப்பேரரசர் அவரை இறுதியில் அடக்கிவிட்டார். குலோத்துங்கர் தெலுகு சோடர்களை அடக்கிக் காஞ்சியுட்படத் தொண்டை மண்டலம் முழுவதிலும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தினுர். அவர் தம்மாலானவரையில் சோழர் பேரரசு அழியாமல் நிற்பதற்குப் பாடுபட்டார். ஆயினும், அவர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் பாண்டியர்தம் பேரரசராகத் தோன்றித் திகழ்ந்த மஹாவர்மர் சுந்தரபாண்டியர்க்குக் கீழ்ப்படிய நேர்ந்தது.

அவரைத் தொடர்ந்து சோழ இராச்சியத்தை ஆண்ட மூன்றும் இராஜராஜர் (1216-1246) அவருக்கு எவ் வுறவினர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. பாண்டியர் படையெடுத்து அவருடைய தலைநகரத்தையும் கைப்பற்றும் நிலைமை தோன்றிற்று. தோற்று ஓடிய சோழ மன்னரை அவருக்குக் கீழ்ப்படிந்திருந்த கோப்பெருஞ்சிங்கர் என்னும் காடவர் பிடித்துச் சேந்தமங்கலத் தில் சிறையிருத்தினர். ஆனல், அவ்வமயம் ஹொய்சள மன்னரா யிருந்த இரண்டாம் நரசிம்மர் என்பவர் தலையிட்டுக் காடவரைப் போரில் தோற்கடித்துச் சோழமன்னரைச் சிறை வீடு செய்து மறுபடியும் அரசராக்கினர். அப்போது சோழர் ஹொய்சள ருடைய சிற்றரசர் என்னும் நிலைக்கு இழிந்தார். இதனல் சோழ நாட்டு அரசியலில் ஹொய்சளரின் ஆதிக்கம் மிகுந்தது. மைசூர் மன்னர்களான ஹொய்சளரும் பாண்டியரை எதிர்த்துச் சோழ ரைக் காக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கலாயினர்.

மூன்றும் இராஜராஜரின் அடுத்த அரசரான மூன்றும் இராஜேந் திரர் (1246-1279) சற்றுத் திறமையுள்ள மன்னரெனத் தோற்றம் அளித்தார். ஆயினும், அவராலும் பாண்டியப் பேரரசரான முதலாம் ஜடாவர்மர் சுந்தரபாண்டியர் என்பாரின் தாக்குதல் களைத் தாங்கமுடியாமல் தவிக்க வேண்டியதாயிற்று. முன்னெரு காலத்தில் சோழப் பேரரசரைச் சிறைப்பிடித்து, பெரம்பலூர் என்னுமிடத்தில் ஹொய்சளரையும் வென்ற கோப்பெருஞ்சிங்கர் பாண்டியரால் தோற்கடிக்கப்பட்டு அவர்களுடைய சிற்றரச ரானர். கோப்பெருஞ்சிங்கர் வெறும் கலகக்காரர் அல்லர். அவர் திறமைசாலியான போர்வீரர்; அமைதிக் காலத்திலும் நாட்டை நன்கு ஆண்டவர்; தீவிர சைவர்; தில்லை நடராசர் கோயிலின் கீழைக் கோபுரத்தைக் கட்டியவர்.

கி.பி. 13 ஆம் நூற்றண்டின் இடைக்காலத்தில் சோழர் ஆட்சி மறைந்து பாண்டியர் ஆட்சி ஓங்கிற்று.

3. பாண்டியர், சேரர், கங்கர் (920–1327)

பாண்டியர்

முதலாம் பராந்தகச் சோழர் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து அந் நாட்டை அடிமைப்படுத்தியவரையில் பாண்டியர் சுதந்தரராகவே இருந்தனர். ஆனல், அந் நிகழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் இழந்த சுதந்தரம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் காலத்தில் பேரரசுப் பாண்டியர் ஆட்சி நிறுவப்பட்டவரையில் இழந்த நிலையிலேயே இருந்தது. முதலாம் இராஜராஜர், பராந்தகர் வென்ற பாண்டியநாட்டை மறுபடியும் வென்ருர். முதலாம் இராஜேந்திரர் அந் நாட்டினைச் சோழர் ஆட்சிக்கு முற்றிலும் உட்படுத்தினர். அவர் காலத்திற்குப் பிறகு சோழரிடம் தோல்வி கண்ட பாண்டியர்கள் சிங்கள மன்னர்களுடைய உதவிகொண்டு சோழர்களை எதிர்ப்பாராயினர். முதற்குலோத்துங்கர் ஆட்சிக் காலத்திற்குப்பின் மதுரையில் புதிய அரசியல் நிலைமை உருவாயிற்று. உள்நாட்டுக் கலகங்களும் போர்களும் மலிந்துபோய், சிங்களர் தலையீடும் மிகுந்தது. இக் குழப்பங்கள் யாவையும் மூன்ரும் குலோத்துங்கர் காலத்தின் இறுதியில்தான் ஒருவாறு தீர்ந்தன. கி.பி. 1205-ல் விக்கிரமபாண்டியர் மகனை ஜடாவர்மர் குலசேகரர் என்பவர் பாண்டியருடைய பேரரசாட்சியைத் தொடங்கிவைத்தார். பிற்காலப் பெரும்பாண்டியர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவரான மாறவர்மர் சுந்தரபாண்டியர் கி.பி. 1216-க்குள்ளாகப் பாண்டிநாட்டுச் சுதந்தரத்தை முற்றிலும் நிறுவினர். அவர் ஆண்டது 1216-1218 வரை. அவர் முடிசூட்டிக் கொண்டவுடனேயே சோழநாட்டின்மீது படையெடுத்தார்; எடுத்து உறையூரை எரித்துத் தஞ்சாவூருக்குத் தீயிட்டார். இவர் காலத்திற்கும் ஜடாவர்மர் சுந்தரபாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்ரும் இராஜராஜர்

தமது ஆதிக்கத்தைத் திரும்பவும் நிலைநிறுத்த முயன்றார். ஆயினும், ஜடாவர்மர் சுந்தரபாண்டியர் அரியணை ஏறியபின் தென்னகத்தில் இருந்த பிற அரசுகள் யாவையும் ஏறத்தாழத் தற்காலிகமாகவேனும் மறைந்து ஒழிந்தன.

முதலாம் ஜடாவர்மர் சுந்தரபாண்டியர் (1251-1268) தமிழகம் முழுவதையும் கட்டி ஆண்டார். அவர் சோழரை வென்றார்; ஹொய்சளரையும் திருவிதாங்கூர் மன்னரையும், கோப்பெருஞ்சிங்கரையும் புறங்கண்டார். சிங்களரும் அவரது பெருமையைக் கண்டஞ்சி அவருக்குக் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டனர். அவர் ஆட்சியில் பல பாண்டிய மன்னர்கள் ஒரே சமயத்தில் நாட்டின் பல வேறு பகுதிகள்மீது ஆதிக்கம் செலுத்தினர் என்று தோன்றுகிறது. இத்தகைய மன்னர்களைக் கூட்டு ஆட்சியாளர் என்று சிலர் கருதுவர். பெரும்பாண்டியர்களில் கடைசியில் ஆண்டவர் மாறவர்மர் குலசேகர பாண்டியர் என்பவர் (1268-1310). அவர் கொல்லத்தைக் கைப்பற்றிக் 'கொல்லம் கொண்டான்' என்னும் பட்டம் புனைந்தார். இவர் ஆட்சிக் காலத்தில்தான் மார்க்கோ போலோ என்னும் இத்தாலியப் பயணி தமிழகத்திற்கு வந்தார். அவர் குலசேகரரை 'அசர்' என்பார். அவர் மதுரை மன்னரை மாபார் மன்னர் என்பார். 'மாபார்' என்னும் சொல் அரபு மொழியில் 'இடைகழி' என்று பொருள்படும். அவர் பாண்டிய நாட்டு அரசர், குடிமக்கள் முதலியோருடைய பழக்கவழக்கங்களைப்பற்றி விரிவாக எழுதி வைத்துள்ளார். வஸ்ஸாப் என்னும் துருக்க வரலாற்றாளரும் மார்க்கோ போலோ தரும் சுவையான செய்திகளையே திரும்பக் கூறுகிறார்.

குலசேகரருக்கு இரு மக்கள் இருந்தனர். சுந்தர பாண்டியர் (மனைவிக்குப் பிறந்தவர்), வீரபாண்டியர் (காதற் கிழத்திக்குப் பிறந்தவர்) என, மன்னர் இவ் விருவரில் பின்னவருக்கே அரசுரிமை யுண்டு என்று கருதி அறிவித்தார்; ஆயினும், முந்தியவர் தமது தந்தையைக் கொன்று தாமே அரியணை ஏறினர்.

இந் நிலையில்தான் தென்னாட்டுத் தங்கத்தின்மீது ஆசை கொண்ட அலாவுதீன் கில்ஜி தமது படைத்தலைவரான மாலிக் காபூரை தென்னிந்திய இந்து அரசுகள்மீது படையெடுக்குமாறு ஏவினார். காபூரும் காகதீயரையும், யாதவரையும், ஹொய்சளரையும், பாண்டியரையும் தவறாது வென்று ஏராளமான செல்வத்தைக் கொள்ளையடித்துச் சென்றார். அவர் சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை, இராமேசுவரம் முதலிய இடங்களிலுள்ள

இந்துக்கோயில்களுக்குப் பெருஞ்சேதம் விளைவித்தார்; இராமேசுவரத்தில் அவர் ஒரு மசூதியையும் கட்டினார் என்பர். இம் முஸ்லிம் தாக்குதலால் தமிழகத்துச் செல்வம் பெரிய அளவில் அழிந்ததேயன்றி உடனடியாகத் தென்னாட்டில் முஸ்லிம் சுல்தானிய ஆட்சி தோன்றிவிடவில்லை. ஆனால், பாண்டியர் முதலிய தமிழ்மன்னர் தம் வன்மையெல்லாம் அழிந்தொழிந்தன. கி.பி. 1327-ல் மகம்மது பின் துக்ளக் மறுபடியும் தென்னாட்டைப் படையெடுத்து வெற்றிகண்டபோது திருவரங்கம் மறுபடியும் நாசப்படுத்தப் பெற்றது; அப்பொழுது மதுரையில் சுதந்தரமான சுல்தானியம் ஒன்று நிறுவப்பெற்றது; அதனை நிறுவியவர் ஜலாலுதீன் அஸன் என்பவர்.

சேரர்

தமிழகத்தில் சங்ககாலம் மறைந்தபோது சேர, சோழ, பாண்டியராகிய முடிமன்னர் மூவர் குலங்களும் அரசிழந்து களப்பிரர் ஆட்சி தென்னகத்தே தோன்றிற்று என்பதை யறிவோம். கி.பி. 600 ஆம் ஆண்டை அடுத்த காலத்தில் பாண்டியரும் பல்லவரும் களப்பிரர் ஆட்சியை நீக்கிக்கொண்டு தனி ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டனர். ஆனால், சேரர்கள் களப்பிரரால் முற்றிலும் அழிக்கப்படவும் இல்லை; கி.பி. 600-க்குப் பிறகு மிக உயரிய அரசியல் நிலையை அவர்கள் எய்தவும் இல்லை. அன்றியும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுவரை அரசியல் வகையிலும் பண்பாட்டுத் துறையிலும் தமிழகத்தின் ஒரு பகுதியே என்று கருதவேண்டிய நிலையில் சேரர் நாடு இருந்தது. அதற்குப் பிறகு மலையாளம் ஏறத்தாழ ஒரு தனிமொழி என்னும் தகுதியை அடைந்தது. பெருமாள்கள் என்னும் பெயரும் பட்டமும் படைத்த கேரள மன்னர்கள் ஆட்சி சேரமான்பெருமாள் என்பாரோடு முடிவுற்றது எனலாம்.

கி.பி. ஆயிரத்திற்குப் பிறகு பாண்டிநாட்டைப்போலச் சேரர் நாடும் சோழர்ஆட்சியில் அகப்பட்டது. முதலாம் இராஜராஜர் 'காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தருளி' மலையாள நாட்டைத் தமது பேரரசில் இணைத்துக்கொண்டார். அப்போதிலிருந்து, சோழர் ஆட்சி முதலாம் குலோத்துங்கரின் ஆட்சியின் இறுதிப் பகுதியில் தளர்ச்சியடையத் தொடங்கியதிலிருந்து, சேரர் ஓரளவிற்குச் சுதந்தரமெய்தினர். பாண்டிய நாட்டில் விக்கிரமர், வீரர் என்னும் இரு பாண்டியருக்கிடையே உள்நாட்டுப் போர் நடந்துவந்த காலத்தில் வீரபாண்டியரைச் சேரமன்னர் ஆதரித்தார்; அவரையும் சேர்த்து மூன்றும் குலோத்துங்கர்

ஒறுத்தார். இதன் பிறகு பேரரசுப் பாண்டியர் ஆண்ட காலத்தில் அவர்களுடைய ஆதிக்கத்தில் அடங்கியிருந்தனர் சேரர்.

மாலிக்காபூர் தலைமையில் மதுரையைத் துருக்கர் சூறையாடித் தாக்கித் திரும்பியபிறகு காவிரிக்குத் தென்பாற்பட்ட பகுதியில் குழப்பம் மலிந்தது. ஹொய்சளர், பாண்டியர் என்னும் இரு அரச பரம்பரையும் வலுவிழந்து நின்ற காலம் அது. அப்போது அக் குழப்பத்தையும் அரசியல் தடுமாற்றத்தையும் பயன்படுத்திக்கொண்டு சேரர் ஆட்சி ஒரு சிறிது காலத்திற்குத் தலைதூக்கிற்று. கி.பி. 1313-ல் திருவாங்கூரில் ஆண்ட இரவிவர்மர் குலசேகரர் என்பவர் நெல்லூர்வரை படையெடுத்து வென்றார். திருவரங்கம், காஞ்சிபுரம், சென்னையருகிலுள்ள பூவிருந்தவல்லி முதலிய இடங்களில் அவருடைய வரலாற்றுக் குறிப்புகள் காண்கின்றன. அவர் வீரபாண்டியரைத் தோற்கடித்தமையும், சங்கிராமதீரர் என்னும் பட்டம் புனைந்தமையும், மதுரையில் அவர் முடிசூட்டிக் கொண்டமையும் சேரர் வரலாற்றில் பெருமையோடு கண்ட சில நிகழ்ச்சிகள். எளிதில் வென்ற நாட்டை நெடிதாளவில்லை, அம் மன்னர். அவருக்குப் பிறகு சில ஆண்டுகளுக்கெல்லாம் மதுரையில் தோன்றிய சுல்தானியத்தால் சேரர்நாட்டு அரசியலும் தாக்குண்டது. கி.பி. 1344-56-ல் குமாரகம்பணர் என்னும் விசயநகர இளவரசர் மதுரைச் சுல்தானியத்தை முடித்தார்; அதன்பிறகு 1378-ல், அதாவது இரண்டாம் ஹரிஹரர் ஆட்சிக்காலத்தில் தென்னாடு முழுவதும் தன்னாடு என்று அப்பேரரசர் அறிவித்துக்கொண்ட பிறகு, சேரர் நாடும் விசயநகரப் பேரரசின் பகுதியாயிற்று. விசயநகரப் பேரரசு வலுவிழந்து, 17 ஆம் நூற்றாண்டில் மதுரைப் பகுதியில் நாயக்கர் ஆட்சி செழித்தபோது, கேரளம் தனது சுதந்தரத்தை ஓரளவு எய்திற்று. இவ்வாறு சேரருடைய அரசியல் ஊழ் பலவகை ஏற்றத் தாழ்வுகளோடு அமைந்ததாயினும் பண்டைய சேரர்குடியே அங்கு ஆண்டுவந்தமை நோக்கற்பாலது.

கங்கர்

கங்கர் தென்னிந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே அரச குலமாக நிலைபெற்றிருந்த ஒரு கூட்டம். இவர்கள் சங்க இலக்கியத்தில் பேசப்படுகின்றனர். இவர்கள் பல்லவர் காலத்தில் சில சமயங்களில் அவர்களோடு ஒத்துழைத்தும் பிற காலங்களில் அவர்களோடு பகைத்தும் வந்தனர். பல்லவர் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில், அதாவது திருப்புறம்பியம் போர் நடந்தபோது (கி.பி. 880), கங்கர் மன்னரான

முதலாம் பிருதிவிபதி என்பார் பல்லவரோடும் சோழரோடும் கூட்டுச் சேர்ந்து பாண்டியரை எதிர்த்தார். ஆனால், அப்போரில் கங்கர் மன்னர் மடிந்தார். சோழரிடையே பேரரசர் இராஜராஜர் அரியணை ஏறியபோது கங்கர் நாடான கங்கவாடி சோழர் ஆட்சியில் அடங்கிற்று. அப்போது தொடங்கி முதலாம் குலோத்துங்கர் ஆட்சிக்காலம்வரையில் கங்கவாடி சோழர் ஆட்சிக்குட்பட்டே இருந்தது; பிறகு மேலைச்சாளுக்கியப் பெருமன்னரான ஆறாம் விக்கிரமாதித்தர் அப் பகுதியில் சோழர்களோடு பலப்போர் களிட்டார். இறுதியில் விஷ்ணுவர்த்தன ஹொய்சளர் கங்கவாடியை வென்று தமது ஆட்சியிற் சேர்த்துக்கொண்டார்.

கீழைக்கங்கர்கள் என்போர் ஒரிஸ்ஸா பகுதியில் ஆண்டவர்கள். அவர்களில் அனந்தவர்மர் சோழகங்கர் என்பவர் கலிங்கத்தை ஆண்டிருந்தபோது சோழப் பேரரசர் முதற் குலோத்துங்கர் அந் நாட்டின்மீது படையெடுத்து வென்றார். ஆனால், கலிங்கம் சோழர் அரசில் இணைக்கப்படவில்லை. அச் சோழ கங்கருடைய பெயரரான மூன்றாம் இராஜராஜர் (1198-1211) காலத்தில் முஸ்லிம்கள் முதன் முதலாக (1205-ல்) ஒரிஸ்ஸாமீது படையெடுத்தனர். ஆனால், அம் முயற்சி வெற்றி பெறவில்லை. 1211 முதல் 1238 வரை யாண்ட மூன்றாம் அனந்தபீமர் என்பார் அனந்தவர்மர் சோழ கங்கர் தொடங்கிய ஜகந்நாதர் கோயிலைக் கட்டி முடித்தார். கி.பி. 1212-க்கும் 1224-க்குமிடையே ஒரிஸ்ஸா மன்னர்கள் முக்கியமாக முதலாம் நரசிம்மர் என்பவர் வங்காளத்தின்மீது படையெடுத்து முஸ்லிம் தாக்குதல்களைத் தடுத்தனர் என்று ஒருசார் வரலாற்றாளர்கள் கூறுவர். பீரூஸ் துக்ளக்கும், விஜயநகர முதலாம் புக்கரும் ஒரிஸ்ஸாமீது படையெடுத்து அந் நாட்டிற்கும் அதன் சுதந்தரத்திற்கும் சேதம் விளைத்தனர். கி.பி. 1339 லிருந்து 1425 வரை ஒரிஸ்ஸாவில் ஆண்ட நான்காம் நரசிம்மர் என்பவரே கீழைக்கங்கர்களில் கடைசியாக ஆண்ட மன்னர். சில வரலாற்று மூலங்கள் நான்காம் பானுதேவர் என்பவரைக் கடைசிக் கங்கராகக் கூறும். அவரிடமிருந்து கபிலேந்திரர்கள் ஆதிக்கத்தைக் கைப்பற்றி ஆண்டனர்.

4. தமிழக அரசுகளின் ஆட்சிமுறைகளும் சமுதாய வாழ்க்கையும்

ஆதிகாலந்தொட்டே தமிழர் ஆட்சிமரபு மன்னராட்சி அடிப்படையில் அமைந்தது. இடைக்காலச் சேர, சோழ, பாண்டியர் ஆட்சியும் அதற்கு ஓர் விலக்கன்று. ஆனல், இவ்வரசர்களின் ஆதிக்கமும் ஆளும் சக்தியும் அவர்கள் பேரரசுகளை ஏற்படுத்திக் கொண்டகாலத்தில் மிக அதிகமாயின. சோழமன்னர்கள் ஏறத்தாழ இரண்டரை நூற்றுண்டுக் காலத்திற்கும், பாண்டியர்கள் அரைநூற்றுண்டுக் காலத்திற்கும், இந் நிலையில் இருந்தனர். அரசர்கள் எதேச்சாதிகாரிகளாகவே இருந்தனர். ஆனல், அவர்கள் அவைக்களங்களி லிருந்த அமைச்சர்கள் முதலாயினேர் அவர்களது ஆட்சியின் வன்மையைக் குறைத்தனர். பேரரசின் தலைநகரிலிருந்து ஒன்றிய ஆட்சி ஒன்று நடத்தப்பட்டதாயினும், தமிழ்நாட்டுக் கிராமங்களில் தலசுயஆட்சி என்று கூறப்படும் ஆட்சி மரபிற்குச் சற்று ஒத்ததான ஒரு வகைக் கிராம ஆட்சி நடைபெற்றது. கிராமங்களில் நிர்வாகம் நடத்திய குழுக்கள் சபா, ஊர் என்று பெயர்பெற்றன. சபாக்கள் அந்தணர்கள் பெரும்பாலும் வசித்து வந்த கிராமங்களை நிர்வகித்த குழுக்கள். ஊர்கள் பொதுக்கிராம நிர்வாகக் குழுக்கள். இவை மன்னனுக்குப் பதிலாகக் கிரர்மநிர்வாகத்தை மேற்கொண்டு நடத்தின. கிராமத்துக் குடிமக்கள் தரவேண்டிய வரிகளை வசூலித்தன. கிராமத்து உள் நிர்வாகத்தை முற்றிலும் மேற்கொண்டன.

தலைநகர ஆட்சியில் மன்னரே நீதி நிர்வாகத்தை மேற்கொண்டு பெரும்பாலும் படையையும் தலைமைதாங்கி நடத்தினர். அவர் அவையில் அமைச்சர்களேயன்றி ஒற்றர்களும், புரோகிதர்களும், குலகுருக்களும் அவைக்களப் புலவோர் என்னும் பலதரத்

தாரும் இருந்தனர். ஆட்சி நிர்வாகத்தை நடத்திய அதிகாரிகளுக்குக் காசாகத் தந்த சம்பளங்களைவிட நிலமானியமாகக் கொடுத்தவையே அதிகம்.

சில ஆட்சிக்காலங்களில், முக்கியமாக முதல் இராஜராஜர், முதற்குலோத்துங்கர் என்பார் காலங்களில், நிலம் முற்றிலும் தீர்வைக்காக அளவிடப்பட்டது. சில சமயங்களில் சில வரிகள் தள்ளப்பட்டன. இவ்வாறு செய்ததால் முதற்குலோத்துங்கருக்குச் 'சுங்கம் தவிர்த்த சோழர்' என்பது ஒரு பெயராயிற்று. அரசருடைய சொந்தச் செலவினங்களும் பொது வரிப்பணத்திலிருந்தே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சோழர் நிலப்படை, கடற்படை ஆகிய இருவகைப்படைகளையும் வைத்திருந்தனர். பாண்டியரும் சேரரும் பெரும்பாலும் நிலப்படையைக் கொண்டு தமது போர்களைப் புரிந்தனர். சோழர் தம் நிலப்படை வங்காளத்துப் பாலர், தக்காணத்துச் சாளுக்கியர் தென்னாட்டுப்பாண்டியர், சிங்களத்துப்பகைவர் ஆகிய யாவரையும் வெல்லும் தரத்ததா யிருந்தது; இதனினும் சிறப்புடைத்தா யிருந்தது அவர்களுடைய கடற்படை. முதலாம் இராஜராஜர் அக்கடற்படையைக்கொண்டு சிங்களத்தை வென்றார்; ஆனால், அவர் மகன் இராஜேந்திரரோ தொலைவில் உள்ள ஸ்ரீவிசயப் பேரரசையே வென்றார்.

சோழர் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இராஜேந்திர சோழர் காலத்தில் மதுரை அரசப் பிரதிநிதி வாழும் தலைநகரமாயிற்று. மண்டலங்கள் வளநாடுகளாகவும் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டன. கூற்றங்களும் கோட்டங்களும் இவற்றின் பாகுபாடுகளாம். ஆட்சியின் அடிப்படை கிராமத்தில் இருந்தது.

கிராம ஆட்சி சபா, ஊர் முதலிய குழுக்களால் நடத்தப் பெற்றது. அக் குழுக்கள் வாரியங்கள் எனப்பட்ட பல உட்குழுக்களைக்கொண்டு ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தின. அக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல விதிகள் இருந்தன. சபாக்களில் பிராம்மணர்களே உறுப்பினராயினர். பொதுப்பணிகள், சாலை அமைத்தல், பாசன ஏற்பாடு செய்தல் முதலிய பொறுப்புகள் கிராமக்குழுவினரிடம் இருந்தன. அரசர் தலைநகரத்தில் செலுத்திய ஆட்சி வெளிநாட்டு விவகாரங்கள், தற்காப்பு, கலாச்சார அமைப்புகள், அமைதி நாட்டல் முதலியவற்றைப்பற்றிய அதிகார வரம்பில் செயல்பட்டது.

நீதி நிர்வாகத்துறையில், கிராமத்தி லிருந்த நியாயத்தார் தாங்கள் அறிந்த வகையில் நியாயம் வழங்கினர். மௌரியர், வர்த்தனர் என்போர் ஆட்சியில் கடுந்தண்டம் வழங்கப்பட்டது போலத் தமிழர் ஆட்சியில் வழங்கப்படவில்லை. சிறுகுற்றங் களுக்குத் தலையை வாங்கிவிடும் அந்தக் கொடிய பழக்கத்தைப் பெரிய குற்றங்களுக்கும் கோவிலுக்கு ஒரு காணிக்கை செலுத்தித் தண்டம் இறுக்கும் பழக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தல் பயனுடைத்தாகும். இவ் வாட்சி முறைகளிற் பெரும்பாலானவை விசயநகரப் பேரரசு நிறுவப்பட்டபின் மாறிப்போயின.

தமிழகத்தில் சமுதாய மரபுகள் பல நூற்றுண்டுக்கால அளவிற்கூட அதிகமாக மாறவில்லை. சாதிப்பிரிவினைகளும், அச் சாதிகள் மேலும் பல்குதலும் நிகழ்ந்தன. இடக்கை, வலக்கை எனப் புதுப்பிரிவினைகள் தோன்றின. இவை தம்முள் பகைத்துப் பலகாலும் போரிட்டன. ஆயினும், சோழப்பேரரசில் பெரிய அளவிற்குச் சமுதாயப் பூசல்கள் ஏற்படவில்லை. சமூகத்தில் மகளிர்நிலை இழிந்திருந்ததோடு, மேலும் மேலும் இழிந்து கொண்டேயும் வந்தது. கணவனை யிழந்தோர் சதிகளாயினர். பராந்தகச் சுந்தரசோழரின் மனைவியரான வானவன்மாதேவி என்பவர் அவ்வாறு சதிகளாயினவர்களில் ஒருவர். அடிமை நிலை அச் சமுதாயம் அறியாத தன்று. பரம ஏழைகளும், கடன் வாங்கித் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலையில் இருந்தவர்களும் அடிமை களாயினர். கோயில் திருப்பணிகள் செய்தல், படைக்கலங்களை யாக்குதல், படிமங்களை வளர்த்தல் முதலிய கைத்தொழில்கள் நடைபெற்றன. காஞ்சியிலும் மதுரையிலும் உறையூரிலும் இன்றுபோல் அன்றும் நெசவுத்தொழில் நன்கு நடைபெற்றது. நாட்டில் பொதுவாகப் பொருளாதாரச் செயற்பாடுகள் தீவிர மாக நடைபெற்றன. மாடை, பொன் என்பன பொற்காசுகள். வெளிநாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றது.

பல்லவர் காலத்திலிருந்தே மக்களுடைய மனத்தில் சமய உணர்ச்சி மலிந்தது. இராமாநுசர் காலத்திலிருந்து சைவ, வைணவப் பாகுபாடுகளும் வேற்றுமை உணர்ச்சிகளும் மேலும் மேலும் வளர்ந்தன. காஞ்சியில் சைவ, வைணவங்களைப்போல, பௌத்த, சைன மதங்களும் செழித்திருந்தன. ஆனுல், அக் கார ணத்தால் அவை ஒன்றேடொன்று நட்பாயிருந்தன என்று கூறி விட முடியாது. இரண்டாம் குலோத்துங்கர் காலத்தில் இராமா நுசரைச் சைவச்சோழர்கள் துன்புறுத்தியமை, சேக்கிழார் தமது பெரிய புராணத்தை இயற்றிய சூழ்நிலை முதலியவை இக் கூற்றை நிரூபிப்பனவாம். ஆயினும், ஒவ்வொரு கிராமத்திலும் கோயில்கள்

கள் கட்டப்பட்டு வழிபாடு மிகுந்தது. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டா' என்னும் பழமொழியும் பிறந்தது. தமிழ் நாட்டிலேயே மிகப்பெரிய கோயில் என்று பெயர்பெற்ற தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலிருந்து சிறு கிராமக்கோயில்கள்வரை பல கட்டப்பட்டன. நாகப்பட்டினத்துப் புத்தவிகாரம் போன்ற கோயில்களும் பல எழும்பின. ஆனால், சமயம் என்ற முறையில் சமணமும் பௌத்தமும் பலவீனப்பட்டுவிட்டபோதிலும் அவர் கள் தமிழ்இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். கல்வியும் நாட்டில் பரந்திருந்தது. எண்ணாயிரம் என்னும் ஊரில் வடமொழி யிலும் தமிழிலும் உயர்கல்வி கற்பிக்கப்பட்டது; திருப்புவனி என்னுமிடத்தில் இருந்த பள்ளியில் ஒரு மருத்துவச்சாலையும் அமைக்கப்பட்டிருந்தது. திருவொற்றியூரிலும் ஒன்று இருந்தது. இவற்றிற்குத் தேவையான நிவந்தங்களும் மானியங்களும் அரசர்களால் கொடுக்கப்பட்டன.

கி.பி. ஆயிரத்திலிருந்து பதினான்காம் நூற்றாண்டின் தொடர்காலம்வரையில் தமிழிலக்கியம் மிக உயரிய நிலை எய்தியது. சேக்கிழார், கம்பர், ஜயங்கொண்டார், ஒட்டக் கூத்தர்போன்ற பெரும்புலவர்களும் இராமானுசர், மெய் கண்டார் போன்ற மதத்தலைவர்களும் தத்துவ அறிஞர்களும் வாழ்ந்த காலமும் அதுவே. பழைய இலக்கணங்களுக்கு அரிய பேருரைகள் பல இடைக்காலத்தே எழுந்தன.

5. டெல்லி சுல்தானிய காலத்து வரலாற்று மூலங்கள்

இந்திய வரலாற்றின் மூலங்களில் தொடக்ககாலத்திற்குச் சங்கஇலக்கியம்போன்ற சில இலக்கியங்களும், வடமொழிப் புராணங்களிற் கண்ட வம்சாவளிகளும், கல்வெட்டுகளும், காசுகளும், தொல்எழுத்துகளும், புதைபொருள்களும் சான்று பகர்கின்றன ; இடைக்கால வரலாற்றிற்குத் தொல்பொருள்களும், கல்வெட்டுகள் போன்றவைகளும் பயன்படுகின்றன ; ஆயினும், முஸ்லிம் வரலாற்ருசிரியர்கள் எழுதிவைத்த நூல்களும், இங்கு வந்த வெளிநாட்டார் எழுதிவைத்த குறிப்புகளும் மிகுதியாகப் பயன்படுகின்றன. இக் காலப்பகுதிக்குக் கல்ஹணர் ஒருவரைத் தவிர இந்து வரலாற்ருளர்கள் ஒருவருமில்லை. இந்து இலக்கியமும் மிகுதியாகப் பயன்படுவதில்லை. தற்கால வரலாற்றிற்கு வெளி நாட்டார் குறிப்புகளும், அரசினர் தொகுத்துவைத்துள்ள கடிதங்களும், ஆணைகள் முதலியவைகளும், அச்சிட்ட நூல்களும் மிகுதியாகப் பயன்படுகின்றன. இது ஒரு பொதுவான குறிப்பு.

இனி, இந்திய வரலாற்றின் இடைக்காலப் பகுதியான கி.பி. 1000-லிருந்து 1707 வரையுள்ள வரலாற்றுக் காலத்திற்கு முஸ்லிம் வரலாற்ருசிரியர்களுடைய நூல்களே இன்று இந்திய வரலாற்றை எழுதப் புகுவோர்க்கு உறுதுணையாய் நிற்கின்றன. இஸ்லாமியத் துருக்கர்கள் இந்தியாவை வென்று ஆண்டனர். அவர்கள் இந் நாட்டிற்கு விளைத்தது நன்மையோ, தீமையோ— இதைப்பற்றிக் கருத்துவேறுபாடு இருக்க இடமுண்டு. ஆனால், அவர்கள் நிச்சயமாக இந் நாட்டிற்குச் செய்த நன்மை ஒன்றுண்டு. அதாவது, வரலாறு எழுதும் கலையை இந் நாட்டில் முதன் முதலாகப் புகுத்தியவர்கள் அவர்களே. இந்து ஆட்சிக்காலத்தை ஆராய்ந்தவர்களுக்கு உருப்படியான வரலாற்றுநூல் ஒன்றையும் முஸ்லிம் ஆட்சிக்கு முற்பட்ட இந்தியர்கள் எழுதிவைக்கவில்லை

என்னும் உண்மை நன்கு புலப்படும். முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் தோன்றிய பல வரலாற்று நூல்களோடு ஒப்பிடும்போது இக் குறைபாடு இன்னும் தெளிவாகப் புலப்படும். முஸ்லிம் வரலாற்றுசிரியர்கள் இயற்றிய நூல்கள் தலைசிறந்தவை; குற்றப் படாதவை என்றெல்லாம் கூறமுடியாதாயினும் அக் கால வரலாற்றைக் காலவரையறைப்படுத்தி எழுதுவதற்குப் போது மான விவரங்களைத் தருகின்றன என்பதில் ஐயமில்லை.

இலக்கிய மூலங்கள் : அமீர்குஸ்ரு என்பார் (கி.பி. 1253-1325) கைகோபாத், ஜலாலுதின் கில்ஜி,* அலாவுதீன் கில்ஜி, குத்புதீன் முபாரக்ஷா கில்ஜி, கியாஸுதீன் துக்ளக் என்பார் அவைக்களத்தில் புலவராக இருந்தவர். அவர் ஏராளமான நூல்களையும் பாக்களையும் இயற்றியவர். அவர் ஏறத்தாழ ஐந்து லட்சம் பாக்களை இயற்றினார் என்று கூறுவர். சிறு வயதிலேயே நூல் இயற்றத் தொடங்கிய இவர் அவரது இறுதிக் காலம் வரையில் தொடர்ந்து மேற்கொண்டார். குஸ்ரு வர லாற்றுளர் அல்லர்; காப்பியம் இயற்றுபவரே. ஆயினும், அவர் வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்ட நூல் களையும் இயற்றினார். அவர் செய்யுளிலும், உரைநடையிலும் நூல் இயற்றினார். குறிப்பாக அவர் கி.பி. 1291-ல் இயற்றிய மிஸ்தா உல் ஃபுது (Miftah-ul-Futuh) என்னும் நூல் ஜலாலுதீன் கில்ஜி யின் இராணுவ வெற்றிகளை விவரிக்கிறது. கி.பி. 1318-ல் இயற்றப் பெற்ற நூ சிபீர் (Nuh Sipihr) முபாரக் ஷாவின் இராணுவ நடவடிக்கைகளை விவரிக்கின்றது. துக்ளக் நாமா என்பது கியாஸுதீன் துக்ளக் அரசராவதற்கு முன்நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகின்றது. இவையெல்லாம் செய்யுள் நூல்கள். அவர் இயற்றிய தாரிகி அலாய் என்னும் உரைநடை நூல் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சியின் முதல் பதினறு ஆண்டுகளைப்பற்றி விவரிக்கின்றது. இல்துத் மிஷின் அவைக்களத்திருந்த மின்ஹாஜ் உஸ் சிராஜ் (Minhaj us Siraj) என்பார் டபகடி நாஸிரி (Tabaqat-i-Nasari) என்னும் நூலை இயற்றினார். ஹாஸன் உன் நிஸாமி (Hasan Un Nizami) என்பார் ஐபக் அவைக்களத்திலிருந்து தாஜுல் மஸிர் (Tajul Massir) என்னும் நூலை இயற்றினார். இவை அக் காலத்து வரலாற்றை விவரிக்கின்றன. 14ஆம் நூற்றுண்டில் இருந்த முஸ்லிம் வரலாற்றுசிரியர்களில் ஸியாவுத்தின் பரணி என்பார் சிறந்தவர். கி.பி. 1358-ல் அவர் இயற்றிய டாரிகி ஃபிரூஸ் ஷாஹி (Tarikh-i-Firuz Shahi) என்னும் நூல் பால்பன் முதல் முகமது-பின் துக்ளக் ஈருக டெல்லியில் ஆண்ட சுல்தான்கள் ஆட்சியையும்,

*இப் பெயரைக் கல்ஜி என்றும் வரைவர்.

பிரூஸ் ஷாவின் ஆட்சியின் முதல் ஆறு ஆண்டுக்காலத்தையும் பற்றி அவர் எழுதியுள்ளார். பரணி, 'வரலாற்ருளரின் உண்மை யான நோக்கம், உண்மையை மாற்ருமல், மறைக்காமல் கூற வேண்டும் என்பதே' என்று கூறுகின்ருர். அவர் எழுதிய நூலில் அவர்தம் கூற்றுப்படி நடந்துகொள்ளவில்லை என்று எலியட் குற்றம் கூறுகிருர். பெரிஷ்டாவும் இதையே கூறுவது நோக்கத் தக்கது. பரணி மன்னர் அவைக்களத்திலேயே இருந்தமையால் உண்மையான விவரங்களைக் காலவரிசைப்படுத்தி எழுத இயலாது போனமை வருந்தத்தக்கது. எழுதவேண்டியவற்றை ஒழுங்காக அமைத்துக்கொண்டு எழுதும் திறமை அவர்க்கு இல்லை. ஆயினும், பால்பனுக்கும் பிரூஸ் ஷாவிற்கும் இடைப்பட்ட கால வரலாற்றிற்குத் தாரிகி பிரூஸ் ஷாகி போன்ற சிறந்த வேறு நூல் இல்லை. இதே பேர்கொண்ட வேருெரு நூலை ஷாம்ஸி சிராஜ் அஃபிப் (Shamsi Siraj Afif) என்பார் இயற்றிஞர். இருவரும் பிரூஸ்ஷாவின் அவைக்களத்தில் இருந்தவர். பிரூஸ்ஷா தாமே இயற்றிய புதூக் ஹாத் கீ பிரூஸ் ஷாஹி என்னும் சிறு நூல் அவரது வெற்றிகளைக் குறிக்கின்றது. மத சம்பந்தமான அவரது மனப் பான்மையையும் அது தோற்றுவிக்கின்றது. சீரட்-இ பிரூஸ் ஷாஹி என்னும் நூலும் பிரூஸ்ஷாவின் ஆட்சியைப்பற்றியே கூறு கின்றது; அவரை மிகுதியாகப் புகழ்கின்றது. இஸாமி என்பார் கி.பி. 1350-ல் இயற்றிய புதூ உஸ் ஸலாதீன் என்னும் நூல் கஜினி மம்மூதிற்கும் முகம்மது துக்ளக்கிற்கும் இடைப்பட்ட கால வரலாற்றைக் குறிக்கின்றது. இவர் முகம்மது துக்ளக்கின் கொடுங் கோல் ஆட்சியின் முழுவேகத்தையும் அநுபவித்தவர். டெல்லியி லிருந்து தௌலதாபாத்திற்கு, தொண்ணூறு வயது நிரம்பிய தம் தந்தையாரையும் தூக்கிக்கொண்டு இவர் சென்ருர். வழியிலேயே தந்தை இறந்து போஞர். தௌலதாபாத்தில் யாமினி வம்சத்தை நிறுவிய அலாவுதீன் ஹஸன் பாமன்ஷா என்பார் அவைக்களத்தில் தங்கிய இஸாமி துக்ளக்கைப்பற்றிக் கடுமையாக எழுதியுள்ளவை அவர் அடைந்த பல இன்னல்களிஞ லேயும் இருக்கலாம். இந்தியாமீது தைமூர் படையெடுத்ததைப் பற்றி மல்ஸீஸாத்-இ-தைமூரி என்னும் நூலில் விரிவான குறிப்பு கள் காணப்படுகின்றன. அதன் மூலம் துருக்கி மொழியில் இயற்றப்பெற்றது. பிறகு அது பாரசீகத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. ஸபர் நாமா என்னும் மற்ருெரு நூலும் இந் நூலிற் கண்ட விவரங்களையே கூறுகின்றது. யாஹியா பின் அகமது என்பார் இயற்றிய தாரிகி மு பராக் ஷாஹி என்னும் நூல் சையிது அரசர்களைப்பற்றி உரைக்கின்றது. உண்மையில் அந் நூல் மகம்மது கோரியில் தொடங்கி மகம்மது சையிது வரையில் உள்ள வரலாற்றைக் கூறுகின்றது. லோடி வம்சத்தினரைப்பற்றி

அகமது யாத்கா என்பார் கி.பி. 1601-ல் இயற்றிய தாரிகி ஷாஹி என்னும் நூல் முக்கியமான வரலாற்று மூலநூலாகும்.

இவற்றைத் தவிர பெரிஷ்டா, நிஸாம் உத்தீன், பதௌனி என்னும் ஆசிரியர்களுடைய நூல்களும் டெல்லி சுல்தானிய வரலாற்றைக் குறிக்கின்றன. காஷ்மீர் வரலாற்றிற்கு மீர்ஸா ஹைதர் துக்ளாத் டாரிகீ ரஷீதி என்னும் நூல் ராஜதரங்கினி யோடு இணைத்துப் படிக்குங்கால் மிகுந்த பயனுடையதாகின்றது. தக்காணத்துப் பாமினி ஆட்சிக்குத் தேவையான நூல் சையீது அலி டபாடபா என்பார் இயற்றிய புர்ஹானி மாஸிர் என்னும் நூலே யாகும். இதேபோல விஜயநகர ஆட்சிக்கு ஏராளமான இலக்கிய மூலங்கள் உள்ளன. அவற்றில் கங்காதேவி இயற்றிய மதுரா விஜயம், குமார கம்பணர் மதுரை சுல்தானை வென்ற வீரச் செய்தியைக் காப்பிய நடையில் கூறுகின்றது. இது வடமொழி யில் இயற்றப்பட்டது. இராஜநாதர் என்பவருடைய அச்சுத ராயாப் யுதயா என்னும் நூல் கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு மன்னரான அச்சுதராயர் ஆட்சியைப்பற்றிக் கூறுகின்றது.

வெளிநாட்டார் சிலர் இந்தியாவிற்கு யாத்திரிகர்களாக வந்து இங்குக் கண்டவற்றையும், கேட்டவற்றையும் குறிப்பெடுத்து வைத்துள்ள விவரங்கள் வரலாற்று மூலங்களில் ஒருவகை. இபன் பதூதா என்பவர் வடஆப்பிரிக்காவிலுள்ள டாஞ்சியரில் கி.பி. 1304-ல் பிறந்தார். மொரக்கோவிலுள்ள பெஸ்ஸில் (Fez) தமது 74 வயதில் அதாவது கி.பி. 1378-ல் இறந்தார். அவர் வடஆப்பிரிக்காவில் புறப்பட்டு மேலேஆசியா, வட இந்தியா, இந்தோனிஷியா, சீனு முதலிய நாடுகளில் பயணம் செய்தார். அவர் இந்தியாவில் 14 ஆண்டுகள் தங்கினுர். (கி.பி. 1333-1347) எட்டு ஆண்டுகள் டெல்லியில் இருந்தார். அங்கு மகம்மது பின் துக்ளக்கால் காஜியாக நியமிக்கப்பட்டார். கி.பி. 1346-ல் அவர் இந்தியாவைவிட்டு நீங்கினுர். அவருடைய பயண நூல் ஏராளமான விவரங்களைக் கூறுகின்றது. அரசியல் இராணுவ, நிதி, நீதி, சமூகப் பொருளாதார நிலைமைகள் பல வற்றைப்பற்றியும் கூறுவதோடு அது தபால், சாலை, ஒற்றர், விவசாயம், வாணிகம், இசை முதலிய பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுகின்றது. அவர் மகம்மது பின் துக்ளக்கைப்பற்றி உண்மையான (நம்பத்தக்க) விவரங்களைக் கூறுகின்றுர். அவரு டைய பண்பாட்டு மதிப்பீடு சிறந்த முறையில் அமைந்துள்ளது.

இந்தியாவிற்கு வந்தடைந்து இந் நாட்டு விவரங்களைத் தொகுத்தளித்த வெளிநாட்டு யாத்திரிகர்களில் விஜயநகரத்திற்கு

வந்தவர் பலர். கள்ளிக்கோட்டை ஜாமுரின் அவைக்களத்திற்கு வந்த (கி.பி. 1442) பாரசீகத் தூதுவரான அப்துர் ரஸாக் என்பவரும், 13 ஆம் நூற்றுண்டின் இறுதியில் பாண்டியன் அவைக்களத்திற்கு வந்த மார்க்கோ போலோ (இத்தாலியர்), விஜயநகர அவைக்குக் கி.பி. 1420-ல் வந்த இத்தாலியரான நிக்கோலோ காண்டி என்பவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அதனேஸியஸ் நிகடின், லுடோவிகோடி வார்த்திமா, பார் போஸா, டொமிஸ்கோஸ் பேயஸ் என்பாரும் இவ்வாறு வெளி நாடுகளிலிருந்து வந்து இந்தியாவைப்பற்றிய குறிப்புகளை விட்டுச் சென்றவர்கள்.

இவ் விடைக்கால வரலாற்றைக் கூறுதற்கு எண்ணிறந்த கல் வெட்டுகள் பயன்படுகின்றன. இவற்றை எபிகிராபியா கர்ஞடிகா, எபிகிராபியா இண்டிகா முதலிய ஏடுகளில் பதிப் பித்துள்ளனர். ஏறத்தாழக் கி.பி. 1000லிருந்து 1300 வரை தமிழகத்தில் ஆண்ட சோழ, பாண்டிய அரசுகளின் வரலாற்றிற் கும், மைசூரில் ஆண்ட ஹொய்சளர் வரலாற்றிற்கும், இக் கல் வெட்டுகள் மிகவும் உதவுகின்றன. குறிப்பாகச் சோழ அரச வரலாற்றிற்குக் கலிங்கத்துப் பரணி, மூவருலா போன்ற நூல்கள் பயன்படுகின்றன.

6. கஜினி மஹ்மூது (998-1030)

எட்டாம் நூற்றாண்டில் அராபியர்கள் சிந்துவை வென்று ஆண்டமை இஸ்லாமியர்களுடைய முதல் இந்திய ஆட்சி வரலாறுகும். அவ் வாட்சியின் விளைவாக இந்திய நாகரிகத்தின் பல அமைதிகள் அவர்கள் வாயிலாக மத்தியக்கிழக்கு நாடுகளுக்குச் சென்றடைந்து அங்கிருந்து சிறிதுசிறிதாக ஐரோப்பாவில் பரவி அக் கண்டத்தின் இடைக்கால நாகரிகத்தை உருவாக்குவதற்குப் பயன்பட்டன. ஆட்சித்துறையில் அரபுகள் இந்திய இராச்சியங்களுக்கு யாதொரு புதுமுறையையும் வகுத்துத் தரவில்லை. கிராம ஆட்சிமுறை இந்தியக் கலாசாரத்தின் அடிப்படையாகும். அவ் வடிப்படையைச் சிந்துவை ஆண்ட இஸ்லாமிய அரசர்கள் மாற்ற முற்படவில்லை. அவர்கள் வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் குறிப்பாக இராஷ்டிரகூடர்கள் ஆண்ட இந்திய அரசுகளோடு நல்லுறவு பூண்டிருந்தனர். ஆகவே, அவ் வாட்சி முடிவுற்ற காலத்தில் அவ் வாட்சியின் விளைவுகள் யாதொன்றும் இந்திய சமூக, அரசியல் வாழ்வில் நிலைபெற்றுவிடவில்லை.

இந் நிகழ்ச்சிக்கு ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு இஸ்லாமியர்கள் மறுபடியும் இந்திய அரசியல் வாழ்க்கையில் அக்கறை காட்டத் தொடங்கினர். இம் முறை இந்திய அரசியலில் அக்கறை தோற்றிய இஸ்லாமியர்கள் துருக்கர்கள் ஆவர். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் அப்பாஸிது காலிபுகள் ஸ்பெயினிலிருந்து ஸிந்துவரை அமைந்த பேரரசைக் காக்க முனைந்தனர். கி.பி. 900-க்குமேல் அவர்களாலும் அப் பேரரசைக் கட்டிக்காக்க முடியவில்லை. அப் பேரரசு சிதறுண்டது. அச் சிதறுண்ட பகுதிகளில் ஒன்றிலிருந்து உருவானது கஜினி இராச்சியம்.

கஜினியை ஆண்ட துருக்கமன்னர்களின் வரலாறு முழுவதும் நமக்கு ஈண்டுத் தேவையில்லை. ஆயினும், இந்தியாமீது பன்

முறை படையெடுத்துவந்து பல இந்திய மன்னர்களைப் புறங்கண்டு இந்திய அரசியல், சமுதாயம், சமயம் முதலிய துறைகளில் பெருங் குழப்பங்களை விளைத்த மஹ்மூது என்பாரின் முன்னோர்களைப்பற்றி ஓரளவேனும் நாம் அறியவேண்டும். கஜினியில் யாமினி வம்சத்தை நிறுவியவர் சபுக்டிஜின் என்பவர். அவர் பன்னீராட்டைச் சிறுவராயிருந்தபோது அடுத்த நாட்டுப்பகைவர் குழாமொன்று அவரைச் சிறைபிடித்துச் சென்றது; சென்று, நாஸர் என்னும் வணிகருக்கு அடிமையாக விற்றுவிட்டது. அவ் வணிகர் சபுக்டிஜினை மூன்று ஆண்டுகள் கழித்துப் புகாராவிற்கு இட்டுச் சென்றார். அங்குக் குராஸானை ஆண்ட சாமானிது அரசரின் அரண்மனை அலுவலரான ஆல்ப்டிஜின் என்பார் இவ் விளைஞரைக் கண்ணுற்று விரும்பி அடிமையாக விலைக்குப் பெற்றார். சில ஆண்டுகள் கழித்து இவ் ஆல்ப்டிஜின் சாமானிதுகளோடு பகைத்துக்கொண்டு துகாரிஸ்தானை விட்டு நீங்கினார். நீங்கியவர் கிழக்கே இருந்த கஜினியைக் கைப்பற்றி (கி.பி. 963) அங்கு ஒரு சுதந்தர ஆட்சியை நிறுவிக்கொண்டார். அன்றியும், சபுக்டிஜினைத் தன் படைத்தலைவர்களில் ஒருவராக நியமித்துக்கொண்டார். பிரிஷ்டா என்னும் இஸ்லாமிய வரலாற்றாசிரியர் கூற்றுப்படி, சபுக்டிஜின், ஆல்ப்டிஜின் ஆண்ட பதினைந்து ஆண்டுக்காலத்தில், இந்தியர்களோடு பன்முறை போரிட்டு வென்றார். உண்மையில், ஆல்ப்டிஜின் கஜனியில் ஓராண்டுதான் ஆண்டார். அவர் இறந்தமைக்கும் சபுக்டிஜின் கஜினியில் சுல்தான் ஆனதற்கும் இடைப்பட்ட பதினைந்தாண்டுக் காலத்தில்தான் இப் போர்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆல்ப்டிஜின் காபுல் அரசின் சில பகுதிகளையும் கைப்பற்றி ஆண்டதாகச் சில ஆசிரியர்கள் கூறுவர். இதன் உண்மை நன்கு புலப்படவில்லை. ஆயினும், இந்தியாவின் வடமேற்கு எல்லைக் கோடியில் ஆண்டுவந்த ஷாஹி வம்சத்தினர் மேற்கூறிய கஜினி நிகழ்ச்சிகளால் யாதும் பாதிக்கப்படவில்லை என்று தெரிகிறது.

ஆல்ப்டிஜின் கி.பி. 963-ல் இறந்தார். அவரை அடுத்து அவர் மகன் இஷாக் மன்னரானார். அவருக்குப்பின் கி.பி. 966-ல் துருக்கித் துருப்புகளின் தலைவரான பல்காடிஜின் அரியணையேறினார். ஆல்ப்டிஜினின் மகளொருத்தியை மணந்திருந்த சபுக்டிஜின் இஷாக், பல்காடிஜின் இருவராட்சிக் காலத்திலும் அரசியல் அலுவலராகப் பணியாற்றினார். பல்காடிஜினின் ஆட்சி கி.பி. 972-ல் முற்றுப்பெற்றபோது, ஆல்ப்டிஜினின் அடிமைகளில் ஒருவனான பீராய் மன்னனானான். பீராய் ஒரு கொடுங்கோலன். இந் நிலையில் அந் நாட்டுமக்கள் வெளிநாட்டார் உதவியைக் கோரினர். முன்பு கஜினியை ஆண்டுவந்த வம்சத்தைச் சேர்ந்த

அபுபக்கர் லாவீக் என்பான் தனது பழைய அரசைத் திரும்பப் பெறும் ஆசையோடும் இந்துகுஷையடுத்து இந்தியாவில் ஆண்ட ஷாஹி மன்னனும் கஜினிமீது ஒருசேரப் படையெடுத்தனர். இக் கூட்டுப்படை காபூலுக்கும் கஜினிக்கும் இடைப்பட்ட ஓரிடத்தில் அணிவகுத்து நின்றபோது சபுக்டிஜின் திடீரென்று ஒரு பெரும்படையோடு தோன்றிக் கூட்டுப்படையை எதிர்த்துத் தோற்கடித்து வெற்றியோடு கஜினிக்குத் திரும்பினார். அவர் பல போர்க் கைதிகளையும், சில மதகரிகளையும் கைப்பற்றிச் சென்றார். வெற்றிவீரரான சபுக்டிஜினின் புகழ் பரந்தது. பீராய் தனது கொடுங்கோலாலேயே கி.பி. 977-ல் வீழ்ச்சியுற்றான். சபுக்டிஜின் மன்னரானார். மத்திய ஆசியாவிலுள்ள புகாராவில் ஆண்ட அரசர் சபுக்டிஜினின் எழுச்சியை வரவேற்றார். சாமானிது காலிபுகளின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாயிருந்தும் உண்மையில் ஒரு சுதந்தர மன்னராகவே அவர் ஆண்டார்.

சபுக்டிஜின் அரசுகட்டில் ஏறிய பிறகு கூர் (கோர் என்பர் சிலர்), துகாரிஸ்தான், பாமியான், தாவர் முதலிய இடங்களையும் வென்று கஜினியிற் சேர்த்துக்கொண்டார். ஷாஹி இராச்சியத்தைத் தனிப்பட நினைவிற்கொண்டு பன்முறை தாக்கினார். ஷாஹிகள் இஸ்லாமை எதிர்த்தவர்கள். ஆதலால், சபுக்டிஜினின் போராட்டங்கள் இஸ்லாமின் நன்மையைக் கருதி இடப்பட்ட புனித சமயப்போர்கள் என்று கருதப்பட்டன. ஷாஹி ஜயபாலர் இத் தாக்குதல்களை உட்கொண்டு தம் படைகளைச் சீரமைத்துக்கொண்டு சபுக்டிஜினை எதிர்த்தார். லங்கானுக்கும் கஜினிக்குமிடையே இரு படைகளும் மோதின. சபுக்டிஜினின் மகனான மம்மூது தன் தந்தைக்கு உதவினார். போரை வெல்லும் தருவாயிலிருந்த ஷாஹிப் படைகள், சரையிலிருந்து பெய்த பெருமழையால் சிதறுண்டது. ஜயபாலர் தலைதப்பியது முன்னோர் புண்ணிய மென்று கஜினியாரோடு ஒப்பந்தம் செய்து கொண்டு நாடு திரும்பினார். ஆனால், தலைநகருக்குத் திரும்பிய ஜயபாலர் ஒப்பந்தத்தை நிராகரித்தார். இதுகண்டு வெகுளி மூண்ட சபுக்டிஜின் படைகொண்டு ஷாஹிகளைத் தாக்கினார். ஜயபாலரைத் தோற்கடித்து லங்கானைக் கைப்பற்றினார். ஜயபாலர் டெல்லி, அஜ்மீர், கலஞ்சரா முதலிய அண்டையூர் இந்திய மன்னர்களின் உதவியைக்கொண்டு கஜினியாரை மறுபடியும் எதிர்த்தார்.

இவ்வாறு பல இந்திய மன்னர்கள் சேர்ந்து ஓர் அயல் மன்னரை எதிர்த்த செய்தியைப்பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பலவாறாக எழுதுவர். தாய்நாடான இந்தியாவையும் இந்து

சமயத்தையும் அயலாரிடமிருந்தும் அவர்தம் மத எதிர்ப்புக் களினின்றும், காப்பதற்காக ஒற்றுமையுடன் முனைந்தமையைப் புகழ்வர். பல இந்திய மன்னர்கள் ஒன்றுசேர்ந்தது பிரிஷ்டாவின் கூற்று. அது பிற ஆதாரங்களால் நிரூபிக்கப்படாதது. பல இந்திய மன்னர்கள் ஒன்று சேர்ந்துகூட சபுக்டிஜினை வெல்ல முடிய வில்லை; படுதோல்வியுற்றனர் என்று காட்டவே பிரிஷ்டா கூறிய கூற்றுதல் கூடும்; இத்தகைய முயற்சி இந்திய மன்னர்களின் இயல்பிற்குப் புறம்பான தாகையால், இதனை முற்றிலும் நம்பி விடல் ஆகாது.

இந்துப்படை லங்கான் அருகே வருதலைக் கேள்வியுற்ற சபுக்டிஜின் ஒரு மேட்டுநிலத்தில் தன் படைகளை அணிவகுத்து எதிரியின் எண்ணிறந்த படைகளைத் தனித்தனியே தாக்கலுற்றார். இவ்வகைத் தாக்குதலை எதிர்பாராத இந்துப்படை சற்று வலு விழந்தது. கஜினிப்படை முற்றிலும் இப்போது இந்துப்படையை அணுகித் தாக்கிற்று. அந் நிலையில் கைவிடாப் படைகொண்டு தாக்கிய கஜினியாரின் வாளுக்கு இரையாகி அழிந்த இந்துப்படை யில் மிஞ்சியது புறங்காட்டிற்று. எண்ணிறந்த பரிகளும், கரிகளும் வென்றோர் வசமாயின. சபுக்டிஜின் பெஷாவர்வரை உள்ள நாட்டைத் தமது ஆட்சியில் அடக்கினார். அங்கிருந்த மக்க ளிடையே இஸ்லாம் மதத்தைப் பரப்பினார். இதற்கிடையே இளவரசன் மம்மூது குராஸானில் இருந்த படைகளுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். சபுக்டிஜின் கி.பி. 997-ல் தமது 56-வது வயதில் இறந்தார். அவர் போரில் வல்லவர்; தம் குடி மக்களுக்கு நல்லவர். அவர் மக்கள் மம்மூது, இஸ்மாயில், நாஸர், யூஸுபு என்று நால்வர். அவர் இறந்தபோது அவருடன் இருந்த இஸ்மாயில் தம்மை மன்னர் என்று பிரகடனப்படுத்திக்கொண்டு விட்டார். இதுகண்ட மம்மூது இஸ்மாயிலுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அன்னாருக்கு ஆட்சியில் அனுபவம் அதிக மின்மையால் ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைத்துவிடவேண்டு மென்று எழுதினார். இணங்காத இஸ்மாயில் முன்னோனை மம்மூதை எதிர்த்தான். மம்மூது இஸ்மாயிலைத் தோற்கடித்துச் சிறைப்பிடித்து அவன் இறுதிக்காலம்வரை சிறையிருத்தினார். இஸ்மாயில் ஏழு மாத காலமே ஆண்டார்.

சுல்தான் மம்மூது கி.பி. 971-ல் பிறந்தார். 998-ல் கஜினியில் அரசு கட்டில் ஏறினார். அவர் சிறுவயதிலிருந்தே முறையாகக் கல்வி பயின்றார். போர்க்கலையிலும் ஆட்சியிலும் அவர் கைவந்தவர். அவர் தந்தையார் ஆண்ட காலத்திலேயே அவருக்கு உதவியாகப் பல போர்களில் ஈடுபட்டார். கஜினி

இராச்சியத்தைச் சூழ்ந்திருந்த பல பிரதேசங்களை வென்று தமது அரசைப் பரப்பினர். அவருடைய தகுதியை உணர்ந்த காலிபு அல்காதிர் பில்லா என்பவர் அவருடைய ஆட்சியை நன்கு மதித்து யாமின் உத்தௌலா, அமின் உல்முல்லா முதலிய பட்டங்களையும் வழங்கினர்.

மம்மூது ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட பிறகு ஒவ்வோர் ஆண்டும் ஒரு முறையேனும் இந்தியாமீது படையெடுப்பது என்று ஓர் உறுதி பூண்டார் என்று கூறப்படுகின்றது. அவர் பதினேழுமுறை இந்தியாமீது படையெடுத்ததாக ஒரு கணக்குக் கூறப்படுகின்றது. குறைந்தது பன்னிரண்டு முறையேனும் படையெடுத்தார் என்பது மற்றொரு கணக்கு. அஃதெவ்வாறாயினும், அவர் பலமுறை இந்தியாவிற்குள் படைகொண்டு சென்றார். ஒவ்வொரு முறையும் வென்றார் என்பது வரலாறு. கி.பி. 1000-ல் அவர் இந்தியாமீது முதன்முதலாகப் படையெடுத்தார். பெஷாவர் அருகே யிருந்த சில கோட்டைகளைக் கைப்பற்றினர். அடுத்த ஆண்டு அவர் பெஷாவருக்கே வந்துவிட்டார். இது கண்டு பொருத ஜயபாலர் பெரும்படை கொண்டுவந்து மம்மூதை எதிர்த்தார். ஆயினும், கடும்போருக்குப்பின் தோற்றார். மம்மூது ஜயபாலரையும், அவர் மக்களையும், பெயரர்களையும் போர்க்களத்தில் கைப்பற்றி மிராந்த் என்னுமிடத்தில் சிறைவைத்தார். 2½ லட்சம் தினரும், 25 யானைகளும் கொடுத்து ஜயபாலரை அவர் மகனை அனந்தபாலன் மீட்டான். மம்மூது ஜயபாலரின் தலைநகரைக் கைப்பற்றித் தமது ஆட்சியை இந்தியாவிற்குள்ளும் நிறுவினர். பலமுறை இஸ்லாமியர்களால் தோற்கடிக்கப்பட்ட ஜயபாலர் தாமே வளர்த்த தீயிற் குளித்து உயிர்நீத்தார். கி.பி. 1001-ல் அவரையடுத்து அவர் மகன் அனந்தபாலன் அரசனானன்.

கி.பி. 1002, 1003 ஆகிய ஈராண்டுகளில் மம்மூது மத்திய ஆசியாவில் போரில் ஈடுபட்டிருந்தமையால் இந்திய மன்னர்களுக்கு ஈராண்டுக்கால அமைதி ஏற்பட்டது.

கி.பி. 1004-ல் மம்மூது இந்தியாமீது மறுபடியும் படையெடுத்தார். முல்தான் அருகே சிந்து ஆற்றைக் கடந்து பாடியா அரணை அடைந்தார். பாடியா என்னும் நகரம் தற்காலத்தில் எப் பெயரால் அறியப்படுகின்றது என்று உறுதியாகக் கூற முடியாது. சிலர் இதனை பேரா என்றும் சிலர் உச் என்றும், சிலர் பாடிண்டா என்றும் பலவாறாகக் கூறுவர். அக் காலத்தில் பாடியாவை ஆண்டவர் பாஜிராய் என்பவர். ஆனந்தபாலரின் சிற்றரசராய் இருந்த பாஜிராய் அப் பாலருக்குத் தாம் செலுத்த வேண்டிய கப்பத்தைக் கட்டாமலிருந்ததோடு மம்மூதின்

இந்திய கவர்னர்களைப் பகைத்துக்கொண்டு அக் கஜினி மன்னரையும் பகைத்துக்கொண்டார். இவ் விவரங்களை யெல்லாம் கூறுபவர் பிரிஷ்டா. பாஜிராய் வீரத்தில் குறைந் தவரல்லர். கோட்டையைவிட்டு வெளியே வந்து மூன்று நாள் இராப்பகலாகப் போரிட்டார். ஒவ்வோரமையத்தில் போரை வெல்லும் தருவாயிலு மிருந்தார். ஆனல், அவ் வரணை விடாப்பிடியாகத் தொடர்ந்து தாக்கிய மம்மூது அதனைக் கைப்



பற்றினர். இனிக் கோட்டையைக் காக்கமுடியாது என்பதை உணர்ந்தார்; பாஜிராயும் சில வீரர்களும் தப்பி ஓடினர். அவர்களை மம்மூது விரைந்து துரத்திச் சென்றார். இஸ்லாமியப் படைஞர் எளிதில் அவர்களைக் கைப்பற்றினர். ஆயினும், சில படைஞர் களைத் தவிரப் பாஜிராய் உட்படப் பல வீரர்கள் தம்மைத் தாமே மாய்த்துக்கொண்டனர். பாடியாவை யடைந்து நகரத் தைச் சூறையிட்ட மம்மூது 120 யானைகளோடும் அளவிறந்த பிற செல்வங்களோடும் கஜினிக்குத் திரும்பினர் (கி.பி.1005). அவர் திரும்பும் வழியில் பல ஆறுகளைக் கடக்க வேண்டியிருந்ததால் அவர் கொள்ளையிட்டுக் கொணர்ந்த செல்வத்தில் பெரும் பகுதியை வெள்ளத்தில் இழந்தார். அவர் பாடியாவை விட்டுப் புறப்படும் முன்பே பாஜிராயின் இராச்சியத்தை கஜினி ஆட்சியில் சேர்க்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அன்றியும், அங்கிருந்த இந்துக்களை முஸ்லிம்களாக்குவதற்கு வேண்டிய முயற்சிகளையும் மேற்கொண்டார்.

கி.பி. 1005, 1006-ல் மம்மூது முல்தானை நோக்கிப் புறப்பட்டார். அபுல்பாத் தாவூது என்னும் முல்தானிய மன்னன் இஸ்லாமியரிடையே ஒரு பிரிவான இஸ்மாயீலி என்னும் உட்சமயத்தை ஆதரித்ததைக் கண்டு பொறுத மம்மூது இத் தாக்குதலை மேற்கொண்டார். ஆதலால், அவர் இந்துக்களைமட்டும் தாக்கினர் என்பதன்று. முஸ்லிம்களிடையேயும் தமது சமயக் கருத்துகளோடு ஒத்துவராத பிற உட்சமயத்தினரையும்கூட ஒறுக்க முற்பட்டார் என்பது இதனால் விளங்கும். அப்பொழுது சிந்து ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியதால் மம்மூதின் குதிரைப்படை அவ் வாற்றைக் கடக்கமுடியவில்லை. ஷாஹி அரசை ஆண்ட ஆனந்தபாலரின் உதவிகொண்டு ஆற்றைக் கடக்க விரும்பிய கஜினியார் அவர் துணையை நாடினர்; உதவி அளிக்க மறுத்த ஆனந்தபாலரைப் போரில் செம்மையாகத் தோற் கடித்துவிட்டு ஆற்றை எளிதில் கடந்து கிழக்கே முன்னேறினர். ஆனந்தபாலரே தோற்றுப்போன பிறகு தம்மால் யாதும் செய்ய இயலாது என்பதை உணர்ந்த முல்தானின் சுல்தான் ஏழுநாள் அக் கோட்டையைக் காத்த பிறகு கைவிட்டார். இரண்டு கோடி பொற்காசுகள் அளித்து அமைதியைப் பெற்றார். ஆண்டு தோறும் 20,000 பொற்காசுகள் கப்பம் கட்ட ஒப்புக்கொண்ட தாவூது இஸ்லாமின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் ஏற்றுக் கொண்டான்.

இஃதிவ்வாறாக, கஜினி இராச்சியத்தின் வடபகுதியைச் சில துருக்கப்படைகள் தாக்கியதால் நாட்டை அத் திசையில்

காப்பதற்கு மம்மூது விரைந்தார். ஷாஹிமன்னர் ஜயபாலரின் பெயரனை சுகபாலன் முஸ்லிமாக மதமாற்றப் பெற்றிருந்தான். அவனை இந்திய இராச்சியத்தை மேற்பார்த்துக்கொள்ள அமைத்துவிட்டு மம்மூது குராஸானில் போரிடச் சென்றார். மம்மூது அப்பால் சென்றதும் சுகபாலன் திரும்ப இந்துவாக மாறி இந்திய இராச்சியத்தின் சுதந்தரத்தையும் அறிவித்தான். குராஸான் போரை முடித்துக்கொண்டு திரும்பிய மம்மூது கி.பி. 1007-ல் நவாஸாஷா என்று பெயர் பூண்ட சுகபாலனை ஒறுக்கப் படையெடுத்துவந்தார். அது கண்ட சுகபாலன் காட்டிற்கு ஓடி ஒளிந்தான். ஆயினும், கஜினிப் படைகள் அவனைச் சிறைபிடித்து இட்டுச்சென்றனர். நான்கு லட்சம் திர்ஹாம் (ஒரு வகைப் பொற்காசு) பெறுமான செல்வங்களைக் கவர்ந்துசென்ற மம்மூது தமது இராச்சியத்தின் இந்தியப் பகுதிகளில் அமைதியையும் நாட்டினார்.

கி.பி. 1008-ல் ஆனந்தபாலரைத் தண்டிப்பதற்கு மம்மூது ஆயத்தமானார். முல்தானைப் படையெடுத்தபோது அவ் வானந்த பாலர் தமக்கு உதவாமையை மம்மூது மறந்தாரல்லர். மம்மூதின் படையை ஆனந்தபாலரின் மகனை பிரம்பாலர் எதிர்த்தார். ஷாஹிப் படைகளுக்கு உதவப் பல இந்துப்படைகள் வந்து குவிந்தன. பெருவாரியான இந்தியப்படைகளுக்கு வெல்லும் வாய்ப்பு ஓரளவு இருந்ததாயினும் சுல்தானின் படையின் ஒரு பகுதி இந்தியர்களைப் பின்னின்று தாக்க, குழப்பம் அடைந்த இந்திய யானைகள் தமது படைகளுக்கே பெருஞ்சேதம் விளைவிக்க, மம்மூது போரில் வென்றார். புறங்காட்டி ஓடிய இந்துக்களில் 20,000 பேர் கொல்லப்பட்டனர். துரத்திய படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்ற மம்மூது பீமநகரையடைந்து அங்கிருந்து ஏராளமான செல்வத்தைக் கவர்ந்துவந்தார். ஏழு கோடி தர்ஹாம் தவிர ஏராளமான தங்க வெள்ளிக் கட்டிகளும், ஏழு லட்சம் மணங்கு எடையுள்ள நவரத்தினங்களும், வெள்ளியால் இயன்ற ஒரு வீடும் (அதன் பகுதிகளைத் தனித்தனியாகப் பிரித்து எடுத்துவிடக்கூடும்) விலைமதிப்பற்ற ஒரு சிம்மாதானமும், பொன்னாலும் வெள்ளியாலு மியன்ற கம்புகளில் நின்ற பட்டுக் கூடாரமும்—இவையெல்லாம் அவர் கொள்ளையிலடங்கின. இப் போருக்குப் பிறகு சிந்துநதிக்கு மேல்பால் உள்ள நிலப்பரப்பு முழுவதையும் தமது இராச்சியத்தில் அடக்கினார். ஷாஹி அரசும் கஜினி இராச்சியத்தில் அடங்கிற்று. அவர் கவர்ந்து சென்ற விலை மதிப்பற்ற பொருள்களை வைத்துக் கஜினியில் அவர் ஒரு பெரிய பொருட்காட்சியே நடத்தினார்.

கி.பி. 1009-ல், இராஜபுதனத்திலுள்ள ஆள்வார் அரசைச் சார்ந்த நாராயணபுரியைத் தாக்கி வென்ற கஜினி மன்னர் ஏராளமான செல்வங்களையும் கவர்ந்துசென்றார். அதற்கடுத்த ஆண்டு மம்மூது கூர் அரசைத் தாக்கி அதன் மன்னரான மகமது பின் சூரியைச் சிறைப்பிடித்து அவர் தம்பியான அபுஅலியை அங்கு அரசராக்கினார். கி.பி. 1010-ல், மறுபடியும் இஸ்மாயிலி சமய உட்பிரிவை ஆதரிக்கத் தொடங்கியிருந்த தாவூதின் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்ட விரும்பிய மம்மூது முல்தான் மீது படையெடுத்துத் தாவூதைச் சிறைபிடித்து அந் நாட்டின் மீது தமது ஆதிக்கத்தை நிறுவினார். இவ்வாறு, எல்லாப் போர்களிலும் வெற்றியே கண்ட மம்மூதின் பலத்தைக் கண்டு அஞ்சிய ஆனந்தபாலர் அவரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஷாஹி அரசர் யானைகளையும் காலாட்களையும் கஜினிக்கு அனுப்பிவைத்தார். அதற்குப் பதிலாக இனி ஷாஹிகளை எதிர்ப்பதில்லை என்று மம்மூது ஒப்புக்கொண்டார். இவ் வொப்பந்தம் கி.பி. 1012 வரை (அதாவது ஆனந்தபாலர் இருந்தவரை) இரு தரத்தாராலும் போற்றப்பெற்றது. அவர் இறந்ததும் மம்மூது ஷாஹிகள் தலைநகரைத் தாக்கி ஆனந்தபாலரின் மகனை திரிலோசனபாலரை வென்று அவர் நாட்டைக் கஜினி அரசில் அடக்க முற்பட்டார். திரிலோசனபாலரும் அவரது மகன் பீமபாலரும் மம்மூதை எதிர்க்க விரிவான இராணுவ ஏற்பாடுகளைச் செய்தனர். தொடர்ந்து நடந்த போர் பல நாள்கள்வரை வெற்றி யாருக்குக் கிட்டும் என்று தோற்றாத முறையில் நிகழ்ந்தது. இறுதியில் வெற்றி எப்போதும்போலக் கஜினியையே சார்ந்தது. இதன் விளைவாக ஷாஹி அரசின் பெரும்பகுதி கஜினிஅரசோடு இணைக்கப்பட்டது. அங்கிருந்து தப்பியோடிய திரிலோசனபாலர் காஷ்மீரில் தம்மைத் துரத்திவந்த மம்மூதோடு பொருது தோற்றார். இம் முறை கஜினிமன்னர் அளவிறந்த செல்வங்களையும் எண்ணிறந்த கைதிகளையும் கஜினிக்குக் கொண்டு சென்றார். 1015-ல் அந்த ஆண்டு வீண்போகாவண்ணம் மம்மூது இந்தியாவில் நுழைந்து வெற்றியோடு திரும்பினார். மற்றொரு முறை காஷ்மீர்மீது படையெடுத்த கஜினியார் வழக்கம்போல முழுவெற்றி காணாமல் திரும்ப நேர்ந்தது. கி.பி. 1016-17 ஆண்டுகளில் மத்திய ஆசியாவில் பல போர்களில் ஈடுபட்டிருந்த மம்மூது தற்காலிகமாக இந்தியாவை மறந்திருந்தார். 1018-ல் இந்தியா நினைவு வந்துவிட்டது. கஜினியில் புறப்பட்டவர் பஞ்சாபையும், ஐயாற்றையும் கடந்து, 1018-ஆம் ஆண்டின் இறுதியில் யமுனையாற்றையும் கடந்து அங்கிருந்த சிற்றரசர்கள் பலரையும் வென்றார். அங்கிருந்து புறப்பட்ட கஜினி மதுராவை அடைந்து ஆண்டிருந்த அழகிய கோவில்களையும் அவற்றிலிருந்த

பொற்படிமங்களையும் கண்டு மகிழ்ந்தார். அவற்றை இடிக்கவும் உடைக்கவும் கிட்டிய வாய்ப்பைக் கருதிப் பத்துக்கோடி தினார் மதிப்புள்ள இந்துக்கோயில் பொருட்களைக் கொள்ளையிடும் வாய்ப்பு தினமும் கிட்டாது அன்றோ? ஓர் இலட்சம் மணங்கு எடையுள்ள பொன்னும் மணியும் அவர்வசம் சிக்கின. வெள்ளியாற் செய்த படிமங்கள் இருநூறும் அவர்க்குக் கிட்டின. படிமங்களை உடைத்தார்; இருபது நாள்கள் நகரத்தைச் சூறையாடினார். மனஅமைதியோடு மதுராவை விட்டுக் கன்னோஜிக்குச் சென்றார். இடையிலிருந்த பல நகரங்களையும் கைப்பற்றி அளவிறந்த செல்வத்தைக் கவர்ந்தார். சிற்சில சமயங்களில் சில இந்து மன்னர்கள் அவர்கள் மரபிற்கு மாறாக மம்மூதை எதிர்க்கவும் செய்தனர். ஆனால், எந்த எதிர்ப்பும் பயனின்றிக் கழிந்தது. பிரதிஹார வம்சத்தைச்சேர்ந்த இராஜ்யபாலர் மம்மூதின் வருகையை அறிந்து கங்கையைக் கடந்து ஓடினார். மம்மூது கன்னோஜி நகரை நிம்மதியாகச் சூறையாடினார். கன்னோஜியி லிருந்து கிழக்கே சென்றார். கான்பூருக்குப் பத்துமைல் தெற்கேயுள்ள முஞ்ச் என்னுமிடத்தில் ஒரு வலுவான கோட்டை இருந்தது. அதைக் காத்தவர்கள் பிராமணர்கள். அதைச் சூழ்ந்த மம்மூது கோட்டையிலிருந்த வீரர்களை வெளிவந்து போரிடும்படி வற்புறுத்தினார். முஸ்லிம்களுடைய தாக்குதலைத் தாங்கமுடியாத கோட்டை வீரர்கள் வெளிப்போந்து போரிட்டு மடிந்தார்கள். கோட்டையிலிருந்த பலர் மனைவி மக்களுடன் எரிமூழ்கினர். அங்கிருந்து ஆசி என்னுமிடத்திற்குச் சென்று அங்கிருந்த கோட்டையையும் கைவசப்படுத்திக்கொண்டார். இந்தப் படையெடுப்பு இந்தியாவில் அவர் நிகழ்த்திய மிக நீண்டதூரப் படையெடுப்பாகும். 1019 ஜனவரியில் அவர் கஜினிக்குத் திரும்பிய போது இரண்டு லட்சம் பொற்காசுகளும் 50,000 போர்க் கைதிகளும் 350 யானைகளும் உடன்கொண்டு சென்றார் எனக் கூறப்படுகின்றது. இச் செல்வத்தையெல்லாம் கொண்டு அவர் கஜினியில் புகழ்பெற்ற ஜும்மா மசூதியைக் கட்டினார். இதற்கருகே அவர் ஒரு பல்கலைக்கழகத்தையும் நிறுவினார். அக் கழகத்தில் பலமொழிகளில் இயற்றப்பட்ட ஏராளமான நூல்களைத் தொகுத்து வைத்தார். ஒரு பொருட்காட்சிச்சாலையையும் நிறுவினார்.

கி.பி. 1020-21-ல் கஜினி மம்மூது இன்னும் ஒருமுறை இந்தியா மீது படையெடுத்தார். நாம் மேலே கண்டவாறு பிரதிஹார மன்னர் இராஜ்யபாலர் மம்மூதிற்கு அஞ்சி உடன்பட்டதற்கு ஆத்திரமுற்ற சண்டேல வித்யாதரர் இராஜ்யபாலரைத் தாக்கிக் கொன்றார். இது கண்டு பொறாத கஜினி மன்னர் வித்தியாதரரை

ஒறுக்கவந்தார். திரிலோசனபாலர் சண்டேலரோடு கூட்டுச் சேர்ந்திருந்தார். இக் கூட்டை எதிர்த்துப் போரிட்ட மம்மூது வழக்கம்போல வெற்றி கண்டார். இப் போரில் பல இந்து வீரர்கள் உயிரிழந்தனர். 270 யானைகள் வென்ருர் வசமாயின. இம் முறை ஷாஹி அரசு கஜினிப் பேரரசின் பகுதியாகவே அமைக்கப் பட்டது. இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயனின்றி எதிர்த்து நின்ற ஷாஹிகள் இறுதியில் பணிந்துவிட்டனர். திரிலோசன பாலரை வென்ற மம்மூது வித்தியாதரரைத் துரத்திச் சென்ருர். ஒன்று 'முஸ்லீமாக மாறவேண்டும்; அன்றி ஆண்டுதோறும் கப்பம் கட்டவேண்டும்.' என்று வித்தியாதரருக்குச் சொல்லியனுப்பினுர் மம்மூது. வித்யாதரர் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்துச் சுல்தானை எதிர்க்க முற்பட்டாராயினும் இறுதியில் மம்மூதின் ஏனைய பகைவர்களைப்போலவே அளவிறந்த செல்வத்தை இழந்து போர்க்களத்தை விட்டுப் புறங்காட்டினுர். கி. பி. 1021-22ல் மறுபடியும் சண்டேல வித்யாதரரை எதிர்க்க விரும்பி இந்தியாவினுள் புகுந்தார் மம்மூது. இம் முறையும் தோற்கவேண்டிய தேவையில்லாமல் வித்யாதரர் தாமே சமாதானத்தை நாடினுர். வித்தியாதரர் முஸ்லிம் வீரர்களின் வீரத்தைச் சோதிக்கவேண்டித் தம் மதயானைகளில் சிலவற்றை இஸ்லாமியப்படைமீது ஏவி விட்டார். அவர்கள் எளிதில் அவ் வியானைகளை அடக்கினர். இவ் வெற்றித் திறத்தைக்கண்டு அஞ்சிய இந்துக்கள் இனி முஸ்லீம்களோடு போரிடுவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டனர். வித்தியாதரர் சுல்தான் மம்மூதைப் புகழ்ந்து சில பாடல்களை இயற்றியனுப்பினுர். இந்தியாவை முஸ்லீம்கள் தாக்கியபொழுது தற்காப்பு முறையில் இந்துக்கள் நடந்துகொண்ட பலவகைகளில் இதுவும் ஒன்று.

கி.பி. 1024-ல் கஜினி மம்மூது இந்தியாமீது மறுபடியும் படையெடுத்தார். இம் முறை அவர் தாக்க நினைத்த இடம் குஜராத்தின் பகுதியான கத்தியவார் கடற்கரை ஓரத்திலுள்ள சோமநாத புரியில் உள்ள சிவன்கோயிலே யாகும். அக் கோயில் மிகப் பெரிய கோவில். அதன் கோபுரம் பதின்மூன்று படிகள் கொண்டது. பதினன்கு தங்க விமானங்கள் அக் கோயில்மீது அமைந்திருந்தன. அங்கிருந்த லிங்கமும் மஹாலிங்கமேயாகும். அந்த லிங்கத்தின் பீடத்தின்கீழ்த் தங்கத்தாலும் வெள்ளியாலும் இயன்ற பல படிமங்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. அக் கோவிலினுள் அளவிறந்த நவரத்தினங்கள் பலவிடங்களில் வைக்கப்பட்டிருந்தன. இருநூறு மணங்கு எடையுள்ள ஒரு தங்கச் சங்கிலி தொங்கிற்று. இவ்வளவு செல்வத்திற் கொழித்த இந்துக்கோயிலொன்றை மம்மூது தகர்க்காமல் விட்டுவைப்பது அவரது இயற்கைக்கு

விரோதமன்றோ? அன்றியும், அக் காலத்தில் பல இந்துக் கோயில்களைத் தகர்த்துப் படிமங்களை உடைத்து வெற்றிகாண முடிந்ததாயின் அதற்குக் காரணம் அக் கோயில்களி லிருந்த தெய்வங்கள் சோமநாதர் கோயில் லிங்கத்தைப்போல மகிமை பெறாதவை என்று சோமநாதபுரத்தார் எண்ணியும் கூறியும் வந்தனர். அதாவது, மற்ற இடங்களில் மம்மூது செய்த அக்கிரமச் செயல்கள் சோமநாதபுரத்தில் நடவா என்று அவர்கள் கருதினர். இக் கருத்தையும் உடைக்க விரும்பிய மம்மூது மேற்கூறிய படையெடுப்பை மேற்கொண்டார். 30,000 குதிரைப்படைகளும் எண்ணிறந்த காலாட்படைகளும் புடைசூழ மம்மூது சோமநாதபுரத்தை அடைந்தார் (1025 ஜனவரி). அக் கோவில் அங்கிருந்த இந்துக்களால் மிக நன்முகப் பாதுகாக்கப்பட்டது. அவர்கள் தினந்தோறும் அவர்களுடைய கடவுளிடம் அக் கோவிலைக் காப்பதற்கு வேண்டிய வலுவைத் தங்களுக்குத் தரவேண்டினர், அவ்வரத்தைப் பெற்றுவிட்டதாக எண்ணி மம்மூதோடு போரிடத் துணிந்து வந்தனர். ஆயினும், ஒவ்வொரு முறையும் அவர்கள் பகைவனை எதிர்க்க வலுவின்றி மடிந்தனர். 50,000-க்கும் மேற்பட்ட இந்துக்கள் தங்களுடைய மதத்தையும் கடவுளையும் காக்க உயிரைத் தியாகம் செய்தனர். இறுதியில் கோயிலினுட்புகுந்த முஸ்லீம்கள் சிவலிங்கத்தைத் தகர்த்து ஏராளமான நிதியைக் கொள்ளையடித்ததோடு கோயிலையும் தரைமட்டமாக்கினர். இரண்டு கோடி திர்ஹாம் பெறுமான செல்வத்தை அக் கோயில் இழந்தது. சிவலிங்கத்தின் சிதறல்களைக் கஜினிக்குக் கொண்டு சென்று அங்குள்ள ஜும்மா மசூதியின் வாயிற்படியில் பதித்து வைத்தனர். பக்தியுள்ள முஸ்லீம்கள் இந்துக் கடவுளின் படிமத்தை மிதித்து ஏறி வானுலகம் புகும்பொருட்டு, இப் பழக்கம் பிற்கால முஸ்லிம்களாலும் பின்பற்றப்பட்டது. சோமநாத்திலிருந்து கஜினிக்குத் திரும்பும் வழியில் இந்து மன்னர்கள் அவரைத் தடுத்துத் துன்புறுத்தும் வாய்ப்பிருந்தது. ஆயினும், மம்மூது படைகொண்டு வருவதைக்கேட்ட இந்துக்கள் ஆங்காங்கு ஓடி மறைந்தனர். இராஜபுதனப் பாலைவனத்தை அணுகும்போது ஜாட்டியர்கள் சிலர் மம்மூதின் படைகளை வழிமறித்துச் சண்டையிட்டுச் சேதப்படுத்தினர். மிகுந்த திறமையோடு மன்னர் ஒருவாறுகத் தப்பித்துக்கொண்டு கஜினியை அடைந்தார். சோமநாதபுரத்தை அழித்த அருஞ்செய்தியைக் கேட்ட காலிபும் மற்ற முஸ்லீம் மன்னர்களும் பெருமகிழ்வு எய்தி அவரைப் பாராட்டினர்.

கி.பி. 1027-ல், தாம் சோமநாதபுரத்திலிருந்து வரும்போது தமக்குத் தொந்தரவுகொடுத்த ஜாட்டியர்களைத் தண்டிப்பதற்

காகவே மற்றுமொருமுறை இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். இவர், ஆயுதம் தாங்கிய 1500 படகுகளில் தமது போர் வீரர்களை ஏற்றிச் சிந்துநதியைக் கடந்து ஜாட்டியர்களை எதிர்க்க ஆயத்தம் செய்துவந்தார். பகைவர்களும் தேவையான ஏற்பாடு களைச் செய்தனர். அவர்கள் கொணர்ந்த 4000 சாதாரணப் படகுகள் மஹ்மூதின் ஆயுதப் படகுகளோடு மோதி ஆற்றில் மூழ்கின. எண்ணிறந்த ஜாட்டியர்கள் நதியில் மூழ்கி இறந்தனர். எஞ்சியவர்களை முஸ்லிம் படைஞர்கள் கொன்று குவித்தனர். இதுவே மஹ்மூதின் கடைசி இந்தியப் படையெடுப்பாகும்.

கஜனி மஹ்மூது 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச்சிறந்த ஒருசில போர்வீரர்களில் தலைசிறந்தவராவர். அவர் எந்தப் போரிலும் தோற்றதாகக் கேள்வியில்லை. அவர் இஸ்லாமின் கொள்கைகளை இஸ்லாம் விரும்பியபடியே கடைப்பிடித்தவர். இக் கோட்பாடும் அதைப்பற்றி எழுந்த செயற்பாடுகளும் இந் துக்கள் போன்ற பிற மதத்தவர்களுக்கு மிகுந்த தொல்லை விளை வித்தது என்பது உண்மை. சமயப்பொதுநோக்கோடு பார்ப்பவர் களுக்கு அவருடைய நடத்தை அருவருப்பை உண்டாக்கக்கூடியது. ஆனால், அக் காலத்திய உண்மையான முஸ்லீம்கள் சமயப்பொது நோக்கோடு நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு. மற்றும், அவர் இந்தியாவில் நாடுபிடிக்கும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. மேற்கொண்டு இந்தியாமீது படையெடுப் பதற்காகவே வடமேற்கு எல்லையி லிருந்த சில பிரதேசங்களை மட்டும் தமது அரசில் இணைத்துக்கொண்டார். அவர் கஜினியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியமையும் பெரிய நூல்நிலையம் ஒன்றை அமைத்தமையும் பலவிடங்களில் அரிதின் முயன்று சேர்த்த கலைப்பொருள்களைத் தமது தலைநகரில் ஒரு பொருட் காட்சிச்சாலையாகவே நிலையாக வைத்தமையும் அல்பெரூனி போன்ற பேரறிஞர்களைப் போற்றியமையும் அவருடைய பண் பாட்டின் சிறந்த அம்சங்களாகும். அவருடைய படையெடுப்புக் களால் இந்தியாவின் செல்வாதார நிலை சீரழிந்தது. பல கோயில் களும் படிமங்களும் தகர்ந்து போயினமையால் இந்துக்கலை மிகவும் பாதிக்கப்பட்டது. இந்து மன்னர்களிடையே பொதுவான புறப் பகையை ஒற்றுமையோடு எதிர்க்கும் மனப்பான்மையோ, இராணுவத் தலைமையோ இல்லை என்பதை அவர் நிரூபித்தார். அவர் காலத்துக்குப் பிறகும் அம் மனப்பான்மையும் திறமையும் வளராமல் போனமை 12ஆம் நூற்றாண்டிலிருந்து வட இந்தியாவின் பெரும்பகுதி முஸ்லிம்களின் ஆட்சியில் அடங்குவ தற்குக் காரணமாக இருந்தது. மஹ்மூது புலவர்களைப் போற்றினர் என்று கூறினோம். கட்டிடக்கலை, கவிதை முதலிய பயிற்சிகளில்

தலைசிறந்தவர்களை அவர் ஆதரித்தார். குத்பீ என்பவர் அவருடைய அவைக்களத்திலிருந்த வரலாற்றாசிரியர். அவர் இயற்றிய தாரீகி யாமினி என்னும் நூல் மம்மூதின் வாழ்க்கையை விரித்துரைப்பது. அவர் அவைக்களத்தி லிருந்த புலவர்களில் மிகச் சிறந்தவர் பிர்தூசி. அவர் ஷாநாமா என்னும் நூலை இயற்றினார். அவரைக் கீழைநாட்டு ஹோமர் என்று புகழ்வர். அவர் ஷாநாமாவை இயற்றுவதற்கு அவருக்கு மம்மூது ஏராளமாகப் பொன் அளித்தார். இதைப்பற்றி உள்ளத்தை உருக்கும் வரலாறு ஒன்று கூறப்படுவதுண்டு. அந் நூலை இயற்றினால் அவருக்கு 60,000 பொற்காசுகள் தருவதாக மம்மூது வாக்களித்திருந்தார். ஆனால், நூல் முற்றுப்பெற்ற பிறகு அவருக்கு 60,000 வெள்ளிக் காசுகளே கொடுத்தனுப்பினார். ஆனால், அக் காசுகள் அவரிடம் போய்ச்சேர்வதற்குமுன் பிர்தூசி இறந்துபோனார். அந் நூலைக் கண்டு மகிழ்ந்து தமக்கு மிகுதியான செல்வத்தை மன்னர் வாரி வழங்குவார் என்று அக் கவிஞர் எதிர்பார்த்தார். ஆனால், அவ்வாறு நடவாமையால் புலவர் மனம் உடைந்துபோனார். மம்மூதின் முன்னோர்கள் இழிந்த குலத்தில் உதித்தவர்கள் என்றும் அக் காரணத்தில்தான் மம்மூதிற்கு பிறர் பெருமை கண்டு பொறாமை என்னும் இழி நோக்கு இருந்தது என்றும் கூறுகின்றனர். அல்பெருனி என்னும் பேரறிஞரும் மம்மூது காலத்தில் இருந்தவர். அவர் அவைக்களத்தை அலங்கரித்த அறிஞர்களில் அவர் ஒருவர். அல்பெருனி 973-ல் பிறந்தார். கீவாவிலிருந்து கஜினியால் தமது தலைநகருக்குக் கொணரப்பட்டவர். அல்பெருனி கணிதம், வானவியல் முதலிய கலைகளைக் கற்றவர். சமஸ்கிருதத்தில் சமர்த்தர்; அவர் இந்துக்களை வர்ணித்தார். 'இந்துக்கள் பிற நாட்டாரோடு தொடர்பு கொள்ளா திருந்தமையாலும் தங்கள் பண்பாட்டைப்போல் சிறந்தது வேறொன்றில்லை என்று கருதி வந்தமையாலும், தாங்கள் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது யாதொன்று மில்லை என்று கருதிக்கொண்டிருந்தமையாலும்தான் இந்துக்கள் முன்னேறவில்லை' யென்று இக் காலத்திலும் பலர் மறைக்க முயலும் சில அடிப்படை உண்மைகளை வெளிப்படையாகக் கூறியவர். இந்து சமுதாயத்தில் அக் காலத்தில் நிலவிவந்த சில பழக்கவழக்கங்களை அவர் எடுத்துரைத்தார். சிறு வயது விவாகம், கணவனை இழந்தோர் மறுமணம் புரிந்துகொள்ளாமையும், திருமணங்களைப் பெற்றோர்கள் தீர்மானித்தமையும், பிராமணரைச் சமூகத்தில் சிறப்பாக நடத்தியமையும், அவர்களிடமிருந்து அரசியல்வரி பெறாமையும், அரசியல் துறையில் ஒற்றுமையின்மையும் முதலிய பலஉண்மைகளை அவர் எடுத்துரைக்கின்றார். பைஹாகி என்னும் வேறொரு புலவர்

தாரிகி சபுக்டஜின் என்னும் நூலை இயற்றினார். உஸரி என்னும் புலவருக்கு ஒரு சிறு பாடலை இயற்றியதற்குப் பெருநிதியம் வழங்கினார் மம்மூது. உஸாரி என்பவர் அக் காலத்திலிருந்த மிகப் பெரிய கட்டடக் கலைஞர்.

கஜினி மம்மூது நிறுவிய பேரரசு அவருடைய பின்தோன்றல்கள் காலத்தில் எளிதில் அழிந்துபட்டது.

7. கோரி முகம்மது (1173-1206)

கஜினி மம்மூது ஆண்ட காலத்தில் அதாவது 11 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கோரி என்னும் நகரம் ஹீரட், காபூல் ஆகியவற்றைப்போல கஜினியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மம்மூதின் திறமையற்ற சந்ததியார்கள் காலத்தில் கஜினியின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு சுதந்தரம் எய்திய நகரங்களில் கோரியும் ஒன்று. கஜினியை ஆண்ட பஹ்ராம் என்னும் மன்னன் ஆணையால் கோரியில் இருந்த மாலிக் குத்புதீன் ஹஸன் என்னும் இளவரசன் கொலை செய்யப்பட்டான். அதனால் குத்புதீன் ஹஸனின் சகோதரனை சைபுதீன் ஆரி என்பான் கஜினி மீது படையெடுத்து பஹ்ராமைத் தோற்கடித்தான். பஹ்ராம் கோரியைத் திருப்பித் தாக்கி சைபுதீனைக் கொன்றார். அதற்குப் பிரதியாக சைபுதீனின் தம்பியாகிய அலாவுதீன் ஹுசேன் என்பான் கி.பி. 1155-ல் கஜினி நகரத்தை முற்றிலும் அழித்தான். இவ்வாறு நிகழ்ந்து வந்தது கோரிக்கும் கஜினிக்கும் இடையேயிருந்த அரசியல் உறவு. கோரியில் அலாவுதீன் ஹுசேனுக்குப் பிறகு சைபுதீனும் அவனுக்குப் பிறகு கியாஸுதீனும் அரசாண்டனர். கியாஸுதீன் கஜினியைக் கைப்பற்றித் தம் தம்பியான மகம்மது கோரி என்பானிடம் அதன் ஆட்சியை ஒப்படைத்தான். மகம்மது கோரி கஜினியில் தனியாட்சி நடத்தி வந்தாராயினும் தம் அண்ணனுக்கு அடங்கி நடந்ததாகவே வெளியில் காட்டிக்கொண்டார்.

கஜினி மம்மூதிற்குப் பிறகு இந்தியாவைப் பெரிய அளவில் படையெடுத்துத் தாக்கியவர் மகம்மது கோரியேயாம். அவர் இந்தியாவின்மீது படையெடுத்ததற்குப் பல காரணங்கள் கூறுவர். முதற்கண், இயன்றால் அண்டை நாடுகளை எம் முறையாலேனும் கைப்பற்றி ஆளவேண்டும் என்னும் விருப்பம் அரசர்களுக்கு இருந்தது. மாளவம், மூல்தான், பஞ்சாப் முதலிய இடங்களி

விருந்து ஆண்ட அரசர்களால் தமது அரசிற்கு யாதொரு தீங்கும் விளையாமல் இருக்கும்பொருட்டுத் தாமே முன்கூட்டி அவர்கள் நாட்டைப் படையெடுக்க விரும்பியதும் ஒரு காரணம். இவற்றிற்கெல்லாம் மேலாக இஸ்லாமைப் பரப்பவேண்டும் என்னும் பேரவா மிகுந்தது.

கி.பி. 1175-ல் மகம்மது கோரி முதன்முதலாக மூல்தானைத் தாக்கினர். அந் நகரம் எளிதில் கைப்பற்றப்பெற்று அங்கு ஒரு முஸ்லிம் கவர்னர் நியமிக்கப்பட்டார். அவர் அங்கிருந்து உச்சிற்குப் படைகொண்டு சென்றார். அதன் பிறகு பட்டி என்னுமிடத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறப்படும் வரலாறு மெய்யோ, பொய்யோ அறியோம். பட்டி மன்னருக்கும் மனைவிக்கும் இடையே உறவு கசந்திருந்தது. இந் நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துக்கொள்ள விரும்பிய மகம்மது கோரி பட்டி அரசியிடம் 'அவள் தன் கணவனைக் கொன்றுவிடவேண்டும்; அவ்வாறு செய்தால் அவளுடைய மகளைத் தாம் மணந்து கொள்வது' என்று வாக்களித்தார். இவ் வுடன்பாட்டில் முன்னையது நிகழ்ந்ததாயினும் பின்னையது நிகழவில்லை. கி.பி. 1182-ல் அன்ஹில்வாரை மகம்மது கோரி தாக்கினர். அப்பொழுது அன்ஹில்வாரை ஆண்டுவந்த மன்னர் இரண்டாம் பீமா.கோரியின் படை அவரிடம் சிக்கிப் பெரும் தோல்விகண்டது. மகம்மது கோரி எஞ்சிய தனது படையோடு திரும்பிவந்ததே பெரும்பாடாயிற்று. இதிலிருந்து மூல்தான், சிந்து ஆகிய இடங்களின் வழியாக இந்தியாவினுட் புகுந்து வெற்றிகளைக் காண்பது அரிது என்பதை உணர்ந்தார். அதற்கு மாருகப் பஞ்சாபின் வழியாக டெல்லியை அடைவதே இந்தியாவை அடைவதற்கு வழி என்பதை உணர்ந்தார். ஆகவே, அவர் பஞ்சாபை வெல்ல முற்பட்டார். பஞ்சாப் மன்னரின் ஆட்சியிலிருந்த பெஷாவரை 1179-ல் தாக்கிக் கைப்பற்றினர். 1185-ல் மறுபடியும் இது நிகழ்ந்தது. பஞ்சாபில் மன்னராயிருந்த குஸ்ரூ மாலிக் மகம்மது கோரியை எதிர்க்காமல் அவருக்குப் பல வெகுமதிகளை அனுப்பினர். இரண்டாம் முறை பஞ்சாப்பைத் தாக்கியபோது சியால் கோட்டையையும் கைப்பற்றினர். இவ்வாறே தொடர்ந்து நடந்து கொண்டிருந்தால் பஞ்சாப் முழுவதுமே அவர் வென்றுவிடுவார் என்று அஞ்சிய குஸ்ரூமாலிக் கோகர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு சியால் கோட்டைத் தாக்கினர். ஆனல், அதை அவரால் கைப்பற்ற முடியவில்லை. 1186-ல் மகம்மது கோரி மறுபடியும் பஞ்சாபின் உட்புகுந்து லாகூரை முற்றுகையிட்டார். அவ் வமயம் குஸ்ரூ மாலிக்கின் பகைவராயிருந்த ஜம்மு மன்னரான ராஜா சக்கரதேவர் என்பவர் மகம்மது கோரியை

இந்தியாவிற்கு வர வேண்டுகோள் விடுத்தார். குஸ்ரூ மாலிக்கை நேரடியாகப் போரில் தோற்கடிக்க முடியாத மகம்மது கோரி, தான் சிறைப்பிடித்திருந்த அவர் மகனை விடுவிப்பதாகவும் அவனை இட்டுச் செல்ல குஸ்ரூ மாலிக்கே நேரில் வரவேண்டு மென்றும் தூது விடுத்தார். இதை நம்பிவந்த குஸ்ரூ மாலிக்கையும் சிறைப்பிடித்து 1192-ல் கொன்றுவிட்டார்.

பஞ்சாப், மூல்தான், சிந்துப் பகுதிகள் ஏறத்தாழ அவர் வசமாகிவிட்டன; ஆயினும், அவர் மேலும் இந்தியாவினுட் புகுந்து பெரும் பிரதேசங்களைக் கைப்பற்றுமல் தடுப்பதற்குப் பல இராஜபுத்திர அரசர்கள் இடையூருக நின்றனர். இராஜபுத்திரர் கள் உண்மையில் வீரர்களே; போரில் பெருவிருப்பம் கொண்டவர் கள். அவர்களுடைய வாழ்க்கை மரபே போரையும், காதலையும் இரு மையங்களாக வைத்து அமைக்கப்பட்டவை. அவர்கள் பொதுவாழ்க்கையிலும் தனிவாழ்க்கையிலும் பெருமளவு தியாகம் செய்யக்கூடியவர்கள். இத்தகைய தகுதிகளைப் பெற்றிருந்த இராஜபுத்திரர்கள் அக் காலத்தில் இந்தியாவின் வாயில் என்று கருதக்கூடிய வடமேற்குப் பகுதியில் அரசோச்சி யிருந்தும் அவர் களால் கஜினியைத் தடுக்க முடியவில்லை யென்பதை மேலே கண் டோம். இதற்குக் காரணம் அவர்களிடையே சமூகத்திலும் அரசியலிலும் வேற்றுமை உணர்வும், ஒன்றேடொன்று ஒவ்வாத பாகுபாடுகளும் மிகுந்திருந்தமையோடுகூட அவர்களிடையே பொறாமையும் உள்நாட்டுச் சண்டையும் மிகுந்திருந்தமையு மேயாம். இவ் வுட்பூசல்களைப் பயன்படுத்திக்கொண்ட புறத் தாரிடை நிலவிய ஒற்றுமை இதற்கு இன்னொரு காரணம். முஸ் லிம்களிடையே சமயத்தின் பெயரால் நிலவிய ஒற்றுமை இந்து மதத்தைப் பின்பற்றியவரிடையே காணவில்லை. தவிர, நாட் டைக் காட்டிக்கொடுப்பதற்கும் சிலர் இருந்தனர். இத் தகையவர்கள் எப்போதும், எந் நாட்டிலும் காணப்படுவர். பாரசீகர்கள் கிரீஸ்மீது படையெடுத்தபோது, தர்மோ பயிலே யைக் கடந்து செல்ல ஒரு குறுக்கு வழியைக் காட்டிக்கொடுத்த கிரேக்கனைப்பற்றிக் கேள்வியுறுகிறேம். அண்மையில், ஹிட்லர் நார்வேமீது படையெடுத்தபோது அந் நாட்டான் ஒருவன் பகை வனோடு ஒத்துழைத்து நாட்டின் சுதந்தரத்தை விட்டுக்கொடுத்த செய்தி உலகறிந்தது. ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுப் போரின் போது ஐந்தாம் படையினர் தீவிரமாக ஊக்கம் கொண் டிருந்தமை அண்மைக்கால வரலாறு. இந்திய வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே - எடுத்துக்காட்டாக - அலெக்ஸாந்தருக்கு உதவி செய்த தக்ஷசீலத்து அம்பி என்பான் காலம் தொடங்கி இந்திய வரலாற்றில், பண்டுதொடங்கி இன்றுவரை இத்

தொண்டு நடந்து வந்திருக்கிறது. ஆகவே, உள்நாட்டாருடைய வேறுபாடுகள், படையெடுத்தாருடைய ஒற்றுமை, நாட்டுப் பற்றில்லாதார் குழு என்பனவெல்லாம் ஒன்றுசேர்ந்து வீரம் மிகுந்த இராஜபுத்திரர்களுடைய முயற்சியையும் பயனில வாக்கின.

பஞ்சாபிலும், சிந்துவிலும் மகம்மது கோரி நாம் மேற்கூறிய போர் முயற்சிகளை மேற்கொண்டிருந்த காலத்தில், இரு இராஜ புத்திரர்கள் இராஜபுதனத்திலும் டெல்லியிலும் ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் ஒருவர் கனோஜியைச் சேர்ந்த ஜெயச்சந்திரர். மற்றொருவர் டெல்லியை அடுத்த அஜ்மீர் பகுதியை ஆண்ட பிருதிவிராஜ் சௌஹான் என்பவர். இவ் விருவரிடையே நிலவிய உறவு இராஜபுத்திரர் ஆட்சியைப்பற்றிக் கூறும் மேல்அத்தியாயத்தில் கண்டோம். அவர்களில் பிருதிவிராஜர், மகம்மதுவின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தத் தீர்மானித்துத் தராயின் என்னுமிடத்தில் (டெல்லிக்கு வடக்கேயுள்ள தானேசுவரிலிருந்து 14 மைல் தொலைவிலுள்ளது). 1151-ல் துருக்கர் படையோடு பொருதார். அப் போரில் பிருதிவிராஜரே வெற்றிகண்டார். போர்க்களத்தே காயமடைந்த மகம்மது ஒரு படைஞன் உதவியால் போர்க்களத்தினின்றும் தப்பிப் பிழைத்தார். நாற்பது மைல் தூரத்திற்குத் துருக்கப் படையை இராஜபுத்திரர்கள் துரத்திச் சென்றனர். ஆனால், சிர்ஹிந்தைக் கைப்பற்ற முயன்ற இராஜபுத்திரர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. கஜினியை அடைந்த மகம்மது கோரி தராயின் போர்க்களத்தில் தான் அடைந்த தோல்வியை எவ்வாறேனும் மாற்றவேண்டும் என்று இராப்பகலாக எண்ணமிட்டுத் திட்டமிட்டார். அதன்படியே 1192-ல் அவர் இரண்டாம் முறையாக இந்தியாமீது படையெடுத்தார். பிருதிவிராஜரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காணவே அவர் விழைந்தார். அவர் எண்ணப்படியே முன்பு போர் நடந்த தராயினிலேயே துருக்கப்படையும் இந்துப்படையும் நெருங்கிப் பொருதன. இப் போரில் மகம்மதுவின் படையில் ஏறத்தாழ 1⅓ லட்சம் வீரர்கள் இருந்தனர். பிருதிவிராஜருக்கு ஆதரவாக 150 இராஜபுத்திரச் சிற்றரசர்கள் ஈடுபட்டனர். இப் போரிலும் இராஜபுத்திரர்களுக்கு வெற்றிகிட்டும் வாய்ப்பு இருந்தது. ஆயினும், காலையிலிருந்து இரவுவரை தொடர்ந்து நடந்த கடும்போரில் மகம்மது கோரியே வெற்றி கண்டார். பிருதிவிராஜருக்கு உதவியாக வந்த கோவிந்தராஜ் போர்க்களத்தே இறந்தார். முதல் தராயின் போரில் மகம்மது கோரிக்குக் காயம் ஏற்படுத்திய கண்டேராய் என்பவரும் கொல்லப்பட்டார். பிருதிவிராஜர் மனமுடைந்து களத்தை விட்டு ஓடினார். ஆயினும், சிர்சூடி அருகே அவர் பிடித்துக்

கொணரப்பட்டார். அவர் எவ்வாறு கொல்லப்பட்டார். என்பதைப்பற்றி பலவகையான வரலாறுகள் கூறப்படுகின்றன. இஸாமி என்பவர், 'பிருதிவிராஜர் ஆஜ்மீருக்கு இட்டுச் செல்லப் பட்டு அங்கு ஒரு விசாரணையின் முடிவாகக் கொல்லப்பட்டார்' என்பார். ஆனல், மின்ஹாஜ் உஸ் சிராஜ் என்னும் ஆசிரியர் 'போர்க்களத்திலேயே அவர் சிறைபிடிக்கப்பெற்று நகரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்' என்று கூறுவார். தராயினில் நடந்த இரண்டாம் போரின் விளைவாக இந்தியாவின் அரசியல் எதிர் காலம் நிர்ணயிக்கப்பட்டது. இப் போரினை இந்தியாவின் நிர்ணயப்போரில் ஒன்ருக வி.ஏ. ஸ்மித் கருதுவார். இப் போருக் குப் பிறகு பெரிய அளவில் துருக்கப் படைகளைத் தடுத்து நிறுத்தும் ஏற்பாடோ, முயற்சியோ நடைபெறவில்லை யென்பது கருதத் தக்கது. மற்றும் இப் போரைத் தொடர்ந்து சிர்சூடி, கூரம், ஹன்ஸி, ஆஜ்மீர் முதலிய இடங்களெல்லாம் கைப்பற்றப்பட்டன. மகம்மது கோரி பல இந்துக் கோயில்களை இடித்து அவ் விடங்களி லெல்லாம் மசூதிகளைக் கட்டினர். அன்றியும், முஸ்லிம் கலைகளையும் தர்மத்தையும் போதித்த பல கலைக்கல்லூரிகளை நிர்மாணித்தார்.

கனேஜில் ஆண்ட ஜெயச்சந்திரரையும் தோற்கடித்தாலன்றி இந்தியாவில் முஸ்லிம்களுடைய ஆட்சி நிலைப்படாது என்று மகம்மது கோரி விரும்பினர். ஆதலால், கனேஜிமீது படை யெடுத்தார். தராயின் இரண்டாம் போரின் பாடங்களை ஜெயச் சந்திரர் நன்கு உணரவில்லை. அவருக்குப் படைபலம் மிகுந்திருந் தது. அவர் பரந்த நாட்டிற்கு மன்னரா யிருந்தார். ஆயினும், துருக்கர்களிடையே யிருந்த கட்டுப்பாட்டுணர்ச்சி இந்துப்படைஞ ரிடையே இல்லை யென்பது ஒரு பெரும்போரில் தோல்வியுறு வதன் வாயிலாகவே அவர் கற்க இருந்தார். 1194-ல் சந்த்வாரா என்னுமிடத்தில் நடந்த போரில் களத்திலேயே இராஜபுத்திர மன்னர் கொல்லப்பட்டார். உடனேயே அவருடைய படை சிதறியது. ஹஸ்னி என்னும் கோட்டையில் ஜெயச்சந்திரர் தொகுத்து வைத்திருந்த ஏராளமான நிதியங்களை அவர் கொள்ளை யிட்டார். அவர் காசியில்மட்டும் ஆயிரம் இந்துக் கோயில்களை இடித்து அவையிருந்த இடத்தில் பல மசூதிகளைக் கட்டினர். ஜெயச்சந்திரரை வென்றுவிட்டதாலேயே கனேஜ் முழுவதையும் அவர் வென்றுவிட்டதாகக் கருதமுடியாது. சில ஆண்டுகள் கழித்து ககதவால மன்னர்கள் கனேஜையும் கைப்பற்றிவிட்டனர். 1195-96-ல் அவர் கங்கைக்கரைப் பிரதேசத்தை மறுபடியும் தாக்கிச் சில பிரதேசங்களைக் கைப்பற்றினர். அதற்குப் பிறகு சில ஆண்டுகள்வரையில் அவர் இந்திய அரசியலில் தலையிட

முடியாமல் மத்திய ஆசியாவிலிருந்து அவருடைய தலைநகரத்திற்கு ஏற்பட்ட தொல்லைகளைத் தவிர்ப்பதில் ஈடுபட்டிருந்தார்.

கஜினி மம்மூதும் கோரி மகம்மதும்

மம்மூது இந்தியாவின் எப்பகுதியையும் தனது அரசில் இணைத்துக் கொள்ளவேண்டும், நாடு பிடிக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு இந் நாட்டின்மீது படையெடுக்கவில்லை. அவருக்கு இஸ்லாமைப் பரப்பும் நோக்கம் இருந்தது. முஸ்லிம் அல்லாதாருடைய வழிபாட்டிடங்களை இடித்து அங்கிருந்த செல்வத்தைக் கவர்ந்து அதனைக் கொண்டு தனது நாட்டில் முஸ்லிம்களுக்குத் தர்மம் செய்வதிலும் அவர்களுடைய கலைகளை வளர்ப்பதிலும் ஈடுபட விரும்பினார். ஆனால், மகம்மதுவிற்கு அந்தகைய எண்ணமில்லை. அவரும் இந்துக் கோவில்களை இடித்தார்; அவ் விடங்களில் மசூதியைக் கட்டினார் என்பனவெல்லாம் உண்மையே. ஆயினும், அவை அவருடைய முக்கிய நோக்கங்களல்ல. அக் காலத்தில் இருந்த எந்த முஸ்லிம் மன்னனும் அவற்றைச் செய் திருக்கக்கூடும். ஆனால், மகம்மதுவின் முக்கிய நோக்கம் தனது அரசை இந்தியாவிலும் பரப்பவேண்டும் என்பதே. மற்றும் மம்மூது தோல்வி யென்பதையே அறியாதவர். ஆனால், மகம்மது பல தோல்விகளைக் கண்டிருந்தார். கஜினி அத்துணைப் பெரிய வீரராயிருந்தும் அவர் பெயரால் ஓர் அரசை இங்கு நாட்டவில்லை.

மகம்மது கோரி தொடங்கிவைத்த சுல்தானியம் லோடி ஆட்சியோடு ஒருவாறு முற்றுப்பெற்றதாயினும், அதையும் தொடர்ந்து முஸ்லிம் ஆட்சி 1857 வரை இந் நாட்டில் நிகழ்ந்தது என்பதை நினைவுகூர்தல் வேண்டும். மகம்மது தன்னினும் புகழ்வாய்ந்த மம்மூதைப்போலப் புலவர்களைப் போற்றிய புரவலர் அல்லர். கஜினி மம்மூது இந்திய வரலாற்றின் ஓரத்தில் நின்று அதன் உள்நாட்டு அரசியலில் ஈடுபடாமல் கொலையும் கொள்ளையுமே பயின்றார். ஆனால், மகம்மது கோரியோ இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவராய் ஓர் இராச்சியத்தை நிறுவ முயன்றவர்.

மகம்மதுகோரி இந்தியாவின் வடபகுதிகளை வென்று கைப் பற்றியபோது நாட்டை அவர்களிடமிருந்து காக்கும் தகுதி இராஜபுத்திரர்களுக்குமட்டுமே இருந்தது. ஆயினும், இராஜ புத்திரர்களுடைய வீரம் தங்களுக்குள்ளேயே பரிமாறிக் கொள்ளக் கூடியதா யிருந்ததேயன்றிப் புறத்தாரை-சிறப்பாக-முஸ்லிம்களைத் தடுத்து, நிறுத்தி, விரட்டி அடிக்கக்கூடிய திறமையாக விளங்க

வில்லை. அவர்களுடைய போர்த்திறன் கண்டார்க்கும் கேட்டார்க்கும் மகிழ்ச்சியளிக்கும் வகையில் அலங்காரமான விளையாட்டாக இருந்தது. அதனைக் கண்டோர் வியப்பர்; கேட்டோர் பெருமிதமடைவர். ஆனால், அவ் விளையாட்டால் வெற்றி கிட்டி விடாது என்பது அக் கால வரலாற்றால் விளக்கமுற்றது. ஆனால், முஸ்லிம்களோ அவர்களுடைய போர் முறைக்கு ஓர் வரம்பு வைத்துக்கொள்ளவில்லை. போரில் எல்லாமே நேரிது என்னும் கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

8. டெல்லி சுல்தானியம்

(அ) அடிமை சுல்தான்கள் (1206—1290)

குத்புதீன் ஐபெக்

குத்புதீன் ஐபெக் மகம்மதுவால் தம் பிரதிநிதியாக லாகூரில் நியமிக்கப்பட்டவர். 1206-ல் கோரி இறந்தார். அப்பொழுது அவரையடுத்துக் கோரி அரசை ஆளுவதற்கு அவருக்குப் பிள்ளையில்லை. ஆதலால், கீர்மானில் கவர்னராயிருந்த தாஜுடின் இல்டிஸ் என்பவன் கஜினியில் அரசன் ஆனான். கோரி இறந்த பிறகு லாகூர் மக்கள் அரச பதவியைக் கைக்கொள்ளு மாறு ஐபெக்கை வேண்டினர். அவரும் கி.பி. 1206 ஜூன் 24-ல் அப் பதவியை ஏற்றுக்கொண்டார். இல்டிஸிற்கும் ஐபெக் கிற்கும் தொடக்கத்தில் இருந்தே பொறாமையும் பகைமையும் இருந்தன. 1208-ல் ஐபெக் கஜினிமீது படையெடுத்துச் சென்று இல்டிஸை ஆட்சியினின்றும் விரட்ட விரும்பினார். ஆயினும், தாமே அவரிடம் தோற்று இந்தியாவிற்குத் திரும்பினார்.

முதலில் ஆற்றிடைக் குறையின் வடபகுதியையும் அதைச் சுற்றியுமிருந்த நாடுகளையும் வென்று கைப்பற்றியபின், தற்காலத் தில் பண்டேல்கண்டு என்று அழைக்கப்பெறும் ஜேஜகபுக்தியில் ஆண்ட சண்டேல மன்னர்களை வென்று அவர்கள் நாட்டையும் கைப்பற்ற விரும்பினார் ஐபெக். அவர்கள் நாடு முரட்டுப் பிரதேசம். குன்றுகளும், காடுகளும், கானுறுகளும் நிறைந்தது. இவ் வியற்கை வசதிகளைக் கொண்டு பல வலிய கோட்டைகளால் காக்கப்பெற்றது. காலிஞ்சர், மகோபா முதலியவை அத் தகைய கோட்டைகள். அக் காலத்தில் ஆண்ட சண்டேல மன்னர் பரமர்தி என்பார் (1163-1203).

கி.பி. 1202-ல் ஐபெக் தமது தாக்குதலைத் தொடங்கினர். பரமர்தீ காலிஞ்சர் கோட்டையில் அடைத்துக்கொண்டார். ஆயினும், துருக்கரின் முற்றுகையை அவரால் நெடுநாள் தாங்க முடியவில்லை. அவர் சமாதானத்தை விரும்பி ஐபெக்கோடு பேச்சு வார்த்தைக்கு இணங்கினர். ஆனல், சமாதானம் தோன்றும்முன் அவர் இறந்தார். அவருடைய அமைச்சரான அஜயதேவர் மற்றுமொரு முறை ஐபெக்கோடு போரிட்டுப் பார்க்கலா மென்று கருதிச் சமாதானத்தை நிராகரித்தாராயினும் இனித் துருக்கரைத் தடுக்க இயலாதென்று அறிந்ததும் காலிஞ்சர், மகோபா, காஜுராஹோ முதலிய பிரதேசங்களை ஐபெக் வசம் விட்டு விட்டு அஜயகார் என்னும் இடத்திற்குப் பின்வாங்கினர்.

இனி, முயிசுதீன் மகம்மதின் வரலாற்றைச் சிறிது காண் போம். அவருடைய தமயனை கியாஸுதீன் கி.பி. 1202-ல் இறந்தார். இறக்கவே முயிசுதீன் கோரி மன்னரானர். கி.பி. 1205-ல் குவாரஸ்மியான்களோடு அவரிட்ட போரில் தோற்கவே இந்தியாவில் அவர் கண்ட வெற்றிகளின் ஒளி சற்று மங்கலா யிற்று. அவர் மூல்தானில் விட்டுச்சென்ற கவர்னரை விரட்டி விட்டு நாட்டுக்குடிகள் சுற்றியிருந்த நகர்ப்புறத்தைச் சூறை யாடினர். இதனல் சினமுற்ற மகம்மது 1205 அக்டோபரில் கஜினியை விட்டுப் புறப்பட்டு வந்து ஜீலம், சீனுப் ஆற்றிடைப் பகுதியில் கலகக்காரர்களைத் தோற்கடித்தார். தோற்றவர் களில் பெரும்பாலோர் கோக்கர்கள் என்னும் குடியினர். சிறை பிடிக்கப்பட்ட கோக்கர்களை மிகக் கொடுமையாக நடத்திக் கொன்றனர் துருக்கர். அவர்களில் பலர் அண்மையில் இருந்த ஒரு காட்டிற்குள் புகுந்து தப்பித்துக்கொள்ள முயலவே மகம்மது அக் காட்டிற்குத் தீயிடச் செய்தார். அகப்பட்டவர் தீக்கு இரை யாயினர். 1206-ல் லாகூருக்கு வந்து அங்கிருந்த அரசியல், இராணுவ நிலைகளைச் சீர்படுத்தியபிறகு அவர் கஜினிக்குப் புறப் பட்டார். ஆயினும், அவர் சென்ற வழியில் சிந்து ஆற்றங்கரையில் தமியாக் என்னுமிடத்தில் மார்ச் 15 ஆம் நாளில் அவரது கூடாரத் தில் யாரென்று இன்னும் ஒருவராலும் அறியப்படாத சிலரால் குத் திக் கொல்லப்பட்டார். கொன்றவர்கள் கோக்கர்களோ என்று சிலர் ஐயுறுவர். வேறு சிலர் முயிசுதீனல் கி.பி. 1199-ல் அடித்து நொறுக்கப்பெற்ற ஷியா மதவெறியர்களே என்று கருதுவர். உண்மை புலப்படவில்லை. கோரி கஜினியில் புதைக்கப்பட்டார். ஆனல், கோரிப் பேரரசு குவாரஸ்மியான்களுடைய ஆட்சியில் அடங்கிற்று. ஒரு சிறிது காலத்திற்கு மகம்மதுவின் அடிமைகளில் ஒருவனை தாஜுடின் இல்டிஸ் என்பான் கஜினியைக் கைப்பற்றி

ஆண்டான். ஆயினும், கி.பி. 1215-லிருந்து கோரி அரசு குவாரஸம் ஷா ஆட்சியில் அடங்கிற்று.

இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி எளிதில் நிறுவப்பட்டமைக்குக் காரணங்கள்

கோரி இந்தியாவில் விளைத்த இஸ்லாமிய வித்து அதன் பிறகு ஆறு நூற்றாண்டுக்காவது வடஇந்தியா முற்றிலுமேனும் ஒரு பெரிய மரமாக வளர்ந்து தழைத்தது. அது நிழல் கொடுத்தது; பலவகைப் பழங்களை ஈந்தது. அவற்றில் சில மாங்கனியெனச் சுவைத்தன. பிற காஞ்சிரங்காயெனக் கசந்தன. அது பல விழுதுகளை விட்டுத் தன்போன்ற வேறு சில இஸ்லாமிய மரங்களை (பாமினி சுல்தானியம், ஹைதராபாத் நைஜாம் இராச்சியம், மதுரை சுல்தானியம், ஹைதர், திப்பு போன்றவர்களுடைய ஆட்சி, ஆர்க்காடு நவாபி போன்றவை) ஆங்காங்குத் தழைக்கச் செய்தது. அது தோற்றிய சில மலர்கள் (குதுப்மினார், செங்கோட்டை, தாஜ்மஹால் போன்றவை) மணந்தன. இவையெல்லாம் நிகழ்ந்த காலத்தில் அவ் வித்து நடப்பெறுவதற்கு முன்பிருந்த நாட்டுக் கொடிகளும் செடிகளும் தழைக்கமுடியாமல் நலிந்தன. சில பழைய கொடிகள் இப் புதிய மரத்தைத் தழுவியே வளர்ந்தன. ஆயினும், அவ் விஸ்லாமிய மரம் இந்தியத் தோட்டத்தில் எவ்வாறு தழைக்க முடிந்தது என்பது இந்திய வரலாற்றுக் கேள்விகளில் ஒன்று. கி.பி. 1000-ல் தொடங்கிய கஜினி மம்மூதின் படையெடுப்புகள் பெருவாரியான செல்வ நட்டத்திலும், மத மாற்றலிலும், கோவில் சூறைகளிலும் படிம உடைப்புகளிலும் தலைசிறந்தது. அவர் பலமுறை இந் நாட்டிற்கு வந்து, இவ் வரிய காரியங்களைச் சாதித்தார். ஆனால், அவரைத் தடுக்கவோ, வெல்லவோ இந் நாட்டிலிருந்த மன்னர்களால் தனியாகவோ கூட்டாகவோ இயலவில்லை யென்பது வரலாறு. ஏன்? என்பது வரலாறு தொடுக்கும் வினா. கஜினிக்கு இரண்டு நூற்றாண்டுக்குப் பிறகு கோரி படையெடுத்தார். முதல் தராயின் போரில் அவர் முன்னேற்பாட்டுக் குறைவாலோ, இராஜபுத்திரரின் நல் ஊழாலோ பிருதிவிராஜ் வெற்றிகண்டார். அடுத்த தராயின் போரில் துருக்கரை எதிர்த்த இந்து மன்னர்கள் தொண்ணூற்றொன்பது சதவிதம் தோற்றனர். ஏன்? என்பது வரலாறு தொடுக்கும் வினா. பல துருக்க வம்சங்கள் (வட) இந்தியாவை ஆண்டனர்; அடிமைச் சுல்தான்களும், கில்ஜிகளும், துக்ளக்குகளும், சையதுகளும் லோடிகளும், ஆப்கானியரும், மொகலாயரும் என இவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டபோது அவர்களை இடைமறித்து

வழியேற்றி அரசாள வேண்டுவோர் திறமை அல்லது வாய்ப்பு, இந் நாட்டு மன்னர்க்கு இல்லாமற் போயிற்று. என்? ஏன்பது வரலாறு தொடுக்கும் வினா. புறத்தார் சிலரே வந்தனர். அவர் தன்னாடுவிட்டு இந் நாடு வந்தவர். இந்தியாமீது படையெடுத்த அப் புறத்தார்க்கு ஆதரவு அளிக்க நாட்டுமக்கள் உட்பட்டிரார். அப் புறத்தாரை எதிர்த்து நாட்டைக் காக்க முற்பட்ட எல்லாரும் இந் நாட்டுமன்னர். மக்கள் அவர்களுக்கு உதவியிருக்கவேண்டும்; படைபலமும் ஆதரவும் விஞ்சியிருக்கவேண்டும். பல இந்திய மன்னர்கள் ஒன்று கூடியிருந்தால் ஒன்றியாக வந்த பகைவனைப் பலமுறை வென்று வெளியேற்றி யிருக்கலாம். ஆனால், இப்படி ஒன்றும் நிகழவில்லை. ஏன் ? என்பது வரலாறு தொடுக்கும் கேள்வி.

இதற்கிடையே, ரா. ச. மஜூம்தார் என்னும் வரலாற்றுப் பேரறிஞர் இன்னோரன்ன வினாக்களைத் தாமே எழுப்பிக்கொண்டு 'இவற்றிற்குத் தக்க விடையளிக்கப் போதுமான வரலாற்று விவரங்கள் நமக்குக் கிடைத்தில; அவை முற்றிலும் கிடைப்பின் அன்றோ நாம் விடை கூற முடியும்?' என்று கூறுவர். அவர் 'சுல்தானியத் தொடக்க கால வரலாற்றை நமக்கு எடுத்து உரைக்கும் மூலங்கள் யாவையுமே புறத்தார் குறிப்புகளிலிருந்தும் அவர்களால் ஆதரிக்கப்பெற்ற வரலாற்றாசிரியர்கள் நூல்களி லிருந்துமே கிடைக்கின்றன. இந் நாட்டு அறிஞர்களால் எழுதி வைக்கப்பட்ட நூல்கள் இவ் வரலாற்று நிகழ்ச்சிகளைப்பற்றி யாதொன்றும் கூறுவன அல்ல. இந் நிலையில் ஒரு சாரார் கூற்றைக் கொண்டு யாதொன்றும் கூறலாகாது; ஆனாலும், 'கூடாது' என்பார். இது ஓரளவுக்கு உண்மையே, ஆயினும், மேலே எழுப் பிய வினாக்களுக்கு உண்மையான விடையாகாது. உண்மைகள் கசப்பாயிருப்பினும் அவற்றைக் காண்டலும் கண்டபின் கூறலும் வரலாற்றாளருடைய கடமையாகும். ஏறத்தாழ ஆறு, ஏழு நூற்றாண்டுக் கால அளவிற்கு இந் நாட்டின் எதிர்காலத்தையே நிர்ணயிக்கக்கூடிய பெருநிகழ்ச்சிகள் நடந்தனவாயினும் நம் நாட்டுப் புலவர்கள் ஒருவர்க்கும் அவற்றைப்பற்றி எழுதி வைக்கவேண்டும் என்னும் எண்ணமும் ஏற்படவில்லை. இது ஏன் என்பதும் ஒரு கேள்வியே. அதற்கும் விடை கிடைத்திலது.

இவை எவ்வாறாயினும் ஒன்று உறுதி. சில எண்ணிக் கையினரான புறத்தார் தம் நாடு விட்டு இந் நாடு போந்து வலு விலும் வசதியிலும் விஞ்சிய இந் நாட்டு மன்னரை வென்று நாட்டை அடிப்படுத்துப் பல நூற்றாண்டுக்காலம் ஆண்டனர் என்பதைப்பற்றிக் கருத்துவேறுபாடில்லை. நமக்குக் கிடைத்தில

என்று சில வரலாற்றுசிரியர்கள் வருந்தும் விவரங்கள் கிடைப்பினும் கிடைக்காவிடினும் இவ் வுண்மை ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

சிறிது ஆழ்ந்து எண்ணிப்பார்த்தால் இதற்குக் காரணம் விளங்காமல் போகாது. முதற்கண் இந்தியாவிலிருந்த பல அரசுகள் ஒன்றுசேர்ந்து துருக்கப்படையெடுப்பாளர்களை வென்று துரத்தியிருக்கவேண்டுமென்று எண்ணுவது தற்கால எண்ணம். 'இந்தியா ஒரு நாடு, நாமெல்லாரும் இந் நாட்டுக் குடிமக்கள். இதன் ஆதிபத்தியத்தையோ சுதந்தரத்தையோ குலைக்க வருவோர் நமது பொதுப்பகைவர். அவர்களை எதிர்க்கவேண்டும்' என்னும் எண்ணம் எல்லாம் தற்காலத்து எண்ணம். இதையெல்லாம் இக் கருத்துகளைச் சிறிதும் அறிந்திராத பண்டைக் கால மக்கள் வரலாற்றில் புகுத்துவது விஞ்ஞானவகை ஆராய்ச்சியாகாது. அக் காலத்தில் இந்தியாவிலிருந்த பல இராச்சியங்கள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் பகைத்துப் போரிட்டுக் கொண்டிருந்தன. ஆகவே, புறத்தார் படையெடுப்பு என்னும் கருத்து ஒன்றே அவர்களுக்கு உதித்திருக்க இடமிராது. கஜினியையும், கோரியையும் எதிர்த்த சில இராஜபுத்திர அரசர்களுக்குத் தங்கள் ஆதிக்கமும் ஆட்சியும் போய்விடுமே என்ற அச்சம் இருந்ததேயன்றி இந்தியாவின் சுதந்தரம் பாதிக்கப்படுமே யென்னும் எண்ணம் தோன்றி யிருக்கமுடியாது. கஜினி திரும்பத் திரும்பப் படையெடுத்துக் கொண்டிருந்த காலத்தில், மேலைச்சாளுக்கியர்களுக்கும் பேரரசுச் சோழர்களுக்கும் திரும்பத் திரும்பப் போர் நிகழ்ந்தது. அப்பொழுது தஞ்சையில் முதலாம் இராஜராஜர் ஆண்டார். அப்போது தஞ்சையில் பெரிய கோயிலைக் கட்டிக் கொண்டிருந்த தமிழகத்தார் அதே சமயத்தில் சோமநாதபுரத்தில் பெரிய கோயில் இடிக்கப்பட்டமைபற்றிக் கேள்விப்படவுமில்லை; கேள்வியுற்றிருப்பினும் அதைப் பொருட்படுத்தி யிருப்பரோ என்பதும் ஐயமே. வங்காளத்தி லிருந்தவர்களுக்கு இலட்சுமணசேனரை மகம்மது பக்தியார் கில்ஜி படையெடுத்து வந்தமைக்கும், மகிபாலரை இராஜேந்திர சோழர் வென்றமைக்கும் வேறுபாடு தெரியாது. ஆகவே, இந் நாட்டு இந்து மன்னர்கள் ஒன்றுசேர்ந்து புறத்தாரான முஸ்லிம்கள் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முற்படாமை வியப்பன்று. அன்றியும், சாதிமுறை இந் நாட்டு வரன்முறைகளில் ஒன்று. அதன்படி நாட்டைக் காப்பது மன்னருடைய தொழில். அதைப் பற்றி நமக்கேன் என்று விடுப்பது மக்களுடைய தொழில். படையெடுப்பால் உடனடியாகப் பாதிக்கப்பட்டவர்கள்மட்டும் அதனைத் தடுக்க முற்பட்டனர். அவர்களுடன் பகைமை யிருப்பின்

ஒருவரை யொருவர் பொதுப்பகைவருக்குக் காட்டிக்கொடுத்து விடுவர். தங்கள் சொந்த நலன் ஒன்றைத் தவிர வேறு எந்த நலனும் தெரியாத மக்கள் கூட்டத்திடையே புறத்தான் புகுந்து வெல்வது எளிது. மாலிக்காபூர் தென்னுட்டைப் படை யெடுத்தபோது ஹொய்சளரை வெல்வதற்கு யாதவர் வழி காட்டினர். பாண்டியரை வெல்வதற்கு ஹொய்சளர் வழி காட்டினர். ஆகவே, மத அடிப்படையில்கூட ஒற்றுமை தோன்றவில்லை. முஸ்லிம்களுக்கு ஜகட் அல்லது சமயப்போர் என்ருல் எப்பொழுதும் உள்ள ஒற்றுமை இன்னும் வலுப்படும். இந்து சமயமோ பலவிதப் பிரிவினைகளைத் தோற்றி வளர்க்கும் முறையினில் அமைந்ததே யன்றி ஒற்றுமையைத் தோற்றுவதா யில்லை. கொள்கை அடிப்படையில் சமயத்தையும் நாட்டையும் காக்கும் வெறிபோன்று இல்லாமையால்தானே இந் நாடு பிறரால் வெல்லப்பட்டது; ஆளப்பட்டது? எம் மதமும் சம் மதமே என்பாரும் மணமாற்ற மில்லாவிடினும் மதம் மாற்றிக் கொள்ளலாம் என்று எண்ணுவோரும் மலிந்த நாட்டில் சமுதாயத் தற்காப்பிற்காகக்கூட ஒற்றுமை தோன்றுவது அரிது. இவ் வொற்றுமை யின்மை சமுதாயப் பெருநிலையிலே யல்லாமல் போர்க்களத்திலேயும் வெளிப்படுவதாயிற்று. இன்னேரன்ன காரணங்களால் 1200 ஆம் ஆண்டில் வெளியாரால் வென்று ஆளப்பட்ட இந் நாடு 1947 வரை அத்தகையோரால் ஆளப் பெற்றது. அவ் வாண்டில் இந் நாடு பெற்ற சுதந்தரம் கடைசி யாக நம் நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்களுடைய வரலாற்று, இலக்கிய வாயிலாக தேசியம், நாட்டுப் பற்று, அரசியல் சுதந்தரம், மக்களாட்சி, சமத்துவம் என்னும் பல புதுக்கருத்துக்களின் அடிப்படையில் வென்ற சுதந்தரமேயாகும். அதற்கு ஆதாரம் இந் நாட்டுப்பழமையில் இல்லை.

குத்புதீன் ஐபெக் 1206-லிருந்து 1210 வரை பஞ்சாபையும் கங்கை, யமுனை ஆற்றிடைப் பிரதேசத்தையும் மையமாகக் கொண்ட நாட்டை ஆண்டார். இந்தியாவில் அடிமை வம்சத் தினர் ஆட்சி யென்று பொதுவாகக் கூறப்படும் ஓர் ஆட்சியை நிறுவியவர் அவரே. அவரை மகம்மது கோரி கஜினியில் விலைக்கு வாங்கினர். அவர் அரசாளுதற்குரிய எல்லாத் தகுதிகளையும் பெற்றவர். மகம்மது கோரியின் நம்பிக்கைக்குப் பாத்திரராய் விளங்கியவர். அவர் போற்றத்தக்கமுறையில் பெருவெற்றி களைக் கண்டு பேரரசு ஒன்றை நிறுவிவிடவில்லை. வடஇந்தியா வில் அக் காலத்தில அரசியல் நிலைமை மிகவும் குழம்பி யிருந்த தால் அவர் இராணுவ முயற்சிகளில் மிகுதியாக ஈடுபட்டிருந் தார். ஆதலால், நிர்வாகத் துறையில் மிகுதியாக யாதொன்றும்

அவரால் செய்துவிட முடியவில்லை. இந்துக்களை வன்முறையில் மதம்மாற்றுவதும் அவர் வழிபாட்டு இடங்களை இடிப்பதும் ஆகிய காரியங்களைச் செய்தாராயினும் அதையே தமது முக்கிய அலுவலாகக் கொண்டாரில்லை. மகம்மது டெல்லி சுல்தானியத்திற்கு வித்திட்டவராயினும் அங்கு ஆட்சி புரிவதற்கு ஓர் ஆளுநர் வம்சத்தை நிறுவிய பெருமை ஐபெக்கைச் சாரும்.

அவர் நிறுவிய வம்சத்தின் பெயர் 'அடிமை வம்சம்' என்பதாம். அதற்குக் காரணம் ஐபெக் மகம்மது கோரியின் அடிமையென்பது தவிர ஐபெக்கிற்குப் பிறகு சுல்தானியத்தை ஆண்டவர்கள் பலர் அடிமைகளாய் இருந்தனர் என்பதும்கூட. அவ்வாறு ஆண்ட முக்கியமான அடிமைகள் ஐபெக், இல்தூத்மிஷ். பால்பன் என்பவர்கள். அடிமை யென்ற சொல்லாட்சியாலேயே ஆளுநர் எல்லாரும் பலவீனர்களாகவோ, அறிவீனர்களாகவோ, திறமையற்றவர்களாக இருந்தனர் என்று கருதலாகாது. உண்மையில் அவர்கள் சிறு வயதில் தங்களுடைய எஜமானர்களால் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளாகவே இருந்தனர். ஆயினும், அவ் வடிமைகள் மன்னனுடைய குடும்பத்தின் உறுப்பினராகவே கருதப்பட்டு நன்கு நடத்தப்பட்டனர். ஒரு வீரனுக்கும் ஆட்சியாளருக்கும் தேவையான எல்லாக் கலைகளையும் கற்றுக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்பிருந்தது. மன்னனோடு அவன் மக்களைவிட நெருங்கிப்பழகும் நிலையில் அவர்கள் இருந்தனர். இவ் வடிமைகள் எல்லாரும் முதலில் விலைக்கு வாங்கப்பட்டவர்களாயிருப்பினும் சில ஆண்டுகளுக்கெல்லாம் அந் நிலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு, அரசருடைய அந்தரங்க நண்பர்களாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டனர். தவிரவும் அவர்கள் எல்லாரும் தங்கள் எஜமானருடைய நெருங்கிய உறவினர்களாகவே ஆகிவிட்டனர். அரசரின் மகளை அடிமை மணப்பது எளிதில் இயன்றது; பெரும்பாலும் பயின்றது. பெற்ற மகனை விட உற்ற அடிமையைப் பெரிதும் விரும்பி மதித்து நடத்தினர் மன்னர். விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகள் மிக இழிந்த நிலையிலிருந்து அரசிலும் நாட்டிலும் மிக உயர்ந்த நிலையை அடைந்தனர், எடுத்துக்காட்டாக ஐபெக், இல்தூத்மிஷ், பால்பன் என்போரைக் கூறவேண்டும். ஆயினும், இவர்களைவிட மிகச் சிறந்த எடுத்துக்காட்டு அலாவுதீனின் அடிமையான மாலிக்காபூர்.

இக்தியாருதீன் மகம்மது பக்தியார் கில்ஜி

மகம்மது கோரி, குத்புதீன் ஐபெக் ஆகியோருக்குக் கிழக் கிந்தியாவை வென்று கைப்பற்றும் எண்ணமே இல்லை. ஆயினும்,

ஐபெக் ஆண்டு முடிவதற்குள்ளாக வங்காளம்வரையில் அவரது ஆட்சிக்குட்பட்டது. இதற்குக் காரணம் இக்தியாருதீன் மகம்மது பக்தியார் கில்ஜி என்னும் படைஞரின் தனி வீரமேயாகும். இவர் பார்ப்பதற்கு மிகுந்த விகாரமான உருவமுடையவர். ஆதலால், இவருக்குக் கஜினியிலோ, டெல்லியிலோ வேலை கிடைக்கவில்லை. கடைசியில் அவுதில் (அயோத்தி) மாலிக் ஆகூல் பக் என்பாரிடம் வேலைக்கமர்ந்தார். அம் மாலிக்குக்கு உட்பட்டுச் சில கிராமங்களை மேற்பார்த்து வந்த பக்தியார் கி. பி. 1200-லிருந்து சில போர்வீரர்களைச் சேர்த்துக்கொண்டு கிழக்கே இருந்த சில பிரதேசங்களில் இராணுவ ஊடுருவல்களைச் செய்து வந்தார். அவ் விடங்கள் வங்காளத்திலிருந்த சேன அரசின் மேல் பால் ஆகும். நாளடைவில் தமது ஊடுருவல்களால் தாம் பெற்று மிகுந்த செல்வத்தைக்கொண்டு ஒரு பெரும் படையைத் திரட்டினார் பக்தியார். இறுதியில் பீகாரிலுள்ள ஓடந்தபுரி என்னும் ஊரைத் தாக்கிக் கைப்பற்றினார். அங்கு அதை எதிர்ப்பார் ஒருவருமில்லை. சில பௌத்த பிக்ஷுக்கள் அங்கிருந்த சில புத்த விகாரங்களைத் தற்காத்துக்கொள்ள முயன்றபோது அவர்களைப் பிராமணர்களென்று எண்ணி அவர்களைக் கொன்று குவித்தார். வெற்றி எளிதில் கிட்டியமையால் மேலும் கிழக்கேயிருந்த பிரதேசங்களை வந்து கைக்கொள்ளவேண்டுமென்று விரும்பினார். அதற்கு ஐபெக்கின் அனுமதியையும் கேட்டுப் பெற்றார். அதிலிருந்து ஓராண்டுக்குள்ளாக வங்காளத்தைத் தாக்க அவர் ஆயத்தமானார். அவர் முதலில் நடியா (லட்சுமண சேனரின் தலைநகரம்) நகரத்தை நெருங்கியபோது அவ் வூர்மக்கள் ஓடிவிட்டனர். மன்னரும் சில வீரர்களும்மட்டும் இருந்தனர். மகம்மது பக்தியார் தம் வீரர்களோடு தடுப்பாரின்றி அரண்மனையுட் புகுந்து ஆரவாரிக்கவே தம் நாட்டையும் தலைநகரையும் பகைவன் படையெடுத்துள்ளான் என்பது அப்பொழுதுதான் வங்காள மன்னரான லட்சுமண சேனருக்குப் புரிந்தது. அம் மன்னர் அப்பொழுது பகல் உணவில் ஈடுபட்டிருந்தார். வாயிற்புறமாகப் பகைவன் நுழைந்துவிட்டதைக் கேள்வியுற்ற மன்னர் கொல்லைப்புறமாக ஓடினார். இதை நம்ப முடியாது என்று சில ஆசிரியர்கள் கூறுவர். கில்ஜியார் வென்றதும் சேனர் தோற்றதும் வரலாற்று உண்மைகளென்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றவராயினும் சுத்தியின்றி, ரத்தமின்றி ஒரு மன்னர் கொல்லைப்புறமாக ஓடினார் என்பது மிகைக்கூற்றாகக் காண்கிறது சிலருக்கு. ஆயினும், மாலிக்காபூர் துவார சமுத்திரத்திற்கு வந்தபொழுது மூன்றாம் வீரவல்லாளர் ஏறத்தாழ இங்ஙனமே நடந்துகொண்டார் என்பது நினைவுகூரற்பாலது. இந்த நிலையில்கூட ஊரைவிட்டு அஞ்சி ஓடிய சேனரை மற்ற மக்களைப்போலக் கில்ஜியார் வருவதற்கு முன்பே ஓடாமல்

அங்குச் சற்றுத் தங்கி ஓடிப்போனதற்காக அவரைச் சிலர் புகழ்வர்; அவரைக் கோழையென்று சொல்லக்கூடாதென்று பரிந்துரைப்பர்.

பக்தியார் கில்ஜி நடியாவை நன்கு கொள்ளையடித்த பிறகு லக்னேவதி யென்னும் ஊருக்குப் படைகொண்டு சென்றார். வங்காளத்தில் எளிதாக வெற்றி கண்டுவிட்டமையால் திபெத்தைக்கூட வென்றுவிடலாமென்று கருதியவர், வட வங்காளம் வழியாகத் திபெத்மீது படையெடுத்தார். அப் படையெடுப்பு அக்காலத்தில் பேராபத்தில் முடியுமென்று காமரூப மன்னர் அவருக்கு அறிவுறுத்தியும் கேளாராய்த் திபெத்திற்குப் போகும் நெடுஞ்சாலையில் நுழைந்தார். அங்கு அவருக்குப் பலமான எதிர்ப்புத் தோன்றியது. மேலும் 50,000 வீரர்கள் கொண்ட ஒரு துருக்கர் படை அவரை எதிர்க்க வருவதாகக் கேள்வியுற்று அவர் கதிகலங்கிப் பின் வாங்கினுர். அவர் படை சிதறுண்டது. அவர் பிரம்மபுத்திரா ஆற்றைத் தாம் முன்பு கடந்து வந்த பாலம் உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். தம்மிடம் எஞ்சியிருந்த சில வீரர்களை அழைத்துக்கொண்டு மிகுந்த துணிச்சலுடன் அவ் வாற்றினுள் குதித்தார். ஆயினும், அவரும் ஒரு சிலருமே கரையேறினர். இந் நிகழ்ச்சிகளால் மனமுடைந்துபோன பக்தியாரை அலிமர்தான் என்னும் வீரன் கொன்று அவர் துயர்களைந்தான் கி.பி (1206).

இனி, ஐபெக்கின் ஆட்சியைத் தொடர்ந்து காண்போம். ஐபெக் 1206 ஜூனில் லாகூரில் தமது தலைநகரை நிறுவிக் கொண்டார். ஆயினும், அவர் பேரரசுப் பட்டங்களை இட்டுக் கொள்ளவில்லை. தன் பெயரால் காசுகளை வழங்கவில்லை. கஜினியில் ஆண்டுவந்த இல்டிஸ் இந்தியாமீது படையெடுத்துத் தமக்குத் தொந்தரவு தாராமல் இருக்கும்பொருட்டு அவர் லாகூரில் இருந்தார். மகம்மது கோரிக்கு நாஸிருதீன் கபாச்சா, குத்புதீன் ஐபெக் என இரண்டு முக்கிய சேனுபதிகள் இருந்தனர். அவர்களில் கோரிக்குப் பிறகு கபாச்சா சிந்துவிலும், ஐபெக் லாகூரிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தனர். இந் நிலையில் கி.பி. 1208-ல் குவாரஸம் ஷா இல்டிஸைக் கஜினியிலிருந்து விரட்டினுர். அவர் இந்தியாவில் குடிபுகுந்தார். அவரைத் துரத்திக்கொண்டு குவாரஸம் இந்தியாவிற்கே வந்துவிடாமலிருப்பதற்காக ஐபெக் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார். கி.பி. 1210 நவம்பரில் அவர் போலோ என்னும் குதிரைப் பந்தாட்டத்தில் தவறிக் கீழே விழுந்தமையால் சிலநாள் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அவர் இறந்தபொழுது பக்தியாரால் வென்று சேர்க்கப்பட்ட நாடுகள் ஐபெக் ஏற்படுத்திய சுல்தானியத்தோடு நன்கு

இணையவில்லை. அவரை அடுத்து அவருடைய மகன் ஆராம் என்பவன் லாகூரில் சுல்தான் ஆனார்.

இல்துூத்மிஷ்

ஆயினும், டெல்லியிலிருந்த வேறொரு குழுவினர் ஐபெக்கின் மருமகனை இல்தூத்மிஷை மன்னராக்க விழைந்து அவ்வாறே ஆக்கினர். இல்தூத்மிஷ் திறமையும் புத்திக்கூர்மையும் உடையவர். எட்டு மாத காலத்திற்கு ஆராம் லாகூரிலும் இல்தூத்மிஷ் டெல்லியிலுமாக ஆண்டனர். பிறகு ஆராம் டெல்லிமீது படையெடுத்து வந்த வழியில் இறந்து போனார். இல்தூத்மிஷின் பொறுப்புகள் அதிகமாயின. நாற்புறமும் தொல்லைகளும் மிகுந்தன. கபாச்சா சிந்துவிலிருந்து மூல்தானுக்கு முன்னேறினார். ஐபெக் காலத்தில் அடங்கியிருந்த இந்துமன்னர்கள் சுல்தானியத்தை எதிர்த்துச் சுதந்தரம் எய்த முனைந்தனர். பிருதிவிராஜரின் மகன் ரந்தம்போரில் சுதந்தரம் எய்தினர். பிரதிகாரர்கள் குவாலியரைக் கைப்பற்றினர். லக்னேவதியில் அலிமர்த்தான் சுதந்தரரானார். இல்தூத்மிஷ் இத் தொந்தரவுகளுக்கிடையே மிகுந்த எச்சரிக்கையோடு நடந்துகொள்ளத் தொடங்கினார். ஆராமிற்கு ஆதரவாக டெல்லியில் தோன்றிய கலகத்தை அடக்கினார். இல்டிஸ் கபாச்சாவை லாகூரிலிருந்து விரட்டிப் பஞ்சாபின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டபோது இல்தூத்மிஷ் அதைத் தடுக்கவில்லை. புறத்தார் அறியாவண்ணம் பஞ்சாபிலிருந்து காசிவரை இடைப்பட்ட பகுதியை வலுப்படுத்திக் கொண்டார். 1215-ல் இல்டிஸ் கஜினியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டபோது அவர் லாகூரை நோக்கிப் பின்வாங்கினார். அதுவே தக்க தருணமென்று இல்தூத்மிஷ் இல்டிஸை எதிர்த்துச்சென்று தராயினில் அவர் நடத்திய ஒரு போரில் அவரைக் கைப்பற்றிக் கொண்டு போனார். அப்பொழுதுகூட அவர் உடனடியாக லாகூரைத் தாக்கவில்லை. இரண்டாண்டுகள் கழித்துத் திடீரென்று லாகூரின்மேல் படையெடுக்கவே கபாச்சா விரைந்து பின்வாங்கினார். டெல்லித் துருப்புகள் லாகூரை எளிதில் கைப்பற்றின. அக் காலத்தில்தான் செங்கிஸ்கான் மத்திய ஆசியா, தென்மேற்கு ஆசியாப் பகுதிகளிலிருந்து எண்ணற்ற மக்கள்—மன்னர்களையும் குடிமக்களையும்—அவ்வவர் நாட்டிலிருந்து அடித்து விரட்டிச் சிதறச்செய்தனர். அவர்களில் பெரும்பாலோர் பஞ்சாபில் புகுந்தனர். செங்கிஸ்கான் இந்தியாவினுட் புகாமலிருக்க வேண்டுமே என்று வேண்டிக்கொண்டிருந்த இல்தூத்மிஷ் மங்கோலியரால் விரட்டப்பட்டவர்களுக்கு எந்தவிதமான ஆதரவும் காட்டவில்லை. மங்கோலியர் நல்லவேளையாகப் பஞ்சாபைத் தாண்டி வாராமல் திரும்பிப்போய்விட்டனர். அதன் பிறகு இல்தூத்மிஷ் கபாச்சாவை மூல்தானிலிருந்தும் எளிதில் விரட்டி

னார். விரட்டப்பட்ட கபாச்சா சிந்து ஆற்றில் வீழ்ந்து இறந்தார் (1228). இல்துத்மிஷ் 1236-ல் இறப்பதற்கு முன்பாக வங்காளத்திலிருந்து பஞ்சாப்வரையுள்ள பகுதியைத் தனது ஆட்சியில் அடக்கினார். ஆயினும், இராஜபுதனத்தில்மட்டும் நிலையான அமைதி ஏற்படவில்லை ரந்தம்போர், மந்தாவர் போன்ற இடங்களில் சில வெற்றிகளைக் கண்டாராயினும் பிற இடங்களில் அவரால் ஒன்றும் சாதிக்கமுடியவில்லை. 1234-1235-ல மாளவத்தில் அவர் நடத்திய போர் அவருக்குச் செல்வம் ஈந்ததேயல்லாமல் ஆட்சியைக் கொடுக்கவில்லை. இல்துத்மிஷ் இறப்பதற்கு முன்பே அவருடைய மூத்தமகனான நாஸிருதீன் மஹ்மூது என்பவர் இறந்து போனார். போகவே, சிறிது தயங்கியபிறகு இல்துத்மிஷ் தமது மூத்தமகளான ரஸியா என்பாளைத் தமக்குப்பின் சுல்தானியத்தை ஆள நியமித்தார்.

ரஸியா

முஸ்லிம் சமயச் சட்டத்தின்படி மகளிர் அரசாளக் கூடாது. இந்தச் சட்டத்தைப் பொருட்படுத்தாமலேயே அந்த நியமனத்தைச் செய்தார் இல்துத்மிஷ். ஆயினும், அவர் இறக்கும் தருவாயில் தமது மகன் பிரூஸை லாகூரிலிருந்து வரவழைத்தார். இல்துத்மிஷ் இறந்த அன்றிரவே பிரூஸ் தம்மை மன்னரென்று பிரகடனப்படுத்திக்கொண்டார். ஆயினும், பிரூஸ் தன்னம்பிக்கையோ திறமையோ இல்லாதவரானதால் ஒரு கீழ்த்தர மகளான தனது தாயின் ஆலோசனைப்படி ஆளத் தொடங்கினார். இதுகண்டு பொருத பல பிரபுக்கள் அவர் ஆட்சியை எதிர்த்தனர். அக் கலகக்காரர்களை ஒடுக்குவதற்குப் புறப்பட்டவர் தமது காவலர்களாலேயே சிறைபிடிக்கப்பெற்று டெல்லிக்குக் கொணரப்பட்டார். இதற்கிடையே ரஸியா மிகுந்த சாமர்த்தியத்தோடு அரசைக் கைப்பற்றிவிட்டாள். பிரூஸும் அவன் தாயும் சிறையிலடைக்கப்பட்டனர். ஏழு மாதகாலம் ஆண்ட பிரூஸ் சிறையிலேயே இறந்தார். அரசைக் கைப்பற்றும் வரை ரஸியாவிற்கு ஆதரவு தெரிவித்த பிரபுக்கள் அவள் சுல்தானா ஆனபின் அவளை எதிர்க்கத் தொடங்கினர். அவள் காலத்தில் அரண்மனையில் நாற்பது பிரபுக்கள் (முன்பு அடிமைகளாயிருந்து விடுதலை பெற்றவர்கள்) அரசியலில் மிகுந்த ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தனர். அவர்கள் ஒருபுறம், பிரபுக்கள் ஒருபுறம், பொதுமக்கள் ஒரு புறமாக ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்திற்காக அவளுடைய ஆட்சியை எதிர்த்தனர். ரஸியா அப்போது சிறுமியே ஆயினும் தம்மைப் பகைத்தவர்களைத் துணிவோடு எதிர்த்து அவர்கள் அச்சமும் வியப்பும் கொள்ளும்

வகையில் நடந்துகொண்டாள். அவள் ஆணுடை தரித்துப் பலர் காணக் குதிரையில் அமர்ந்து அவைக்களத்தில் வீற்றிருந்தாள். அவள் தனக்கு ஆதரவாளர்களாகத் தன் விருப்பப்படி மந்திரி களையும் பிறரையும் நியமித்துக்கொண்டாள். இல்தூத்மிஷால்

விடுதலை அளிக்கப்பட்ட அடிமைகள் 'நாற்பதின்மர்' எனப் பட்டனர். அவர்களைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. அவர்களை அடக்குவதற்காகவே ரஸியா ஜலாலுதீன் யாகூப் என்னும் ஒரு அபிசீனியரைத் தன் முக்கிய அதிகாரியாக

நியமித்துக்கொண்டாள். இயல்பாகவே இதைக் கண்டு நாற்பதின்மர் பொறுக்கவில்லை. அவர்கள் பல இடங்களில் போலிக் கலகங்களைக் கிளப்பிவிட்டு ரஸியாவைத் தலைநகரைவிட்டுப் படையோடு வெளியேறும்படி வற்புறுத்த முயன்றனர். அவள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு நடந்துகொண்டாளாயினும் பாடிண்டாவில் மாலிக் அல்டூனியா என்னும் கவர்னர் தலைமையில் கலகம் நிகழ்ந்ததாகக் கேள்வியுற்றுப் படையோடு சென்ற சுல்தானைவைச் சென்ற வழியிலேயே அவளுடைய மெய்க்காப்பாளர்கள் ஏமாற்றிவிட்டனர். அவர்கள் யாகூட்டைக் கொன்றனர். அரசியையும் பாடிண்டாக் கோட்டையில் அடைத்தனர். இது பாடிண்டாவில் நிகழ்ந்தபோது டெல்லியில் நாற்பதின்மர் அரண்மனையைக் கைப்பற்றி இல்துாத்மிஷின் மூன்றும் மகனை முயிசுதீன் பஹ்ராம் என்பானைச் சுல்தான் ஆக்கினர் (1240, ஏப்ரல்). பஹ்ராம் ஆதிக்கச் சின்னங்களை மட்டும் கையில் வைத்துக்கொண்டு உண்மையான அதிகாரத்தை நாற்பதின்மரிடமே விட்டுவிட்டதால் அவனுக்குச் சுல்தானாக முடிந்தது. இதற்கிடையில் ரஸியாவைச் சிறைபிடிப்பதற்குத் திட்டமிட்டவர்களில் ஒருவனை இக்தியாருதீன் ஐடிஜீன் என்பான் நாற்பதின்மரால் ஓர் உயர்பதவியில் வைக்கப்பட்டான். அன்றியும், அவன் சுல்தானை மதிக்கவில்லை. சுல்தானின் சகோதரிகளில் ஒருத்தியை மணந்துகொண்டான். மன்னன் உத்தரவு இல்லாமல் மனைமுன்றிலில் ஒரு மதகரியை நிறுத்திவைத்துக் கொண்டான். இச் செயல்களால் ஆத்திரமடைந்த பஹ்ராம் அவனைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்து நிறைவேற்றிக் கொண்டான்.

ஈதிங்ஙனமாக ரஸியாவைச் சிறையில் வைத்திருந்த அல்டூனியா டெல்லியிலிருந்த பஹ்ராமிற்கு உதவி செய்வதைவிட ரஸியாவோடு இணைந்துகொள்வதே சிறந்ததென்று எண்ணினன். ரஸியாவும் அவனை மணந்துகொள்ளச் சம்மதித்தாள். சிறை வீடு செய்யப்பட்ட ரஸியா சில துருப்புகளைக் கூட்டிக்கொண்டு டெல்லிப்படையோடு சண்டையிடத் துணிந்தாள். இந் நிலையில் அவளுடைய மெய்க்காப்பாளரே அவளைக் கைவிட்டனர். அவள் 1240 அக்டோபர் 13-ல் ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது இந்துத் திருடர்கள் சிலரால் கொல்லப் பட்டாள்.

அக் காலத்து வரலாற்றாளரான மினாஜ் உஸ் சிராஜ் என்பவர் 'ரஸியா ஆட்சித் திறமை மிக்கவர். அவர் அறிவு, நேர்மை, வன்மை என்னும் பண்புகளில் சிறந்தவர்; நாட்டிற்கு நல்லவர்;

நீதி வழங்கியவர்; குடிமக்களைக் காத்தவர்: படைகளை நடத்தியவர். ஓர் அரசருக்குத் தேவையான எல்லாப் பண்புகளும் அவரிடம் நிறைந்திருந்தும் அவர் பெண்ணாய்ப் பிறந்துவிட்ட குற்றத்திற்காகப் பலர் அவளுக்கு ஆளத் தகுதியில்லையென்று கருதினர். மற்றும் பிரபுக்கள் அவளிடம் வெறுப்புக்கொண்டதற்கு வேறொரு காரணமும் உண்டு. அபிஸீனிய அடிமையான ஜமாலுதீன் யாகூத் என்பானுக்கும் ரஸியாவிற்கும் இடையே நிலவிய உறவினைப்பற்றிப் பல அவதூறுகள் பேசப்பட்டன. சிராஜ் ரஸியா யாகூத்தை 'ஆதரித்தாள்' என்றுதான் கூறுகிறார். ஆனால், இபன் பதூதா என்பவர், 'யாகூத் அரசியின் கள்ளக் காதலன்' என்பார். பெரிஷ்டா பின்வருமாறு கூறுகிறார்: 'அரசிக்கும் அடிமைக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பிருந்தது. அரசி குதிரைமீது உலாப்போகும்போது யாகூத் அவளைத் தம் கைகளால் பற்றிக் குதிரைமீது உட்காரவைத்தார்'. இத்தகைய உறவிற்கு என்ன பெயர் என்பது பெரிஷ்டாவிற்கே தெரியும். இவ் வவதூறுகளும் சேர்ந்துகொண்டு ரஸியாவின் நிலையைக் கெடுத்தன.

ரஸியாவைத் தொடர்ந்து இல்தூத்மிஷின் மூன்றாவது மகனான முயிஸுதீன் பஹ்ராம்ஷா என்பவர் சுல்தான் ஆனார். சுல்தானா ரஸியா காலத்திலேயே அரசவையில் இருந்த நாற்பதின்மருடைய ஆதிக்கம் வலுத்திருந்தது என்பதை மேலே கண்டோம். பஹ்ராம்ஷா ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய செல்வாக்கு மிகுந்தது. உண்மையில் இல்தூத்மிஷிற்குப் பிறகும் பால்பனுக்கு முன்பும் ஆகிய இடைக்காலம் முழுவதிலும் இந் நாற்பதின்மரின் கொடிய செல்வாக்கு உச்ச நிலையில் இருந்தது. பஹ்ராம்ஷாவின் ஆட்சியின்போது நடந்த முக்கியமான நிகழ்ச்சி லாகூர்மீது மங்கோலியர் நடத்திய தாக்குதல் (1241). அவர்கள் முதலில் மூல்தானைக் கைப்பற்ற விரும்பி அதனைத் தாக்கினர். ஆனால், அது நன்கு தற்காக்கப்பட்டமையால் அதனை அவ்வாறே விடுதது லாகூரை யடைந்து அந் நகரத்தைக் கைப்பற்றி நகரமக்களைக் கொன்று, ஊரைச் சுற்றிச் சூறையாடித் திரும்பிப் போயினர்.

பஹ்ராம்ஷாவிற்குப் பிறகு இல்தூத்மிஷின் பேரனும் ருக்குனுதீன் பிரூஸ்ஷாவின் மகனுமான மாஸுத்ஷா என்பவர் ஐந்தாண்டுக் காலம் ஆண்டார் (1242—1246). அவர் ஆட்சிக் காலத்தில் பிரபுக்களே எல்லா அதிகாரங்களையும் வகித்தனர். மாலிக் குத்புதீன் ஹஸன், முகஸாபுதீன், பஹாவுதீன் பால்பன் என்போர் அவர் ஆட்சியில் முக்கியமான அதிகாரங்களை வகித்தனர். நாளடைவில் பால்பனே எல்லா அதிகாரங்களையும்

வகிக்கும் நிலைக்கு வந்துவிட்டார். மாஸூத்ஷாவின் ஆட்சியில் நாற்புறத்திலும் கலகங்கள் தோன்றின. வங்காளத்தில் கவர்னரா யிருந்த துகர்கான என்பவன் தான் சுதந்தரம் எய்தியதோடுகூட பீகாரை வங்காளத்தில் இணைத்துக்கொண்டு அவுத்மீதும் படை யெடுப்பான் ஆயினன். 1245-ல் மங்கோலியர்கள் மறுபடியும் இந்தியாமீது படையெடுத்தனர். மூல்தானையும் உச்சையும் கைப்பற்றி, கொள்ளையிட்டுவிட்டு அவர்கள் திரும்பினார்கள். இந் நிலையில் ஆட்சியில் ஒரு மாறுதல் தோன்றவேண்டியது அவசியம் என்று கருதிய பால்பன் தன் மருமகனை நாஸிருதீன் மம்மூது என்பானோடு சதியாலோசனை செய்து ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டார். அதற்கேற்ப நாஸிருதீன் மம்மூதை ஒரு நோய் வாய்ப்பட்ட வயோதிக மாதுபோல மாறுவேடம் புனைவித்து அரண்மனையில் புகுத்தி அங்கிருந்த ஏவலாளர் உதவியால் மாஸூத்ஷாவை நீக்கிவிட்டு நாஸிருதீன் மம்மூது மன்னராக்கப் பெற்றார். (1246, ஜூன்).

நாஸிருதீன் மம்மூத் (1246-1267)

இவருக்கு ஆட்சித் தொடக்கத்திலேயே தான் ஆட்சிக்கு வருவதற்கு யார் உதவினார்கள் என்பதும் அவர்களிடம் தான் எப் படிக் கடமை உணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதும் நன்கு தெரிந்திருந்தன. முக்கியமாகப் பால்பனே எல்லா அதிகாரங் களுக்கும் அடிப்படை யென்பதை அவர் உணர்ந்திருந்தார். இவர் எளிய வாழ்க்கை நடத்தினரென்றும் தம் மனைவிக்குச் சமையல் வேலைக்கு உதவுவதற்குப் பணிப்பெண் அமர்த்துவதற்குக்கூட அவர் அனுமதிக்கவில்லை யென்றும் கூறுவர். இது நம்பக்கூடிய தாக இல்லை. ஏனெனில், நாஸிருதீனின் மனைவி பால்பனுடைய மகள். அவளை அவ்வாறு நடத்த அவர் துணிந்திருப்பாரா என்பது ஐயுறத் தக்கதே. நாஸிருதீன் சில ஆசிரியர்கள் கூறுவது போல முற்றிலும் பால்பனுக்கு அஞ்சி நடந்தாரா என்பதும் ஐயுறத்தக்கதே. அவர் தம் அமைச்சர்களை அடக்கித் தம் அதிகாரத்தை ஏற்றுவதற்குத் தக்க தருணத்தை எதிர்பார்த்தே இருந்தார். ஒருமுறை துருக்கப் பிரபுக்களுக்கும் பால்பனுக்கும் தகராறு ஒன்று ஏற்பட்ட காலத்தில் பால்பனைச் சற்றுநீக்கிவிட்டு இமாதுதீன் ரைஹான் என்பவனைத் தனது அந்தரங்க ஆலோசகராக நியமித்தார். இவ்வாறு பால்பன் சற்று விலகியிருந்த காலத்தில் நாஸிருதீன் தாமே ஆதிக்கம் செலுத்த முற்பட்டார். ஆனால், இவையெல்லாம் மிகச் சிறு காலத்திற்கு நிகழ்ந்தன. பால்பன் மறுபடியும் அதிகாரத்திற்கு வந்தபோது சுல்தான்மீது அவருக் கிருந்த செல்வாக்கு மிகவும் அதிகமாயிற்று. சுல்தானின் தாயான

மல்லிகாயி ஜஹான் என்பவளை நாடு கடத்திவிடும்படி பால்பன் இட்ட உத்தரவையும் அவர் நிறைவேற்றினர். அவர் தமது சொந்த நலனைக் கருதித் தாயைக்கூட நாடு கடத்தத் துணிவாராயின் அவருடைய சுயநலம் எத்தன்மையது என்பது விளங்கும்.

அவர் காலத்திலேயும் மங்கோலியரது படையெடுப்பு நிகழ்ந்தது. அவர்களைப் பால்பனது உதவிகொண்டு மூல்தான், உச் முதலிய இடங்களினின்றும் விரட்டினர். நாஸிருதீன் மம்மூதின் ஆட்சி எவ்வாறு முடிவுற்றது என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. பால்பன் அவரை நஞ்சிட்டுக் கொன்று விட்டாரென்று இபன் பதூதா, இஸாமி என்பவர்கள் கூறுவர். ஆனல், அவர் தன் மருமகனையே அவ்வாறு செய்திருப்பாரா என்பது ஐயுறக்கூடியது.

பால்பன் (1266-1286)

இல்தூத்மிஷின் குடும்பத்தோடு அளவிறந்த தொடர்புகள் பால்பனுக்கு இருந்தன. ஆகையால், அவர் 1266 நாஸிருதீன் மம்மூதைத் தொடர்ந்து சுல்தான் ஆனபோது அதை ஒருவரும் எதிர்க்கவில்லை. பால்பனுடைய இயற்பெயர் பஹாவுதீன் என்பது. அவர் துருக்கர். அவர் சிறுவரா யிருந்த போது மங்கோலியர்களால் சிறைபிடிக்கப்பட்டுக் கஜினியில் குவாஜா ஜமாலுதீன் என்பவரால் விலைக்கு வாங்கப் பட்டார். ஜமாலுதீன் 1232-ல் டெல்லிக்குக் கொணரப் பட்டார். அங்குப் பிற பல அடிமைகளோடு இல்தூத்மிஷால் விலைக்கு வாங்கப்பட்டார். அவர் முதலிலிருந்தே நாற்பதின் மரில் ஒருவராயிருந்தார். பஹ்ராம்ஷா அவருக்கு ரேவாரி ஜாகீரை இனமாகக் கொடுத்திருந்தார். ஹன்ஸி மாவட்டமும் அவர் பாதுகாவலில் இருந்தது. 1246-ல் உச்சை முற்றுகையிட்ட மங்கோலியரை அவர் தோற்கடித்தார். அவருடைய சதியாலோசனையின் முடிவாகவே மாஸூத் ஷா நீக்கப்பட்டு நாஸிருதீன் மம்மூத் சுல்தான் ஆனர். இம் முயற்சியால் பால்பனிடம் மிகுந்த அரசியல் அதிகாரம் குவிந்தது. 1249-ல் அவர் தம் மகளை நாஸிருதீனுக்கு மணமுடித்து வைத்தார் 1230-ல் சிறிது காலத்திற்குப் பால்பன் அதிகாரத்தினின்றும் நீக்கப்பட்டார். ஆனல், அடுத்த ஆண்டே அவர் மீண்டும் பழைய நிலைமைக்கு வந்து விட்டார். நாஸிருதீன் மம்மூத் காலத்தில் நிகழ்ந்த மங்கோலியர் படையெடுப்புகளை அவர் சமாளித்தார். யமுனை கங்கை ஆற்றிடைப் பிரதேசத்திலிருந்த சில கலகக்கார இந்துக்களைக் கடுமையாகத் தண்டித்தார். பல முயற்சிகளுக்குப் பிறகு ரந்தம்

போர் கோட்டையைப் பிடித்தார். 1247-ல் கலிஞ்சரில் ஆண்ட சண்டேல அரசரை அடக்கினூர். 1251-ல் குவாலியர் மன்னரை எதிர்த்துப் படைகொண்டு சென்ருர்.

பால்பன் சுல்தான் ஆனபோது அவர் பல தொல்லைகளை எதிர்க்கவேண்டியிருந்தது. அவர் ஆட்சி தொடங்கியபோது கஜாஞ காலியாய் இருந்தது. மங்கோலியர் படையெடுப்பு எப்பொழுது வேண்டுமானுலும் நிகழலாம் என்னும் நிலையிருந்தது. அரசைக் கண்டு அஞ்சுவோர் ஒருவரும் இலர் ஆயினர். ஆனல், இந்த நிலையையும் இதைவிட மோசமான நிலையையும்கூடச் சமாளிக்கும் ஆற்றல் பால்பனுக்கு இருந்தது. அவர் முதலாவதாக யமுனை, கங்கைப் பிரதேசத்தி லிருந்த கலகக்காரர்களை அடக்கி அமைதியை நிலைநாட்டினுர். டெல்லியிலும் தலைநகரைச் சூழ்ந்திருந்த சில இடங்களிலும் கொள்ளையர் தொல்லை மிகுந்திருந்தது. அக் கொள்ளையரையும் ஒழித்துக் கட்டினுர். ஆங்காங்கு இராணுவ நிலையங்களை ஏற்படுத்தி மன்னரையும் ஆட்சியையும் எதிர்த்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்க ஏற்பாடு செய்தார்.

வங்காளத்தில் பால்பனுடைய பிரதிநிதியாக ஆண்டவர் துக்ரில்கான் என்னும் கவர்னர். சுல்தான் பால்பன் வயோதிகராய் இருந்தமையாலும் மங்கோலியப் படையெழுச்சிகள் பல நிகழ்ந்து வந்தமையாலும் துக்ரில்கான் துணிவடைந்து வங்காளத்தைத் தனி அரசாகப் பிரகடனப்படுத்தினுர். துக்ரில்கானை அடக்கப் பால்பன் அமீர்கான் என்பான் தலைமையில் ஒரு படையை அனுப்பினுர். ஆயினும், அப் படை தோல்வியடைந்தது. இதனல், ஆத்திரமுற்ற பால்பன் அமீர்கானைத் தூக்கிலிட்டு அவர் உடலை டெல்லிக் கோட்டை வாயிலில் கட்டினுர். 1280-ல் மாலிக் தர்கி என்பார் தலைமையில் மற்ருெரு படை அனுப்பப்பட்டது. அப் படையும் தோல்வியுற்றது. அதன்பின் பால்பன் தம் மகனுன புக்ராகான் என்பானை உடன்கொண்டு தாமே போருக்குப் புறப்பட்டார். பால்பன் படையெடுத்து வருவதைக் கேள்வியுற்ற துக்ரில்கான் லக்ஞவதியைவிட்டு நீங்கிக் கிழக்கு வங்காளத்தில் ஓடி ஒளிந்தார். அங்குப் பால்பனின் ஆட்களில் ஒருவன் துக்ரில்கானை அடையாளம் கண்டு அவன் தலையை வெட்டி உடலை ஆற்றில் எறிந்தான். அவனுடைய படையெல்லாம் பால்பனிடம் அகப்பட்டன. அவனுடைய உற்ருர், உறவினர் யாவரும் கழுவேற்றப்பட்டனர். திரும்பும் முன் பால்பன் புக்ராகானை வங்காள கவர்னராக நியமித்தார். புக்ராகானும் அவன் சந்ததியினரும் வங்காளத்தில் 1339 வரையில் ஆண்டனர்.

பால்பன் ஆட்சியில் மங்கோலியர் படையெடுப்புத் தொல்லை எல்லைப்புறத்தில் நிகழ்ந்தது. ஆதலால், அவர் எப்பொழுதும் டெல்லியை விட்டு வெகு தொலைவில் செல்லாமலே இருந்தார். மங்கோலியர் படையெடுப்பு நிகழ்ந்தபிறகு அவர்களை எதிர்த்து விரட்டலாம் என்னும் பழைய கொள்கையைக் கைவிட்டு அவர்கள் படையெடா வண்ணம் வருமுன் காக்கும் சீரிய கொள்கை ஒன்றை உருவாக்க அவர் விரும்பினர். அவர் கோக்கர்களை அடக்கி வைத்தால் மங்கோலியப் படையெடுப்புகளைச் சமாளிக்க முடியு மென்று கருதினர். ஆனால், அவர்களை எளிதில் அடக்க முடியவில்லை. அக் கொள்கையின் முடிவாகக் கோக்கர்களுடைய பகைமைதான் மிகுந்தது. வடமேற்கு எல்லையைப் பாதுகாப்பதற்கு அவர் ஷேர்கான் சங்கர் என்பாரைப் படைத்தலைவராக நியமித்தார். அவர் மிகுந்த திறமைசாலி. அவரைக் கண்டு பொறுமையுற்ற பால்பன் அவரை நஞ்சு கொடுத்துக் கொன்றுவிட்டார், அதன் விளைவாகக் கோக்கர், மங்கோலியர் ஆகியோர் தொல்லைகள் மிகுந்தன. இந் நிலையில் பால்பன் தம் மூத்த மகனை மகம்மதுவை எல்லைப்புறத்தைப் பாதுகாத்துக்கொள்ளும்படி மூல்தானில் கவர்னராக நியமித்தார். மகம்மது திறமைசாலி. அவர் தம் தந்தையாரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். டெல்லி சுல்தானியத்தின் எதிர்காலம் அவரைப் பொறுத்திருந்தது என்பது பால்பன் உட்பட எல்லாருடைய கருத்தாகும். ஆயினும், கி.பி. 1286-ல் மங்கோலியர் மறுபடியும் படையெடுத்து வந்து மகம்மதுவைத் தோற்கடித்துக் கொன்றனர். இதனல் பால்பன் மிகவும் வருத்தமுற்றார். மகனை யிழந்த வேதனையை அவர் வெளிக் காட்டிக் கொள்ளாவிடினும் உள்ளூர நைந்தார். ரவி ஆற்றிற்கு மேற்கேயிருந்த பிரதேசம் எல்லாம் மங்கோலியர் வசமே ஆயின. லாகூரைத் திரும்பக் கைப்பற்றினராயினும் அதற்குமேல் சுல்தானியத்தின் அதிகாரத்தை அவரால் பரப்ப முடியவில்லை. மகன் இறந்தபின் அதே ஆண்டில் பால்பன் இறந்துபோனர். அவர் இறப்பதற்குமுன் வங்காளத்திலிருந்த தம் மகன் புக்ராகானை வரும்படி அழைத்தார். தந்தையின் தன்மைக்கு அஞ்சிய மகன் வங்காளத்திலேயே நின்றுவிட்டான். ஆதலால், பால்பன் மகம்மதுவின் மகன் தமக்குப் பெயரனுமான கைகுஸ்ரு என்பானைத் தனக்குப்பின் சுல்தானக நியமித்தார்.

அடிமை சுல்தான்களில் மிகச் சிறந்தவராகக் கருதக்கூடியவர் பால்பன். கோரி மகம்மது வென்ற இந்துஸ்தானத்தை ஒரு இஸ்லாமிய அரசாக அமைத்தவர் ஐபெக். அவ் வரசை வலுப் படுத்தி ஒரு பாரம்பரியத்தை ஏற்படுத்தியவர் இல்துத்மிஷ். இல்துத்மிஷிற்குப் பிறகு ஏறத்தாழ அழிந்தே போயிருந்த

சுல்தானியத்திற்குப் புத்துயிர் கொடுத்துப் புது வலுவூட்டித் திரும்பவும் நிலைநிறுத்தியவர் பால்பன். அவர் சுல்தானியத்தில் இருந்த பல குறைபாடுகளையெல்லாம் அகற்றினார். தமது வன்மையான கொள்கையால் அவர் நாற்பதின்மரை ஒழித்தார். தாமே அவர்களில் ஒருவராய் இருந்தார் முன்பு. ஆதலால், அவர்களுடைய பலத்தையும், பலவீனத்தையும் அவர் உணர்ந்திருந்தார். பிரபுக்கள் மிதமிஞ்சி நடந்துகொண்டால் அவர்களுக்கு மிதமிஞ்சித் தண்டனை யளிக்கப்பட்டது. அவர் 'நாற்பதின்ம'ரில் முக்கியமானவர்களைப் பதவி நீக்கம் செய்து புதியவர்களுக்குப் பெரிய பதவி யளித்தார். ஐபத்கான் என்னும் கவர்னர் ஓர் ஆளைக் கொன்றுவிட்டான் என்று கேள்வியுற்ற பால்பன் அவனுக்கு 500 கசையடி தரச் செய்தார். அமீன்கான் என்னும் மற்றொரு கவர்னரை அயோத்தியின் கோட்டை வாயிலில் தூக்கிலிட்டார். இவ்வாறாக 'நாற்பதின்ம'ரில் பெரும்பாலோர் நசுக்கப்பட்டனர். எஞ்சியவர்கள் அஞ்சி ஒளித்தனர். பால்பன் ஒரு திறமையான ஒற்றர் படையை வைத்திருந்தார். அதன் உதவி கொண்டு நாட்டில் எங்கு எது நடக்கிறதென்பதை அவ்வப்போது அறிந்து வந்தார். வலுமிகுந்த பிரபுக்களை அடக்குவதற்கு அவர் கண்ட வழி, அவர்களுக்குப் பழைய மன்னர்கள் கொடுத்திருந்த இனாம்களையும் சலுகைகளையும் அவர்களிடமிருந்து நீக்கிவிடுவது. ஆயினும், பிரபுக்களுக்கு எதிராக மிகக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. அவர் போர்ப்படையைச் சீர்திருத்தினார். படைஞரைத் திரட்டுவது, அவர்களுக்குச் சம்பள விகிதங்களை அமைப்பது, அவர்களுக்குத் தேவையான படைக்கலங்களை அளிப்பது முதலிய எல்லாத் துறைகளிலும் அவர் பெருமுயற்சி மேற்கொண்டார். அவர் கட்டுப்பாடில்லாமலிருந்த இராச்சியத்தை ஆளுவதற்கு வரம்பிலா ஆட்சிமுறையே சிறந்ததென்று கருதினார் அதற்குச் சிறிது கொடுங்கோன்மையும் தேவையென்று கருதினார். மன்னனுக்கு எவ்வாறேனும் ஆளுவதற்கு உரிமை யுண்டு; அவ் வுரிமை தெய்வீக உரிமையென்றெல்லாம் அவர் கருதினார். அவர் கலீபாவின் பெயரைத் தமது நாணயங்களில் பொறித்துக் கொண்டார். அவர் ஸில்லி இல்லா (கடவுளின் நிழல்) என்னும் பட்டத்தை மேற்கொண்டார். அவர் யாருடனும் நெருங்கிப் பழகவில்லை. அவருடைய அவையில் நகைப்பவர் அவரைப் பகைப்பவர். அவரை வணங்குவோர் கீழேவிழுந்து பணிய வேண்டும்; அல்லது அவரது அடியில் தமது முடிவைத்து வணங்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால்தான் ஆட்சி நடத்த முடியுமென்று அவர் கருதினார். அவர் பொதுவாழ்க்கையில் இத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடித்தாராயினும் தனி வாழ்க்கையில் உணர்ச்சி மிக்கவராகவே இருந்தார். இளகிய

இதயம் உடையவராயும் இருந்தார். அவர் கற்றோரை ஆதரித்தார். மத்திய ஆசியாவிலிருந்து பல அறிஞர்களை வரவழைத்து இந்துஸ்தானத்தில் இருத்தினார். அமீர்குஸ்ரூ என்னும் கவிஞர் அவர் காலத்தில் வாழ்ந்தார்.

பால்பன் இறப்பதற்கு முன்பு தம் மூத்த மகனான மகம்மதுவின் மகன் கைகுஸ்ரூவைத் தமக்குப் பின் சுல்தானாக நியமித்தார் என்பதை மேலே கண்டோம். ஆயினும், டெல்லியில் இருந்த கொத்தவால் பக்ருதீன் என்பார் கைகுஸ்ரூவை நீக்கிவிட்டுப் புக்ராகானின் மகனான கைகோபாத் என்பானைச் சுல்தானாக நியமித்தார். அவர் முயிசுதீன் கைகோபாத் என்னும் பட்டப்பெயரோடு அரசு செய்தினார். அவர் ஆட்சியைக் கைப்பற்றியபொழுது அவருக்கு வயது 17. அவர் சிறுவயதில் பால்பனுடைய கட்டுப்பாடுகளுக்கெல்லாம் அடங்கி வளர்ந்தவர். இப்பொழுது அக் கட்டுப்பாடுகள் நீங்கிப்போகவே அவர் அதுவரையில் கேள்வியுற்றுமிராத சிற்றின்பங்களில் அளவிறந்து ஈடுபடலாயினார். இத்தகைய மன்னரைப் பின்பற்றுவதில் அவையிலிருந்த பிரபுக்களுக்கு மட்டில்லாத ஊக்கம். அதன் விளைவாக நிர்வாகம் சீர்குலைந்தது. மன்னன் ஆட்சியைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. கொத்தவால் பக்ருதீனின் மருமகனான நிஸாம் உத்தீன் என்பான் மன்னனுடைய ஆதிக்கத்தையெல்லாம் கைப்பற்றி நடத்துவானாயினன். இந் நிலையில் மங்கோலியர் மறுபடியும் பஞ்சாப் பகுதிமீது படையெடுத்தனர். ஆயினும், பால்பன் ஏற்படுத்தி யிருந்த தற்காப்பு முறைகள் சுல்தானியத்தைக் காப்பாற்றின. வங்காளத்தில் கவர்னராயிருந்த புக்ராகான் 'தம் மகனான கைகோபாத் சரிவர நடந்துகொள்ளவில்லை; ஆட்சி சீர்குலைந்து விட்டது; நிஸாம் உத்தீன் ஆதிக்கம் செலுத்துகிறான்' என்பவற்றையெல்லாம் கேட்டு வருத்தமும் கோபமும் கொண்டு டெல்லிமீது படையெடுத்தே வந்தான். கைகோபாத்தும் தந்தையைத் தடுக்கப் படைகொண்டு சென்றான். ஆயினும், சில நல்லோர் முயற்சியால் தந்தைக்கும் தனயனுக்குமிடையே நல்லுறவு ஏற்படுத்தப்பட்டது. புக்ராகானின் அறிவுரையை மேற்கொண்டு நிஸாம் உத்தீனை மூல்தானுக்கு மாற்றினார் சுல்தான். அங்கு அவர் தமக்கு உடன்படாமையால் அவரை நஞ்சிட்டுக் கொன்றுவிட்டார். அவருக்குப் பதிலாகப் படை நடத்தவும், வடமேற்கில் கவர்னராக இருக்கவும் ஜலாலுதீன் பிரூஸ் கில்ஜி என்பவரை நியமித்தார். இந் நியமனத்தைப் பொதுவாகத் துருக்கப் பிரபுக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும், அதனையடுத்து மிக விரைவில் நிகழ்ச்சிகள் நடந்தன. பிரபுக்களாலோ, மற்றவர்களாலோ அந் நிகழ்ச்சிகளைத் தடுக்க

முடியவில்லை. கைகோபாத் பக்கவாதத்திற்கு ஆளாகி ஒன்றிற்கும் உதவாத ஊன் பிண்டமானார். இந் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு துருக்கப் பிரபுக்கள் மூன்றுவயது ஆண் குழந்தை யான கையுமார்ஸ் என்பவனை சுல்தான் ஆக்கினர். ஆனால், ஜலாலுதீன் பிரூஸின் ஆட்கள் தலைநகரினுள் புகுந்து அக் குழந்தையைக் கடத்திக்கொண்டு சென்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்துமாறு அனுப்பப்பட்ட படை தோற்கடிக்கப் பட்டது. படவே, துருக்கப் பிரபுக்கள் பிரூஸுக்கு அடங்கினர். பிரூஸின் ஆட்கள் கைகோபாத்தைக் கொன்று அவன் உடலை யமுனையில் எறிந்தனர். கி.பி. 1290, ஜூன் 13 ஆம் நாள் ஜலாலுதீன் பிரூஸ் டெல்லி சுல்தான் ஆனார்.

ஆ. கில்ஜிகள் (1290 - 1320)

ஜலாலுதீன் பிரூஸ்ஷா (கி.பி. 1290-96)

1290 ஜூன் மாதத்தில் டெல்லி அரசைக் கைப்பற்றி மாலிக் பிரூஸ் (ஜலாலுதீன் பிரூஸ்ஷா) டெல்லிக்கு அருகிலுள்ள கீலூகரி என்னுமிடத்தைத் தமது தலைநகரமாக்கிக்கொண்டார். கில்ஜியின் அரசியல் புரட்சி அதற்கு முன்பு டெல்லியில் ஆண்ட துருக்கியரின் அதிகாரத்தை ஒடுக்கிற்று என்றாலும் பிரூஸ் துருக்கியரை ஒழித்து விடவில்லை. மாலிக்சஜ்ஜு, பக்ருதீன் முதலியோர் புது ஆட்சியி லும் முக்கியமான அதிகாரங்களை வகித்தனர். ஜலாலுதீன் தம் மூத்த மகனைக் கான்கனான் என்று பட்டமளித்துச் சிறப்பித்தார். தம்பியான யக்ருஷ்கான் இராணுவ அமைச்சராக நியமிக்கப் பட்டான். அவர்தம் உடன்பிறந்தார் மக்களான அலாவுதீன், அல்மாஸ்பேக் இருவருக்கும் அரண்மனையிலேயே முக்கியமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. மாலிக் அகமது சாப் என்பார் அவருடைய மற்றும் ஓர் நெருங்கிய உறவினர்; அவருக்கும் மன்னரிடம் நெருங்கியிருந்து அலுவல் புரியும் வாய்ப்பளிக்கப் பட்டது.

ஜலாலுதீன் பிரூஸ் பட்டத்திற்கு வந்தபோது அவருக்கு 70 வயது. அவருக்கு இஸ்லாமில் பயமும் பக்தியும் உண்டு. இயற்கை யாலும், வயது முதிர்ச்சியாலும் நெஞ்சுரமற்றவர். தகாதார் இடத்தில்கூட அளவுக்கு மிஞ்சிய ஆதரவும், கருணையும் காட்டும் இயல்புடையவர். முஸ்லிம்களைக் கொல்லக்கூடாது அல்லது இறக்கவிடக்கூடாது என்னும் ஒரே எண்ணத்தால் ரந்தம்போர் முற்றுகையை அகற்றிக்கொண்டார். அவருடைய இயல்பை உணர்ந்த மாலிக் சஜ்ஜு அவுதில் (அயோத்தி) கவர்னராயிருந்த அமீர் அலியின் உதவிகொண்டு காராவைக் கைப்பற்றி டெல்லிமீது

படையெடுத்தார். ஆயினும், அவரும் அவருடைய துணைகளும் பதாவூன் அருகில் தோற்கடிக்கப்பட்டனர். போர்க்கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் மன்னரால் மன்னித்து விடுதலை செய்யப் பட்டனர். அன்றியும், தமது ஆட்சியை எதிர்த்தவர்களை அவர்கள் மறைந்த மன்னருக்கு ஆதரவு காட்டியதற்காகப் புகழ்ந் தார். அகமது சாப் மன்னர் இவ்வாறு நடந்து கொள்ளுதல் முறையன்று; கலகக்காரர்களை ஊக்குவிப்பதை ஒக்கும் என்று அறவுரை கூறியும் பிரூஸ் அதைப் பொருட்படுத்தவில்லை. முஸ்லிம்களின் ரத்தத்தைச் சிந்துவதைவிடத் தாம் முடிதுறக்கவும் தயார் என்று கூறினர். தம் மருமகனும், மாப்பிள்ளையுமான அலாவுதீனை காராவின் கவர்னராக நியமித்தார். டெல்லி அருகே பெரும் தொல்லை விளைவித்து வந்த தக்கியர் என்னும் கொள்ளையர் களை ஒறுத்து ஒழிக்காமல் சிறைபிடித்து வங்காளத்திற்கு அனுப்பிவிட்டார். வெளிப்படையாகத் தன்னை எதிர்த்துக் கலக பேச்சுக்களைப் பேசிய பிரபுக்களையும் தண்டிக்காமல் விட்டார்.

பழைய துருக்கியரின் கலகப்போக்கின் இறுதிநிலையில் சிதி மௌலா என்னும் முஸ்லிம் அடியார் மன்னரை எதிர்த்துப் பெருங் கலகம் விளைவிக்கச் சூழ்ச்சி செய்ததாகக் கேள்வியுற்ற ஜலாலுதீன் பிரூஸ் அம் முஸ்லிம் பெரியாரையும் அவருக்கு உறுதுணையாயிருந்த வரையும் கொன்றுவிடும்படி உத்தரவிட்டார். இவ்வொரு முறைதான் ஜாலுதீன் தன்னை எதிர்த்தவர்களிடம் துணிவோடு நடந்து கொண்டார். சிதிமௌலா மன்னரின் முதல் மகனுன கான்கனுனேடு நெருங்கிப் பழகி வந்தார். அக் காரணத் தாலேயே மன்னருடைய இரண்டாம் மகனுன அர்க்கலிக் கானுக்கும் அவருக்கும் பகைமை மூண்டது. சிதிமௌலா இறந்த சில காலத்திற்கெல்லாம் கான்கனுன் இறந்து போனுன். அதன் விளைவாக அர்க்கலிக்கான் பட்டத்து இளவரசனுக நிய மிக்கப்பட்டான். சிதிமௌலா கொல்லப்பட்டதும் வானம் இருண்டு கடுமழை பெய்ததென்றும் நாடு அதன் பிறகு பஞ்சத் தால் வாடிற்று என்றும் பரணி கூறுவர். இவையெல்லாம் புனிதர் ஒருவரைக் கொன்றுவிட்டதால் நிகழ்ந்தன என்று பக்தியுள்ள முஸ்லிம்கள் நம்பினுர்கள்.

இந் நிகழ்ச்சிக்குச் சற்றுப் பின்னர் பிரூஸ் ரந்தம்போர்மீது படையெடுத்தார். ஆனுல், அக் கோட்டையை முற்றுகை யிடாமலேயே டெல்லிக்குத் திரும்பிவிட்டார். அதற்கு அவர் கூறிய காரணம் போர் நிகழ்ந்தால் முஸ்லிம்கள் இறக்க நேரிடும் என்பதே. கி.பி. 1292-ல் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மங்கோ லியர்கள் இந்தியாமீது படையெடுத்தனர். பிரூஸ் அவர்களைத்

தோற்கடித்தார் ஆயினும், அம் மங்கோலியர்களுக்குச் சாதகமான ஓர் உடன்படிக்கையும் செய்துகொண்டார். செங்கிஸ்கானின் பின் தோன்றலான உல்கூ என்னும் மங்கோலியனும் அவனைத் தொடர்ந்த நாலாயிரம் பேர்களும் டெல்லி அருகே குடி அமர்த்தப்பெற்றனர். அவர்கள் முஸ்லிம்களாக மதம் மாறினர்; அதிலிருந்து அவர்களுக்கு 'நவ முஸ்லிம்கள்' என்பது பெயராயிற்று.

இவற்றிற்கிடையே காராவில் கவர்னராயிருந்த அலாவுதீன் தம் மாமனுன மன்னருடைய பலவீனத்தையும் அதனுல் விளைந்த அரசியல் சூழ்நிலையையும் தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொண்டு தமது நிலையில் முன்னேற விரும்பினுர். மன்னரை எதிர்ப்பதற்கு எல்லாவற்றையும்விடப் போதுமான நிதி வசதி தேவை என்பது அவருக்குப் புலனுயிற்று. 1292-ல் அலாவுதீன் பில்ஸாவைத் தாக்கிச் சூறையிடுவதற்கு மன்னரிடம் அனுமதி கேட்டுப் பெற்றுக்கொண்டு அவ்வாறே செய்து ஏராளமான நிதியுடன் பில்ஸாவிலிருந்து காராவிற்குத் திரும்பினுர். பில்ஸாவில் கிடைத்த சில உலோகப் படிமங்களைப் பதாவுன் கோட்டை வாயிலில் கிடத்தி முஸ்லிம்கள் அவற்றை மிதித்துச் செல்ல வசதி செய்தார். இவ்வளவு திறமைசாலியான மருமகனை மெச்சிய மாமனுர் காராவோடு அவுதையும் சேர்த்து அலாவுதீன் ஆதிக்கத்தில் அடக்கினுர். சந்தேரியில் படையெடுத்துத் தாக்க அடுத்தபடியாக அனுமதி பெற்றுர் அலாவுதீன். ஆனுல், சந்தேரி செல்லும் எண்ணம் அவருக்குச் சிறிதும் இல்லை. உண்மையில், வடமேற்குத் தக்காணத்தில் அமைந்துள்ள தேவகிரி[1]க்குச் செல்வதே அவருடைய ஏற்பாடு. கி.பி. 1296 பிப்ரவரி 26-ல்[2] நாலாயிரம் குதிரைப்படையோடும், இரண்டாயிரம் காலாட்களோடும், தேவகிரிக்குப் புறப்பட்டார் அலாவுதீன். தேவகிரியில் ஏராளமாகச் செல்வம் குவிந்து கிடப்பதாக பில்ஸாவிலேயே அலாவுதீன் கேள்வியுற்றிருந்தார். தாம் தேவகிரிக்குச் சென்று வரும்வரை காராவில் அரசியல் அலுவல்களைப் பார்த்துக்கொள்வதற்கு அவர் மாலிக் அலாவுல் முல்க்[3] என்பாரை நியமித்தார். அலாவுல் முல்கின் வேலை அவ்வப்பொழுது அலாவுதீன் எங்குச் சென்றிருக்கிறுர் என்பதைப்பற்றி மன்னருக்குத் தவருன செய்திகளை அனுப்பிக்கொண்டிருப்பது. சந்தேரி, பில்ஸா வழியாக முன்னேறிய அலாவுதீன் தேவகிரி

---

[1] பிற்காலத்தில் மகமது-பின்-துக்ளக்கால் தௌலதாபாத் என்று பெயர் மாற்றப்பெற்று டெல்லி சுல்தானியத்தின் மத்திய தலைநகராக நிறுவப்பட்டது.

[2] பிரிஷ்டா 1294 என்பர்

[3] இவர் வரலாற்றுளர் பரணியின் மாமன் ஆவர்.

இராச்சியத்தின் வடஎல்லையில் உள்ள எலிச்சபூரில் சற்றுத் தங்கினார். அங்கு டெல்லி சுல்தானை எதிர்த்துக் கிளம்பிய ஒரு கலகக்காரராகவும், இராஜ மந்திரி[1] அரசரிடம் அலுவல் பார்க்க விரும்புபவராகவும் தம்மை அறிவித்துக்கொண்டார். அங்கிருந்து புறப்பட்ட அலாவுதின் லாசூரா[2] என்னுமிடத்தில் தோன்றிய சில எதிர்ப்புகளை முறியடித்துக்கொண்டு தேவகிரிக்கே வந்து விட்டார். அப்பொழுது தேவகிரியில் ஆண்ட அரசர் பெயர் இராமச்சந்திரர் (அல்லது இராமதேவா) என்பது. தேவகிரிப் படைகளில் பெரும்பான்மையானவை அப்பொழுது அங்கு இல்லை என்பதையும் அவற்றைப் பட்டத்து இளவரசரான சங்கரர்[3] என்பவர் இராச்சியத்தின் எல்லைக்கு இட்டுச்சென்றிருந்தார் என்பதையும் ஒற்றர்கள் வாயிலாக அலாவுதீன் ஏற்கெனவே அறிந்திருந்தார். இராமச்சந்திரர் கோட்டைக்குள் புகுந்து கொண்டார். அலாவுதீன் நகரத்தை நன்கு கொள்ளையிட்டார். தம்முடன் வந்த இப் படை தூசுப்படைதான் என்றும் பின்னால் 20,000 குதிரைகள் கொண்ட பெரும்படை வருகிறதென்றும் அறிவித்தார். இதற்குமேல் இராமச்சந்திரரால் கோட்டையைக் காக்க முடியவில்லை. காராவிற்குத் திரும்பவேண்டிய அவசரத்தில் இருந்த அலாவுதீன் இராமச்சந்திரருடைய வேண்டுகோளுக் கிணங்கி உடன்படிக்கை செய்துகொண்டார். அலாவுதீன் தமது படையின் ஒரு பகுதியையே முஸரத்கான் என்பானின் தலைமை யின்கீழ் கோட்டையை முற்றுகையிடச் செய்திருந்தார். இதற் கிடையே சங்கரர் தமது பெரும்படையோடு தேவகிரிக்குத் திரும்பினார். திரும்பியவர் இராமச்சந்திரரையும் பொருட்படுத் தாது அலாவுதின் வசமிருந்த படையோடு பொருதார். அலாவுதீன் தோற்றே போயிருப்பார். ஆனால், அத் தருணத்தில் முஸரத்கானின் படை வந்து சேர்ந்துகொண்டது. அந்தப் படைதான் அலாவுதீன் கூறிய 20,000 குதிரைப்படை என்று அஞ்சிய சங்கரர் பின்வாங்கினார். அவருடைய படை சிதறி ஓடிற்று. வெற்றி கண்ட அலாவுதீன் கோட்டையைத் தீவிரமாக முற்றுகையிட்டார். இராமச்சந்திரர் மறுபடியும் சமாதானத்தை வேண்டினார். அலாவுதீன் ஏராளமான யானை, குதிரைகளும் எலிச்சபூர் வருமானம் முழுவதையும், இராமச்சந்திரனின் மகள் ஒருத்தியையும் வெகுமதியாகப் பெற்று 1296, ஜூன் மாதத்தில் காராவிற்குத் திரும்பினார். திரும்பும் வழியில் அசிர்கார் கோட்டையைத் தாக்கி நாசம் செய்துவிட்டுவந்தார்.

[1] ராஜ மகேந்திரபுரம்

[2] தேவகிரிக்கு 12 மைல் மேல்பாலுள்ளது.

[3] இவரைச் சிங்கணர் என்றும் கூறுவர்.

அதே ஆண்டில் ஜலாலுதீன் கில்ஜி குவாலியரில் படை கொண்டு முகாம் போட்டிருந்தபோது தமது மருமகனும் தேவகிரிக்குச் சென்று அளவிறந்த செல்வத்தோடு திரும்பிய செய்தியைக் கேள்வியுற்றார். அவர் உடனிருந்த அகமதுசாப் நிலைமை விஞ்சி விட்டது என்பதை உணர்ந்து அலாவுதீனைச் சந்தேரியில் சந்தித்துக் கண்டித்துத் தண்டிக்குமாறு வற்புறுத்தினார். தம் அருமை மருமகனிடத்தில் முழுநம்பிக்கை வைத்திருந்த ஜலாலுதீன் செவி சாய்க்கவில்லை. காராவை யடைந்த அலாவுதீன் நடந்த காரியம் மன்னர் செவிக்கு எட்டிவிட்டது என்று உணர்ந்து கழிவிரக்கக் கடிதங்களும் மன்னிப்பு விண்ணப்பங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பினார். அன்றியும், மன்னர் காராவிற்கு வந்தால் தேவகிரியில் அடித்த கொள்ளையெல்லாம் அவர் காலடியிலிட்டுத் தாமும் பணிவதாகப் பணிந்து எழுதினார். இதை நம்பிய ஜலாலுதீன் ஒரு சிறு படையுடன் காராவை அணுகினார். மன்னரை வரவேற்க முன்னரே வந்திருந்த அல்மாஸ் பேக் அரசரிடம் படையைப் பின்னரே நிறுத்திவிட்டு ஒன்றியாகச் சென்று அலாவுதீனைச் சந்திக்குமாறு அறிவுரை கூறினார். ஏனெனில், பெரும்படைகளைக் கண்டால் அலாவுதீன் மிகவும் அஞ்சுவார் என்றும் சொல்லிவைத்தார். 'ஆற்றின் அக்கரையில் அலாவுதீன்மட்டும் படையோடு நின்று கொண்டிருப்பது ஏன்?' என்று ஜலாலுதீன் வினவியபோது மன்னரை மரியாதையுடன் வரவேற்பதற்காக அப் படை நிற்பதாகக் கூறினார். எதையும் நம்பும் இதயம் படைத்த ஜலாலுதீன் இதையும் நம்பினார். கூறியவாறே ஒன்றியாகச் சென்று அலாவுதீனைச் சந்தித்தார். மன்னர் அடியில் மருமகன் விழுந்து மன்னிப்புக் கேட்டார். பணிந்து அவர் எழுமுன் அவருடைய ஆட்கள் மன்னரை வெட்டி வீழ்த்தினர். வெட்டுண்ட மன்னர் அலாவுதீனைத் துரோகி என்று கூறிக்கொண்டே ஓடினார். ஓடிய மன்னரைத் துரத்திய சேவகன் ஒருவன் அவர் தலையை வெட்டி அலாவுதீனிடம் கொணர்ந்தான். மன்னர் உடன்வந்த ஆட்களெல்லாம் கொல்லப்பட்டனர். எஞ்சிய படைகளை அகமது சாப் ஒருவாறாக டெல்லிக்கு இட்டுச் சென்றார்.

அலாவுதீன் கில்ஜி (கி.பி. 1296-1316)

ஜலாலுதீன் கொலையுண்ட பிறகு அக் கொலைக்களத்திலேயே அலாவுதீன் தம்மைச் சுல்தானாக அறிவித்துக்கொண்டார். தம்மை ஆதரித்தவர்களுக்குப் பட்டங்களும் பரிசுகளும் வழங்கினார். அல்மாஸ் பேக் உலுக்கான் என்னும் பட்டம் பெற்றார். ஜலாலுதீனின் இரண்டாம் மகனான அர்க்கலிகான் டெல்லியைப் படைகொண்டு காத்து நின்றார். ஆயினும், ஜலாலுதீனின்

மனைவி அவளுடைய கடைசி மகனான காதர்கானை ருக்குனிதீன் இப்ராஹிம் என்னும் பட்டத்தோடு மன்னனாக அறிவித்தாள். இதனால் அர்க்கலிகானுக்கும் அவன் தாய்க்கும் பகைமை ஏற்பட்டது. பிரூஸின் குடும்பத்திலேயே பிளவு தோன்றிற்று. ஆயினும், இப் பிளவு அலாவுதீனுக்கு அனுகூலமாக அமைந்தது. டெல்லிமீது படையெடுக்கும் அளவிற்குத் துணிவடைந்த அலாவுதீன் ஒரு கையில் இரும்பும் ஒரு கையில் தங்கமும் ஏந்தித் தலைநகரை நோக்கிச் சென்றார் என்று கூறுவர். அதாவது, பகைவர்களை ஒடுக்க இரும்பாலான படைக்கலங்களும் ஆதரவாளர்களுக்கு வாரிக்கொடுக்கத் தங்கக்காசுகளும் கொண்டு சென்றார் என்பது இதன் பொருள். இதனின்றும் அவர் ஒறுத்தல், கையூட்டு என்னும் இருவகைக் கொள்கைகளையும் ஒரே சமயத்தில் கைப்பற்றினார் என்பது புலனாகும். இக் கோட்பாடு அவருடைய ஆட்சிக்காலம் முழுவதும் அவரால் கடைப்பிடிக்கப்பட்டது. தேவகிரியிலிருந்து அவர் கொணர்ந்த செல்வத்தைக் கொண்டு 60,000 குதிரைப் படைகளும், 60,000 காலாட்களும் கொண்ட ஒரு பெரும் படையை அவரால் திரட்ட முடிந்தது. அவர் டெல்லியை அணுகியபோது சிறுவனான மன்னனும் அவன் தாயும் அகமது சாப்பின் உதவிகொண்டு மூல்தானுக்கு ஓடினர். 1296, அக்டோபர் 22-ல் அலாவுதீன் மன்னர் பதவி ஏற்றார். மூல்தானில் தஞ்சம் புகுந்திருந்த அர்க்கலிகான், ருக்குனிதீன் ஆகியோரை அலாவுதீனின் ஆட்கள் பிடித்துக்கொணர்ந்து அவர்களுடைய கண்களை வாங்கிவிட்டனர்; பிறகு அவர்கள் கொல்லவும் பட்டனர். அவர்களுடைய தாய் டெல்லியில் சிறையிருத்தப் பெற்றார். முஸரத்கான் காராவிலும், அலாவுல் முல்க் டெல்லியிலும் உயர்பதவி ஏற்றனர். அலாவுதீன் அரசு கட்டிலேறிய சின்னாட்களுக்குப் பிறகு 100,000 மங்கோலியர் பஞ்சாப்மீது படையெடுத்தனர். அவர்கள் எளிதில் விரட்டி அடிக்கப் பட்டனர். இவ் வெற்றி அலாவுதீனின் அதிகாரத்தை நிலைப் படுத்தியது. இனி, நாட்டில் தனக்கு எதிராகச் சதி செய்வோர் இருக்கக்கூடாது என்று தீர்மானித்துவிட்ட அலாவுதீன் கலகக் காரர் என்று தாம் ஐயமுற்ற அனைவரையும் ஒழித்துவிட்டார். நன்றி கொன்றோரில் தலை சிறந்தவரான அலாவுதீன் தமது ஆட்சியில் நன்றி கொன்றவர்கள் யாவரையும் கொன்று குவித்தார்.

கி.பி. 1298-ல் உலுக்கானும் முஸரத்கானும் குஜராத்மீது படையெடுத்தனர். அங்குத் தலைநகரான அன்ஹில்வாரைக் கைப்பற்றி வாகேல மன்னரானார். கர்ணரைத் தோற்கடித்து விரட்டி அம் மன்னரின் மனைவியான கமலாதேவியையும் எண்ணற்ற செல்வத்தையும், படைத்தலைவர்கள் கவர்ந்து

கொண்டனர். இவ் வெற்றிக்குக் காரணம் கர்ணருடைய அமைச்சரான மாதவர் என்பவர் தம் மன்னரைக் காட்டிக்கொடுத்துவிட்டமையே ஆகும் என்று சில மூலங்கள் கூறும். படையெடுப்பாளர்கள் சூரத்வரையும், சோமநாதபுரம்வரையும் சென்று அந் நகரங்களைக் கைப்பற்றினர். சோமநாதபுரக் கோயில் இரண்டாம் முறையாகச் சூறையாடப் பெற்றது. அங்கிருந்த சிவலிங்கம் டெல்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு முஸ்லிம்கள் மிதித்து ஏற வாயிற்படியாகக் கிடத்தப்பெற்றது. கம்பாய் நகரமும் சூறையிடப் பெற்று அந் நகரத்துச் செல்வம் டெல்லிக்கு அனுப்பப்பட்டது. கம்பாயில் முஸரத்கான் காபூர் என்று பெயரிய ஓர் அழகிய அடிமையை ஆயிரம் தினர் கொடுத்து விலைக்குப் பெற்றார். அதனால் அவ் வடிமைக்கு ஹஸர் தினரி என்றும் ஒரு பெயராயிற்று. இவ் வடிமையே பிற்காலத்தில் கில்ஜியின் தென்னிந்தியப் படையெடுப்பில் சேனைத்தலைவனாக விளங்கிய மாலிக்காபூர்.

இப் படைத் தலைவர்கள் குஜராத்திலிருந்து டெல்லிக்குத் திரும்பிய வழியில் படையில் இருந்த சில நவ முஸ்லிம்கள் கலகம் செய்தனர். அவர்கள் முஸரத்கானின் சகோதரன் ஒருவனையும், மன்னரின் மருமகன் ஒருவனையும் கொன்றனர். கலகக்காரர்களில் பலர் அகப்பட்டனராயினும் வேறிடங்களுக்கு ஓடிவிட்டனர். அலாவுதீன் டெல்லியிலிருந்த அவர்களுடைய மனைவி மக்களைச் சிறையிருத்தினர். இதனாலும் மன அமைதி அடையாத முஸரத்கான் தம் சகோதரனைக் கொன்றவர்களுடைய மனைவியரை டெல்லியிலிருந்த இழிகுலத்தோரிடம் உடைமைப் பொருளாகக் கொடுத்துவிட்டார். அன்றியும், அவர்களுடைய மக்களை அவர்கள் முன்னிலையிலேயே கொன்றுகுவித்தார். இவ்வளவற்ற கொடுமையைப் பரணி கண்டித்து எழுதுகிறார்.

இதே சமயத்தில், மறுபடியும் நிகழ்ந்த மங்கோலியர் படையெடுப்பை முறியடிக்கச் சென்ற ஸாபர்கான் முழு வெற்றியோடு திரும்பினர். இவ் வெற்றி குஜராத்தில் உலுக்கானும், முஸரத்கானும் அடைந்த வெற்றிகளைவிடச் சிறந்ததாயிருந்தது.

இவ் வெற்றிகளால் இறுமாப்படைந்த அலாவுதீன் தம்மை மகம்மது நபிக்கும், அலெக்ஸாந்தருக்கும் சமமானவரென்று கருதிக்கொண்டார். அவருடைய காசுகளில் இரண்டாம் சிகந்தர் (இரண்டாம் அலெக்ஸாந்தர்) என்று குறித்துக்கொண்டார். இத் தற்பெருமைகளைக் கண்டும் அவரை எதிர்த்துப் பேச அமைச்சர், படைத்தலைவர், பிரபுக்கள் என்போரில் ஒருவருக்கும் துணிவில்லை. ஆனால், டெல்லியில் கொத்தவாலாக இருந்த அலாவுல்முல்க்

என்பவர்மட்டும் அலாவுதீனின் பேராசைகள் அறியாமையால் விளைந்தவை என்று விளக்கிக் கூறினர். இவ் வறிவுரையைக் கேட்ட அலாவுதீன் அதன் உண்மையை ஒப்புக்கொண்டதோடு அதைக் கூறிய கொத்தவாலுக்கு வெகுமதியும் அளித்தார். கி.பி. 1299-ல் ஒரு பெரிய மங்கோலியப் படையெடுப்பு நிகழ்ந்தது. செங்கிஸ்கான் மரபில் வந்த குட்லுக் குவாஜா என்பார் தலைமையின்கீழ் இப் படையெடுப்பு நிகழ்ந்தது. சிந்துவைக் கடந்து மிக விரைவாக மங்கோலியர்கள் டெல்லிக்கே வந்துவிட்டனர். அப் பெரிய மங்கோலியப் படையை அலாவுதீனும் அவருடைய படைத்தலைவர் களான முஸரத்கான், ஸாபர்கான், உலுக்கான் என்போரும் எதிர்த்தனர். ஸாபர்கான் தாக்கிய மங்கோலியப் படை சிதறுண்டதாயினும் அவருக்கு மன்னரோ மற்றவர்களோ ஓர் உதவியும் அனுப்பாமையால் அவரும் அவர் படைஞர்களும் இறுதிவரை போரிட்டு மடிந்தனர். அது கண்டு அஞ்சிய மங்கோலியர் அன்றிரவே டெல்லியைவிட்டு அகன்று ஓடிப் போயினர். இந் நிகழ்ச்சியால் அலாவுதீனுக்குக் கிட்டிய பலன்கள் இரண்டு. ஒன்று, மங்கோலியர் படையெடுப்பு முறியடிக்கப் பட்டமை. இரண்டு, அலாவுதீன் படைவீரர்களில் மிகச் சிறந்த வரும் அவருடைய பொறாமைக்கு ஆளானவருமான ஸாபர்கான் இறந்து போயினமை.

இனி, அலாவுதீன் ரந்தம்போர்க் கோட்டையைத் தாக்க எண்ணி உலுக்கான், முஸரத்கான் ஆகியோரை அனுப்பினர். முற்றுகை தொடங்கப்பெற்றதும் முஸரத்கான் தற்காப்பாளர் களால் கொல்லப்பட்டார். இதனல் குழப்பம் அடைந்த கில்ஜிப் படை பின்வாங்கிற்று. அது கேட்ட அலாவுதீன் தாமே ஒரு பெரும் படை கொண்டு ரந்தம்போருக்கு விரைந்தார். வழியில் தம்மைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்த தம் மருமகனுன ஆமத்கானின் சூழ்ச்சி அம்பலமாயிற்று. ரந்தம்போர் முற்றுகை யைத்தொடர்ந்து மன்னர் மேற்கொண்டபோது அவருடைய மருமக்களான உமர்கான், மங்கூகான் இருவரும் கலகம் செய்த தாகக் கேள்வியுற்றார். கலகக்காரர் பிடித்து வரப்பட்டனர். அவர்களுடைய கண்கள் மன்னர் எதிரிலேயே பிடுங்கப்பட்டன. அவர்களுடைய மனைவி, மக்கள் கொலை செய்யப்பட்டனர். இதையடுத்து டெல்லியிலேயே கி.பி. 1301-ல் ஒரு பெரிய கலக நிகழ்ச்சியைப்பற்றிய செய்தி மன்னர் காதில் எட்டியது. ஹாஜிமௌலா என்னும் அதிகாரி டெல்லி கொத்தவாலைக் கொன்று கஜானுவைச் சூறையாடி ஒரு சையிது குலத்தவரை மன்னராக்கியிருந்தார். இக் கலகத்தை அடக்க மன்னர் மாலிக் ஹமீத் உத்தீன் என்பாரை அனுப்பினர். அவர் கலகத்தை

ஒடுக்கிக் கலகக்காரரைக் கொன்ருர். அலாவுதீன் இப்போது ரந்தம்போர் முற்றுகையை மும்முரமாக நடத்திஞர். ரந்தம் போர் அரசரான ஹமீர்தேவர் சரணடைவதைவிடச் சாவதே மேலென்று தம் படைஞர்கள் புடைசூழப் போர்க்களம் புகுந்து உயிர்நீத்தார். கோட்டை 1301, ஜூலையில் கைப்பற்றப் பட்டது.

கலகங்கள் அடுத்தடுத்துத் தோன்றியதால் அதற்குக் காரணம் காண விழைந்தார் மன்னர். அவர் ஆராய்ச்சியால் நான்கு உண்மைகள் தெளிவுற்றன. ஒன்று, மன்னர் மக்களுடைய உண்மையான நிலையைப் புரிந்துகொள்ளவில்லை. இரண்டு, பலர் கூடி உண்டு குடித்துக் களித்து மகிழும் கூட்டங்களில் கலக எண்ணங்கள் உருவாகின்றன. மூன்று, பிரபுக்கள் தம்மிடையே மண உறவுகள் பூண்டு கொள்வதால் பிரபுக்கள் கூட்டமே ஒன்று சேர்ந்து மன்னருக்கு எதிராகச் சதி செய்ய வாய்ப்பு ஏற்படு கின்றது. நான்கு, மக்கள் கையில் செல்வம் சேருவதால் அவர் களுக்கு அதிகாரமும், கெட்ட எண்ணங்களுக்கும் கலகங்களுக்கும் தேவையான வீண் பொழுதும் கிடைக்கின்றன. இவ்வாறு முடிவு கட்டிய சுல்தான் தாம் முன்பு மக்களுக்கு அளித்த கொடைகளையும் உபகாரச்சம்பளங்களையும் நீக்கி நிலங்களை யெல்லாம் அரசுரிமை யாக்கி இவ் வுரிமைகளை அனுபவித்து வந்தவர்களைப் பலவீன ராக்கிஞர். மக்களை ஏழைகளாக்கும் திட்டப்படி அவர் மேற் கொண்ட ஏற்பாடுகள் மிகச் செம்மையாக நடைமுறைப்படுத்தப் பட்டன. அதன் விளைவாக நாட்டில் ஒருவரிடமும் சிறிது தங்கம்கூடத் தங்கவில்லை. மக்களுக்குத் தங்கள் பிழைப்பை நடத்த பொழுதிருந்ததேயன்றிக் கலகத்தைப்பற்றி நினைக்கப் பொழுது மில்லை; வன்மையு மில்லை. மற்றும், அவர் பிரபுக்கள் வீட்டிலும் சந்தை முதலிய பொது இடங்களிலும் பொதுமக்கள் என்ன செய் கிருர்கள், என்ன பேசுகிருர்கள் என்று அறிந்து வந்து கூற ஒரு பெரிய ஒற்றர் படையே வைத்திருந்தார். மக்கள் தங்களிடையே பேசிக்கொள்ளவும் அஞ்சினர். மூன்ருவதாகக் குடியை நிறுத் திஞர். குடித்தவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப் பட்டது. அவர் அரசியல் காரணங்களுக்காகவே குடியை நிறுத்திஞர்; மக்களுக்கு நல்ல பழக்கத்தை உண்டாக்க வேண்டு மென்று கருதி அன்று. அடுத்தபடியாகப் பிரபுக்களிடையே நிகழும் திருமணங்கள் யாவையும் மன்னருடைய அனுமதி பெற்றே நடக்க வேண்டும் என்று விதித்தார். இவ் விதிகளெல்லாம் பெரும்பாலும் முஸ்லிம்களையே பாதித்தன. கிராமங்களிலிருந்த இந்து அதிகாரிகளான வரிவசூலிப்போர், நடுவணர் (மன்ன னுக்கும் மக்களுக்குமிடையே நின்று வரி வசூலித்துக் கொடுத்து

அதில் ஒரு பங்கு பெறுவோர்) ஆகியோரைப் பொறுத்தவரை சில விதிகளை ஆக்கினர். அவற்றின்படி ஜமீந்தார் நிலையிலிருந்த நடுவணர்களுடைய சலுகைகளை வெகுவாகக் குறைத்து அவர்கள் கட்டவேண்டிய வரியை மிகுவித்தார். பொதுவாக இந்துக்கள் கையில் சிறிதும் பணம் சேராத வகைக்குத் தேவையான விதிகளை யெல்லாம் விதித்தார். இதனின்றும் சில ஆசிரியர்கள் அலாவுதீன் இந்துக்களுக்கு எதிராகச் சட்டமியற்றி முஸ்லிம்களை ஆதரித்தார் என்று கூறுவர். ஆயினும், வலுமிக்க முஸ்லிம்களையும் ஒடுக்கு வதற்கு அவர் பல செயற்பாடுகளை மேற்கொண்டமையால் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமிடையே அவர் யாதொரு வேறு பாடும் கருதினர் என்று கூற இடமில்லை. அவரே முஸ்லிமாக இருந்தமையால் அந்த மதத்தை ஒட்டி ஓரளவிற்கேனும் முஸ்லிம் களுக்கு ஆதரவு அளித்திருப்பர்ராயின் அது இயல்பே. ஆனால், பொதுப்படையாகப் பார்க்கும்பொழுது அவர் தமது நலனையும், அரசின் நலனையும் கருதினரேயன்றி அவற்றிற்கு இடையூறாக நின்ற ஏனைய நலன்கள் ஒன்றையும் போற்றவில்லை என்பதே உண்மை. அவர் ஒருமுறை டெல்லியிலிருந்த காஸியோடு உரை யாடிக்கொண்டிருந்தபோது மன்னருடைய சில செயல்களைக் காஸி கண்டித்துக் கூறினர். மன்னர் மக்களைத் தண்டிக்கும் முறையும், அவர்களிடமிருந்து தவறான முறையில் செல்வத்தைக் கவர்வதும் முஸ்லிம் சட்டத்திற்குப் புறம்பானவை என்று வலி யுறுத்தினர். இக் கடுமையான அறிவுரையைக் காஸி எதிர் பார்த்ததற்கு மாறாக மன்னர் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு அறிவு உரைத்தவர்க்கு வெகுமதியளித்தார். ஆனால், மன்னருக்குத் தம் பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளும் எண்ணம் சிறிதும் இல்லை. அவர் காஸியிடம் கூறினர்: 'நான் உங்களுடைய சமய சாத்திரங்களையும், சட்ட நுணுக்கங்களையும் அறிந்தவன் அல்லேன். அரசுக்கும் மக்களுக்கும் எது நல்லதென்று எனக்குப் படுகின்றதோ அதையே நான் செய்வேன்.' இதுவே அலாவுதீனுடைய அரசியல் கோட்பாடாம்.

கி.பி. 1302-ல் அலாவுதீன் வராங்கல் (ஓரங்கல்) நாட்டிற்குப் பக்ருதீன் ஜௌனு, சஜ்ஜு என்பார் தலைமையில் ஒரு படையை அனுப்பினர். அப் படை பீகார், வங்காளம் வழியாக வாரங்கலை அடைந்தது. இச் சுற்றுவழியில் அப் படை சென்றதற்குக் காரணம் விளங்கவில்லை. ஒருவேளை வங்காளத்தின் வன்மையை யும் காண அது விழைந்தது போலும். அஃதெவ்வாறாயினும், இப் படை வாரங்கல் நாட்டுத் தெலுங்குப் படையுடன் பொருது தோற்றுப் பின்வாங்கிற்று.

கி.பி. 1303, ஜனவரியில் அலாவுதீன் இராஜபுதனத்தில் உள்ள சித்தூர்க் கோட்டையைக் கைப்பற்றப் படைகொண்டு சென்றார். அப்போது சித்தூரில் ராணுவாக இருந்தவர் ரதன்சிங் என்பவர். கோட்டை ஏழு மாத காலம் முற்றுகையிடப்பட்டது. கோட்டையை இனிக் காக்கமுடியாது என்பதை அறிந்த ராணு 30,000 இராஜபுத்திரர்களோடுகூட முஸ்லிம்கள் கையில் சிக்குண்டு கொலையுண்டார் என்று சில ஆசிரியரும், ராணு ரதன்சிங் சித்தூர் முற்றுகைக்குப் பிறகும் உயிர்வாழ்ந்திருந்தார் என்று அமிர்குஸ்ரு, இஸாமி போன்றவர்களும் கூறுவர். அலாவுதீன் சித்தூரில் சில நாள்கள் தங்கினர். அந் நாள்களில் அங்கிருந்த பல கோயில்கள் இடிக்கப்பட்டன. அவர் டெல்லிக்குத் திரும்புமுன் கிஸிர்கான் என்பாரைச் சித்தூரின் கவர்னராக நியமித்தார். 1312-ல் கிஸிர்கான் அதைக் கைவிட்டான். இராஜபுத்திர மன்னர்கள் அதன் பிறகு டெல்லி சுல்தானுக்குக் கப்பம் கட்டிச் சித்தூரை ஆண்டுவந்தனர்.

அலாவுதீன் சித்தூரை வென்று வந்த வரலாற்றினிடையே பத்மினி என்பாளுடைய கதை ஒன்றும் கூறப்படுகின்றது. இக் கதையை யாவரும் அறிவர். இராஜபுதனத்து நாட்டுப் பாடல்களில் இது பெருவாரியாகப் பேசப்படுகின்றது. அபுல்பஸல், பிரிஷ்டா முதலிய பிற்கால முஸ்லிம் வரலாற்றுளர்கள் இக் கதையைக் கூறுகின்றனர். 1540-க்கு முன்பு இக் கதை எந்த நூலிலும் இடம் பெறவில்லை. ஆயினும், அபுல்பஸல் பழைய வரலாறுகளை நம்பித் தாம் எழுதுவதாகக் கூறுகிறார். அலாவுதீன் சித்தூருக்குச் சென்றதே பத்மினியைக் கருதி, என்பது ஒரு கருத்து. ஆனல், நாடு பிடிக்கும் ஆசையுள்ள அலாவுதீனுக்கு மண்ணாசையைத் தூண்டுவதற்கு எந்தப் பத்மினியும் தேவையில்லை. மற்றும், அலாவுதீனின் இயல்பையும் திறமையையும், அறிவுக்கூர்மையையும் அறிந்தவர்கள் அவர் எந்தப் பெண்ணிடமும் அத்துணை எளிதில் ஏமாந்துவிடுவார் என்று நம்பிவிட முடியாது. ஆதலால், இப் பத்மினி கதை ஒரு கட்டுக்கதையே யன்றி வரலாறன்று என்று கொள்ளுதலே சிறப்புடைத்து.

அதே ஆண்டில் மங்கோலியர்கள் தார்கி என்பானுடைய தலைமையின்கீழ் டெல்லிவரையில் வந்து தாக்கினர். இரண்டு மாத காலம் டெல்லியில் கொள்ளையடித்துவிட்டு அவர்கள் எக் காரணத்தாலோ திடீரென்று திரும்பிப் போய்விட்டனர். அடிக்கடி இவ்வாறு மங்கோலியர் தாக்குதல்கள் இனி நிகழாமல் தடுக்க விரும்பிய அலாவுதீன் சில இராணுவச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். வடமேற்கு இந்தியாவிலிருந்த கோட்டை

கொத்தளங்களைச் சீர்படுத்தியதும், புதிய கோட்டைகளைக் கட்டியதும், டெல்லியில் பெரியதொரு நிலைப்படையை அமைத்ததும், ஒவ்வொரு படைஞனின் விவரங்களையும் குறிப்பெடுத்து வைத்தமையும், போர்க் குதிரைகளுக்குச் சூடு போட்டுக் குறியிட்டு அவற்றைப் படைவீரர்கள் மாற்றி விடாமலிருக்கச் செய்தமையும், அவர் சுல்தானியப் படையை வலுவாக்குவதற்கு மேற்கொண்ட சில முயற்சிகளாம். ஏறத்தாழ ஐந்து லட்சம் குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு பெரும்படையைக் கட்டிக் காக்க மிக அதிகமான நிதி தேவைப்பட்டது. இனிமேல் எந்த வரியையும் எந்த வகையிலும் கொடுக்கமுடியாது என்னும் ஏழ்மையாக்கப்பட்ட நிலையில் மக்கள் இருந்தனர். ஆகவே, படைஞர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பதைவிட அவர்களுக்கு வேண்டிய தேவைப்பொருள்களைக் குறைந்த விலையில் அதற்கென்று நியமிக்கப்பட்ட சில வணிகர்களைக் கொண்டு கிடைக்குமாறு செய்வதே சிறந்தவழி என்று கண்ட சுல்தான் அவ் வழியைக் கடைப்பிடித்தார். சில சமயங்களில் வர்த்தகர்கள், நஷ்டமடையாமலிருக்கும்பொருட்டு அரசருடைய கஜானாவிலிருந்து நிதிகொடுத்து உதவ வேண்டியிருந்தது. ஆயினும், அவர் எண்ணிய எண்ணம் நிறைவேறிற்று. பதுக்கலும், கருப்புச் சந்தையும் அறவே ஒழிந்தன. வியாபாரிகள் தங்கு தடையின்றித் தேவைப் பொருள்களைக் கொணர்ந்து சந்தையில் விற்பதற்காக அவர்களுடைய மனைவி, மக்களை அரசினர் தம் கண்காணிப்பில் வைத்திருந்த நிலையும் இருந்தது. இவ் விதிமுறைகளும் அவற்றை அலாவுதீன் செயல்படுத்திய முறையும் நமக்கு வியப்பை யளிக்கின்றன. அரசு விதித்த கட்டுப்பாட்டு விதிகளை ஒருவருமே மீறவில்லை என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள். அக்காலத்தைவிட எவ்வளவோ அதிகமான வசதிகளையுடைய இக்காலத்து அரசுகளாலும் சாதிக்கமுடியாததைத் தமது திறமையினால் அலாவுதீன் செய்து காட்டியமை வியப்பிற்கும், போற்றுதற்கும் உரியதாகும். ஆனால், இவ் விதிமுறைகளால் டெல்லி நகர மக்களும், போர்ப்படைகளும்மட்டுமே பயனடைந்தனர். கிராமப்புற மக்கள் பலவகையிலும் வருந்தினர் என்பவையும் நினைவில் இருத்தத் தக்கவை. ஆனால், மன்னர் செயல்களின் விளைவுகளை அறியாமல் செய்தார். பொருளாதார நிலைமை அவரையும் விஞ்சிச் சீரழிந்தது என்றெல்லாம் கூறமுடியாது.

இவ்வாறு, செல்வாதாரத் துறையிலும் படைச்சீரமைப்புத் துறையிலும் வெற்றிகண்ட அலாவுதீன் மாளவ நாட்டைக் கைப்பற்றி ஐநுல் முல்க் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். துரோகிகளின் உதவியால் மாண்டுகோட்டை கைப்பற்றப்

பட்டது. அதே ஆண்டில் மற்றுமொரு மங்கோலியப் படையெடுப்பு நிகழ்ந்தது. 50,000 மங்கோலியர் அலிபேக் டார்டாக் என்பார் தலைமையில் இந்தியாவின் உட்புகுந்து பஞ்சாபையும் டெல்லியையும் கடந்து காசிவரை சென்று சூறையாடினர். மன்னர் மாலிக் நாயக் என்பார் தலைமையில் 40,000 குதிரைப் படையைச் செலுத்தி மங்கோலியரைத் தோற்கடித்து அவர்கள் படைத்தலைவர்களைக் கொல்லுவித்தார். மங்கோலியப் படை வீரர்களில் போர்க்களத்தில் இறவாதவர்கள் தலைநகரத்தில் கொல்லப்பட்டனர். இந்தத் தோல்வியை மாற்றுவதற்காக மற்றுமொரு பெரிய மங்கோலியப் படையெடுப்பு நிகழ்ந்தது (1306). இதைத் தடுத்து நிறுத்த மாலிக் நாயீப் காபூர் (இவரே குஜராத்தில் விலைக்கு வாங்கப்பட்ட அடிமை) நியமிக்கப்பட்டார். மாலிக்காபூர் மங்கோலியப் படைகளை நையப்புடைத்து 60,000 பேரில் ஐயாயிரவரே தப்பி ஓடும் நிலையை உருவாக்கினர். இவ் வேராளமான போர்க்கைதிகளை யானைகள் இடறிக் கொன்றன. செத்தவர்களுடைய தலைகளைமட்டும் கொண்டு ஒரு நெடிய கோபுரம் கட்டப்பட்டது. இவ் வரிய கோபுரத்தை 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரிஷ்டா தாம் கண்டதாகக் கூறுகிறார். அவர்களுடைய மனைவி, மக்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர். இதுவே அலாவுதீன் ஆட்சிக் காலத்தில் நடந்த கடைசி மங்கோலியப் படையெடுப்பாகும். வடக்கே அமைதி ஒருவாறு நிலைநாட்டப் பெற்றபிறகு தென்னிந்தியாவின் அளவிறந்த செல்வத்யையும் கவர்ந்துகொள்ள விரும்பினர் அலாவுதீன். அச் செல்வத்தின் தரத்தையும், அளவையும் அவர் ஏற்கெனவே தேவகிரியில் உருசி கண்டிருந்தவர். இனி அவர் மேற்கொண்ட தென்னிந்தியப் படையெடுப்புக்கள் நாடு பிடிக்கும் எண்ணத்தோடு அல்ல; கொள்ளையடிக்கும் எண்ணம் ஒன்றே அவருக்கு இருந்தது. அவர் இந்து அரசுகளின் செல்வத்தைக் கவர்ந்து டெல்லி சுல்தானியத்தை வலுப்படுத்த விரும்பினர் இப் போர்முயற்சிகளுக்கு மாலிக் காபூரைத் தலைமைதாங்க நியமித்தார். தேவகிரி இராமச்சந்திரர் பல ஆண்டுகளாகக் கப்பம் கட்டவில்லை. கப்பம் கட்டாதவர் அவர் மகன் சங்கரரே யென்றும் இராமச்சந்திரர் தம் மகனையே டெல்லிக்குக் காட்டிக்கொடுத்துவிட்டார் என்றும் சிலர் கூறுவர். இஃதெவ்வாறாயினும் தேவகிரிமீது படையெடுப்பதற்குப் போதிய காரணம் அலாவுதீனுக்குக் கிடைத்தது. தேவகிரி படையெடுப்பிலிருந்து மாலிக்காபூரின்[1] செயற்பாடுகளே டெல்லி சுல்தானியத்தின் முக்கிய செயற்பாடுகளாய் அமைந்தன. 1307-க்குப் பிறகு அலாவுதீன் செய்த பெரிய காரியங்கள்

1. இவரை மாலிக் நாயீப் என்றும் கூறுவர். இந் நூலில் இவ் விரு பெயர்களுமே ஆளப்படுகின்றன.

யாதொன்றுமில்லை. அச் சுல்தானியத்தின் வரலாற்றை அறிய விரும்புவோர் மாலிக்காபூரின் படையோடு கூடவே டெல்லியி லிருந்து மதுரைவரை சென்று மீளவேண்டும்.

1307-ல் தேவகிரியை அடைந்த மாலிக்காபூர் யாதவர் படைகளை எளிதில் வென்றார்; அளவிறந்த செல்வத்தையும், யானைகளையும் கைப்பற்றிச் சென்றார். இராமச்சந்திரரை அவர்தம் உற்றார் உறவினரோடு டெல்லிக்கு அனுப்பிவைத்தார். இராமச்சந்திரரை அலாவுதீன் அன்போடு வரவேற்று ஆறுமாதம் வைத்திருந்து திருப்பி அனுப்பினார். அன்றிலிருந்து கடைசிவரை இராமச்சந்திரர் டெல்லி சுல்தானிடம் நன்றி அறிதலோடு கப்பம் கட்டி வந்ததோடு மாலிக்காபூரின் தென்னிந்தியப் படை யெடுப்புக்கும் பேருதவி புரிந்தார். இவ்வாறு இராமச்சந்திரரை நடத்திய விதம் அலாவுதீனின் அரசியல் அறிவுடைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதற்கிடையே குஜராத்தில் வர்கேல மன்னரான கர்ணர் மறுபடியும் மன்னராகி அலாவுதீனின் அதிகாரத்தைப் புறக் கணித்தார். இன்னொரு முறை குஜராத்தைத் தாக்கிக் கர்ணரை ஆதிக்கத்திலிருந்து நீக்கி அவர் மகள் தவளார்தேவி என்பாளை அலாவுதீன் தம் மகனுக்கு மணமுடித்துக்கொண்டார். அலா வுதீனின் மகன் கிஸர்கானுக்கும் தவளாதேவிக்கும் இடையே நிகழ்ந்த காதல் வரலாற்றை ஓர் அரிய காப்பியமாகவே இயற்றினார் அமீர்குஸ்ரு. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் வரலாறு இல்லையா என்பதுபற்றிய தீவிரமான கருத்து வேறுபாடு உண்டு.

தவளாதேவியின் வாழ்க்கை—அது கதையே யாயினும் வரலாறே ஆயினும்—மிகச் சுவையானது. குஜராத் மன்னரான கர்ணருக்குக் கமலாதேவி என்பாள் மனைவி. அலாவுதீன் முதல் முறை குஜராத்தைத் தாக்கியபோதே கமலாதேவியைக் கவர்ந்து சென்று அவளைத் தமது காதல் மனைவியாக்கிக் கொண்டார். அப்பொழுது அவளுடைய மகளான தவளா தேவிக்கு நான்கு வயது. இம் முறை (கி.பி. 1307) தேவகிரியைத் தாக்க வந்த மாலிக்காபூரிடம் கமலாதேவி 'தேவகிரிப் போர் முடிந்து திரும்பும்போது தவளா தேவியையும் உடன்கொண்டு' வருமாறு சொல்லி அனுப்பினாள். இவ் வேண்டுகோள் கர்ணருக்கு மாலிக்காபூரால் விடுக்கப்பட்டது. கர்ணரோ இனி குஜராத் தில் தான் சுதந்தரமாக ஆளமுடியாது என்பதை அறிந்து தேவகிரிக்குத் தம் மகளோடு ஓடிப்போய் அங்குத் தஞ்சம் புகுந்தார். தேவகிரிப் பட்டத்து இளவரசரான சங்கரர் தவளா

தேவியை மணக்க விரும்பினர். கர்ணர் இராஜபுத்திர வீரர் அல்லரா ? தம் மகளை ஒரு யாதவருக்குக் கொடுக்க இசையவில்லை. இஃது இங்ஙனமாக, மாலிக்காபூரின் ஆட்கள் தவளா தேவியைக் கைப்பற்றி டெல்லிக்கு அனுப்பிவைத்தனர். அங்குத் தாயைப் போல மகளும் அலாவுதீனின் அந்தப்புர வாழ்க்கையை மேற் கொண்டாள். அவளைக் கண்ட கிஸர்கான் அவளை மணக்க விரும்பவே அலாவுதீன் அவளைத் தம் மருமகளாக ஆக்கிக் கொண்டார். இவ் விவரங்களெல்லாம் வரலாற்றின் பாற் படமுடியாது; இவை கட்டுக் கதைகளே என்று சில ஆசிரியர்கள் கூறு நிற்பர். சிலர் சில உண்மை நிகழ்ச்சிகள் பல புனைகதை களோடு கலந்து நிற்கின்றன என்பர். பிரிஷ்டா போன்ற ஆசிரியர்கள் இவை யாவையுமே வரலாறும் என்பர். இக் கருத்துக் களினிடையே உண்மை காண்பது அரிது. ஆயினும், வியப்பும் வருத்தமும் நிறைந்த இந்தப் பெண்ணின் கதையில் நம்பமுடியாத நிகழ்ச்சிகள் யாதொன்றுமில்லை.

கி.பி. 1308-ல் அதுவரை தம்மால் கைப்பற்ற முடியாதிருந்த சிவாண கோட்டையை (இராஜபுதனத்தில் உள்ளது)யும், ஜாலோர் கோட்டையையும் கைப்பற்றி இராஜபுதனம் முழுவதையுமே டெல்லி சுல்தானியத்தின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர். கி.பி. 1301-க்கு முன்பே ஜோதிபுரி சுல்தானியத்தில் அடங்கிவிட்டது என்று கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றது.

கி.பி. 1303-ல் வாரங்கலைக் கைப்பற்றச் செய்த முயற்சி தோல்வியுற்றதை அலாவுதீன் மறக்கவில்லை. 1309-ல் மாலிக் காபூர் டெல்லியிலிருந்து புறப்பட்டுத் தேவகிரிவழியாக இராமச் சந்திரரின் உதவிகொண்டு வாரங்கலை அடைந்தார். 1310, ஜனவரியில் வாரங்கலின் முற்றுகை தொடங்கிற்று. அப்பொழுது அங்கு மன்னராயிருந்த பிரதாப ருத்திரதேவர் பத்துலட்சம் விற் படையினரும் 20,000 குதிரைப் படையினரும் கொண்டு கோட்டையைக் காக்க முற்பட்டார். மாலிக்காபூரின் படை ஒரு லட்சம் படைஞரைக் கொண்டது. அக் கோட்டைக்கு இரண்டு அகழிகள் இருந்தன. அவ் விரண்டையும் கடந்து கோட்டையிலும், கோட்டை மதிலிலும் பிளவுண்டாக்கினர். நெடுநாள் காத்துப் பார்த்தும் பிரதாபருத்திரரால் கோட்டை யைக் காக்க முடியவில்லை. தங்கத்தால் செய்த தம் உருவம் ஒன்றிற் குப் பொற்சங்கிலி ஒன்றை அணிவித்து மாலிக்காபூருக்கு பிரதாப ருத்திரர் அனுப்பிவைத்தார். தாம் சமாதானத்திற்கு இணங்கி வருவதாக அவ்வாறு அறிவித்தார். 100 யானைகளும், 7,000 குதிரைகளும் அவருடைய செல்வம் முழுவதும் கொடுத்துவிட்டு

ஆண்டுதோறும் கப்பமும் கட்ட ஒப்புக்கொண்டார். இவற்றை யெல்லாம்விட உலகத்திலேயே தன்னிகர் இல்லாத ஒரு வைரத்தையும் கொடுத்ததாகக் கூறுவர். இதுதான் கோஹினூர். இதுவே பிற்காலத்தில் ஹுமாயூனுல் பாபருக்குக் கொடுக்கப்பட்டு பாபர் அதனைத் திரும்பவும் ஹுமாயூனுக்குக் கொடுத்து அவ்வாறே வந்து இப்பொழுது இலண்டனில் பிரிடிஷ் மியூசியத்தில் உள்ளது. 1310 மார்ச்சில் மாலிக் நாயிப் தாம் சேகரித்த அளவிறந்த நிதியங்களை 1000 ஒட்டகங்களின் முதுகில் ஏற்றி டெல்லிக்குக் கொண்டு சென்ருர். வாரங்கலில் இருக்கும் பொழுதே தென்னுட்டு இராச்சியங்களின் செல்வச் சிறப்பைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தார் நாயூப். அத்துணைச் செல்வத்தையும் உரியவர்களிடமே விட்டுவைக்க மனமில்லாத நாயிப் 1310 நவம்பரில் தென்னுடு நோக்கிப் படையெடுத்தார். அவரது நோக்கம் மதம் மாற்றவோ, நாடு பிடிக்கவோ, மன்னரின் பெருமையைப் பரப்பவோ, மற்ற அரசர்களின் கீழ்ப்படிதலைப் பெறவோ—இவையெல்லாம் சிலரால் காரணங்களாகக் கூறப் படினும்—அவை அல்ல; தென்னுட்டுச் செல்வத்தைக் கொஞ்சமும் எஞ்சாமல் தன்னுட்டிற்குக் கொண்டு செல்ல அவர் இட்ட திட்டமே அது. 1311 பிப்ரவரியில் தேவகிரியை அடைந்த கில்ஜிப்படைகள் இராமச்சந்திரரின் உதவிகொண்டு துவாரசமுத்திரத்தை நோக்கி முன்னேறின.

மைசூர்ப் பிராந்தியத்தில் அமைந்திருந்த ஹொய்சள இராச்சியத்தின் தலைநகரம் துவாரசமுத்திரம் என்பது. அங்கு ஆண்டவர் மூன்றும் வீரவல்லாளர். இவருக்கும் இராமச்சந்திரருக்கும் பழம் பகையுண்டு. ஹொய்சள நாட்டின் எல்லையைக் கடப்பதற்குமுன் அந் நாட்டு நடப்புகளை அறிந்துகொள்ள மாலிக் காபூர் ஒற்றர்களை அனுப்பினுர். வல்லாளர் பாண்டி நாட்டில் அப்பொழுது நிகழ்ந்த உள்நாட்டுச் சண்டையைப் பயன்படுத்திக்கொண்டு தமது தமிழகப் பிரதேசங்களை வலுப்படுத்திக்கொள்ள அங்குச் சென்றிருந்தார் என்பதை அறிந்தார். இதுவே நல்ல தருணமென்று மாலிக்காபூர் துவாரசமுத்திரத்தை விரைந்து அடைந்தார் (1311, பிப்ரவரி). முஸ்லிம் படையெடுப்பைப்பற்றிக் கேள்வியுற்ற வல்லாளர் விரைந்து துவாரசமுத்திரத்திற்குத் திரும்பினுர். வீரபாண்டியர் வல்லாளருக்கு உதவி அனுப்பியதாகச் சொல்லப் படுகின்றது. அப்படியும், மாலிக்காபூரை எதிர்க்க முடியாதென்று அறிந்த வல்லாளர் சமாதானத்தை நாடினுர். தமது ஏராளமான செல்வத்தைத் தாராளமாக வழங்கினுர். கரி, பரி, நிதி யாவற்றையும் எதிரிக்குக் கொடுத்துவிட்டார். தாமும் தமது அரசும் தப்பினுல் போதும் என்று கருதினுர்.

இதற்கிடையே மாலிக் நாயீப் வல்லாளரின் உதவிகொண்டு பாண்டிநாட்டின்மீது படையெடுத்தார். சுந்தரபாண்டியர், வீர பாண்டியர் என்னும் இருவரும் நடத்திவந்த உள்நாட்டுச் சண்டை தற்காலிகமாக நின்றது. சண்டையைத் தேடித்திரிந்த நாயீபிற்குப் பாண்டிநாட்டில் பகைவரே கிடைக்கவில்லை. ஏனெனில் இரு பாண்டியரும் காபூரோடு ஓரிடத்தில் நின்று போரிட அஞ்சி ஆங்காங்குச் சுற்றிவந்தனர். பாண்டியர்களைத் தோற்கடித்த திருப்தி மாலிக்காபூருக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், முஸ்லிம் படைத்தலைவர் தமிழகத்தில் தடையின்றிச் சூறையாடுவதைத் தடுக்க அவர்களால் முடியவில்லை. வீர பாண்டியரைத் துரத்திச்சென்ற மாலிக்காபூர் சிதம்பரம்வரை சென்றார். சிதம்பரத்தில் கோயிலை இடித்துத் தங்கத்தைக் கவர்ந்து, மக்களைக் கொன்று தமது வழக்கமான வெற்றிகளை யெல்லாம் அடைந்தார். சிதம்பரத்திலிருந்து திரும்பிய மாலிக் வழியில் ஸ்ரீரங்கத்தைச் சூறையாடி மதுரையை அடைந்தார். மதுரை அருகில் அவருக்கும் சுந்தரபாண்டியருக்கும் இடையே நிகழ்ந்த போர் இரு தரத்தார்க்கும் வெற்றியின்றி முடிந்தது. மாலிக் சொக்கநாதர் கோயிலுக்குத் தீயிட்டார். மதுரையில் அவர் சேகரித்த செல்வத்தையெல்லாம் டெல்லிக்கு அனுப்பிவிட்டார். மதுரையிலிருந்து இராமேஸ்வரம்வரையில் சென்று அங்குள்ள கோயிலில் தம்மால் இயன்ற அளவு இடித்து அங்கொரு மசூதியைக் கட்டிவிட்டுத் திரும்பினார். பெரிஷ்டா இதனைக் குறிப்பிடுகிறார். சிலர் இக் கூற்றை நம்புவதில்லை. ஆயினும், பெரிஷ்டாவின் கூற்று தெளிவாக இருப்பதால் இதை நம்பாமலிருக்க நியாயமில்லை. அலாவுதீன் முக்கியமாக எண்ணிய எண்ணம் மாலிக்காபூரால் நிறைவேறிற்று. இந்து மன்னர்களைத் தோற்கடித்தல், கோயில் களை இடித்தல், படிமங்களைத் தகர்த்தல், செல்வத்தைக் கவர்தல், இஸ்லாமை இயன்ற அளவு பரப்புதல் ஆகிய இந் நோக்கங்கள் யாவுமே கைகூடின. இவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு டெல்லிக்குத் திரும்பிய மாலிக்காபூர் அலாவுதீனால் நன்கு மதிக்கப்பட்டு வெகுமதியளிக்கப்பட்டார். அவர் ஐந்துமாதகாலம் தென்னாட்டுப் போர்புரிந்தார். அவர் டெல்லிக்குத் திரும்பிய போது மூன்றும் வல்லாளர் மகனை உடன்கொண்டு சென்றார். ஹொய்சள இளவரசரைச் சிலகாலத்திற்குப்பின் டெல்லி சுல்தான் துவாரசமுத்திரத்திற்கே திருப்பி அனுப்பிவிட்டார்.

மாலிக்காபூர் தென்னகத்தில் கண்ட பெருவெற்றிக்குப் பிறகு பிற வெற்றிகள் அலாவுதீன் ஆட்சியில் ஏற்படவில்லை. அவருக்கு இப்பொழுது வயது முதிர்ந்துவிட்டது. அவருடைய

உடல்நிலையும் சீர்குன்றிவந்தது; ஆட்சிமுறையும், சுல்தானியமும் பொதுவாகச் சிறிது சிறிதாக வலுவிழந்தன. அப்பொழுது டெல்லிக்குத் திரும்பியிருந்த மாலிக்காபூர்தான் சுல்தானியத்தி லேயே மிக வலுவும் செல்வாக்கும் உள்ள மனிதர் என்பது தெளிவாயிற்று.

இஃது இவ்வாருக டெல்லியில் குடியேறியிருந்த நவமுஸ்லிம் களான மங்கோலியரில் சிலர் மன்னரை எதிர்த்துக் கலகம் செய்யச் சூழ்ச்சி செய்தனர். இதை மன்னர் கண்டுபிடித்துவிட்டார். வெகுளிவாய்ப்பட்ட மன்னர் டெல்லியிலிருந்த நவமுஸ்லிம்கள் எல்லாரையும் கொன்றுவிடுமாறு உத்தரவிட்டார். ஏறத்தாழ 30,000 மங்கோலியர்கள் இருந்தமையால் அவர்களையெல்லாம் கொன்று குவிப்பது ஒரு பிரச்சினையாக இருந்தது. அதற்கு ஒரு அரியவழி கண்டுபிடித்தார். அதாவது நவமுஸ்லிம்களை யார் வேண்டுமானுலும் கொல்லலாம் என்றும் கொன்றவர்களுக்குத் தண்டனை இல்லையென்றும் செத்தவன் செல்வம் கொன்றவனைச் சேருமென்றும் ஆணை பிறப்பித்தார். இவ் வுத்தரவுகள் மிகுந்த திறமையோடு நிறைவேற்றப்பட்டன என்று கூறவும் வேண் டுமோ ? மங்கோலியரின் மனைவி மக்கள் அடிமைகளாக விற்கப் பட்டனர்.

மன்னரின் பட்டத்து இளவரசரான கிஸர்கான் தலைநக ரில் செல்வாக்கு மிக்கு விளங்கினுர்; ஆதலால், மாலிக் நாயீபிற்கு டெல்லி ஒத்துவரவில்லை. இதற்கிடையில் வாரங்கல் மன்னரான பிரதாபருத்திர தேவர் தாம் கட்டவேண்டிய கப்பத்தைத் தேவகிரியில் கட்டிவிடுவதாகவும் அதை வசூலித்துக்கொள்ள டெல்லியிலிருந்து ஓர் அதிகாரி தேவகிரியில் அமர்த்தப்பட வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார். அன்றியும், இராமச் சந்திரர் 1311-ல் இறந்துபோனுர். அவருக்குப்பின் பட்டம் எய்திய சங்கரர் அவர் இயல்பிற்கேற்ப டெல்லியை மதிக்காமல் கப்பம் கட்டாமல் இருந்தார். இந்த நிலையை யெல்லாம் சீர்படுத்தத் தம்மைத் தேவகிரிக்கு அனுப்புமாறு மன்னரை வேண்டினுர் மாலிக். மன்னர் உத்தரவு பெற்றவர் 1311-ல் தேவகிரியை அடைந்து சங்கரரைக் கொன்று யாதவ அரசை டெல்லி சுல்தானியத்தில் சேர்த்தார். 1315 வரை இவர் தக்காணத் தில் இருந்தார். அவ் வாண்டு அலாவுதீன் உடல்நிலை மிகவும் கெட்டுப்போனதால் மாலிக் நாயீப் டெல்லிக்குத் திரும்பவும் அழைக்கப்பட்டார். அவர் தக்காணத்தில் போயிருந்த போது கிஸர்கான், ஆல்ப்கான் முதலியோர் அளவிறந்த செல் வாக்கோடு விளங்கினர். கிஸர்கான் தவளாதேவியை மணந்

திருந்தார். உடல்நிலை சீரழிந்திருந்த மன்னரை மதிக்கவில்லை. கல்வியின்மையால் கசடராக வளர்ந்துவிட்ட தம் மக்களையும் மனைவியர் உட்பட மற்ற உறவினரையும் நம்பாத அலாவுதீன் தமது முழு நம்பிக்கைக்கும் உரியவரான மாலிக் நாயீபைத் தக்காணத்திலிருந்து வரவழைத்து மன்னர் தம் தொல்லைகளை யெல்லாம் அவரிடம் கூறினார். மாலிக் நாயீப் ஆல்ப்கானைக் கொன்று, கிஸர்கானைத் தலைநகரினின்றும் அகற்றி, அவர் தாயையும் சிறைப்படுத்தித் தமது நிலைமையை நிலைப்படுத்திக் கொண்டார். தலைநகரில் இந்தக் குழப்பங்களெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது குஜராத்திலும் சித்தூரிலும் கலகங்கள் தோன்றின. இராமசந்திரரின் மருமகப்பிள்ளையான ஹரபால தேவர் தேவகிரி மன்னராகத் தமது சுதந்தரத்தை அறிவித்தார். இத்தனை தொல்லைகளுக்கிடையே அலாவுதீன் கில்ஜி கி.பி. 1316-ல் ஜனவரி 5 ஆம் நாளில் இறந்தார்.

அலாவுதீனின் தன்மையைப்பற்றிப் பலர் பலவாறாகக் கூறுவர். முஸ்லிம் ஆசிரியர்கள் அவரைப் புகழ்வர். இந்து ஆசிரியர்கள் அவருடைய சாதனைகளையும் அடக்கியே பேசுவர். அவர் ஈவிரக்கமில்லாத கொடுங்கோலர்; தமது மன்னருக்கே துரோக மிழைத்தவர். ஆனால், அவருடைய திறமையையும், ஆற்றலையும் தறுகண்மையையும், பொது அறிவினையும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அவர் பேராசை பிடித்தவர்; ஆட்சியை அமைப்பதிலும் அதிகாரத்தைச் செலுத்துவதிலும் போரினை வெற்றியாக முடிப்பதிலும் நிகரற்றவர் ; அரசியலையும் சமயத்தையும் பிரித்துக் கருதியவர். அந்த வகையில் அதுவரையில் இந்தியாவில் ஒருவரும் எண்ணியிராத அரசியல் கருத்து அது. அவர் காலத்தில் நேர்மை உணர்ச்சியை ஓர் அளவுகோலாகக் கொண்டு நோக்கினால் அவர் உயர்ந்த மதிப்பெண் பெறுவார். கல்விக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை யாயினும் அமீர்குஸ்ரு போன்ற பேரறிஞர்களை அவைக்களத்தே போற்றினார். அலாவுதீன், ஷெர்ஷா, அக்பர் என்போர் முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் தலைசிறந்து விளங்கிய ஆட்சியாளர்கள். அவர்களில் அலாவுதீன் காலத்தாலே யன்றித் துணிவாலும் ஆற்றலாலும் முன்நிற்பவர். இவர் ஆட்சி முறையில் புகுத்திய பல சீர்திருத்தங்கள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை.

மாலிக் நாயீப் மன்னர் இறந்தபிறகு அரண்மனையிலிருந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார். கிஸர் கான், ஷாதிகான் என்பாரைக் குருடாக்கி அலாவுதீனின் மற்ற மக்களை யெல்லாம் சிறைப்பிடித்தார். அலாவுதீனின் ஆறு ஆண்டுச்

குழந்தையான ஷிஹாபுதீன் உமார் என்பவரை அரியணையில் ஏற்றி அவருடைய பாதுகாப்பாளராய்த் தம்மையே நியமித்துக் கொண்டார். அன்றியும், அக் குழந்தையின் தாயை (தேவகிரி இராமச்சந்திரரின் மகள்) மணக்கவும் செய்தார். ஆனால், மாலிக்காபூருக்கும் இறுதிக்காலம் விரைவிலேயே வந்துவிட்டது. அலாவுதீனின் உறவினர் எல்லாரையுமே ஒழித்துவிட எண்ணியிருந்த காபூர் அலாவுதீனின் மூன்றும் மகனை முபாரக்கானில் தொடங்கினார், சில ஆட்களைவிட்டு அவருடைய கண்களை வாங்கி விடும்படி அனுப்பினார். அவர்கள் அவ் வரசகுமாரனை அணுகிய போது அவன் தனது விலை உயர்ந்த மாலை ஒன்றைக் கழற்றி அவர்களிடம் கொடுத்து மன்னனின் மக்களைக் கொல்லுவது முறையன்று என்று எடுத்துக் கூறினான். வந்த ஆட்கள் விலகிப் போயினர். அவர்கள் மாலிக்காபூர் இருந்த இடத்திற்கே வந்து அவரையே கொன்று தீர்த்தனர். இது நடந்தது அலாவுதீன் இறந்து 35 நாட்களில்.

அதன் பிறகு முபாரக் மன்னரானார். அவர் ஆட்சி அமைதியாகவே தொடங்கிற்று. கைதிகளைச் சிறை விடு செய்தார்; படைஞர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வெகுமதி யளித்தார். மதுவிலக்கை அகற்றி மக்களிடையே புகழ் பெற்றார். அலாவுதீன் ஏற்படுத்திய விலைக்கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்தினார். ஆயினும், இவ் வெற்பாட்டால் முன்பு பலனடைந்தவர்கள் இப்போது அவதியுற்றனர். முன்பு துன்புற்றவர்கள் இப்பொழுது பலனெய்தினர். ஆனால், இம் மன்னர் மிக விரைவில் குடி முதலிய தீப்பழக்கங்களில் மூழ்கினார். மன்னன் எப்படியோ அப்படியே தலைநகரத்தில் இருந்த மன்னுயிரும் இருந்தது. நிர்வாக ஊழல்கள் மலிந்தன. முபாரக் தனக்கு உறுதுணையாய் இருக்க ஹஸன் என்னும் ஓர் அநாமதேய அடிமையை அமர்த்திக்கொண்டான். அவனுக்குக் குஸ்ருகான் என்று பெயரிட்டுத் தன்னுடைய அமைச்சனாக்கிக் கொண்டான். ஆல்ப்கானின் ஆட்கள் குஜராத்தில் கலகம் செய்தனர். அவர்களை அடக்க ஐநுல் முல்க்கையும் காஸி மாலிக் துக்ளக் என்பானையும் முபாரக் அனுப்பினார். அவர்கள் இட்ட கட்டளையை எளிதில் செய்து முடித்தனர். முபாரக்கின் மாமனான ஸபர்கான் என்பானைக் குஜராத்தின் கவர்னராக நியமித்தனர். 1318-ல் தேவகிரியைக் கைப்பற்ற முபாரக் தக்காணத்திற்குத் தாமே புறப்பட்டார். முஸ்லிம் படையின் வருகையை உணர்ந்த ஹரபால தேவர் காட்டில் ஓடி ஒளித்தார். உடன்வந்த குஸ்ருவின் ஆட்கள் அவரைப் பிடித்து வந்து தோலை உரித்துவிட்டனர். குஸ்ருகான் அங்கிருந்து தெலுங்கானாவிற்குப் படைகொண்டு சென்றார். டெல்லிக்குத் திரும்பிய முபாரக் பல புதிய தீய பழக்கங்களை மேற்கொண்டு பழைய தீய

பழக்கங்களை மிகுதியாகக் கையாண்டார். அவரைச் சுற்றியிருந்தோர் அனைவரும் கயவர். அவர் பெண் உடை தரித்து அரியணையில் அமர்ந்து அரசோச்சினார். இந்த நிலையில் நாட்டில் நாற்புறமும் கலகம் தலைதூக்கிற்று. இதற்கிடையே வாரங்கலை அடைந்த குஸ்ருகான் அந் நகரைக் கைப்பற்றிப் பிரதாபருத்திரரிடம் இருந்து ஏராளமான செல்வத்தைக் கைப்பற்றினார். அங்கிருந்து மதுரைவரையில் சென்ற குஸ்ருகானை முபாரக் திரும்ப வரவழைத்தார். வந்தவர் அரண்மனையில் முழு அதிகாரமும் செலுத்தத் தொடங்கினார். அவரை நம்பிய முபாரக் அரண்மனையையே அவரிடம் ஒப்படைத்தார். இதற்குச் சின்னாட்களுக்குப் பிறகு குஸ்ரு முபாரக்கைக் கொன்றுவிட்டார் (1320, ஏப்ரல்). முபாரக் தம் தந்தையாரின் தீய குணங்களைப் பன்முறை மிகுதியாகப் பெற்றவர். நல்ல குணங்களில் ஒன்றுகூடப் பெறவில்லை. பால்பன், அலாவுதீன் போன்றவர்களும் செய்யத் துணியாத ஓரே ஒரு பெரிய காரியம் அவர் செய்தது 'காலிபுனுடைய அதிகாரத்திற்கு டெல்லி சுல்தானியம் அடங்காதது' என்று அவர் அறிவித்துக் கொண்டமையே. முபாரக் கொலையுண்ட பிறகு குஸ்ரு மன்னரானார். அதோடு கில்ஜி வம்சம் முடிவடைந்தது. குஸ்ரு குஜராத்திலிருந்து வந்த ஓர் இழிகுலத்தோன் (இதைச் சில ஆசிரியர்கள் ஒப்புக்கொள்வதில்லை). அவர் சுல்தான் ஆன பிறகு முபாரக் ஷாவின் மனைவியரில் ஒருத்தியை மணந்து கொண்டார். அவர் பல பிரபுக்களை ஆதரித்துப் பொது மக்களிடையே ஆதரவு தேடிக்கொண்டார். ஆயினும், குஸ்ரு கொலை செய்து பட்டத்திற்கு வந்தவன்; இழிசெயல்களே உருவானவன். காஸி துக்ளகின் தலைமையில் இம் மன்னனுக்கு எதிர்ப்பு உருவாயிற்று. அவர் குஸ்ருவை எதிர்த்துக் கலகம் செய்தார். அவருக்குப் பலர் ஆதரவு அளித்தனர். அவரை அடக்க குஸ்ரு 40,000 பேர் அடங்கிய ஒரு படையை அனுப்பினான். அப் படையைக் காஸிமாலிக் தோற்கடித்து டெல்லிக்கே வந்தார். அதுவரையில் அவனுக்கு ஆதரவு அளித்த ஐநுல் முல்க்கும் அவனைக் கைவிட்டு மாளவத்திற்குச் சென்றுவிட்டார். காஸிமாலிக்கிற்கும் குஸ்ருகானுக்கும் இடையே 1320 செப்டம்பரில் டெல்லிக்கு அருகே போர் நிகழ்ந்தது. அப் போரில் குஸ்ரு தோற்றுப்போய்ப் போர்க்களத்தைவிட்டு நீங்கி ஓடிப்போனான். ஆயினும், அவனைக் கைப்பற்றிக் கொணர்ந்த சேவகர்கள் அவன் தலையை வாங்கிவிட்டனர். வெற்றிகண்ட காஸிமாலிக் தம் நண்பர்கள், மற்ற பிரபுக்கள் முதலியோரின் உடன்பாட்டை மேற்கொண்டு கியாஸுத்தீன் துக்ளக் என்னும் பெயரோடு மன்னரானார்.

இ. துக்ளக்குகள் (1320—1412)

1. கியாஸுதீன் துக்ளக்

காஸி மாலிக் என்று பெயர்கொண்ட படைத்தலைவர் டெல்லி சுல்தானியத்தின் அதிகாரத்தைக் கி.பி. 1320-ல் கைப்பற்றினார். அவரைத் துக்ளக் என்றும் கூறுவர். கியாஸுதீன் துக்ளக் என்பது அவருக்கு இன்னொரு பெயர். துக்ளக் என்பது கியாஸுதீனின் சொந்தப் பெயரா? அவருடைய குலத்தின் பெயரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவருக்கு அடுத்தாற்போல் பட்டத்திற்கு வந்த மகம்மது தம்மை மகம்மது-பின்-துக்ளக் (துக்ளக்கின் மகனான மகம்மது) என்றே கூறிக்கொண்டார். மகம்மது துக்ளக் என்பது அவருக்கு எப்போதும் பெயரில்லை. ஆகவே, 'துக்ளக்' என்பது ஒருவருடைய பெயர்; அது ஒரு குலப் பெயர் அன்று' என்று கூறுவர். ஆயினும், சில சமயங்களில் ஓர் அரசவம்சத்தை நிறுவியவருடைய பெயர் அந்த வம்சத்திற்கே கொடுக்கப்படுதலும் உண்டு. ஆதலால், துக்ளக் என்பதை கியாஸுதீன் துக்ளக் நிறுவிய அரசவம்சத்தின் பெயராகவும் கொள்ளலாம். மகம்மதின் பெயர் மகம்மது-பின்-துக்ளக் என்றிருப்பினும் பிரூஸ் துக்ளக்கை பிரூஸ்-பின்-துக்ளக் என்று கூறுவதில்லை. ஆதலால், அவர் காலத்தில் துக்ளக் என்பது வம்சப் பெயராகவே ஆகிவிட்டது என்பதில் ஐயமில்லை.

இபன் பதூதாவின் கூற்றுப்படி துக்ளக்குகள் கொரானா துருக்கக் கூடத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், இக் குழாத்தைப் பற்றி அவர்கள் துருக்கர்களோ மங்கோலியர்களோ என்பதைப் பற்றிக்கூட நமக்குத் தெரியாது. ஆசியாவில் பெருவாரியாகப் பிரயாணம் செய்த இத்தாலியரான மார்க்கோ போலோ கொரானியர்களை ஒரு கலப்புச் சாதியர் என்பர். சர். உல்ஸ்லி ஹேக் என்னும் ஆசிரியர் துக்ளக் என்னும் பெயர் துருக்கரில் ஒரு வகையினரான தக்லீக் என்னும் கூட்டத்தினரைச் சேர்ந்தவர்களாகக் கருதுவர். காஸி மாலிக் (காஸி பேக் துக்ளக்) குராஸானிலிருந்து அலாவுதீன் கில்ஜி காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். இஃது ஒரு கூற்று. பிரிஷ்டா என்னும் ஆசிரியர் கூறுகிறார்: 'சுல்தான் பால்பனின் துருக்க அடிமையான மாலிக் துக்ளக் என்பவர் ஒரு ஜாட்டியப் பெண்ணை மணந்துகொண்டார். அவர்களுடைய மகன்தான் காஸி மாலிக்'.

கியாஸுதீன் துக்ளக் தீபால்பூரில் கவர்னராக இருந்தபோது தம் சகோதரர் ஒருவருக்கு ஒரு இந்துப்பிரபுவின் மகளை மணம் புரிவித்தார். அவர்களுடைய மகனே பிற்காலத்தில் பிரூஸ்

துக்ளக் என்னும் பெயரோடு இந்துஸ்தானத்தை ஆண்டவர். காஸி மாலிக் அலாவுதீன் கில்ஜி காலத்தில் கடுமையான மங்கோலியப் படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்தித் துரத்தி அடிக்க உதவினர். பிறகு அவர் தீபால்பூரில் கவர்னரானர். அந்த நிலையில்தான் அவர் குஸ்ருவிற்குப்பிறகு டெல்லி சுல்தான் ஆனர்.

துக்ளக் திறமையுள்ள மன்னர்தாம். அவர் மன்னரானவுடனே இந்துஸ்தானத்தில் அமைதியை நிலைநாட்ட முயன்றார். வாரங்கலில் ஆண்ட காகதீய மன்னரான பிரதாபருத்திரர் டெல்லிக் குழப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு டெல்லி சுல்தானுக்குக் கப்பமும் கட்டாமல் தமது அரசைப் பெருக்குவதிலும் முனைந்திருந்தார். அவர் டெல்லி சுல்தானியத்தின் வலுவைக் குறைத்துக் கணக்கிட்டிருந்தார். தென்னகத்தில் இருந்த எல்லா இந்து அரசர்களையும் ஒன்று சேர்த்துத் துருக்கர்களை எதிர்க்க ஒரு முயற்சியை மேற்கொள்ளாமல், மற்ற இந்து மன்னர்களோடு போர்புரிந்து அவர்களுடைய வலுவை அழிப்பதில் தமது திறமையைக் காட்டினர். இத்தகைய செயற்பாடுகளாலேதான் இந்து இராச்சியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக முஸ்லிம்களுக்கு அடிப்படும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறுதான் இந்து வரலாற்று ஆசிரியர்கள் பெரும்பாலோர் கூறுகின்றனர். இவ்வாறு கூறுதல் தற்காலத்து அரசியற் கருத்துகளை மனத்தில்கொண்டு கூறுவதாகும். அக் காலத்தில் முஸ்லிம் மன்னர்களை எவ்வளவு பகைவர்களாக மதித்தார்களோ அவ்வளவு அண்மையில் இருந்த இந்து மன்னர்களையும் பகைவர்களாகவே கருதினர். சுற்றியிருந்த அரசு முஸ்லிம் அரசாயினும் இந்து அரசாயினும், அது தமது பகைமைக்கும் தாக்குதலுக்கும் உரியது என்று அவர்கள் கருதினர். இந் நிலையில் இந்து அரசர்களெல்லாம் ஒன்று சேர்ந்து வெளி நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த முஸ்லிம் சுல்தானிய அரசை ஏன் தாக்கவில்லை என்பதுதான் வியப்பிற்கு உரியது. இன்றைக்கு வரலாறு எழுதும் ஆசிரியர்கள், 'இந்தியா ஓர் அரசியல் கூறு; அதற்குப் புறம்பிருந்து அதனைத் தாக்கும் பிற அரசுகள் இந்தியா முழுமைக்கும் பகை' என்னும் உணர்வோடு எழுதுகின்றனர். இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பூகோளரீதியில் ஒன்றான இந்தியா அரசியல் நிர்வாகரீதியிலும் ஒன்றாகிவிட்ட பிறகு எழுந்த உணர்ச்சிவயப்பட்ட எண்ணம். இவ் வுணர்ச்சி அக் கால இந்து மன்னர்களுக்கு இருந்திருக்கமுடியாது. ஹொய்சளர்க்கு யாதவர் பிற நாட்டார். யாதவருக்குக் காகதீயர் அயல்நாட்டார். ஹொய்சளருக்குப் பாண்டியர் பிறவிப்பகை. இந் நிலையை அறிந்தால் பிரதாபருத்திரர் டெல்லி சுல்தானியத்தை எதிர்க்காமல்

அண்டை அயலில் இருந்த இந்திய அரசர்களை எதிர்த்தமையில் வியப்பொன்றுமிராது. கி.பி. 1321-22-ல் கியாஸுதீன் தம் மகனை ஜுனகான் அல்லது உலுக்கான் என்பார்வசம் ஒரு படையை அனுப்பினர். அவர் தேவகிரி வழியாகச் சென்று வாரங்கலை முற்றுகையிட்டார். பிரதாபருத்திரர் சீரிய முறையில் தற்காப்பு முயன்றார். முற்றுகையாளர் பெருநஷ்ட முற்றும் பிரதாபருத்திரர் சமாதானத்தை நாடவேண்டியிருந்தது; அவர் ஆண்டுதோறும் கப்பம் கட்டுவதாகவும் யானைகளும் செல்வமும் தருவதாகவும் செய்தி விடுத்தார். அவர் வேண்டுகோளை நிராகரித்து உலுக்கான் தொடர்ந்து முற்றுகையை நடத்தினர்.

இதற்கிடையே, முஸ்லிம் துருப்புகளுக்குள் கலகம் தோன்றி உலுக்கானின் நெருங்கிய நண்பனை உபாயித் பரப்பிய பொய்ச்செய்திகள் சிலவற்றை நம்பி சுல்தானியப் படையின் ஒரு பகுதி கலக்கமுற்றுப் பிரிந்துபோயிற்று. இது கண்ட இந்துத் துருப்புகள் முஸ்லிம்களைத் தாக்கவே, உலுக்கானின் எஞ்சிய படையோடு தேவகிரிக்குப் பின்வாங்கினர். சுல்தானியப் படையில் ஏற்பட்ட குழப்பத்திற்குக் காரணம் யாதென்று ஆராயப் புகுந்த வரலாற்றாசிரியர்கள் பலவேறு கருத்துகளைக் கூறுகின்றனர். உலுக்கான் சுல்தானை எதிர்த்துக் கலகமிட்டுத் தாமே அரசைக் கைப்பற்ற நினைத்து சுல்தான் இறந்து போனார் என்றொரு பொய் வதந்தியைப் பரப்பினர் என்று இபன் பதூதா கூறுவார். பரணி என்னும் ஆசிரியர் விஷமத்திற்காக உபாயித் இப்படிச் செய்தார் என்று கூறுவர். இவற்றில் எது உண்மை என்பதை யாமறியோம். டெல்லிக்கு இப் படை திரும்பிய பிறகு சுல்தான் கலகக்காரர்களைத் தண்டித்து உலுக்கானை வாரங்கல்மீது மறுபடியும் படையெடுக்குமாறு 1323-ல் நியமித்தார். இதிலிருந்து சுல்தானுக்கு உலுக்கானிடமிருந்த நம்பிக்கை குறையவில்லை என்று தெரிகின்றது. இரண்டாம் முறை வாரங்கல்மீது படையெடுத்த உலுக்கான் முற்றுகையை வெற்றிகரமாக நடத்திக் கோட்டையைக் கைப்பற்றினர். பிரதாபருத்திரர் சிறைப்படுத்தப்பட்டு யானைகளோடும் செல்வங்களோடும் உற்றாரோடும் உறவினரோடும் டெல்லிக்கு அனுப்பப்பட்டார். வாரங்கலின் பெயர் சுல்தான்பூர் ஆயிற்று. ஆயினும், தெலுங்கு இராச்சியம் முழுவதும் கைப்பற்றப் பட்டது என்று பரணி கூறுவது மிகைக் கூற்றாகும். பிரதாபருத்திரரை டெல்லி சுல்தான் விடுதலை செய்து மறுபடியும் வாரங்கலுக்கு அனுப்பிக் கப்பம் கட்டும் சிற்றரசராக அங்கிருந்து ஆளும்படி நியமித்தார் என்று சிலர் கருதுவது உண்மையாய் இருக்கலாம்.

இதற்கிடையே கி.பி. 1323-ல் டெல்லியிலிருந்து அனுப்பப் பட்ட படை மதுரையைப் பாண்டியரிடமிருந்து வென்றது என்று கூறப்படுகின்றது. இஃது உண்மையாயின் வாரங்கலை வென்ற உலுக்கான் மதுரைவரையில் தமது வெற்றியைப் பரப்பினர் என்று கருதவேண்டும். கி.பி. 1324-ல் இராஜமகேந்திரபுரத்தில் ஒரு மசூதி கட்டப்பட்டது. அங்கிருந்து உலுக்கானின் படைகள் ஒரிசாவிற்குப் போய் அங்கும் அந் நாட்டு மன்னரான இரண்டாம் பானுதேவரைத் தோற்கடித்தார். ஆனல், நான்காம் நரசிம் மரின் பூரிச்செப்பேடு இரண்டாம் பானுதேவர் கியாஸுதீன் துக்ளகின்மீது வெற்றிகொண்டார் என்று கூறும். இதை நோக்கு மிடத்து இரு தரத்தார்க்கும் வெற்றியும் தோல்வியும் கிட்டியிருக் கும் என்று தோன்றுகிறது. இத் திசை வெற்றிக்குப் பிறகு டெல் லிக்குத் திரும்பிய உலுக்கானை மன்னர் மகிழ்ச்சியோடு வரவேற் றுப் பெருமைப்படுத்தினர். அப்பொழுது வடமேற்கு எல்லையில் மங்கோலியப் படையெடுப்பொன்று நிகழ்ந்தது. அதை எதிர்த் துத் தடுக்க அனுப்பபெற்ற சுல்தானியப்படை இரு வெற்றிகளைக் கண்டு மீண்டது.

இப்பொழுது சுல்தான் கீழைக்கோடியிலிருந்த வங்காள மாகா ணத்தை வென்று கைப்பற்றும் எண்ணத்தோடு படைகொண்டு சென்றார். 1324-ல் அவர் எண்ணம் கைகூடிற்று. கியாஸு தீன் பகதூர் என்னும் வங்காள சுல்தானைத் தோற்கடித்துச் சிறைபிடித்து டெல்லிக்குக் கொணர்ந்தார். வங்காளம் சுல்தானி யத்தில் சேர்க்கப்பட்டது. அவருடைய தத்து மகனை பஹ்ராம் கான் அங்குக் கவர்னராக நியமிக்கப்பட்டார். வரும்வழியில் அவர் பீகாரையும் வென்றார். பீகாரிலிருந்து டெல்லிக்குத் திரும்பி வந்தபோது சுல்தானுடைய மகனை உலுக்கானின் நடத்தையைப் பற்றி வருந்தத்தக்க செய்திகளை மன்னர் கேள்வியுற்றார். ஆத லால், டெல்லிக்கு விரைந்தார். பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இபன் பதூதா வாயிலாக நாம் அறியலாம். 'தலைநகருக்கு அருகே வந்த சுல்தான் தம் மகனை உலுக்கானுக்குப் புதியதொரு அரண் மனையைக் கட்டுமாறு கட்டளையிட்டார். அவ் வரண்மனை பெரி தும் மரத்தால் இயன்றது. க்வாஜா ஜஹான் என்பானின் மேற் பார்வையில் முற்றிலும் மரத்தாலியன்ற அரண்மனை யொன்று கட்டப்பட்டது. அதைத் தாங்கிய தூண்களும் மரத்தாலேயே ஆக்கப்பட்டவை; அத் தூண்கள் நிறுத்தப்பட்டிருந்த விதம் அவற்றை இணைத்த படிகளை வலுவாக யாரேனும் அசைத்தால் கட்டிடம் முழுவதும் இடிந்து விழுமாறு அமைந்தது. முன்பே ஏற்பாடு செய்து வைத்திருந்தபடி உலுக்கான் தன் தந்தையாகிய மன்னரை அரண்மனைக்குள் வந்து தொழும்படி கேட்டுக்கொண்

டார். மன்னரும் அவரது சிறு மகன் மம்மூதும் தொழுகைக்காக அரண்மனையுட் புகுந்தபோது உலுக்கான் உத்தரவுப்படி சில யானைகள் அரண்மனைப் படிமீது ஏறி அப்புறம் போயின. படிகள் அசைந்தமையால் தூண்கள் விழுந்தன. அவை வீழ்ந்தமையால் அரண்மனை தகர்ந்தது. மன்னர் அவரது சிறிய மகனை மம்மூதை அடிபடாமல் காக்கும்பொருட்டு அணைத்தபடியே வீழ் பொருள்களில் புதைந்திருந்தார். சிதைவுகளை நீக்கிச் சிக்குண்டாரை விடுவித்தபோது மன்னர் இறந்திருந்தார். துக்ளகாபாத்தில் கட்டியிருந்த மசூதியில் மன்னர் அடக்கம் செய்யப்பட்டார். இது இபன் பதூதாவின் கூற்று. இக் கூற்றின்படி அவர் உலுக்கான் தம் தந்தையைத் திட்டமிட்டுக் கொன்றார் என்று குற்றம் சாட்டுகிறார். ஆனால், பரணி, 'உலுக்கான் சதி செய்யவில்லை போலும்; அரண்மனை இடிந்து விழுந்தது தற்செயல் நிகழ்ச்சி' யென்றும் கூறுவர், பிற்காலத்து எழுந்த பதாவுனி, அபுல் பாசல் முதலிய ஆசிரியர்கள் இபன் பதூதாவையும், பெரிஷ்டா பரணியையும் பின்பற்றினர். ஆனால், பெரிஷ்டா தமது வழக்கம்போல 'உண்மை யாதென்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்' என்று கூறுவது கருதத்தக்கது. எல்லா விவரங்களையும் நோக்குமிடத்து மன்னர் இறந்ததற்கு அவர் மகனே காரணம் என்று தோன்றுகிறது.

கியாஸுதீன் கி.பி. 1325-ல் இறந்தார். அவர் ஆட்சி புரிந்த ஐந்தாண்டுகளில் அவராட்சிக்கு முற்காலத்தில் நடந்த சீர்கேடுகளைச் சீர்படுத்தினர். ஷேக் நிஜாமுதீன் ஔலியா என்னும் முஸ்லிம் பெரியார் தமக்கு அரசாங்கம் கொடுத்திருந்த கடன் தொகையைத் தர்மத்தில் செலவிட்டபடியால் கியாஸுதீன் விரும்பியபடி அரசுக்குத் திருப்பித் தரமுடியவில்லை. இக் காரணத்தால் ஷேக் நிஜாமுதீனுக்கும் மன்னருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது. ஆனால், உலுக்கான் அந்த ஷேக்கிடம் மிகுந்த மதிப்பு வைத்துப் போற்றினர். பொதுவாக சுல்தான் மக்களுடைய நன்மையைக் கருதி ஆண்டார். நியாயமும், நிதானமும் அவர் ஆட்சியை அலங்கரித்தன. அவர் துக்ளகாபாத் என்னும் நகரத்தைக் கட்டி அதைத் தமது தலைநகராக்கிக்கொண்டார். அவர் குடிப்பதில்லை. அக் காலத்தில் பெரும்பாலோர் மேற்கொண்ட பல தீய பழக்கங்கள் அவரால் அறியப்படாதவை. சுல்தானுவதற்கு முன்பு ஆட்டங்கண்டிருந்த ஆட்சியை நிலைப்படுத்திய பெருமை அவருக்கு உண்டு. ஆனால், பக்தியுள்ள முஸ்லிம் என்னும் முறையில் இந்துக்களை வருத்தினர். அவர்களை இரண்டாந்தரக் குடிமக்கள் என்னும் நிலைக்கு இறக்கினர். பொதுவாகச் சுல்தானியத்திலும் பிற முஸ்லிம் ஆட்சியிலும் முஸ்லிம்களை

உயர்த்தியும் ஏனையோரைத் தாழ்த்தியும் நடத்தும் மரபு தெளிவாகிக்கொண்டே வந்தது.

2. மகம்மது-பின்-துக்ளக்

மகம்மது-பின்-துக்ளக் என்னும் பட்டப் பெயரோடு உலுக்கான் (அவரை ஜானு என்றும் அழைப்பர்) 1325-ல் மன்னரானுர். அவரை மகம்மது துக்ளக், மகமது-பின்-துக்ளக், மகம்மது ஷா என்றெல்லாம் அழைப்பர். அவர் கொலையுண்ட தம் தந்தையைத் தொடர்ந்து பட்டம் எய்தியதைச் சுல்தானியத்தில் ஒருவரும் எதிர்க்கவில்லை. அவருடைய ஆட்சிக் காலம் 1325-லிருந்து 1351 வரை இருபத்தாறு ஆண்டுகள். இந்தியாவில் நடந்த அரசாட்சிகள் யாவற்றுள்ளும் ஒருவருக்கும் புரியாத பெரிய புதிர் அவரது ஆட்சியே. அவர் ஆட்சி தொடங்கியவுடனே நிகழ்ந்ததொரு கலகம் பகாவுதீன் குர்ஷாஸ்ப் என்பவரால் செய்யப்பட்டது. குர்ஷாஸ்ப் மகம்மதுவின் மருமகனுவார். அவர் தக்காணத்தில் உள்ள குல்பர்கா அருகே ஒரு ஜமீந்தாராக இருந்தார். அவர் மிகுந்த செல்வத்தைச் சேர்த்திருந்தார். அதனுல், அவர் சுல்தானையே எதிர்த்தார். சுல்தானியப் படை அவரைக் கம்பிலிக்குத் துரத்திற்று. கம்பிலி மன்னரும் முன்னெரு காலத்தில் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்து பிறகு சுதந்தர மெய்தியவர். இவரிடம் குர்ஷாஸ்ப் தஞ்சம் புகுந்தார். குர்ஷாஸ்பிற்கும் கம்பிலி மன்னருக்கும் முன்பே தொடர்பு இருந்ததென்றும் அவர்கள் இருவரும் சுல்தானை எதிர்க்கத் திட்டமிட்டனர் என்றும் பிரிஷ்டா கூறுவர். ஆனுல், சுல்தானைப் பகைத்துக்கொண்ட ஒருவரைத் தஞ்சம் புகவிடுவது எவ்வளவு அறிவின்மை என்பதை அவர் உணரவில்லை. எதிர்பார்த்தபடி சுல்தான் மாபெரும் படையொன்றை அனுப்பிவைத்தார். கம்பிலி தேவர் அதை எதிர்க்கமாட்டாமல் போரிட்டு மடிந்தார். அவருடைய படைகள் அவரைப் பின்பற்றின. கோட்டையில் இருந்த மகளிர் முன்பே எரிமூழ்கினர். எஞ்சியவர்களில் பலர் டெல்லிக்கு அனுப்பப்பட்டு முஸ்லிம்களாக்கப்பட்டனர். அவர்களில் இருவர் ஹரிஹரர், புக்கர் என்பார். அவர்களே சில ஆண்டுகள் கழித்து விஜயநகர இராச்சியத்தை நிறுவ இருந்தனர். கம்பிலிதேவர் தாம் இறப்பதற்குமுன்பு குர்ஷாஸ்பையும் அவர்தம் குடும்பத்தினரையும் மூன்றும் வீரவல்லாளர் ஆண்டுவந்த ஹொய்சள இராச்சியத்திற்கு அனுப்பிவைத்தார். இதையறிந்த சுல்தானியப் படைகள் துவாரசமுத்திரத்திற்கு விரைந்தன. கம்பிலிதேவருடைய கதியை அறிந்திருந்த வீரவல்லாளர் குர்ஷாஸ்பை முஸ்லிம் படைத்தலைவரிடம் ஒப்படைத்துவிட்டார்.

கி.பி. 1327-ல் துவாரசமுத்திரம் முஸ்லிம்களால் ஏறத்தாழ அழிக்கப்பட்டது என்னும் செய்தியைக் கேள்விப்படுகிறோம். இது உண்மையாயின் வல்லாளர் ஏதோ சிறிது போரிட்டுப் பார்த்தார் என்பது தெரிகின்றது. குர்ஷாஸ்பின் கலகத்தைக் காரணமாகக் கொண்டு தென்னாடு முழுவதும் துக்ளக் தமது ஆட்சியைப் பரப்பினார். வாரங்கல், கம்பிலி, துவாரசமுத்திரம், மதுரை ஆகிய தலைநகரங்களெல்லாம் அவருக்குக் கப்பம் கட்டும் நிலையி லிருந்தன. ஆதலால், அவர் காலத்தில் இந்தியா முழுவதும் அவர் ஆட்சியில் அடங்கி இருந்தது. குர்ஷாஸ்பை மகம்மது எதிரில் கொண்டு நிறுத்தியபோது அவர் கலகக்காரருடைய தோலை உரித்துவிடுமாறு முதலில் உத்தரவிட்டார். ஆயினும், அதோடு திருப்தி அடையாமல் குர்ஷாஸ்பின் தசையை அரிசியோடு கலந்து வேகவைத்து அவர் மனைவி, மக்களுக்குச் சாப்பிடும்படி அனுப்பினார். அவருடைய தோல் வைக்கோலால் நிரப்பப்பட்டு இராச்சியத்தின் முக்கியமான நகரங்களிளெல்லாம் காட்சிப் பொருளாகக் காட்டப்பட்டது. மகம்மதுவின் பேய்த்தனத்திற்கு இது ஒரு முன்மாதிரியாக அமைந்தது.

1325-27-ல் கங்கை யமுனை ஆற்றிடைப் பிரதேசத்தில் வரியை உயர்த்தினார். இதன் விளைவுகளைப் பரணியே கூறக் கேட்போம். 'ஆற்றிடைப் பிரதேசத்தில் வரி 20 மடங்கு அதிகப்படுத்தப்பட்டது. வரி வசூலிக்கும் அதிகாரிகள் ஈவிரக்க மின்றி வசூலித்ததால் மக்கள் கதிகெட்டு நின்றனர். நிலம் பாழ டைந்தது. சாகுபடி செய்வாரில்லை. கலகம் ஒன்றுதான் தழைத் தது. டெல்லியைச் சூழ்ந்த பிரதேசத்திலேயே பஞ்சம் வலுத்தது. போதாக்குறைக்கு மழையும் பெய்யவில்லை. பல ஆண்டுகளுக்குப் பஞ்சம் நீடித்தது. ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தனர். தப்பி யோட முயன்றவர்களை வன விலங்குகளை வேட்டையாடிக் கொல் வதுபோலத் தாமே வேட்டையாடிக் கொன்றார்'. இந்த நிகழ்ச்சி களைப்பற்றிப் பிரிஷ்டாவும் சிறிது கூறுகின்றார். ஆனால், அவர் 'வரி அதிகப்படுத்தப்பட்டது மூன்று அல்லது நான்கு மடங்கே' என்று கூறுகின்றார். சிலர், 'பரணி எழுதி இருப்பது மிகைக் கூற்று; மக்களுடைய இன்னல்களெல்லாம் மன்னரால் விளைந் தவையல்ல; மழையின்மையால் விளைந்தவை' யென்று கூறுவர்.

சுல்தான் தமது ஆட்சியில் நிறைவேற்றிய அல்லது நிறை வேற்ற விரும்பிய இரண்டு முக்கியமான சீர்திருத்தங்களைப்பற்றிச் சற்று விரிவாகவே நாம் ஆராயவேண்டும். ஒன்று, தலைநகரத்தை டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு அதாவது தேவகிரிக்கு 1326-27-ல் மாற்றியமை. இரண்டாவது, நாட்டில் வழங்கிய

செலாவணிக்காசை மதிப்புக் குறைந்த நாணயங்களில் வெளியிட்டமை (1329-30).

தலைநகரை மாற்றிய செய்தி பரணி, இபன் பதூதா, இஸாமி என்பாரால் நன்கு எடுத்து உரைக்கப்பட்டிருக்கிறது. இபன் பதூதா கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்: 'டெல்லியில் இருந்த மக்கள் அனைவரையும் தலைநகரைவிட்டு வெளியேறச் சொன்னமையால் சுல்தானுக்கு விரோதமாக மக்களுடைய எண்ணங்கள் திரும்பின. அந்தச் செய்கையை அவர் மேற்கொண்டதற்குக் காரணம் கீழ்க்கண்டவாறு: டெல்லியிலிருந்த நகரமக்கள் சுல்தானுடைய அருவருக்கத்தக்க செயல்களைக் கண்டு பொறுமல் அவரை வைதும் அவர்தம் செயல்களை இடித்துக்காட்டியும் கடிதங்கள் எழுதி அரண்மனையில் அவை கூடும் கூடத்தில் இராப்பொழுதில் ஒருவரும் காணாத நிலையில் எறிந்துவிடுவது வழக்கம். இவற்றையெல்லாம் எடுத்துப் படித்த சுல்தான் அவற்றை உறையில் போட்டு முத்திரையிட்டு 'மன்னர் ஆணைப்படி அரசரைத் தவிர வேறு ஒருவரும் இந்தக் கடிதங்களைப் படிக்கக்கூடாது' என்று எழுதிவிட்டார். டெல்லி மக்கள்மீது அவருக்கு வந்த ஆத்திரத்தால் நகரைச் சுடுகாடாக ஆக்கிவிட நினைத்தார். டெல்லியிலிருந்த வீடுகளை யெல்லாம் அவரே விலைக்கு வாங்கி அவற்றில் குடியிருந்தவர்களை யெல்லாம் தலைநகரைவிட்டு வெளியேறச் சொன்னார். அவர்கள் மறுத்துவிட்டனர். அதன்மேல் மன்னருடைய ஆணையை முரசறைந்து அறிவித்தார். அதாவது, 'ஆணை பிறப்பித்த மூன்று நாள்களுக்குள் டெல்லியில் ஒருவரும் இருக்கக்கூடாது.' இதைக் கேள்வியுற்ற மக்களில் பெரும்பாலோர் நகரைவிட்டு நீங்கினர். ஆயினும், சிலர் தங்கள் வீடுகளில் ஆங்காங்கு ஒளிந்திருந்தனர். அவர்களையும் கண்டுபிடித்து வெளியேற்றுமாறு உத்தரவிட்டார். அவருடைய அடிமைகள் டெல்லியெல்லாம் சுற்றியலைந்து இரண்டு பேரைக் கண்டுபிடித்தனர். அவர்களில் ஒருவன் குருடன்; மற்றொருவன் முடவன். இருவரையும் அரசன் முன்னிலையில் கொணர்ந்தனர். அவர்களைக் கண்ணுற்ற மன்னர் முடவனை ஒரு யந்திரத்தின் உதவியால் ஆகாயத்தில் தூக்கி யெறிந்து கொல்லுவித்தார். குருடனை டெல்லியிலிருந்து தௌலதாபாத் வரை — 40 நாள் பிரயாணத்திற்குரிய தூரம் — இழுத்துச் செல்லும்படியாக உத்தரவிட்டார். அவன் டெல்லியிலிருந்து கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாமே துண்டு துண்டாகச் சிதறுண்டான். அவன் கால்களில் ஒன்றுமட்டும் தௌலதாபாத்தை யடைந்தது. அதற்குப் பிறகு டெல்லியில் ஒருவருமில்லை. மூட்டை முடிச்சுகளுடன் எல்லாரும் டெல்லியை விட்டு நீங்கினர். இது நடந்த பிறகு அரசன் அரண்மனை உப்பரிகையில் ஏறிச் சுற்றிப்பார்த்து மனித வாழ்க்கைக்கான

அடையாளங்கள் ஒன்றும் காணாமல் அப்பொழுதுதான் அவருள்ளம் பூரித்தாகவும் ஆன்மா சாந்தியடைந்ததாகவும் கூறினர். மற்ற மாகாணத்திலிருந்த மக்களை டெல்லியில் வந்து குடியேறுமாறு வற்புறுத்தினர். அதன் விளைவாக மாகாணங்கள் வெறிச்



சென்றுயின. டெல்லி மிகப் பெரிய நகரமாகையால் சுல்தானுடைய முயற்சிகள் பயனளிக்க வில்லை.

பரணி கூறுகிறர்: 'சுல்தான் மகம்மதுவின் மற்றெரு திட்டம் பேரரசின் தலைநகரைப் பாழாக்கித் தேவகிரியைத் தௌலதாபாத்

என்னும் பெயரில் தலைநகரம் ஆக்கியமையே. தௌலதாபாத் பேரரசின் மையத்திலுள்ளது. டெல்லி, குஜராத், லக்னௌவதி, தெலுங்கு நாடு, மதுரை, துவாரசமுத்திரம், கம்பிலா என்னுமிடங்கள் அங்கிருந்து சமதூரத்தில் உள்ளவை.[1] யாரையும் கேளாமல், பலாபலன்களை யோசியாமல். ஏறத்தாழ 180 ஆண்டுகளாகச் செழித்து வளர்ந்த டெல்லி நகரத்தை - பாக்தாது, கெய்ரோ நகரங்களுக்கு நிகராயிருந்த தலைநகரத்தை - பாழாக்கினார். எல்லாம் அழிந்தன. நகரத்தில் உள்ள கட்டிடங்களில் ஒரு பூனை, நாய்கூட மிச்சமில்லாமல் நகரம் பாழாயிற்று. நகரமாந்தர் உற்றார் உறவினரோடு, மனைவி மக்களோடு, ஆண் பெண் வேலையாட்களோடு நகரைவிட்டு, நீங்க வற்புறுத்தப் பட்டனர். அங்கேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவந்த மக்கள் மனமுடைந்து போயினர். பலர் தேவகிரிபோகும் வழியிலேயே இறந்தனர். பிறர் நாடு கடத்தப்பட்டமையால் வாடினர். டெல்லியிலிருந்து கடத்தப்பட்டவர்களுக்குச் சுல்தான் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தார். ஆயினும், சொந்த ஊரை விட்டு வந்த துயரம் தாங்காமல் எண்ணிறந்தோர் மாய்ந்தனர்'.

மேலே எடுத்துக்காட்டிய இரு கூற்றுகளிலிருந்தும் இபன் பதூதாவும் பரணியும் ஏறத்தாழ ஒரே வரலாற்றைக் கூறுகின்றனர் என்பது தெளிவாகின்றது. இவர்கள் கூற்றைப் போலவே இஸாமியும் கூறுகிறார். ஆனால், சில தற்கால அறிஞர்கள் இவ் வரலாற்றை முற்றிலும் ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றை மிகைக் கூற்று என்று கருதுகின்றனர். 'தலைநகரம் எப்பொழுதும் முற்றிலும் குடிஓடிப் போனதாகப் பிற சான்றுகளில்லை. அன்றியும் தலைநகரம் மாற்றப்பட்டதாகக் கூறும் காலத்திலேயே அந் நகரத்திற்குப் பல சீர்திருத்தங்களை மன்னர் செய்தார் எனக் கேள்விப்படுகிறோம்' என்றெல்லாம் கூறுவர். இவ்வாறு சுல்தானின் செயற்பாடுகளைப் பெரிய அளவிற்குப் போற்றுபவர் மகம்மது ஹுசேன் என்னும் அறிஞர் ஆவர். என். பி. ராய் என்பவரும் 'நகரம் முற்றிலும் பாழடைந்து விடவில்லை.' என்று கூறுவர். இவர்கள் கூற்றில் சிறிதளவு உண்மை யிருக்கலாம். ஆனால், தலைநகரம் வலுக்கட்டாயமாக மாற்றப்பட்டமையும், அதனால் டெல்லி மக்களில் மிகப் பெரும்பாலானோர் மிகத் தொலைவிலிருந்த தேவகிரிக்குச் செல்லவேண்டி வந்தமையும், அதனால் நகரம் பெரும்பாலும் பாழ்பட்டமையும், மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மைகள். சிலர் 'இபன் பதூதா கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்று' என்று கூறுவர். சுல்தான் மகம்மதின்

---

1 தேவகிரியிலிருந்து கம்பிலாவும், மதுரையும் சம தூரத்தில் உள்ளவை என்று கூறுவது தவறு என்பது வெளிப்படை.

நன்கு நிருபிக்கப்பட்ட பிற செயற்பாடுகளை அறிந்தவர்க்கு இபன் பதூதா கூறுவது நிகழலாகாச் செய்தியாகத் தோன்றுது. டாக்டர் ஹுஸேன், 'சுல்தான் பேரரசுக்குத் தேவகிரியை மைய மானதொரு தலைநகராக ஆக்கி டெல்லி, தேவகிரி ஆகிய இரிடங் களிலிருந்தும் ஆட்சி புரிய விரும்பினுர்' என்பர். அன்றியும், முஸ்லிம்கள் பலர் இல்லாத தக்காணத்தில் இஸ்லாமியப் பண் பாட்டை உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த விரும்பிப் பல முஸ்லிம்களை அங்கு ஒரு குடியேற்றமாக அமைத்தார் என்பர். இவையெல்லாம் அக் காலத்திலிருந்து கண்ணுல் கண்டு எழுதி வைத்தவர்களுடைய சான்றுகளைப் புறக்கணித்துவிட்டு சுல்தான் மகம்மது - பின் - துக்ளக்கை வரலாற்றுசிரியர்களுடைய சினத் தினின்றும் தப்புவிப்பதற்குச் சில தற்கால அறிஞர்கள் செய்யும் பயனில் முயற்சியே என்க.

தலைநகர மாற்றத்திற்குப் பிறகு சிம்மகார் (பூனுவிற்கு அரு கில் உள்ளது) என்னும் கோட்டையைப் பிடிக்க முயன்று வெற்றி பெற்றுர் (கி.பி. 1327-28). அதே ஆண்டில் கிஷ்லுகான் என்பனுடைய கலகம் ஒன்று நிகழ்ந்தது. கிஷ்லுகானுக்குப் பஹ் ரம் ஆயிபா என்பதும் பெயர். அவன் கியாஸுதீன் துக்ளக்கின் நெருங்கிய நண்பன்; மகம்மதுவால் நன்கு மதிக்கப்பட்டவன். அவன் உச், மூல்தான், சிந்து முதலிய இடங்களில் ஜமீன்கள் வைத்திருந்தான். அவன் தன்னுடைய குடும்பத்தை டெல்லியி லிருந்து தௌலதாபாத்திற்கு மாற்ற மறுத்தான். இதனுல், அவ னுக்கும் சுல்தானுக்கும் பகைமை ஏற்பட்டது. இருவரும் பொரு தனர். சுல்தான் வென்றுர். ஓடிப்போன கிஷ்லு பிடித்து வரப் பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டான். மற்றவர்களை அச்சுறுத்தும் பொருட்டு அவன் தலை, நகர்ப்புறத்தே தொங்கவிடப்பட்டது.

மகம்மது வங்காளத்தில் சில நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தார். அம் மாகாணத்தை மூன்றுகப் பிரித்து மூன்று தனி அதிகாரிகளை நியமித்தார். அவர்களில் லக்னுவதியில் இருந்த காதர்கான் வங்காள சுல்தானுன நஸுருதீனுக்குச் சமமான அதி காரத்தை வகிக்கும் வகையில் நியமிக்கப்பட்டான். கியாஸு தீன் துக்ளக் காலத்தில் வங்காளத்தில் இருந்து சிறைபிடித்துச் செல்லப்பட்ட கியாஸுதீன் பகதூர் என்பவனை மகம்மது மறுபடி யும் வங்காளத்துக்கு அனுப்பிவைத்தார். கியாஸுதீன் பகதூர் தன்னுடைய அதிகார வரம்பு குறைக்கப்படும் என்று அஞ்சி 1327-28-ல் கலகம் செய்தான். ஆனுல், சுல்தானின் உத்தரவுப் படி பஹ்ராம்கான் கியாஸுதீனைப் பிடித்துக் கொன்று, தோலை உரித்து அதை மகம்மதுபின் துக்ளக்குக்கு அனுப்பிவைத்தான்.

மகம்மது இராஜபுதனத்தில் தலையிட்டமை தோல்வியில் முடிந்தது. ராணு ஹம்மீரா என்பவர் அலாவுதீன் கில்ஜி இறந்த பிறகு டெல்லியில் உண்டான குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சித்தூரைக் கைப்பற்றினர். நாளடைவில் அவர் மேவார் முழுவதையும் தமது அதிகாரத்திற்கு உள்படுத்தி மகா ராணு என்னும் பட்டமும் பூண்டார். அதற்கு முன்பு மேவாரில் ஆண்டு வந்த ஜெய்சா என்பவர் மகம்மது துக்ளக்கின் ஆதரவை நாடி டெல்லிக்கு ஓடிவந்தார். இதன் பிறகு நடந்ததை இராஜ புதன நாட்டுக் கதைகள் கீழ் வருமாறு கூறுகின்றன: 'ஜெய்சாவை ஆதரித்து மகம்மது துக்ளக் பெரும்படையோடு ஹம்மீராவை எதிர்த்துச் சென்றார். ஆனல், அவர் தோற்கடிக்கப்பட்டுச் சிறையும் பிடிக்கப்பட்டார். அவர் அஜ்மீர், ரந்தம்போர் முதலிய இடங்களையும் நூறு யானைகளையும் 50 லட்சம் ரூபாயும் கொடுத்த பிறகு விடுதலை செய்யப்பட்டார்'. இவ்வாறு நடந்திருக்கக் கூடுமாயினும் தற்கால ஆசிரியர்களில் சிலர் இதை வேறு விதமாகக் கூறுகின்றனர். அதாவது, இராஜபுத்திரரிடம் தோல்வியடைந்திருக்குமாயினும் படை நடத்திச் சென்றவர் சுல்தானே அல்லர்; அவரது படைத்தலைவர் ஒருவர் என்பது. ஹம்மீரா வெற்றி அடைந்த செய்தி ஒரு ஜைனக் கோயில் கல்வெட்டால் தெரிகிறது. அலாவுதீன் காலத்திற்குப் பிறகும் மகமது-பின்-துக்ளக்கின் தோல்வியாலும் இராஜபுதனம் தொடர்ந்து பல காலத்திற்குச் சுதந்தரமாக இருந்தது.

கி.பி. 1327-ல் மங்கோலியர்கள் இந்துஸ்தானத்தின்மீது படையெடுத்தனர். அவர்களுடைய தலைவர் தர்மா ஷிரின் என்பவர். அவர் முன்பு பௌத்தராயிருந்து பிறகு முஸ்லிமானவர். அவர் தலைமையில் மங்கோலியர் டெல்லிவரை வந்துவிட்டனர். டெல்லி சுல்தான் மங்கோலியருக்கு அடிபணிந்தார். நிரம்பக் கையூட்டுக் கொடுத்து மங்கோலியரைத் திரும்பிப் போகச் செய்தார். திரும்பும் வழியில் குஜராத்தையும் சிந்துவையும் கொள்ளையடித்து ஏராளமான போர்க்கைதிகளையும் கொண்டு சென்றனர். வேறு சில வரலாறுகள் கூறுமாறு தர்மா ஷிரின் தோல்வி கண்டவராகக் கூறப்படுகிறார். ஆனல், மங்கோலியர் டெல்லிவரை வந்து தொல்லைகொடுத்தனர் என்பதில் ஐயமில்லை. சர். உல்ஸ்லி ஹேக் 'மங்கோலியப் படையெடுப்பு உண்டாயினும் மகம்மது சரணடையவில்லை' என்பார். ஆனல், மகம்மது ஹுசேன் என்பார் முற்றிலும் வேறு கதை கூறுகிறார். அவர் தர்மா ஷிரின் இந்தியாவிற்கு ஓடிவந்துவிட்டவர் என்றும் அவருக்கு ஆதரவும் உதவியும் அளிப்பதற்காகத்தான் சுல்தான் பணம் கொடுத்தார் என்றும் கூறுவர். இக் கூற்று நம்புமாறில்லை.

சுல்தான் மகம்மது செய்த அருஞ்செயல்களில் மற்றும் ஒன்று மதிப்புக் குறைந்த உலோகங்களில் நாணயங்களைச் செலாவணிக்காக அச்சிட்டு வழங்கியமை. இச் செயல் பெரும் செல்வாதாரக் குழப்பத்திலும் பொருளாதார நெருக்கடியிலும் முடிந்தது. மதிப்புக் குறைந்த செலாவணிக் காசு என்பது எந்த உலோகத்தில் நாணயம் அச்சிடப்படுகின்றதோ அந்த அளவு உலோகத்தின் மதிப்பு காசின் மதிப்பைவிடக் குறைவாயிருப்பது. அக் காலத்தில் சீனுவிலும், பாரசீகத்திலும் காகிதக் காசு செலாவணியிருந்தமை கல்விமானுன சுல்தான் அறிந்திருந்தார். அது கண்டு அவர் பித்தளை, செப்புக் காசுகளை வழங்கி அதைப் பெரிய வெள்ளி நாணயத்துக்குச் சமமாகக் கருதவேண்டுமென்று ஆணையிட்டார். இஃது ஓர் அறிவிலி செய்யும் காரியமா அன்றி ஓர் அறிவாளி செய்யும் காரியமா என்பதைப்பற்றிக் கருத்து வேறு பாடு இன்னும் இருந்து வருகிறது. மகம்மது தமது தாராளத்தால் பலருக்கும் நிதியத்தையெல்லாம் வழங்கிவிட்டார். அன்றியும் அவர் உலகம் முழுவதையும் வெல்ல விரும்பியிருந்தார். அதற்கு மிகுதியான நிதி தேவைப்படுமன்றோ ? இவ் விரண்டையும் கருத்தில் கொண்டு அவர் செப்புக் காசுகளை வழங்கினர். இதன் முடிவாக, விளைந்த விளைவுகள் சொல்லும் தரத்த அல்ல. செப்புக் காசுகளோடு கூடவே பொன், வெள்ளிக் காசுகளும் செலா வணியில் இருந்தன. பொன்னும் வெள்ளியும் மறைந்து செம்பே உலாவலாயிற்று. இவ்வாறு மட்டக் காசு வந்து நல்ல காசை விரட்டுவது செல்வாதார விதிகளில் ஒன்று. இதனைத் தற்காலர் 'கிரஷாம் விதி' என்று கூறுவர். அன்றியும், சீனுவைப்போல அரசனுடைய தங்கசாலையிலிருந்து வெளியிடப்பட்ட காசுகளை போலிக் காசுகளினின்றும் வேறு பிரித்துக் காட்டும் அடை யாளங்களை அமைக்கும் முறையை துக்ளக் அறிந்தவர் அல்லர். ஆகவே, அவருடைய குடிமக்கள் அரசின் காசுகளைப் போலவே போலிக் காசுகள் செய்யும் கலையைக் கற்கலாயினர். 'நாட்டில் ஒவ்வொரு வீடும் ஒரு தங்கசாலை ஆயிற்று' என்று பரணி கூறுவார். இவ் விருவகையிலும் சுல்தான் நஷ்டமடைந்தார். வெளிநாட்டு வியாபாரிகள் சுல்தானியக் காசுகளை எடுக்க மறுத்தனர். ஆனல், சுல்தான் செப்புக்காசுகளைக் கொடுத்துப் பொற்காசுகளைக் கேட்டவர்களுக்குத் தவருது வழங்கினர். ஒரு சமயத்தில் கஜானுக்களிலெல்லாம் செப்புக் காசுகள் மலைபோல் குவிந்தன. ஒரு நூற்றுண்டுக் காலத்திற்குப் பிறகுகூட அம் மலைகளில் சில வற்றைக் கண்டதாகச் சிலர் கூறுவர்.

இதற்கிடையே குராஸானை வென்று கைப்பற்றும் எண்ணத் தோடு ஒரு பெரிய படைதிரட்டினர். நாலு லட்சம் காலாட்களை

யெல்லாம் சேர்த்தார். ஓராண்டுக் காலம் அவர்களுக்குத் தாராளமாகச் சம்பளம் கொடுத்தார். அதன் பிறகு அந்தப் படையைக் கலைத்துவிட்டார். இந்த வகையிலும் துக்ளக்கின் கஜானாவிற்கு ஏராள நஷ்டம். குராஸானைக் கைப்பற்றும் கருத்தைக் கைவிட்டபோதிலும் இமாலயப் பிரதேசத்தைத் தம் வசப்படுத்த விரும்பிய சுல்தான் கி.பி. 1337-ல் வடபகுதியில் ஒரு படையெடுப்பை நடத்தினார். சிலர் இதை அவர் சீனாவை வெல்லக் கருதிப் படையெடுத்ததாகக் கூறுவர். ஆயினும், அவரது நோக்கம் யாது என்பதைப்பற்றி உறுதியாகக் கூற இயலாது. சுல்தான் ஒரு லட்சம் குதிரைப்படையையும் ஏராள மான காலாட்களையும் இப் படையெடுப்பில் ஈடுபடுத்தினார். சுல்தானியப் படைகள் இமாலய மலைகளின் அடிவாரத்தில் இருந்த சில இந்துக் குடியேற்றங்களைப் பாழ்படுத்தின. இந்துக் குடிகள் அஞ்சி மலைஉச்சியில் பதுங்கிக் கொண்டனர். கீழிருந்து மலை உச்சிக்குச் செல்ல ஒரே பாதைதான் இருந்தது. சுல்தானின் உத்தரவு பெற்று மலைமீது ஏறிய படைவீரர் வழியில் சில ஊர்களைக் கைப்பற்றினர். இச் செய்தியைக் கேட்ட சுல்தான் தமது படையை அங்கேயே நிற்கும்படி உத்தரவிட்டார். சில நாட்களுக்கெல்லாம் மழைக் காலம் வரவே, அவர்கள் சுல்தானின் உத்தரவு பெற்றுக் கீழே இறங்க முயன்றபோது மலை உச்சியில் இருந்த இந்துக்குடிகள் பெரிய கற்களை உருட்டிவிட்டுப் படையை முற்றிலும் நாசப்படுத்தியதோடு அவர்களுடைய பண்டங்களையும் படைக்கலங்களையும் கவர்ந்துசென்றனர். இப் பெரிய படையில் எஞ்சியவர்கள் மூன்றே பேர் என்பர் இபன் பதூதா. இந்த இராணுவத் தோல்வி எத்துணைப் பெரிய தோல்வி என்பது எளிதில் விளங்கும்.

மதுரையில் கொத்தவாலாக இருந்த சையித் அஸன்ஷா என்பவர் 1334-35ல் தமது ஆட்சியைச் சுதந்தரமாக அறிவித்துக் கொண்டார். மதுரையைக் கைப்பற்றுவதற்காக டெல்லியில் இருந்து அனுப்பப்பட்ட இப் படை மதுரையிலேயே தங்கிற்று. இதைக் கண்ட சுல்தான் தாமே மதுரையை நோக்கிப் புறப்பட் டார். அவர் தௌலதாபாத், வாரங்கல் வழியாகச் சென்றார். தௌலதாபாத்தில் கடுமையான வரிகளை விதித்தமையால் பல குடிமக்கள் தற்கொலை செய்துகொண்டனர். வாரங்கலில் காலரா கண்டது. அது சுல்தானையும் பீடித்தது. டெல்லியிலும், மாளவத் திலும் கலகங்கள் தோன்றின. ஆகையால், சுல்தான் டெல்லிக் குத் திரும்பினார். மதுரையில் அஸன்ஷா மதுரை சுல்தானியத்தை நிறுவினார். தெலுங்கு நாட்டில் முஸ்லிம்களை எதிர்த்து ஒரு சுதந்தர இயக்கமே தொடங்கிற்று. இவ் வியக்கத்தைப்பற்றி

முஸ்லிம் ஆசிரியர்கள் விரிவாக ஒன்றும் சொல்லவில்லை. ஆயினும், அவ் வியக்கத்தின் முடிவாகத்தான் விஜயநகர இராச்சியம் நிறுவப்பட்டது. தென்ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ப்ரோலைய நாயக்கர், ரெட்டி அரசை நிறுவிய ப்ரோலைய வேமர், தெலுங்குச் சோழ அரசரான பக்திராஜர் என்பார் உதவிகொண்டு முஸ்லிம்களை எதிர்த்து, வென்று, துரத்தினர். ப்ரோலையர் கி.பி. 1330-க்கும் 1335-க்கும் இடையே இறந்தார். அவரையடுத்து அவர் சகோதரர் மகனான காப்பைய நாயக்கர் மன்னரானார். இந் நிலையில் ஆந்திரப் பிரதேசமே கையைவிட்டு நழுவுவதாயிற்று என்பதைத் துக்ளக் உணர்ந்தார். உணர்ந்து அப் பிரதேசத்தின் ஆட்சிக்குப் புதிய ஏற்பாடுகளைச் செய்தார். வீரவல்லாளர் உதவி கொண்டு வாரங்கலில் இருந்த முஸ்லிம் கவர்னரை விரட்டினர். அதோடு ஆந்திரப் பிரதேசமும் சுல்தானியத்தை விட்டு நீங்கிற்று. வல்லாளரும் காப்பையரும் தொண்டைமண்டலத்திலிருந்து துருக்கர்களை விரட்டி வென்று மண்கொண்டான்சாம்பவராயர் என்பாரிடம் தொண்டை மண்டலத்தை ஒப்புவித்தார்கள். அதே சமயத்தில் கம்பிலியில் கலகம் தோன்றி முஸ்லிம்களை எதிர்த்து இந்துக்கள் கிளம்பினர். இது, சமய உணர்ச்சியால் எழுந்த எழுச்சியே அன்றித் தேசிய உணர்ச்சியால் எழுந்தது அன்று. இந் நிலையில் துக்ளக், ஹரிஹரர், புக்கர் என்னும் இருவரை டெல்லியில் இருந்து கம்பிலிக்கு அனுப்பினர். இவர்கள் முதலில் இந்துக்களாயிருந்து பிறகு முஸ்லிம்களானவர்கள் என்பதை மேலே கண்டோம். கம்பிலியில் அதிகமாக ஒன்றும் சாதிக்க முடியாதவர்களாய் அந்தப் பிரதேசத்திலேயே சில நாள் திரிந்துகொண்டிருந்தவர்கள் வித்யாரண்யர் என்னும் முனிவரது அறிவுரையையும், ஆசியையும் பெற்றுக்கொண்டு துங்கபத்திரை ஆற்றின் வடகரையில் உள்ள ஆனகுண்டியை நிலைத்துக்கொண்டனர். ஹரிஹரர், புக்கர் இஸ்லாமைத் துறந்து மறுபடியும் இந்துக்களாயினர். 1336-ல் விஜயநகரம் நிறுவப்பட்டது. 1328-ல் இந்தியா முழுவதையும் கட்டியாண்ட மகம்மது துக்ளக் பத்தாண்டுக்குள்ளாகத் துங்கபத்திரைக்குத் தென்பாலுள்ள இந்தியா முழுவதும், தக்காணத்தில் தெலுங்கானுப் பகுதியும் அவர் இராச்சியத்திலிருந்து விலகின. எங்குப் பார்த்தாலும் கலகம். வங்காளத்திலிருந்து குஜராத்வரை கட்டுக்கடங்காத நிலையிலிருந்தது. யமுனை-கங்கை ஆற்றிடைப் பிரதேசத்தில் பொதுமக்களின் கலகம் தோன்றிற்று. குடிமக்களின் துன்பம் எல்லை கடந்தது. ஒரு வரலாற்றாசிரியர் அங்கு நிலவிய நிலைமையை, 'மனிதனை மனிதன் விழுங்கினன்' என்று சுருக்கமாகச் சொன்னர். இப்பொழுது மகம்மது புதியதொரு உண்மையை உணர்ந்தார். அதாவது இந்துக்களேயன்றி முஸ்லிம்களும் தம்மை வெறுத்தார்கள்

என்பது. கடைசிக் காலத்தில் சுல்தான் நிர்வாக முறைகளைச் சீர் திருத்தி, வரிச் சுமையைக் குறைத்து, நீதி நிர்வாகத்தைச் செம் மைப்படுத்தி மக்களுக்கு நன்மை புரிய முயன்றார். இது மிக நல்ல கருத்தென்பதில் ஐயமில்லை; ஆனால், இதை அவர் நடை முறைப்படுத்திய விதம் மகம்மது-பின்-துக்ளக்கிற்கே உரியதாகும். பழைய நீதிபதிகளை யெல்லாம் நீக்கிவிட்டு முற்போக்கு நோக்க முள்ள இளைய அதிகாரிகள் பலரை நியமித்தார். பரணி இவர் களைத் தான்தோன்றிகள் என்பர். 'நாவிதர்கள், மடையர்கள் (சமையற்காரர்கள்), தோட்டக்காரர்கள், நெசவாளிகள், குடி காரர்கள், போக்கிலிகள் இவர்கள்தாம் புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகள். தௌலதாபாத்தில் கவர்னராயிருந்த குட்லுக்கானை நீக்கியதும் மாளவத்தில் அஸீஸ் ஹிமார் என்பவரைக் கவர்னராக் கியதும் அவர் செய்த தவறுகளில் ஒரு சில. அஸீஸ் ஒரு கயவன். தாரா நகரத்தில் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறிய அமீர் களை நம்பக்கூடாது என்று சுல்தான் சொல்லியிருந்ததால் அஸீஸ் எண்பது. அமீர்களை அவர்கள்மீது ஒரு குற்றமும் சாட்டாமல் கொலைசெய்வித்தான்.

1345-ல் குஜராத்திலிருந்த படைகள் கலகமிட்டன. அவர் களை அடக்கச்சென்ற சுல்தான் கடும்போருக்குப்பின் அவர்களில் பலரைக் கொன்றார். சுல்தான் பிறகு பெரும்படையுடன் தௌலதாபாத்திற்குச் சென்று அங்கிருந்த கலகக்காரர்களைத் தோற்கடித்தார். இஃது இங்ஙனமாகக் குஜராத்தில் பெரியதொரு கலகம் தோன்றியிருப்பதைக் கேள்வியுற்ற மன்னர் அக் கலகத்தை அடக்கத் தக்கணத்தை விட்டுக் குஜராத்திற்குப் போனார். அவர் போனது தௌலதாபாத்தில் பாமினி அரசை நிறுவுவதற்கு முதல் காரணமாயிருந்தது. குஜராத்துக் கலகக்காரரான தகி என்பவர் குஜராத்துக் கவர்னரையும் உதவிக் கவர்னரையும் கொன்று பொதுமக்கள் ஆதரவு பெற்று சுல்தானோடு நேரடிச் சண்டைக்குத் தயாரானார். குஜராத்தில் ஒரு வகையான அமைதியை மிகவும் முயன்று நிலைநாட்டிய சுல்தான் தகியைத் துரத்திக்கொண்டு சிந்துநதியைக் கடக்க ஆயத்தம் செய்தார். ஆனால், வழியில் அவருக்குக் கடும் சுரம் பீடித்தது. அதன் விளை வாகக் கி.பி. 1351, மார்ச் 20-ல் அவர் இறந்தார்.

டெல்லியில் ஆண்ட அரசர்கள் யாவருள்ளும் மிக விசித் திரமான மனிதர் இவ்வாறு இறந்தார். தம்முடைய வாழ்நாளி லேயே இந்தியா முழுவதையும் ஆண்டவர் அவ் வாழ்நாள் முடிவதற்குள்ளாகவே அவ் வரசின் பெரும்பகுதியை இழந்து எஞ்சிய பகுதியில் கலகத்தைத்தவிர வேறொன்றையும் காணாத

நிலையில் இருந்தார். அவர் தம் வாழ்க்கையிலேயே சாதித்த காரியங்களில் மிகச்சிறந்தது அவர் இறந்ததுதான். அப்பொழுது கலகக்கார மக்களிடமிருந்து அவர் விடுதலையடைந்தார். கொடிய பைத்தியக்கார மன்னரிடமிருந்து குடிமக்கள் தப்பினர். சில வரலாற்றாசிரியர்கள் அவருடைய கல்வி அறிவையும், தாராள குணத்தையும், புத்திக்கூர்மையையும், போர்வன்மையையும் புகழ்வர். அன்றியும், அவருடைய பைத்தியக்காரச் செயல்களை யெல்லாம் 'அவர் ஏதோ நல்ல எண்ணத்துடன்தான் செய்தார்; சூழ்நிலை காரணமாக, ஊழ்வினை உருத்தமையால் அவற்றை நிறை வேற்ற முடியாமல் போயிற்று' என்று அவருடைய பெயரைக் காப்பாற்ற முயல்வர். இவ்வாறு முயல்பவர்களில் மகம்மது ஹுசேன் என்பவர் முதன்மையானவர்[1]. துக்ளக் உண்மையில் நன்கு கல்விகற்றவர்; கற்றாரைக் காமுற்றவர்; அவர் வரலாறு, தர்க்கம் முதலிய கலைகளை நன்கு கற்றவர்; கணிதம், வானவியல் முதலிய விஞ்ஞானக் கலைகளையும் அறிந்தவர். அவர் தாமே ஒரு கவி. அவர் அராபி, பாரசீக மொழிகளில் நன்கு எழுதவல்லவர்; கையெழுத்துக்கலை கைவந்தவர்; மருத்துவக் கலையில் விருப்பம் மிகுந்தவர். அவர் பல மருத்துவச் சாலைகளை அமைத்தார். இவ்வாறு அவருக்குப் பல நல்ல பண்புகள் இருந்தன. ஆனால், இந்த நற்பண்புகளோடுகூடவே அவர் முரட்டுப் பிடிவாத குணமும் ஈவிரக்கமில்லாமல் சித்திரவதை செய்து கொல்லும் தீப்பண்பும் உடையவர்; பின் விளைவுகளை ஆராயாமல் செயற் படுவதிலும் ஈடுபட்டவர். 'எண்ணாமல் துணிக கருமம்' என்பது அவர் கோட்பாடு என்றே தெரிகின்றது

அவர் இரத்தம் சிந்துவதில் பேய்க்குச் சமமானவர். ஈசுவரி பிரசாத் என்னும் வரலாற்றாளர் மகம்மது-பின்-துக்ளக்கின் கொடுஞ்செயல்களை விவரித்துவிட்டு அவர் அளித்த கொடிய தண்டனைகள் அக் காலத்தில் கொடியனவாகக் கருதப்படவில்லை என்று கூறுவர். ஆனால், மகம்மது-பின்-துக்ளக்கின் தன்மையை நிர்ணயிப்பதில் இபன் பதூதாவின் உதவியைத்தான் நாம் நாட வேண்டும். அவர் கூறுகிறார்: 'அவருடைய அடக்கம், நியாய உணர்ச்சி, கண்டும் கேட்டுமிராத தாராளம். ஏழைகளிடம் இரக்கம் என்னும் பண்புகளோடு இரத்தம் சிந்துவதில் பெருவிருப்புடன் அவர் தோற்றினார்.' சுல்தான் யாரையேனும் குற்றம் சாட்டினால் அவர்கள் அக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்வரை சித்திர வதை செய்யப்பட்டார். சித்திரவதைப்படுவதைவிடச் சாவது மேல் என்று குற்றத்தை - அது மெய்யோ பொய்யோ - ஒப்புக்

[1] Mohammad—Bin—Tughlaq and his Times.

கொண்டுவிடுவர். சுல்தான் பரணியிடம் தாமே ஒப்புக்கொண்டுள்ளார். 'நான் குற்றவாளிகளைக் கடுமையாகத்தான் தண்டிக்கிறேன். அதுதான் என் கொள்கை. குற்றவாளிகள் இருக்கும்வரை நான் அப்படித்தான் செய்வேன்' என்று இபன் பதூதாவும், பரணியும் அவருடைய கொடுஞ்செயலுக்கு எடுத்துக்காட்டும் உதாரணங்கள் உண்மையாயின் அவரை மனித உருவில் உலாவிய பேய் என்றே கூறவேண்டும். அவருடைய கொள்கைகளும், செயற்பாடுகளும், தன்மையும் டெல்லி சுல்தானியம் ஆட்டங்காண்பதற்கு முக்கிய காரணங்களாயிருந்தன என்பதில் ஐயமில்லை. 'அவர் பேயுமல்லர்; பித்தருமல்லர்; நன்மை தீமை இரண்டுங் கலந்த விசித்திரப் பிறவி' யென்று சிலர் கூறுவர். தனிப்பட்ட குடிமக்களுக்கு அவர் இழைத்த இன்னல்களை எண்ணிப் பார்க்கும் போது அவர் பேய்க்குணம் படைத்தவர் என்பது தெளிவாகும். மொத்தமாக நாட்டிற்கு அவர் செய்ய முற்பட்ட நிர்வாகப் புதுமைகள் அவருடைய பைத்தியக்காரத்தனத்தை நன்கு நிரூபிக்கும்.

3. பிரூஸ் ஷா

மகம்மது போர்க்களத்தில் சண்டையாலின்றிச் சுரத்தால் இறந்தார். அப்பொழுது அவருடைய படை முகாம் பகைவர்களாலும், சுல்தானியப் படைஞர்களாலுமே கொள்ளையிடப்பட்டது. அதைத் தடுக்கப் படைத்தலைவர்கள் யாதொன்றும் செய்ய இயலாமல் போயிற்று. அப் படைத்தலைவர்களும், பிரபுக்களும் சேர்ந்து கியாஸுதீன் துக்ளக்கின் தம்பி மகனுன பிரூஸ் என்பாரைச் சுல்தான் ஆக்கினர். சுல்தான் மகம்மதுவிற்குப் பட்டத்திற்கு வரக்கூடிய மக்களில்லை. பிரூஸும் முதலில் தமக்கு விருப்பமில்லாதது போலிருந்து பிறர் வற்புறுத்தலின்பேரில் தாம் சுல்தான் ஆவதுபோல இறுதியில் முடிசூட்டிக்கொள்ளச் சம்மதித்தார் (1351, மார்ச் 23).

சுல்தான் மகம்மது இறந்த செய்தி டெல்லிக்கு எட்டியதும் அங்கு அமைச்சராக இருந்த க்வாஜா ஜஹான் மகம்மதின் மகன் என்று சொல்லப்பட்ட ஒரு சிறு குழந்தையை அரியணையில் ஏற்றி வைத்தார். ஆனால், மகம்மது துக்ளக்கிற்கு அப்படி ஒரு மகன் இல்லை யென்பது அக் கால ஆசிரியர்களுடைய கருத்து. பிரூஸ் சிந்துவிலிருந்து டெல்லிக்கு வந்து சேர்ந்ததும் க்வாஜா ஜஹான் அவருக்குப் பணிந்தார். ஆயினும், பிரூஸ் அவர் முதலில் வேறோர் அரசரை நியமித்த குற்றத்திற்காகச் சிரச்சேதம் செய்துவிட்டார். சிந்துவிலிருந்த கலகக்காரரான தகி இறந்துவிட்டார் என்ற நற்செய்தியும் கிட்டியது. பிரூஸின் முடிசூட்டு விழா கி.பி.

1351, ஆகஸ்டில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மகம்மது-பின்-துக்ளக் ஏற்படுத்திய கொடூரமான நிர்வாக விதிமுறைகளை மாற்றி அமைத்தார். 1353-ல் வங்காளத்தில் கலகம் செய்த ஹாஜி ஷம்ஸுத்தீன் இலியாஸ் ஷா என்பவரை ஒறுக்கச் சென்ற சுல்தான் மிகுதியாக ஒன்றும் சாதிக்காமலேயே திரும்பினர். இலியாஸ் வங்காளத்தில் சுதந்தர மன்னர்போல் நடந்துகொள்ளத் தொடங்கினர். கி.பி. 1355-ல் பிரூஸ் டெல்லியருகில் யமுனைக்கு அடுத்த பிரூஸாபாத் என்னும் நகரத்தை அமைத்தார். 1357-ல் சுல்தான் பிரூஸ் வங்காளத்தை மறுபடியும் வென்றடக்கப் புறப் பட்டார். ஆனல், அதை ஓர் இராணுவச் செலவு போன்று இல்லாமல் ஓர் இன்பச் செலவாக நடத்தினர். வழியில் ஜான என்னும் பெயருள்ள மகம்மது துக்ளக்கின் நினைவுகூர்தற்காக ஜான்புரி என்னும் ஊரை நிருமித்தார். இறுதியில் இரண்டு ஆண்டு கழித்து 1359-ல் அவர் வங்காளத்தை அடைந்தார். அங்கு எட்காலா என்னும் கோட்டையை முற்றுகையிட்டார். ஆனல், தம் படைவீரர்களுக்குத் தாக்குதற்கோ பின்வாங்கு தற்கோ அவர் ஓர் உத்தரவும் அளிக்கவில்லை. அவருடைய படைத்தலைவர்கள் கோட்டையைத் தாக்க அனுமதி கேட்ட போது பிரூஸ் கூறியதாவது: 'கோட்டையைப் பிடிக்கவேண்டியது தேவைதான். ஆனல், அப்படி வலுவாகக் கோட்டையைப் பிடித்தால் அங்குள்ள ஏராளமான முஸ்லிம் மகளிர் நம் முரட்டுப் படைஞர்களால் துன்புறுத்தப்படுவார்களே என்று அஞ்சுகிறேன்'. சண்டையின்றியே போர் முற்றுப்பெற்று வங்காளத்தைச் சுதந்தரமாகவே விட்டுவிட்டு பிரூஸ் டெல்லிக்குத் திரும்பினர். வங்காளத்திலிருந்து திரும்பி வரும் வழியில் ஜான் புரியில் அவர் சில நாள்கள் தங்கினர். அங்கு அவருக்கு ஒரிஸா நாட்டைத் தாக்கும் எண்ணம் உதித்தது. உடனே அவர் ஒரு பெரிய குதிரைப்படையோடு ஒரிஸாவிற்குச் சென்று அங்குக் கட்டாக் முதலிய இடங்களைக் கைப்பற்றிப் பூரியை அடைந்து அங்கிருந்த ஜகந்நாதர் ஆலயத்தை அழித்துக் கடவுள் படிமங்களை உடைத்தெறிந்தார். அங்கிருந்து கடற்கரை ஓரமாக அமைந் திருந்த ஓரிடத்திற்குச் சென்றார். அங்கு ஜாஜ் நகரிலிருந்து ஏறத்தாழ ஒரு லட்சம் இந்துக்கள் மனைவி, மக்கள், உற்றார், உறவினரோடும் ஓடி வந்து தற்காலிகமாகத் தங்கினர். ஒரே இடத்தில் அத்தனை இந்துக்களைக் கண்ட சுல்தானுக்கு அளவிறந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்களில் ஆடவர் எல்லாரையும் கொன்றார். மகளிர் ஒவ்வொருவரையும் தன் படைஞர்களுக்குக் கொடுத்துவிட்டார். அங்கிருந்து திரும்பிய சுல்தான் வழி தெரியாமல் காடுகளில் ஆறுமாதகாலம் சுற்றித் திரிந்தார். அப் பொழுது உடன்கொண்டு போன பண்டங்களும் தீர்ந்துபோகவே

நிலைமை மிக நெருக்கடி ஆயிற்று. எவ்வாறோ வழி கண்டுபிடித்துக் கொண்டு டெல்லி வந்து சேர்ந்தார். அவர் ஒரிஸாவிற்குச் சென்றதன் நோக்கத்தை 'சீரதி பிரூஸாகி' என்னும் நூல் அழகாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் கூறுகின்றது: 'கஜபதிராயை நிர்மூலமாக்கி இஸ்லாமில் நம்பிக்கையில்லாத இந்துக்களைக் கொலை செய்து அவர்களுடைய கோயில்களை இடித்து யானை வேட்டையாடி அந்த நாட்டைக் கண்டு களித்தல்'. இவர் பூரிக்குப் போய் ஜகந்நாதர் கோயிலை இடித்தமை கஜினிமம்மூது சோமநாத புரத்திற்கு வந்து கோயிலை இடித்துப் படிமத்தைத் தகர்த்த வரலாற்றை ஒக்கும். அவர்கள் இருவரும் திரும்பிப் போகும் வழியில் துயரங்களை அனுபவித்தமையும் நோக்கத் தக்கது.

கி.பி. 1361-ல் சில்ஹிந்திற்குப் படைகொண்டு சென்ற பிரூஸ்ஷா அதற்கு அப்பாலிருந்த நாகர்கோட்டையை வெல்லுவ தோடுகூட அங்கிருந்த கோயிலை நாசம் செய்ய விரும்பி அம் முயற்சியை மேற்கொண்டார். காங்ராவிலிருந்த சிற்றரசர் அவருக்குப் பணிந்தார்.

மகம்மது துக்ளக் சாகும் தருவாயில், சிந்துவில், படைமுகா மிட்டிருந்தார் என்பதை மேலே கண்டோம். அங்கு மகம்மது ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்டார். அந்த நிலையை மாற்றி அப்போது மகம்மது அடைந்த தோல்வியை வெற்றியாக மாற்றவும், சுல்தானியம் இழந்த மதிப்பைத் திரும்பப் பெறவும், புதிதாக நாடு பிடிக்கவும் எண்ணிய பிரூஸ்ஷா சிந்துவை நோக்கிப் படை கொண்டு சென்றார் (1363). ஏறத்தாழ ஒரு லட்சம் குதிரைப்படையும், 500 யானைகளையும் கொண்டு சென்றவர் சிந்துவிலிருந்த தட்டா என்னும் கோட்டையைக் கைப்பற்ற முடியாமல் பின்வாங்கினார். படைஞரிடையே தொற்றுநோய் பரவிற்று. அன்றியும், சுல்தானியக் கப்பற்படை பகைவர்வசம் சிக்கியது. பல இன்னல்களைக் கண்டு அப் படை குஜராத்திற்குத் திரும்பிற்று. மறுபடியும் தட்டாவிற்குச் சென்று முற்றுகையைத் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்துகொண்டிருந்த பிரூஸ் அதே சமயத்தில் தக்காணத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட பாமினி அரசின் விவகாரங்களில் தலையிட்டுத் தமக்கு உதவுமாறு பஹ்ராம் என்பவர் விடுத்த வேண்டுகோளை நிராகரித்தார். இம் முறை தட்டாவில் வெற்றிகண்ட பிரூஸ் ஷா மறுபடியும் சிந்துவில் போர் புரிவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டு டெல்லிக்குத் திரும்பினார்.

கி.பி.1374-ல் பிரூஸின் மூத்த மகனான பாத்கான் என்பவன் இறந்து போனான். இதனால், சுல்தான் மிகவும் மனம் உடைந்து

போனான். குஜராத்தில் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த ஸாபர் கான், சுல்தான் விரும்பிய அளவு வரி வசூலித்துக் கொடுக்க இயலாது என்று கூறிவிட்டமையால் அவருக்குப் பதிலாகத் தாமகானி என்னும் ஒருவரை நியமித்தார். ஆனால், அவர் குஜராத்தில் நிர்வாகத்தை நடத்தமுடியாமல் கலகத்தில் இறங்கினார். ஆகையால், பிரூஸ்ஷா தாமகானியைக் கொன்று பர்ஹாத் உல்முல்க் என்பவரைக் குஜராத் கவர்னராக நியமித்தார்.

கி.பி. 1380-ல் மன்னர் ரோஹில்கண்டுக்குப் படைகொண்டு சென்றார். அங்குப் பதாவுன் கவர்னராக இருந்தார். சையிது முகம்மது என்பவனைக் கொலை செய்த குற்றத்திற்காகக் கத்தேரி அரசரைத் தண்டிக்கவேண்டுமென்றே இப் படைச்செலவு மேற்கொள்ளப்பட்டது. தப்பி ஓடிய கத்தேரி அரசரைப் பிடிக்க முடியாவிட்டாலும் அங்கிருந்த இந்துக்கள் எல்லாரையும் கொன்று தீர்த்தார். கத்தேரி மன்னர் குமாவூனுக்கு ஓடிவிட்டதாகக் கேள்வியுற்ற சுல்தான் அங்கும் ஆயிரக்கணக்கான இந்துக்களைக் கொன்றார். அப்பொழுதிருந்து அடுத்த ஐந்தாண்டுகளுக்குக் கத்தேரியில் ஒவ்வோர் ஆண்டும் இத்தகைய படுகொலையை நிகழ்த்த வேண்டுமென்று உத்தரவிட்டார். இவ்வுத்தரவை நிறைவேற்ற ஓர் ஆப்கானியனை நியமித்து அவன் இந்தப் படுகொலையைச் சரிவரச் செய்கிறானா என்று பார்க்கத் தாமே ஒவ்வோராண்டும் அங்குச் சென்றுவந்தார். கி.பி. 1385-க்குப் பிறகு மன்னர் முக்கியமான அலுவல்கள் ஒன்றிலும் ஈடுபடவில்லை. அவருக்கு வயது எண்பது ஆகிவிட்டது. இதையறிந்த மந்திரி கான்ஜஹான் அரசையே கைப்பற்றும் எண்ணம் கொண்டிருந்தான். ஆனால், அவன் எண்ணம் அரசருக்குத் தெரிந்துவிடவே அவன் இராஜபுதனத்திற்கு ஓடினான். ஆயினும், பிடித்துக் கொணர்ந்து கொல்லப்பட்டான். அப்பொழுது பிரூஸ்ஷா தம் மகனான மகம்மதுகானை நஸீர்உதீன் மகம்மது ஷா என்னும் பட்டத்தோடு தம்முடன் ஆட்சி புரிய நியமித்துக் கொண்டார். இதற்கிடையே குஜராத்தில் இருந்த கவர்னர் பர்ஹாத் உல்முல்க், அவருக்குப்பின் கவர்னராக நியமிக்கப்பட்ட சிகந்தர்கான் என்பவனைக் கொலை செய்துவிட்டதால் அவனைத் தண்டிக்கப் புறப்பட்ட மகம்மது டெல்லிக்குப் போய் வந்த காரியத்தை மறந்து களியாட்டங்களில் ஈடுபட்டார். அவரைத் திருத்த முயன்ற அதிகாரிகளை வேலையினின்றும் நீக்கினார். மகம்மதை எதிர்த்த பிரபுக்கள் பிரூஸ்ஷாவே முற்றிலும் ஆட்சியை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தவே அவரும் தம் மகன் பாத்கானின் மகனான கியாஸுதீன் என்பவனை அரியணையில் அமர்த்தினார். இதற்குச் சற்றுப் பிறகு கி.பி. 1388-ல்

பிரூஸ் ஷா இறந்தார். அவர் பட்டத்திற்கு வரும்பொழுதே நாற்பது வயதுக்குமேல் ஆனவர். அவர் முப்பத்தேழு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அவர் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் சமய சாத்திரக்காரர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர். அவர் முஸ்லிம்களுக்கு நல்லவராய் இருந்தார். ஆகவே, முஸ்லிம் வரலாற்றுளர்கள் அவரைப் புகழ்ந்து எழுதினூர்கள். மகம்மது-பின்-துக்ளக் ஆட்சியின் கொடுமைகளை அகற்றிப் புதிய தொரு நிர்வாகத்தை உருவாக்கினூராயினும், இந்துக்கள் அவர் காலத்தில் பட்ட பாட்டை நாம் மேலே அறிந்தோம். அவர், 'முன்னிருந்த மன்னர்கள் முஸல்மான்களுடைய இரத்தத்தைச் சிந்தினூர்கள்; அவர்களைச் சித்திரவதை செய்தனர்; கண்ணைப் பிடுங்கினர்; உருக்கிய ஈயத்தைத் தொண்டையில் ஊற்றினர்; எலும்புகளை நொறுக்கினர்; உடலை எரித்தனர்; கை கால்களில் இரும்பு ஊசிகளைச் செலுத்தினர்; நரம்புகளை அறுத்தனர்; உடலைத் துண்டித்தனர். இன்னோரன்ன சித்திரவதைகளைப் பயின்றனர். இவற்றையெல்லாம் செய்ய நான் ஒருப்படேன்' என்றூர். அவர் இங்கு முஸல்மான்களைப் பற்றித்தான் பேசுகிறூர் என்று கொள்ள வேண்டும். மக்கள் என்று பொதுவாக அவர் பேசியபோதும் முஸ்லிம் மக்கள் என்பதுதான் அதன் பொருள். சமய நோக்கோடு ஆட்சி புரிந்த முஸ்லிம் மன்னர்களில் பிரூஸ் ஷா முதற்கண் வைத்து எண்ணத் தக்கவர். அவர் பல வரிகளை நீக்கினூர். ஆனூல், முஸ்லிம்கள் அல்லாதாரிடமிருந்து ஜிஸியா என்னும் வரியைத் தவறுது வசூல் செய்தார். அவர் பல நகரங்களை நிர்மாணித்தார். அவற்றில் டெல்லியருகே அவர் கட்டிய பிரூஸ் ஷாபாத் என்னும் நகரம் புகழ் பெற்றது. அவர் 80 அணைக் கட்டுகளையும், 40 மசூதிகளையும், 30 கல்லூரிகளையும், 20 அரண் மனைகளையும், 20 வணிகர் தங்கும் நிலையங்களையும், 30 பாசன ஏரிகளையும், 100 மருத்துவ மனைகளையும், 100 குளங்களையும், 150 பாலங்களையும், பல தோட்டங்களையும் அமைத்தார் என்று பிரிஷ்டா கூறுவர். இவற்றை நல்ல நிலையில் வைத்திருக்க மானியங் களையும் வழங்கினூர் என்பர். ஆனூல், இவர் 200 நகரங்களைக் கட்டினூர் என்று பிரிஷ்டா கூறுவது சற்று நம்பமுடியாமலிருக்கிறது. சாகுபடிக்கு நீர்ப்பாசனத்திற்காக அவர் பல கால்வாய்களை வெட்டினூர். அவற்றின் சிதைவுகளிற் சில இன்றும் தென்படு கின்றன. அவர் வரி வசூலிக்கும் முறையைச் சீர்படுத்தி நிலைப் படுத்தினூர். நிலத்தைச் சரிவர அளந்து அல்லது மகசூலின் அளவை அறிந்து இந்தச் சீர்திருத்தத்தை அவர் மேற்கொள்ள வில்லை யாயினும் இந்த அளவிற்கு வரிவசூல் நிலைப்படுத்தப் பட்டமை நிர்வாகத்தில் ஒரு முன்னேற்றம் என்று கொள்ள வேண்டும். அவர் புதிதாக ஏற்படுத்திய எண்ணிறந்த தோட்டங்

களிலிருந்து வந்த பழவகைகளை விற்று ஆண்டுதோறும் இரண்டு லட்சம் ரூபாய் அரசின் வருவாயில் அதிகரித்தார். பாசனக் கால்வாய்கள் திட்டத்தால் மகசூல் அதிகரித்து உணவுப் பஞ்சம் ஏற்படவில்லை. விவசாயமும், வாணிகமும் நல்ல நிலையில் இருந்தமையால் இராணுவச் செலவுகளுக்காகக்கூடப் புதிய வரிகள் தேவைப்படவில்லை. மகம்மது அளவிற்கு இல்லாமற் போயினும் பிரூஸைக் கல்விமானென்றே சொல்லவேண்டும். அவர் பல பள்ளிகளை நிறுவினார்; பல நூல்நிலையங்களைத் தொகுத்தார். வரலாற்றாளர்களான பரணி, அஃபீப் (Afif) ஆகியோரை ஆதரித்தார். ஃபுதூ ஹாதி ஃபிரூஸ் ஷாஹி (Futuhat-i-Firuz-Shahi) என்னும் நூலைத் தாமே இயற்றினார். அவர் 36 லட்சம் காசுகள் செலவு செய்து அறிஞர்களையும் (அதாவது முஸ்லிம் அறிஞர்கள்), குரான் கற்றுச்சொல்லிகளையும் ஆதரித்தார். இங்கும் அவர் இந்துப் பாடசாலைகளையோ, இந்து அறிஞர்களையோ ஆதரிக்கவில்லை என்பது நோக்கத்தக்கது. அவருடைய பெருமைகளைப் பாடும் வரலாற்றாளர்கள் யாவரும் அவர் இந்துக்களை நடத்திய விதத்தை மறந்தே பேசுகின்றனர். முஸ்லிம்கள்மட்டும் வாழ்ந்திருந்த ஒரு நாட்டின் மன்னராக அவர் இருந்திருந்தால் அவரைப் போல மன்னரே இல்லையென்று கூறலாம். ஆனால், அவர் அத்தகைய நாட்டை ஆளவில்லை யென்பது நினைவு கூரத்தக்கது. சமூகத்தில் ஏழை எளியவர்களுக்கு அவர் பல நன்மைகள் செய்தார்; பரிசம் கொடுக்கமுடியாத காரணத்தால் மணமாகாமலிருந்த முஸ்லிம் பெண்களுக்கு மணம் செய்துவைக்க அவர் பணம் கொடுத்து உதவினார்; தர்மத்திற்காகப் பலருக்கு வேலை கொடுத்தார்; தர்ம மருத்துவச் சாலையையும் நிறுவினார்.

சுல்தான் களியாட்டங்களில் பொழுது போக்கினார்; அவருடைய உயர்அதிகாரிகள் அவரைப் பின்பற்றினர்; லஞ்சம் வாங்கிய அதிகாரிகளையும் அவர் பாதுகாத்தார். அப்படிச் செய்தற்குக் காருண்யம் என்று பெயர் என்று நினைத்தார். ஆகவே, நிர்வாகத்தின் தரம் குறைந்தது. பிரூஸ் ஷா மதவெறி பிடித்தவர் என்பதில் ஐயமில்லை. அவருக்கு இஸ்லாமில் மிகைப்பற்று இருந்ததைப்பற்றி ஒருவரும் குறை கூற மாட்டார்கள். ஆனால், அவர் பிற மதத்தவர்களை, முக்கியமாக இந்துக்களை வதைத்தும் அவர்கள் மனம் புண்படும்படியான காரியங்களைச் செய்தும் அவர்கள் முஸ்லிம்கள் அல்லாதார் என்னும் ஒரு காரணத்திற்காகவே அவர்கள்மீது தனி வரி விதித்தும் வந்தமையால் அவர் மத விஷயங்களில் நேர்மையாக நடந்துகொண்டார் என்று கூற முடியாது. முஸ்லிம் அல்லாதாரை அவர்கள் இஸ்லாமை மேற்கொள்ள மறுத்தால் கொலையும் செய்யலாம் என்னும் பழைய

கொள்கையைக் கைவிட்டு, இஸ்லாமைச் சேராதாரிடமிருந்து அவர்களுடைய பாதுகாப்புக்காக ஒரு தனி வரி வசூலித்துக் கொள்ளும் மரபை மேற்கொண்டார். இவ்வாறு இந்துவாயிருந்து கொண்டும் ஒரு முஸ்லிம் அரசனின் பாதுகாப்பை நாடும் குடிமகனுக்கு ஸிம்மி (Zimmi) என்பது பெயர். முஸ்லிம்களுடைய சாத்திரச் சட்டப்படி ஒரு முஸ்லிம் ஒரு முஸ்லிம் அல்லாதானைக் அவனை மதமாற்ற முடியாமற்போனால் கொல்லலாம்; ஆனால், இவ் விரு முறையும் இந்தியாவில் நடவாது என்பதை உணர்ந்த பிரூஸ் ஷா ஒவ்வோர் இந்துக் குடிமகனிடமிருந்தும் ஒரு தலைவரி (Jiziya) வசூலிக்கத் தொடங்கினார். பல முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவில் ஜிஸியாவை வசூல் செய்திருக்கிறார்கள். இருந்த ஜிஸியாவை நீக்கியவர் அக்பர். அதை மறுபடியும் வலுவாகப் போட்டவர் ஔரங்கசீப். ஔரங்கசீபும் பார்ப்பனரையும் அவர்கள் போன்ற மற்ற மதத்தலைவர்களையும் இதனின்றும் நீக்கினார். ஆனால், பிரூஸ்ஷாவோ எல்லா இந்துக்களுக்கும், பிராம்மணர் உட்பட, பாரபட்சமின்றி ஜிஸியா வரியை விதித்தார். மாலு என்னும் கிராமத்தில் நிறைய இந்துக்கள் இருந்தனர். அங்கு இந்துக்கோயிலும் இருந்தது. இந்துக்கள் எல்லாரும் கோயிலுக்குச் சென்று வழிபட்டனர். பலர் கூடுமிடமாதலால் கோயிலருகே கடைகண்ணிகள் ஏற்பட்டன. முஸ்லிம்களும் வந்து அங்கு வாணிக நிமித்தம் அவ்வப்போது கூடினர். இவையெல்லாம் பிரூஸ் காதுக்கு எட்டின. அவருடைய இஸ்லாமிய உள்ளம் கொதித்தது. அவர் நேரில் சென்று பார்த்தார். அங்குப் பல இந்துக்கள் வழிபாடு செய்துகொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் எல்லாரையும் கொல்வித்தார். அவர்களுடைய நூல்கள், படிமங்கள், வழிபாட்டிற்குப் பயன்பட்ட பாத்திரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. இவ்வளவையும் செய்துவிட்டு அவர் கூறுகிறார்: 'ஒரு முஸல்மான் நாட்டில் எந்த ஸிம்மியும் இந்தத் தீய பழக்கங்களில் ஈடுபடலாகாது என்று தெரியப்படுத்தவே இவ்வாறு செய்தேன்' அஃபீப் ஒரு வரலாறு கூறுகிறார்: 'ஒரு பிராமணர் தமது வீட்டில் படிமங்களை வழிபட்டுவந்தார். முஸ்லிம் மகளிரும்கூட அவ் வழிபாட்டிற்கு இணங்கலாயினர்: அந்த பிராமணரிடத்தில் ஒன்று அவர் முஸ்லிமாக வேண்டும்; இன்றேல் அவர் எரிக்கப் படுவார்' என்று அறிவிக்கப்பட்டது. மதமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லாத பிராமணரைக் கையும் காலையும்கட்டி எரியும் நெருப்பில் போட்டார்கள். '(இஸ்லாமிய) சட்டத்தின் விதிகளிலிருந்து சற்றும் பிறழாத சுல்தானின் பெருமையே பெருமை' யென்று அஃபீப் புகழ்கிறார். இவருக்கு முன்பு ஆண்ட ஒருவரும் செய்யாத காரியங்களையும் இவர் செய்யத் துணிந்தார். பிரூஸ் காலத்திற்கு முன்போ பின்போ ஒருவரும் பிராமணர்களுக்குத்

தலைவரி விதித்ததில்லை. பிரூஸ் அதைச் செய்தார். இதுகண்ட டெல்லியில் இருந்த பிராமணர்கள் தங்களுடைய வரியை விலக்கவேண்டுமென்று அரண்மனைவாயிலில் 'சத்யாக்ரஹம்' செய்தனர். இதைக்கண்டு சுல்தான் பயப்படவில்லை. அவர்கள் தங்களையே எரித்துக்கொள்வோம் என்று அறிவித்தனர். சுல்தான் அந்தக் காரியத்தைச் சற்று விரைவாகவே செய்துவிடும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார்; ஏனெனில். வரியை நீக்கும் எண்ணம் தமக்கு இல்லையென்றும் கூறிவிட்டார். பட்டினி கிடந்த பிராமணர்கள் சாகும் நிலைக்கு வந்துவிட்டனர். இது கண்ட மற்றக் குடிமக்கள் பிராமணர்களுடைய வரியைத் தாங்களே கட்டி விடுவதாகவும் அவர்கள் இறக்கவேண்டா என்றும் கூறினார்கள். இறுதியில், தங்கள் வரியைச் சற்றுக் குறைத்தாவது போட வேண்டுமென்று அந்தப் பிராமணர்கள் கெஞ்சினார்கள். சுல்தான் அதற்கு இணங்கினார். மதமாற்றும் வேலையைத் தம்முடைய கடமையாகக் கருதி சுல்தான் செய்துவந்தார். 'இவர் இந்துக் கோயிலையெல்லாம் இடிப்பதில்லை; படிமங்களையெல்லாம் உடைப்பதில்லை; என்றெல்லாம் கூறுவர்:. ஆனால், இக் கூற்றுகள் உண்மையல்ல என்பது அக் காலத்து வரலாற்றுளர்கள் கூற்றிலிருந்தே விளங்கும்,

பிரூஸ் ஷா இறந்த பிறகு இரண்டாம் கியாஸுதீன் துக்ளக் என்னும் பட்டப்பெயரோடு அவர்தம் பெயரன் சுல்தானானன். பிரூஸின் மகனான இளவரசன் மகம்மது, டெல்லியிலிருந்து துரத்தப்பட்டமை மேலே கூறப்பட்டது. அவர் கியாஸுதீன் துக்ளக்கை எதிர்த்துக் கலகம் செய்யத் தொடங்கினார். அவரை எதிர்த்துச் சுல்தானியப் படை சென்றது. அப் படைக்கு அஞ்சி அவர் காங்ரா கோட்டையில் புகுந்தார். அக் கோட்டையை முற்றுகையிடாமலேயே சுல்தானியப் படை டெல்லி திரும்பிற்று. கியாஸுதீன் ஒன்றிற்கும் உதவாதவர். அவர் அரசியல் அலுவல்களை முற்றிலும் துறந்து அந்தப்புரத்தையே இருப்பிடமாகக் கொண்டவர். அவரை எதிர்த்து பிரூஸின் மூன்றும் மகனான ஸாபர்கானின் மகன் அபுபக்கரை ஆதரித்து ஒரு கலகம் நிகழ்ந்தது. ருக்குனிதீன் என்னும் உதவி மந்திரி அபுபக்கர் பக்கமிருந்தார். இவர்கள் தங்கள் ஆட்களுடன் திடீரென்று அரண்மனையுட்புகவே கியாஸுதீன் கொல்லைப் புறமாக யமுனை ஆற்றங்கரையை நோக்கி ஓடினான். அவனைப் பிடித்துக் கொன்றனர் (கி.பி. 1383, பிப்ரவரி). மறுநாள் அபுபக்கர் மன்னரானார். ருக்குனுதீன் மந்திரியானார். அபுபக்கரும் நெடுநாள் அந்த நிலையில் இருக்க முடியவில்லை.

இளவரசர் மகம்மது பலரால் ஆதரிக்கப்பட்டு டெல்லியிலிருந்து வந்து தம்மையே மன்னராகப் பிரகடனப்படுத்திக்கொண்டார். டெல்லியில் இப்பொழுது ஓர் உள்நாட்டுப் போரே நிகழுமாறு இருந்தது. முதலில் அபுபக்கருக்கும், மகம்மதுவிற்கும் நடந்த போரில் மகம்மது தோல்வியுற்றுப் பின்வாங்கினர். மறுமுறையும் அவ்வாறே நிகழ்ந்தது. மூன்றும் முறையாக அபுபக்கர் தலைநகரை விட்டு நீங்கி ஜலேசருக்குச் சென்றிருந்தபோது மகம்மது டெல்லியைக் கைப்பற்றிக்கொண்டார். ஜலேசர் சென்றிருந்த அபுபக்கர் டெல்லிக்கு விரைந்தார். ஆயினும், அவரால் ஒன்றும் செய்ய இயலாமல் போகவே மகம்மது, நஸீர் உத்தீன் முகம்மது ஷா என்னும் பெயரோடு முடிசூட்டிக் கொண்டார். அபுபக்கர் பிடிபட்டு மீரட் கோட்டையில் சிறையிருத்தப் பெற்றார். சில காலம் கழித்து அங்கு அவர் இறந்தார். இவ் வரலாற்றைக் காணும்போது டெல்லி சுல்தானியம் அதன் வலுவில் எவ்வளவு இழிந்திருந்தது என்பது புலனாகும். மகம்மது சுல்தானான பிறகும் கலகங்களே எங்கும் விஞ்சின. இராஜபுதனத்தில் பல இடங்களில் கலகம் தோன்றவே அவர் தம் அமைச்சரான இஸ்லாம்கான் என்பானைக் கி.பி. 1391-ல் அங்கு அனுப்பினர். அவர் முதன் முதலில் சில வெற்றிகளைக் கண்டாராயினும் அவர் டெல்லிக்குத் திரும்பியதும் மறுபடியும் கலகம் தோன்றியது. நிலைமையை உணர்ந்த மகம்மது தாமே இராஜபுதனத்திற்குச் சென்று எட்டாவா முதலிய கோட்டைகளைத் தரைமட்டமாக்கினர். மகம்மது இராஜபுதனத்திலிருந்தபோது வஜீர் இஸ்லாம்கான் கலகம் செய்ததாகக் கேள்விப்பட்டு டெல்லிக்குத் திரும்பினர். அவர் தாம் யாதும் அறியாதவராகக் கூறியும் அவரைக் கொன்றுவிடும்படி சுல்தான் உத்தரவிட்டார். 1393-ல் அவருக்கு சுரம் கண்டு ஜலேஸரில் இறந்துபோனர். அவருக்குப் பிறகு அவர் மகன் ஹுமாயூன் பட்டத்திற்கு வந்து ஆறுவாரங்களுக்கு கெல்லாம் இறந்துபோனர். ஹுமாயூனுக்குப் பிறகு அவர் தம்பி நாஸிர் உத்தீன் மம்மூதுஷா என்னும் பட்டதோடு அரியணை ஏறினர் (1394). இந் நிலையில் டெல்லி சுல்தானியம் சிதறுண்டு போகும் தருவாயில் இருந்தது. மாலிக் க்வாஜாஜஹான் என்னும் வஜீர் கிழக்குப் பிரதேசத்தில் முளைத்த கலகத்தை அடக்க அனுப்பப்பட்டார். அவர் கலகத்தை அடக்கினராயினும் ஜான்புரியில் ஒரு தனியரசை நிறுவிக்கொண்டு அதன் அரசராகத் தம்மை அறிவித்துக்கொண்டார். தீபால்பூரில் கவர்னராயிருந்த சாரன்கான் லோடி என்பவர் மூல்தான் கவர்னரான கிஸிர்கான் என்பவனை அகற்றிவிட்டுத் தம் தம்பியான அடில்கான் என்பவனை லாகூரில் கவர்னராக்கினர்.

சுல்தான் முகாரப்கான் என்பவனை டெல்லியில் வைத்துவிட்டு ஸாதத்கான், மல்லு இக்பல்கான் லோடி முதலியவரோடு குவாலியருக்குச் சென்றார். அங்கு ஸாதத்கான் முகாரப்கானை எதிர்த்துச் சதி செய்ததாகக் கேள்வியுற்று முகாரப்கான் மன்னர் திரும்பி டெல்லிக்கு வாரா வண்ணம் தடுத்தார். சுல்தானியப் படை டெல்லியை மூன்று மாதம் முற்றுகையிட்டது. ஸாதத்கான் டெல்லியைப் பிடிக்க இயலாதவராய் பிரூஸாபாத்திற்குப் போய், பாத்கான் மகன் நுஸரத்கானை நுஸரத் ஷா என்னும் பட்டத்தோடு மன்னனுக்கினன். ஆனால், அவனது படைகள் அவனையே எதிர்த்தமையால் அவன் முகாரப்கானிடம் சரணடைந்தான். முகாரப்கான் சரணடைந்தவனைக் கொன்று விட்டான். இந் நிலையில் டெல்லியில் இரண்டு சுல்தான்கள் இருந்தனர். இந் நிலை மூன்று ஆண்டுகளுக்கு நீடித்தது. சமாதானப் பேச்சுகள் பல நடைபெற்று இருதரப்பாரும் ஒத்துப் போகும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும், மல்லூல் இக்பால் முகாரப்கானின் வீட்டிற்குப் புகுந்து அவனைக் கொலை செய்தான். மல்லூல் தன்னையே அரசன் என்று கருதிக்கொண்டு சுல்தானின் பகைவர்களை அடக்கத் தொடங்கினன். அவன் 1398, அக்டோபரில் டெல்லியில் நுழைந்து அரசைக் கைப்பற்றும் எண்ணத்தோடு இருந்தான். ஈதிங்ஙனமாக தைமூர் சிந்து ஆற்றைக் கடந்து டெல்லியை நோக்கி விரைவதாகச் செய்தி டெல்லியை எட்டியது. தைமூரின் படையெடுப்பு இந்துஸ்தானத்தில் துக்ளக்கின் ஆட்சியை முடித்தது. தைமூரின் படையெடுப்பைப்பற்றிச் சற்று விரிவாகக் காணவேண்டும்.

தைமூர் மத்திய ஆசியாவிலுள்ள சாமர்கண்டிற்குத் தெற்கே கெட்ச் என்னும் ஊரில் 1336-ல் பிறந்தார். அவர் துருக்கர் கூட்டத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெயர் தைமூர்தான்; ஆனல், ஒரு காலத்தில் அவர் கால் ஒன்றில் அம்பு பாயவே அக் கால் முடமாகி அன்றிலிருந்து அவர் நொண்டி ஆனர். அவரை எல்லாரும் முடத்தைமூர் என்று அழைத்தனர். அவர் ஓர் எளிய நிலையிலிருந்து ஒரு பேரரசர் நிலைக்கு வந்தவர். அவர் சாதாரண மனிதராயிருந்து உலக வரலாறு கண்ட மிகப்பெரிய வெற்றி வீரர்கள் ஒரு சிலரில் ஒருவராக மதிக்கப்படும் ஒரு நிலைக்கு வந்தவர். அவருடைய பரந்த பேரரசு அதன் உச்சியில் மாஸ்கோ, கர்கேஸியா, ட்ரான்ஸ் ஆக்ஸியானு (மத்திய ஆசியாவிலுள்ள ஆக்ஸஸ் ஆற்றிற்கு அப்பாலுள்ள பிரதேசங்கள்), துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், பாரசீகம், சிரியா. குருதிஸ்தானம், சிரிய ஆசியா முதலிய நாடுகளெல்லாம் சேர்ந்தது. அவருக்கு இந்தியாவிற்கு வரவேண்டும் என்னும் ஆசையிருந்தது. முஸ்லிம்

அல்லாதவர்களை மதம் மாற்றவும், இந்தியாவில் கிடைத்ததைக் கவர்ந்து செல்லவும் அவர் மனம் நாடிற்று. அவருடைய தன்மையில் செங்கிஸ்கானின் முரட்டுத்தனமும் கஜினி மம்மூதின் சமயப் பற்றும் கலந்திருந்தன. அவரை 'வெற்றி வீரரல்லர் கொள்ளைக்



காரர்; காவலர் அல்லர் கொடுங்கோலர்' என்று வரலாற்றாசிரியர் கூறுவர். அவர் இந்தியாவிற்குப் புறப்படும் முன்னரே அவருடைய பேரனான பீர் முகம்மது (காபூலில் கவர்னராயிருந்தவன்) ஏற்கெனவே இந்தியாவிற்கொரு படையை அனுப்பி

விட்டான் என்றும், அப் படை சிந்துவைக் கடந்து மூல்தானை முற்றுகையிட்டது என்றும் செய்திகள் அவர் காதை எட்டின. கி.பி. 1398-ல் அவர் சாமர்கண்டைவிட்டுக் கிளம்பினார். அவர் ஆப்கானிஸ்தானத்தை அடைந்தபோது அங்குச் சில முஸ்லிம்கள் அவரிடம் வந்து காட்டூர் என்னுமிடத்திலுள்ள முஸ்லிமல்லாதார் அவர்களைத் துன்புறுத்துவதாகப் புகார் செய்தனர். அவரும் காஷ்மீருக்கும் காபூலுக்கும் இடையே இருந்த காட்டூர்க்கோட்டையைத் தரைமட்டமாக்கி அங்கிருந்து ஓடிப் போனவர்களைப் பிடித்து வந்து கொன்றார். இஸ்லாமை ஏற்றுக்கொள்ள மறுத்த அப் பிரதேச மக்களையெல்லாம் கொன்று அவர்களுடைய மண்டை ஓடுகளை அடுக்கிக் கோபுரங்கள் கட்டச் சொன்னார். அவர் சாதித்த இவ் வருஞ்செயல்களைப் புனித மாதமான ரம்ஸானில் குறித்துவைக்கச் சொன்னார். ஆப்கானியர்களை வென்ற பிறகு அவர் 1398-ல் சிந்து ஆற்றைக் கடந்தார். ஜீலம் கரையிலிருந்த பல சிற்றரசர்களை வென்று மேலும் முன்னேறினார். பீர்முகம்மது மூல்தானைக் கைப்பற்றிவிட்டதாகச் செய்தி வந்தது. தைமூரின் படையும் பீர் முகம்மதின் படையும் பிறகு ஒன்றுசேர்ந்து முன்னேறின. பட்நீர் என்னுமிடத்தில் துர்ச்சாந்த் என்னும் இராஜபுத்திரர் சில நாள்கள் தைமூரை எதிர்த்துப் பார்த்துவிட்டு அவரிடம் சரணடைந்தார். மேலும், முஸ்லிம் அல்லாதாரிடம் பெருஞ்சினம் கொண்ட தைமூர் அக் கோட்டையிலிருந்த இந்துக்கள் யாவரையும் கொன்றுவிடச் சொன்னார். அவர் சாதித்ததைத் தாமே சொல்லுகிறார் : 'கோட்டை தரைமட்டமாக்கப்பட்டு வீடுகள் நெருப்புக்கிரையாக்கப்பட்டு முஸ்லிம் அல்லாத குடிமக்கள் யாவரையும் கொன்றேன். ஒரு மணி நேரத்தில் 10,000 இந்துக்கள் கொல்லப்பட்டனர். சர்சூதி என்னு மிடத்திலும் இதே காரியம் செய்யப்பட்டது. ஜாட்டியர்களைத் தண்டிக்க விரும்பி அவர்களில் இரண்டாயிரவரைக் கொன்றேன். மனைவி மக்கள், ஆடு மாடுகள், சொத்து சுதந்தரம் என்பவற்றையெல்லாம் பறித்துக்கொண்டேன்.' அவர் டெல்லியருகே வந்ததும் ஒரு சிறு குதிரைப்படையை அனுப்பிக் கண்டதையெல்லாம் சூறையாடிக் கண்டவரையெல்லாம் கொன்றுவிடும்படி உத்தரவிட்டார். அவர்கள் இவ் வுத்தரவைத் தவறாமல் நிறைவேற்றினர். டெல்லிக்குள் யமுனை ஆற்றைக் கடந்து வந்தவர் ஏராளமான இந்துக்களைக் கண்டு, 'இவர்களையெல்லாம் கொல்லும் வாய்ப்புக் கிடைத்ததே!' யென்று மகிழ்ந்தார். அங்கிருந்த இராஜபுத்திர இந்துக்கள் தங்கள் மகளிரையெல்லாம் வீடுகளில் வைத்துப் பூட்டி அவ் வீடுகளுக்கு நெருப்பு வைத்துவிட்டுத் தாங்களும் சண்டையில் புகுந்து உயிர் நீத்தனர். 1398, டிசம்பரில் அதுவரை தைமூரைத் தடுத்து நிறுத்த யாதொரு முயற்சியும் செய்யாத சுல்தான்

மம்மூது, வஜீர் மல்லூவின் ஆதரவு கொண்டு தைமூரைத் தடுக்க முயன்றார். அதன் விளைவாக நடந்த சண்டையில் டெல்லிசுல்தான் தோற்றுத் தமது படையுடன் ஓடினர். அதன் பிறகு நடந்த செய்திகள் சொல்லும் தரத்தவை யல்ல. அப்போது தைமூரின் முகாமில் ஒரு லட்சம் இந்துக் கைதிகள் இருந்தனர். அக் கைதிகளிற் சிலர் டெல்லி சுல்தான் சார்பாகவும் தைமூருக்கு எதிராகவும் பேசியதாகச் செய்தி கிடைத்தது. இதையறிந்த தைமூர் அந்த ஒரு லட்சம் முஸ்லிம் அல்லாதாரையும் கொன்றுவிட உத்தரவிட்டார். அவ் வாண்டு டிசம்பரில் டெல்லிக்கு வெளியே நடந்த மற்றொரு போரில் சுல்தான் மம்மூதும், மல்லூவும் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால், டெல்லியிலிருந்த மக்களின் நிலை மிக மோசமாயிற்று. அந் நகரத்துள் நுழைந்த தைமூரின் படைகளை டெல்லிவாசிகளில் சிலர் படைகொண்டு எதிர்த்தனர். அதற்குப் பிறகு தைமூரின் துருக்கர்கள் செய்த காரியத்தைத் தைமூரே கூறட்டும். அவர் தமது சுயசரிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: 'வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை இரு நாள்களிலும் 15,000 துருக்கர்களும், கொல்லுவதிலும் கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டனர். ஏராளமான கைதிகள் பிடிபட்டனர். பல வகையான நவரத்தினங்களும், தங்கமும், வெள்ளியும், அவற்றாலான பாத்திரங்களும், இந்து மகளிர் அணிந்திருந்த அளவிட முடியாத ஆபரணக் குவியல்களும் அவர்களுக்குக் கிடைத்தன.' அவர் படை சென்றவிடமெல்லாம் இதே காரியத்தைத் திரும்பத் திரும்பச் செய்தது. தலைநகரைச் சுற்றியிருந்த எல்லாப் பிரதேசத்தையும் சுடுகாடாக்கினர். அவர் இரத்தம் சிந்த அஞ்சாத கொள்ளைக்காரர். டெல்லியிலிருந்த மக்களில் பெரும்பாலோர் இறந்து ஒழிந்தனர். அவர் சிந்துநதியை மறுபடியும் கடந்துபோன பிறகு இந்துஸ்தானத்தை ஆள ஆளில்லை. குடியோடிப்போன டெல்லி நகரத்தில் மல்லூ ஆண்டார். சுல்தான் முகம்மது திரும்பவும் டெல்லிக்கு வந்தபோது மல்லூ அவர் பெயரால் ஆட்சி நடத்தினராயினும் அவர் ஒரு கைதி போலவே நடத்தப்பட்டார். தம்மை மல்லூ நடத்திய விதத்தைக் கண்டு பொறுமல் இப்ராஹிம்ஷா இருந்த கனோஜிற்குச் சுல்தான் ஓடினர். இப்ராஹிம் அவரைக் கனோஜில் வசிக்க அனுமதித்தார். மல்லூ கனோஜியைக் கைப்பற்ற முயன்று தோற்றார். மல்லூ பிறகு மூல்தான்மீது படையெடுத்துச் சென்று அங்குக் கிஸர்கானோடு பொருது அவரால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். மல்லூ இறந்த பிறகு மகம்மது ஷா டெல்லிக்குத் திரும்பினர். அங்குத் தௌலத்கான் லோடி என்னும் ஓர் ஆப்கானியருடைய உதவிகொண்டு டெல்லியைச் சுற்றியிருந்த ஆற்றிடைப் பிரதேசத்தை ஆண்டுவந்தார். கிஸர்கான்

தௌலத்கான் லோடிக்குப் போட்டியாகக் கிளம்பினான். கி.பி. 1408-க்கும் 1412-க்குமிடையே சுல்தான் மம்மூது ஷாவிற்கும் கிஸர்கானுக்குமிடையே பலத்த போட்டி நடந்தது. கிஸர்கான் ஒருமுறை பிரோஸாபாத்தைக் கைப்பற்றினாராயினும் அவரால் அதைத் தொடர்ந்து தமது ஆட்சியில் வைத்துக்கொள்ள முடிய வில்லை. கி.பி. 1412-ல் மம்மூது ஷா இறந்தார். அவர் ஆண்ட 18 ஆண்டுக் காலத்தில் தாம் நேரடியாக யாதோர் அதிகாரமும் செலுத்த இயலாமல் தம்முடைய படைத் தலைவர்கள், மந்திரிகள் ஆகியோர் ஆதரவில் அங்குமிங்கும் அலைந்துகொண்டே இருந்தார். அடிமைச் சுல்தான்கள் ஆட்சிக்குப் பிறகு கியாஸுத்தீன் துக்ளக் நிறுவிய துக்ளக் ஆட்சி இவரோடு முடிவுபெற்றது.

சுல்தான் மம்மூது ஷா இறந்தபிறகு கி.பி. 1414 வரை டெல்லியில் அரசாட்சி என்பதொன்று நடைபெறவில்லை என்றே சொல்லவேண்டும். அப்பொழுது, அதாவது கி.பி. 1413-ல், டெல்லியில் இருந்த பிரபுக்களின் வேண்டுகோளுக் கிணங்கத் தௌலத்கான் லோடி அரசரானார். ஆனால், மூல்தானிலிருந்த கிஸர்கான் தௌலத்கான் லோடியின் அரசை ஏற்றுக்கொள்ளாமல் சம்பால் பிரதேசத்தைச் சாம்பலாக்கி டெல்லியையே முற்றுகை யிட்டார். இம் முற்றுகை நான்கு மாதம் நடந்து, தௌலத்கான் லோடி சிறைபிடிக்கப்பட்டுக் கிஸர்கான் சுல்தான் ஆனார்.

ஈ. சையிதுகள் (1414 – 1451)

சுல்தான் ஆன கிஸர்கான் (1414-1421) சையிது குடியைச் சேர்ந்தவர். சையிதுகள் அரபுகள். பிரூஸ் துக்ளக் அவரை மூல்தானில் கவர்னராக நியமித்திருந்தார். தைமூர் படையெழுச்சி நடந்தபொழுது கிஸர்கான் அவருக்கு ஆதரவு கொடுத்தார். மம்மூதுஷா ஆண்ட காலமெல்லாம் மல்லூவிற்கு எதிராக ஆதரவு அளித்தவர். அவரது ஆட்சி தொடங்குமுன்பே நாற்புறங்களிலும் கலகங்கள் தொடங்கியிருந்தன. அவற்றை அடக்குவதிலேயே அவரது ஆட்சிக்காலம் கழிந்தது. சுல்தானியத்திலிருந்த துருக் கிகள் சையிது வம்சத்தைச் சேர்ந்த இப் புதுமன்னரது ஆட்சியை எளிதில் ஏற்றுக்கொள்ளவில்லை. மகாபத்கான் என்னும் துருக்கப் பிரபு கி.பி. 1418-ல் அவரை எதிர்த்தார். அவர் இருந்த பதாவுன் கோட்டையை முற்றுகையிடச் சென்ற கிஸர்கான் டெல்லியில் தமது அரண்மனையிலிருந்த துருக்க அடிமைகள் கலகமிட்ட செய் தியை அறிந்து டெல்லிக்குத் திரும்புமாறாயிற்று. கி.பி. 1414-ல் குஜராத்தில் நடந்த ஒரு கலகத்தை அடக்கச் சென்றார். கி.பி. 1421-ல் மேவாட்டைச் சூறையிட்டுக் கோட்லாக் கோட்டையை

அழித்தார். குவாலியர்க் கோட்டையையும் நாசமாக்கி அங்கிருந்தோரிடம் கப்பம் வாங்கி ஓரளவு வெற்றியோடு திரும்பியவர்க்கு வரும் வழியிலேயே சுரம் கண்டது. டெல்லிக்குத் திரும்பியவர் 1421, மே 20-ல் இறந்தார். அக் காலத்து மன்னர்களிடையே குடிகொண்டிருந்த தீப்பழக்கங்களில் சிலவே அவரிடம் இருந்தன. அரசர் என்னும் முறையில் அவர் மிகச் சாதாரணமானவர். தைமூரின் படையெடுப்புக்குப் பிறகு பாழ்பட்ட நாட்டைச் சீர்படுத்த அவரால் முடியவில்லை. அவர் தம் பெயரால் நாணயங்களையும் வழங்கவில்லை. ஆதலால், அவர் தமக்கென்று நாணயமில்லாமலிருந்தார். அவரைவிட இன்னும் எவ்வளவோ திறமைசாலிகளாலும் ஒன்றும் செய்ய முடியாதவாறு கோலோச்சும் நிலையில் அவர் இருந்தது அவருடைய போகூழே ஆகும்.

கிஸர்கான் இறந்தபிறகு அவருடைய மகன் முபாரக், முபாரக்ஷா (1421-1434) என்னும் பட்டத்தோடு மன்னரானார். அவர் தந்தையைப்போலல்லாமல் தமது ஆட்சியின் எட்டாவது ஆண்டில் தம் சொந்த நாணயங்களை வழங்கினார். அவர் காலத்திலேயே கோக்கர்கள், துருக்கு பச்சாக்கள், மொகலாயர் என்பாரிடமிருந்து தொல்லைகள் தோன்றலாயின. கோக்கர்கள் காஷ்மீர் அரசனின் உதவிகொண்டு ஜலந்தரைச் சூறையாடி சிர்ஹிந்த்வரை வந்தனர். அவர்களை இஸ்லாம்கான் லோடி என்னும் படைத்தலைவர் தடுத்து நிறுத்தினார். முபர்ரக்ஷாவே நேரில் சென்று அவர்களை விரட்டினார். அப்போது பஞ்சாபில் பஹ்லூல் லோடி என்பவர் கவர்னராயிருந்தார். கோக்கர் தலைவனான ஜஸராத் பஹ்லூல் லோடியைத் துணை சேர்த்துக்கொண்டு முபாரக் ஷாவைக் கவிழ்த்துவிடச் செய்த சதி பலிக்கவில்லை. 1442-ல் ஜஸராத்தை அவனுடைய மனைவியே கொன்றுவிட்டாள். தபர்ஹிந்தாவிலிருந்த துருக்கு பச்சா, ஷேக் சலீம் என்பானுடைய அடிமை. ரஷேக்சலீம் கிஸர்கான் காலத்தில் சர்சூதி என்னுமிடத்தில் அதிகாரம் செலுத்தியவர். தபர்ஹிந்தாவில் நேர்ந்த பல கலகங்களைத் தொடர்ந்து அடக்குவதில் முபாரக் ஷா முனைய வேண்டியதாயிற்று. அவரது ஆட்சியின் 14ஆம் ஆண்டில் சர்வார் உல்முல்க் என்னும் மந்திரி மன்னரை எதிர்த்துச் சதி செய்தார். மன்னர் தம் அதிகாரங்களை உடைத்துவிட்டார் என்று எண்ணிக்கொண்டார். சர்வார் உல்முல்க் சில ஆள்களை விட்டு அவரைக் கொல்லச்செய்தார். முபாரக்ஷா, முபாரகாபாத் என்னும் புதியதொரு நகரத்தை நிர்மாணித்திருந்தார். அங்கிருந்த மசூதியில் தொழச் சென்றிருந்தபோது 1434-ல் பிப்ரவரி 19-ல் அவர் கொலைசெய்யப்பட்டார்.

அவருக்குச் சமய வெறி அதிகமில்லை. அவர் ஒரு நகரத்தையும் ஒரு மசூதியையும் கட்டினார். 'தாரிகி முபாரக் ஷாஹி' என்னும் நூலை இயற்றிய யஷ்யா சில் ஹிந்து என்னும் ஆசிரியரை அவர் ஆதரித்தார். முபாரக் ஷாவிற்குப் பிறகு அவருடைய சகோதரன் மகனும் தத்துமகனுமான மகம்மதுகான் பின் பரீத்கான் (பரீத் கான் மகன் மகம்மது கான்) அரியணை ஏறிச் சுல்தான் மகம்மது ஷா (1434-1445) என்னும் பட்டத்தை ஏற்றுக்கொண்டார். சுமார் ஆறுமாத காலத்திற்கு ஆட்சியின் அதிகாரம் சர்விார் உல்முல்க் கையிலேயே இருந்தது. அவனுக்குக் கான்ஜஹான் என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது. அவன் மன்னரைக் கொன்று அதிகாரத்தைக் கைப்பற்றச் செய்த முயற்சி வீணாயிற்று. அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுக் கமால் உல்முல்க் என்பவர் முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு மகம்மது ஷா தாமே அதிகாரத்தைச் செலுத்தி ஆளத் தொடங்கினார். பிரபுக்கள் எல்லாரும் அவரை ஆதரித்தமையால் அவர் ஆட்சியை நல்ல முறையில் நடத்தியிருக்கக்கூடும். ஆனால், அவர் களியாட்டங்களில் ஈடுபட்டு அரசாட்சியை மறந்தார். அதனால் நாலாபுறத்திலும் கலகங்கள் தோன்றின. டெல்லியிலிருந்த சில பிரபுக்கள் மாளவத்தில் சுல்தான் மம்மூது கில்ஜியை டெல்லிக்கு வருமாறு அழைத்தனர். மகம்மது ஷா தம்முடைய பாதுகாப்பிற்காகச் சில்ஹிந்திலிருந்த பஹ்லூல் லோடியைப் படையோடு அழைத்துக் கொண்டார். பஹ்லூல் பெரும்படையுடன் வந்து உதவியளித்தார். ஆயினும், மகம்மது ஷாவிற்கும் மம்மூது கில்ஜிக்கும் போர் தொடங்கிய மறுநாளே வெற்றி கிட்டக்கூடிய வாய்ப்பிருந்தும் மகம்மது ஷா பஹ்லூல் லோடியைக் கலந்து ஆலோசியாமலேயே பகைவனோடு பேச்சு வார்த்தை தொடங்கினார். இதை வேண்டிக் கொண்டிருந்த கில்ஜியும், சுல்தான் மகம்மது ஷாவின் வேண்டுகோளுக்கிணங்கித் திரும்பினார். இதை விரும்பாத பஹ்லூல் லோடி திரும்பிய பகைவனின் படைகளைப் பின்புறமிருந்து தாக்கி நாசம் செய்தான். இவ் வெற்றியைப் பல பிரபுக்கள் கொண்டாடினார்கள். சுல்தான் அவருக்குக் கானிகானான் என்று பட்டமளித்தார். இதிலிருந்து பஹ்லூல் தமது பலத்தை மிகவும் அதிகரித்துக்கொண்டார். கி.பி. 1443-ல் டெல்லியைத் தாக்கிப் பிடிக்க முயன்றார். ஆனால், வெற்றி பெறவில்லை. மகம்மது ஷாவின் கடைசிக் காலத்தில் அவருடைய ஆட்சி கலகலத்தது. மூல்தான் சுதந்தர மெய்தியது. கிழக்கே இருந்த ஷார்கிகள் சுல்தானுடைய சில பர்கானாக்களைத் தம் வசப்படுத்திக்கொண்டனர். 1445-ல் அவர் இறந்ததற்கு முன்பு மகம்மது ஷா பதாலூனிலிருந்த தம் மகனை அலாவுதீனைத் தமக்குப்பின் சுல்தானாக நியமித்தார்.

அலாவுதீன் (1445 - 1551) ஆறு ஆண்டுக்காலம் ஆண்டார். அவர் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க தொன்றும் நிகழவில்லை. அவர் காலத்தில் டெல்லி சுல்தானைவிட பஹ்லூல் லோடி அதிக மான ஆதிக்கம் வகித்தார். ஆலம் ஷா என்னும் பட்டத்தை வகித்த அலாவுதீன் இனித் தம்மால் ஆட்சி நடத்தமுடியாதென்று உணர்ந்து பதாவூனுக்குப் போய்க் களியாட்டத்தில் மூழ்கினர். டெல்லியிலிருந்த வஜீரான ஹமீதுகான் பஹ்லூல் லோடியை டெல்லிக்கு வரவழைத்து அரசேற்கச் செய்தார். பஹ்லூலை மன்னராக்கிவிட்டு அதிகாரத்தைத் தாம் வகிக்கலாம் என்று அவர் நினைத்தார். ஆனல், பஹ்லூல் ஹமீதுகானை ஒழித்துக்கட்டினர். அன்றியும், தாம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாகவும் அலாவுதீன் பதாவூனிலேயே இருக்கலாமென்றும் அறிவித்துவிட்டார். ஆலம் ஷா பதாவூனில் கி.பி. 1478-ல் இறந்தார்.

உ. லோடிகள் (1451 — 1526)

பஹ்லூல் லோடி (1451 - 1489)

ஆப்கானியர் கூட்டத்தில் லோடி வம்சத்தில் ஷாஹுகேல் குடும்பத்தில் தோன்றியவர் பஹ்லூல் லோடி. அவர் தமக்கு அரசு எய்துவதற்கு உதவி செய்த ஹமீதுகானை இடையூறு செய்யாத வண்ணம் நீக்கிவிட்டு இந்துஸ்தானத்தில் மலிந்திருந்த கலகக்காரர் களையெல்லாம் அடக்கிவைப்பதிலும் வெற்றி கண்டார். அவர் பெருமுயற்சி செய்து ஜான்புரியைக் கைப்பற்றி அங்குத் தம் மகன் பார்பக் ஷாவைக் கவர்னராக நியமித்தார். ஆட்டங்கண்டுபோன சுல்தானியத்தை ஓரளவேனும், தாற்காலிகமாகவேனும் நிலை பெறச் செய்த பெருமை பஹ்லூலைச் சாரும். அவர் மக்களுக்கு நன்மை செய்ய விரும்பினர். ஆட்சியையும் நல்ல முறையில் அமைக்க விரும்பினர். ஆனல், எப்பொழுதும் எங்கும் போரும் கையுமாக இருந்தமையால் இவற்றையெல்லாம் அவரால் நிறை வேற்ற முடியவில்லை. இவர் எல்லாரையும் நல்ல முறையில் நடத்தினர். தம் தீராப் பகைவரான ஷார்க்கி மன்னர் ஹுசேன் ஷார்க்கியைக்கூட நண்பன் என்னும் முறையில் நடத்தினர். ஆனல், ஹுசேன் ஷார்க்கிக்கு அவ்வப்போது கெட்ட யோசனை களைச் சொல்லிவந்தார். அவர் தம் மனைவி பீபிகான்ஸா என்பாளை இருமுறை சிறைபடுத்தித் திரும்பத் திரும்ப ஹுசேன் ஷார்க்கியிடமே அனுப்பிவிட்டார். தாம் இறப்பதற்கு முன்பாகத் தம்முடைய இராச்சியத்தைப் பல ஆப்கானியரிடையே தமக்கு உட்பட்டு ஆளும்படி பகிர்ந்து கொடுத்தார். அவர் கி.பி. 1489, ஜூலை மாதத்தில் ஜலாலி நகரத்தில் இறந்தார்.

சிகந்தர்ஷா லோடி (1489—1517)

பஹ்லூல் நிஜாம்கானைத் தமக்குப் பின் மன்னராகுமாறு நியமித்தார். இவர் பட்டம் எய்துவதைத் தடுப்பதற்கு வேறு சிலர் போட்டியிட்டனர். ஆனால், நிஜாம்கான் அவர்களை யெல்லாம் ஒருவாறு நீக்கிவிட்டு சிகந்தர் ஷா என்னும் பட்டத் தோடு பதவியேற்றார். தம் தம்பியான பார்பக் பட்டத் திற்குப் போட்டியிட்டாராயினும், பெருந்தன்மையோடு அவரை மன்னித்து ஜான்புரியில் கவர்னராக்கினார். ஆனால், பார்பக் தம் அண்ணனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தமை யால் சிகந்தர்ஷா அவரைப் போருக்கு இழுத்துத் தோற்கடித்தார். ஆயினும், பார்பக்கை மறுபடியும் ஜான்புரிக்கே அனுப்பிவைத் தார். ஜான்புரியிலிருந்த ஜமீந்தார்கள் அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தமையால் சிகந்தர் ஷா பார்பக்கை நீக்கிவிட்டுத் தாமே ஜான்புரியின் ஆட்சியை மேற்கொண்டார். ஜான்புரியில் கலகம் செய்த ஜமீந்தாரருக்கு ஹுசேன் ஷார்க்கி பேராதரவு கொடுத்தார். அன்றியும், அவர் சிகந்தரோடு போர் புரியவும் துணிந்தார். 1494-ல் நடந்த சண்டையில் ஹுசேன் ஷார்க்கி தோற்கடிக்கப்பட்டார். தோற்றவர் வங்காளத்துக்கு ஓடினார். சிகந்தரின் அதிகாரம் பீகார் முழுவதும் பரவிற்று. இராஜ புதனத்தின் சில பகுதிகள்—உதாரணமாக, குவாலியர், ரேவா முதலியவை—சிகந்தருக்குப் பணிந்தன. அவருக்கு டெல்லியை விடுத்து வேறு ஓர் அழகிய தலைநகரத்தை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றிற்று. ஆகையால், ஆக்ராவைக் கயானாவில் அமீராக இருந்த கல்தான் ஷரப் என்பாரிடமிருந்து பெற்றுத் தமது தலைநகரமாக்கிக்கொண்டார் (1504). சிகந்தர் தம் மக்களுடைய நல்வாழ்க்கையில் நாட்டமுடையவராயினும் அவரே ஒரு கவியாயிருப்பினும் அவரது வள்ளன்மை பல புலவர்களை அவரிடம் ஈர்த்தன. ஆயினும், அவர் இஸ்லாமைத் தவிரப் பிற மதத்தார்களுக்கு ஆதரவும் பரிவும் காட்டாதவர். அவர் தாய் ஓர் இந்து. அவர் மணக்க விரும்பியவள் ஓர் இந்து. ஆனால், அவர் இந்துக் கோயில்களைத் தரைமட்டமாக்கினார். அங்கு மசூதிகளைக் கட்டினார். இந்துப் படிமங்களைக் கசாப்புக் கடைக் காரர்கள் தராசுக்கல்லாக உபயோகப்படுத்தும்படி விநியோகம் செய்தார். மதுராவில் கோயில் குளத்தில் வழிபாடு செய்பவர்கள் குளிக்கக்கூடாது என்று தடுத்தார். அவர் 1517, நவம்பர் 21-ல் தொண்டையில் ஒரு வியாதி கண்டு இறந்தார்.

இப்ராஹிம் லோடி (1517-1526)

சிகந்தர் இறந்தபிறகு அவருடைய மகன் இப்ராஹிம் சுல்தான் ஆனார். அவர் தம் தம்பியான ஜலால்கான் என்பவனை

ஜான்புரியில் தனி அரசராக நியமித்தார். ஜலால் ஜான்புரிக்குப் புறப்பட்டதும் அவர் செய்தது அறிவீனம் என்பதை உணர்ந்து தம் தம்பியின் அதிகாரத்தை ஏற்று நடக்க வேண்டாவென்று ஜான்புரியிலிருந்த பிரபுக்களுக்குச் சொல்லி அனுப்பினூர். ஆனுல், ஜலால் சில பிரபுக்களைத் தம் வசம் வைத்துக்கொண்டு இப்ராஹிமை எதிர்த்தார். ஆனுல், இப்ராஹிம் படைகொண்டு சென்றபோது ஜலால் குவாலியருக்கு ஓடினூர். அங்கிருந்து மாளவத்திற்கும் இறுதியில் கோண்டுவானுவிற்கும் சென்ருர். அங்கிருந்து அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு சுல்தானுல் சிறை பிடிக்கப்பட்டார். சிறைபிடிக்கப்பட்ட ஜலால் ஜான்சிக்கு அனுப்பப்பட்டார். ஆனுல், போகும் வழியிலேயே அவர் ஏவலர்களால் கொலையுண்டார். குவாலியரில் ஜலால் தங்கிய தால் இப்ராஹிம் குவாலியரைத் தாக்கிக் கைப்பற்றினூர். பிறகு விக்ரமஜித் என்பவர் ஆண்ட காராவை வலுவான படையால் தாக்கிக் கைப்பற்றினூர். ஆனுல், அவருடைய படை மேவாரில் இராணு சங்கா என்பவரால் தோற்கடிக்கப்பட்டது.

அவர் தம் தந்தையைப்போல் அல்லாமல் அவைக்களத்தி லிருந்த ஆப்கானியரை (அவரும் ஓர் ஆப்கானியரே) தமது சமானராக நடத்தாமல் மன்னர்க்குரிய மரியாதையோடு தம் மிடம் நடந்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினூர். அன்றியும் ‘மன்னன் ஆணைக்கு மறுப்பில்லை’ என்னும் முறையில் ஆட்சி நடத்தவேண்டு மென்று அவர் கருதினூர். இக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாத இஸ்லாம்கான், சையிதுகான், ஹஸம் ஹுமாயூன் படைதிரட்டினூர். அவர்களை எதிர்த்துப் பொருதற்குச் சுல்தானியப் படைகள் வந்தன. அப் போரில் இஸ்லாம்கான் கொல்லப்பட்டார். இப்ராஹிம் லோடி தம்மை எதிர்த்தவர்கள் எவரையும் எவ்விதத்திலாயினும் தீர்த்துக்கட்டவேண்டும் என்று நினைத்து அவ்வாறே செய்யத் தொடங்கினூர். பிரபுக்கள் இந்த ஆட்சியில் தாங்கள் பாதுகாவலோடு இருக்கமுடியாதென்று கருதித் தங்களுக்குள் முயற்சி செய்து தங்கள் நிலையைக் காத்துக் கொள்ளவும், சுல்தானின் போக்கைக் கண்டிக்கவும் முற்பட்டனர். தரியாகான் லோஹானியின் மகன் பஹர்கான் என்பவன் பீகாரில் சுதந்தர ஆட்சி அமைத்துக்கொண்டான். அவனேடுகூடச் சேர்ந்து சுல்தானை எதிர்த்தவர்களில் முக்கியமானவர்கள் நஸிர் கான் லோஹானி, பாத்கான், ஷெர்கான்சூர் என்பவர்கள் ஆவார்கள். இவர்களுள் இறுதியில் சொல்லப்பட்ட ஷெர் கான்சூர் என்பவரே பிற்காலத்தில் ஷெர்ஷா என்னும் பெயரோடு சுல்தான் ஆனூர். இப்ராஹிம் லோடி கிழக்குப் பிரதேசத்தில் கலகக்காரர்களை ஒடுக்குவதில் முனைந்திருந்தார்.

அப்பொழுது மேற்கேயும் வடமேற்கேயும் நடந்துகொண்டிருந்த மாபெரும் சதியைப்பற்றி அவர் ஒன்றும் அறியாமலிருந்தார். பஞ்சாபில் கவர்னராயிருந்த தௌலத்கான் லோடி மத்திய ஆசியாவில் ஆளுவதற்கு அரசு கிடைக்காமல் திரிந்துகொண்டிருந்த பாபர் என்னும் மொகலாயரை இந்தியாமீது படையெடுக்குமாறு வேண்டிக்கொண்டிருந்தார். இதைப்பற்றிச் சிறிது கேள்வியுற்ற இப்ராஹிம் தௌலத்கானை உடனே டெல்லிக்கு வரும்படியாக உத்தரவிட்டார். இப்ராஹிமின் கொடிய தன்மையை அறிந்திருந்த தௌலத்கான் லோடி டெல்லிக்குச் செல்லும் அறிவின்மையைச் செய்யத் தயாராக இல்லை. அவர் பாபரோடு பேச்சுவார்த்தை நடத்தத் தம் மகனைக் காபூலுக்கு அனுப்பினர். குஜராத்திலிருந்து ஆலம்கான் என்பவனும் (இப்ராஹிமின் மாமன்) பாபரைக் காணக் காபூலுக்கு வந்தார். இவ் வேண்டுகோள்களுக்கு இணங்கிப் பாபர் லாகூர்மீது படையெடுத்தார் (1524). நிலைமையைக் கண்டு அஞ்சிய தௌலத்கான் லோடி மூல்தானுக்கு ஓடிவிட்டார். சுல்தானியப் படையைப் பாபர் தோற்கடித்தார். தௌலத்கான் லோடி தாம் இட்ட திட்டம் வெற்றிபெற்றதால் பெருமிதம் கொண்டார். ஆனல், பாபர் தௌலத்கானை நீக்கிவிட்டுத் தம்முடைய ஆள்களில் ஒருவனை லாகூர் கவர்னராக நியமித்தார். இதனுல் தௌலத்கான் ஏமாற்றமடைந்தார். இந் நிலையில் ஆலம்கானும், தௌலத்கானும் 1525-ல் டெல்லியைத் தாக்கினர். ஆனல், இப்ராஹிமால் தோற்கடிக்கப்பட்டனர். இதற்கிடையே இந்தக் கான்களையெல்லாம் நம்பிப் பயனில்லையென்று பாபர் தமது பலத்தை மட்டுமே நம்பிப் பஞ்சாபினுட் புகுந்தார். பஞ்சாபைச் சிறிது சிறிதாக வென்ருர். அங்கிருந்த தம் ஆப்கானியப் பகைவர்களை எதிர்த்தார். அங்கிருந்து டெல்லியைத் தாக்கப் புறப்பட்டார். இப்ராஹிம் அவரை எதிர்க்க முன்வந்தார். இரண்டு படைகளும் 1526, ஏப்ரல் 20ஆம் நாள் பாணிபட்டில் பொருதன. இப்ராஹிமின் படை எண்ணிக்கையில் மிகப்பெரிதாயிருந்தும் பாபரிடம் தோல்வியுற்றது. அப் போர்க்களத்தில் இப்ராஹிம் கொல்லப்பட்டார். இந்திய வரலாற்றையே திசைதிருப்பும் வெற்றியாக அமைந்தது அது. அவ் வெற்றிக்குக் காரணம் பாபரின் சிறந்த போர்த்திறமை, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட குதிரைப்படையை நன்கு பயன்படுத்தியமை, மற்றும் முதன் முதலாக அப் போரிலேயே பெருமளவு பயன்படுத்தப்பட்ட பீரங்கிப்படை.

இப்ராஹிம் லோடி தமது சொந்த வாழ்க்கையில் எந்தக் குறையு மில்லாதவர். அரசியல் வாழ்க்கையில் ஆபத்திற்

கிடமான இறுமாப்பும், அளவிற்கு விஞ்சிய தன்னம்பிக்கையும் அவருடைய பெரும்பகையாய் அமைந்தன. அவருடைய ஆட்சிக் காலத்தில் விவசாயம் நன்கு நடைபெற்றது. மக்கள் சுகமாக வாழ்ந்தனர். பொருள்கள் மலிவாகவும் ஏராளமாகவும் கிடைத்தன. ஆனால், இதற்கெல்லாம் அவர் செய்தது என்ன என்பது புரியவில்லை. அவர் ஆண்டது மொத்தம் ஒன்பது ஆண்டு கள்தாம். விவசாயம் நன்கு தழைத்தமைக்குக் காரணம் பிருஸ் ஷாவின் வேளாண்மைக்கோட்பாடுகள், அவருடைய நீர்ப்பாசனத் திட்டம் ஆகியவையேயாம். இப்ராஹிம் லோடி காலத்தில் அவருக்குச் சற்று முன்பு ஆண்டவர்கள் காலத்தைவிட மிகக் குறைவான போர்களே நடைபெற்றமையும் காரணமாயிருக்க யிருக்கலாம்.

9. டெல்லி சுல்தானியத்தின் வீழ்ச்சி

டெல்லி சுல்தானியத்தை நிறுவியவர் முயிஸுத்தீன் முகம்மது கோரி. ஆனால், அவர் இங்கிருந்து ஆளவில்லை. தாம் வென்ற நாட்டைக் கண்காணிப்பதற்காகத் தம் படைத் தலைவர்களில் ஒருவரான குத்புதீன் ஐபெக் என்பவரை டெல்லி அருகே போர் முகாமிட்டிருக்கச் செய்தார். ஆனால், ஐபெக் டெல்லியையே தமது தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்தால்தான் வென்ற பகுதிகளை நன்கு நிர்வகிக்க முடியும் என்று எண்ணி டெல்லிக்கே வந்து விட்டார். அதுதான் டெல்லி சுல்தானியத்தின் தொடக்கம். அச் சுல்தானியத்தின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பவற்றை நோக்கும்பொழுது இரண்டாம் தராயின் போருக்கும் முதல் பானிபட் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் பல வம்சங்கள் (அவையெல்லாம் முஸ்லிம் வம்சங்களாய் இருந்தமையால் அவற்றின் ஆட்சிக் காலத்தை டெல்லி சுல்தானியக் காலமென்று பொதுப் படையாகக் கூறுதல் மரபு) ஆண்டன என்பது விளங்கும். அவை யாவன: அடிமை, கில்ஜி, துக்ளக், சையிது, லோடி என்பன. பல எதிர்பாராத வசதிகள் அவ்வப்போது தோன்றியமையாலும் பாபர் போன்ற திறமைசாலியான புறத்தார் அதுவரை தோன்றாமையாலும் டெல்லி சுல்தானியம் அத்துணை நாள் ஆதிக்கத்திலிருந்தது. மகம்மது பின் பக்தியார் என்பாருடைய தீரச் செயல்களால் கிழக்கு இந்தியாவை வென்றமையும், பால்பனின் உறுதியான ஆட்சியால் சுல்தானியம் சிதறாமல் இருந்தமையும், அலாவுதீனின் உலகியல் அறிவு மிகுதியால் நிர்வாகத் துறை வலுப்பட்டமையும், அலாவுதீனின் உண்மையான அரசியல் கோட்பாடுகளின் விளைவாக யாதவர் நாட்டைத் தவிர வேறு எந்தத் தென்னிந்திய இராச்சியமும் இந்துஸ்தானத்தோடு இணைக்கப்படாமல் இருந்தமையால் சுல்தானியம் வலுவோடு இருந்தமையும், மகம்மது-பின்-துக்ளக்கின் 'துக்ளக்' ஆட்சியாலும், மக்கள் துன்புற்றும் நாடு சிதறுண்டும் பல கேடுகள் விளைந்தும்கூட

சுல்தானியம் மேலும் ஓர் அரசியல் ஒன்றியமாக இருந்ததற்குக் காரணம், பால்பன் அலாவுதீன் இட்ட அடிப்படையே என்பதும் ஒருவாறு விளங்கும். சுல்தானியத்தில் இருவகைக் குடிமக்கள் இருந்தனர். ஒன்று, ஆளும் முஸ்லிம்களின் மதத்தைச் சேர்ந் தவர்கள் ; இரண்டு, அதைச் சாராத இந்துக்கள். பிரூஸ் துக்ளக், சிக்கந்தர் ஷா முதலிய மதத்தில் மிகைப்பற்றுக்கொண்ட முஸ்லிம்கள் ஆண்ட காலத்தில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கு மிடையே இருந்த மனவேற்றுமை அம் மன்னர்களுடைய சமயக் கோட்பாடுகளால் விரிந்தன என்பதும் சுல்தானியத்தின் வரலாற்றை அறிந்தவர்களுக்கு எளிதில் புலப்படும். அளவிறந்த போர்கள் ஓய்ச்சலின்றி ஆங்காங்கு நடைபெற்றன. ஆதலால், மக்களுடைய அமைதியான வாழ்க்கை பெரும்பாலும் பாதிக்கப் பட்டது. இந்துக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் ஜிஸியா விதிக்கப்பட்டது. இராஜபுத்திரர்களும் அலாவுதீன் காலத்தி லிருந்தே சுல்தானியத்திற்கு ஒவ்வோரமயங்களில் ஆதரவு அளிக்கத் தொடங்கினர். பல மங்கோலியப் படையெடுப்புகளை அவ்வப்போது திறமையோடு எதிர்த்து விரட்டினார்கள் டெல்லி சுல்தானியர்கள். ஆயினும், கொள்ளையடிக்க வந்த தைமூர் போன்றவர்களும் நாடாளவந்த பாபர் போன்ற வர்களும் படையெடுத்த காலத்தில் அவர்களைத் தடுப் பாரில்லாமல் இருந்தது. தைமூர் படையெடுப்பு சுல்தானிய வீழ்ச்சிக்கு ஒரு முக்கியமான காரணம். டெல்லி சுல்தானியம் அமைக்கப்பட்டபோது இந்திய அரசர்களிடையே ஒற்றுமை உணர்ச்சி யில்லாததால் புறத்தார் இந் நாட்டை வெல்ல முடிந் தது. இப்ராஹிம் லோடியின் தன்மையும் அரசியல் வழிமுறைகளும் அவருடைய பிரபுக்களிடையே ஆத்திரத்தை உண்டாக்கின. அவர்கள் புறத்தான் ஒருவனை இந்தியாமீது படையெடுக்கும் படியாக வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. சுல்தானிய வீழ்ச்சியின் முக்கியமான காரணம் அச் சுல்தானியத்திற் கென்றே தனிப்பட்ட ஆட்சிமரபுகளும் நிர்வாக முறைகளும் இல்லாமல் தனித்தனி மன்னர்களுடைய திறமையைப் பொறுத்தே ஆட்சியின் திறமை அமைய வேண்டியிருந்ததும் ஒரு காரணம்.

10. சுல்தானியக காலத்தின் ஆட்சி முறைகளும் சமுதாய மரபுகளும்

1. ஆட்சிமுறைகள்

இஸ்லாமிய அரசியல் கோட்பாடு ஷரியத் என்னும் இஸ்லாமியச் சமயச் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவை. அக் கொள்கைப்படி கடவுளே இவ் வுலகத்தின் ஆதாரமான ஆட்சியாளர். அவர் கலீப், சுல்தான், பாச்சா என்னும் பெயர்களைக்கொண்ட மன்னர்களின் வாயிலாக இவ் வுலகை மறைந்து நின்று ஆளுகிறார். ஆகையால் குரான், ஷரியத் இவற்றிற் கண்ட விதிமுறைகளுக்கு அடங்கி ஆட்சி செலுத்த வேண்டும். ஆயினும், இவை எண்ணியும் பார்த்திராத நிலைமைகளும் சந்தர்ப்பங்களும் ஏற்படக்கூடும். அவற்றிலெல்லாம் கலீப் முதலானவர்கள் தங்கள் விருப்பப்படி நடந்துகொள்ளலாம். அந்த விருப்பத்தைத் தடுக்கவோ மாற்றவோ இஸ்லாமிய அரசில் வேறொரு அதிகாரி இருக்கமுடியாது. முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஷரியத்தின் கூற்றுகளுக்கு விளக்கம் கூறும் உரிமையுடையவர்கள். ஆயினும், இவ் விளக்கம் கூறுதற்கு எல்லாச் சுல்தான்களுக்கும் போதிய கல்வியோ, ஆற்றலோ இராதாகையால் இஸ்லாமிய சமய அறிஞர்களைக் கலந்து ஆலோசித்துத்தான் விளக்கங்கூற வேண்டியிருந்தது. அஃது எவ்வாறுயினும் இஸ்லாமிய அரசு சமய அடிப்படையில் அமைந்த ஓர் அரசேயாம். இது கொள்கைப் படி உண்மையா யிருப்பினும் நடைமுறையில் சுல்தான்கள் ஷரியத்தின் போர்வையில் தங்கள் விருப்பப்படி உலகியலை நடத்தினுர்கள். சமயச் சட்டத் தொகுப்பின் காப்பாளர்களான உலேமாக்களும் சுல்தானை மகிழ்விக்கும்பொருட்டு அவன் கருத்திற் கிணங்கவே சமயச் சட்டங்களுக்கு விளக்கங் கூறுவாராயினர். ஷாரியாவின் கட்டளைப்படி சுல்தான் ஒரு முஸ்லிமை அரசியல் காரணத்திற்காகவும் கொலை செய்யக்கூடாது. மற்றும், வட்டி

வாங்கக்கூடாது. அமீர் குஸ்ரு கூறுகிறார்: 'அக் காலத்தில் எழுதிக்கொடுத்த கொடுக்கல் வாங்கல் பத்திரங்களில் வட்டி வெளிப்படையாக எழுதப்பட்டது; வட்டி கொடாதவர்கள் மீது வழக்குத் தொடங்கி வசூலிக்கவும்பட்டது.' கள் உண்ணுமை என்பது குரானில் கண்ட ஓர் அடிப்படை விதி. இவற்றை யெல்லாம் வெளிப்படையாகவே சுல்தானிய அதிகாரிகள் புறக்கணித்தார்கள்.

டெல்லி சுல்தானிய ஆட்சியின் நிர்வாக ஏற்பாடுகள் சுல்தானியம் தொடங்கியதற்கு முன்பே இருந்தமையாலும் சுல்தான்கள் புதிதாகப் புகுத்திய நிர்வாக முறைகளாலும் கலீபு ஆட்சியின் தன்மையினுலும் உருவாக்கப்பெற்றது. அவர்கள் ஏற்படுத்திய அரசு முறையைத் துருக்க - பாரசீக - இந்து நிர்வாக முறையென்று கூறலாம். சுல்தானைச் சுற்றியிருந்த அமைச்சரவை யின் அமைப்பும் இராணுவ ஏற்பாடும், வரிவசூல் திட்டத்தை மாற்றியமைத்தமையும் ஜிஸியா, யாத்திரிகர் வரி, முஸ்லிம்கள் அல்லாதார்மீது அதிகவரி முதலிய வரிகள் அவர்கள் புகுத்திய புது வகை வரிகள். முஸ்லிம் அல்லாதார் ஒருவரையும் அரசின் குடி மக்களாகக் கருதவில்லை. அவர்களை ஸிம்மிகள் என்று கூறினர். ஸிம்மிகள் தாங்கள் இஸ்லாம் அல்லாத வேறு மதத்தைச் சார்ந் திருந்த 'குற்ற'த்திற்குக் கழுவாயாகவும் அக் காரணத்திற் காகத் தங்களுக்கு அரசு, பாதுகாப்பு அளிப்பதற்காகவும் ஜிஸியா என்னும் ஒருவகை வரியைச் செலுத்தவேண்டியதா யிருந்தது. அன்றியும், அரசில் உயர்தர நிலைகள் யாவும் முஸ்லிம் களுக்காக ஒதுக்கப்பட்டன. அந் நிர்வாக முறையும் அடித் தளத்தில் பழைய ஆட்சிமுறை மிகச் சில மாறுதல்களோடு நடை பெறப்பட்டதாயினும் சுல்தானைச் சூழ்ந்திருந்த அவைக்களத்தி லும் மற்றும் பிற உயர்நிலை, நடுத்தர நிர்வாகங்களிலும் இஸ்லா மிய ஆட்சி முறையே நடைபெற்றது. மிகப் பெரும்பான்மைக் குடிமக்களான இந்துக்களுக்கு அவ் வாட்சியில் எந்தவிதமான செல் வாக்கும் இல்லாத காரணத்தால் அதனைப் பொதுமக்கள் கருத்தை யொட்டி நடைபெற்ற ஆட்சியென்று கருதமுடியாது.

பொதுவாக, டெல்லி சுல்தான்கள் கலீபாவைத் தமது மேலதிகாரியாகக் கருதினார்கள். கொள்கைப்படி எல்லா முஸ்லிம் களுக்கும் ஒரே அரசர்தான் உண்டு. அவர் கலீபாவே. மற்ற முஸ்லிம் அரசர்கள் கலீபாவின் அதிகாரத்திற்கு உட்பட்டு ஆட்சி செலுத்துவதாகக் கருதப்படுவது இஸ்லாமிய அரசியல் தத்துவம். அக் கோட்பாட்டின்படி டெல்லி சுல்தானும் கலீபாவிற்கு அடங்கியவராகக் கருதப்படல் வேண்டும். முடிசூட்டும் காலத்தில்

கலீபாவிடமிருந்து ஆசி வந்தது. அவர்கள் நாணயங்களில் கலீபாவின் பெயர் பொறிக்கப்பட்டது. மசூதிகளில் குத்பா கலீபா பெயரால் ஓதப்பெற்றது. அலாவுதீன் கில்ஜி, குத்புதீன் முபாரக் ஷா என்னும் இரு மன்னர்களைத் தவிர மற்ற சுல்தான்கள் எல்லாரும் கலீபாவின் தலைமையை ஏற்றுக்கொண்டனர். முபாரக் ஷா மட்டும் தாமே கலீபா பட்டத்தை மேற்கொண்டார். ஆனால், கலீபாவின் தலைமையை ஏற்றுக்கொண்ட சுல்தான்கள்கூட அவர்களைப் பொருட்படுத்தியதில்லை. தாங்கள் சுதந்தரமன்னர்களாகவே தான் கருதி நடந்துகொண்டனர்.

சுல்தான் டெல்லி இஸ்லாமிய அரசின் தலைவர். எல்லா அதிகாரங்களும் அவர் கையில் குவிந்திருந்தன. அவர் படையின் தலைவர்; அமைதிக்கால நிர்வாகத்தின் ஆளுநர். அவர் இட்டது சட்டம். அவரிடம் பணிவது குடிமக்களுடைய கடமை. அவைக்களத்திலிருந்த பிரபுக்கள் எல்லாரும் சேர்ந்து சுல்தானைத் தேர்ந்தெடுப்பதுபோன்ற ஒரு பாவனைச்சடங்கு நிகழ்வதுண்டு. பெரும்பாலும் போரில் வென்றோ, பட்டத்திற்குப் போட்டியிட்ட பிறரை ஒழித்துக்கட்டியோ தாமே சுல்தானென்று ஒருவர் தீர்மானித்தபிறகு பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது ஒரு போலிச்சடங்கேயாகும். ஜலாலுதீன் கில்ஜி, கியாஸுதீன் துக்ளக் ஆகியோர் சுல்தானியத்தை வலியக் கைப்பற்றினராயினும் மக்கள் அவர்களை ஏற்றுக்கொண்டபின் அவர்களும் சட்டப்படி நியமிக்கப்பட்ட சுல்தான்களாயினர். பெரும்பாலும் சுல்தான்கள் ஆண்பிள்ளைகளாகவே இருக்கவேண்டும். சுல்தானா ரஸியா என்னும் பெண்பிள்ளை அரசாண்ட காலத்தில் பிரபுக்களும் மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவளும் ஆணுடை தரித்து, தலைப்பாகை அணிந்து ஆண்வேடங்களெல்லாம் புனைந்து பார்த்தாள். பாரம்பரிய முறைப்படி தந்தைக்குப் பின் மகன் என்று ஆட்சி நடைபெறவேண்டியது பொதுவிதியாயினும் எப்பொழுதும் அது நடைபெறவில்லை. எந்த அதிகாரத்திலிருந்து டெல்லி சுல்தான்களுக்கு ஆளும் உரிமை தோன்றியது என்று நிர்ணயிப்பது கடினம் என்று சில ஆசிரியர்கள் கூறுவராயினும் யாருக்கு அதிகாரம் செலுத்த அப்போதைக்கு இராணுவம், நிதி முதலியவற்றால் நிர்ணயிக்கப்பட்ட பலம் மிகுதியாக இருந்ததோ அவரே சுல்தானாக இருந்தார்; அவர்தான் சுல்தானாக இருக்க முடியும். அதற்கு வேறு சமயச் சட்ட சம்மதங்கள் தேவையில்லை என்பவையெல்லாம் தெளிவாயிருக்கின்றன. கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் சில அமைச்சர்கள் அல்லது மற்ற ஆதரவாளர்கள் என்போருடைய பக்கபலம் இல்லாமல் எந்தச் சுல்தானும் ஆண்டிருக்க முடியாதென்பது

உண்மை. சுல்தானுடைய முழு அதிகாரத்திற்கு இஃது ஒரு பலமான வரம்பே ஆயினும், இவ் வரம்பிற்கும் ஓர் வரம்புண்டு. அலாவுதீன் கில்ஜியும், மாலிக்காபூர் போன்றவர்களுடைய அதிகாரிகளின் ஆதரவைப் புறக்கணிக்கமுடியா திருந்ததாயினும் மகம்மது - பின் - துக்ளக் யாருடைய ஆதரவை நம்பி ஆண்டார்? அவருடைய மட்டற்ற பைத்தியக்கார ஆட்சி முறைகளையும் கொடுமைகளையும் யார்தாம் தடுத்தார்கள்? யாரால் தடுத்திருக்க முடியும்? என்பவை விளங்காவாதலால் அவ் வரம்பிற்கும் வரம்புண்டு என்பது வற்புறுத்தப்பெறும்.

வல்லானுகிய ஒரு போர்வீரனுக்கும் படை வேண்டும். அஃதே போல் அரசனுக்கும் அமைச்சு வேண்டும். அடிமைச் சுல்தான்கள் ஆண்டகாலத்தில் வஜீர், அரீஸ்-இ-மாமலிக், திவானி இன் ஷா, திவானி ரஸலத் என்னும் நான்கு வகை அமைச்சர்கள் இருந்தனர். இவர்களில் வஜீர் என்பவரே தலைமையானவர். திவானி ரஸலத் என்பவருக்குச் சில சமய அலுவல்கள் உண்டு. அவர் வெளி நாட்டு விவரங்களையும் கவனித்தார். சமய விவகாரங்களைக் கவனிக்க சாதர் உஸ் ஸுதூர் என்று வேறோர் அதிகாரியும் இருந்தார். திவானி இன்ஷா என்பவர் கடிதப் போக்குவரத்து களைக் கவனித்த அதிகாரி. அவர் சுல்தானுடைய ஆணைகளைப் பிறப்பித்தும், அரசியல் தொடர்புள்ள கடிதப் போக்கு வரத்துகளை வைக்கவும் சிறந்த அதிகாரி. பாரிதி முமாலிக் என்னும் அதிகாரி நாட்டு நடப்புகளையெல்லாம் கண்காணித்து ஒற்றர்களைக் கொண்டு செய்திகளைச் சேகரித்து சுல்தானியத்தின் நலனைக் காத்தார். இவருக்குச் சம்பளம் அதிகமாகவே கொடுக்கப் பட்டது. வக்கிலிதார் என்பவர் அரண்மனையில் உள்ள முக்கியமான அதிகாரி. நயிபில் முல்க் என்னும் அதிகாரி சில சமயங்களில் மிகுந்த அதிகாரத்துடனும் சில சமயங்களில் மிகக் குறைந்த அதிகாரங்களுடனும் அலுவல் பார்த்த ஓர் அமைச்சர். அவர் இராணுவத் தலைமை அதிகாரத்தை வகிக்கக் கூடியவர். ஸாரி ஜந்தர் என்பவர் மன்னருடைய மெய்க்காப் பாளர்களைக் கண்காணித்து வந்தவர். குற்றவாளிகளுக்குத் தண்டனை நிறைவேற்றும் அதிகாரமும் அவருக்கு இருந்தது.

சுல்தான் வசூலித்த வரிகள் இருவகைப்படும். சில சமயத் தொடர்புடையவை; ஏனையவை லௌகீகமானவை. சமயத் தொடர்புடையவை முஸ்லிம்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டன. அந்த வரிக்கு ஸகட் என்பது பெயர். ஸகட் மொத்த சொத்தில் 40-ல் ஒரு பங்காகும். ஸகட்டை வைத்துக் காப்பாற்றுவதற்குத் தனிப்பட்ட கஜானு இருந்தது. ஜிஸியா என்பது வேறொரு

வரி. இது முஸ்லிம் அல்லாதார்மீது விதிக்கப்பட்டது. மகளிர், சிறுவர், துறவிகள், இரவலர், குருடர், முடவர், அந்தணர் நீங்கலாக ஏனைய இந்துக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது. பிரூஸ் ஷா காலத்தில்மட்டும் அந்தணர்களிடமிருந்தும் வசூலிக்கப்பட்டது. 48 திர்ஹாம்கள் வரி செலுத்தும் முஸ்லிம் அல்லாதார், 24 திர்ஹாம் செலுத்துவோர், 12 திர்ஹாம் செலுத்துவோர் என்று இவ் வரி செலுத்துவோர் மூவகைப்பட்டனர்.

நிலவரி, சுல்தானுடைய மொத்த வருவாயில் பெரும்பகுதி. நிலவரி வசூல் செய்யும் முறை தற்காலத்தைப்போல் அல்லாமல் ஆங்காங்கு நியமிக்கப்பட்ட சில சிறு வரிவசூல் அதிகாரிகளிடம் அரசுத் தொடர்பு கொள்ளுவதாகவே இருந்தது. இவ்வளவு வரி அரசுக்குத் தேவை யென்று அந்த அதிகாரிகள் அறிந்தனர். அவர்கள் நிலச்சுவான்தாரர்களிடமிருந்தும், குடியானவர்களிடமிருந்தும் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைவிட எவ்வளவு வேண்டுமாயினும் அதிகமாகப் பெறலாம். நிலத்திற்கு உடையவர்களிடம் உழுவோரும் வரி செலுத்தினாலும் செலுத்தவிட்டாலும் சுல்தானுடைய அரசு தலையிடாது. வரி செலுத்துவதற்கும் செலுத்தப்படாமைக்கும் வரி வசூலிக்கும் அதிகாரிகளே பொறுப்பாயிருந்தனர். நிலவரி தள்ளுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு வக்ப் (Wakf) அல்லது 'இறும் பூமி' யென்று பெயர். அலாவுதீன் கில்ஜி காலத்தில் வரியின் சுமையும் அதிகப்படுத்தப்பட்டது. அது திறமையாகவும் வசூலிக்கப்பட்டது.

அரசாங்க அலுவலர்க்கு ஊதியம் பெரும்பாலும் நிலங்களையும் அவற்றிலிருந்து வரும் வரும்படியையும் காட்டிக் கொடுக்கப்பட்டது. அதாவது நேரடியாகக் கஜானாவிலிருந்து சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாகச் சில நிலங்களைக் காட்டி அவற்றினின்றும் கிடைக்கும் வருவாயைத் தங்களுடைய வருவாயாக எடுத்துக்கொள்ளலாம் என்று அதிகாரிகளுக்குக் கூறப்பட்டது. இந்த உரிமைகளை விற்றுவிடும் அல்லது மாற்றிவிடும் உரிமை அவர்களுக்கு இருந்தது. அலாவுதீன் கில்ஜி இந்தப் பழக்கத்தை நிறுத்தினார். கியாஸுதீன் துக்ளக் இவ் வுரிமை மாற்றங்களைத் தடுக்கவில்லை. மகம்மது-பின்-துக்ளக், பிரூஸ் ஷா என்பார் காலத்தில் ஊர்களும், கிராமங்களுமே மொத்தமாகப் பெரிய அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டன. இவ் வதிகாரிகள் பெரும்பாலும் இவ் வுரிமைகளைத் (கிராமங்களையும் ஊர்களையும் கூட) தங்களுடைய சொந்தப் பாரம்பரியச் சொத்தாகக் கருதினார்கள். இவ் வரியைத் தவிரச் சில சில்லரைக் கடமைகள் வசூலிக்கப்பட்டன. உதாரணமாக, எண்ணெய், மீன், வெற்றிலை முதலிய

பொருள்களை விற்றவர்கள் சிறுவரிகள் செலுத்தவேண்டியிருந்தது. பிரூஸ் துக்ளக் ஏராளமான பல வரிகளை நீக்கினார். அவர் 24 வரிகளை நீக்கி ஐந்து வரிகளையே விதித்தார் என்பர்.

இந்த வரிகளைத் தவிர வேறு சில வகைகளிலும் சுல்தானுக்கு வருவாய் இருந்தது. அவரைப் பார்க்க வருவோர் கையுறையின்றி வரலாகாது. பிரதம மந்திரியிலிருந்து சிறு குடிமகன்வரை மன்னரைப் பார்க்கச் செல்லும்போது விலையுயர்ந்த வெகுமதிகளைக் கொண்டுசெல்லவேண்டும்.

மன்னர் பெரும்படை வைத்திருந்தார். அலாவுதீன் கில்ஜி காலத்திற்கு முன்பு அது வெறுங் கூலிப்படையாக இருந்தது. அவர்தாம் அதனை நிலைப்படை ஆக்கினார். போர் வீரர்களைப் படையில் சேர்த்து அவர்களுக்கேற்ற தகுதியளித்துச் சம்பள விகிதத்தை ஏற்படுத்திச் சண்டைக்காலத்தில் அதிகப்படி பத்தா (Batta) எவ்வளவு என்று நிர்ணயித்து போர்ப்படையை நன்கு அமைத்தவர் அவரே. பிரூஸ் துக்ளக் காலத்தில் இந்த நிலைமை மாறிப் படைத்திட்டம் படைமானியத் திட்டமாயிற்று. அதிகாரங்களையும், பொறுப்புகளையும், சிவில் இராணுவ நிர்வாகம் இரண்டிலும் மையப்படுத்திய பெருமை அலாவுதீனைச் சாரும். குதிரை வீரர்கள் அவர்களுக்களிக்கப்பட்ட குதிரைகளை மாற்றி வருகின்றனர் என்பதால் குறியிட்டுச் சூடு போட்டுக் கணக்கு வைத்தவர் அவர். பிரூஸ் காலத்தில் இப் பொறுப்புகளெல்லாம் பலரிடையே பிரித்துவிடப்பட்டமையால் படையின் திறமை குன்றியது. இஸ்லாமியப் படை நடத்திய போர்களில் பெரும்பாலானவை சமயப் போர்கள் என்றே கருதப்பட்டன. ஆதலால், போர் வீரர்களுக்குச் சமய வெறியைத் தூண்டுவதற்கு மௌல்வி, உலேமா போன்ற சமய போதகர்கள் பயன்படுத்தப்பெற்றனர். போர்க்காலத்தில்மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்ட தற்காலிகப் படைஞர்களுக்கு நிரந்தரச் சம்பளம் இல்லை. ஆனால், போர்க்களத்தில் கிடைத்த கொள்ளையில் பங்கு உண்டு. இஸ்லாமியப் படையில் குதிரைப்படை முக்கியமான படையாக இருந்தமையால் இந்தியாவில் குதிரை வாணிகம் மிகுந்தது. அலாவுதீன் கில்ஜிமட்டும் டெல்லியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் 70,000 குதிரைப்படைகள் வைத்திருந்தார். அவர்களுடைய யானைப்படை வலுவிலும் எண்ணிக்கையிலும் மிகுந்திருந்தது. மன்னரைத் தவிர வேறு ஒருவரும் யானைகள் வைத்துக் கொள்ளக்கூடாது. யானை வைத்துக்கொள்ள மன்னர் உத்தரவு வேண்டும். கோட்டைகளை முற்றுகையிட்ட போது அவற்றை இடிப்பதற்குப் பெருங்கற்களை வீசினார்.

இதற்குப் பல இயந்திரங்கள் பயன்பட்டன. நிலப்படை வீரர்களுக்குச் சம்பளம் காசுகளில் தரப்பட்டது. அந்தச் சம்பளத்தைக் கொண்டு சந்தையில் பண்டங்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டால் (அலாவுதீன் கில்ஜி காலத்தில் இவ்வாறு ஏற்பட்டது) படை வீரர்கள் கொடுக்கக்கூடிய விலைக்குப் பண்டங்கள் விற்கப் பட வேண்டுமென்று சுல்தான் உத்தரவிட்டார்.

நீதித் துறையில் திவான் என்னும் அதிகாரி சிறந்தவர். சில சமயங்களில் சுல்தான் இல்லாதபோது திவான் நீதி மன்றத்தில் தலைமை வகித்தார். மகம்மது துக்ளக் காலத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் நீதி மன்றம் கூடிற்று. காஸி என்பவரும் நீதித் துறையில் ஒரு சிறந்த தலைவரேயாவர். அவர் சமயத்தொடர்புடைய வழக்குகளை ஆராய்ந்தார். ஒவ்வோர் ஊரிலும் ஒரு காஸி இருந்தார். அவ் வூரிலுள்ள வழக்குகளைத் தீர்ப்பது அவர் வேலை. இந்தக் காஸிகள் மாகாணக் கவர்னர்களுடைய ஆதிக்கத்திற்குட்படாமல் சுல்தானுடைய நேர்முக ஆதிக்கத்திற்கு அடங்கினவர்கள். அமீர் ஈதாத் என்பவர் நீதித் துறையில் ஒரு முக்கியமான அதிகாரி. கொத்தவால், டாணுக்காரர் என்பவரை அவர் கண்காணித்தார். நீதி வழங்குவதில் பால்பன் கண்டிப்பாயிருந்தார். குடிவெறியில் கொலை செய்து விட்ட ஒரு கவர்னருக்குக் கொலைத் தண்டனையே விதித்தார் அவர். மகம்மது துக்ளக் நீதித்துறையில் மிகவும் நேர்மைமிக்கவர் என்றும், ஒரு முறை தமக்கு எதிராக நடந்த ஒரு வழக்கில் தாம் நேரடியாக நீதி மன்றத்திற்கு வந்து தமக்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கப்பட்டபோது தமக்கு உரிய தண்டனையைக் கொடுத்தாக வேண்டும் என்று வற்புறுத்தினர் என்றும் கூறுவர். பிரூஸ் ஷாவும் நீதி வழங்குவதில் கண்டிப்பாக இருந்தார்.

உள்நாட்டுப் பாதுகாவலுக்காகக் காவலர் படை இருந்தது. காவற்படையின் தலைவர் கொத்தவால். கொத்தவால் ஒவ்வோ ரமயத்தில் நீதிபதியாகவும் அலுவல் செய்தார். குற்றவாளிகளுக்குக் கொடும் தண்டனை அளிக்கப்பட்டது. இராஜத் துரோகிகளைத் தோலை உரித்தல் மரபு. அவர்களுக்குத் தண்டனை அளிப்பதில் மிருகத்தனத்தின் எல்லையை எட்டியவர் மகம்மது துக்ளக். குற்றம் செய்தவர்களுடைய உற்றார், உறவினரையும் தண்டிப்பது என்னும் மரபு அலாவுதீன் கில்ஜியால் ஏற்படுத்தப்பட்டது.

டெல்லி சுல்தானியம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அது மிகப் பரந்திருந்த காலத்தில் அதில் 23 மாகாணங்கள் இருந்தன. மாகாணங்களின் தலைவர் கவர்னர். பெரும்பாலும் ஒரு கவர்னரை நியமிக்கும்போது நம்பிக்கையுள்ளவரும், அனுபவ

மிக்கவரும், திறமைசாலியானவரும் ஆக உள்ளவர்களையே நியமிப்பர். ஒவ்வொரு மாகாணத்திலும் குவாஜா என்னும் பெயருள்ள சாஹிபி திவம் என்னும் அதிகாரியிருந்தார். அவர் கணக்கர். குவாஜா கவர்னருக்குக் கீழ்ப்பட்டவர். அவர் சுல்தானோடு நேரடியான தொடர்பு கொண்டவராகையால் சில சமயங்களில் குவாஜாவைக் கருத்தில் வைத்துக்கொண்டே நடந்துகொள்ளவேண்டும் என்னும் நிலையிருந்தது. மாகாணம் என்பது இக்தா என்று பெயர் பெற்றது. சுல்தான் கவர்னர்கள் மூலமாக ஆண்ட முஸ்லிம் இக்தாக்கள் ஒருவகை மாகாணங்கள். வாலி என்னும் பெயர்கொண்ட இராணுவ கவர்னர் ஆட்சியின்கீழ் அமைக்கப்பட்ட மாகாணங்கள் மற்றொரு வகை. ஹிந்து அரசர்களால் ஆளப்பெற்றுப் பிறகு சுல்தானியத்தில் வென்று அமைக்கப்பட்ட மாகாணங்கள் மூன்றாவது வகை. இம் மாகாணங்கள் தோற்கடிக்கப்பட்ட அம் மன்னர்களாலேயே தொடர்ந்து ஆளப்பெற்றன. 14ஆம் நூற்றாண்டில் இக்தாக்கள் ஷிக்குகளாகப் பிரிக்கப்பட்டன. தக்காணத்துக் கவர்னர் மாகாணம் நான்கு ஷிக்குகளாகப் பிரிக்கப்பட்டது. ஷிக்கின் தலைவர் ஷிக்குதார் எனப்பட்டார். ஷிக்குக்கும் கீழ்ப்பட்ட பிரிவு பர்கானு எனப்பட்டது. பர்கானுவை கஸ்பா என்றும் கூறுவர். பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு கஸ்பா. கஸ்பாவிற் கடுத்தது கிராமம். கிராம ஆட்சி இந்துக்களாலேயே நடத்தப்பட்டது. சுல்தானியம் ஏற்படுவதற்கு முன்பே இருந்த ஆட்சி முறை சுல்தானியக் காலத்திலும் கிராமங்களில் பின்பற்றப் பட்டது.

2. சமுதாய மரபுகள்

சுல்தானியக் காலத்து மக்கள்தொகை இப்போதைவிட மிகக் குறைவாயிருந்தது. அதில் மிகப் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசித்தனர். மிகமிகச் சிலரே அதாவது மொத்த மக்கள் தொகையில் மிகச் சிறு சதவிகிதத்தினரே பெரிய நகரங்களில் வாழ்ந்தனர். டெல்லி, ஆக்ரா, லாகூர் முதலிய நகரங்களே முக்கியமானவை. ஆட்சியின் மையம் நகரங்களில் இருப்பினும் உணவு உற்பத்தி கிராமப்புறங்களிலேயே நடந்தது. சுல்தானுடைய இராணுவமும் அரசியலும் அதிகமாகத் தலையிடாத கிராமங்களில் உற்பத்திப் பெருக்கமிருந்தது. இயற்கையும், மனிதனும் குறுக்கிடாத சமயங்களில் உணவுப் பஞ்சத்திற்கிடமில்லை. கிராமப்புறத்து வீடுகளெல்லாம் மிகப் பெரும்பாலும் மண்குடிசைகளாகவே இருந்தமையால் மக்களுக்கு உறையுளைப் பற்றிய பிரச்சினை மிகுதியாக இல்லை.

குடும்பங்கள், ஒன்றிய (அவிபக்த) குடும்பங்களாகவே இருந்தன. இதனால், தனிமனிதனுக்கு உரிமையில்லை. ஆயினும், பாதுகாப்பு இருந்தது. கிராமங்களில் பஞ்சாயத்து இருந்தது. அங்கு நிகழ்ந்த வழக்குகளை அது தீர்த்து வைத்ததோடு, சமூக வாழ்க்கையையும் நெறிப்படுத்தியது. நகரங்களில் சந்தைகளும் பிற பொது இடங்களும் இருந்தன. கல்லாலும், செங்கல்லாலும் கட்டப்பட்ட வீடுகள் பல இருந்தன. ஆனால், பல மாடிக் கட்டிடங்கள் மிகச் சிலவே இருந்தன. நகர மக்களிடையே ஒரு புதுவகை வாழ்க்கைநெறி தோன்றலாயிற்று. முஸ்லிம்களும் இந்துக்களும் சேர்ந்து வாழவேண்டிய நிலையில் அவ் விரு கலாச்சாரங்களின் மோதலால் பல புதுநெறிகள் தோன்றின. பிரபுக்கள் என்பவர்கள் இசை, இலக்கியம் முதலிய கலைகளைப் போற்றினார்களே ஆயினும், அவர்கள் வாழ்க்கை சோம்பேறி வாழ்க்கையே என்பதில் ஐயமில்லை. விருந்து வைத்து, குடித்துவிட்டு, களியாட்டங்களில் ஈடுபட்டு, பொழுதை வீண்போக்கிய பிரபுக்களை அலாவுதீன் கில்ஜி தண்டித்ததில் வியப்பில்லை. இந்தச் சமுதாயத்தில் மிகப்பெரிய பணக்காரர்களும் பரம ஏழைகளுமே இருந்தனர். வட்டிக்குப் பணம் கொடுத்த பனியாக்களைச் சமூகம் நன்கு மதிக்கவில்லை. பல இந்துக்கள் முஸ்லிம்களாக மதம் மாற்றிக்கொண்டனர். இந்துக்களிடையே சாதிப் பிரிவினை இருந்தது. பிராமணர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்பவை முக்கியமான பிரிவுகள். க்ஷத்திரியர்கள் என்பவர்கள் முற்காலத்தைப்போல் ஆளும் குழுவினரா யில்லை. இராஜபுத்திரர்கள் தங்களை க்ஷத்திரியர்களென்று கூறிக்கொண்டனர். பாரமாரர்கள், சௌஹானர்கள், மகாராஷ்டிரர்கள் என்பவர் எல்லாரும் தங்களை அவ்வாறே கூறிக்கொண்டனர். கிராமப்புறங்களில் இந்துக்களே மிகுதியா யிருந்தனர். தட்டார், தச்சர், நெசவாளர், கொல்லர், கன்னார், துன்னகாரர், இசைஞர் என்னும் பல பிற ஜாதியினரும் இருந்தனர். இந்துக்களிடையே மகளிர் இழிந்த நிலையிலேயே இருந்தனர். அவ்வப்போது சில மகளிர் கல்விமான்களாகப் புகழ் எய்தினர் என்பதால் மகளிர் கல்விநிலை உயர்ந்த நிலையிலிருந்ததென்று கூறமுடியாது. சதி, முகமூடி அணியும் பழக்கம், பெண்-சிசுஹத்தி, பால்ய விவாகம் முதலிய பழக்கங்களிற் சில முன்பே இந்து சமுதாயத்தில் இருந்திருப்பினும் முஸ்லிம் ஆட்சிக்காலத்தில் வலுத்தன.

முஸ்லிம்கள் ஆளவந்தார். இந்துக்கள் ஆட்பட இருந்தார். இவர்களிடையே சமுதாய உறவு சற்று விரைப்பாகவே இருந்தது. இந்துக்களுடைய நிலை இரண்டாந்தரக் குடிமக்கள் நிலையாகவே இருந்தது. கிராமப்புறங்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் ஓரளவு ஒற்றுமையோடு இருந்தனராயினும் பழைய முஸ்லிம்களைவிடப்

புதிதாக மதமாற்றப் பெற்ற முஸ்லிம்கள் அதிக சமயவெறி பிடித் திருந்தனர். சில திருவிழாக் காலங்களில் இந்துக்களும் முஸ்லிம் களும் ஒத்துழைத்த துண்டு. இஸ்லாமிய ஸூபிகளும் பக்கிரிகளும் இந்துத் துறவிகளும் யோகிகளும் ஏறத்தாழ ஒரே நோக்கமுடைய வராதலின் அவர்களிடையே வேற்றுமை அதிகமில்லை. அவர் களால் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும் வழி பிறந்தது. முஸ்லிம் களில் பல பிரிவினர் இருந்தனர். ஸூபிகள் என்பவர் ஒருவகை இஸ்லாமிய அறிஞர். அவர்களைத் தீவிர முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் உபநிடதக் கருத்துகள் போன்ற வற்றைப் பரப்பினர்கள். அவர்களில் ஷேக்குகள், பீர்கள், பக்கிரிகள், தார்வேசுகள் என்று பலவகையினர் இருந்தனர். ஸிஷ்டி, சுரவர்த்தி, பிர்தூசி என்போர் ஸூபிகளில் பிறர். அமீர் குஸ்ரூ என்னும் புலவர் ஸிஷ்டிகளைச் சேர்ந்தவர். இஸ்லாமிய உலேமாக்கள் மக்களிடையே சமத்துவத்தை ஒரு கோட்பாடாகக் கொண்டனரே யன்றிப் பழக்க நெறியில் கொள்ளவில்லை. ஸூபிகள் வாழ்க்கையிலும் அங்ஙனமே நடந்தவர்கள். ஸூபிகளுக் கும் இந்து பக்தி இயக்கத்திற்கும் தொடர்புண்டு. கபீர் போன்ற வர்கள் ஸூபிகளாயிருந்து இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே சமய கலாச்சாரப் பாலங்களை ஏற்படுத்தினர். முஸ்லிம் களிடையே ஷியா, ஸூன்னி என்று இருவகையினர் இருந்தனர். அவர்களிடையே பெரும் பகையிருந்தது. டெல்லி சுல்தான்கள் ஸூன்னிகள் சார்பாகவே இருந்தனர். சிந்து, மூல்தான் பகுதி களில் ஸூன்னிகள் பலர் இருந்தனர்.

முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வந்து இங்குச் செல்வம் குவிந் திருந்த பகுதிகளிலெல்லாம் கொள்ளை யடித்தனர். இவ்வாறு கொள்ளையடித்த பணத்தை அவர்கள் வைத்துக் காப்பாற்ற வில்லை. ஊதாரித்தனமாய்ச் செலவழித்து அந்தச் செல்வத்தை யெல்லாம் சந்தைக்குக் கொண்டுவந்துவிட்டனர். பொருளாதார நிலை சீராக இருந்ததற்குக் காரணம் விவசாயமும் கைத்தொழிலும் நல்ல நிலைமையில் இருந்தமையே. வெளிநாட்டு வாணிகத்திற்குப் பயன்படுபவையாகப் பல துறைமுகங்கள் இருந்தன. அவற்றை உள்நாட்டுச் சந்தைகளோடு இணைக்கப் பல சாலைகள் இருந்தன. வெளிநாட்டு வாணிகத்தில் பெரும்பாலும் இந்தியாவிற்குச் சாதக மாகவே வாணிகம் இருந்தது. ஆதலால், பொன்னும், வெள்ளி யும் இந்தியாவில் மிகுதியாகக் குவிந்தன. இச் செல்வத்தைக் கொண்டே டெல்லி சுல்தான்கள் மிக அழகிய பல கட்டடங்களைக் கட்டினர். ஆனால், இச் செல்வமெல்லாம் மிக்க செல்வராயிருந்த சிலர் கையிலேயே முடங்கிக் கிடந்தன. பிறரெல்லாம் மிக வறியவராய் இருந்தனர். இதைக் காண, அடிப்படையாக அமைந் திருந்த சமுதாய அநீதி எளிதில் புலப்படும்.

11. தக்காணத்து அரசுகள்

(அ) ஹொய்சளர்கள்

இவர்கள் குலம் எவ்வாறு அரசுநிலை எய்திற்று என்பதைப் பற்றிய தெளிவான குறிப்புகள் கிடைக்கவில்லை. 'ஹொய்சள' என்பது ஒரு கன்னடச் சொல்; இது 'ஹொய்', 'சள' என்னும் இரு சொற்களால் ஆக்கப்பட்டது என்பர். 'சள' என்பதற்குக் 'கொல்வாயாக!' என்பதே பொருள் என்றும் சிலர் கூறுவர். முன்னொரு காலத்தில் சளன் என்னும் பெயரிய மன்னன் ஒருவன் வேட்டைக்குச் சென்ற காலத்தில் அவன் ஒரு புலியைத் துரத்திச் செல்ல, ஆங்கிருந்த முனிவன் ஒருவன் அம் மன்னனை விளித்துச் 'சளனே! இப் புலியினை எனது ஆணையை மேற்கொண்டு கொல் வாயாக!' என்று கூறிய கூற்றினை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே 'ஹொய்சள' என்னும் சொல் என்பதே இம் மரபுச் செய்தியின் சுருக்கம்.

முதலாம் விநயாதித்தர் (1006-1022) என்பவர் அவ் வரச குலத்தைத் தொடங்கியவர். அவருக்குப் பின் நிருகாமர் (1022-1047) என்பவர் ஆண்டார். இரண்டாம் விநயாதித்தர் என்பவர் மேலைச்சாளுக்கியருக்கு அடங்கி ஆட்சிபுரிந்தார். ஹொய்சளர்கள் பெரும்பாலும் மைசூர்ப் பிரதேசத்தின் மேலைப் பகுதியில் இருந்து அரசாண்டனர். முதலாம் வல்லாளர் (1100-1106) என்பவர் ஹஸன் மாவட்டத்தைச் சேர்ந்த பேளூரில் தமது தலைநகரத்தை அமைத்துக்கொண்டார். அவருக்குப்பின் ஆண்ட அவர்தம் சகோதரரான பட்டிதேவர் என்பவர் விஷ்ணுவர்த்தனர் என்னும் பட்டப்பெயரோடு ஆண்டார். இவரை இராமானுசர் வைணவ சமயத்திற்கு மாற்றினர் என்பது ஒரு வரலாறு. சைனத்திலிருந்து வைணவத்திற்கு மாற்றப்பட்ட இம் மன்னர் மத மாற்றத்திற்குப் பிறகு சைனர்களைத் துன்புறுத்தினர் என்பது

மற்றுமொரு வரலாறு. அவர் சோழர்களிடமிருந்து கங்கவாடியைக் கைப்பற்றித் தமது அரசைக் கிழக்குப் பகுதியில் பரப்பினர். இவ் வெற்றியின் காரணமாக அவர் தலைக்காடு கொண்ட விஷ்ணுவர்த்தனர் ஆனர். அவர் ஹொய்சளத் தலைநகரைத் துவாரசமுத்திரத்திற்கு மாற்றிக்கொண்டார். அவர் உண்மையிலேயே தனி அரசோச்சினராயினும், மேலைச்சாளுக்கியர்களுக்குப் பெயரளவில் அடங்கி யிருந்தார்.

விஷ்ணுவர்த்தனரின் மகன் முதலாம் நரசிம்மர் (1141-1173) வனவாசியையும் நொளம்பபாடியையும் வென்று தமது அரசிற் சேர்த்தார். அவ்வளவிற்குச் சோழருடைய பேரரசு தாக்குண்டது. முதலாம் வல்லாளர் (1173-1220) என்பவர் ஹொய்சள ஆட்சியை வடக்கே கிருஷ்ணை ஆற்றங்கரைவரையிலும் பரப்பினர். அவர் காலத்தில்தான் மேலைச் சாளுக்கிய மன்னரான நான்காம் சோமேசுவரர் ஆட்சியை மீறிக்கொண்டு யாதவர்கள் தேவகிரியில் தனி அரசை நிறுவிக்கொண்டார்கள். இவ் வுதாரணத்தைப் பின்பற்றி ஹொய்சளருக்கும் முழுச் சுதந்தரம் அடையும் வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டாம் வல்லாளர் என்னும் மன்னர் 1173 முதல் 1220 வரை ஆண்டார். அவர் பல பெரிய பட்டங்களைப் புனைந்துகொண்டார். அவர் ஆண்ட காலத்தில் ஹொய்சளர் நாட்டில் பல அழகிய கோயில்கள் கட்டப்பட்டன. இரண்டாம் நரசிம்மர் (1220-1235) என்பாரது ஆட்சிக் காலத்தில் கிருஷ்ணைக்கும் துங்கபத்திரைக்கும் இடைப்பட்ட நாடு ஹொய்சளரால் இழக்கப்பட்டது. அவர் சோழ நாட்டு அரசியலில் தலையிட்டுக் கோப்பெருஞ்சிங்கரிடமிருந்து சோழர் இரண்டாம் இராசராசர் விடுவித்தார். அவர் மைந்தர் சோமேசுவரர் திருச்சியை யடுத்த கண்ணனூரில் தமக்கு ஒரு தலைநகரை யாக்கிக்கொண்டு தமிழகத்தின் ஒரு பகுதியையும் ஆண்டார். ஆயினும், அவர் பேரரசுப் பாண்டியரான ஜடாவர்மர் முதலாம் சுந்தர பாண்டியரால் போரில் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் அவ் வரசு அவருடைய மக்களான மூன்றும் நரசிம்மர் (1254-1291), இராமநாதர் (1254-1295) என்னும் இருவரிடையே பிரிந்தது. நரசிம்மருக்குப்பின் வந்த மூன்றும் வல்லாளரான மூன்றும் வீரவல்லாளர் என்பவர் அவ் விரு பகுதிகளையும் ஒன்ருக்கி ஆண்டார். அவர் ஆட்சிக் காலம் 1291 முதல் 1342 ஈருக நடந்தது.

மூன்றும் வீரவல்லாளர் துளுநாட்டை வென்றுர். அவர் மன்னராயிருந்த காலத்தில்தான் மாலிக்காபூர் என்னும் துருக்கப் படைத்தலைவர், அதாவது கி. பி. 1310-ல் தக்காணத்தின்மீதும்

தமிழ்நாட்டின்மீதும் பெரும்படைகொண்டு தாக்கிச் சூறையாடினர். அவருடைய படைத்தாக்குதலை ஆற்றாத மூன்றும் வல்லாளர் அவர் வேண்டியதை யெல்லாம் ஈந்துவிட்டுத் தலைநகரை விட்டே தாமும் ஓடினர்; மாலிக்காபூரின் மதுரைப் படையெடுப்பிற்கு உதவியும் புரிந்தார். துருக்கர்படை டெல்லிக்குத் திரும்பிச் சென்ற பிறகு, வீரவல்லாளர் துவாரசமுத்திரத்தி லிருந்து ஹொய்சள இராச்சியத்தை மறுபடியும் ஆண்டார். முகம்மது-பின்-துக்ளக் காலத்தில் அவ் வரசு அழிக்கப்பட்டு டெல்லி சுல்தானியத்தில் சேர்க்கப்பட்டது. மூன்றும் வீரவல்லாளர் கி.பி. 1342-ல் மதுரை சுல்தானை கியாஸுதீன் என்பாரோடு கண்ணனூரில் போரிட்டுத் தோற்று உயிரிழந்தார். வென்றவர்கள் அவரை உயிரோடு தோலை உரித்துவிட்டனர். அவர் மகன் நான்காம் வல்லாளர் (1342 - 1346) என்பாரும் மதுரைச் சுல்தான்களோடு பொருது இறந்தார். அவரோடு ஹொய்சள அரசும் முடிவுற்றது. பிறகு விசய நகர மன்னரின் ஹொய்சள அரசின் பகுதிகளைக் கைப்பற்றித் தமது அரசைத் தென்பால் ஆண்டனர்.

ஹொய்சளர்கள் கோயில் கட்டடக்கலை மரபுகள்

ஹொய்சளர்கள் அரசியல் வெற்றிகளுக்காகவும் சமயத் தொண்டிற்காகவும் தாங்கள் நிலைநாட்டிக்கொண்ட பெருமைகளைவிடக் கோயிற் கட்டடக் கலையில் கண்ட பெருமைகளே சாலச் சிறந்தவை என்பதில் ஐயமின்று. அவர்கள் மைசூர்ப் பிரதேசத்தில் ஆண்டவர்களாதலின் அவர்கள் கட்டிய பெருமிதம் மிக்க கோவில்கள் பலவும் அப் பிரதேசத்திலேயே காணக் கிடக்கின்றன. அவர்களுக்கு முன்பு அப் பிரதேசத்தையும் மேலைத் தக்காணத்தையும் ஆண்ட மேலைச் சாளுக்கியர்களுடைய கோயிற் கட்டடக்கலை மரபுகளைப் பின்பற்றி ஆனால், மேலும் உயர்வாகத் திருத்தி அமைத்து வளர்த்துக்கொண்டதே ஹொய்சளரின் கட்டடக்கலை. ஆனால், இவர்கள் சாளுக்கியர்களைப்போல மிருதுவான செந்நிறக் கற்களைப் பயன்படுத்தாமல் உறுதியான கருநிறப் பாறைகளை வெட்டியெடுத்த கற்களையே கோயில் கட்டப் பயன்படுத்தியமையால் அக் கல்லில், பொன்னால் தட்டார் நேர்த்தியான வேலைகளைச் செய்ய முடிவது போல, விரும்பியதை விரும்பியவிதம் செதுக்க இயன்றது. பொதுவாக ஹொய்சளர் கோவில்களில் அடித்தளம் நட்சத்திரம் போலவும், எட்டு முனைகளைக் கொண்டதாகவும் அமைந்த அடிவார அமைப்பும் அதற்குமேல் பலதளங்களில், மாடிகளைப்போலக் கோவில் மேற்கோப்பு எழுவதும் காணப்படும். கோவிலுக்குள்ளேயே பிராகாரம் இல்லையாதலின் வெளியே சுற்றுப் பிராகாரம்

அமைக்கப்பட்டது. சுற்றுப்புறச் சுவரில் தொளைகள் பலகொண்ட கல் மறைப்புகளும் அவற்றிற்கிடையே தன்னிகரில்லாத அழகுடனும் நுண் கலைத்திறனுடனும் செதுக்கப்பட்ட எண்ணிறந்த அன்னங்களும், வேறு பல சமயத் தொடர்புடைய உருவங்களும் அலங்கரித்தன. ஹொய்சளர் கோயில் சிகரங்கள் சோழர், பாண்டியர் கோயில் சிகரங்களைப் போல மிக உயர்ந்து காணப்படா. ஆயினும், நுண்ணிய வேலைத் திறனால் அவற்றிற்கு நிகர் அவையே. இக் கோயில்களில் அவற்றை ஆக்கிய சிற்பிகளின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஹளேபீடு என்னுமிடத்தில் முதலாம் நரசிம்மனால் கட்டப்பட்ட ஹோய்சளேசுவரர் கோயிலை நிர்மாணித்தவர் கேதரோஜா என்பவர். இக் கோயில் ஓரளவு பாழடைந்துவிட்டது; ஆதலால், அதன் முழுமை நமக்குத் தெரியவில்லை. ஆயினும், இரு வேறு கோயில்கள் அருகருகே அமைக்கப்பெற்று பிறகு ஒன்றாக்கப்படும் கருத்தோடு கட்டப் பட்ட ஒரு மாபெரும் அமைப்பு என்பது மட்டும் புலனாகிறது. பேலூரில் உள்ள சென்னகேசவர் கோயிலும், சீரங்கப்பட்டினத்தி லிருந்து இருபது மைல் தொலைவிலுள்ள சோமநாதபுரத்தில் அமைந்திருக்கும் கேசவர் கோயிலும் ஹொய்சளர் கோயில்களில் முக்கியமானவை.

(ஆ) யாதவர்கள்

தக்காணத்தில் மேலைச் சாளுக்கியர் (கல்யாணி) ஆட்சி கவிழ் வதற்குக் காரணமாயிருந்தவர்களில் யாதவர்களும் ஒரு கூட்டத் தினர். இவர்கள் முதலில் சாளுக்கியர்களுடைய சிற்றரசர்களா யிருந்து பிறகு தனி அரசோச்சத் தொடங்கியவர்கள். இந் நிகழ்ச்சி 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது. ஏறத்தாழ அதே காலத்தில் மைசூர்ப் பிரதேசத்தில் ஹொய்சளர் களும் வடகிழக்கு ஆந்திர நாட்டில் வாரங்கலைத் தலைநகராகக் கொண்ட காகதியர்களும் துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்ட ஹொய்சளர்களும் தனியரசோச்சத் தொடங்கி னார்கள்.

மேலைச்சாளுக்கிய மன்னரான நான்காம் சோமேசுவரரின் சிற்றரசராயிருந்த பில்லமர் (1187-1191) என்பவர் தேவகிரியைத் தலைநகராக அமைத்துக்கொண்டு தனி ஆட்சியைத் தொடங் கினார். தேவகிரி யாதவ அரசின் தலைநகராக 1187-ல் அமைந்தது. அவர் காலத்திலேயே யாதவர்க்கும் ஹொய்சளர்க்கும் போர் மூண்டது. அப் போரில் இரண்டாம் வல்லாளர் என்னும் ஹொய்சளரால் யாதவ மன்னரான பில்லமர் தோற்கடிக்கப் பட்டுப் போர்க்களத்தே கொல்லப்பட்டார். பில்லமருக்குப் பிறகு

ஜயத்திரபாலர் என்பவர் யாதவ அரசராகிக் கால சூரிகளையும் காகதியர்களையும் வென்றார். அவர் புலவர்களைப் போற்றியவர். அவர் மகன் சிங்கமர் (1210-1247) யாதவ அரசை மேலும் வலுப்படுத்தினார். பேரரசுப்பட்டத்தைத் தாமே இட்டுக் கொண்டார். அவர் ஹொய்சளரை வென்றார். அவர்தம் அமைச்சர் ஒருவரின் மகனான சார்ங்கதரர் என்பவர் சங்கீதரத்னாகரம் என்னும் இசை நூலை இயற்றி இசைபெற்றார். யாதவகுல மன்னர்களில் அவரினும் சிறந்தவர் பிறர் ஒருவர் இல்லை. அவருக்குப் பின் கிருஷ்ணா என்பவர் யாதவ மன்னரானார்; அவரை யடுத்து அவர் தம்பி மகாதேவர் அரசரானார்.

கிருஷ்ணாவிற்குப் பிறகு இராமச்சந்திரர் என்பவர் யாதவ மன்னராகி அக் குலத்தின் வரலாற்றில் முக்கியத்துவம் அடைந்தார். அவருக்கு இராமதேவர் என்பதும் ஒரு பெயர். அவர் ஆட்சி வடக்கே நருமதையாற்றில் தொடங்கி தெற்கே தற்கால மைசூரின் வடபகுதிவரையில் பரந்திருந்தது. அவருக்கு ஹேமாத்திரி என்னும் பெயருடைய மந்திரி ஒருவர் இருந்தார். அவர் 'சதுர்வர்க்க சிந்தாமணி' என்னும் நூல் ஒன்றை இயற்றினார். தனியொருவன் முத்தியடைதற்குப் பல வழிகள் இந் நூலில் வகுத்துக் கூறப்பட்டுள்ளன.

கி.பி. 1294-ல் அலாவுதீன் கில்ஜி டெல்லி சுல்தானாக அப்பொழுது இருந்த ஜலாலுதீன் கில்ஜியின் அனுமதியின்றியே தேவகிரியை ஒரு குதிரைப்படை கொண்டு திடீரென்று தாக்கி, அன்று அந் நாட்டையாண்ட இராமச்சந்திரரைப் பணியவைத்தார். அங்கிருந்த அளவிறந்த திறைப்பணத்தைக் கவர்ந்துகொண்டு சென்ற அலாவுதீன் அப் பணத்தின் உதவியையும் கொண்டு தம் மாமனான டெல்லி சுல்தானைக் கொன்று தாமே சுல்தானானார். இராமச்சந்திரருடைய மகனான சங்கரதேவர் என்பவர் அலாவுதீனை எதிர்த்துப்பார்த்து, அத்தகைய எதிர்ப்பால் பயனில்லை என்பதை யுணர்ந்து அவரும் பணிந்தார். இராமச்சந்திரர் அலாவுதீனுக்குக் கப்பங்கட்ட இசைந்தார்; லெச்சபர் என்னும் மாவட்டம் ஒன்றும் டெல்லி சுல்தானிடம் பிடிப்பட்டது. திறைப்பணம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்த அலாவுதீனும் யாதவ அரசை டெல்லி சுல்தானியத்தோடு இணைக்காமல் விட்டார். ஆனால், சில்லாண்டுகட்கெல்லாம், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாமல் இராமச்சந்திரர் கப்பங்கட்டுதலைத் தவிர்த்து இருந்தார். ஆதலால், கி.பி. 1307ல் மாலிக்காபூர் என்னும் சுல்தானியப் படைத்தலைவர் தேவகிரிமீது படையெடுத்துச் சென்று இராமச்சந்திரரைத் தோற்கடித்துச் சிறை

பிடித்துச் சென்றார். யாதவ மன்னர் ஆறுமாதம் கழித்துச் சிறைவீடு செய்யப்பட்டார்; அதன் பிறகு அவர் முறையாகக் கப்பம் கட்டிவந்தார்.

இராமச்சந்திரரை யடுத்து அவர் மைந்தரான சங்கரதேவர் (1309-1312) அரசரானார். அவரும் ஒரமயம் டெல்லிக்குக் கப்பங் கட்டமறுத்தார். மாலிக்காபூர் மறுபடியும் தேவகிரிமீது படையெடுக்க வேண்டியதாயிற்று. அவர் தேவகிரியைத் தாக்கிச் சங்கரரை 1312-ல் தோற்கடித்துக் குல்பர்காவையும் இராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியையும் டெல்லி சுல்தானியத்தில் இணைத்துக்கொண்டார். கி.பி. 1316-ல் இராமச்சந்திரரின் மருமகனான ஹரபாலர் என்பவர் டெல்லியின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கலகம் செய்தார்; முஸ்லிம் படைகளைத் தேவகிரியினின்றும் விரட்டினார். கி.பி. 1318-ல் டெல்லி சுல்தானான முபாரக் ஷா தேவகிரிமீது படையெடுத்து ஹரபாலரைத் தோலை உரித்துக் கொன்றுவிட்டார். அதன் பிறகுதான் யாதவ அரசு டெல்லி சுல்தானியத்தில் இணைக்கப்பட்டது.

(இ) காகதியர்கள்

கல்யாணியில் ஆண்ட மேலைச்சாளுக்கியரான நான்காம் விக்ரமாதித்தரின் சிற்றரசர்களாக இருந்தவர்களில் காகதியர்களும் ஒரு குழுவினர். காகதிய அரச குலத்தை நிறுவியவர் பேட்டா என்பவர். வேங்கியையும் சோழநாட்டையும் ஒருசேர ஆண்ட முதற்குலோத்துங்கர் ஆட்சியின் இறுதிக் காலத்தில், வேங்கியில் அரசியற் குழப்பம் ஏற்பட்டது. அக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தனி அரசை நிறுவிக்கொள்ள முயன்றார் இரண்டாம் புரோலா என்னும் காகதியர். அவரது தலைநகரம் அனுமகொண்டா என்பது. அவர் மேலைச்சாளுக்கிய மன்னரான மூன்றாம் தைலர் என்பாரை 1155-ல் வென்றார்.

காகதியர்களின் தனி அரசு முதற் பிரதாபருத்திரர் என்பார் காலத்திலேயே செம்மைப்பட்டது. கி.பி. 1162-1185 வரை ஆண்ட பிரதாபருத்திரர் வாரங்கல் நகரை நிருமாணித்து அதனைக் காகதிய அரசின் தலைநகராக்கினார். அவர் வீரசமயத்தைத் தழுவிய வீரர். அவர் புரவலராகவும் புலவராகவும் திகழ்ந்தார். அவருக்குப் பிறகு அவர் தம்பி மகாதேவர் (1185-1199) மன்னரானார். அவர் தேவகிரியில் ஆண்ட யாதவ அரசரான ஜயத்திரபாலர் என்பவரால் வெல்லப்பட்டார். தேவகிரிக்கும் வாரங்கலுக்கும் இடையே முற்றிய பகை, கணபதி என்பவர் காகதியமன்னரானவரை நீடித்தது.

கணபதி புகழ்பெற்ற மன்னராக விளங்கினர். கி.பி. 13ஆம் நூற்றுண்டில் சோழர் பேரரசில் பெருங்குழப்பம் ஏற்பட்டு அப் பேரரசு முறிந்துபோகும் நிலை பிறந்தது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு காகதிய கணபதி தென்னாடு நோக்கிப் படையெடுத்தார். அவர் காஞ்சிபுரத்தையும் அடைந்தார். ஆயினும், அதே சமயத்தில் மதுரையில் ஆண்ட பாண்டியப் பேரரசரான ஜடாவர்மர் முதலாம் சுந்தரபாண்டியர் என்பார், நெல்லூர்வரையில் வெற்றிப் படைகொண்டு முன்னேறவே காகதிய கணபதி காஞ்சியை விட்டு வாரங்கலுக்குப் பின்வாங்க வேண்டியதாயிற்று. காகதிய மன்னர்கள் பலருள்ளும் இக் கணபதியே சிறந்தவர் என்பர். அவர் கல்வியையும் நுண்கலைகளையும் கைத்தொழிலையும் வாணிகத்தையும் வளர்த்தவர். அவர் காலத்தில் அவர் ஆண்ட நாடு செழித்தது.

கணபதியை அடுத்து அவருடைய மகளான ருத்திராம்பாள் (1261-1291) காகதியரை ஆண்டாள். மார்க்கோ போலோ என்னும் இத்தாலிய உலக யாத்திரிகர் அவள் ஆண்ட காலத்தில் தான் சீனுவிலிருந்து இத்தாலிக்குக் கடல்வழியாகச் செல்லும் மார்க்கத்தில் இந் நாட்டிற்கு வந்தார். அவர் ருத்திராம்பாளின் ஆட்சியைப்பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார். ருத்திராம்பாளையடுத்து அவளுடைய மகள் வயிற்றுப் பெயரரான பிரதாபருத்திரர் ஆட்சி நடத்துதற்கு ஏற்ற வயதினை எய்திய உடனே ஆட்சியை அவரிடம் ஒப்புவித்துவிட்டாள் அவ் வரசி. இரண்டாம் பிரதாபருத்திரர் காகதியநாட்டை 1291-லிருந்து 1323 வரை ஆண்டார். அவர் ஆட்சிக்காலத்தில் கில்ஜி சுல்தான் அவர் நாட்டின்மீது படையெடுத்து நாசப்படுத்தினர். மாலிக்காபூர் காகதிய நாட்டில் அடித்த கொள்ளைக்கு அளவில்லை. கி.பி. 1318-ல் குஸ்ருகான் மறுபடியும் வாரங்கல்மீது படையெடுத்தார். அப்போதும் நாடு கொள்ளைபோயிற்று. கி.பி. 1323-ல் உலுக்கான் (பிறகு மகம்மது-பின்-துக்ளக் என்னும் பெயரோடு டெல்லியில் ஆண்ட சுல்தான்) வாரங்கலைக் கைப்பற்றி இரண்டாம் பிரதாபருத்திரரைச் சிறைப்படுத்தி டெல்லிக்கு அனுப்பினர். அவர் போகும் வழியிலேயே இறந்து போனர் என்பர். அப்பொழுது காகதிய நாடு டெல்லி சுல்தானியத்தில் இணைக்கப்பட்டது. அச் சமயம், தேவகிரி, தௌலதாபாத் என்னும் புதுப் பெயர் பெற்றதுபோல, வாரங்கல் சுல்தான்புரி என்றும் புதுப் பெயர் பெற்றது. கி.பி. 1362-ல் பாமனி சுல்தானன முதலாம் மகம்மது என்பவர் காகதிய நாட்டை முற்றிலும் வென்று அதன் சுதந்தரத்தைப் பறித்துத் தமது அரசில் சேர்த்துக்கொண்டு விட்டார்.

12. வடஇந்தியச் சிற்றரசுகள்

(மொகலாயர் ஆட்சி பரவும்வரை)

1. வங்காளம்

மகம்மது பின் பக்தியார் வென்ற பிறகு வங்காளம் முஸ்லிம் ஆட்சியிலேயே இருந்துவந்தது. ஷாம்ஸுதீன் இலியாஸ் என்பவர் கி.பி. 1343-லிருந்து 1357 வரை ஆண்டார். 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மம்மூது என்பவர் ஆண்டார். இவ் விருவர் ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் சிறப்புற்ற மன்னர்கள் ஒருவரும் வங்காளத்தை ஆளவில்லை. கி.பி. 1538-ல் ஷெர்கான் வங்காளத்தை வென்று ஆண்டார். அவரது ஆட்சி திறமை மிக்கதாக அமைந்தது. ஷெர்கானைத் தோற்கடித்து வங்காளத் தைக் கைப்பற்ற முயன்றார் இரண்டாவது மொகலாய அரசரான ஹுமாயூன். ஆனால், ஷெர்கான் அவரினும் துணிவும் திறமையும் மிக்கவராதலின் மொகலாயப் பேரரசையே அவரிடமிருந்து பறித்துக்கொண்டு அவரை இந்துஸ்தானத்தினின்றும் விரட்டி விட்டார். கி.பி. 1576-ல் அக்பர் வங்காளத்தை வென்று மொக லாயப் பேரரசில் அடக்கினார்.

2. நேபாளம்

வடஇந்தியாவின் நேர் மத்திய வடக்கே அமைந்திருப்பது நேபாளம். அங்குப் பௌத்தம் சிறிது பரவிற்றாயினும், இந்து மன்னர்களே ஆண்டுவந்தனர். கருநாடக வமிசம் என்று கூறப் படும் ஓர் அரசகுலம் அங்கு ஆண்டுவந்தது. அவர்களில் ஜயோதிர் மல்லர் (1411-1427), யக்ஷமல்லர் (1427 1474) என்பவர்கள் அக் குலத்தவர்களில் சிறப்புடையவர்கள். கி.பி. 1768-லிருந்து கூர்க்கர்களே நேபாளத்தை யாண்டனர். இந்திய அரசியலிலிருந்து சற்று விலகியே நின்றுள்ளது நேபாளம்.

3. கான் தேசம்

பாமனி அரசர்களை எதிர்த்து மாலிக் அகமது என்பவன் கி.பி. 1382-ல் கான் தேசத்தை நிறுவினான். அவனும் அவன் பின் தோன்றல்களும் தம்மைக் 'கான்' என்று பட்டமிட்டுக் கொண்டமையால் அவ் வமிசமே கான் வமிசமாயிற்று; அவர்கள் நாடு, கான் தேசம் ஆயிற்று. மாலிக் அகமது தம்மைக் கலீபு உமர்—அல்பருக் என்பவருடைய சந்ததியார் என்று கூறிக்கொண்டார்; ஆதலால், அவர்களுக்குப் பருக்கிகள் என்னும் பெயரும் உண்டாயிற்று.

மாலிக் அகமதுக்குப் பிறகு அவருடைய இரு மக்களான நசீர், ஹஸன் என்பவர்கள் கான் தேசத்தைத் தமக்குள் பகிர்ந்து கொண்டு ஆண்டனர். அவர்களில் முன்னவனான நசீர்கான் என்பான் பர்ஹான் புரி என்னும் ஊரை நிருமாணித்தான். அவன் மகள் பாமனி சுல்தானான இரண்டாம் அலாவுதீனை மணந்தாள். ஆயினும், அவனுக்கும் அவன் மருமகனுக்கும் பலமுறை போர் நிகழ்ந்தது. கான் தேசத்தை ஆண்டவர்களில் மிகுந்த புகழ் பெற்றவர் இரண்டாம் அடில்கான் என்பவர். அவர் கி.பி. 1457-லிருந்து 1501 வரை ஆண்டார். அவர் அசிர்கார் கோட்டையைப் பலப்படுத்தினார். கோண்டுவானாவின் சில பகுதிகளை அவர் வென்றார். ஆயினும், குஜராத்தின் சுல்தானான மம்மூது பிகாரா என்பவர் அவர்மீதும் அவர் ஆட்சிமீதும் ஆதிக்கம் செலுத்தியே வந்தார்.

இரண்டாம் அடில்கானை அடுத்து, தாவுது (1501-1508) என்பார் ஆண்டார். கான் தேசத்தின் உள்நாட்டு விவகாரங்களில் அகமது நகரத்துச் சுல்தான்களின் தலையீடு மேலும் மேலும் அதிகமாயிற்று. இந் நிலையைக் கருதிக் கான்தேசத்துச் சுல்தான் குஜராத் அரசகுலத்தோடு மணவுறவு ஏற்படுத்திக்கொண்டு தமது அரசியல் வலுவை மிகுவித்துக்கொண்டார். முபாரக் ஷாவின் ஆட்சிக் காலத்தில் மாளவத்தின் மொகலாய கவர்னரான பீர் மகம்மது என்பாரின் பர்ஹான்பூரைத் தாக்கினான். இதனால் உடனடியாக யாதொரு பயனும் ஏற்படவில்லையாயினும் கி.பி. 1564-ல் கான் தேசம் மொகலாயர் ஆட்சியில் அகப்படவேண்டியதாயிற்று. இரண்டாம் மகம்மது ஷா என்பார் மொகலாயர் ஆட்சியைக் கான் தேசத்தினின்றும் அகற்றிவிட முயன்றமை மிகுந்த பயனளிக்கவில்லை. கி.பி. 1579-ல் நான்காம் அடில் ஷா மொகலாயருக்குக் கப்பம் கட்டவில்லை; ஆயினும், அவரே அக்பருக்கு அகமத் நகர் முற்றுகையில் உதவவேண்டிய நிலையும்

தோன்றிற்று. பகதூர்ஷா (1597-1601) என்பவரே கான் தேசத்தை ஆண்ட கடைசி அரசர். கி.பி. 1601-ல் கான் தேசம் மொகலாயர் ஆட்சியில் உறுதியாக உட்பட்டது.

4. ஜான்புரி

இந் நகரத்தை பிரோஸ் துக்ளக் 1359-1360-ல் கட்டினான். இது காசி நகரத்திற்குச் சற்று வடபால் அமைந்துள்ளது. கி.பி. 1394-ல் ஜான்புரி டெல்லி சுல்தான் ஆட்சியில் அடங்கிற்று. அங்கு ஆண்ட அதிகாரி மாலிக் உஸ்ஷார்க் (கீழைநாட்டுத் தலைவர்) ஆனார். தைமூர் படையெடுப்பிற்குப் பிறகு டெல்லி சுல்தானியம் பலவீன மடைந்ததால் ஜான்புரி சுதந்தரமெய்திற்று. அதன் ஆட்சியாளர்களான குவாஜாக்களுக்கு ஷார்க்கிகள் என்று பெயர். ஜான்புரி ஆட்சி மிக உன்னத நிலையிலிருந்தபோது அது டெல்லி யிலிருந்து வங்காளம்வரை பரவியிருந்தது. இப்ராஹிம் ஷா (1402-1436) என்பவரே ஷார்க்கி அரசர்களில் மிகப்புகழோடு ஆண்டவர். அவர் கலைகளை ஆதரித்தார். லோடி வமிசத்தவரான பஹ்லுல் லோடி என்பார் ஜான்புரியை வென்று டெல்லி சுல் தானியத்தில் சேர்த்தார்.

5. சிந்து

கி.பி. 1234-ல் இல்தூத்மிஷ் சிந்துவைக் கைப்பற்றினார்; ஆயினும், இல்தூத்மிஷுக்குப்பின் டெல்லியில் திறமையற்றவர்கள் ஆண்டமையால் சிந்து தனி அரசுநிலை எய்தியது. துக்ளக்குகள் படையெடுப்பிற்கு உள்ளான சிந்து தைமூர் படையெடுப்பிற்குப் பின் மறுபடியும் சுதந்தரமடைந்தது. 1543-ல் ஷெர்ஷா அம் மாநிலத்தைத் தமது ஆட்சிக்குட்படுத்தினார். 1591-ல் அக்பரது மொகலாயப் பேரரசில் ஒரு பகுதியாயிற்று.

6. இராசபுதனம்

வடமேற்கு இந்தியாவில் வெள்ளம்போல் புகுந்த முஸ்லிம் படையெடுப்புகளைத் தீவிரமாக எதிர்த்துத் தடுக்க முயன்றவர்கள் இராஜபுத்திரர்களே. அவர்களில் ரந்தம்பூர் (ரணஸ்தம்பபுரி), மேவார் (உதயபுரி), மார்வார் (ஜோதிபுரி) என்னுமிடங்களில் ஆண்ட ராணுக்கள் சிறப்பானவர்கள். கி.பி. 1192-ல் சௌஹான் அரசரான பிருதிவிராஜர் கோரி மகம்மதுவை எதிர்த்துப் போரிட்டு மடித்ததன் விளைவாக டெல்லி சுல்தானியம் தோன்றிற் றுயினும், இராஜபுத்திர ஆதிக்கமோ சௌஹான் குலமோ அந் நிகழ்ச்சியோடு அற்றுப்போகவில்லை. ரந்தம்பூரில் கோவிந்த

ராஜர் என்பவரும் அவருடைய சந்ததியார்களும் ஆண்டனர். அவ்வப்போது அவ் வரசைத் தாக்கும் வலுவுடைய முஸ்லிம் மன்னர்கள் காலத்தில்மட்டும் அவர்களுக்குத் தற்காலிகமாகப் பணிந்துவிட்டுப் பிறகு மறுபடியும் சுதந்தரமடைந்து நிற்பதே இராஜபுத்திரஅரசுகளின் தன்மையாக இருந்தது. அதற்கு ரந்தம்பூர் விலக்கன்று. இவ்வாறே குத்புதீன் ஐபெக், இல்தூத்மிஷ் என்பார் ஆட்சிக் காலங்களில் நடந்தது. கடைசியாக அலாவுதீன் கில்ஜி அவ் வரசை டெல்லி சுல்தானியத்தில் சேர்த்தார் (1299). பிறகு அது மொகலாயர் ஆட்சியில் அகப்பட்டது (1569). மேவாரில் குசிலோத் குலத்தவரான இராஜபுத்திரர்கள் ஆண்டனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் அக் குடும்பத்தின் இருபிரிவினர் சித்தூர், ஸோடா என்னும் ஈரிடங்களிலிருந்து ஆண்டனர். அலாவுதீன் கில்ஜி 1303-ல் சித்தூரைக் கைப்பற்றினார். அப்பொழுது அங்கு ஆட்சிபுரிந்த மன்னர் இரத்தினசிம்மர். அவருக்குப்பின் இராஜபுத்திரர் ஒருவரும் அங்கு ஆளவில்லை. இரத்தினசிம்மரின் மனையாளான பத்மினி என்பாள் தன்பால் காமுற்ற அலாவுதீனை ஏய்த்துவிட்டுத் தப்பியதாகக் கூறப்படுவது ஒரு கதை.

மகம்மது - பின் - துக்ளக்கிற்குப்பின் சுல்தானியமே பலவீனமடைந்தது. அதன் முடிவாக ஸெஸோடாவில் ஆண்ட இராஜபுத்திரர்கள் சுதந்தரமெய்தினார்கள். கி.பி. 1433-1468 வரை ஆண்ட இராணாகும்பா என்பவர் புகழ்பெற்ற இராஜபுத்திர மன்னர்; கல்விமான்; கற்றோரைப் போற்றியவர். மீராபாய் என்னும் கிருஷ்ணபக்தை அவர் குடும்பத்தைச் சேர்ந்தவளே. மேவாரில் கடைசியாக ஆண்டவர் ராணா சங்கிராம சிங் என்பவர்; அவரை ராணா சங்கா என்றும் அழைப்பர். அவரும் பாபர் இந்தியாமீது படையெடுக்கவேண்டும் என்று விரும்பியவர். அவர் கணக்குப்படி பாபரது உதவியால் இப்ராஹிம் லோடி வீழ்த்தப்பட்டால், அவ் வரசியல் பாழைப் பயன்படுத்திக்கொண்டு தாம் டெல்லியின் ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்பது. ஆயினும், பானிபட் போரில் இப்ராஹிம் லோடியை வென்ற பாபர் கனுவாப் போரில் ராணாசங்காவை வென்று அவர் போட்ட கணக்குத் தவறானது என்று காட்டினார். ராணா சங்காவின் ஆட்களே அவருக்கு நஞ்சு இட்டுக் கொன்றுவிட்டனர்.

இதற்குச் சிலகாலம் கழித்து, மேவாரைக் கைப்பற்றவேண்டி ஹுமாயூன் குஜராத் மன்னர் பகதூர் ஷாவோடு பொருதார். கி.பி. 1568-ல் அக்பர் சித்தூரைக் கைப்பற்றினார். ராணா சங்காவின் மகனான 'உதயசிங் மொகலாயர்களை எதிர்க்க முயன்றது

கொன்னே கழிந்தது. கி.பி. 1576-ல் ராஜா மான்சிங் பிரதாப சிங் (உதயசிங்கின் மகன்) கை ஹால் டிகாட் கணவாய்ப் போரில் தோற்கடித்தபிறகு இராஜபுத்திரர்களின் எதிர்ப்பு ஏறத்தாழ அற்றுப்போயிற்று என்று கூறலாம். கடைசிவரையில் மொகலாய ருடைய எதிரியாகவே இருந்துவந்த பிரதாபசிங் கி.பி. 1597-ல் இறந்தார்.

ஜோதிபுரியில் ஆண்ட இராஜபுத்திரர்கள் ரத்தோர்கள் என்பவர்கள். அவர்கள் கனோஜியிலிருந்து ஆண்ட ஜெயசந்திர ககதவாலரின் சந்ததியார்கள். அவர்களும் நாளடைவில் மொகலாயர்களோடு ஒத்துழைத்தனர்.

7. குஜராத்

அலாவுதீன் கில்ஜி கி.பி. 1297-ல் குஜராத்தைக் கைப்பற்றினர் (1297). அந் நாளிலிருந்து கி.பி. 1401 வரை அந் நாடு டெல்லி சுல்தானிய ஆட்சியில் அடங்கியிருந்தது. அலாவுதீன் தாக்குதலுக்கு முன்பு அன்ஹில்வாரிலிருந்து ஆண்ட சோலங்கிகள் குஜராத்தையும் ஆண்டனர். அவர்களில் நீண்டநாள் ஆண்டவர் இரண்டாம் பீமதேவர் (1178-1241) என்பவர். ஐபெக் முதலிய திறமைசாலிகளான துருக்கர்களாலும் குஜராத்தைக் கைப்பற்ற முடியவில்லை. அதன் பிறகு அலாவுதீனின் ஆட்சியில் அகப்பட்டிருந்த குஜராத் கி.பி. 1401-ல் மறுபடியும் சுதந்தரமடைந்தது. முசபர் ஷா என்னும் மன்னரே இவ்வாறு குஜராத்தின் சுதந்தரத்தை மீண்டும் நிறுவியர். இப் புகழ்பெற்ற மன்னரின் பெயரனை அகமதுஷா என்பவன் தன் பாட்டனுக்கு நஞ்சிட்டுக் கொன்றுவிட்டுத் தானே சுல்தானுனன். அவன் கி.பி. 1411-1441 வரை ஆண்டான்; அகமதாபாத் என்னும் நகரைக் கட்டினன்; அவன் இஸ்லாமில் மிகைப்பற்று உடையவன். அவனையடுத்து வந்த மன்னர்களில் அவன் பெயரரான மம்மூது பிகாரா என்பவரைச் சிறப்பாகக் கூறவேண்டும். அவர் பெயரிலுள்ள 'பிகாரா' என்பது 'எருது' என்று பொருள்படும் ஒரு சொல். அவரது நீண்டு வளைந்த மீசை எருதின் கொம்புகள் போலிருந்தது என்பர். அவர் திறமை வாய்ந்த போர் வீரர். அவர் சிந்துவிலும் கீர்னரிலும் ஆண்ட இந்தியர்களையே யன்றி டாமனில் குடியேறி வாணிகம் செய்த போர்த்துகீசியர்களையும் வென்றார். அவருடைய பழக்க வழக்கங்களைப்பற்றிய வரலாறு சுவையானது. 'அவர் தேரைகளையும் தேள்களையும் உண்பார்; அவரைக் கடித்த பாம்பும் இறந்து போகும்' என்று கூறுவர். அவருக்குப் பின் சில்லாண்டுகள் கழித்து பகதூர் ஷா என்பவர் ஆண்டார். அவர் காலத்தில் குஜராத்தின் ஆட்சிப்பரப்பு மிகுந்தது.

மொகலாய மன்னரான ஹுமாயூன் குஜராத்தில் அவரோடு போர்செய்து வென்றார்; ஆயினும், ஷெர்கானால் கிழக்கே தோற்றுவிக்கப்பட்ட ஆபத்தை நோக்கி, அவர் குஜராத்தினின்றும் விலகிச் சென்றார். பகதூர் ஷா 1537-ல் இறந்தார். மொகலாயப் பேரரசினை உறுதியாக நிறுவிய அக்பர் அந் நாட்டை 1573-ல் வென்று தமது பேரரசில் இணைத்துக்கொண்டார்.

8. காஷ்மீர்

கி.பி. 1339-ல் காஷ்மீரம் இந்துக்கள் ஆட்சியினின்றும் மாறி முஸ்லிம்கள் வசமாயிற்று. இதனை ஆக்கியவர் ஷாமீர் என்னும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர். அவர் ஆட்சி 1349-ல் முடிவுற்றது. அவருக்குப்பின் அலாவுதீன், ஷிகாபுதீன் என்னும் மன்னர்கள் ஆண்ட காலத்தில் காஷ்மீர் அரசின் பருமையும் பெருமையும் மிகுந்தன. சிகந்தர் என்னும் அரசர் இஸ்லாமில் மிகைப் பற்றுடையர்; ஆதலால், அவர் ஆட்சியில் இந்துக்கள் ஓரளவு துன்புற்றனர். காஷ்மீரத்திலிருந்த இந்துக்களில் பெரும்பாலோர் அந் நாட்டை விட்டு அண்டை நாடுகளுக்கு ஓடினர். அப்போதே காஷ்மீரின் மக்கள் தொகையின் பெரும்பகுதி முஸ்லிம் சமயமாயிற்று. அவருக்குப்பின் ஆண்ட அவர் மைந்தர் சைன்உல் அபிதின் (1420-1470) தம் தந்தையின் ஆட்சி மரபுகளை மாற்றி, இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்க முயன்றார். அவர் ஜிஸியா என்னும் தலைவரியை நீக்கினார். விவசாயிகளுக்குப் பயன்படவேண்டிய பல பாசன வசதிகளை ஆக்கினார். ஆட்சித்துறையிலும் சில திருத்தங்களைச் செய்தார். அளவு கடந்து மிகுந்துவிட்ட பண்ட விலைகளைத் தமது ஆணையாற் குறைத்தார். அவரைக் 'காஷ்மீரத்து அக்பர்' என்றும் குறிப்பிடுவதுண்டு. மொகலாயர் இந்துஸ்தானத்தை வென்று ஆளத் தொடங்கியதிலிருந்தே காஷ்மீரத்தின் சுதந்தரம் ஊசலாடிக் கொண்டே இருந்தது. கி.பி. 1561-ல் அதன் சுதந்தரம் குலையத் தொடங்கி, 1586-ல் அக்பரது பேரரசில் இணைக்கப்பட்டது.

13. பாமனி அரசு (1347–1493)

மகம்மது-பின்-துக்ளக், அலாவுதீன் கில்ஜியின் அறிவறிந்த அரசியற்கோட்பாடுகளினின்றும் விலகி, இந்தியா முழுவதையும் வென்று ஆளவேண்டும் என்னும் அசம்பாவிதமான ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டார். இதனுல் ஒரு சில நாட்களுக்கேனும் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதி அவருடைய சுல்தானிய ஆட்சியில் அடங்கிற்று. தக்காணத்தில் அவரது ஆட்சி தென்னிந்தியாவைக் காட்டிலும் சற்று அதிக வலுவோடு நின்றது. ஆயினும், அவருடைய தனிப்பண்புகளாலும், அவ்வளவு பெரிய அரசினைத் தொடர்ந்து ஆளுவதற்குத் தேவையான நிர்வாகக் கருவிகள் இன்மையாலும் அப் பேரரசு சிதறுண்டது. தெற்குக் கோடியிலிருந்த துக்ளக் ஆட்சிப் பிரதிநிதி சுதந்தரத்தை அறிவித்துக்கொண்டு மாபார் சுல்தானியத்தை நிறுவிக்கொண்டார். தேவகிரியில் இருந்த முஸ்லிம் ஆட்சியாளர்கள் மகம்மதுவின் வாழ்நாளிலேயே கலகம் செய்யத் தொடங்கினுர்கள். 1336-ல் விஜயநகரத்தில் நிறுவப்பட்ட இந்து அரசைத் தவிரத் தக்காணத்தில் பாமனி அரசும் ஒரிஸ்ஸாவுமே தனி அரசு ஆளத் தொடங்கிவிட்டன. தாம் கட்டிய பேரரசு தம் கண் எதிரிலேயே அழியத் தொடங்கிவிட்டதைத் தம் கண்ணுரக் கண்டுகொண்டே மகம்மது துக்ளக் ஆவி துறந்தார்.

மகம்மது தமது தலைநகரைத் தேவகிரிக்கு மாற்றியதிலிருந்து அந் நகரில் ஏராளமான முஸ்லிம்கள் குடியேறினுர்கள். ஆனுல், முஸ்லிம், இந்து வேறுபாடு காணுமல் அம் மன்னர் யாவரையுமே துன்புறுத்தினுர்; அவர்களுடைய பகைமையையும் சம்பாதித்துக் கொண்டார். அன்றியும், தௌலதாபாத் (இதுவே தேவகிரிக்குத் தரப்பட்ட முஸ்லிம் பெயர்) தில் பலராலும் விரும்பப்பட்ட கவர்னர் குட்லுக்கான் என்பவரை அப் பதவியினின்றும் நீக்கி நிஸாம் உதீன் என்பவரை நியமித்தார். அந் நியமனம் பலராலும்

எதிர்க்கப்பட்டது; ஒரு கலகமே உருவாயிற்று. கி.பி. 1345-ல் மகம்மதுவின் ஆளான அஸீஸ் என்பவனைக் கலகக்காரர்கள் கொன்றுவிட்டனர். அப்பொழுது சுல்தான் குஜராத்தில் இருந்தார். அஸீஸின் கொலையைக் கேட்டுப் பெருஞ்சினங்கொண்ட மகம்மது தேவகிரியில் இருந்த தம் அதிகாரிகளைப் புரோச்சிற்கு வர உத்தரவிட்டார். அவர்கள் முதலில் சுல்தானின் ஆணைக்கு அடங்கவே விரும்பினராயினும் அவரது தன்மையை நன்கு அறிந்தவர்களாதலின், பாதிதூரம் சென்றவர்கள் தம்மை அழைத்துச் செல்லவந்த ஆளைக் கொன்றுவிட்டுத் தேவகிரிக்கே திரும்பிவிட்டனர். அவர்கள் தலைநகரை யடைந்ததும் அங்கிருந்த கவர்னரைக் கொன்றுவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி மாலிக் இஸ்மாயில் என்பவருக்குத் 'தக்காணத்து மன்னர்' என்னும் பட்டத்தையும் சூட்டி 'மன்ன' ராக்கினர். அது கண்டு கலகம் அளவிற்கு விஞ்சிவிட்டது என்பதையுணர்ந்த மகம்மது தேவகிரியை முற்றுகையிட்டார். ஆயினும், தேவகிரியைக் காட்டிலும் குஜராத்தில் கட்டுக்கடங்காத கலகம் முற்றிக்கொண்டிருந்தது. அதை அடக்க சுல்தான் அங்கு விரைந்தார். இதற்கிடையே தௌலதாபாத்தில் முடிசூட்டப்பெற்ற இஸ்மாயில் முடிதுறந்தார். அவரை யடுத்து ஹஸன் என்பவர் 1347-ல் சுல்தானுக்கப்பட்டார். அவர் தக்காணத்துக் கலகத்தில் பெரும் பங்கு கொண்டவர். அவர் முதலாம் அலாவுதீன் பாமன்ஷா என்னும் பட்டத்தோடு மன்னரானார். அப்பொழுது டெல்லி ஆட்சியினின்றும் பிரிந்த தக்காணம் அக்பர் ஆட்சிக்காலத்திற்குப் பிறகுதான் மறுபடியும் அவ் வாட்சிக்கு உட்பட இருந்தது.

முதலாம் அலாவுதீன் பாமன் ஷா கி.பி. 1347-லிருந்து 1358 வரை தௌலதாபாத்திலிருந்து ஆண்டார். அவர் பெயர் பாமன் ஷா ஆதலின் அவர் தொடக்கி வைத்த அரசகுலத்திற்குப் பாமனி அரசு என்பதே பெயராயிற்று. சிலர் பாமன் என்பது 'பிராமணர்' என்பதன் திரிபு என்பர். முன்னொரு காலத்தில் பாரசீகத்தில் ஆண்டுவந்த பாமன்ஷா என்பாருக்கும் 14ஆம் நூற்றுண்டில் தக்காணத்தில் ஆண்ட சுல்தானுக்கும் யாதொரு தொடர்பும் இருக்கமுடியாது. ஆதலால், மேற்கூறியவை யெல்லாம் கட்டுக்கதை என்று கோடலே பொருத்தமாகும்.

அலாவுதீன் பாமன் ஷா தமது ஆட்சியைத் தொடக்கத்திலிருந்தே திறமையோடு செலுத்தினர். அவர் காலத்தில் பாமனி அரசின் தெற்கு எல்லை கிருஷ்ணை ஆறுவரை எட்டிற்று. அப்போது விசயநகர அரசின் அரசியல் ஆசைகளோடு பாமனி அரசு மோதத் தொடங்கியது. கிழக்கே இருந்த வாரங்கலும் பாமனியின்

பரப்பால் பாதிக்கப்பட்டது. அவர் தமது அரசினை நான்கு மாநிலங்களாகப் பிரித்தார். அவையாவன : குல்பர்கா, பீதர், தௌலதாபாத், பேரார் என்பவை. அவர் குல்பர்காவைத் தலைநகராக்கிக்கொண்டார்.

துங்கபத்திரை ஆற்றிற்குத் தென்பால் அமைந்திருந்த விசய நகர ராச்சியம் கி. பி. 1336-ல் ஹரிஹரர், புக்கர் என்னும் இரு (சங்கம) சகோதரர்களால் நிறுவப்பட்டது. அதன் முக்கியமான கொள்கை முன்காலத்தில் மாலிக்காபூர், பிறகு மகம்மது-பின்-துக்ளக் என்பார் ஆட்சியிற்போல மறுபடியும் இந்து அரசுகளுக்கும் இந்துக்களுக்கும் அவர்களுடைய பண்பாட்டிற்கும் கலாச்சாரச் சின்னங்களுக்கும் யாதொரு இடையூறும் தீங்கும் நேரிடாமற் காக்கவேண்டும் என்பதே. இந் நிலையில் அவ் வரசுக்கு அடுத்தாற் போல நேர்வடக்கே ஓர் இஸ்லாமிய அரசு அமைக்கப்பட்டு விட்டமை விசயநகர அரசர்களுக்குத் தொடக்கத்திலிருந்தே ஒரு பிரச்சினை யாயிற்று. ஆகவே, பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து பதினாறும் நூற்றாண்டில் தலைக்கோட்டைப் போர் நிகழ்ந்து முடிந்தவரையில், அதாவது ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுக்காலத்திற்கு அவ் விரு அரசுகளிடையே இடையறாத போர் நிகழ்ந்து வந்தது.

முதலாம் அலாவுதீன் பாமன் ஷாவிற்குப் பிறகு அவர்தம் மூத்த மைந்தரான முதலாம் மகம்மது (1358-1373) என்பார் சுல்தானானார். அவர் காலத்திலேயே வாரங்கல், விசயநகரம் ஆகிய இடங்களிலிருந்த அரசுகள் பாமனி அரசினைத் தங்களது இயற்கைப்பகை என்று கருதத் தொடங்கின. அதே போன்ற கருத்து பாமனி அரசிலும் இந்து அரசுகளைப்பற்றி இருந்தது. பாமனி அரசிற்கும் விசயநகர அரசிற்கும் இடையில் இருந்த ராய்ச்சூர் தோ ஆப் (ஆற்றிடைப் பிரதேசம்) பல போர்களுக்குக் காரணமாய் இருந்தது. அப் பிரதேசத்தை இரு அரசுகளும் தமது தமது என்று போட்டியிட்டு வேண்டினர். சில பொருளாதாரக் காரணங்களுக்காகவும் அவ் வரசுகளிடையே பொறாமையும் போரும் விளைந்தன. முதலாம் மகம்மது பொற் காசுகளை அச்சிட்டுத் தமது நாட்டில் வழங்கினார். பாமனி அரசில் இருந்த இந்துப் பொற்கொல்லர்கள் அக் காசுகளை உருக்கிப் பொன்னாக்கி விஜயநகருக்கு அனுப்பிவிட்டனர். விசயநகர அரசர்கள் அத் தங்கத்தைக் காசாக அடித்துத் தமது நாட்டில் வழங்கினர். இத்தகைய காரணங்களால் பாமனிக்கும் விசய நகருக்கும் இடையே போர் மூண்டது. அப் போரில் விசயநகரப் படைகள் தோற்றன. இது போதாதென்று வாரங்கலை ஆண்ட

இந்து மன்னர் பாமனி இராச்சியத்திற்குச் சேரவேண்டிய குதிரைகளைக் குறுக்கிட்டு வாங்கிவிட்டனர் (1362). பாமனி அரசர் வாரங்கல்மீது படையெடுத்தார்; அந் நாட்டு மன்னரைப் பிடித்து அவர் தலையை வாங்கிவிட்டார். வாரங்கல் அவைக் களத்திருந்த கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவர். பாமனி சுல்தா னிடம் சரண் புகுந்தார். கி. பி. 1365-ல் பாமனி அவையில் ஆடிப்பாடிய சில இசைப்புலவர்களுக்கு வெகுமதி அளிக்கப் புகுந்த பாமனி அரசர், அவர்களுக்கு ஒரு தாக்கீது அளித்து அதன்மூலம் அவர்களுக்குச் சேரவேண்டிய வெகுமதியை விசய நகரப் பேரவையில் பெற்றுக்கொள்ளும்படி உத்தரவளித்தார். அப் புலவர்களும் அதனை உண்மை யென்று நம்பி விசயநகரத் திற்குச் சென்று பாமனி சுல்தானின் உத்தரவைக் காண்பிக்கவே, அம் மன்னருக்கு வந்த கோபம் அளவிறந்தது. அப்போது விசய நகரத்தில் முதலாம் புக்கர் என்பவர் ஆண்டார். அம் மன்னர் பாமனி அரசருக்குத் தக்க தண்டனை அளிக்க விரும்பி ராய்ச்சூர் ஆற்றிடைப்பகுதிமீது படையெடுத்தார். ஆனால், முதலாம் மகம்மது விசயநகரப் படைகளை எதிர்த்துத் தாக்கி விரட்டியடித் தார். பாமனி மன்னர் அதோடு நில்லாமல் விசயநகர அரசிற்குட் புகுந்து அந் நாட்டில் பெருஞ்சேதம் விளைத்தார். ஆனால், தலை நகரை அவர் தாக்காமல் விடுத்தார்.

போர்த்துறையினைப் போல ஆட்சித்துறையிலும் மகம்மது வெற்றி கண்டவர். அவர் நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்; மதுவிலக்கைப் புகுத்தினார். அவர் தம் நாட்டின் ஆட்சியில் நேரடியான சிரத்தைகொண்டு அலுவலாளர்களை மேற்பார்த் தார். அவரது அமைச்சரவையில் எட்டு மந்திரிகள் இருந்தனர். மகம்மது ஆக்கிய இந் நிர்வாக ஏற்பாடுகள் பாமனி அரசின் நிலையான சீர்திருத்தங்களாய் அமைந்தன.

மகம்மதுவிற்குப்பின் அவர் மைந்தர் முஜாஹிது என்பார் மன்னராகி 1373-லிருந்து 1378 வரை ஆண்டார். அவர் ஆட்சிக் காலத்திலும் விசயநகரத்திற்கும் பாமனிக்கும் ராய்ச்சூர் ஆற்றி டைப் பிரதேசத்தைப்பற்றித் தகராறு தொடர்ந்தது. ஆதோனி யில் நடந்த போரில் இந்துக்கள் தோற்றனர். முஜாஹி திற்குப் பின் அவர் மாமனுன தாவுத்கான் என்பவர் சுல்தானைக் கொன்று தாமே அரசரானார். இந் நிலையில் இதுவே தக்க தருணம் என்று கருதி விசயநகரப்படைகள் துங்கபத்திரை யைக் கடந்து ராய்ச்சூர்வரை படையெடுத்தனர். வலுவில் அரசைக் கைப்பற்றிய தாவுதுகானும் விரைவில் கொல்லப் பட்டார். அவருக்குப்பின் அலாவுதீன் பாமன்ஷாவின் கடைசி

மகனான மம்மூதின் மகன் இரண்டாம் முகம்மது பாமனி சுல்தானானார். அவர் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் யாதொன்றும் நிகழவில்லை. அவர் ஆட்சியில் அமைதி நிலவிற்று. அவர் ஆட்சியை நல்லாட்சி எனல் வேண்டும். இருந்தும் 1387-95 வரை அந் நாட்டில் கொடிய பஞ்சம் ஒன்று தோன்றி மக்களை வாட்டிற்று. மன்னர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக அப் பஞ்சத்தின் கடுமை குறைந்தது. அவர் அவைக்களத்தில் சைபுதீன் கோரி என்னும் அமைச்சர் இருந்தார். அவருடைய திறமைசான்ற நிர்வாகத்தால் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. அவ் வமைச்சர் ஏறத்தாழ நூறாண்டுக்குமேல் வாழ்ந்தவர். மன்னர் இறந்ததும் மந்திரியும் இறந்தார். அப்போது பாமனி இராச்சியத்தில் குழப்பம் ஏற்பட்டது. அக் குழப்பத்திற்குக் காரணம் துகால்சின் என்பான் தலைமையில் தக்காணத்தில் இருந்த சில துருக்க அடிமைகள்.

இரண்டாம் மகம்மதை அடுத்து அவர் மைந்தர் கியாஸுதீன் அரசரானார். அவர் துகால்சினின் சூழ்ச்சியால் கண்ணையும் அரசையும் இழந்தார். அவருக்குப் பதிலாக அவருடைய சகோதரன் ஷாம்ஷுதீன் என்பவர் அரசராக்கப்பட்டார். ஆயினும், அம் மன்னர் ஒரு பொம்மை அரசராகவே இறந்தார்; உண்மையான அதிகாரம் அத் தீயகுண துகால்சின் வசமே இருந்தது, இந் நிலையில் முதலாம் அலாவுதீன் மற்றொரு மகனின் மக்களான பிரோஸ், அகமது என்பவர்கள் கலகம் செய்து துகால்சினைக் கொன்றனர். அந் நிகழ்ச்சியை அடுத்து பிரோஸ் மன்னரானார்.

பிரோஸின் ஆட்சி இருபத்தாறு ஆண்டுக்காலம் நடந்தது. அவர் ஆட்சிக்காலத்தில் பாமனி அரசிற்கும் விசயநகரத்திற்கும் இடையே பல போர்கள் நிகழ்ந்தன. இரண்டாம் ஷரிஹரர் ராய்ச்சூர்ப் பகுதியைத் தாக்கினார்; பிரோஸ் எதிர்த்தார்; விசய நகரப்படைகள் பயனற்ற முயற்சிக்குப் பிறகு பின்வாங்கின. பிரோஸ் விசயநகர அரசின் உள்ளே புகுந்து சேதம் விளைத்து மிகுந்த திறைப்பணத்தோடு திரும்பினார். 1399-ல் பிரோஸ் கோண்டுவானா பிரதேசத்தையும் வென்று கொண்டமையால், பாமனியின் பலமும் செல்வாக்கும் மிகுந்தன. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் இந்தியாமீது படையெடுத்து டெல்லிப் பிரதேசத்தில் பெருங்கொள்ளையடித்த தைமூர் பிரோஸை இந்தியாவில் அக் காலத்தில் ஆண்ட மன்னர்கள் யாவருள்ளும் பெரியவராக ஏற்றுக்கொண்டார். பிரோஸைத்

தக்காணம், குஜராத், மாளவம் ஆகிய மாநிலங்களுக்கெல்லாம் தலைவராக அவர் கருதினர். அதனால், குஜராத்தும் மாளவமும் பாமனி அரசிடம் வெளிப்படுத்தாப் பகைமை பூண்டன; அதே காரணத்திற்காக அவை விசயநகர அரசிடம் நட்பும் பூண்டன.

அப்போது விசயநகரத்தை ஆண்ட மன்னர் முதலாம் தேவராயர் என்பவர். அவர் ராய்ச்சூர்ப் பகுதியைச் சேர்ந்த முட்கல் என்னும் ஊரில் இருந்த ஒரு பொற்கொல்லன் மகளை விரும்பினர். அவ் விருப்பத்திற்கு அம் மகள் இணங்க மறுத்தமை யால், அம் மன்னர் ராய்ச்சூர்மீது படையெடுத்தார். இதனற் சினங்கொண்ட பிரோஸ் தம் படைகளைக்கொண்டு எதிர்த் தாக்குதல் நடத்தி விசயநகரப் படைகளைத் துங்கபத்திரையாற் றிற்கும் தென்பால் துரத்தினர். அன்றியும், அவரே தமது படைக ளோடு விசயநகரத்துட் புகுந்து தேவராயர் தம் மகள் ஒருத்தியைத் தமக்கு மணம்புரிவிக்குமாறு வற்புறுத்தித் தம் எண்ணத்தை நிறை வேற்றிக்கொண்டார். தவிரவும், இத்துணை இன்னல்களுக்கும் காரணமாயிருந்த அப் பொற்கொல்லரின் மகளைத் தம் மகனுக்கு மணம் செய்வித்தார். பிரோஸ் கி. பி. 1417-ல் வாரங்கலை வென்றார்.

மேற்கூறிய போர்முனை வெற்றிகளேயன்றி அமைதிக்காலச் சாதனைகளிலும் அவர் பிற மன்னர்களை விஞ்சி நின்றார். பிரோஸ் பிரோஸாபாத் என்று தம் பெயரால் ஒரு நகரத்தை ஆக்கினர் : ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியை ஒரு மாநிலமாக்கினர். அவர் மதுவை மிதமின்றி அருந்தினர் ; மகளிரை மட்டின்றி விரும் பினர். இவற்றின் ஆதிக்கத்தினின்றும் அவர் விடுபட்டிருந்த காலங்களில் அவர் நல்லாட்சியே நடத்தினர் எனலாம். பாமனி அரசை ஆண்ட பல மன்னர்களுள்ளும் சிறந்தவர்களில் அவர் ஒருவர் என்பதில் ஐயமின்று.

பிரோஸை அடுத்து அவர் இளவல் அஹமது என்பவர் அரசராகி 1422-லிருந்து 1436 வரை ஆண்டார். தமக்கு முன் ஆண்ட ஏனைய பாமனி மன்னர்களைப்போலவே அவரும் ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியையும் துங்கபத்திரை ஆற்றையும் கடந்து விசயநகரத்துட் புகுந்து சூறையாடினர். அவர் விடுத்த வேண்டு கோள்களுக்கு விசயநகரத்தினர் ஒப்புக்கொண்டனர். மிகுந்த செல்வமும் பல போர்க் கைதிகளும் உட்பட ஏராளமான திறை யோடு திரும்பினர் அஹமது. அவ்வாறு கைப்பற்றிச் செல்லப்பட்ட வர்களில் இரு அந்தணர் இருந்தனர். அவர்கள் முஸ்லீம்களாக வலிய மதமாற்றப்பட்டனர். அவர்களில் ஒருவர் பிற்காலத்தில்

பீதரில் இமாதுஷாஹி வமிசத்தையும், மற்றவர் அஹமது நகரில் நைஜாம் ஷாஹி வமிசத்தையும் நிறுவியவர்கள். கி.பி. 1424-ல் அஹமது தெலிங்கானப் பிரதேசத்தைப் பாமனி ஆட்சியில் உட்படுத்தி, மாளவத்தையும் வென்றார். அவர் காலத்தில்தான் பாமனியின் தலைநகரம் குல்பர்க்காவிலிருந்து பீடாருக்கு மாற்றப் பட்டது (1429). அவர் ஆட்சிக் காலத்தில் சுல்தானியத்தில் பல உட்பூசல்கள் தோன்றி அரசைப் பலவீனப்படுத்தின. இப் பலவீனங்கள் ஒன்று சேர்ந்து இறுதியில் அரசிற்கே இறுதி தேடி விட்டன. பாமனிப்படையில் அராபியர்கள், பாரசீகர்கள், துருக்கர்கள் முதலிய பலர் இருந்தனர். அப் படையில் முன்பு இந்துக்களாக இருந்து பிறகு முஸ்லிம்களாக மதமாற்றப்பட்ட வர்கள் பலரும் இருந்தனர். இப் பிரிவுகள் தவிர, உட்சமய அடிப்படையில் ஷியாக்கள் என்றும் ஸுன்னிகள் என்றும் இரு பிரிவினரும் இருந்தனர். இப் பிரிவுகள் ஒன்றோடொன்று தீராப் பகைமை பூண்டு இருந்தன. இவையே யன்றி அபிசீனிய ஆப்பிரிக்கர்கள் வேறு மற்றொரு பிரிவினராகப் புகுந்து குழப்பத்தை மிகுவித்தனர். இப் பிரிவினர் ஒவ்வொருவரும் சுல்தானின் ஆதரவையும் பாதுகாப்பையும் தனித்தனியே நாடினர்; அன்றியும், ஊரில் நடந்த குற்றங்கள் யாவற்றிற்கும் ஒருவரையொருவர் குற்றமும் சாட்டினர். பாமனி அரசின் முடிவிற்கே இப் பூசல்கள் காரணமாயின.

அஹமதுவின் ஆட்சிக்குப்பின் அவர் மகனான இரண்டாம் அலாவுதீன் (1436.1458) என்பவர் அரசரானார். கி பி. 1437-ல் அவர் ஒரு கொங்கணிச் சிற்றரசரை வென்று அவர்தம் மகளை மணந்துகொண்டார். இம் மணம் செய்துகோடற்கு முன்பே சுல்தான் கான்டேஷின் மன்னரான நஸிர்கான் என்பவரின் மகளை மணந்திருந்தார். ஆதலால், கான்டேஷ் மன்னர் சுல்தானின் இரண்டாவது திருமணத்தைப்பற்றிக் கேள்வியுற்றுச் சினங் கொண்டு பேரார்மீது படையெடுத்தார்; ஆனால், வெற்றி காண வில்லை. இதற்கடுத்தாற்போல் கி.பி. 1443-ல் பாமனி அரசுக்கும் விசயநகரத்தாருக்கும் வழக்கம்போல் போர் மூண்டது. இப் போர் அதில் ஈடுபட்டவர்களுக்கு யாதொரு பயனுமின்றிக் கழிந்தது. அலாவுதீன் இஸ்லாம் மதத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அவரைச் 'செங்கோலர்' என்னும் விருது கொண்டழைப்பர்.

அலாவுதீனை யடுத்து மன்னரான ஹுமாயூன் என்பவர் புறத்தாரான பாரசிக-அராபிய முஸ்லிம் கூட்டத்தை ஆதரித் தவர். அவர் அவைக்களத்தில் மகம்மது கவான் என்னும் பெயரிய

அரசியல் அலுவலாளர் ஒருவர் இருந்தார். அவர் அப் புறமுஸ்லிம் கூட்டத்தைச் சேர்ந்தவர். ஆதலால், ஹுமாயூனல் ஆதரிக்கப் பட்டார். கவான் 1404-ல் பிறந்தார்; இந்தியாவிற்கு 1447-ல் வந்தார்; அவர் எல்லாவகையிலும் திறமைசாலி; மன்னனின் நம்பிக்கைக்குப் பாத்திரர். அவரது தகுதியை உணர்ந்த சுல்தான் அவரைத் 'தலைமைப் பிரபு' வாக நியமித்தார். ஹுமாயூன் நல்ல அமைச்சரைத் தெரிந்தெடுத்துக்கொண்டாராயினும், அவர் சொற்படியோ அன்றித் தனது நற்புத்தியைப் பயன்படுத்தியோ நடந்துகொள்ளவில்லை. அவர் ஒரு கொடுங்கோலர். அவரை 'மனித உருவில் உலாவிய ஒரு பேய்' என்று கூறினர்.

ஹுமாயூன் ஆட்சி 1462-ல் முடிந்ததும் அவர் மைந்தர் நைஜாம் சுல்தானனர். அவர் பட்டத்திற்கு வந்தபோது எட்டாண்டுச் சிறுவராய் இருந்தார். ஆயினும், அவர் இரண்டாண்டுக் காலமே ஆட்சிபுரிந்தார். அவர் ஆட்சிக் காலத்தில் குவாஜா ஜஹான், மகம்மது கவான் என்னும் இரு பிரபுக்களும் சுல்தானின் தாயாரைக் கலந்து ஆலோசித்து ஆட்சி நடத்தினர். 'சுல்தான் மிகச் சிறுவராயிருந்தமையால் சுல்தானியமும் பலவீனமுற்றிருக்கும் என்று கருதிய மாளவ, கலிங்க மன்னர்கள் பாமணி அரசைத் தாக்கினர். ஆயினும், மகம்மது கவானின் திறமையாலும் குஜராத் மன்னன், 'காலத்திற் செய்த உதவி' யாலும் நிலைமை சமாளிக்கப்பட்டது. சுல்தானன நைஜாம் இறந்தபின் அவர் தம்பியான மகம்மது என்பவர் அரசரானர். அவரும் ஆட்சிக்கு வரும்போது மிகச்சிறு வயதினரே. ஆகையால், பழைய ஆட்சிச் சபை, தொடர்ந்து அலுவல் பார்த்துவந்தது. சுல்தானின் தாயார் அச் சபையில் இருந்த குவஜா ஜஹான் என்பவர் அரசியல் அதிகாரம் முழுவதையும் பறித்துக்கொள்ள முயன்ருர் என்று காரணம் காட்டி அவருக்குக் கொலைத்தண்டனை யளித்து விட்டார்; ஆகையால், அவைக்களத்தில் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் திறமையிலும் எஞ்சியவர் மகம்மது கவான் ஒருவரே. அவருடைய மேற்பார்வையில்தான் மன்னரே வளர்ந்துவந்தார். மகம்மதுவின் ஆட்சிக் காலத்தில் பாமினி அரசு பருமையினும் பெருமையிலும் விஞ்சி நின்றது. அவர் காலத்தில் பாமனிப் படைகள் விசயநகரத்தையும் தாண்டித் தொண்டைமண்டலம்வரை வெற்றியோடு வந்து மீண்டதாகக் கூறப்படுகிறது. அவர் ஆட்சிக் காலத்தில் ருஷ்யரான நிசிடின் என்பவர் பாமனிக்கு விஜயம் செய்தார். அவர் தாம் கண்டதையும் கேட்டதையும் குறிப்புக் களாக எழுதிவைத்துள்ளார். அவர் கூறுவதிலிருந்து அவ் வரசு சீரும் சிறப்புமாக இருந்ததாக மேற்போக்காகப் புலப்பட்டதன் காரணம், அவை அரசனது அவைக்களத்திலும் தலைநகரின் சில

பகுதிகளிலும் பிரபுக்கள் மனைகளிலும் காணப்பட்ட செய்திகளே யன்றி, அச் சீரும்சிறப்பும் பொதுமக்களோடு எவ்விதத் தொடர்பும் கொண்டவை யல்ல என்பதே என்று தோன்றுகிறது.

பாமனி வரலாற்றிலேயே பெருமையோடு பேசப்படக் கூடியவர்களில் மகம்மது கவான் முக்கியமான ஒருவர். அவர் அமைச்சுத் தொழிலைத் திறம்படவும் முழு ஈடுபாட்டுடனும் ஆற்றினார். அவர் அரசை வலுப்படுத்தினார். சிவில் நிர்வாகமும் இராணுவமும் சீர்திருந்தின. மிகப்பெரிதாக வளர்ந்துவிட்ட அவ் வரசை அவர் எட்டு மாநிலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கவர்னரை நியமித்து அக் கவர்னர்களுடைய அதிகாரத்தை அளவிற்குள் அடக்கினார். குல்பர்கா, பீஜபூர், தௌலதாபாத், ஜுன்னார், மாகூர், கவில், வாரங்கல், இராஜமகேந்திரம் என்பவையே அவர் ஆக்கிய மாநிலங்கள். பீதர் தனி ஆட்சியில் நின்றது. தங்களுடைய அதிகாரம் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டதைக் கண்ட அக் கவர்னர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. தெலிங்கானாவில் இருந்த மாலிக் ஹஸன் என்பவனுக்கு இக் காரணம்பற்றிக் கவானிடம் நேரடியான பகைமையே தோன்றிற்று. சுதேச முஸ்லிம்கள் ஒன்றாகச் சேர்ந்து கவானைத் தொலைத்துவிடச் சூழ்ச்சி செய்தனர். இப் பகைமைகளையும் சூழ்ச்சிகளையும் அறிந்திருந்தும் பொருட்படுத்தாமல் மக்களது நன்மை ஒன்றையே கருதி மேலும் மேலும் நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்துவந்தார் அவர். அவர் வரி வசூல் முறைகளை மாற்றி யமைத்தார். நிலவரியைப் பொருள்களாக அல்லாமல் ரொக்கமாகவே கட்டும் வசதியளிக்கப்பட்டது. அவர் பீதரில் ஒரு கல்லூரியை நிறுவியதிலிருந்து கல்வி முன்னேற்றத்தில் அவருக்கிருந்த அக்கறை புலப்படும். அவர் சுய நலம் கருதாமல் நாட்டு நலம் கருதியவர். நிர்வாகத் திறமை மிக்கவர். அவர் தாமே ஒரு கல்விமான். நல்லொழுக்க நெறியில் நின்றவர். ஆயினும், இஸ்லாம் உட்பிரிவுகளில் ஒன்றான ஸுன்னி நெறியைப் பின்பற்றியதோடு அந் நெறியில் அளவிற்கு விஞ்சிய பற்றும் கொண்டவர். மதப்பற்றினை மிகையாகக் கொண்டவர்கள் பிற மதத்தாருடைய பகைமைக்கு ஆளாகவேண்டுவது இயற்கையே யன்றோ ?

கவானை அவ்வாறு ஒழித்துக்கட்டத் திட்டமிட்டிருந்த மாலிக் ஹஸன், அத் தூயவர்மீது பொய்க்குற்றச்சாட்டு ஒன்றினைச் செய்து அது மன்னருக்கும் எட்டும்படியாகச் செய்தான். கவானின் பகைவர்கள் சில காலமாகவே சுல்தானுக்கு அவருடைய நம்பிக்கைமீது ஐயம் ஏற்படும் முறையில் அவதூறு

களையும் புகார்களையும் கிளப்பிவிட்டுக்கொண்டே வந்தனர். இதனையொட்டி, மாலிக்ஹஸன் தூண்டுதலால், கவான் எழுதிய தாகப் பொய்க் கையெழுத்திட்டு ஒரு கடிதம் வரையப்பெற்றது. அக் கடிதம் கவான் ஒரிஸ்ஸா அரசருக்கு எழுதியதாகக் கண்டது. அக் கடிதத்திற்குக் கவானின் முத்திரை திருடப்பட்டு வைத்து உறுதி செய்யப்பட்டது. இக் கடிதம் மன்னர் கையில் சேர்ப் பிக்கப்பட்டது. கடிதத்தைப் படித்தபோது குடிவெறியில் இருந்த சுல்தானுக்கு அதன் உண்மையைக் காணவேண்டும் என்று தோன்றவில்லை. அன்றியும் தீர ஆராயாமல் தவறு செய்து விட்டால் அதனைப் பிறகு திருத்தமுடியாது என்பதையும் உணர வில்லை. ஆகையால், அவர் கவானை அழைத்து 'மன்னரை எதிர்த்துச் சதி செய்பவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய தண்டனை யாது?' என்று கேட்டார். உண்மையை அறியாத கவான், 'அத்தகைய கயவனைக் கொன்று விடுவதே நேரிது' என்றார். சுல்தான் அந்தத் தண்டனையையே கவானுக்கு அளித்துவிட் டார். அந்த மன்னர் பல தவறுகளைச் செய்திருந்தார். அவை யாவற்றிலுள்ளும் மிகக் கொடுமையான தவறு இதுவேயாம். கவான் கொல்லப்பட்ட பிறகே தான் செய்தது தவறு என்பது சுல்தானுக்குப் புலப்பட்டது. ஆயினும், கவானுக்குப் பதிலாக மாலிக் ஹஸனே முதன் மந்திரியானார். பாமனி அரசின் இறுதிக் காலம் அவ் விரு நிகழ்ச்சிகளாலுமே விரைவில் நெருங்கிற்று.

மூன்றும் மகம்மதுவுக்குப்பின் அவர் மகன் மம்மூது அரச ரானார். அம் மன்னரும் அப்போது இளையராகவே இருந்தார். மாலிக் ஹஸனின் செய்கைகளால் நாட்டில் குழப்பமும் பகைமை யும் மிகுந்தன. அவர் புற-முஸ்லிம்களைத் தாக்கினார். கவானுக்கு அக-முஸ்லிம்கள் பகைவர்களாக இருந்ததுபோல மாலிக் ஹஸனுக்குப் புற-முஸ்லிம்கள் பகைவர்களாயிருந்தனர். பீடாரி லிருந்து யூசுப் அடில் கான் என்பவர் பீஜபூருக்குச் சென்று அங்கு ஒரு சுதந்தரச் சுல்தானியத்தை நிறுவுவதில் முனைந்தார், இந் நிலையில் மாலிக் ஹஸன் கொல்லப்பட்டார் (1486). சுதேச முஸ்லிம்களில் பலர் சுல்தானையே கொன்றுவிடச் செய்த சதியால் சினமுற்ற சுல்தான் அவர்களில் மிகப்பலரைக் கொன்றார். அப் போதிலிருந்து பீதரிலும் மன்னர் அதிகாரம் குன்றிப்போய், அங்கிருந்த காஸிம் பரீது என்பவர் உண்மையாகவே ஒரு சுல்தான் போல் நிர்வாகம் நடத்தத் தொடங்கினார். ஆயினும், 1504-ல் காசிம் பரீதும் இறந்தார். அவருக்குப்பின் அவர்மகன் அமீர் பரீது என்பவன் அரசாங்க நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்தினான். அப்போதிலிருந்தே பாமினி அரசு சீர்குலையத் தொடங்கிவிட்டது எனலாம். கி.பி. 1490-ல் மாலிக் அஹமது (மாலிக் ஹஸனின்

மகன்) யூசுப் அடில்ஷா (பீஜபூரில் இருந்தவர்), இமாதுல் முல்க் (பேராரைச் சேர்ந்தவர்) என்பவர் அவரவர்கள் நாடுகளில் தனி அரசு ஏற்படுத்திக்கொண்டனர். கி.பி. 1512-ல் சுல்தான் கனி என்பவர் கோல்கொண்டாவில் சுதந்தரப் பிரகடனம் செய்தார். இந் நிலையில் பாமனி சுல்தானுன மம்மூது 1578-ல் இறந்தார். அவருக்கு அஹமது, அலாவுதீன், வாலியுல்லா, கலிமுல்லா என்போர் மக்கள். அவர்கள் அம் மன்னருக்குப் பின் அதே வரிசை முறையில் அரியணையேறி அரசாண்டனர். கலிமுல்லா பாபரின் உதவியைக்கொண்டு பாமனி அரசைச் சற்று நிலைபடுத்திக்கொள்ள முயன்ருர். ஆயினும், உள்ளூரிலிருந்த அமிர் பரீது சுல்தானையே நகரைவிட்டு வெளியேற 'வேண்டிய நிலைமைக்குக் கொணர்ந்தார். அதன் பிறகு பீதரில் அமீர் பரீது 1527-ல் சுதந்திரமெய்தினுர். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு பாமனி அரசு என்பது ஒன்று இல்லாமற் போயிற்று. அவ் வழிவிற்குப் பிறகு அத் தக்காண சுல்தானியம் ஐந்து சிறு சுல்தானியங்களாகச் சிதறுண்டது. அவையே பீஜபூர், அகமது நகர், பீதர், பேரார், கோல்கொண்டா என்பவை. பாமனி அரசின் பலவீனத்தை யுணர்ந்து அதனை நீக்கி அவ் வரசினைப் பலப்படுத்த முயன்ற கவானின் முயற்சிகள் வெற்றி பெறுமுன்பே அவர் இறந்து போனுர். அவருக்குப் பிறகு அத்தகைய முயற்சிகளை மேற்கொள் வார் இன்மையால் அப் பலவீனங்கள் முற்றிப்போய் அரசே மறைந்துபோயிற்று.

மிகச் செழிப்புற்றிருந்த காலத்தில் பாமனி அரசு பரப்பில் மிகுந்திருந்தது. அதன் செல்வமும் பலமும் விசயநகரோடு பல முறை இடப்பட்ட பயனில்லாத போர்களில் செலவாயின. பொதுமக்களுக்கு வரிச்சுமை மிகுதியாக இல்லை. இந்துக்களைக் கட்டாயமாக மதமாற்றும் மரபு அவ் வரசால் மேற்கொள்ளப் பட்டது. ஆயினும், இந்துக்கள் மக்கள்தொகை பாதிக்கப்படும் அளவிற்குக் குறைந்துவிடவில்லை.

14. தக்காண, தமிழகச் சிற்றரசுகள்

(அ) ஒரிஸ்ஸா நாட்டுக் கஜபதிகள் (1435-1565)

கடைசி கங்க அரசரின் மந்திரியாக இருந்த கபிலேந்திரர் என்பவர் அம் மன்னரை யடுத்துத் தாமே ஆதிக்கத்தைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினார் (1435). ஏறத்தாழ கி.பி. 1450-ஐ அடுத்து அவர் வங்காளத்தின் ஒரு பகுதியை வென்றுகொண்டார். கி.பி. 1459-ல் அவர் ஹுமாயூன் பாமனியின் படைகளைத் தோற்கடித்தார். இரண்டு ஆண்டுகள் கழித்து பாமனி அரசின்மீதே படையெடுத்தார். அவர் படைகள் பீதர்வரை வந்தன. 1462-க்கும் 1465-க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றித் திருச்சிவரையுள்ள பிரதேசத்தையும் எதிர்ப்பின்றிச் சிறிதுகாலத்திற்குத் தமது அதிகாரத்தில் அடக்கினார். அவர் ஆட்சி மிக வலுத்திருந்த காலத்தில் அவரது பேரரசு வடகிழக்கே ஹுக்ளி ஆற்றிலிருந்து தெற்கே காவிரிவரையில் கரையோரமாகப் படர்ந்திருந்தது. அவர் கஜபதி, கௌடேசுவரர் ஆகிய பட்டங்களைப் புனைந்தார். நவகோடி-கர்னாட-குல்பர் கேசுவரர் என்பதும் அவர் புனைந்த விநோதப்பட்டங்களுள் ஒன்று. அவர் காலத்தில் பாமனியில் ஆண்ட சுல்தான்கள் சற்றுப் பலவீனர்களாயிருந்தமையாலும், விசயநகரப் பேரரசர்கள் பாமனிக்கு எதிராகக் கஜபதிகளை ஊக்குவித்தமையாலும் ஒரிஸ்ஸா நாட்டு இம் மன்னர்கள் இத்துணை ஆதிக்கம் எய்த முடிந்தது.

அவரை யடுத்துப் புருஷோத்தம கஜபதி (1470-1497) என்பார் ஆண்டார். பாமனி மன்னர் மூன்றும் மகம்மது என்பார் இராஜமகேந்திரபுரத்தையும் கொண்டபீட்டினையும் கைப்பற்றினார் (1472). 1478-ல் மறுபடியும் சுல்தானுக்கும் கஜபதிக்கும் போர் நிகழ்ந்து சுல்தான் வென்றார். இவ் வகையில் தமதுஅரசின் தென்பகுதியை அவர் இழந்துவிட்டார். ஆயினும், மூன்றும்

மகம்மது இறந்தபின் பாமனி அரசில் ஓரளவு பலவீனம் தோன்றிற்று. அதன் விளைவாகக் கஜபதி தாம் இழந்த சில பகுதிகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டிற்று. (1470-1497) அவருக்குப் பிறகு பிரதாபருத்திரர் கஜபதியாக ஆண்டார். இவர் காலத்தில் விசயநகரத்தில் ஆண்டவர் சாளுவ நரசிம்மர்; இவரோடு ஆட்சியில் கலந்திருந்த நரச நாயக்கர் என்பவர் புருஷோத்தமரின் இராச்சியத்தின்மீது படையெடுத்துச் சில வெற்றிகளைக் கண்டார் என்பர். அவருக்குப்பின் ஆண்ட அவர் மகனும் ஒரு பிரதாபருத்திரரே (1497-1541). அவர் காலத்தில் கஜபதிகளின் ஆட்சியும் ஒரிஸ்ஸாவின் சுதந்தரமும் சரியத் தொடங்கின. ஆயினும், வங்காளத்துச் சுல்தான் அலாவுதீன் உசேன்ஷா என்பவர் ஒரிஸ்ஸாமீது நடத்திய தாக்குதலைத் தவிர்த்தார். அவர் ஆட்சிக் காலத்தில் மேலை வங்காளத்திலிருந்த சைதன்யப் பிரபு ஒரிஸ்ஸாவின் மன்னரால் நன்கு மதிக்கப்பட்டார். அவரது அமைச்சராய் இருந்த ரஸாநந்தராயர் என்பவர் ஒருவர் தமது பதவியைத் துறந்து சைதன்யரின் அடியவரானார்.

கி.பி. 1575-ல் கிருஷ்ணதேவராயர் கஜபதி அரசின் தென் பகுதிகளைப் போரிட்டுக் கைப்பற்றினார். அதன் பிறகு பிரதாபருத்திரர் விசயநகரப் பேரரசருக்குத் தம் மகளை மணமுடித்தார். இவ் வெற்றிக்குப் பின் கிருஷ்ணதேவராயர், 'கஜபதி சப்தரங்க ஹரணர்' என்னும் கடினமான பட்டத்தைப் புனைந்தார். கி.பி. 1522-ல் கோல்கொண்டா சுல்தான் ஒரிஸ்ஸா இராச்சியத்திற்குத் தொல்லைகள் தந்தார்.

அதன்பிறகு ஒரிஸ்ஸாவில் ஆண்டவர் கோவிந்த வித்யாதரர் என்பவர் ஒருவர். அவரை நீக்கிவிட்டு அந் நாட்டு அரசைக் கைப்பற்றி ஆண்டவர் முகுந்த அரிசந்தனர் என்பார் (1560). அவர் எட்டாண்டுக் காலம் அந் நாட்டைச் சுதந்தரமாக ஆள முயன்றார். கி.பி. 1565 சுலைமான் சுரரானி என்பவர் முகுந்தரைக் கொன்று ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றினார். அவருடைய வமிசத்தினர் ஒரிஸ்ஸாவை மொகலாயப் படைத்தலைவரான ராஜாமான்சிங் வென்ற வரையில் (1592) ஆண்டனர். ஆயினும், ஜகாங்கீர் ஆட்சிக் காலத்தில்தான் ஒரிஸ்ஸாவில் மொகலாயர் ஆட்சி நிறுவப்பட்டது. தென்ஒரிஸ்ஸா கி.பி. 1640 வரை அதாவது அப் பகுதி கோல்கொண்டா சுல்தான்களால் வென்று கைப்பற்றப்பட்டவரையில் இந்து மன்னர்களாலேயே ஆளப் பட்டுவந்தது.

(ஆ) மதுரை சுல்தான்கள் (1335-1378)

மகம்மது - பின் - துக்ளக் மதுரை இராச்சியத்தைத் தமது பேரரசில் இணைத்துக்கொண்டபின் (1327) அங்கு சையிது ஜலாலுதீன் அஸன் என்பவரைத் தமது பிரதிநிதியாக மதுரையில் நியமித்தார். கி.பி. 1335-ல் ஜலாலுதீன் டெல்லியின் ஆதிக்கத்தை எதிர்த்து விலக்கித் தமது சுதந்தரத்தைப் பிரகடனம் செய்ததோடு சில சொந்தக்கரசுகளையும் வழங்கத் தொடங்கினர். அப்போது ஏற்பட்டதுதான் மதுரை சுல்தானியம் அல்லது மாபார் சுல்தானியம் என்பது. அவர் இபன்பதூதா என்னும் வரலாற்றுளருடைய மாமனார். அவர் சுதந்தரம் எய்திய பிறகு அவரைத் தண்டிக்குமாறு அனுப்பப்பட்ட சுல்தானியப்படை யாதொன்றையும் சாதிக்காமல் திரும்பிற்று. ஆயினும், ஜலாலுதீன் தம் அதிகாரிகளில் ஒருவரான அலாவுதீன் உதாசி என்பாரால் கொல்லப்பட்டார். கொன்றவர் சிறிதுகாலம், அதாவது சில மாதங்களுக்கு அரசை ஆண்டார்; அச் சிறு கால அளவில் இந்து இராச்சியங்களுக்குப் பல தொல்லைகள் கொடுத்தார். அவருக்குப் பின் அவர்தம் மருமகனை குத்புதீன் பிருஸ் என்பார் மதுரை சுல்தானுனர். அவருடைய ஆட்சியும் நாற்பது நாட்களுக்குப் பின் முடிவுற்றது. அவர் கொலையுண்டு இறந்தார். அதன்பின் கியாசுதீன் என்பார் ஆட்சியைக் கைப்பற்றி ஜலாலுதீனின் மகளொருத்தியை மணந்தார். இவ்வாருகக் கியாசுதீன் இபன் பதூதாவின் சகளர் ஆனர்.

கியாசுதீன் (1340-1342) கண்ணனூர்ப் போரில் மூன்றும் வீரவல்லாளருடன் பொருது வென்று தலைநகருக்குத் திரும்பியதும் இறந்து போனர். அவர் மாளயத் தீவுகளை வெல்லக் கருதியிருந்தார். இபன்பதூதா இவ் வரசரின் பேய்க் குணத்தை நன்கு வருணித்துள்ளார். அவரை ' மனித உருவில் திரிந்த ஒரு பேய் ' என்று அவர் கூறுகிரூர். கியாசுதீன் ஒரு முறை ஏராளமான இந்துப் போர்க் கைதிகளைக் கொன்ருர் ; ஆண்களையெல்லாம் கழுவேற்றினர் ; பெண்களைக் கழுத்தை நெறித்துக் கொன்று அவர்களுடைய கேசத்தைக்கொண்டே அக் கழுமரங்களில் அவர்கள் உடலங்களைப் பிணித்தார் ; அம் மகளிருடைய குழந்தைகளை அத் தாய்மார்களின் மார்பிலேயே போட்டுக் கொன்ருர். இவற்றையெல்லாம் கண்ட இபன்பதூதா இந் நாட்டைவிட்டு நீங்கிப்போய்விட மிகவும் விரும்பினர். கியாசுதீனுக்குப் பிறகு நாஸிர்உதீன் (1342-44), அடில்ஷா (1344-59), முபாரக்ஷா (1359-1368), ஸிகந்தர்ஷா (1368-78) என்பவர்கள் ஆண்டனர்.

விசயநகரப் பேரரசின் இரண்டாவது மன்னரான முதலாம் புக்கர் என்பாரின் மைந்தர் குமார கம்பணர் என்பவர். இவரை இரண்டாம் கம்பணர் என்றும் கூறுவர். இவர் மதுரைப் பிரதேசத்தின்மீது படையெடுத்துச் சுல்தானைத் தோற்கடித்துக் கொன்ருர். இவ் வரலாற்றை அக் கம்பணரின் மனைவியான கங்காதேவி தாமியற்றிய ‘மதுராவிஜயம்’ என்னும் காப்பியத்தில் விரிவாகக் கூறியுள்ளார். அதிற்கண்ட விவரங்களிற் சில இபன் பதூதுவாலும் பேசப்படுகின்றன. ஷாம்ஸி சிராஜ் என்னும் வரலாற்ருளர் 1357-ல் மாபார் மாகாணம் புக்கர் வசமாயிற்று என்று கூறுகிருர். ஆயினும், மதுரைச் சுல்தானியம் கி.பி. 1378 வரை முஸ்லிம் மன்னர்களால் ஒருவாறு ஆளப்பட்டு வந்தது. கி.பி. 1378-க்குப்பின் எந்தச் சுல்தானும் மதுரையில் ஆண்ட தாகக் குறிப்பில்லை.

15. விசயநகர அரசு (1336–1565)

1309-10 ஆண்டில் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவரான மாலிக்காபூர் தென்னாட்டின்மீது படையெடுத்தார் என்பதையும் அதன் விளைவுகள் தென்னாட்டுச் சமூகத்தையும், அரசியலையும் மிகவும் பாதித்தன என்பதையும் மேலே கண்டோம். அவ் விளைவு களில் மிக முக்கியமானது விசயநகரப் பேரரசு நிறுவப்பட்ட மையே. 1336-லிருந்து 1565 வரை அப் பேரரசு தென்னிந்திய வரலாற்றில் மிகவும் முக்கியமான இடம் வகித்தது. அதற்குப் பிறகும் ஏறத்தாழ ஓராண்டுக் காலத்திற்கு அவ் வரசு தொடர்ந்து வேறு தலைநகரங்களிலிருந்து குன்றிய ஆட்சியைச் செலுத்தியது. அவ் வரசு நிறுவப்பட்டமைக்கு முக்கிய காரணம் முஸ்லிம் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட பல இந்துச் சிற்றரசுகள் ஒன்று சேர்ந்து அப் படையெடுப்பை எதிர்த்தமையே அன்றி, இந்து அரசுகள் ஒருசேர இனி அத்தகைய படையெடுப்பு நிகழா வண்ணம் தடுக்க விரும்பி ஒரு பெரிய இந்து அரசை நிறுவ விரும் பியமையும் ஆகும்.

அவ் வரசின் வரலாற்றை ஆராய்தற்குப் பல மூலங்கள் உதவு கின்றன. விசயநகர காலத்துக் கல்வெட்டுகள், செப்புப் பட்ட யங்கள், வடமொழி, தெலுங்கு இலக்கியங்கள், பெரிஷ்டா, டபாடபா முதலிய முஸ்லிம் வரலாற்றுளர்களின் நூல்கள், நிக்கோலோகான்டி (இத்தாலியர்), அப்துர் ரஸாக் (பாரசீகர்), அத்தனேஸியஸ் நிக்கடின் (ருஷ்யர்) முதலிய புறத்தார் கூற்றுகள், விசயநகர வாழ்க்கையைப்பற்றியும் சில அரசியல் குறிப்புகளை யும் தருகின்றன. இத்தாலியிலிருந்து வந்த வார்த்திமா என்பவர் விசயநகரத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசுகின்றார். அந் நகரம் கட்டப்பட்ட காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுகட்குப் பிறகு வாழ்ந்த போர்த்துகலிலிருந்து வந்த ந்யூனிஸ் என்பவர் பல விவரங் களைத் தெரிவிக்கின்றார், இலக்கியங்களில் குமாரகம்பணரின் மனைவியான கங்காதேவி இயற்றிய மதுரா விஜயமும், கங்காதரர்

என்பவர் இயற்றிய கங்கதாஸ ப்ரதாப விலாசம் என்னும் நூலும், ராஜநாத திண்டிமர் 'என்பவருடைய சாளுவாப்யுதயம் என்னும் நூலும் விசயநகர வரலாற்றின் சிற்சில பகுதிகளுக்கு ஓரளவு உதவுகின்றன.



மகம்மது-பின்-துக்ளக்கின் தென்னிந்தியப் படையெடுப்புக்குப் பின் ஹொய்சள அரசர்கள் பலவீனமுற்றனர். அதன் விளைவாகத்

துங்கபத்திரைக்குத் தென்பாலிருந்த ஆனகுண்டி என்னும் சிற்றரசு முஸ்லிம் ஆதிக்கத்தில் அடங்கிற்று. அப்பொழுது காப்பைய நாயக்கர், ப்ரோலய நாயக்கர் என்பார் தெலுங்கரின் ஆட்சியை மீண்டும் நிறுவி டெல்லி சுல்தானியத்தின் வலுவைக் குறைக்க வேறொருபுறம் முயன்றனர். வாரங்கலிலிருந்து டெல்லி சுல்தானுல் சிறைபிடிக்கப்பட்டு டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் களில் ஹரிஹரர், புக்கர் என்று இருவர் இருந்தனர். கட்டாயமாக மதம் மாற்றப்பட்டு முஸ்லிம்களாக இருந்த அவ் விருவரும் ஆனகுண்டியில் கலகம் செய்த பஹாவுதீன் என்பவரை அடக்கச் சுல்தானுல் அனுப்பப்பட்டனர். அவர்கள் 1336-ல் அங்கு வந்து சேர்ந்தனர். பிறகு சமயம் வாய்த்தபொழுது ஆனகுண்டியின் சுதந்தரத்தை நிறுவி விசயநகரையும் வித்யாரண்யர் உதவி கொண்டு அமைத்தார்கள் என்பது ஒரு வரலாறு. ஆனல், தற்கால ஆராய்ச்சியாளர்களில் சிலர் ஹூவல் முதலான அறிஞர்கள் உரைக்கும் மேற்கண்ட வரலாற்றினை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் ஹரிஹரரும் புக்கரும் ஹொய்சள மூன்றும் வல்லாளரின் அலுவலர்களாக இருந்தனரென்றும் அவருடைய உதவியால்தான் அவர்கள் விசயநகரத்தை நிறுவ முடிந்ததென்றும் கூறுவர். அன்றியும், தலைநகரான விசயநகரமே வீரவல்லாளரால் முன்பே கட்டப்பட்டு விட்டதென்றும் அதற்கு வித்யாரண்ய நகரம் என்னும் பெயர் ஏற்பட்டது ஹரிஹரரும் புக்கரும் வித்யாரண்ய ரோடு தொடர்புகொண்ட பிறகுதான் என்றும் சிலர் மேலும் கூறுவர். இஃதெவ்வாருயினும் துங்கபத்திரை ஆற்றின் தென் கரையில், ராய்ச்சூர் ஆற்றிடைப்பகுதியை நன்கு காக்கும் முறை யில், தக்காணத்திலிருந்து தென்னிந்தியாமீது படையெடுக்க விரும்பும் அரசு யாதாயினும் அதனைத் தடுத்து நிறுத்தவல்லதாய் அந் நகரம் நிறுவப்பட்டமையால் இஸ்லாமைத் தென்னிந்தியாவில் மேலும் பரவவிடாமல் தடுப்பதற்கு இந்து அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளில் இதுவும் ஒன்று எனலாம்.

முதலாம் ஹரிஹரர் விசயநகரத்தின் முதல் மன்னர். அவர் 1336-லிருந்து 1355 வரை ஆண்டார். அவர் ஹொய்சள வீரவல்லாளரின் சிற்றரசராயிருந்தவரா அன்றி வாரங்கல் ஆந்தி ரர்களிடையே அலுவல்பார்த்த அரசியல் அலுவலாளரா என்பதில் கருத்து வேறுபாடு வரலாற்ருளரிடையே உண்டு. கருத்தைப் பொறுத்து விசயநகரத்தை அமைத்தவர்கள் ஆந்திரரா கருநாட கரா என்னும் முடிவும் மாறும். இவ் விரு கருத்துகளில் எதையும் உறுதியாகக் கூறும் அளவிற்கு வரலாற்றுச் சான்றுகள் இன்மை யால் இவ் விவாதம் இன்றும் தொடர்ந்து நடந்து வருகின்றது. கி.பி. 1346-ல் நான்காம் வல்லாளர் இறந்தார். அதன் பிறகு

ஹொய்சளர் ஆட்சிக்குட்பட்டிருந்த அரசின் தென்பகுதி ஹரிஹரரின் ஆட்சியில் அடங்கியது. அம் மன்னரின் தம்பியான புக்கருடைய மகன் குமாரகம்பணர் என்பவர். அவர் ஹரிஹரர் ஆட்சியில் 1350ஆம் ஆண்டையொட்டித் தென்னாட்டின்மீது படையெடுத்து மதுரையை அரசாண்டுவந்த சுல்தானை வென்று பாண்டி நாட்டையும் விசயநகர அரசில் அடக்கி அதனை ஒரு பேரரசாக்கினர். அவர் மனைவியாரான கங்காதேவி என்பவர் அத் தென்னகப் போரை 'மதுரா விஜயம்' என்னும் காப்பியத்தில் விளக்கிப் புகழ்ந்தார். அக் காப்பியத்தால் மதுரைச் சுல்தானியத்தின் தன்மை ஒருவாறு புலனாகின்றது.

இவ்வாறு தென்னகத்தில் பல வெற்றிகளைக் கண்டாராயினும் ஹரிஹரர் தக்காணத்தில் ஆண்ட பாமனி சுல்தானான முதலாம் அலாவுதீன் என்பவரோடு பொருது தோற்றார். இவ் விவரம் பெரிஷ்டா முதலிய முஸ்லிம் வரலாற்றாசிரியர்களால் கூறப்படுகின்றது. ஹரிஹரரையடுத்து அவர் தம்பி முதலாம் புக்கர் (1335-1376) அரசரானார். அவர் தமது வெற்றிவீர மகனான கம்பணரை மதுரைப் பிரதேசத்திற்கு அரசப்பிரதிநிதியாக நியமித்தார். ஆனால், கம்பணர் 1374-ல் இறந்தார். மகனுக்குப் பிறகும் இரண்டாண்டுக்காலம் உயிர்வாழ்ந்த முதலாம் புக்கர் ஒரிஸ்ஸாவைக்கூட வென்றதாகக் கூறப்படும். அவர் சீனா முதலிய புறநாடுகளுக்குத் தூதர்களை யனுப்பினர். அவரும் தம் தமையனைப் போலவே பாமனி சுல்தானிடம் சண்டையிட்டுத் தோற்றார். அப்போது பாமனியில் முதலாம் மகம்மது என்பவர் அரசாண்டார். பெரிஷ்டா என்னும் வரலாற்றாளர், பாமனி சுல்தானான மகம்மது, புக்கரை இராமேச்சுரம்வரை விரட்டியதாகக் கூறுவர். இக் கூற்று முற்றிலும் உண்மையாக இருக்கும் என்று காணவில்லை.

முதலாம் புக்கரை அடுத்து இரண்டாம் ஹரிஹரர் அரசராகி மாபார் சுல்தானிய அரசில் சற்று எஞ்சியிருந்த பகுதியினையும் முற்றிலும் வென்று விசயநகர ஆட்சியில் அடக்கினர். அவர் காலத்திலும் பாமனி விசயநகரப் போர்கள் நடந்தன. அவற்றில் இருதரத்தார்க்கும் குறிப்பிடத்தக்க வெற்றிகள் கிடைக்கவில்லை. இரண்டாம் ஹரிஹரர் கல்வி கேள்வியிற் சிறந்தவர். அவரது அவைக்களத்தில், ' நானார்த்த ரத்னமாலை ' என்னும் பெரிய வடமொழி நிகண்டு ஒன்றினை இயற்றிய இருசப்பா என்னும் சமணர் ஒருவர் அமைச்சுத் தொழில் பூண்டிருந்தார். அம் மன்னர் திருவரங்கம், சிதம்பரம், திருப்பதி முதலிய சைவ, வைணவக் கோயில்களுக்குத் திருப்பணி செய்தமையால், அவருக்குச் சமயப் பொதுநோக்கு உண்டு என்பது விளங்கும். அவர் ஆட்சி முடிவுறும்

தருவாயில் விசயநகரப் பேரரசு ஆறு மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவையாவன துளு, மலை ராச்சியம், உதயகிரி ராச்சியம், பெனுகொண்டா ராச்சியம், ராசகம்பீர ராச்சியம், மழவராய ராச்சியம் என்பவை. அவற்றுள் ராசகம்பீர ராச்சியம் என்பது தமிழகத்தைக் குறித்தது.

இரண்டாம் ஹரிஹரரை அடுத்து அவருடைய மூத்த மைந்த ரான இரண்டாம் புக்கர் (1404-1406) என்பவர் அரசராகி இரண்டு ஆண்டுகளே வீற்றிருந்து இறந்தார். அவருக்குப்பின் அவர் சகோதரர்களான முதலாம் விருபாக்ஷர், முதலாம் தேவராயர் என்பவர்கள் ஆண்டதாகக் கல்வெட்டுகள் கூறும். முதலாம் தேவராயர் என்பாரின் ஆட்சியைப்பற்றியே சில விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவர் ஆண்டபோது இத்தாலிய நாடு சுற்றியான நிகோலேகாண்டி என்பார் விசயநகரத்திற்கு வந்தார். அந் நகரத்தைப்பற்றிய பல செய்திகளை அவர் கூறுகின்ருர். அந் நகரத்தின் சுற்றளவு அறுபது மைல் என்றும் அம் மன்னரின் அந்தப் புரத்தில் 12000 மகளிர் இருந்தனர் என்றும் குறிக்கின்ருர். உடன்கட்டை ஏறும் தீப்பழக்கமும், பலதார மணமும் சாதாரண மாக அந் நாட்டு மக்களால் மேற்கொள்ளப்பட்டன என்பது அவர் கூறுவதிலிருந்து பெறப்படும். கடன் வாங்கித் திருப்பித் தராதவர்கள் கடன் கொடுத்தவர்களுடைய அடிமைகளாகிவிடும் பழக்கத்தையும் அவர் குறிக்கின்ருர்.

முதலாம் தேவராயர் மகனை விசயர் 1422-ல் பட்டத்திற்கு வந்து 1424 வரை ஆண்டார். அவர் காலத்தில் அவருக்கும் பாமனி சுல்தானை அஹமது என்பாருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. 1419-ல் அவர் மூல்பகலில் அரசப் பிரதிநிதியாக அலுவல் பார்த்து வந்தபோது அஹமது விசயநகரத்தைப் பயனின்றித் தாக்கினுர். அவர்தம் குருவான கிரியாசக்தி என் பாரது நினைவாகக் கிரியாசக்திபுரம் என்னும் ஊரை ஆக்கினுர்.

விசயருக்குப்பின் அரசரான இரண்டாம் தேவராயர் (1424-1427) மிகப்பெரிய அரசை ஆண்டார். பாரசீகத் தூதரான அப்துர் ரஸாக் என்பவர் அக் காலத்தில் விசயநகரத்திற்கு விசயம் செய்து அந் நகரத்தையும் நாட்டையும்பற்றி விரிவாக எழுதிவைத் தார். அவர் எழுதிய அவ் விவரங்கள் பாரசீக வரலாறு என்னும் நூலில் காணக் கிடைக்கின்றன. விசயநகரத்துப் படைத் தலைவரான 'தண்ட நாயகரை' 'த. நாயகர்' என்று சுருங்கக் கூறி, அவரது தன்மையையும் ஆற்றலையும் அவர் புகழ்கின்ருர். அவர் விவரிப்பதிலிருந்து அந் நகரத்தில் கணிகையர் மலிந்திருந்தனர்

என்றும் அவர்கட்குத் தொழில்வரி விதித்தனர் என்றும், அவ் வரிப் பணத்தைக்கொண்டு நகர்க்காவலர் ஊதியம் தரப்பட்டது என்றும் பல விவரங்களை அவர் கூறுகிறார். விசயநகர மக்கள் (சிறப்பாக மகளிர்) அணிகலன், மலர்கள் ஆகியவற்றைப் பெரிதும் விரும்பி அணிந்தனர் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

கி.பி. 1436-ல் பாமனி சுல்தான் விசயநகரத்தின்மீது வழக்கம்போலப் படையெடுத்தார். இத் தாக்குதலால் விசய நகரத்திற்கு மிகுந்த இழப்பு ஏற்பட்டது. இவ்வாறு அவ்வப் போது விசயநகரத்து இந்துப்படைகள் பாமனி முஸ்லிம் படைகளால் நலிவதைக் கண்டு சினமும் வருத்தமும் கொண்ட தேவராயர் படைச்சீர்திருத்தம் ஒன்றைச் செய்தார்; அச் சீர் திருத்தங்களில் முக்கியமானது அவர் அப் படையில் முஸ்லிம் படைஞர்களையும் சேர்த்துக்கொண்டமையாம். ஆயினும், தலைக் கோட்டைப் போர்க்காலத்தில் இச் சீர்திருத்தத்தால் நன்மை விளைந்ததா, தீமை விளைந்ததா என்பதைப்பற்றி இருவேறு கருத்துகள் உள்ளன. கி.பி. 1443-ல் அவ் விரு அரசுகளுக்குமிடையே மறுபடியும் போர் தொடங்கிற்று. இப் போரில் இருதரத்தாருக்கும் வெற்றியோ தோல்வியோ கிட்டவில்லை என்று தெரிகின்றது. இவ் வரசருக்கு லக்ஷ்மீதரர், மாதவர் என்னும் இரு மந்திரிகள் இருந்தனர்.

தேவராயரை யடுத்து அவர் மகன் மல்லிகார்ஜுனர் (1447-1465) அரசானார்; அவரைப் போரில் வல்லவர் என்று கூற முடியாது. ஆயினும், பாமனியும் ஒரிஸ்ஸா நாட்டுக் கபிலேந்திர கஜபதியாரும் ஒன்றாகச் சேர்ந்து விசயநகரத்தின்மீது படையெடுத்தபோதும் தளராது நின்று அவர் விசயநகரத்தைக் காப்பாற்றினார். தமக்கு முந்தி ஆண்ட மன்னர்கள் யாவரினும் பலவீனராயிருந்த மல்லிகார்ஜுனர் 'இம்மடி தேவராயர்' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். (இம்மடி தேவராயர்' - இருமடங்கு தேவராயர்; தம் தந்தையான தேவராயரைப்போல் இரண்டு மடங்கு பெருமையுடையவர்). அவருடைய பலவீனத்தால் ஒரிஸ்ஸா அரசு மிகுந்த பலமெய்தியதுடன், சந்திரகிரியில் கவர்னராயிருந்த சாளுவநரசிம்மருக்கும் துணிவும் ஆற்றலும் மிகுந்தன.

மல்லிகார்ஜுனரை யடுத்து அவர் தம்பி முதலாம் விருபாக்ஷர் (1465-1485) அரசரானார். இவர்தம் அண்ணனான மல்லிகார்ஜுனரின் மக்களை நீக்கிவிட்டுத் தாமே அரசரானார். பிரபந்நாமிருதம் என்னும் வைணவ நூல் அவர்தம் உறவினர்களைக் கொன்று

விட்டு மன்னரானுர் என்று கூறுகின்றது. அவர் ஆண்டகாலத்தில் பாண்டியர் காஞ்சிமீது படையெடுக்கவும், மகம்மது கவான் கோவாவைக் கைப்பற்றவும் ஆயிற்று. ஆயினும், அவரது நல்லூழால் சந்திரகிரி கவர்னரான சாளுவ நரசிம்மர் வன்மை மிக்கு விளங்கியதோடு கி.பி. 1487-ல் மகம்மது கவானும் கொலையுண்டிறந்தார். இக் காரணங்களால் விசயநகரம் மிகுந்த சேதமின்றிப் பிழைத்தது. விருபாக்ஷர் தாம் செய்த பல தீவினைகளால் மனம் புழுங்கியிருந்தமையால், அமைதி யிழந்திருந்தார். இராமாயணக் கதையைப் பலமுறை கேட்டதால் அவர் இழந்த அமைதியைத் திரும்ப அடைந்தார் என்றும், அந் நன்றியை யறிந்த விருபாக்ஷர் அரசாங்க முத்திரைப் பெயரை-'ஸ்ரீவிருபாக்ஷ' என்று இருந்ததை-'ஸ்ரீராமா' என்று மாற்றிக்கொண்டார் என்றும் கூறுவர். இம் மன்னர் தம் மூத்தமகனுல் கொலையுண்டு இறந்தார். இந் நிகழ்ச்சிக்கு அவர்தம் இளையமகனும் உடந்தையாயிருந்தான் என்பர் நூனிஸ் என்பார். அவர் இறந்ததோடு ஹரிஹரரால் ஏற்படுத்தப் பட்ட ஆளும் வமிசமும் விசயநகரத்தில் முடிவுற்றது.

அதனையொட்டிச் சாளுவ நரசிம்மர் விசயநகர அரசை வலியக் கைப்பற்றினுர். விருபாக்ஷரைக் கொன்று அவருடைய மூத்த மைந்தர் தாமே அரசைக் கைப்பற்றி ஆள மறுத்தமையால், இளையமகன் மன்னனுனுன். அவன் தீப்பழக்கங்கள் மிக்கு ஆட்சியில் அக்கறை செலுத்தவில்லை. இந் நிலை நீடித்தால் அரசுக்கே பேராபத்து விளைந்துவிடுமோ என்று அஞ்சிய சாளுவ நரசிம்மர் விசயநகரத்தின்மீது படையெடுத்துத் தலைநகரை இராணுவ வலி கொண்டு கைப்பற்றினுர். அப்போது ஆண்டுவந்த (விருபாக்ஷரின்) இளையமகன் தலைநகரைவிட்டு ஓடிவிட்டான். இவ்வாறு அரச குடும்பத்தைச் சேராத ஒருவர் விசயநகர அரசைக் கைப் பற்றியமை இதுவே முதல் தடவையாம். வலிமை பொருந்திய ஆட்சி நாட்டில் நடைபெருவிட்டால் அரசு பாமனியராலும் பிறராலும் அழிந்துவிடும் என்று அஞ்சிய சாளுவ நரசிம்மர் இவ்வாறு ஆட்சியை மேற்கொண்டார் என்று வரலாற்ருளர்கள் கூறுவர். ஆகவே, கி. பி. 1485-லிருந்து புதியதோர் அரசகுலம் 'சாளுவ குலம்' என்னும் பெயரோடு விசயநகரத்தில் தோன்றிற்று.

சாளுவ நரசிம்மர் பேரரசை வலுப்படுத்தினுர். இரண்டாம் தேவராயரை அடுத்துவந்த அரசர்களின் திறமையின்மையால் உண்டான குழப்பங்களை மாற்றினுர். இராஜநாத திண்டிமர் என்னும் கவிஞர் சாளுவர் என்போர் முன்பு கல்யாணியருகில் குறுநில மன்னர்களா யிருந்து, பிற்காலத்தே பாமனி அரசு

தோன்றிய பிறகு விசயநகர அரசை யடைந்து முன்னேறினர் என்று தாமியற்றிய 'சாளுவாப்யுதயம்' என்னும் நூலில் கூறுவர். இவர் முன்னோர்களில் சாளுவ மங்கு என்பவர் முக்கியமாகப் பேசப்படுபவர். சாளுவதிப்பா என்பவர் நரசிம்மரின் தந்தைக்கு உடன்பிறந்தவர். அவர் இரண்டாம் தேவராயரின் மூத்த சகோதரியை மணந்தார். ஆதலால், நரசிம்மருக்கும் பழைய அரசகுலத்திற்கும் மணவுறவுபற்றித் தொடர்பு இருந்தது. சாளுவ நரசிம்மர் விருபாக்ஷருக்குக் கீழ்ப்படிந்து சந்திரகிரியை ஆண்டார். அவர் மன்னரான பிறகு விசயநகரத்தின் இழந்த பகுதிகளை மீண்டும் பெற்றார். அவருக்குத் திறமைமிக்க நரஸ நாயக்கர் என்பவர் அமைச்சரா யமைந்தார். கி.பி. 1490-ல் நரசிம்மர் முட்கல், ராய்ச்சூர் முதலிய பகுதிகளைப் பாமனியிட மிருந்து வலியக் கைப்பற்றினர். அன்றியும், ஒரிஸ்ஸாவில் அப்போது ஆண்டுவந்த புருஷோத்தம கஜபதி என்னும் மன்னரின் ஆதிக்கத்தையும் விசயநகரத்தை நோக்கி முன்னேறுவண்ணம் தடுத்தார். இவ் வரசர் நூலியற்றுவதிலும் வல்லுநராயிருந்தார்; அவர் ' ராமாப்யுதயம் ' என்னும் நூலை இயற்றினர். ஆயினும், அவரது ஆட்சியின் கடைசிப் பகுதியில் விசயநகர அரசு ராய்ச்சூர், உதயகிரி, கொண்டபீடு என்னும் பகுதிகளை இழந்தது. அவர் இறந்தபோது அப் பேரரசின் ஆட்சிப்பொறுப்பை அமைச்சரான நரஸநாயக்கர் ஏற்றுக்கொண்டார். நரஸநாயக்கரே யன்றி நாகமநாயக்கர் என்னும் பெயரிய வேறொரு திறமைசாலியான அதிகாரியும் நரசிம்மரின் அவைக்களத்தில் இருந்தார். அவருடைய மைந்தரான விசுவநாத நாயக்கர் மதுரை நாயக்க வமிசத்தை நிறுவினர்.

சாளுவ நரசிம்மரை யடுத்து அவருடைய மூத்த மகன் அரசெய்தினன்; ஆனல், அவனை நரஸநாயக்கரின் பகைவர்களில் ஒருவன் கொன்றுவிட்டான். ஆகவே, அவனுக்குப்பின் அவனுடைய தம்பியான இம்மடி நரசிம்மர் (இரண்டாம் நரசிம்மர் அல்லது இருமடங்கு நரசிம்மர்) என்பவர் பட்டமெய்தினர். அவருக்கும் நரஸநாயக்கரே மந்திரியாக இருந்து அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்தார். அவர் (நரஸநாயக்கர்) இறந்தபின் அவர் மைந்தர் இம்மடி நரசிம்மரை எதிர்த்துக் கலகம் செய்து விசயநகர ஆட்சியைக் கைப்பற்றி மூன்றாண்டுக்காலம் ஆண்டார் (1506-1509). இஃது இரண்டாம் முறையாக விசயநகர அரசு வலியக் கைப்பற்றி ஆளப்பெற்ற சமயம். இவருக்கு வீர நரசிம்மர் என்பது பெயர். இவர் போரில் வல்லவர். ஆதலால், விசயநகர அரசைப் பரப்பினர். இவர் ஆளுங்காலத்திலேயே சாளுவதிம்மர் என்பவர் விசயநகர ஆட்சிக்கு மூக்கிய அமைச்சராக

அமர்ந்திருந்தார். வீரநரசிம்மர் காஞ்சிபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய பெரிய கோயில்களுக்குத் திருப்பணி செய்து இனும்கள் அளித்தார். இவருக்குக் கிருஷ்ணதேவர் என்னும் பெயரிய ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் இருந்தார். மன்னருக்கும் அவருக்கும் யாது பகையோ, அவரைக் குருடாக்கிவிடும்படி மன்னர் உத்தரவு பிறப்பித்தார் என்றும் அவ் வுத்தரவு நிறைவேருதபடி கிருஷ்ணதேவரை அமைச்சரான சாளுவதிம்மரே காப்பாற்றினுர் என்றும் கூறுவர். இது முற்றிலும் உண்மையா என்பது வரலாறறியாதாயினும், வீரநரசிம்மர் இறந்ததும் அவர் மகனை நீக்கிவிட்டுக் கிருஷ்ணதேவரே பட்டமெய்தியதை நோக்குங்கால், கிருஷ்ணதேவருக்கு முதலிலிருந்தே விசயநகர அரசைக் கைப்பற்றி ஆளவேண்டும் என்னும் விருப்பம் இருந் திருக்கக்கூடும் என்றும் அதைத் தடுப்பதற்கே வீரநரசிம்மர் அத்தகைய கொடிய உத்தரவைப் பிறப்பித்தார் போலும் என்றும் தோன்றுகிறது.

வீரநரசிம்மர் கி.பி. 1509-ல் இறந்தார். அவரை யடுத்து மேற்கூறியவாறு கிருஷ்ணதேவர் பட்டமெய்தினுர். அதற்குப் பிறகு அவருக்குக் கிருஷ்ணதேவராயர் என்பதே பட்டப்பெயர் ஆயிற்று. அரசெய்தியபின் சிலகாலம் ஆட்சியை நிலைப்படுத்து வதிலும் தம்மை உரிய அரசராக ஏற்றுக்கொள்ளும்படி மக்களைச் செய்வதிலும் சிலகாலம் கழிந்தது. அவர் காஞ்சியிலிருந்த காட வரையும், உம்மத்தூரிலிருந்த கங்கராஜரையும் வென்ருர். பீஜபுர் சுல்தானை வென்று முட்கல், ராய்ச்சூர் முதலிய ஆற்றிடைப் பிரதேசங்களை விசயநகரத்தில் சேர்த்தார். கி.பி. 1573-76-ல் ஒரிஸ்ஸா மன்னரான கஜபதியை வென்று, அவர்கள் முன்பு விசய நகரத்தினின்றும் பறித்துக் கொண்ட சில பகுதிகளைத் திரும்பப் பெற்ருர். 1573-ல் பிரதாபருத்திர கஜபதி அவரிடம் தோற்றுத் தம் மகளை வென்ற மன்னருக்கு மணமுடித்தார். ஆயினும், அம் மனைவியை ஒதுக்கிவிட்டுக் கிருஷ்ணதேவராயர் பராமுகமாய் இருந்தார் என்பது ஒருகதை. அவருக்குப் பல மனைவியர் இருந்தனர். அவர் காலத்துக் கல்வெட்டுகளிலிருந்து அம் மனைவியரைப் பற்றியும் நாம் அறிகிருேம்.

கிருஷ்ணதேவராயர் (1509-1530) ஆட்சிக் காலத்தில் பீஜபூரில் இஸ்மாயில் அடில்ஷா என்பவர் சுல்தானுயிருந்தார். அவர் ராய்ச்சூர் ஆற்றிடைப்பகுதியைத் திருப்பிப் பெறமுயன்று போர் தொடுத்தார். அப் போரில் பீஜபுர் தோற்றது. அப் போரைப்பற்றிய விரிவான விவரங்கள் போர்த்துகீசிய வணிகரான நூனிஸ் என்பார் கூற்றுகளிலிருந்து கிடைக்கின்றன.

ஆற்றிடைப் பகுதியை வென்ற கிருஷ்ணதேவராயர் வென்ற நாட்டைச் சீர்கெடுத்துக் குல்பர்காவை அழித்தார். முதலாம் ராஜேந்திர சோழர் மேலைச்சாளுக்கியரோடு பொருது வென்ற காலத்தில் செய்த கொடுமைகளை இவை ஒக்கும். கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்தில் விசயநகரப் பேரரசு கிருஷ்ணை ஆற்றிற்குத் தென்பகுதியில் இருந்த தென்னிந்தியா முழுவதையும் அடக்கிற்று. இதற்கு விலக்கு போர்த்துகீசியர் ஆட்சியில் இருந்த கோவா மட்டும். ஆகையால், விசயநகரப் பேரரசு தனது மிகப் பெரிய பரப்பை அவர் காலத்தில்தான் எய்திற்று எனல் பொருந்தும். தமது கடைசிக்காலத்தில் தமக்கு ஆறே வயது நிரம்பிய மகனான திருமலை என்பானை மன்னனாக்கிவிட்டுத் தாம் அரசு துறந்தார் என்று நூனிஸ் கூறுகிறார். இதனைப் பல ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்குப் பேருதவியாக நின்றவர் முதல் அமைச்சரான அப்பாஜி சாளுவதிம்மர் என்பவரே. அவர் ஓர் அந்தணர். அவர் பகுத்தறிவும் அரசியல் அறிவும் மன்னனிடத்தில் ஈடுபாடும் ஒருங்கே படைத்தவர். கலிங்கத்தில் நடந்த வெற்றிப் போருக்குப்பின் அவர் கொண்டவீட்டினைத் தமது தனி அரசாகக் கொண்டார். கி.பி. 1509-ல் கிருஷ்ணதேவராயர் அரசெய்தியபோதுதான், கோவாவிலும் ஆல்புகர்க் என்னும் போர்த்துக்கீசிய கவர்னர் அலுவல் பார்க்கத் தொடங்கினர். அவர் காலத்தில் விசயநகரத்தாருக்கும் கோவாவினர்க்கும் நட்புறவு மிகுந்திருந்தது. விசயநகரத்தின் வெளிநாட்டு வாணிகம் போர்த்துக்கீசியர் மூலம் செழித்தமையாலும், போர்த்துக்கீசியர் பாமனி அரசிடமிருந்து கோவாவைக் கைப்பற்றியிருந்தமையாலும் இந் நட்புறவு செழித்தது எனலாம். கிருஷ்ண தேவராயர் வைணவ சமயத்தைப் போற்றினர் ; ஆயினும், பர சமயங்களை வெறுக்கவோ ஒறுக்கவோ விரும்பவுமில்லை ; செய்யவுமில்லை. அவருக்குத் திருப்பதி வேங்கடாசலபதியிடம் மிகுந்த பற்றுண்டு. அம் மன்னர், அவர் மனைவியர் ஆகியோரின் வெண்கலப் படிமங்களை அக் கோயிலிற் காணலாம். தமிழ் நாட்டிலுள்ள பல சைவ, வைணவக் கோயில்களின் வாயில்களில் கட்டப்பட்டுள்ள பெருங்கோபுரங்கள் (இவற்றை இராய கோபுரங்கள் என்பர்) இவர் காலத்தில் அவரால் எழும்பியவை. அவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்; கற்றோரைப் போற்றியவர். அவர் தாமே ஆமுக்தமால்யதா என்னும் ஒரு நூலினை இயற்றினர். இந் நூல் பெரியாழ்வாரின் மகளான ஆண்டாளின் வரலாற்றினைக் கூறுகின்றது. பேஸ், நூனிஸ் என்னும் வெளிநாட்டு நாடுசுற்றிகள் விட்டுச் சென்றுள்ள குறிப்புகளினின்றும் அவரைப்பற்றியும்

அவரது ஆட்சியைப்பற்றியும் நாம் ஓரளவு விரிவாகவே அறிவோம். அவர் போரிலும் ஆட்சியிலும் கலையிலும் ஒருங்கே வல்லவராயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணதேவராயர் ஆட்சி கி.பி. 1530-ல் முடிவுற்றது. அவருக்குப்பின் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் அச்சுதர் (1530-1542) அரசரானர். அவர் அரசெய்திய ஆண்டிலேயே இஸ்மாயில் அடில்ஷா (பீஜபுர் சுல்தான்) ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டார். அரசு மாறியதைக் காரண மாகக் கொண்டு தென்னுட்டிலிருந்த சிற்றரசர்கள் கலகம்செய்யத் தொடங்கினர்கள். ஆயினும், அச்சுதர் இக் கலகங்களை எளிதில் அடக்கிவிட்டதோடு முஸ்லிம் படைகளும் துங்கபத்திரையைக் கடந்து வாராமல் தடுத்தார். அவர் ஆட்சியின் பிற்பகுதியில் அரசகுலத்தினரே அவருக்கும் ஆட்சிக்கும் தொந்தரவு விளைத் தனர். அவருக்குச் சாலகராயர், திருமலை என்னும் பெயரிய இரு மைத்துனர்கள் இருந்தனர். அவர்கள் அரசு நிர்வாகத்தில் தலை யிட்டுக் குழப்பம் விளைவிக்கலாயினர். கிருஷ்ணதேவராயரின் மருமகனை இராமராயர் என்பவர் இந் நிகழ்ச்சிகளை விரும்ப வில்லை. இத்தகைய நிகழ்ச்சிகளால் அரசு பலவீனமெய்திவிடும் என்று அவர் கருதினர். ஆகையால், ராமராயர், அச்சுதரின் தமையனை ரங்கராயரின் மகனை சதாசிவராயரையே சிலர் விருப்பப்படி மன்னராக்க விழைந்து அதற்கு ஆவன செய்தார். கி.பி. 1536-ல் இப்ராஹிம் அடில்ஷா என்னும் பீஜபூர்மன்னர் விசயநகரைத் தாக்கினர். அப்போது அச்சுதர் அவருக்கு அடி பணிந்து அரசைக் காத்தார். இந் நிலைமை இராமராயருக்கு அனு கூலமாக அமைந்தது. கி.பி. 1542-ல் அச்சுதர் இறந்தார். இராமராயர் சதாசிவராயரை அரசராக்கிவிட்டு அரசு அதிகாரங் களைத் தம் கையிலேயே வைத்துக்கொண்டார். அப்போதி லிருந்து சதாசிவராயர் ஒரு பொம்மை அரசராகவே இருந்து வந்தார்.

சாளுவ நரசிம்மரிடம் ஆரவீடுபுக்கர் என்பார் ஒருவர் அலுவல் பார்த்துவந்தார். அவருடைய பின்தோன்றல்களில் ஒருவர் இராமராயர். ஆகவே, அவர் ஆரவீடு குலத்தைச் சேர்ந்தவர். இக் குலத்தவரே விசயநகரத்தை ஆண்ட நான்காம் அரசவமிச மான ஆரவீடு வமிசம். இரண்டாம் விருபாக்ஷரின் ஆட்சியின் இறுதியில் விசயநகர அரசு பலவீனமடைந்துவிட்டதால், சாளுவ நரசிம்மர் அரசைக் கைப்பற்றி ஆண்டதையொப்ப, இப்பொழுதும் அச்சுதருக்குப் பிறகு ஏற்பட்ட குழப்ப நிலையில் நாட்டின் நலனைக் கருதித் தாம் தலையிட வேண்டியது தேவைப்படும் என்றே இராம

ராயரும் கருதினார்போலும். அவர் ஆட்சி அதிகாரத்தைப் பறித்துக்கொண்ட பிறகு தென்னாட்டில் அமைதியை நிலைநாட்டவும் வடபகுதிகளில் புறத்தார் நலிவு ஏற்படாத நிலைமையைத் தோற்றுவிக்கவும் அவர் தொடங்கினார். அவருக்கு உதவியாக அவருடைய சகோதரர் வேங்கடாத்திரி என்பவர் அமைந்தார். அவர் தக்காணத்து முஸ்லிம் அரசுகளிடையே பிளவுகளை உண்டாக்கி அவற்றைப் பலவீனப்படுத்த முயன்றார். இம் முயற்சிகளை அவர் அளவுக்கு விஞ்சி மேற்கொண்டமையால் தொடக்கத்தில் அவர் விரும்பியபடி தோன்றிய பிளவுகள் பிறகு மறைந்துபோய் விசயநகரத்தையே அழித்துவிடக்கூடிய அளவிற்கு ஓர் ஒற்றுமை அவற்றிடையே தோன்றுவதும் இயன்றது. கி.பி. 1562-63ஆம் ஆண்டில் இராமராயர் இராய்ச்சூர்ப் பகுதியில் நடத்திய போரில் முஸ்லிம்களின் நகரங்களைத் தாக்கி நாசஞ் செய்தது. கிருஷ்ண தேவராயர் குல்பர்காவை அழித்ததை அவர்களுக்கு நினைவூட்டியிருக்கவேண்டும். பேரார் நீங்கலாக மற்ற தக்காணத்து முஸ்லிம் அரசுகள்[1] அகமதுநகர் சுல்தானின் தலைமையின்கீழ் ஒன்று சேர்ந்து விசயநகரைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டனர். புறத்தார் அறியாமல் மறைவாகத் தமக்குள்ளே பேசித் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இக் காரியத்தை ஒரு சதி என்றே கூறலாம். அப்போது ஹுசேன் நைஜாம் ஷா என்பவர் அகமது நகரச் சுல்தானாயிருந்தார். அவருக்கும் இராமராயருக்கும் தனிப்பட்ட பகைமை இருந்தது. முஸ்லிம் மன்னர்கள் தம்மிடையே புதிதாக ஏற்படுத்திக்கொண்ட நட்பினை மண உறவுகளால் மேலும் வலுப்படுத்திக்கொண்டனர். போருக்கு ஒரு காரணம் வேண்டுமன்றோ? இராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைத் திருப்பித் தந்துவிடும்படி இராமராயரிடம் பீஜபூர் சுல்தான் கேட்டார். இராமராயர் முஸ்லிம் மன்னர்கள் எதிர்பார்த்தபடியும் விரும்பியபடியும் அங்ஙனம் செய்ய மறுத்துவிட்டார். கி.பி. 1565-ல் ஹுசேன் ஷாவின் தலைமையில் முஸ்லிம் கூட்டுப்படை துங்கபத்திரை ஆற்றினை நோக்கிப் புறப்பட்டது. முதலாம் ஹுசேன் நைஜாம் ஷா, முதலாம் அலி அடில்ஷா. இப்ரஹிம் குடுப்ஷா, அலி பரீதுஷா என்னும் (அகமது நகர், பீஜபூர், கோல்கொண்டா, பீதர்) சுல்தான்கள் தலைமையில் அப் பெரும்படை வந்தது. இப் போரினை இராமராயரும் ஓரளவு எதிர்பார்த்தே இருந்தார்; அதை வரவேற்கவும் செய்தார் என்று கூறவேண்டும். இறுதியில் அப் படைகள் இராட்சசதங்கடி என்னுமிடத்தில் போரிட்டன. முஸ்லிம் படை

[1] பாமினி அரசு மறைந்தபின் தக்காணத்தில் ஐந்து முஸ்லிம் அரசுகள் தோன்றி நிலைத்தன என்றும் அவை பேரார், பீதர், பீஜபுரி, அகமதுநகர், கோல்கொண்டா என்பவை என்பதையும் மேலொரு அத்தியாயத்திற் கண்டோம்.

களில் ஐம்பதினாயிரம் குதிரை வீரர்களும், முப்பதினாயிரம் காலாட்களும் இருந்தனர். இந்துப் படையிலோ எண்பதினாயிரம் காலாட்களும் ஏராளமான யானைகளும் குறைந்த அளவு குதிரைப் படைகளும் இருந்தன. இப்போர் நடந்தது இராட்சசதங்கடி, தலைக்கோட்டை என்னும் இரண்டு கிராமங்களுக்கிடையே. ஆகவே, வரலாற்றாசிரியர்கள் அவ்விரு பெயர்களாலுமே அப் போரைக் குறிப்பர். அப் போர் 1565, ஜனவரி 23ஆம் ஆண்டு நடந்தது. இந்திய வரலாற்றின் எதிர்காலத்தை நிர்ணயித்த சில போர்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படும். போரின் தொடக்கத்தில் இந்துக்களுக்கு வென்றுவிடக்கூடிய வாய்ப்புச் சற்று இருந்ததாயினும், பொழுது செல்லச் செல்ல முஸ்லிம்களின் கை வலுத்தது. ஹுசேன் நைஜாம் ஷா தம் வசமிருந்த பீரங்கிப் படையை இந்துக் காலாட்படைகள்மீது திருப்பிவிடவே பெரு நாசம் விளைந்தது. இதனிடையே தோன்றிய குழப்பத்தில், உயர்ந்த ஒரு யானைமீது வீற்றிருந்த இராமராயரை நைஜாம் ஷா தாமே சென்று வாளால் வெட்டி வீழ்த்தினார். தலைவரை யிழந்த இந்துப் படைகள் விசயநகரத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடின. முஸ்லிம் படைகள் அவற்றைத் துரத்திவந்து விசயநகரத்தை அடைந்து, செழிப்புற்றிருந்த அந் நகரத்தைப் பெருமுயற்சியெடுத்து அழித்தொழித்தனர். முந்தியநாள் சீருக்கும் சிறப்பிற்கும் உலகப்புகழ்பெற்று விளங்கிய விசயநகரம் பிந்திய நாள் பாழும் இடிகரையுமாயிற்று. அவ் விடிகரைகளை இப்போது 'ஹம்பி இடிகரைகள்' என்பர். முஸ்லிம் வெற்றியின் அரசியல் விளைவாக இராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதி விசயநகரப் பேரரசினின்றும் பிரித்து பீஜபூரில் சேர்த்துக்கொள்ளப்பட்டது; இந்துத் தோல்வியின் அரசியல் விளைவாக விசயநகரத்தின் தலைநகரம்பெனுகொண்டாவிற்கு மாற்றப்பட்டது. இப் போரால்- இத் தோல்வியால்-விசயநகரம் அழிந்துவிடவில்லை என்பர் சிலர்; இஃது ஓரளவு உண்மையே யாயினும், அதன் இறுதி வீழ்ச்சிக்கு வித்து தலைக்கோட்டையில் இடப்பட்டது என்பதை மறுக்கவொண்ணாது.

தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு பெனுகொண்டா, சந்திரகிரி, வேலூர் ஆகிய பிற தலைநகரங்களிலிருந்து அவ் வரசு செலுத்தப்பட்டது. ஆயினும், பாமனி அரசு அழிந்த பிறகு ஐந்து சுல்தானியங்கள் தோன்றியதுபோலவே, விசயநகர அரசினும் ஐந்து நாயக்க ஆட்சிகள் மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர், இக்கேரி ஆகிய இடங்களில் தோன்றி விசயநகர மன்னர்களைவிட வலுமிக்கவையாக விளங்கின. திருமலையின் மகனான வேங்கடர் பொம்மை அரசராயிருந்த சதாசிவராயரைக் கொன்றுவிட்டார். அதனையடுத்து அரசரான திருமலை இரண்டாண்டுகளே ஆண்டார்

(1570-72). அவர் தமது அரசைத் தம் மக்களான ஸ்ரீரங்கர், இராமர், வேங்கடர் என்பவர்களிடையே பகிர்ந்து கொடுத்தார். அவர்கள் முறையே உதயகிரி, ஸ்ரீரங்கப்பட்டணம், சந்திரகிரி என்னுமிடங்களிலிருந்து ஆண்டனர். கி.பி. 1572-ல் திருமலை ராயர் இறந்தார். ஸ்ரீரங்கர் அவரையடுத்துப் பேரரசராகி 1572-75 வரை ஆண்டார். அக் காலத்தில் விசய நகரத்தின் பரப்பு மேலும் குறைந்தது. அரசின் வடகிழக்குப் பகுதி தக்காணத்துச் சுல்தான்களால் கைக்கொள்ளப் பெற்றது. கி.பி. 1576-ல் வேங்கடர் மன்னரானார். அவர் காலத்தில் பேரரசின் தலைநகரம் சந்திரகிரிக்கு மாற்றப்பட்டது. வேலூரில் மன்னருடைய பிரதிநிதியாயிருந்த லிங்கம நாயக்கர் என்பவர் தனி அரசு ஏற்படுத்திக்கொண்டு வேலூர் நாயக்கர் வமிசத்தை ஏற்படுத்தினார். கி.பி. 1614-ல் வேங்கடரும் இறந்தார். ஸ்ரீரங்கப் பட்டணத்தில் ஆண்டுவந்த திருமலை (வேங்கடரின் மருமகன்) மைசூர்ச் சிற்றரசரான இராஜ உடையாருக்குக் கீழ்ப்படிய வேண்டிய நிலைமை தோன்றியபின் வேங்கடருக்கு மக்களுமில்லாத காரணத்தால், அவரோடு விசயநகரப் பேரரசு முடிவுற்றது.

16. விசயநகர ஆட்சி முறைகளும் சமுதாய வாழ்க்கையும்

விசயநகர மன்னர் முழு ஆட்சிப் பொறுப்பையும் மேற் கொண்ட அரசர். அவருக்கு அறிவுரை கூற அமைச்சர்களும் பிறரும் இருந்தனராயினும், அவருடைய விருப்பங்களைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. விசயநகரம் உண்மையான பேரரசாக விளங்கிற்று ; இயங்கிற்று. சுதந்தரத்தோடு இயங்கும் தல ஆட்சிகளை அது சகிக்கவில்லை. சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில் தமிழகத்தில் செழிப்புற்றிருந்த கிராம சுயாட்சி முறை விசயநகரப் பேரரசுக் காலத்தில் மறைந்து போயிற்று ; அதற்குக் காரணம் இராணுவத் தலைவர்களான நாயக்கர்கள் வசம் அந்தந்தப் பிராந்தியங்களில் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப் பட்டமையால் அஃது ஒரு படைமானியத் திட்டம்போல் செயல் படத் தொடங்கியமையே ஆகும். அந் நிலையில் கிராம சுயாட்சிக்கு இடமில்லாமற் போயிற்று. மொகலாயர் ஆட்சிக் காலத்தில் செயற்பட்ட மன்சப்தார்களைப்போல, பெருமன்ன னுடைய பலத்தையோ, பலவீனத்தையோ பொறுத்து இந் நாயக்கர்களுடைய பலவீனமோ, பலமோ அமையும். இறுதியில், மொகலாயப் பேரரசு அழிந்ததற்கு மன்சப்தாரி முறையும் ஒரு காரணமாக அமைந்ததுபோல, விசயநகரப் பேரரசு அழிந்தபிறகு இந் நாயக்கர்களே அவ் வாட்சியைப் பகிர்ந்து கொண்டமையும் நோக்கற்பாலது.

நாட்டில் நல்லாட்சி நடந்ததா, அன்றிக் கொடுங்கோலாலோ திறமையற்ற ஆட்சியாலோ மக்கள் வாடி வருந்தினரா என்பது அந்தந்த மன்னரைப் பொறுத்திருந்தது. கிருஷ்ணதேவராயரின் திறமை காரணமாக ஆட்சி நன்கு நடைபெற்றது ; அவர் போர்த் திறனால் பகைவர்கள் அடக்கப்பட்டனர். குடிமக்கட்குத் தேவை யான பல சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் கலைகளை வளர்ப்

பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பெரும்பான்மை விசயநகர மன்னர்கள் சமயத்தைப் பெரிதும் போற்றினர்; பல கோவில்களைக் கட்டினர்; சிலவற்றைப் புதுப்பித்தனர். அஃது எவ்வாறுயினும் அவர்கள் சமயப் பொதுநோக்குடையவராயிருந்தனர். ஆனால், அவர்கள் மிகுதியாகவே வரிகளை வருத்திப் பெற்றனர். நூனிஸ், 'நிலச்சுவான்தார்கள் தங்கள் வருவாயில் ஏறத்தாழப் பத்தில் ஒன்பது பங்கு வரியாகச் செலுத்தினர்' என்று கூறுவது உண்மை யாகவும் இருக்கலாம்.

விசயநகரம் தனது படை பலத்தால் வளர்ந்தது. அப் படைகள் காலாள், குதிரை, யானை, பீரங்கி என்னும் பலதரப் பட்டன. கிருஷ்ணதேவராயர் காலத்தைத் தவிரப் பிற சமயங் களில் அது பலமுறை பாமனியாரிடம் தோற்றேடினமையால் அப் படையின் பலவீனம் பெறப்படும். கிருஷ்ணதேவராயர் காலத்திற் கூட அவர் பெற்ற போர்க்கள வெற்றிகள் அவரது படைத் திறனாலேயா, எதிரிகளின் திறமைக் குறைவாலா என்பது ஆராய்ச் சிக்குரியது. பாமனிப்படைகள் குதிரைப் படையிலும் பீரங்கிப் படையிலும் சிறந்து விளங்கியமை விசயநகரத்திற்குப் பல தோல்வி களுக்குக் காரணமாயிற்று.

விசயநகர ஆட்சி தொடங்கிய காலத்தில் ஆண்ட அரசர்கள் சைவர்கள். அவர்கள் வித்தியாரண்யர் என்னும் ஸ்மார்த்தப் பெரியாருடைய ஆசியையும் அறிவுரையையும் மேற்கொண்டு தான் அவ் வரசை ஏற்படுத்தினர். அவர்கள் மைசூர் அருகிலுள்ள சிருங்கேரி மடத்திற்குப் பல வெகுமதிகளையும் மானியங்களையும் அளித்தனர். ஆயினும், சாளுவர்கள் வைணவர்கள். பிற சமயங்களை அவர்கள் ஒறுக்கவில்லையாயினும் வைணவத்தில் அவர்களுக்குத் தனிப்பட்ட ஈடுபாடு இருந்தது. அவர்கள் சைவ, வைணவத் திருக்கோயில்களுக்குச் சமமாகவே திருப்பணிகள் செய்தனர். பிற நாடுகளிலிருந்து விசயநகரத்திற்கு விஜயம் செய்தவர்கள் அவ் வரசில் மதப் பூசல்களே இல்லை என்று கூறு கின்றனர். மைசூர்ப் பிரதேசத்தில் பஸவர் நிறுவிய வீர சைவ மதம் தழைத்தது ; இராமாநுசர், தேசிகர் முதலிய பெரியோர் களால் நன்கு அமைக்கப்பட்ட வைணவமதம் மேலும் மேலும் வளர்ந்ததாயினும் சைவ, ஸ்மார்த்த மதங்கள் முன்னிலும் பெரு மளவிற்கு வளர்ந்து விளங்கின.

விசயநகரத்தின் செல்வாதாரச் சிறப்பைப்பற்றிப் பலர் பலவாறாகப் புகழ்ந்து கூறியுள்ளனர். ஆயினும், அச் செல்வச் சிறப்பெல்லாம் பெருநகரங்களிலும், முக்கியமாகத் தலைநகரத்

திலும், அங்குக்கூட மன்னர் அவைக்களத்திலும் அவரைச் சூழ்ந்து இருந்தோர் மனைகளிலும் காணப்பட்டதேயன்றிக் கிராமப் புறங்களில் வசித்த எண்ணிறந்த எளிய குடிமக்களிடையே அன்று என்பது பலர் கூற்றால் தெற்றெனை விளங்கும். 'ஆடைகளும் அணிகளும், மாடங்களும் மாளிகைகளும், வானளாவிய கோவில் களும், அவற்றையடுத்த குளங்களும், நால்வகைப் படைகள் தங்கிய இடங்களும், பல்பண்டம் பகர்ந்து வீசிய ஆவணங்களும் பெரிய நகரங்களிலேயே இருந்தன'. நகரங்களில் கணிகையர் பலர் இருந்தனர். படைஞர்க்கும் பிறர்க்கும் இவர்கள் தேவைப் பட்டனர். கிருஷ்ணதேவராயரும் சின்னதேவி என்னும் ஒரு கணிகையிடம் அன்பு பூண்டிருந்தமை வரலாறறிந்தது. வாணிகம் செழிப்புற நடைபெற்றது. போர்த்துகீசியர் போன்ற வெளிநாட்டார் இத்தகைய வாணிகச் செழிப்பிற்கு உதவினர். சாதிமுறை மேலும் இறுகிற்று. அந்தணர்கள் சமூகத்திலும், அவைக்களத்திலும் செல்வாக்குப் பெற்று விளங்கினர். பலதார மணம் மறுக்கப்படவில்லை. அடிமை நிலையும் இருந்தது.

கலைகளும் இலக்கியமும் விசயநகரப் பேரரசர்களால் போற் றப்பட்டன. முதலாம் ஹரிஹரர், விருபாக்ஷர் முதலிய மன்னர்கள் காலத்திலிருந்தே கோயிற்கட்டடக்கலை ஆதரிக்கப் பட்டது. ஆயினும், இப்பொழுது ஹம்பியில் நாம் காணும் கோயில்கள் பதினாறும் நூற்றாண்டின் இடைக்காலத்தில் கட்டப் பட்டவையே. கிருஷ்ண தேவராயர் பல கோயில்களைக் கட்டினார்; பலவற்றிற்குக் கோபுரங்களை எழுப்பினார்; பலவற்றைச் செப்ப னிட்டார். அவர் கட்டிய ஹஸார ராமசுவாமி கோயிலில் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. விட்டலசுவாமி கோயிலில் அழகிய சிற்ப வேலைகள் பல காணப்படுகின்றன. கிருஷ்ணதேவராயர் நாகலாபுரம் என்னும் ஊரைத் தமது தாயின் பெயரால் கட்டினார். அச்சுதராயர் எழுப்பிய பட்டாபிராமர் கோயிலை இன்றும் ஹம்பி இடிபாடுகளின் இடையே காணலாம். இரண்டாம் தேவராயர் காலத்தில் முஸ்லிம்களின் கலைச்செல் வாக்கு விசயநகர மன்னர்கள் கலை முயற்சிகளில் ஓரளவு காணப் படுகின்றது.

விசயநகரத்தில் இலக்கியம் பெரிதும் வளர்ந்தது. முக்கிய மாக வடமொழியும் தெலுங்கும் ஆதரிக்கப்பட்டன. தெலுங்கு மொழியே அரசியல் நிர்வாக மொழியாக இருந்தது. கன்னட மொழியும் சிறிது போற்றப்பட்டது; ஆயினும், தமிழ் மொழியை அம் மன்னர்கள் எள்ளளவிற்கும் போற்றியதாகக் காணவில்லை. வேதாந்த தேசிகர் வடமொழியிலும் தமிழிலும் பல கிரந்தங்களை இயற்றினார். அவருக்கு விசயநகர அவையில் செல்வாக்கு

இருந்தது. ஆயினும், பெரும்பாலும் அவர் ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்திருந்தார். வீரசைவ அறிஞர்கள் கன்னடத்தில் பல நூல்களை இயற்றினர்; லக்கணர், பஸவர் என்பாரை அடியொற்றிப் பலர் நூலியற்றினர். வடமொழி இலக்கியம் நன்கு போற்றப் பட்டது. குமார கம்பணரின் மனைவியாரான கங்காதேவி தம் கணவருடைய திக்விசயத்தின் பெருமைகளை எடுத்துக் கூறுமுகத்தால் 'மதுரா விஜயம்' என்னும் காப்பியத்தை இயற்றினார். சமயத்துறையில் சாயனரும் அவர் சகோதரரான போகநாதரும் தத்துவ நூல்கள் பலவற்றை யாத்தனர். மாதவ வித்யாரண்யரோடு அவ் வரசு தொடக்க காலத்திற் கொண்டிருந்த தொடர்புகளால் அத்வைதமும் வடமொழியும் போற்றப்பட்டமையில் வியப்பில்லை. இசைநூற்புலவரான இரஸமாமாத்யர் என்பவர் ராமராயரால் ஆதரிக்கப்பெற்றார்; பாகவத சம்புவை இயற்றிய ராஜநாத திண்டிமர் அச்சுதராயரால் ஆதரிக்கப் பெற்றார். திருமலைராயர் கிருஷ்ணதேவராயரைப் போலத் தாமும் கற்றறிந்தவர்; அவர் ஜயதேவரது கீதகோவிந்தத்திற்கு ஓர் உரை இயற்றினார். அப்பையதீட்சிதர் என்னும் பேரறிஞர் சமயத்துறையிலும் தத்துவத் துறையிலும் பிற இலக்கியத் துறையிலும் எண்ணிறந்த நூல்களை இயற்றினர்; அவர் அத்வைத சமயத்தை ஆதரித்தவர். திருப்புகழ் என்னும் முருகன் பக்திப் பாடல்களைத் தமிழில் சுவைபட எழுதிய அருணகிரிநாதர் விசயநகர ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் எழுந்த அரிய பக்திமான்களில் ஒருவர். அப் பாடல்கள் இசையோடு பாடப்படுவன.

இவர்களே யன்றிக் கிருஷ்ணதேவராயர் அவைக்களத்தை எண்பெரும் புலவர்கள் அலங்கரித்தனர் என்று கூறி, அவர்களை 'அஷ்டதிக்கஜங்கள்' என்றழைப்பது வரலாற்றில் ஒரு மரபாகி விட்டது. ஆயினும், அவர்கள் எண்மரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். அப் புலவர்கள் அல்லஸானி பெத்தன்ன, திம்மன்ன, இராமபத்ரர், துர்ஜதி, மல்லன்ன, சூரன்ன, ராமராஜபூஷணர், தெனாலி ராமகிருஷ்ணர் என்பவர்கள். இவர்களில் அல்லஸானி பெத்தன்ன வடமொழியிலும் தெலுங்கிலும் வல்லுநர்; ராமராஜபூஷணரை ராமராயரும், தெனாலி ராமகிருஷ்ணரை முதலாம் வேங்கடரும் ஆதரித்தனர். இவர்களில் தெனாலி ராமகிருஷ்ணர் ஓர் நகைச்சுவைப் புலவர். அவரைப் பற்றிய பல பொய்க்கதைகள் சிறுவரை மகிழ்விக்கும் நோக்கத்தோடு புனையப்பட்டுத் தென்னிந்தியாவில் பயிலப்படுகின்றன.

விசயநகரப் பேரரசுக் காலம் தென்னிந்திய வரலாற்றில் எல்லாத் துறையிலும் சிறப்புற்று விளங்கிற்று என்பது மேற்கூறியவற்றால் விளங்கும்.

17. நாயக்க அரசுகள்

மாபார் சுல்தானியம் விசயநகரப் படைகளால் வெல்லப் பட்டுத் தென்னிந்தியாவின் தென்பகுதியான பாண்டிய நாடு முதலிய பகுதிகளும் பேரரசின் மாகாணங்களாக அமைக்கப்பட்ட பொழுதிலிருந்தே, பேரரசரின் பிரதிநிதியாக் ஓர் அதிகாரி தொலைவில் இருந்த அவ் விடங்களில் அலுவல் பார்க்க அமர்த்தப் பட்டார். அவ் வதிகாரிகள் நாயக்கர் எனப்பட்டனர்; ஏனெனில், அவர்கள் சேனைத்தலைவர்களாக முன்பு அரசில் அலுவல் செய்த வர்கள். ('நாயக்கர்' என்னும் சொல் 'நாயனர்' என்பது போலத் தலைமையைக் குறிக்கும்). மதுரைச் சுல்தானியம் அழிந்த பிறகு அங்கு விசயநகரப் பேரரசின் சார்பில் ஆட்சி செலுத்திய வர்கள் மதுரை நாயக்கர்கள். அவர்களைத் தொடர்ந்து வெவ் வேறு சமயங்களில் தஞ்சை, செஞ்சி, வேலூர், இக்கேரி ஆகிய இடங்களிலும் நாயக்கர் ஆட்சிகள் நிறுவப்பெற்றன. நாடு முழு வதுமே படையாளர் ஆட்சியாக விளங்கிற்று. மதுரையில் தொடங்கிய நாயக்கர் ஆட்சி நாளடைவில் சுதந்தரம் எய்துவதற் குப் பல வாய்ப்புகள் இருந்தன. முதலில், அது விசயநகரமாகிய தலைநகரத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்தமையால் அக் காலத்தில் அத்துணை தொலைவிலிருந்த அரசப் பிரதிநிதிகளையும் ஆட்சி அலுவலாளர்களையும் அடக்கி ஆளுதற்கு உதவக்கூடிய போக்குவரத்து வசதிகள் இல்லை. அன்றியும் பழைய பாண்டிய மன்னர்களின் வழித்தோன்றல்கள் இப் புதிய அரசிற்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்துவந்தமையால் அவர்களை அடக்குவ தற்குத் தேவையான அதிகாரங்களையும் கருவிகளையும் தாங்களே ஆக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. இவ் வதிகாரங்களும் கருவி களும் அவர்கள் வசமாயினபின், அங்கு ஆட்சி செய்த நாயக்கர் கள் பாரம்பரியமாக அதிகாரம் வகிக்கத் தொடங்கியபின், சுதந்தரமெய்துதற்கு வேறு பெரிய தடையொன்றும் இல்லை. பேரரசு பலவீனமடைந்ததால் இவர்கள் சுதந்தரமெய்தினரா,

இவர்களுடைய சுதந்தரப்போக்கால் பேரரசு பலவீனமடைந்ததா என்பது விடையிறுக்க முடியாத ஒரு கேள்வி; ஏனெனில், அவை ஒன்றிற்கொன்று காரணமாயிருந்திருக்கக்கூடும்.

பழைய பாண்டிய அரசர்களின் தொல்லை புதுப்பேரரசிற்கு அரசியல், இராணுவப் பிரச்சினையாக இருந்தது என்பதை மேலே கூறினேம். ஒவ்வோரமயங்களில் பேரரசிற்குக் கீழ்ப்படியாத வர்கள் பலரானதோடுகூடக் காஞ்சிபுரம்வரையில் தங்கள் போர்த் திறனைக் காட்டிப் பேரரசை எதிர்த்தனர். இரண்டாம் விருபாக்ஷர் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் தோன்றின. நரசநாயக்கர் மதுரையை வலுப்படுத்தத் தென்பிராந்தியத்திலிருந்த பகைவர் களை ஒழித்தார். வீர நரசிம்மரும் கிருஷ்ணதேவராயருங்கூட அந் நிலைமையைக் கவனிக்காமல் இருக்கமுடியவில்லை. கிருஷ்ண தேவராயர் நாகமநாயக்கர் என்பவரை மதுரைக்குக் கவர்னராக அனுப்பினர்; அவர் திறமைசாலி. அவருக்கும் பேரரசருக்கும் கருத்து வேறுபாடுகள் முற்றியமையால் அவர் வெளிப்படையாக மன்னரை எதிர்க்கத் தொடங்கினர். அதுகண்டு பொருத கிருஷ்ணதேவராயர் நாகமநாயக்கரின் மகனை விசுவநாத நாயக்கர் என்பரைக்கொண்டே அவர் தந்தையை அடக்கச் செய்து நாகமநாயக்கரை அதிகாரத்தினின்றும் நீக்கி, அவருக்குப் பதிலாக அவர் மகனை விசுவநாத நாயக்கரையே நியமித்தார். விசுவநாத நாயக்கரைத்தான் மதுரையில் ஆண்ட நாயக்கர் வமிசத்தைத் தொடங்கியவர் என்று கருதுவது ஒரு மரபு. அஃது அவ்வாறன்று. விசுவநாத நாயக்கர் விசயநகரப் பேரரசர் களிடம் முற்றிலும் அடங்கி விசுவாசத்தோடு நடந்து கொண்டவர் என்று பிறர் கூறுவர். அஃது எவ்வாருயினும் விசுவநாதர் தொடங்கி மதுரையில் வலுப்பெற்ற ஒரு நாயக்கர் ஆட்சி நடை பெற்றது என்பதில் ஐயமின்று. அவர் மதுரையில் 1529 முதல் 1564 வரை ஆண்டார். அவருக்கு அரியநாத நாயக்கர் என்னும் பெயரிய அரிய அமைச்சர் ஒருவர் இருந்தார். மதுரைநாயக்கர் ஆட்சியில் திருச்சி, திருநெல்வேலி, கேரளம், கோயம்புத்தூர் முதலிய பகுதிகள் அடங்கியிருந்தன. ஆயினும், தஞ்சை தனிப் பட்டிருந்தது. விசுவநாதநாயக்கர் தமது அரசைப் பல பாளையப் பட்டுகளாகப் பிரித்தார். மதுரை நாயக்கருக்கும் விசயநகரத்து ராயருக்கும் இடையே நிலவிய உறவுதான் ஏறத்தாழ நாயக்கருக் கும் பாளையக்காரர்களுக்கும் இடையே நிலவிற்று. பாளையக் காரர்கள் அவசியமானல் நாயக்கருக்கு உட்பட்டும், சாத்திய மானல் அவர் ஆதிக்கத்தைப் புறக்கணித்தும் வந்தனர். பாளையப் பட்டு ஆட்சியும் நாயக்கர் ஆட்சியைப்போலவே இராணுவ, சிவில்துறைகளில் படைமானிய ஏற்பாட்டை நினைவூட்டியது.

விசுவநாதநாயக்கரை யடுத்து முதலாம் கிருஷ்ணப்பநாயக்கர் (1564-1572) என்பவர் மதுரை நாயக்கர் ஆனர். அவரிடத்திலும் அரியநாதநாயக்கர் பல காலம் அமைச்சுத் தொழில் பூண்டார். தலைக்கோட்டைப் போர் முடிந்து விசயநகரம் அழிவுற்றபின்னரே மதுரை நாயக்கர் அரசு தனி அரசாயிற்று எனலாம்; ஏனெனில், தலைக்கோட்டைப்போருக்கும் மதுரையிலிருந்து வீரர்கள் அனுப்பப் பட்டனர். கிருஷ்ணப்பநாயக்கருக்குப்பின் அவர் மகன் வீரப்ப நாயக்கரும் (1572-1595), அவருக்குப்பின் அவர் மகன் இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கரும் (1595-1601) ஆண்டனர். மூன்றும் கிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609) ஆண்ட காலத்தில் இராமநாதபுரத்தில் சேதுபதிகள் ஆட்சி வலுவடைந்தது (1605). கிருத்துவப் பாதிரியார்கள் ராபர்ட்-டி-நொபிலி என்பார் தலைமையில் மதப்பிரசாரம் மதுரைப் பிரதேசத்தில் செய்து வந்தனர். அப் பாதிரியார் எழுதிவைத்துள்ள சில குறிப்புகளிலிருந்து அக் காலத்தில் மதுரையில் கல்விநிலை எவ்வாறு இருந்தது என்பதை அறியலாம். பத்தாயிரம் பிராமண மாண வர்கள் மேற்படிப்பை மேற்கொண்டனர் என்றும் அம் மாணவர் களுக்கும் அவர்தம் ஆசிரியர்களுக்கும் தக்க ஏற்பாடுகளை விசய நகர, நாயக்க அரசுகள் செய்துகொடுத்தன என்றும் அவர் கூற்றால் உணரலாம். இரண்டாம் வீரப்பநாயக்கர் என்பார் 1609-1623 வரை ஆண்டார். அவர் விசயநகரத்தின் கடைசிக் காலத்தில் நிகழ்ந்த அரசுரிமைப் போட்டிச் சண்டைகளில் கலகக் காரரான ஜக்கராயருக்கு உதவி புரிந்தார்; தோப்பூரில் நடந்த போரில் அவரும் அவருடைய தோழர்களும் தோல்வியுற்றனர். கி.பி. 1616-ல் அவர் தமது தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றிக்கொண்டார்.

திருமலைநாயக்கர் (1632-59) மதுரையில் ஆண்ட நாயக்க மன்னர்கள் யாவருள்ளும் தலைசிறந்தவர். அவர் தலைநகரை மறு படியும் (1634-ல்) மதுரைக்கே மாற்றிக்கொண்டார். அவர் திருவிதாங்கூர்மீதும் சேதுபதி நாட்டின்மீதும் படையெடுத்து வெற்றி கண்டார். அவர் விசயநகர மன்னரான மூன்றும் ஸ்ரீரங்கரோடும் பொருது வெற்றி கண்டார். 1656-59-ல் அவர் மைசூர் மன்னரோடும் சண்டையிட்டார்; அச் சண்டையில் இராமநாதபுரம் சேதுபதி அவருக்குப் பேருதவி புரிந்தார். அவர் இத்தகைய போர்கள் பல புரிந்தமையால் குடிமக்கள் நிலை வருந்தத்தக்கதாயிற்று. அவர் மதுரையிலுள்ள கோவிலைப் புதுப் பித்துக் கட்டியமையும் அந் நகரில் அவர் எழுப்பிய அரண்மனையும் யாவரும் கண்டு களித்து, வியப்புறத்தக்கவை. அவர் காலத்திலும் டி-நொபிலி பாதிரியார் கிருத்துவப்பிரசாரம் செய்தார்;

'சிவலீலார்ணவம்' 'கங்காவதரண' முதலிய வடமொழி நூல்களை இயற்றிய நீலகண்டதீட்சிதர் இவரால் போற்றப்பட்டார். இவர் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரான இரண்டாம் ஷாஜியின் அவைக்களத்தை அணிசெய்த ராமபத்திரதீட்சிதர் என்பாருடைய ஆசிரியர்.

திருமலைநாயக்கரை யடுத்து அவர் மகன் சில மாதங்களே ஆண்டு இறந்தான். அதற்குப்பிறகு அவன் மைந்தரான முதலாம் சொக்கநாத நாயக்கர் அரசராகி 1659-லிருந்து 1682 வரையாண்டார். அவரும் வீரப்பநாயக்கரைப்போலவே தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றிக்கொண்டார் (1665). அவர் தஞ்சையைக் கைப்பற்றினாராயினும் (1673) மிக விரைவிலேயே அங்கு மராட்டியர் ஆட்சி தொடங்கிவிட்டது (1676). சொக்கநாதர் ஆட்சியின் கடைசிக் கட்டத்தில் மைசூர்ப்படைகள் நாயக்கர் அரசைத் தாக்கித் திருச்சியை முற்றுகையிட்டனவாயினும் தஞ்சை, செஞ்சி முதலிய இடங்களிலிருந்து கிடைத்த உதவியைக் கொண்டு அவர் தலைநகரத்தைத் தப்புவித்துக்கொண்டார். அவர் மைந்தரான நான்காம் வீரப்பநாயக்கர் ஏழாண்டுக் காலம் ஆட்சி புரிந்து 1689-ல் இறந்தார். அதனையொட்டி வீரப்பநாயக்கருடைய மைந்தரான இரண்டாம் சொக்கநாதநாயக்கர் அரசரானார். ஆனால், வயது நிரம்பாதவராதலால் அவர் சார்பில் அவருடைய பாட்டியாரான மங்கம்மாள் முதலாம் (சொக்கநாத நாயக்கரின் மனைவி) ஆட்சியை மேற்கொண்டு நடத்தினார். அவ் வாட்சி 1689 முதல் 1706 வரை நிகழ்ந்தது. தஞ்சை, மைசூர் முதலிய ஆட்சியாளர்களைப்போல மங்கம்மாளும் அவுரங்கசீபின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார். திருமலைநாயக்கரைப்போலவே மங்கம்மாளும் திருவிதாங்கூரோடு பொருது வென்றார். ஆயினும், இராமநாதபுரம் மன்னரான கிழவன் சேதுபதி மதுரைப் படைகளைத் தோற்கடித்து 1702-ல் இராமநாதபுரத்தில் சுதந்தரம் எய்தினார். அவர் 1710-ல் இறந்தார். அச் சேதுபதி மன்னர் கிருத்துவப் பாதிரிமார்களைத் துன்புறுத்தி ஜான்-டி-பிரிட்டோ என்னும் பாதிரியாரைக் கொன்றார். இதற்கு மாறாக மங்கம்மாள் கிருத்துவப் பாதிரியார்களையும் பிற சமயத் தலைவர்களுக்குரிய பெருமையோடு நடத்தினார். அவருடைய ஆட்சி நன்கு நடைபெற உதவிய நல்லமைச்சர் நரசப்பையர் என்பவர். மங்கம்மாள் தர்மத்திற்குப் பெயர் பெற்றவர். சத்திரம் கட்டியும், சாலை போட்டும் அவர் குடிமக்கட்குப் பல உதவிகளைச்செய்தார். அவரை இன்றும் பாண்டிய நாடு நன்றியோடு நினைவு கூர்கின்றது. அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்த இரண்டாம் சொக்கநாதர் 1706-லிருந்து 1732 வரையாண்டாராயினும் அவர் காலத்தில்

ஆட்சி நலிவுற்றது. அவர் ஆட்சியில் ஊக்கம் செலுத்தாமையால் அமைச்சர்கள் விருப்பம்போல் அதிகாரம் செலுத்தத் தொடங்கினர். அவருக்குப்பின் அரசியான அவர் மனைவி மீனாட்சி (1732-1736) காலத்தின் கொடுமைக்கு ஆளாகிச் சந்தாசாகிபின் வார்த்தையை நம்பி மோசம்போய் ஆட்சியை அவர் வசம் ஒப்பு வித்துவிட்டு அந்த சாகிபிடம் கைதியாகச் சிக்கி, அவமானம் தாங்காமல் 1736-ல் தற்கொலை செய்துகொண்டார்.

அச்சுதராயர் தென்னாட்டில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்குத் தனி ஆட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தி அதனைப் பாண்டி நாட்டு நிர்வாகத்தினின்றும் பிரித்தார்; அங்குத் தம் மைத்துனியின் கணவரான செவ்வப்ப நாயக்கர் என்பவரை அவர் நிர்வாகத்தில் நியமித்தார். தஞ்சையில் ஆண்ட நாயக்க மன்னர்கள் யாவருள்ளும் தலைசிறந்தவர் இச் செவ்வப்ப நாயக்கரின் மகனுரான ரகுநாதநாயக்கர் என்பவரே (1597-1640). ஆயினும், மதுரையிலிருந்து திருச்சிக்குத் தமது தலைநகரைமாற்றிக் கொண்ட முதலாம் சொக்கநாத நாயக்கர் என்பவர் இவர் மகன் விசயராகவ நாயக்கர் காலத்தில் தஞ்சைமீது படையெடுத்துப் போரில் வென்றார். ரகுநாத நாயக்கர் விசயநகரத்தில் 1614-ல் நடந்த உள்நாட்டுக் கலகத்தில் (அரசுரிமைப் போட்டிப் போரில்) ராயதேவருக்கு உதவினர். இவர் காலத்தில் தரங்கம்பாடியில் டேனிஷ் வர்த்தகர்கள் (1620) வந்து தங்குதற்கும் வாணிகம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டனர். இவர் பல பெரிய அறிஞர்களைப் போற்றியவர்; கோவிந்த தீட்சிதர் என்னும் அறிஞரோடு சேர்ந்து 'சங்கீத ஸுதா' என்னும் நூலை இயற்றினர். அந்தத் தீட்சிதருடைய மகனுரான யஜ்ஞநாராயண தீட்சிதர் என்பவர், 'சாகித்ய ரத்னகரம்' என்னும் வடமொழி நூலைப் புகழ்பெற இயற்றியவர். 'இராமபத்திராம்பாள்' என்னும் பெண்பாற்புலவர், 'ரகுநாதாப்யுதயம்' என்னும் நூலை இயற்றினர். அது ரகுநாதநாயக்கரைப் பாடிப் புகழ்கின்றது. மதுரவாணி என்னும் மற்றொரு பெண்பாற் புலவர் இராமாயணத்தையொட்டி ஒரு கவி செய்தார்.

இவரையடுத்து இவர் மைந்தர் விஜயராகவ நாயக்கர் (1640-1673) அரசராகி மதுரையிலும் செஞ்சியிலும் ஆண்ட நாயக்கர்களைப் பகைத்துக்கொண்டு விசயநகரப் பேரரசரான மூன்றும் ஸ்ரீரங்கரை ஆதரித்தார். இவர் போர்த்திறமை குன்றியவர். இவர் கோல்கொண்டா, பீஜபூர் சுல்தான்களுக்கும் கீழ்ப்படிந்தார். இவர் காலத்தில் (1659) நாகப்பட்டினம் போர்த்துகீசியர்களிடமிருந்து டச்சுக்காரர்களால் வலியக் கைப்பற்றப்பட்டது.

திருச்சியில் ஆண்ட சொக்கநாத நாயக்கர் 1673-ல் தஞ்சையைக் கைப்பற்றினாராயினும் விஜயராகவர் போரிட்டு மடிந்தார். இந் நிலையில் தஞ்சையில் செங்கமலதாஸ் என்னும் பெயரிய நாயக்க இளவரசர் ஒருவர் இருந்தார். பீஜபூர் சுல்தான் சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரரான வெங்காஜியைத் தஞ்சைக்கு, இச் செங்கமலதாஸை அரியணை யேற்றுவிக்குமாறு அனுப்பினார். 1675-ல் சுல்தான் சொன்னவண்ணம் செய்த வெங்காஜி, அடுத்த ஆண்டே தஞ்சை அரியணையைத் தமதாக்கிக்கொண்டார். விஜயராகவநாயக்கர் 'ரகுநாதாப்யுதயம்' என்று தாமும் ஒரு நூலைத் தெலுங்குமொழியில் இயற்றித் தம் தந்தையாரைப்பற்றிக் கவிதையிற் புகழ்ந்தார்.

இவ்வாறு தஞ்சையில் நாயக்கர் ஆட்சியை முடித்துத் தாமே அங்கு முடிகவித்துக்கொண்ட வெங்காஜி பான்ஸ்லே (1676-1685) ஷாஜி பான்ஸ்லேயின் மகனார். அவர் முதலில் பீஜபூர் சுல்தானுக்கு அடங்கிய அலுவலாளராகவே இருந்தார். அடில் ஷாவின் உத்தரவிற் கடங்கி அவர் ஜயசிங், சிவாஜி ஆகியோரை எதிர்த்தார். அவர் ஆட்சி தஞ்சையில் தொடக்கத்தில் நல்லாட்சி யாகவே அமைந்தது; ஆயினும், நாளடைவில் அதிக வரிகளை விதித்தும் கோயில்களைக் கொள்ளையடித்தும் கொடுங்கோலரானார். அவர், தமக்கு முன்பு தஞ்சையில் ஆண்ட நாயக்கர்களுடைய பண்பாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். அவர் புதுச் சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரர்களோடு நல்லுறவு கொள்ள முயன்றார்.

அவருக்குப் பின் அவர் மூத்த மகனான இரண்டாம் ஷாஜி (1685-1712)காலத்தில் அஃதாவது 1694-ல் தஞ்சை மொகலாயர் களுக்குச் சொந்தமாயிற்று. கி.பி. 1700-ல் மதுரையை ஆண்ட மங்கம்மாள் ஷாஜியைப் போரில் வென்றார். மனூச்சி என்னும் இத்தாலியர், 'ஷாஜி கிருத்தவர்களைத் துன்புறுத்தினார்' என்று கூறுவர். ஆயினும், கவிஞரைப் போற்றிய காவலராக அவரை வரலாறு புகழும். அவருக்கு 'அபிநவபோஜர்' என்பதொரு பெயராயிற்று. ஜானகி பரிணயம், பதஞ்சலி சரிதம் முதலிய வட மொழிநூல்களை யாத்த இராமபத்திர தீட்சிதர் முதலிய நாற்பத் தாறு பெரும் புலவர்களுக்கு 'ஷாஜிராஜபுரம்' என்று புதுப் பெயர் புனைந்த திருவிசநல்லூர்க் கிராமத்தை மானியம் விட்டார்.

இவருக்குப் பின் தஞ்சையில் ஆண்ட மராட்டிய மன்னர்கள் வமிசம் 1855-ல்தான் முடிவுற்றது.

மதுரையிலும் தஞ்சையிலும்போலச் செஞ்சியிலும் நாயக்கர் ஆட்சி தோன்றிற்று. கிருஷ்ணதேவராயர் காலத்திலேயே கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவர் அக் குலத்தை அங்கு நிறுவியவர். அவருக்குப்பின் அங்கு ஆட்சிக்குவந்த சூரப்பநாயக்கர், இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கர் என்பார் புலவர்களைப் போற்றினர்; இவர்களில் முந்தியவர் அவையில் ஸ்ரீனிவாஸதீட்சிதர் என்னும் அறிஞர் இருந்தார். அவர் பேரரசர் வேங்கடரைப் பகைத்து எதிர்த்தமையால் சிறையிருத்தப்பெற்ருர். தஞ்சையில் அரசாண்ட ரகுநாத நாயக்கர் முயன்று அவரை விடுவித்தார். இரண்டாம் கிருஷ்ணப்பநாயக்கர் என்பார் வைணவத்தைப் போற்றினுர். அவர் வெள்ளாங்கரையில் கிருஷ்ணப்பட்டணம் என்னும் ஊரை ஆக்கினுர். அவ் வூர் பிறகு ஐரோப்பியர்கள் குடியேறியபோது பரங்கிப்பேட்டை என்னும் பெயர் பெற்றது. கிருஷ்ணப்ப நாயக்கர் திருமலைநாயக்கரோடு சேர்ந்துகொண்டு பேரரசர் மூன்ரும் ஸ்ரீரங்கரை எதிர்த்துப் பகைத்தார். செஞ்சியில் ஆண்ட நாயக்கர்கள், அக் கோட்டையும் நகரமும் பீஜபூர் சுல்தாளுல் 1648-ல் கைப்பற்றப்பட்டவரையில், சுதந்தரமாகவே ஆண்டனர்.

வேலூரிலிருந்த சின்னபொம்ம நாயக்கர் செஞ்சியில் ஆண்ட நாயக்கர்களுக்கு உட்பட்டவர். அச் சின்னபொம்ம நாயக்கர் பேரரசர் அவையில் மிகுந்த செல்வாக்கோடு விளங்கினுர். அவர் அப்பைய திட்சிதரை ஆதரித்தார். அம் மன்னருக்குப் பிறகு அவருடைய மைந்தர் லிங்கமநாயக்கர் கி.பி. 1582-ல் அரசரானுர். அவருக்கும் தனி அரசு விருப்பம் இருந்ததை யுணர்ந்த பேரரசர் வேலூரை முற்றுகையிட்டு 1604-ல் கைப்பற்றி அதனைப் பேரரசின் இரண்டாவது தலைநகரமாக்கிக்கொண்டார். அதோடு வேலூரில் நாயக்கர் ஆட்சி முற்றிற்று.

இக்கேரியில் ஆண்ட நாயக்கர்கள் கேலடியைத் தலைநகரமாகக் கொண்டு விசயநகர மன்னர்களுக்கு அடங்கியவர்களாகத் தொடங்கினுர். தலைக்கோட்டைப் போரில் இராமராயருக்கு உதவிய சதாசிவ நாயக்கர் (1513-1560) என்பாரைப்பற்றித் தான் அக் குலத்தின் முதல்வராகக் கேள்விப்படுகிறேம். கி.பி. 1560-ல் இக்கேரி அவர்களுடைய தலைநகரமாயிற்று. 1560-1570 வரையாண்ட சிக்கசங்கண்ணு என்பவர் கவிஞர்களை ஆதரித்தார். அடுத்து ஆண்ட முதலாம் வேங்கடப்பர் (1582-1629) என்பவர் பேரரசர் முதலாம் வேங்கடரின் தலைமையை ஏற்றுக்கொண்டே குறுநில ஆட்சி புரிந்தார். அவர் போர்த்துக்கீசிய வணிகர்களோடு நட்புப் பூண்டிருந்தார். இதற்கிடையே

மைசூரில், பதினாறும் நூற்றாண்டின் முதற் பகுதியில், சாமராஜ உடையார் என்பவர் மைசூர் நகரத்தைக் கோட்டையாக்கித் தமது அரசியல் நிலைமையை வலுப்படுத்திக்கொண்டார். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த மற்றொரு சாமராஜர் விஜய நகரத்தின் ஆதிக்கத்தை வெளிப்படையாகவே எதிர்த்தார். ராஜ உடையார் (1578-1617) என்பவர் தனி அரசை நிறுவிக் கொண்டார்; அவர் 1610-ல் ஸ்ரீரங்கபட்டணத்தைக் கைப்பற்றினார். இக்கேரிமீதும் இவ்வுடையார்கள் ஆதிக்கம் மிகவே, இக் கேரி நாயக்கர் குலமும் மறைந்தது.

18. தக்காணத்துச் சுல்தானியர்கள்

கி. பி. 1482-ல் மூன்றும் மகம்மது, பாமனி அரசர் இறந்ததும் அவ் வரசு சிதறிப்போவதற்கு ஆயத்தமாயிற்று. அவர் தமது அறியாமையாலும் ஆத்திரத்தாலும் திறமையும் நேர்மையும் ஒருங்கே படைத்த மகம்மது கவானைக் கொல்வித்ததே அவ்வரசின் வீழ்ச்சிக்கு மற்றொரு காரணமாகும். மூன்றும் மகம்மதுக்குப் பிறகு பாமனியை ஆண்டவர்கள் திறமையற்றவர்கள். அரசில் ஏற்பட இருந்த பெரும்பிளவைத் தடுக்க இயலாதவர்கள். நிலச்சுவான்தார்களான தரப்தார்கள் தம்முட் பூசலிட்டுக் கொண்டு பாமனி அரசை எதிர்த்தனர். வெளிநாட்டார் (புறமுஸ்லிம்கள்), சுதேசிகள் (அகமுஸ்லிம்கள்) என இருவகை முஸ்லிம்கள் நாட்டில் இருந்தது மகம்மது கவானின் சாவிற்குக் காரணமாயிருந்தது என்பதை மேலே கண்டோம். அவர்களிடையே எழுந்த உட்பூசல்கள் காரணமாக அரசே பலவீனமடைந்தது.

மூன்றும் மகம்மதுவின் மைந்தர் மம்மூது மிக இளையராயிருந்தமையால், அவருக்கு உதவியாக ஆட்சி நடத்துதற்கு காஸிம் பரீது என்பவர் நியமிக்கப்பட்டார்; அவருக்குப் பின் அவருடைய மைந்தரான அமீர் பரீது (1504-1542) என்பவர் பீதரில் சுல்தானுனார். கடைசி பாமனி மன்னரான கலிமுல்லா என்பவர் கி.பி. 1527-ல் பீதரிலிருந்து ஓடிப்போனுர். இதனை யடுத்து அமீர் பரீது பீதரில் தனி அரசை நிறுவிக்கொண்டார். அப்பொழுது தொடங்கியது பீதர் சுல்தானியம். கி. பி. 1490-ல் வேறு இரண்டு சுல்தானியங்கள் தோன்றின: அவையாவன, பீஜபுரில் யூசுப் அடில்கானும், பேராரில் பாதுல்லா இமாதுல் முல்கும் ஏற்படுத்திக்கொண்ட சுல்தானியங்கள். கி.பி. 1512-ல் சுல்தான் கூலி என்பவர் கோல்கொண்டாவில் ஒரு தனி அரசையும் மாலிக் ஹஸனின் மைந்தரான மாலிக் அகமது என்பவர் அகமது

நகரில் ஒரு தனி அரசையும் நிறுவிக்கொண்டனர். இவ்வாறு ஐந்து சுல்தானியங்கள் தக்காணத்தில் தோன்றின. அவை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குச் செயற்பட்டுவிட்டு ஒவ்வொன்றாக அகமது நகரில் தொடங்கி கோல்கொண்டா ஈறாக மொகலாயப் பேரரசில் சேர்ந்துவிட்டன.

(அ) பீஜபூர்

பீஜபூரில் தனி அரசு ஒன்றை நிறுவியவர் யூசுப் என்பவர். அவரைத் துருக்கர் என்றும், அவர் 1459-ல் துருக்கியினின்றும் தப்பித்துக்கொண்டு இந்தியாவிற்கு ஓடிவந்துவிட்டார் என்றும், அவர் மகம்மது கவானால் அடிமையாக விலைக்குப் பெறப்பட்டார் என்றும் கூறுவர். 1467-ல் அவருக்கு அடில்கான் என்னும் பட்டம் கிடைத்தது. 1472-ல் அவர் தௌலதாபாத்தில் கவர்னராக நியமிக்கப்பட்டார்; பிறகு தௌலதாபாத்திலிருந்து பீஜபூருக்குப் போய் அங்கு பீஜபூரைச் சுற்றியுள்ள பிரதேசங்களைப் பாமனி மன்னர் சார்பில் நிர்வகித்துவந்தார். 1490-ல் யூசுப் தனி அரசை அறிவித்துக்கொண்டார். இதையடுத்து இவர் ஆட்சிக்குட்பட்டிருந்த ராய்ச்சூர், முட்கல் பகுதிகளை விசயநகர அரசரான சாளுவ நரசிம்மர் படையெடுத்துக் கைப்பற்றிக்கொண்டாராயினும், 1493-ல் யூசுப் அவ் விடங்களைத் திரும்பவும் கைப்பற்றினார். பாமனி அரசின் சிதறல்களான சுல்தானியங்களிடையே மணவுறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் மரபை பீஜபூர் சுல்தானான யூசுப்தான் முதல் முதலில் நிறுவியவர். அவர் தம் மகளிரை அகமது நகர, பேரார் மன்னர்களுக்கும், பாமனி சுல்தானின் இளவரசரான அகமதிற்கும் மணம்புரிவித்தார். இத்தகைய மணவுறவுகள் சுல்தானியங்களிடையே விசயநகரத்திற்கு எதிராக ஓர் ஒற்றுமையை உண்டாக்க உதவின. 1504-ல் யூசுப் அடில்ஷா குல்பர்காவைத் தமது அரசில் சேர்த்துக்கொண்டார். அவர் இஸ்லாமில் ஒரு பிரிவான ஷியாவைச் சேர்ந்தவர்; ஆதலால், ஷியாவையே பீஜபூரின் இராச்சிய சமயமாக ஏற்படுத்தினார். ஆனால், அகமது நகரிலும் கோல்கொண்டாவிலும் ஆண்ட சுல்தான்கள் ஸுன்னி என்னும் இஸ்லாமிய சமயப் பிரிவைச் சேர்ந்தவர்களாதலால் அவர்களுக்கும் பீஜபூர் சுல்தானான யூசுப்பிற்கும் பூசல்கள் ஏற்பட்டன; ஆயினும், அவற்றால் ஒரு பயனும் தோன்றவில்லை. இவர் காலத்தில், அதாவது கி.பி. 1510-ல் போர்த்துகீசியர்கள் கோவாவைப் பறித்துக்கொண்டனர். பீஜபூருக்கும் பீதருக்கும் பல காலமும் போர்கள் தோன்றிக்கொண்டே இருக்கும் மரபும் இவர் காலத்தில்தான் தோன்றிற்று.

யூசுப்பை அடுத்து அவர் மைந்தரான இஸ்மாயில் (1510-34) சுல்தானுனர். இவர் காலத்தில் விசயநகரத்தில் ஆண்ட மன்னர் கிருஷ்ணதேவராயர். அவர் ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியை வென்று தமது அரசில் இணைத்துக்கொண்டார். இஸ்மாயில் வயதில் மிக இளையராய் இருந்தமையால் அவர் சார்பில் ஆட்சியை மேற்கொண்டு நடத்தியவர் கமால்கான் என்பவர். அவர் ஷியா மதத்தை நீக்கி, ஸுன்னி மதத்தை ராச்சிய சமயமாக்கினுர். அவர் சில காலத்திற்கெல்லாம் கொலையுண்டிறந்தார். அவருக்குப் பதிலாக அஸத்கான் என்பவர் ஆட்சியை மேற்கொண்டு நடத்தினுர். கி.பி. 1520-ல் கிருஷ்ணதேவராயர் மறுபடியும் துங்கபத்திரையைக் கடந்து வந்து குல்பர்காவை நாசமாக்கினுர். இதைத்தொடர்ந்து பிற தக்காணத்துச் சுல்தானியங்களும் பீஜபூர் மீது படையெடுத்தன. இவ்வளவிற்கும் அந் நாடு அதிக சேதம் உறவில்லை. கி.பி. 1530-ல் கிருஷ்ணதேவராயர் இறந்தபிறகு பீஜபூர் சுல்தான் ராய்ச்சூர்ப் பகுதியைத் திரும்ப வென்று கொண்டார். 1531-ல் அகமதுநகர் நடத்திய வலுத்தாக்குதல் ஒன்றை பீஜபூர் முறியடித்தது; 1534-ல் கோல்கொண்டாவோடு போரிட்டு வென்றது.

இஸ்மாயிலைத் தொடர்ந்து மல்லு (1534-35) என்பவர் மன்னராகி ஓராண்டுக் காலத்திற்கெல்லாம் அவர்தம் தம்பியான முதலாம் இப்ராஹிம் (1535-38) என்பவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவ் வோராண்டுக் காலத்திற்குள் அவர் விசயநகர மன்னரான அச்சுதராயரால் ராய்ச்சூரில் தோற்கடிக்கப்பட்டார். இம் மன்னர் ஆட்சிக் காலத்தில் அமைச்சரான அஸத்கான் அரசுக்குப் பேராதரவாக அமைந்தார். ஆனுல், அவ்வமைச்சர் 1544-ல் இறந்துபோனுர். அவரது ஆட்சியின் பிற்பகுதியில் அகமதுநகர், விசயநகர் என்னும் இரு நகர்களாலும் நாட்டிற்கு ஏற்பட்ட பெருந்தொல்லைகளை அவரால் தடுக்க முடியவில்லை.

அவருக்கப்புறம் அவர் மைந்தர் அலி (1556-80) என்பவர் அரசரானுர். அப்போது விசயநகரத்தில் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டு நடாத்திய ராமராயர் அகமது நகரத்தின்மீது இரு பெரும் தாக்குதல்களை நடத்தினுர். அக் காலங்களில் பீஜபூர் அகமது நகருக்கு உதவி புரிந்தது. இத்தகைய விசயநகரத் தாக்குதல்கள் இனி நேராவண்ணம் தடுக்க வேண்டித் தமக்குள் ஒற்றுமையைப் பலவகையிலும் மிகுவித்துக்கொள்ள அச் சுல்தானியங்கள் விழைந்தன. ஆகவே, பீஜபூர் அரசரான அலி, சாந்த்பீபி என்னும் அகமதுநகர இளவரசியை மணந்தார். கி.பி. 1580-ல்

அரண்மனையிலிருந்த ஓர் அடிமையால் கொலையுண்டு இறந்தார். அவரே தலைக்கோட்டைப் போரில் சுல்தானியக் கூட்டுப்படையில் பீஜபூரரின் சார்பாகத் தலைமை தாங்கிச் சென்றவர்.

அலிக்குப் பிறகு அவர் மருமகனை இரண்டாம் இப்ரஹிம் (1580-1627) அரசரானர். அவர் வயதில் மிக இளையவரா யிருந்தமையால் அவர் சார்பில் ஆட்சிப் பொறுப்பைக் கமல்கான் என்பவர் ஏற்றுக்கொண்டார். அப் பொறுப்பைத் தாமே எடுத்து நடத்தவேண்டும் என்று விரும்பி முயன்ற சாந்த்பீபிக்கு அஃது இயலவில்லை. பீஜபூரில் இனித் தமக்கு யாதொரு பிடிப்பும் செல் வாக்கும் இல்லை என்பதை யுணர்ந்த அவ் வரசி தமது பிறந்த வீடான அகமதுநகருக்கே திரும்பினாள். அவள் இயல்பே அரசிய லோடு பட்டதாதலின் அகமதுநகருக்குச் சென்று அங்கும் அரசி யலில் முக்கியத் தொடர்புகளைக் கொண்டு எச் செயற்பாடுகளை மேற்கொண்டாள் என்பதை அகமதுநகர வரலாற்றில் காண் போம். இரண்டாம் இப்ரஹிமும் அகமதுநகருக்கும் இடையே பல போர்கள் நிகழ்ந்தன. இவர் காலத்தில் அகமதுநகரில் ஆண்ட இரண்டாம் புர்ஹன், இப்ரஹிம் நைஜாம்ஷா என்னும் இருவரும் இவரிடம் தோல்வி கண்டனர். கி.பி. 1596-ல் மொகலாய மன்ன ரான அக்பருடைய படைகள் அகமதுநகரை முற்றியபொழுது இவர் அந் நகருக்கு உதவியளிக்க முன்வந்தும், அப்போது அந் நகரின் பாதுகாப்புப் பொறுப்பை மேற்கொண்டிருந்த சாந்த்பீபி மொகலாயர்களுக்கு விட்டுக்கொடுத்து ஒப்பந்தம் செய்துகொண் டமையால் இவரால் பிறிதொன்றும் செய்ய இயலவில்லை. 1597-ல் பீஜபூரின் படைகளும் கோல்கொண்டாவின் படைகளும் சோனே பட் என்னுமிடத்தில் அப்துர் ரஹ்மான் கான்கனன் என்னும் மொகலாயப் படைத்தலைவரால் தோல்விகள் கண்டன. கி.பி. 1607-ல் இப்ரஹிம் அடில்ஷாவின் மகள் அக்பரின் மக்களில் ஒருவ ரான தானியலை மணந்தாள். அப்போது அகமதுநகரில் ஆட்சி செலுத்திய (அதாவது அதிகாரம் வகித்த) மாலிக்ஆம்பர் என் பவர் மொகலாயரோடு பகைத்திருந்தாராதலின் பீஜபூரைத் தமக்குப் பகை நாடாகக் கருதிப் பீஜபூர்மீது போர் தொடுத் தார்; அவர் பீஜபூரைத் தாக்கிப் பெருமளவு ஆதரித்தார். 1676-ல் மாலிக் ஆம்பர் இறந்த பிறகு தக்காணத்துச் சுல்தானியங் களுக்கு யாதொரு காப்பும் இன்றிக் கழிந்தது. மொகலாயப் படைகள் விரும்பியிருந்தால் தக்காணத்திற் புகுந்து அவற்றின் சுதந்தரத்தைத் தமக்குத் தேவையானபோது அழித்திருக்கலாம். கி.பி. 1686-ல் அவுரங்கசீப் தமது தக்காணப் போர்க்காலத்தில் பீஜபூரை வென்று மொகலாயப் பேரரசில் இணைத்தார்.

(ஆ) அகமது நகர்

அகமது நகரில் பாமனியைவிட்டுப் பிரிந்து தனிச் சுல்தானியத்தை நிறுவியவர் மாலிக் அகமது என்பவர் (1490-1509). அவர் மாலிக்ஹஸன் பஹ்ரி நைஜாம் உல்முல்க் என்பவரின் மகன். அகமது முதலில் தௌலதாபாத்தில் கவர்னராகவும், பின்பு ஜுன்னரில் கவர்னராகவும் அலுவல் பார்த்தார். இவர் 1490-ல் தனி அரசுப் பிரகடனம் செய்தார். 1494-ல் இவர் அகமது நகர் என்னும் நகரத்தை ஆக்கி அதைத் தமது தலைநகராகவும் செய்து கொண்டார். 1499-ல் இவர் தௌலதாபாத்தைக் கைப்பற்றினார்.

அவருக்குப்பின் அவர் மைந்தர் முதலாம் புர்ஹன் (1509-1553) அரசரானார். அவர் பீஜப்பூரில் ஆண்ட இஸ்மாயில் அடில் ஷாவின் உடன்பிறந்தாளை 1504-ல் மணந்தார். 1527-ல் பேரார்மீது தாக்குதல் நடத்திச் சில கோட்டைகளைக் கைப்பற்றினார். 1537-ல் இவர் ஷோலாபூரைக் கைப்பற்றினாராயினும் 1542-ல் அதனை இழந்தார்; இப் பேறும் இழப்பும் 1547-52-ல் திரும்பவும் நடைபெற்றன.

முதலாம் புர்ஹனை அடுத்து அவர்தம் மூத்த மைந்தரான முதலாம் ஹுசேன் (1553-1565) சுல்தானானார். அப்பொழுது அவர் பதின்மூன்று வயதுச் சிறுவராயிருந்தார்; ஆட்சியின் முற்பகுதியில் அவர் எப்போதும் பீஜப்பூராரோடு போர்தொடுத்துக் கொண்டே இருந்தார். 1562-ல் அகமது நகரும் கோல்கொண்டாவும் சேர்ந்து பீஜப்பூரைத் தாக்கின. ஆயினும், விஜயநகரத்தில் ஆட்சி அதிகாரத்தை முற்றிலும் வகித்த இராமராயரின் தாக்குதல்களால் நலிந்து போயிருந்த தக்காணத்து முஸ்லிம் அரசுகளிடையே முன்பின் கண்டிராத ஒற்றுமை ஒன்று தோன்றிற்று. இவ்வொற்றுமையை ஏற்படுத்தி விஜயநகரை வீழ்த்துவதில் பேராசையும் பெரும்பங்கும் கொண்டவர் ஹுசேன் நைஜாம் ஷாவே ஆவர். ஹுசேனின் மகளான சாந்த்பீபி பீஜபூர் சுல்தானான அலி அடில்ஷாவிற்கு மணம் புரிவிக்கப்பெற்றாள். ஹுசேன் தலைக் கோட்டைப் போரைத் தக்காணத்தார் சார்பில் முன்னின்று நடத்தி வெற்றிகண்டார். அவ் வெற்றி கண்ட சில திங்கள்கட்கெல்லாம் அவர் இறந்தார்.

ஹுசேனை யடுத்துச் சுல்தானானவர் அவர் மைந்தர் முதலாம் முர்டாஸா (1565-68) என்பவர். அவர் கோவாவைப் போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

ஆயினும், 1574-ல் பேராரை வென்று தமது அரசில் சேர்த்துக் கொண்டார். அவர் தம் அமைச்சரான சிங்கிஸ்கான் என்பவரைக் காரணமின்றிக் கொன்றுவிட்டார். இதனால் கழிவிரக்கம் கொண்ட சுல்தான் அரசு துறந்தார்; அன்றியும் சின்னாட்களில் அவருக்கு மூளையும் பிசகி இருந்த நிலையில் அவருடைய மைந்தரான இரண்டாம் ஹசேன் அவரைக் கொன்றுவிட்டார். அக் கொலைகாரரை அடுத்து இஸ்மாயில் என்பவர் சுல்தானானாலும் அவர் தொடர்ந்து ஆளவில்லை. இரண்டாம் புர்ஹன் என்பவர் பிறகு சுல்தானாகிப் போர்த்துகீசியரோடு பயனின்றிப் போரிட்டார். அவர் டபாடபா என்னும் வரலாற்றாளரைப் போற்றினார். அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த இப்ரஹிம் சில மாதங்களே ஆண்டு மறைந்தார். பிறகு அகமது நகரில் தோன்றிய குழப்பத்தை மாற்றும் திறமையுள்ள சுல்தான் ஆட்சிக்கு வரவேயில்லை. 1596-ல் மொகலாய இளவரசரான மூரத் படைத்தலைவரான அப்துர் ரஹ்மான் என்பாரின் உதவியோடு அகமத் நகரைத் தாக்கி முற்றுகையிட்டார். அந் நகரின் காவற் பொறுப்பை மேற்கொண்டிருந்த சாந்த் பீபி பேரரசை மொகலாயர்களுக்கு விட்டுக் கொடுத்து ஒப்பந்தம் செய்துகொண்டாள். ஆனால், 1597-ல் மொகலாயப் படைகளிடம் அகமது நகரத்தார் மறுபடியும் தோற்றனர்; 1600-ல் இன்னுமொரு முறை அந் நகரம் மொகலாயர் முற்றுகையில் அகப்பட்டது. சாந்த் பீபி இந்த முறையில் கோட்டையைத் தம்மாலியன்றவரையில் காத்துப் பார்த்தார். அவர் இறுதியில் அம் முயற்சி பலிக்காது என்பதை யுணர்ந்து காத்து மடிவது ஆண்மையாயினும் சரணடைந்து அமைதி பெறுவது அறிவுடைமை என்று எடுத்துக்கூறியதை விரும்பாத அந் நகரத்துப் பிரபுக்கள் அவளைக் கொன்றுவிட்டனர். அவளே தற்கொலை செய்துகொண்டாள் என்பது வேறொரு வரலாறு. ஆகவே, கி.பி. 1596-ல் அகமதுநகர் தனது சுதந்தரத்தைப் பெருமளவு இழந்து அதன் பெரும்பகுதி மொகலாயப் பேரரசின் பகுதியாயிற்று.

(இ) கோல்கொண்டா

கோல்கொண்டாவில் நிறுவப்பெற்ற சுதந்தர சுல்தானியத்திற்குக் குடுப்ஷாஹி வமிசம் என்பது பெயர். இதனை நிறுவியவர் கூலி குடுப் உல் முல்க் என்பவர்; அவர் துருக்கர்; 1495-ல் வாரங்கலில் கவர்னராக நியமிக்கப்பட்டவர். 1504-ல் அவர் பீதரோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு பீஜபூரை எதிர்த்தார். ஆயினும், பிறகு அக் கூட்டினின்றும் விலகிக்கொண்டு பீஜபூரைத் தாக்குதலைத் தவிர்த்தார். ஆயினும், 1534-ல் பீஜபூர் சுல்தானை

இஸ்மாயில் அடில் ஷா கோல்கொண்டாவைத் தாக்கினர். அப்போது அவ் அடில்ஷா இறந்தார். கோல்கொண்டாவை நிறுவிய சுல்தான் கூலி, தமது 98ஆம் வயதில் கொலை செய்யப்பட்டார். அவருக்குப்பின் அவர் மைந்தர் ஜம்ஷித்தும், ஜம்ஷித்துக்குப்பின் அவர் தம்பி இப்ரஹிமும் ஆண்டனர். இந்த இப்ராஹிம் குடுப்ஷா அகமது நகர சுல்தானை ஹுசேன் நைஜாம்ஷாவின் மகளை மணந்துகொண்டார். அவர் தலைக்கோட்டைப்போரில் கலந்து கொண்டார். அவரை யடுத்து அவர் மைந்தர் மகம்மது கூலி என்பவர் சுல்தானுனர். அவர் நிறுவியதே தக்காணத்திலுள்ள ஹைதராபாத் நகரம்; அந் நகரத்திற்குத் தம் மைந்தரான ஹைதரின் பெயரை அவர் இட்டார். கி.பி. 1596-ல் சோனேபட்டில் மொகலாயப்படைகளிடம் கோல்கொண்டா தோற்றது. கோல்கொண்டாவின் கடைசி மன்னர் அடில்ஹஸன் என்பவர்; அவரைப் பொதுவாகத் தானேஷா என்றும் கூறுவர். அவர் தமது அரசில் இந்துக்களையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவர் காலத்தில் பத்ராசலத்தில் அலுவல் பார்த்த இராமதாஸர் புகழ் பெற்ற இராமபக்தர். தானேஷாவிற்கு நுண்கலைகளில் பயிற்சியும் விருப்பமும் உண்டு. அவர் ஆட்சிக் காலத்தில் தக்காணத்தின்மீது படையெடுத்து ஔரங்கசீப் தானேஷாவைத் தோற்கடித்துக் கோல்கொண்டாவை மொகலாயப் பேரரசின் பகுதியாக்கிக்கொண்டார்.

(ஈ) பீதர்

பீதரில் சுதந்தர சுல்தானியத்தை நிறுவியவர் அமீர் காஸிம் பரீது (1487-1504) என்பவர். அவர் கவானுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்த அகமுஸ்லிம்களில் ஒருவர். கவான் இறந்த பிறகு காஸிம் பரீது அப்போது பாமனி அரசில் அதிகாரம் வகித்த மாலிக் ஹஸனை ஆதரித்தார். மாலிக் ஹஸனுக்குப் பிறகு காஸிம் பரீதே பாமனி ஆட்சியை மேற்பார்த்தார். முதன்முதலில் முழுச் சுதந்தரத்தோடு பீதரில் தனி அரசோச்சிய சுல்தான் முதலாம் அமீர் அலி பரீதுஷா என்பவரே (1504-1542). அவர் 1514-ல் பீஜபூரைப் பயனின்றித் தாக்கினர்; மூன்றுண்டுகள் கழித்துப் போர் செய்து அதனுலும் ஒரு பயனும் காணவில்லை. கடைசிப் பாமனி அரசரான மகம்மது அவரது ஆதிக்கத்தில் அடங்கி இருந்தார். 1527-ல் பீதர் பெயரளவிற்கும் பிறர் ஆதிக்கத்தில் தனி அரசாயிற்று. அவரை யடுத்து அவர் மைந்தர் முதலாம் அலி பரீதுஷா (1542-1579) சுல்தானுனர். பீதர் பிற தக்காணத்துச் சுல்தானியங்களைப்போல வலுப்பெற்று விளங்கவில்லை. தலை கோட்டைப் போரில் பிற சுல்தான்களோடு சேர்ந்துகொண்டு அலிபரீது ஷாவும் ராமராயரோடு பொருது வென்றுர். அலிபரீதே

பீதர் அரசர்களில் திறமைசாலி என்று கூறலாம். அவருக்குப் பின் அவ் வரசை ஐந்து சுல்தான்கள் ஆண்டனராயினும் அவர்கள் யாவரும் திறமையற்றவர்கள். கி. பி. 1619-ல் பீதர் பீஜபூரின் ஒரு பகுதியாயிற்று.

(உ) பேரார்

பாதுல்லா இமாதுல்முல்க் என்பவர் பேராரை 1490-ல் தனி அரசாக்கிக்கொண்டார். அவர் மூன்றும் மகம்மது (பாமனி அரசர்) காலத்தில் பேராரில் கவர்னரா யிருந்தார். 1422-23-ல் அகமது என்னும் பாமனி சுல்தான் விசயநகரத்திலிருந்து இரு பார்ப்பனப் போர்க்கைதிகளைக் கொணர்ந்தார். அவர்கள் இரு வரும் மதமாறினர். அவர்களில் ஒருவரே பாதுல்லா. பாதுல்லா இமாதுல்முல்க் என்னும் பட்டத்தைப் புனைந்துகொண்டு பேராரின் சுல்தானுனர். 1504-ல் அவர் மைந்தர் அலாவுதீன் சுல்தானுகி பாமனி சுல்தானிடம் பெயரளவிற்கு அடங்கியிருந்தார். அலாவுதீன் இஸ்மாயில் அடில் ஷாவின் சகோதரியை மணந்து கொண்டார். பேராரைப் பிற தக்காணச் சுல்தானியங்கள் ஒரு முறை ஒருசேரப் படையெடுத்துத் தாக்கின. ஆயினும், குஜராத் நவாபின் உதவியால் பேரார் தப்பித்துக்கொண்டது. அவ் வாருயினும் தனது பிரதேசத்தில் ஒரு பகுதியை அகமதுநகருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

அலாவுதீனை அடுத்து அவர் மகன் தார்யா என்பவர் (1529-62) சுல்தானுனர். அவர் காலத்தில் அகமது நகருக்கும் பேராருக்கும் இடையே மனத்தாங்கல்கள் ஏற்பட்டன. ஆகையால், தலைக்கோட்டைப் போரிலும் கலந்து கொள்ள தார்யா மறுத்துவிட்டார்.

தார்யாவை அடுத்து புர்ஹான் இமாது ஷா (1562-1574) மன்னரானுர். அவருக்குத் துபால்கான் என்னும் பெயரிய மந்திரி இருந்தார். மன்னருடைய அதிகாரங்களில் பெரும்பாலானவற்றை அவரே செலுத்திவந்தார். கி.பி. 1566-ல் அகமது நகரும் பீஜபூரும் சேர்ந்து பேராரைத் தாக்கின. இத் தாக்குதலில் பீஜபூர் தொடர்ந்து கலந்து கொள்ளவில்லை. அகமது நகரின் தாக்குதலையும் தாங்கிக்கொள்ளும் திறமை பேராருக்கு இல்லாமற் போயிற்று. அகமது நகரப்படைகள் பேரார் சுல்தானைச் சிறைப் பிடித்துப் போயின. பேராரும் அகமது நகரோடு இணைக்கப் பட்டது. 1596-ல் மொகலாயர்கள் அகமது நகரின்மீது படை யெடுத்தபோது. சாந்த்பீபியின் அறிவுரைக்கேற்ப பேராரை மொகலாயருக்கு விட்டுக் கொடுத்து அவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

19. இந்தியப் பண்பாடு கடல் கடந்து பரவியமை

தொடக்கத்திலிருந்தே இந்தியர்கள் அரசியல் ஆதிக்கம் காரணமாகப் பிற நாடுகளிற் சென்று குடியேறியதில்லை என்பது ஒரு பொதுவான கருத்து. ஆயினும், வாணிக நிமித்தம் அவர்கள் ஆங்காங்கு ஓரளவு குடியேறியிருக்கக்கூடும் என்பது யாழ்ப்பாணம், மலேயா முதலிய இடங்களில் தென்னிந்தியர் வாணிகக் குழாங்கள் வசித்துவந்தமையால் பெறப்படும். தகுவாபா கல்வெட்டால் அவ் விடத்தில் பல்லவராஜசிம்மர் காலத்து வாணிகக் கிராமங்கள் (மணிக் கிராமங்கள்) நிறுவப்பெற்றமை பெறப்படும். ஆனால், கௌண்டின்யர் போன்ற அந்தணர்கள் பூனன் முதலிய இடங்களிற் சென்று அங்கிருந்த மகளிரை மணந்து அரச குலங்களைக்கூட நிறுவியமை கேள்விப்படுகிறோம். ஆதலால், இந்தியாவிலிருந்து சென்று கீழை நாடுகளிற் குடியேறியவர்களிற் சிலரேனும் அரசியல் உந்துதல்களைப் பெற்றிருந்தனர் என்பது போதரும். சோழர்கள் பதினோராம் நூற்றாண்டில் சிங்களம், சுமத்ரா, மலேயா முதலிய இடங்களை வென்று அரசியல் ஆதிக்கத்தையும் நிறுவினர். அதனை யடுத்துச் சில வாணிக, மற்றும் வேறு வகைச் சமுதாயக் குடியேற்றங்களும் ஏற்பட்டிருக்கக்கூடும். 11 ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசர்களாகிய முதலாம் இராஜராஜர், அவர் மைந்தர் முதலாம் இராஜேந்திரர் என்பார்கள் ஸ்ரீவிஜயப் பேரரசைக் கடற்போர்கள் வாயிலாக அழித்து அங்குத் தம் சார்பில் ஆட்சி நடத்துதற்குச் சில இளவரசர்களை நியமித்ததும் உண்டு. இந் நிலை முதலாம் குலோத்துங்கர் காலம்வரையில் நீடித்தது. சோழர் பேரரசிற்கும் அக் கீழைநாட்டுப் பேரரசிற்கும் இடையே வாணிகம் காரணமாகவும் அரசியல் ஆதிக்க விருப்பம் காரணமாகவும் போர் தொடங்கி இருக்கலாம்.

முற்காலத்தில் மகாயான பௌத்தமே சுமத்ராவில் மிகுதியும் பரவியிருந்தது. ஆயினும், 13, 14 ஆம் நூற்றுண்டுக்கால அளவில் அங்கு இஸ்லாம் விரைவில் பரவலாயிற்று. இபன்பதூதா கூற்றிலிருந்து சுமத்ராவில் 1345-ல் இஸ்லாம் நன்கு பரவிற்று என்பது போதரும்.

கி.பி. ஐந்தாம் நூற்றுண்டில் சாவகத் தீவில் (ஜாவா) பௌத்த பாரம்பரியத்தோடுகூட பிராமண இந்து மரபுகளும் போற்றப்பட்டமை பாஹியானுல் பேசப்படுகின்றது. கீழை ஜாவாவிலும் பாலியிலும் இந்துக்களுடைய பண்பாட்டு ஆதிக்கமும் செல்வாக்கும் மிகுந்திருந்தன. பாலியில் அயிர்லாங் (1019-1042) என்னும் மன்னர் திருமாலின் பெரியதொரு படிமத்தை வழிபடுதற்குரிய வகையிற் செய்து அமைத்தார். பனிரண்டாம் நூற்றுண்டில் அப் பகுதியில் பல வடமொழி நூல்கள் இயற்றப் பெற்றன.

பிற்காலத்தில் ஜாவாவில் கிருதிராஜர் என்னும் மன்னர் ஆண்டார் (1294-1309). அவர் மஜபஹித் என்னும் பேரரசை நிறுவியவர். அவர் மைந்தர் ஜயநகரர் (1309-1318) ‘சுந்தர பாண்டிய விக்ரமோத்துங்க தேவர்’ என்னும் பட்டப் பெயர் புனைந்து, மதுரைப் பாண்டியர்களைப்போலவே இரட்டைக் கயல் களைத் தமது அரசச் சின்னமாகக் கொண்டார். கி.பி. 1350-லிருந்து 1389 வரை ஆண்ட இராஜநகரர் என்பவர் ஆட்சிக் காலத்தை ஒரு பொற்காலம் என்றே வரலாற்றுளர் கூறுவர். ஆயினும், சிறிது காலத்திற்குள் அந் நிலை மாறிவிட்டது. கி.பி. 1500-ல் அவ் வரசு அழிந்துபோய், சிலகாலம் சீனர் செல்வாக்கிற் குட்பட்டிருந்து. இறுதியாக 16 ஆம் நூற்றுண்டிலிருந்து இஸ்லாமின் செல்வாக்கிற்குட்பட்டது. ஆயினும், பாலித் தீவில்மட்டும் 16 ஆம் நூற்றுண்டிற்குப் பிறகுகூட இந்தச் சமய, சமூகங்களின் செல்வாக்கு நிரம்பக் காணப்பட்டது.

கட்டடத்துறையில், கீழைச் சாவகத்திற் காணப்படும் கோபுரக் கோயில்கள் சிறந்தவை. அங்குப் பல சிவன் கோயில்கள் காணக்கிடைக்கின்றன. அக் கோயில்களைத் தாங்கியுள்ள உயரமான தளங்களில் இராமாயணம் முதலிய இந்துக் காப்பியங்களின் கதைகளிற் பல சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அங்குத் தென்னிந்தியக் கலையை நினைவூட்டும் வெண்கலச்சிலைகள் பல காணப்படும். சாவகரின் இலக்கியங்களுள் இந்து இலக்கியத்தின் தன்மை ஓரளவு பிரதிபலிக்கக் காணலாம். அங்கு இஸ்லாம் வேரூன்றுதற்கு முன்பு சைவமே முக்கியமான சமயமாக இருந்தது.

அங்கிருந்தவர்கள் முருகன் (கார்த்திகேயர்), கணேசர் (விக்நேசுவரர்) என்னும் கடவுளரைப் பூசித்தனர். சாதிமுறை, வரதட்சிணை பெற்று மண முடித்தல் முதலிய பழக்கங்கள் பாலியில் காணப்பட்டன. கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளிலிருந்து சையாமில் ஆண்ட இந்து மன்னர்கள் சுகோதை அல்லது அயோத்தியாவிலிருந்து ஆண்டனர்.

காம்போஜத்தில் இந்துசமய, கலாச்சாரச் செல்வாக்கு தொடக்க காலத்திலிருந்தே இருந்துவந்தது. இரண்டாம் ஜயவர்மர் என்னும் அரசர் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அங்கோர்தோம் என்னும் தலைநகரத்தை நிருமித்துக் கொண்டு ஆண்டார். முதலாம் சூரியவர்மர் (கி.பி. 1002-1049) என்பவர் சங்கரபண்டிதர், சிவாசாரியர் என்னும் அந்தணர்களைப் போற்றினர். இரண்டாம் சூரியவர்மர் என்பவர் அங்கோர் வேது என்னும் கோயிலை நிறுவினர். 'அங்கோர் வேது' என்றால் 'பெருங்கோயில்' என்பது பொருள். தஞ்சையிலும் ஒரு 'பெருங்கோயில் 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறுவப்பட்டமை ஈண்டு நினைவுகூரலாகும். காம்போஜத்தில் சைவமும் இலிங்க வழிபாடும் மிகவும் பரவியிருந்தன; பெரும்பாலும், அந் நாட்டு மக்கள் அக் காலத்தில் இந்து சமயத்தைப் பின்பற்றினர்.

சிங்களத்திற்கும் பொதுவாக இந்தியாவிற்கும் சிறப்பாகத் தமிழகத்திற்கும் எப்போதுமே எல்லாவகைத் தொடர்புகளும் இருந்திருக்கின்றன. சிங்களத்திலுள்ள பௌத்தமதம் அசோகர் காலத்திலேயே இந்தியாவிலிருந்து பெறப்பட்டது. அவர்களுடைய கலைகளும் இந்தியக் கலைமரபுகளை நினைவூட்டுகின்றன. கிரியா ஓவியங்கள் அஜந்தா ஓவியமரபை யொத்துள்ளன. பொலனருவா அருகிலுள்ள சிற்பங்கள் தமிழகத்துக் கலைமரபை யொட்டியுள்ளன. பதினோராம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து சிங்களம் சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதனை முதற்கண் வென்று தம் பேரரசில் அடக்கிய பேரரசுச் சோழர் முதலாம் இராஜராஜர். அவர் மகன் முதலாம் இராஜேந்திரர் இலங்கைத் தீவு முழுவதையும் வென்று சோழர் பேரரசில் அடக்கி ஆண்டார். சிங்களர் பெரும்பாலும் கேரளர்க்கும் பாண்டியர்க்கும் நெருங்கிய நட்புத் தொடர்புடையராயிருந்தனர்; அதே காரணத்திற்காக அவர்கள் சோழரோடு பகைத்தனர். சிங்களத்தில் சோழர் ஆட்சி முதற்குலோத்துங்கர் காலத்தில் தீர்ந்தது. ஆயினும், அத் தீவில் இந்தியாவின் பண்பாட்டுச் சின்னங்கள் தொடர்ந்து ஏராளமாக இருந்தன. யாழ்ப்பாணத்துத் தமிழர் இந்து சமயத்தைப் பின்

பற்றித் தமிழகத்துக் குடிமகனுக்கும் தமக்கும் வேறுபாடின்றி விளங்கினர். இலங்கைத் தீவின் ஒருபகுதி 13ஆம் நூற்றுண்டின் முதற்பகுதியில் கலிங்கர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. கி.பி. 1284-ல் மாறவர்மர் குலசேகரபாண்டியரின் படைத்தலைவரான ஆரிய சக்ரவர்த்தி என்பவர் இலங்கைமீதுபடையெடுத்து அங்கிருந்த புத்தரது புதைபல்லினை இந்தியாவிற்குக் கொணர்ந்தார். மூன்றும் பராக்ரமபாகு (1302-1310) பாண்டியருக்குக் கீழ்ப் படிந்து அப் பல்லினை மறுபடியும் வாங்கிக்கொண்டார். விசய நகர அரசரான விருபாக்ஷர் வென்றதாகக் கூறப்படுவது ஒரு கதையேயாகும்.

பகுதி II

20. மொகலாயர் ஆட்சித் தொடக்கம்

(அ) வரலாற்று மூலங்கள்

மொகலாயர் ஆட்சிக்கு முக்கியமான வரலாற்று மூலங்களாக விளங்குபவை மூவகைப்படுவனவாம். முதலாவதாக பாரசீக மொழியில் எழுதிய மொகலாய வரலாற்றுளர்கள். இரண்டாவதாக, தம் சுயசரிதங்களை எழுதிய பேரரசர்கள் - மூன்றாவதாகப் புறத்தார்கள். இவர்களில் மொகலாய வரலாற்றுளர்களில் முதற்கண் வைத்து எண்ணத் தக்கவர் அபுல்பசல் என்பவர். அவரே அக்பருடைய வரலாற்றைத் தாம் கண்டவாறே 'அக்பர் நாமா' என்னும் நூலில் எழுதி வைத்தார். 1595-ல் அபுல் பசலால் தொகுக்கப்பட்ட 'அயினி அக்பரி' என்னும் நூலில் அக்பர் காலத்து நாட்டு நடப்புகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு மாகாணத்தின் மொத்த வரி வசூலிலிருந்து ஒரு சிறு பண்டத்தின் விலைவரை, பேரரசுப் படையின் அமைப்பிலிருந்து ஒரு சிறுபொருளின் தோற்றம் வரையிலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அந் நூலில் குறைபாடுகளும் உள. அவர் கூறுவனவற்றுள் சில வரலாற்று உண்மைகளா அல்லது வரலாற்றுளர்களின் கற்பனைகளா என்று கூற இயலாதவாறு அமைந்துள்ளன. அன்றியும், அல்பருனியின் நூலிலிருந்து பல பகுதிகளை அப்படியே மேற்கொண்டுள்ளார். அயினியில் அக்பருடைய அருங்கூற்றுகள், அபுல் பசலின் சுய வரலாறு என்பவையும் காணக்கிடக்கின்றன. அவர் இயற்றிய அக்பர் நாமாவில் அப் பேரரசருடைய முன்னோர்களின் வரலாறுகளும் அக்பருடைய ஆட்சியைப் பற்றிய விரிவான விவரங்களும் கிடைக்கின்றன. அந் நூல் ஒன்றைமட்டும் கொண்டு அபுல் பசலை வரலாற்றுளர் என்னும் முறையில் எடை போடுவது எளிதன்று. நாம் நம்பக்கூடிய அளவிற்கு மேலாக அவர் அக்பரைப்பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளமையால் அவர் எழுதியுள்ளவையெல்லாம்

வெறும் புகழ்ச்சியா அன்றி உண்மையா என்று காண்டலும் எளிதன்று. அவர் எவ்வளவிற்கு அக்பரை உயர்த்துகின்றாரோ அவ்வளவிற்கு ஷெர்ஷாவைத் தாழ்த்துகின்றார். அஃதெவ் வாறாயினும், அக்பர் ஆட்சிக் காலத்தின் வரலாற்றை நாம் அறிதற்கு முக்கியமான வரலாற்று மூலங்கள் அவருடைய நூல்களே.

பாபரின் மகளான குல்பதான் பேகம் என்பாள் இயற்றிய 'ஹுமாயூன் நாமா' என்னும் நூலில் பாபர் வரலாற்றின் ஒரு பகுதியும், ஹுமாயூன் வரலாறு முழுமையுமே கிடைக்கின்றன. அக்பரின் வாழ்க்கையையும் ஆட்சி விவரங்களையும்பற்றி எழுதி யுள்ளவர்களில் நிஜாம் உத்தீன் என்பவர் சிறந்தவர். நிஜாம் உத்தீன் அகமது தபாகாடி அக்பரி அல்லது அக்பர் வரலாறு என்னும் நூலை இயற்றினார். 1593 வரையில் உள்ள வரலாற்றை அது கூறுகின்றது. அவர் அக்பரை உள்ளபடி விவரிக்கிறார் என்று தோன்றுகின்றது. எளிய நடையில் உண்மையைச் சீர்தூக்கிப் பார்த்துக் கூறிய இவ் வரலாற்றாளர் அபுல் பசலினும் சிறந்த மூலம் என்று சிலர் கருதுவர்.

பதௌனி என்பார் இயற்றிய தாரிகி பதௌனி என்னும் நூல் முஸ்லிம் உலகத்தின் பொது வரலாற்றை 1595 வரை கூறு கின்றது. அவர் பேரறிஞர். பல வடமொழி நூல்களைப் பாரசீகத்தில் ஆக்கியவர். அவர் ஷெர்ஷாவை உயர்த்தி அக்பரைத் தாழ்த்துவர். அவர் அபுல் பசல், பய்சி என்பாரிடம் சிறிது பகைமை கொண்டிருந்தார். அவர் மரபுவழி முஸ்லிம் ஆதலால், அபுல் பசல் போன்றாருடைய புதுமை நெறிகளை வெறுத்தார். ஜவஹர் என்பாருடைய தாரிகி ஹுமாயூன் என்னும் நூல் குல்ப தாம் பேகத்தின் நூலைப்போல ஹுமாயூனின் ஆட்சியை விவரிக் கின்றது. பெரிஷ்டா என்பவர் நிஜாம் உத்தீனைப் பின்பற்றி தாரிகி பெரிஷ்டா என்னும் நூலை இயற்றினார்.

17ஆம் நூற்றாண்டு மொகலாய வரலாற்றிற்கு மூலங்களாகப் பயன்படும் பாரசீக நூல்கள் முதாமத் கான் என்பாரின் இக்பல் நாமா-இ-ஜஹாங்கிரி என்பதும் கஸ்வினி என்பார் இயற்றிய பாதுஷா நாமா, அப்துல் ஹமீது லஹௌரி இயற்றிய மற்றொரு பாதுஷா நாமா என்பவை ஷாஜஹான் ஆட்சி வரலாற்றிற்கு இன்றியமையாதவை. ஸாதிக் என்பாரின் ஷாஜஹான் நாமா அப் பேரரசின் ஆட்சி முழுவதையும் கூறுகின்றது. காஸிமின் ஆலங்கீர் நாமா ஔரங்கசீப் ஆட்சியின் முற்பகுதியை விவரிக் கின்றது. முஸ்தயிது கான் என்பாரது மாசிரி ஆலங்கிரி

ஔரங்கசீபின் ஆட்சி முழுவதையும் கூறுகின்றது. காபிகான் இயற்றிய முன்டக உல்லபாப் என்னும் நூல் (1733-ல் எழுதி முடிக்கப்பெற்றது) பாபர் தொடங்கி 1733 வரை மொகலாயர் வரலாற்றைக் கூறுகின்றது. காபிகான் ஔரங்கசீப்பைப் போற்றி, சிவாஜியைத் தூற்றியவர். ஆதலால், அவர் வரலாற்றைச் சிறிது மாற்றியவர் என்று சிலர் கருதுவர். பீம்சேன் என்பவர் ஔரங்கசீபின் தக்காணப் போர்களைப்பற்றித் தமது முஸ்காயி தில்கஷா என்னும் நூலில் கூறுகின்றார். ஷாநவாஸ்கான் என்பார் 18ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் மாஸிர் உல் உமாரா என்னும் நூலில் அக்பர் காலம் தொடங்கி ஒன்றரை நூற்றாண்டு வரை வாழ்ந்த மொகாலயப் பிரபுக்களைப்பற்றி வரிசைப்படுத்தி எழுதினார்.

பாபர் தமது வாழ்க்கை வரலாற்றை மிக அழகாக எழுதி வைத்துள்ளார். அவர் தம் குறிப்புகளில் தாம் வென்ற இந்துஸ்தானத்தைப்பற்றி ஒளிவு மறைவின்றிக் கூறியுள்ளார். எடுத்துக் காட்டாக 'மக்களை மகிழ்விக்கும் பண்புகள் சிறிதும் இல்லாதது இந்துஸ்தானம். அந் நாட்டினர் அழகில்லாதவர்கள். அவர்களில் பேரறிஞர்களில்லை. இனிய பழக்கங்கள் குன்றியவர்கள். முக்கியமாகக் குதிரைகள், திராட்சை, முலாம்பழங்கள், குளிர்ந்த நீர், நல்ல உணவு, ஒரு தீவட்டிகூட இல்லாதவர்கள். அந் நாட்டு மக்களில் குடியானவர்களும், பிற எளியவர்களும் ஆடையின்றித் திரிகின்றனர். ஆயினும், எல்லாத் தொழில்களுக்கும் தேவையான வேலையாட்கள் அங்குள்ளனர் என்பது ஒரு சிறப்பு.' சுயசரிதம் எழுதிய பேரரசர்களில் சிறந்தவர் ஜஹாங்கீர். அவரது துஸுகி ஜஹாங்கீர், அவர் ஆட்சிக்காலத்தின் முதல் 17 ஆண்டுகளை நன்கு எடுத்துக் கூறுகின்றது. அதிலிருந்து அவரது தன்மையை அறிய முடிகின்றது. அதில் அவர் அபுல் பசலின் கொலைக்குத் தாமே காரணர் என்பதை ஒப்புக்கொள்ளுகிறார். ஔரங்கசீப் (ஆலங்கீர் என்னும் பெயரோடு ஆண்டவர்) எழுதிய எண்ணிறந்த கடிதங்களின் வரலாற்றுப் பயன்பாடு வெளிப்படை.

மொகலாயர் ஆட்சிக் காலத்தைப்பற்றிய விவரங்கள் கிறித்துவப்பாதிரிகளான புறத்தார் கூற்றுகளினின்றும் வெளியாகின்றன. அக்பர் அவைக்குச் சென்ற மான்சராட் பாதிரியார், து ஜாரிக் பாதிரியார் என்பார் எழுதிய விவரங்கள் அக்பர் ஆட்சி விவரங்களில் சிலவற்றை நன்கு எடுத்துக் கூறுகின்றன. ரால்ப் ஃபிட்ச் என்னும் ஆங்கிலேயர் நாடுசுற்றி ஜான் மில்டன் ஹால் என்னும் மற்றோர் ஆங்கிலேயர், டெர்ரி, ரோ, பர்னியர், மானுச்சி, கபித்தான் ஹாக்கின்ஸ், டாவர்னியர் என்னும் பிரெஞ்

சுக்காரர் முதலியோர் விட்டுச் சென்றுள்ள விவரங்கள் வரவேற்கத்தக்கவை. மானுச்சியின் (இத்தாலியர்) ஸ்டோரியா டோ மொகோர் என்னும் நூலில் ஔரங்கசீப்பின் ஆட்சியைப்பற்றியும், ஷாஜஹான் ஆட்சியின் பிற்பகுதியைப்பற்றியும் கூறுகின்றார். டாக்டர் சரேரி என்பவர் 1695-ல் ஔரங்கசீப்பை நேரில் கண்ட விவரத்தைக் கூறுகின்றார். மேற்கூறிய வரலாற்று மூலங்களிலிருந்து 1526-லிருந்து 1707 வரை மொகலாய ஆட்சி வரலாற்றை நன்கு அறியலாம்.

(ஆ) பாபர்

இந்துஸ்தானத்தில் மொகலாயப் பேரரசை நிறுவியவர் பாபர். அவர் நிறுவிய பேரரசு 1526-லிருந்து 1857 வரை நிலைத்திருந்தது. 1540-லிருந்து 1556 வரை இடைப்பிறவரலாக சூர் வம்சத்தினர் ஆண்டனர். அவர்கள் ஆப்கானியர். அவ் விடையீடு நீங்கலாக 1526-லிருந்து 1707 வரை பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகிய பெரு மன்னர்கள் ஆண்டனர். 1707-லிருந்து 1857 வரை முதலாம் பகதூர்ஷா முதல் இரண்டாம் பகதூர்ஷாவரை பல சிறு மன்னர்கள் ஆண்டனர். 1857-ல் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்த இரண்டாம் பகதூர்ஷா ஆட்சியினின்றும் நீக்கப்பெற்று மொகலாயர் ஆட்சி முடிக்கப்பெற்றது. அக்பர், ஔரங்கசீப் ஆகிய பேரரசர்களின் பல சாதனைகளாலும், ஷாஜஹான் காலத்து அழகுக் கலை வளர்ச்சியாலும் மொகலாயப் பேரரசுக் காலம் புகழ்பெற்றது. 18 ஆம் நூற்றாண்டிலும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மராட்டியர், சீக்கியர், ஆங்கிலேயர் ஆகியோருடைய செயற்பாடுகளுக்கிடையே அகப்பட்டுப் பேரரசு குன்றி அழிந்தது.

பாபர் தந்தை வழியில் துருக்கரான தைமூர் வம்சத்தினின்றும், தாய்வழியில் மங்கோலியரான செங்கிஸ்கான் வம்சத்தினின்றும் தோன்றியவர். அவருடைய தந்தையார் தைமூர் விட்டுச் சென்ற பேரரசின் ஒரு சிறு பகுதியான பர்கானாவை ஆண்டு வந்தார். தமது பதினோராம் ஆண்டிலேயே பாபர் அவ்வரசினை எய்தினார். அவர் மனஉறுதி கொண்டு உடல் வலிமிக்க வீரர். எளிதில் எதைக்கண்டும் அஞ்சாதவர். ஆயினும், ஊழ்வலியால் தமது அரசைத் தொடர்ந்து ஆள முடியவில்லை. தைமூரின் தலைநகரான சாமர்கண்டைக் கைப்பற்றி ஆள அவர் விழைந்தார். ஆனால், இயலவில்லை. அவர் உஸ்பெக் தலைவர்களுடைய பகைமையை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. இவ்வாறு நிலையில்லாமல் ஆங்காங்குத் திரிந்துவந்த அம்

மொகலாயர் இறுதியில் காபூலில் வந்து தங்கினர். 1504-ல் அங்கு ஓர் ஆட்சியை அமைத்துக்கொண்டார். அதன் பிறகு கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலம் அங்கு ஆண்ட பிறகுதான் இந்தியாமீது படையெடுக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. கி.பி. 1505, 1519 ஆகிய ஆண்டுகளில் அவர் இந்தியாவின் வட மேற்குப் பகுதிமீது படையெடுத்தார். 1524-ல் தௌலத்கான் லோடி என்பவர் பஞ்சாபில் கவர்னராயிருந்தார். அப்போது டெல்லி சுல்தான் இப்ராஹிம் லோடி. பிந்தியவரின் செயற் பாடுகளைக் கண்டு அஞ்சி வருந்திச் சினமுற்ற முந்தியவர் பாபரை இந்தியாவிற்கு வரவழைத்தார். இப்ராஹிம் லோடியின் மாமனை ஆலம்கான் என்பவரும் ஓர் அழைப்பு விடுத்தார். பாபர் தமது படையோடு இந்தியாவினுட் புகுந்து இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்து இந்துஸ்தானத்தின் ஆட்சியைத் தம்மிடம் ஒப்பு வித்துவிட்டுத் திரும்பிப் போய்விடுவாரென்று எண்ணினர். அது தவருன கணக்கு என்பதை உணர்ந்த தௌலத்கான் இப்ராஹி மோடு சேர்ந்துகொண்டு பாபரை எதிர்க்கவே பாபரும் காபூலுக்குத் திரும்பினர். ஆயினும், 1525 ஆம் ஆண்டின் இறுதி யில் அவர் தம் விருப்பப்படியே இந்தியாமீது படையெடுத்தார். தௌலத்கான் அவரைத் தடுக்க முயன்று தோற்ருர். 1526-ல் பானிபட்டில் பாபர் இப்ராஹிம் லோடியை எதிர்த்துப் போரிட்டு டெல்லி சுல்தானைக் கொன்று இந்துஸ்தானத்தை வென்று மொகலாயர் ஆட்சியை நிறுவினர். மொகலாயர்கள் ஆப்கானி யர்களைவிட இராணுவக் கட்டுப்பாடு மிகுந்திருந்ததோடு பீரங்கிப் படையும் வைத்திருந்ததால் முதல் பானிபட் போரில் அவர்களே வெற்றியடைந்தனர். இவ் வெற்றியடைந்தவுடன் இந்துஸ்தானம் முழுவதும் பாபர் வசம் ஆகிவிடவில்லை. ஆப்கானியர்களையும், இராஜபுத்திரர்களையும் அவ்வளவு எளிதில் அடக்க முடியாதென் பதைப் பாபரும் அவர் மைந்தரும் அனுபவத்தில் காண வேண்டியதாயிற்று. பானிபட் வெற்றியைத் தொடர்ந்து பாபர் டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார். அந் நகரங்களில் அவர் பெற்ற அளவிறந்த செல்வங்களைத் தமது படைஞர்களுக்குப் பகிர்ந்தார். பாதுஷா என்னும் பட்டத்தைப் புனைந்த பாபர் டெல்லி மசூதிகளில் தமது பெயரால் ஆண்ட வனுக்கு வந்தனை செலுத்த உத்தரவிட்டார்.

இதற்கிடையே, சித்தூரில் ராணுசங்கா என்னும் பெரிய இராஜபுத்திரர் ஆண்டுவந்தார். அவரும் தௌலத்கானைப் போலவே இந்துஸ்தானம் முழுவதையும் ஆள விரும்பினர். அவ் விருப்பத்திற்குக் குறுக்கீடாகப் பாபர் வந்தமையால் அவரோடு போராட முடிவு செய்தார் ராணு சங்கா. அந்த ராணுவின்

முழுப்பெயர் ராணு சங்கராம சிங் என்பது. சிக்ரி அருகிலுள்ள கனுவா என்னுமிடத்தில் பாபருக்கும் ராணு சங்காவிற்கும் போர் நடந்தது. ராணு சங்கா சாமானியப் போர் வீரர் அல்லர். அவர் 100 போர்களில் வெற்றி கண்டவர் என்னும் புகழ் கொண்டவர்.



அவர் இராஜபுத்திரர்களுடைய தலைவர். பாபர் படைகளைவிடப் பன்மடங்கு மிகுந்த இராஜபுத்திரர் படையை போரில் ஈடு படுத்தினர். அப் போரின் தொடக்கத்தில் வெற்றி ராணுவின் பக்கலில் சாருமென்று தோன்றிற்று. அது கண்டு ஊக்கம் குன்றி யிருந்த மொகலாயப் படைஞர்களை ஊக்குவிப்பதற்காகப் பாபர்

தம் மதுக்கோப்பைகளை யெல்லாம் வீசியெறிந்து உடைத்து இனித் தாம் மதுவே அருந்துவதில்லை யென்று சபதம் பூண்டார். இச் சூளுரைக்கும் மேலாகத் தம் படைஞர்களை விளித்து அவர் வீர உரைகளை நிகழ்த்தினர்; வென்றால் அவர்களுக்குக் கிடைக்கும் பெருமைகளையும் வெகுமதிகளையும் பற்றிக் கூறியதோடு தோற்றால் அவர்கள் அடையும் இகழ்ச்சிகளையும் ஆபத்துகளையும் விளக்கிக் கூறினர். அப் படைஞர்களும் சூளுரையைக் கூறிப் போரிட்டனர். அடுத்து நிகழ்ந்த போரில் மொகலாயர் பெருவெற்றி கண்டனர். இராஜபுத்திரர் வன்மை பெரிய அளவிற்கு ஒடுங்கிற்று. இதனை அடுத்துப் பாபர் சந்தேரிக் கோட்டையைக் கைப்பற்றினர். ஆப்கானியர்களுடைய எதிர்ப்பு முற்றிலும் முரியடிக்கப்படவில்லை என்பதை உணர்ந்த பாபர் அப் படைகளைக் கோக்ரா என்னு மிடத்தில் இறுதியாகத் தோற்கடித்தார். வங்காளத்தை யாண்ட சுல்தான் நுஸ்ரத் என்பவர் பாபரோடு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். 1529-ல் அவர் ரந்தம்பூர்க் கோட்டையைக் கைப்பற்றினர். அதற்குப் பிறகு அவர் ஓராண்டுக்காலம் கூட உயிர்வாழவில்லை. அவர் இறந்த வரலாற்றை ஹுமாயூன் நாமாவில் காண்கிறோம். பாபர்தம் மைந்தரான ஹுமாயூன் நோய்வாய்பட்டுக் கிடந்தார். அப்போது மனம் வருந்தி நின்ற பாபர் ஆண்டவனைத் தொழுது தம் மகன் நோயைத்தாம் வாங்கிக் கொண்டு இறந்தார். ஹுமாயூனும் விரைவில் குணமடைந்தார். பாபரின் பண்பு எல்லா வரலாற்றாளர்களாலும் போற்றப் படுகின்றது. அவர் மன உரம் மிக்கவர்; ஆபத்துக்கு அஞ்சாதவர்; தஞ்சம் புகுந்தோரைப் போற்றியவர். பாரசீக மொழியில் செய்யுளியற்றவும், துருக்கி மொழியில் உரை நடை புனையவும் வல்லவர். அவர் நாட்டுப்பற்று மிகுந்தவர். விடா முயற்சிக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு. பானிபட், கானுவா, கோக்ரா என்னும் மூன்று வெற்றிகளும் அவரைப் பெருவீரரென்று வரலாற்றில் நிறுவப் போதுமானவை. அவருடைய சுயசரிதை வரலாற்று மூலமாக விளங்குவதோடு அவருடைய பண்புகளைச் சித்திரிக்கும் ஓர் உரை ஓவியமாகவும் விளங்குகின்றது. அவருக்குப் புதல்வர் நால்வர். அவர்கள் ஹுமாயூன், கம்ரான், ஹிண்டால், அஸ்காரி என்பவர்கள். பாபரை அடுத்து அவர் மூத்த மைந்தரான ஹுமாயூன் இந்துஸ் தானத்தை ஆளத் தொடங்கினர். அவர் மன்னரானபொழுது அவருக்கு வயது 23 தான். ஆயினும், அவருக்குப் போரிலும் ஆட்சி முறைகளிலும் நல்ல பயிற்சி இருந்தது. ஹுமாயூன் இந்துஸ்தானத்தின் மன்னராக அமர்ந்தபொழுது கம்ரான் காபூலில் கவர்னரானர். ஹிண்டால் சாம்பாலில் மன்னரானர். அஸ்காரி மேவாட்டில் மன்னரானர்.

21. ஹுமாயூன் (1530-1540)

ஹுமாயூன் மனஉறுதி அற்றவர். வீரத்தோடும், உறுதியோடும் தம்மை எதிர்க்கத் துணிந்த பகைவர்கள் இலராயின் அவர் வாழ்க்கையில் வெற்றி கண்டிருப்பார். ஆனால், இப்ராஹிம் லோடி, ராணாசங்கா என்பாரைவிடத் திறமை சான்றவர்களான பகதூர்ஷா, ஷெர்ஷா என்பவர்களுடைய பகைமையைப் பாராட்டவேண்டிய நிலைமையில் அவர் இருந்தார். அவர் போர்த் திறமையில் குன்றியவர் அல்லர். குஜராத்தில் பகதூர்ஷாவை வென்று 1555-ல் இந்துஸ்தானத்தை இரண்டாம் முறையாகக் கைப்பற்றியமை இதற்குச் சான்று. ஆனால், ஷெர்ஷாவுடன் புரிந்த போர்களில் அவர் காட்டிய மடிமை வியப்பைத் தருவதாயுள்ளது. அந்த ஆப்கானியர் பண்புகளுக்கு நேர்எதிரிடையான தன்மை வாய்ந்தவர் ஹுமாயூன். அவர் ஈவிரக்க முடையவர். தமக்குத் துரோகம் செய்த கம்ரானை மன்னித்துவிட்டார். தமக்குக் கிடைத்த கோஹினூர் வைரத்தைத் தம் தந்தையாருக்குக் கொடுத்தார். ஷெர்கானோடு கங்கைக் கரையில் பொருதபோது தாம் தோற்று ஓட வேண்டி வந்த நிலையில் தம்மைக் காப்பாற்றிய ஒரு வேலைக்காரனுக்குத் தமது அரியணைமீது ஒருநாள் அமர்வதற்கு அனுமதியளித்தார். நன்றியறிதல், கொடைமடம், சூழ்ச்சியோடு படாத போர்த்திறன் என்பவைமட்டும் ஓர் அரசனின் வெற்றிக்கு அடிப்படை ஆகா என்னும் உண்மை ஹுமாயூன் வாழ்க்கையால் விளக்கமாம். ஊழ்வலியும், சூழ்நிலையும் அவருக்கு எதிராக அமைந்தன. உடன்பிறந்தார்களின் ஒத்துழைப்பிற்குப் பதிலாக அவருக்குக் கிடைத்தது பகைமையே. ஆயினும், அக்பரை இந்நாட்டிற்கு அளித்த பெருமை ஒன்றிற்காகவே அவரிடம் வரலாறு நன்றி செலுத்தும்.

ஹுமாயூன் இந்துஸ்தானத்தின் மன்னரானவுடன் 1531-ல் கலிஞ்சாரைக் கைப்பற்றி மகம்மது லோடியை ஜான்புரியில் தோற்கடித்தார். காசி யருகில் கலகம் செய்த ஷெர்கானோடு

1532-ல் சண்டையிட்டுப் பிறகு சமாதானம் பூண்டார். 1533-ல் கம்ரான், லாகூரைக் கைப்பற்றி, பஞ்சாபையே தமதாக்கிக் கொள்ள முயன்றார். அம் முயற்சி வன்முறையால் வெற்றி பெறுவதற்கு முன்பே பஞ்சாபை அவருக்கு விட்டுக்கொடுத்துச் சமாதானம் பூண்டார் ஹுமாயூன். பீஹாரில் கவர்னராயிருந்த தம் மைத்துனர் மகம்மது ஸமான் என்பவர் கலகம் செய்தமையால் அவரைப் பதவியினின்றும் நீக்கினார்; சிறையிலும் இட்டார். ஆனால், தப்பி ஓடிய ஸமான் ஹுமாயூனின் பெரும் பகைவரான ஷெர்கானுடன் சேர்ந்துகொண்டார். அன்றியும் குஜராத்தில் சுல்தானாயிருந்த பகதூர்ஷா மாளவத்தைக் கைப்பற்றி மேலும் முன்னேறினார். அவர் அவைக்களத்தில் ஹுமாயூனின் பகைவர்களில் பெரும்பாலோர் குழுமியிருந்தனர். 1534-ல் குவாலியர் அருகே அவரைக் கட்டுப்படுத்த முயன்ற ஹுமாயூன் வெற்றி காணவில்லை. ஆயினும், 1535-36-ல் பெரும் போர்களுக்கிடையே பகதூர்ஷாவைப் பல இடங்களிலும் புறங்கண்டார். மாண்டு, சம்பானிர், காம்பாய் முதலிய இடங்களில் பகதூர்ஷாவை அவர் வென்றார். அகமதாபாத்தைக் கைப்பற்றித் தம் தம்பி அஸ்காரியிடம் ஒப்புவித்துவிட்டு ஹுமாயூன் திரும்பினார். பகதூர்ஷாவின் முயற்சிகளால் அங்கிருந்து அஸ்காரி பின்வாங்க வேண்டியதாயிற்று. அந் நிலையில் சம்பானிர், மாண்டு, மாளவம் முதலிய பகுதிகளும் கையிகந்தன. தமது சுதந்தரத்தை பிரகடனப்படுத்திக்கொள்ளும் எண்ணம் அஸ்காரிக்கு வெளிப்படையாகவே இருந்ததாயினும் ஹுமாயூன் அதைப் பொருட்படுத்தவில்லை. கிழக்குப் பகுதியில் ஷெர்கானோடு மாபெரும் போர்கள் இட வேண்டிய நிலைமை அவருக்கே தெரியும்.

1532-ல் ஹுமாயூன், ஷெர்கான் செய்துகொண்ட உடன்படிக்கையை மேலே கண்டோம். அதற்குப் பிறகு ஷெர்கான் தாம் ஆண்ட நாட்டின் பரப்பை ஏறத்தாழ இருமடங்கு ஆக்கிக்கொண்டு திறமைசான்ற ஆட்சியொன்றையும் நிறுவினார். அவர் வெளிப்படையாகவே ஹுமாயூனுக்கு அடங்காமலிருந்தார். 1537-ல் ஹுமாயூன் ஷெர்கானை எதிர்த்துப் படைகொண்டு கிளம்பினார். 1538-ல் ஆறுமாத முற்றுகைக்கு பிறகு சுனார் கோட்டையைக் கைப்பற்றினார். அவர் உடனடியாகக் காலூர்க் கோட்டையைக் கைப்பற்றாமல் சுனாரை முற்றுகையிட்டது பெரும் தவறு என்று சில ஆசிரியர்கள் கூறுவார்கள். இவ்வாறு பீஹாரில் ஹுமாயூன் போரில் ஈடுபட்டிருந்தபோது ஷெர்கான் வங்காளத்தில் சுல்தானாயிருந்த மகமூது என்பாரைத்தோற்கடித்து, காலூரைக் கைப்பற்றி அங்கிருந்த செல்வங்களை பீஹாருக்குக் கொண்டு சென்றார். ஹுமாயூன் வங்காளத்தை அடைந்தபொழுது

ஷெர்கான் பீஹாரில் தமது நிலைமையை வலுப்படுத்திக்கொண்டிருந்தார். ஆகையால், வங்காளத்திலிருந்து டெல்லிக்குத் திரும்புவதற்கே ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சிய ஹுமாயூன் உடனே திரும்பினார். பாட்னாவிற்கும் காசிக்கும் இடையேயுள்ள சௌஸா என்னுமிடத்தில் 1539-ல் ஹுமாயூன் ஷெர்கானால் தோற்கடிக்கப்பட்டார். 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஹுமாயூன் டெல்லிக்கு ஓடிவந்து சேர்ந்தார். இந்த நிலையிலும் அவருடைய சகோதரர்கள் அவருடைய உதவிக்கு வரவில்லை. இதற்கிடையில் ஷெர்கான் வங்காளத்தை வென்று அம் மாகாணத்தின் அரசைக் கைப்பற்றி ஷெர்ஷா என்று என்று பட்டம் புனைந்தார். 1540-ல் பேரரசர்க்கும் ஷெர்ஷாவிற்கும் கனோஜியில் இறுதியாக நடந்த சண்டையில் ஹுமாயூன் தோற்றார். தோற்று ஓடியவரைத் துரத்திவந்த ஷெர்ஷா ஆக்ராவையும் டெல்லியையும் உடனடியாகக் கைப்பற்றிக் கொண்டார். இவை போதாவென்று கம்ரான் ஷெர்ஷாவோடு கூட்டுச் சேர்ந்து கொண்டார். இவ்வளவிருந்தும் அருமைச் சகோதரனை ஒறுப்பதற்கு மனம் துணியவில்லை ஹுமாயூனுக்கு. கடைசியாகச் சிந்துவிற்கு ஓடிவிடுவதென்று அவர் தீர்மானித்தார். அப்போது குஜராத் குழப்பநிலையில் இருந்தது. மூல்தான் கவர்னர் கம்ரானுக்கு அடங்கியவராதலால் ஹுமாயூனிடம் பகைமை பூண்டு அவருக்கு இன்னல் விளைவித்தார். சிந்துவிலிருந்த ஷா ஹுசேனும் அவருக்கு எதிரியானார். இதனால் ஆத்திரமூண்ட ஹுமாயூன் சிந்துவின் தலைநகரைத் தாக்க முயன்றும் வெற்றி பெறவில்லை. ஜோதிபுரி அரசரான மால்தேவ் ஹுமாயூனுக்கு உதவிபுரிய விரும்பினாராயினும் ஷெர்ஷாவிடம் அஞ்சிப் பின் வாங்கினார். கடைசியாகச் சிந்துவிலுள்ள உமர்கோட் அரசரால் ஆதரிக்கப் பெற்றார். அங்கு ஹுமாயூன் 1541-ல் ஹமீதா பேகம் என்பாளை அவள் விருப்பத்திற்கு விரோதமாக மணந்து கொண்டார். 1542-ல் உமர் கோட்டில் ஹுமாயூனுக்கு ஹமீதா பேகமிடம் பிறந்த மகனே ஜலாலுதீன் முகம்மது அக்பர். மகன் பிறந்த அந் நாளைக் குறைந்த செலவில் மகிழ்ந்து கொண்டாடினார் பேரரசர். அப்பொழுது ஹுமாயூனுக்கு உதவியாக வந்து சேர்ந்தவர் பைராம்கான். மனைவி, மகனோடும் பைராம்கானோடும் காந்தஹாருக்குச் சென்று ஹுமாயூன் தம் மகனை அங்கு விட்டுப் பாரசீக மன்னரிடம் சரண்புகுந்தார். பாரசீக மன்னர் ஹுமாயூனுக்குத் தாம் ஆதரவு அளிப்பதற்கு அவர் ஷியாவாக மதம் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினர். பாரசீகர்களுடைய உதவி கொண்டு 1545-ல் காந்தஹாரை வென்று நன்றிகொன்ற தம்பியான அஸ்காரியை மன்னித்து நீக்கி அந் நகரத்தைப் பாரசீக அரசரிடம் ஒப்புவித்தார். பிறகு அக்பர் சிறு

வனுக, கம்ரானிடம் வாழ்ந்து வந்த காபூல் நகரத்தைத் தாக்கிக் கைப்பற்றினர். தமக்குத் துரோகம் செய்த தன்மகனையும் வஞ்சித்த கம்ரானை அந் நிலையிலும் கொல்ல விரும்பாமல் கண்ணைமட்டும் வாங்கிவிட்டுக் காபூலைவிட்டு விரட்டிவிட்டார். பிறகு 1555-ல் ஹுமாயூன் இந்தியாமீது படையெடுத்தார். வழியில் அவருக்குப் பைராம்கான் உதவி கிடைத்தது. பஞ்சாபில் சிர்ஹிந்த் என்னுமிடத்தில் சிக்கந்தர் ஷா சூர் என்பாரைத் தோற்கடித்து டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார். அதன் பிறகு அவர் ஆறுமாத காலம் டெல்லியிலிருந்து ஆண்டார். 1556ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஹுமாயூன் தமது அரண்மனை மாடியிலிருந்த நூல் நிலையத்தில் இருந்து இறங்கி வரும்பொழுது படிகளில் கால் தவறி விழுந்து இறந்தார். வாழ்க்கையில் தடுமாறுவதையே இயல்பாகக் கொண்டிருந்த பேரரசர் மாடிப்படியில் தடுமாறி விழுந்து இறந்தார்,

22. சூர் வமிசம் (1540-1555)

கி.பி. 1540-லிருந்து அதாவது கனோஜியில் ஹுமாயூனை ஷெர்ஷா தோற்கடித்ததிலிருந்து 1555-ல் ஸிகந்தர்ஷா சூரை ஸிர்ஹிந்தில் ஹுமாயூன் தோற்கடித்தவரை அதாவது 15 ஆண்டுக் காலத்திற்கு மொகலாயர் ஆட்சி இந்துஸ்தானத்தில் தடைப்பட்டு நின்றது. அப்போது அங்கு நடந்தது ஆப்கானியர் ஆட்சி. ஷெர்ஷாவும் அவர் சந்ததியார்களும் ஆப்கானியர்களாதலால், இதனை சூர் இடைப் பிறவரல் என்று வரலாற்றில் வழங்குவர்.

சூர் ஆட்சிக்கு வரலாற்று மூலங்கள் அப்பாஸ்கான் என்னும் ஆப்கானியர் இயற்றிய தாரிகி ஷெர்ஷாஹி என்பதும் ஹஸான் அலிகான் என்னும் ஷெர்ஷாவின் நண்பர் இயற்றிய தவாரிகி டௌலடி ஷெர்ஷாஹி என்பதுமாம். அபுல்பஸலின் அக்பர் நாமாவில் ஷெர்ஷாவைப்பற்றி இழித்துக் கூறப்பட்ட வரலாறு காணப்படுகின்றது. ஷெர்ஷாவின் நிதித்துறை நிர்வாகத்தைப் பற்றிய விவரங்கள் அயினி அக்பரியில் காணக்கிடக்கின்றன. தாரிகி பதௌனியில் பதௌனி, அக்பரைத் தாழ்த்திக் கூறுவதற் காகவே ஷெர்ஷாவை உயர்த்திக் கூறுகின்றார் போலும். குல்பதான் பேகமின் ஹுமாயூன் நாமா ஹுமாயூனுக்கும் ஷெர் ஷாவிற்கும் இடையே நடந்த ராணுவ மோதல்களை விளக்கு கின்றது. கனோஜிப் போரைப்பற்றி விவரமாக மிர்ஸா ஹைதர் இயற்றிய தாரிகி ரஷிதி என்னும் நூலில் காணலாம்.

ஹஸன்கான் என்பாருடைய மைந்தரான பரீது (இவரே பிற்காலத்தில் ஷெர்ஷா) 1486-ல் பிறந்தார். அவர் ஆப்கானி யரைச் சேர்ந்த சூர்குடியில் வந்தவர். அவருடைய தந்தை பீஹாரில் உள்ள ஷஹாபாத் மாவட்டத்தில் இருக்கும் ஸஸாராம் என்னுமிடத்தில் குடியேறினர். அவருடைய மாற்றாந்தாயால் பலவகையிலும் துன்புறுத்தப்பட்ட ஃபரீது ஸஸாராமைவிட்டு நீங்கி ஜான்புரிக்குப் போய்விட்டார். அங்கிருந்த கவர்னர்

ஜமால்கானின் ஆதரவில் அவர் அரபிக், பாரசீகம், வரலாறு முதலிய கலைகளைக் கற்றார். அவர் கல்வியிலும், அறிவிலும் எளிதில் சிறந்து விளங்கினார். 1511-ல் அவர் தம் தந்தையாரின் ஜாகீரை மேற்கொண்டு நிர்வகிக்கத் தொடங்கினார். அதன் நிர்வாகத்தைச் சீர்திருத்தித் திருட்டையும் லஞ்சத்தையும் குலைத்துக் கலகக்காரர்களை அடக்கியதோடு சீரியதொரு வருவாய்த் துறையையும் அமைத்தார். இவ்வளவு செய்தும் அவருடைய மாற்றாந்தாயின் தீராப் பகைமை காரணமாக 1519-ல் அவர் ஆக்ரா செல்லவேண்டியதாயிற்று. அவர் தந்தை இறந்த பிறகு ஜாகீர் அவருடையதாயிற்று. ஜாகீரை மேற்பார்க்க 1520-ல் அவர் திரும்பவும் ஸஸாராம் வந்தார். ஆனால், அவர் மாற்றாந் தாய் மக்கள் மறுபடியும் தொல்லை கொடுத்தனர். அக் காலத்தில் டெல்லியை ஆண்ட இப்ராஹிம் லோடியின் கொடுங்கோன்மை தாங்காது பீஹார் கவர்னரான தாரியாகான் தமது சுதந்தரத்தை விளம்பரப்படுத்திக்கொண்டார். அவருடைய மகன் பஹார்கான் லோஹானி என்பவரிடம் ஃபரீது 1522-ல் அலுவல் பார்க்கத் தொடங்கினார். ஒரு முறை பஹார்கானும், ஷேர்கானும் வேட்டையாடச் சென்றிருந்தபொழுது ஃபரீது ஒரு புலியைக் கொன்றதன் நிமித்தம் 'ஷேர்கான்' ('புலிகடிமால்') என்னும் பட்டத்தைப் பெற்றார். 1527-ல் ஷேர்கான் மொகலாயர் அலுவலில் சேர்ந்துகொண்டார். பிறகு பாபரோடு ஒத்துழைத்துத் தமது ஜாகீரைத் திரும்பப் பெற்றார். பிறகு பஹார்கான் லோஹானியின் மைந்தனை ஜலால்கான் லோஹானிக்கு அறிவுரையாளராகப் பாபரால் நியமிக்கப்பட்டு மிக விரைவில் பீஹார் ஆட்சியில் முதன்மை இடம் பெற்றார்.

1530-லிருந்து 1535-க்குள்ளாக ஷேர்கான் பீஹார், வங்காளம், ஜான்புரி ஆகிய இடங்களில் ஆதிக்கம் பெற்றார். 1530-ல் அவர் சூனார்க் கோட்டையைக் கைப்பற்றியதிலிருந்து அவருடைய அரசியல் ஆதிக்க வாழ்க்கை தொடங்கிற்று. 1534-ல் அவர் பீஹாரின் முடிசூடா மன்னராக விளங்கினார். 1536, 1538-ல் வங்காளத்தின்மீது படையெடுத்து அந் நாட்டு மன்னரை வென்று அவர் வங்காளத்துச் சுல்தான் ஆனார். ஷஹாபாத் மாவட்டத்திலுள்ள ரோட்டாஸ் கோட்டையை அவர் வஞ்சித்துக் கைப்பற்றினார். இவ்வொரு செய்தியைக் கொண்டு சிலர் அவரை சிவாஜியோடு ஒப்பிடுவர். ஆயினும், ஷேர்கானை சிவாஜியோடு ஒப்பிடுதற்குத் தக்க காரணங்களின்மை வெளிப்படை. சட்டத்தை மீறுதலையும், வஞ்சனையையும் தமது தொழிலும், பொழுதுபோக்குமாகக் கொண்ட சிவாஜியோடு, மொகலாயப் பேரரசரோடு என்றுமே நேரடியாக வென்று,

தமது வலிமையைக் காட்டாத சிவாஜியோடு, பேரரசர் ஹுமாயூனை இரு முறை போர்க்களத்தில் ஐயத்திற்கிடமின்றிச் செம்மையாக வென்ற ஷேர்கானோடு ஒப்பிடுதல் வரலாற்று நேர்மைக்குப் புறம்பானது. 1537-லிருந்து 1540-க்குள்ளாக ஹுமாயூனுக்கும் ஷேர்கானுக்குமிடையே நிகழ்ந்த பல போர்களை யும் அவற்றின் முடிவாக ஷேர்கான் ஷேர்ஷாவாகி இந்துஸ்தானத் தின் பேரரசராக அமர்ந்த வரலாற்றையும் மேலே கண்டோம். தோற்று ஓடிய ஹுமாயூனை ஆப்கானியப் படைகள் லாகூர்வரை துரத்திச் சென்றனர். 1541-ல் வங்காளத்து நிர்வாகம் சீர்திருத் தப்பெற்றது. அடுத்த ஆண்டில் அவர் மாளவத்தையும் ரந்தம் பூரையும் கைப்பற்றினார். பாட்னா நகரம் அவர் காலத்தில் முக்கியமாயிற்று. 1543-ல் அங்கு ஒரு கோட்டை கட்டப் பெற்றது. பிறகு அவர் மாளவத்தை வெல்ல முற்பட்டபோது இராஜபுத்திரச் சிற்றரசரான புராணமால் என்பவரிடமிருந்து ரைஸின் கோட்டையை வஞ்சித்துக் கைப்பற்றியதோடு அங் கிருந்து வெளிச்செல்ல அனுமதிக்கப்பட்ட இராஜபுத்திர வீரர்களை அவர்கள் பின்வாங்கும்போது கொன்று குவித்தமை 1857-ல் நானாசாஹிப் கான்பூரில் ஆங்கிலேயப் படைகளை ஏமாற்றிக் கொன்றதை நினைவூட்டுகின்றது. பஞ்சாபிலிருந்த கவர்னர் 1543-ல் மூல்தானையும் சிந்துவையும் கைப்பற்றினார். 1544-ல் மால்தேவிடமிருந்து மார்வாரை வஞ்சித்துக் கைப்பற்றிய போது பொய்க்கையெழுத்திட்ட கடிதங்களை அவர் பயன் படுத்தியமை ஔரங்கசீப்பை நினைவூட்டுகின்றது. 1545-ல் பண்டேல்கண்டிலுள்ள கலிஞ்சார்க் கோட்டையைக் கைப் பற்றியதே அவர் இறுதியாக அடைந்த இராணுவ வெற்றி. அவர் தமது அறுபதாவது வயதில் 1545-ல் இறந்தார். அவர் ஆறு ஆண்டுக்காலம்தான் இந்துஸ்தானத்தை ஆண்டார். அதற் குள்ளாக அவர் இந்திய வரலாற்றில் தமக்கென வகுத்துக் கொண்ட இடம் மிகப் பெரியது. அவரது பேரரசு ஏறத்தாழ இந்துஸ்தானம் முழுவதையும் அடக்கிற்று.

ஷேர்ஷா அமைதிக்கால ஆட்சி, நிர்வாகத் துறைகளில் அரிய பயிற்சி பெற்றிருந்தார். அதற்கு அடுத்தபடியாகவே அவர் இராணுவத் துறையில் சிறந்து விளங்கினார். ஒரு நாட்டை வெல்லுதல் என்பது அதை நன்கு நிர்வகிப்பதற்காகத்தான் என்பது அவருடைய கொள்கை. அவர் தமது ஆட்சிப் பரப்பைத் தமது சக்திக்கு மீறியதாக ஆக்கிக் கொள்ளவில்லை. அவர் தக்காணத்தின்மீது படையெடுக்க விரும்பவில்லை. இந்த வகை யில் அவர் அக்பரை ஒவ்வாமலும், தக்காணத்தைக் கொள்ளை யடிப்பதற்காகமட்டும் தாக்கிய அலாவுதீன் கில்ஜியை ஒத்து

மிருந்தார். பேரரசு நிர்வாகத்தில் அதன் அதிகாரத்தை நிர்ண யித்தார். அக்பரினும் அவர் சிறந்தவர் என்பதற்கு இது முதற் காரணம். ஷெர்ஷா அலாவுதீன் கில்ஜி முதலிய டெல்லி சுல்தான் களின் நிர்வாக அடிப்படையில்தான் தமது ஆட்சி மேற்கோப்பு களைக் கட்டினார் எனில் அவர் இட்ட அடிப்படையின்றேல் அக்பரும் அத் துறையில் அதிகமாக வெற்றி கண்டிருக்கமுடியாது என்பது உறுதி. ஓர் மைய ஆட்சி அதிகாரத்தை நிறுவி அதை எதிர்த்துக் கலகமிடக்கூடிய சக்தியை வேரறுக்கும் முறையில் நிர்வாகத் துறையை அமைக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். அவ் விருப்பத்தில் பெருமளவு வெற்றியும் கண்டார். பொதுவாக ஆப்கானியர்களே மேலதிகாரத்திற்கு அடங்காதவர்கள். அலாவு தீன் கில்ஜி காலத்திற்குப் பிறகு படைமானியத் திட்டம் போன்ற தொரு இராணுவ சிவில் நிர்வாக பிரபுத்துவ அமைப்பு இந்துஸ்தான் ஆட்சியில் சிறிது சிறிதாக வளர்ந்துவிட்டது. இத் தகைய திட்டத்தின் விளைவாக மைய ஆட்சியின் பலம் குறையும். அதைத் தகர்க்க விரும்புவோரின் பலம் மிகும். படைமானியத் திட்டத்தைப்பற்றிச் சிறிதேனும் அறிந்தவர்கள் இவ் வுண்மையை அறிவார்கள். ஆதலால், இந்துஸ்தானத்தின் ஆட்சியைப்பற்றி அக்கறைகொண்ட மன்னர்கள் இம் முறையைப் புகுத்தமாட்டார் கள் என்பது விளங்கும். அலாவுதீன் கில்ஜி, ஷெர்ஷா ஆகியோரின் ஆட்சியின் பெருமையும், மொகலாயப் பேரரசின் அடிப்படைப் பலவீனத்தின் காரணமும் இதனால் விளங்கும். மொகலாயர் ஆட்சியில் மன்சப்தாரி என்னும் படைமானியம் போன்றதொரு திட்டத்தைச் செயற்படுத்தியவர் அக்பர். ஆதலால், பேரரசின் வீழ்ச்சிக்கு அவர் முதன்மைக் காரணர் என்பது விளங்கும். ஷெர்ஷா இந்த முறையை அறவே மறுத்தார்.

அவர், ஆட்சி நிர்வாகத்தை ஏறத்தாழ நேரடியாகவே நடத் தினார். ஸஸாராம் ஜாகீரை அவர் எவ்வளவு அக்கறையோடு மேற்பார்த்தாரோ அவ்வளவு அக்கறையோடு இந்துஸ்தானத்தின் ஆட்சியையும் மேற்கொண்டார். அவர் ஆட்சி முற்போக்கானது. பெருவாரி மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்துடனேயே அமைக்கப்பட்டது. பீஹார், வங்காளம் போன்ற கிழக்கு மாகாணங்களில் அவரால் சிவில் கவர்னர்களும் பஞ்சாப், ராஜ புதனம், மாளவம் போன்ற மாகாணங்களில் இராணுவ கவர்னர் களும் நியமிக்கப்பட்டனர். மத்திய ஆட்சி மாகாணம், மாவட்ட ஆட்சிகளை அடக்கி ஆதிக்கம் செலுத்தியது. மாவட்டத்தைச் சர்க்கார் என்றனர். சர்க்காரின் இராணுவத் தலைவர் சிக்கதார் என்றும், சிவில் தலைவர் மூன்சிப் என்றும் அழைக்கப்பட்டனர்.

அவர்களுடைய அலுவல்கள் அமைதியை நாட்டுவதும் காவல் தொழிலை மேற்கொள்ளுவதும் ஆகும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் காவலாளர்களைத் தண்டிக்கும் பழக்கம் வலுப்படுத்தப்பட்டது. இதனால் காவல் நிர்வாகம் எளிமையும் திறமையும் கொண்டிருந்தது. ஷெர்ஷா குற்றவாளிகளுக்கு அளித்த தண்டனைகள் அஞ்சத்தக்கவை. அவற்றிற்கு அஞ்சி அவர் காலத்தில் குற்றவாளிகளே இல்லாமல் போயினர் என்பது ஒரு கருத்து. அப்பாஸ்கான் எழுதுகிறார் : 'ஒரு கூடை நிறையப் பொன் அணிகளைத் தலையில் சுமந்துகொண்டு ஒரு வயோதிக மாது கள்ளர் பயமின்றி எங்கும் போகலாம், ஷெர்ஷா ஆட்சியில்'. சர்க்காருக்கு அடுத்தபடியாக பர்கானு ஆட்சிப் பகுதியாகும். சிக்கதாரும் முன்சீப்பும் அதன் நிர்வாகத்தை மேற்கொண்டனர்.

ஷெர்ஷா அமைத்த வருவாய்த்துறை முறை மிகவும் சிறப்பானது. ஒவ்வொரு குடியானவனின் நிலத்தையும் அளந்து அவன் தரவேண்டிய நிலவரி நிர்ணயிக்கப்பட்டது. எதிர்பார்த்த மகசூலில் $\frac{1}{4}$ பகுதி வரியாகத் தீர்மானிக்கப்பட்டது. சில பகுதிகளில் $\frac{1}{3}$ ம் வசூலிக்கப்பட்டது. வரி காசாகவோ பொருளாகவோ கொடுக்கப் படலாம். அரசு வரியைக் காசாகப் பெறவே விரும்பிற்று. ஷெர்ஷா குடியானவனின் நண்பர். அவர் கூறினர் : 'வரியை நிர்ணயிக்கும்பொழுது கருணை காட்டுங்கள். வரியை வசூலிக்கும் பொழுது கண்டிப்பாக இருங்கள்.' பஞ்ச காலத்தில் அரசு குடியானவர்களுக்குக் கடன் கொடுத்தது. அன்றியும், சர்க்கார் அதிகாரிகளுக்கு ஜாகீர் அளித்துச் சம்பளம் கொடுக்கும் முறை ஷெர்ஷாவால் நீக்கப்பட்டது. இம் முறையை அலாவுதீன் கில்ஜியும் தவிர்த்திருக்கிறார். மன்னனுக்கும் உழுவோருக்கும் மத்தியிலிருந்த 'இடையர்களை' அவர் விரும்பவில்லை. கோனுங்கோ என்னும் ஆசிரியர், 'ஷெர்ஷா இன்னும் பத்து அல்லது இருபது ஆண்டுக் காலம் ஆண்டிருப்பாராயின் ஜமீந்தாரென்னும் குலம் அவர் காலத்திலேயே அழிந்து போயிருக்கும். குடியானவனோடு நேரடியான தொடர்புகொண்டு வரி நிர்ணயித்தல், வரி வசூல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் திட்டத்திற்கு ஆங்கில அரசுக் காலத்தில் ரயத்வாரித் திட்டம் என்பது பெயராயிற்று. ஷெர்ஷா தொடங்கிய திட்டம் ஏறத்தாழ இது போன்றதே. ஷெர்ஷாவிடத்தில் வருவாய்த் துறைப்பயிற்சி பெற்ற தோடர்மால் அக்பர் ஆட்சியில் ஷெர்ஷாவின் திட்டத்தைச் செயற்படுத்தி அக்பருக்குப் புகழ்தேடிக் கொடுத்தார்.

படையமைப்பில் ஷெர்ஷா, மன்சப்தாரி முறையை நிராகரித்தார். ஷெர்ஷாவின் இராணுவச் சீர்திருத்தத்தை அக்பர் ஏற்றுக்

கொள்ளத் தவறியமையின் விளைவு ஜஹாங்கிரை மகபத்கான் தோற்கடித்துச் சிறைபிடித்தபோது விளக்கமாயிற்று. ஷெர்ஷா நில வருவாய்த் துறையில் உழவர்களோடு நேரடித் தொடர்பு கொண்டதுபோல ராணுவத் துறையில் எளிய காலாட்களோடும் குதிரை வீரர்களோடும் நேரடித் தொடர்பு கொண்டார். அவர்களைத் தாமே தேர்ந்தெடுத்தார். அவர்களுக்குத் தாமே சம்பளம் கொடுத்தார். மேலதிகாரிகளுக்கிடையே புகுந்து காலாள்களின் சம்பளத்தில் கைவைக்கும் பழக்கத்தை வேரறுத்தார். அவர் நீதி, நிர்வாகம் செய்வதில் தன் நிகர் இல்லாமல் புகழ்பெற்றார். அவர் இந்துக்களைப் பகைக்கவில்லை. உதாரணமாக, பிரம்மஜித்கௌர் என்பவரைத் தம் படைத்தலைவர்களில் ஒருவராக அமர்த்திக்கொண்டார்.

ஷெர்ஷா வாணிகத்தை வளர்த்தார். விற்பனை வரியைத் தவிர மற்ற வரிகளை நீக்கினார். கள்ளர் பயமின்மையால் வாணிகம் நன்கு நடைபெற்றது. பல பெருவழிகள் வங்காளத்தையும், பஞ்சாபையும் ஆக்ராவையும் மாண்டுவையும், மார்வாரையும் சித்தூரையும், லாகூரையும் மூல்தானையும் இணைத்தன. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனித்தனி இடவசதி செய்து கொடுத்த சாவடிகள் 1,700 இருந்தன. அவற்றைச் சராயிகளென்று கூறினர். ஷெர்ஷா நாட்டு நடப்புகளை ஒற்றர்மூலம் அறிந்தார். அவர் பல ஆண்டுக்காலம் ஆட்சி புரியவில்லையாகையால் பல புதுக் கட்டடங்களோ, நகரங்களோ அவரால் நிர்மாணிக்கப்படவில்லை. கட்டட நிபுணரான அலிவல்கான் ஸஸாராமில் அவருடைய மசூதியைக் கட்டினார். அது இஸ்லாமியர் கட்டடக் கலையின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது என்பர்.

அவர் இயற்றிய செலாவணிக்காசு வெள்ளி ரூபாயும், செப்புக்காசுமாகும். வெள்ளிக் காசில் செங்கோல் மன்னர், வெல்வோர் தந்தை யென்று அராபியில் குறிக்கப்பட்டுள்ளது. அவராட்சியில் 23 தங்கசாலைகள் இருந்தன. அவரை இந்திய ரூபாயின் தந்தை என்பர்.

ஷெர்ஷா நியாய புத்தியுடையவர். அவர் சொந்த வாழ்க்கையில் நற்பழக்கங்களையே மேற்கொண்டவர். ஆயினும், அவர் நீதியைப்பற்றிக் கொண்டிருந்த கருத்துகள் ஹமூராபியையும் மனுச்சோழனையும் நினைவூட்டுவனவாக இருந்தன. அவர் இந்துக்களையும் முஸ்லிம்களையும் வேறுபடுத்தி நடத்தவில்லை. மத சம்பந்தப்பட்டவரையில் அவர் அலாவுதீன் கில்ஜியையே முன்

ளுேடியாகக் கொண்டார். கலப்பு மணம் முதலியவற்ருல் இந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டுவிடும் என்னும் போலி நம்பிக்கை அவருக்கில்லே. அன்றியும் ஜிஸியா முதலிய வரிகளை நீக்குவதால் இந்துக்களுடைய ஒற்றுமையும் ஆதரவும் கண்டிப்பாகக் கிடைக்கும் என்னும் எண்ணமும் அவருக்கில்லே.

ஷெர்ஷாவிற்கு அடில்கான், ஜலால்கான் (இஸ்லாம்ஷா) என்று இரு மக்கள் இருந்தனர். அவருடைய சகோதரரான நைஸாம் கானுக்கு முபாரிஸ் அல்லது முகம்மது அடில்ஷா என்னுமொரு மகனும் மூன்று பெண் மக்களு மிருந்தனர். அவர் தந்தையோடு உடன் பிறந்தார்களில் ஒவ்வொருவருக்கும் இப்ரஹிம்ஷா, சிக்கந்தர்ஷா என ஒரு மைந்தன் இருந்தான்; நைஸாம்கானின் மூன்று பெண்மக்களும் இஸ்லாம் ஷா, இப்ரஹிம் ஷா, சிக்கந்தர் ஷா என்பாரை முறையே மணந்துகொண்டனர். ஷெர்ஷாவிற்குப் பிறகு அவருடைய இரண்டாம் மகன் இஸ்லாம் ஷா மன்னரானுர் (1545-1554). இஸ்லாம் ஷாவின் ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாக அமைந்து இப்ரஹிம் லோடியை நினேவூட்டியது. இஸ்லாம் ஷா 1554-ல் இறந்தார். அவரை யடுத்து அவர் மைந்தர் பிரோஸ்கான் அரசு கட்டிலேறியும் அவருடைய தாய் மாமனை முகம்மது அடில்ஷாவால் கொல்லப்பட்டார். முகம்மது அடில்ஷா இரண்டு ஆண்டுக் காலமே ஆண்டார். அவர் சூனரில் சிற்றின்ப வாழ்க்கை வாழ்ந்துவந்தார். அவருடைய அலுவலாளர்களில் ஒருவரான ஹேமு என்பவர் இந்து ஆட்சி நிர்வாகத்தை மேற்பார்த்து வந்தார். இந் நிலேயில் இப்ரஹிம் ஷா டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார் (1555). அவரை நீக்கி ஆட்சியைக் கைப்பற்றிய சிக்கந்தர் ஷா ஹுமாயூனுல் சிர்ஹிந்தில் தோற்கடிக்கப்பட்டார். அதே ஆண்டில் ஹுமாயூன் டெல்லியைக் கைப்பற்றி மறுபடியும் இந்துஸ்தானத்தின் பேரரசரானுர்.

23. அக்பர் (1556-1605)

அக்பரது முழுப் பெயர் ஜலாலுதீன் முகம்மது அக்பர். அவர் இளமைப் பருவத்தைக் காந்தஹாரிலும் காபூலிலும் செலவழித்தார். அவருக்குப் பல செவிலித் தாயார்களிருந்தனர். அவர்களில் ஜிஜிஅனகா என்பவள் அக்பரின் நன்றியறிதலுக்குப் பாத்திரமானவள். அக்பர் அந் நன்றியறிதலைத் தாம் இந்துஸ்தானத்தின் சுல்தானான பிறகு அனகாவின் தீக்குணம் படைத்த மகனைக் கொன்று தீர்த்ததின்மூலம் வெளிப்படுத்திக்கொண்டார். அவர் மன்னராய்த் தம் விருப்பப்படி ஆட்சிபுரியத் தொடங்குமுன் இச் செவிலியரால் அவருக்கு மிகுந்த தொல்லைகள் ஏற்பட்டன. இளவயதில் அவருக்கு அரிச்சுவடியும் கீழ்வாய்பாடும் சொல்லிக் கொடுக்கப் பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அக்பருக்கு இயல்பாகவே கல்வியின் மேலிருந்த வெறுப்பை அவ்வாசிரியர்களால் வெல்ல முடியவில்லை. பாடம் படிப்பதைவிடப் புறாப் பறக்க விடுதல் மிகவும் நல்லதென்பது அவருடைய கொள்கை. இவ் வரிய கொள்கையை அவர் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார். அவர் கற்றில ராயினும் கேட்க விரும்பினார். அக்பர் ஹிண்டாலின் மகளை மணந்துகொண்டார். 1555-ல் ஹுமாயூன் சிர்ஹிந்தில் வெற்றி கண்ட பிறகு அவரது 13வது வயதில் அக்பர் பஞ்சாபில் கவர்னராக நியமிக்கப்பட்டார். பைராம்கான் அவரது மேற்பார்வையாளராக அமர்ந்தார். 1556-ல் ஹுமாயூன் இறந்த பிறகு அக்பர் கலனோர் என்னுமிடத்தில் (அமிர்தசரஸ் அருகிலுள்ளது) முடிசூட்டப்பெற்றார்.

ஹுமாயூன் இறந்தபோது இந்துஸ்தானத்தில் குழப்பமே மிகுந்திருந்தது. இந்துஸ்தானத்தில் சிந்து, மூல்தான், காஷ்மீர், இராஜபுதனம், குஜராத், மாளவம், வங்காளம் என்பவை சுதந்தர ஆட்சிகளாயிருந்தன. கோண்டுவானா, ஒரிஸ்ஸா, கான்தேசம், தக்காணத்து ஐந்து சுல்தானியங்கள், மேலைக்கரையில் போர்த்துகீசியர், மற்றும் தென்னிந்தியாவில் விசயநகரம் இவை

பிற சுதந்தர நாடுகள். இராஜபுத்திரர்கள் வீர சுதந்தரமடைந்தனர். சிக்கந்தர்ஷா தோற்ற பிறகு தமது திறமைக்குத் தகுந்த அலுவல் கிடைக்காமல் திரிந்துவந்த ஹேமு ஹுமாயூன் இறந்ததும் டெல்லியைக் கைப்பற்றிக் கொண்டான். அக்பரின்

மாற்றுந்தம்பி முகம்மது ஹக்கீம் காபூலைச் சுதந்தரமாக ஆண்டான். 1556-ல் சிறுவரான அக்பர் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. பைராம்கானும் மொகலாயப் படையுமே அவருக்குச் சற்று ஊக்கமளிக்கும் நிலையிலிருந்தன.

சிரஹிந்தில் தோற்ற சிக்கந்தர்ஷா நம்பிக்கை யிழந்துவிடவில்லை. அவர் பஞ்சாபைச் சுற்றிச் சுற்றி வந்தார். இது பைராம் கானுக்குச் சற்று அச்சத்தைக் கொடுத்தது. 22 போர்க்கள வெற்றிகளைக் கண்டதாகக் கூறப்பட்ட ஹேமு ஆக்ராவையும், டெல்லியையும் கைப்பற்றி விக்ரமாதித்தர் என்னும் பட்டத்தைப் புனைந்துகொண்டு தம் பெயரால் செலாவணிக் காசுகளை வழங்கலானார். அப்பொழுது டெல்லிப் பிரதேசம் ஒரு கொடிய பஞ்சத்தில் வாடிற்று. இந் நிலையில் பைராம்கான் ஹேமுவோடு சண்டை இட்டுப் பார்த்துவிடுவது என்று தீர்மானித்துப் பானிபட் போர்க்களத்தை நோக்கி விரைந்தார். 1556-ல் இரண்டாம் முறையாக மொகலாயருக்கும் டெல்லியில் ஆண்ட அரசர்க்கும் பானிபட்டில் போர் நிகழ்ந்தது. போரில் ஹேமு தோற்றார். அவர் கண்ணில் அம்புபட்டுக் கீழே மயக்கமுற்று வீழ்ந்தமையால் அவர்தம் படைகள் ஊக்கமிழந்து சிதறி ஓடின. பைராம்கான் ஹேமுவை அக்பர் முன்னிலையில் கொணர்ந்து நிறுத்தித் தோற்றுப்போய்ச் சிறை பிடிக்கப்பட்ட எதிரியை பைராம்கான் உத்தரவுப்படி அக்பர் தம் கையால் கொன்றார். அக்பர் அதைச் செய்யவில்லை. பைராம்கானே அதனைச் செய்து முடித்தார் என்பது பிற்காலத்தில் எழுந்த கட்டுக்கதை. இவ் வெற்றிக்குப் பிறகு அக்பருடைய நிலைமை சற்றுத் திருந்திற்று. மறுபடியும் இந்துஸ்தானத்தை ஆளலாம் என்று சூர்வமிசத்தினர் கண்ட கனவு வீணாயிற்று. சிக்கந்தர்ஷா 1557-ல் அக்பருக்குக் கீழ்ப்படிந்தார். அடில்ஷா அவ் வாண்டிலேயே இறந்துபோனார். இப்ரஹிம்ஷா 1567-ல் ஒரிஸ்ஸாவில் இறந்தார். இவ்வாறாக சூர் வமிசம் முடிவுற்றது. 1558-ல் அக்பர் ஆக்ராவை யடைந்தார். குவாலியரும் ஜான்புரியும் 1559-ல் கைப்பற்றப்பட்டன. 1560-ல் அக்பருக்கும் பைராம்கானுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் மிகலாயின. பைராம்கானை ஒழிக்கவேண்டுமென்று அக்பரின் செவிலியான அனகா திட்டமிட்டிருந்தாள். பலருடைய சூழ்ச்சிகளுக்கு உட்பட்டிருந்த அக்பர் பைராம்கானை இந்தியாவைவிட்டு மெக்காவிற்குப் போய்விடும்படி அறிவுரை கூறினார். அவ் வறிவுரையை ஏற்றுக்கொண்ட பைராம்கான் பிறகு தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். ஆயினும், அவருடைய பகைவர்கள் அவரைப் பிடித்துக் கொணர்ந்து அக்பர் எதிரில் நிறுத்தினர். ஆனால், அக்பர் அவரை மன்னித்துவிட்டார். அப்பொழுது அவர் உண்மையாகவே மெக்காவிற்குச் செல்லும் எண்ணத்தை மேற்கொண்டார். ஆனால், 1561-ல் அன்ஹில்வாரில் அவர் ஒரு ஆப்கானியனால் கொல்லப்பட்டார். பைராம்கான் இல்லையேல் ஹுமாயூன் சிர்ஹிந்த் போரையும், அக்பர் இரண்டாம் பானிபட் போரையும் வென்றிருக்க முடியாது என்பது உண்மை. பைராம்

கான் மைந்தனை அப்துர் ரஹீம் என்னும் சிறுவன் மொகலாயர் அவைக்குக் கொணரப்பட்டு அக்பருடைய ஆதரவில் வளரலானான். அவன் பிற்காலத்தில் அக்பருடைய மொகலாயப் படைக்கு ஒரு சிறந்த தூணாக விளங்கினான்.

கி.பி. 1560-64 வரை அதாவது அக்பருடைய 18வது வயதிலிருந்து 22வது வயதுவரை அவரது அரண்மனையில் செவிலித் தாயரின் செல்வாக்கு அளவிறந்தது. மாகம் அனகா அச் செவிலித்தாயரில் முக்கியமானவள். அக்பருக்கு எப்போதுமே அவள் சொல்லைத் தட்ட மனம் வருவதில்லை. அவளும் அந்த நிலையைத் தன் மகனான ஆதம்கானின் நன்மைக்காக முற்றிலும் பயன்படுத்திக்கொண்டாள். ஆதம்கானும், பீர்முகம்மதும் மாளவத்தின் மீது படையெடுத்து அங்குக் கவர்னராயிருந்த பாஸ் பகதூர் என்பவனை 1561-ல் தோற்கடித்தனர். இந்தப் போரில் வென்றவர்கள் மிகுந்த கொடுஞ்செயல்களைப் புரிந்தனர். போரில் கிடைத்த கொள்ளையில் பெரும்பகுதியை ஆதம்கான் அபகரித்துக் கொண்டான். அவனைத் தண்டிக்கச் சென்ற அக்பர் செவிலித் தாயின் விண்ணப்பத்திற்கு இணங்க அவனை மன்னித்து விடுத்தார். அதே ஆண்டில் ஜான்புரியில் உருவெடுத்த ஒரு கலகத்தை அடக்க வேண்டியதாயிற்று. மாளவத்திலிருந்து ஓடிப்போன பாஸ் பகதூரைத் துரத்திச் சென்ற பீர் முகம்மது அங்கும் பல கொடும் செயல்களைப் புரிந்தாராயினும், அங்கிருந்து தோற்று ஓட வேண்டியதாயிற்று. ஓடியவர் நர்மதையில் விழுந்து உயிர் இழந்தார். தற்காலிகமாகத் தமது அரசைத் திரும்பப் பெற்றுக் கொண்ட பாஸ் பகதூர் முடிவில் மொகலாயர் நிர்வாகத்தில் அலுவலாளராகச் சேர்ந்து மன்சப்தார் (1000)* நிலையை எய்தினார். அடங்காத ஆதம்கான் ஆக்ராவிற்குத் திரும்பினார். பேரரசரின் வெகுளிக்கும் அஞ்சாத ஆதம்கான் சம்சுதீன் என்னும் நீதிபதியை அரண்மனையிலேயே அவர் நீதி விசாரணை செய்துகொண்டிருந்தபோதே கொலை செய்துவிட்ட குற்றத்திற்காக அக்பரால் கொல்விக்கப்பட்டார். அத் தீயவனின் தாயான அனகாவும் அவ்வாண்டே மரித்தாள். அவள் இறந்த பிறகு செவிலித் தாயரின் செல்வாக்குக் குறைந்தது.

கி. பி. 1562-லிருந்தே அக்பர் இந்துக்களுக்குச் சாதகமான பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவர் ஜெய்பூர் இளவரசியை மணந்துகொண்டதன்மூலம் இந்து முஸ்லிம் மண

* இவ்வாறு எழுதுங்கால் 1,000 என்பது மன்சப்தார் வைத்திருக்க வேண்டிய குதிரைப் படையின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

உறவுகளை வலுப்படுத்தியதோடு அவற்றிற்குத் தாமே வழிகாட்டியாக அமைந்தார். இவ் விளவரசியே சலீம் என்னும் பெறலரும் மைந்தனை ஈன்றெடுத்தாள். ஜெய்பூர் இராஜபுத்திரக் குடும்பத்தைச் சேர்ந்த மான்சிங் அக்பர் ஆட்சிக்கு ஒரு தூண்போல் அமையலானார். அக்பர் இதனை யடுத்து ஜோத்பூர் கோட்டையைக் கைப்பற்றினார். போர்க் கைதிகளை அடிமைகளாகப் பிடித்துவரும் பழக்கத்தை நிறுத்தினார். அக் காலத்தில் மிகப்பெரும் இசைப் புலவராக விலங்கிய தான்சேன் என்பாரைப் பேரரசர் ஆதரித்தார். 1563-ல் யாத்திரிகர் வரி நீக்கப்பட்டது. அதனால் கஜானாவிற்குச் சிறிது நஷ்டம் ஏற்பட்டபோதிலும் அதை அவர் பொருட்படுத்தவில்லை. 1564-ல் முஸ்லிம் அல்லாதார்மீது விதிக்கப்பட்ட ஜிஸியா என்னும் தலைவரி நீக்கப்பட்டது. இதை இந்துக்களுக்குச் சாதகமாக அவர் செய்த முக்கிய சீர்திருத்தமாகப் பலர் கருதுவர். ஆனால், சிலர் அதனை முஸ்லிம்களுக்குப் பாதகமாக அவர் செய்த பல காரியங்களில் முதலாவதாகும் என்பர். தம் விருப்பப்படி துணிந்து எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் பெரிய அரசியல் முடிவுகளையும் எடுக்கும் தன்மை அக்பரிடம் 22 வயதிலேயே அமைந்து கிடந்தமை போற்றுதற்குரியது. முடிவின் தன்மை எதுவே ஆயினும், அம் முடிவைத் தாமே எடுத்து நிறைவேற்றும் துணிவும் ஆற்றலும் ஆட்சியை நடத்தும் பொறுப்புடையவர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பதற்கு அக்பர் ஒரு சீரிய எடுத்துக்காட்டு. அபுல் ஃபசல், தோடர்மால், மான்சிங், அப்துர் ரஹீம், பகவன்தாஸ், பீர்பால் என எத்துணையோ அறிவுரையாளர்களும், ஆலோசகர்களும், அலுவலாளர்களும் பிற்காலத்தில் அவருக்கு ஏற்பட்டபோதும் பெரும்பான்மை முக்கியமான முடிவுகளை அவரே எடுத்தாரென்பது நினைவுகூர வேண்டும்.

1564-லிருந்து ஏறத்தாழ அவராட்சி முடிகின்றவரையில் (1601) மொகலாயப் பேரரசை விரிவுபடுத்துவதிலும், அதன் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவதிலும் அவர் காலம் கழிந்தது. அவராட்சிக் காலத்தில் தம்மை எதிர்த்தவர்களை ஒறுப்பது, அடங்காதாரை அடக்குவது, பேரரசின் பகுதியாயிருந்து அதனின்றும் விலகிச் சுதந்தரமடைய முற்பட்டவர்களை அகப்படுத்துவது, தமக்கு யாதொரு தீங்கும் செய்யாத அண்டை அயல் நாடுகள்மீது படையெடுத்தல், இராணுவத் துறையை நன்கு அமைத்தல், வருவாய்த் துறையை விரிவாய்ச் சீர்திருத்தல், பேரரசைப் பல மாகாணங்களாகப் பிரித்து நிர்வாகத் துறையை பலவாறாகச் செய்தல் ஆகிய எண்ணிறந்த அரசியல், ராணுவ, நிர்வாக அலுவல்களுக்கிடையே புலவர்களைப் போற்றுதலும், நகரங்களை நிர்மாணித்தலும், கட்டடங்களைக் கட்டுதலும்,

கலைகளைப் பயிலுதலும், சமய ஆராய்ச்சிகளை உயர்ந்த நிலையில் செய்தலும், புதியதொரு மதத்தை நிறுவுகின்ற அளவிற்கு ஆத்ம விசாரணையில் ஈடுபடுதலும் ஆகிய இன்னோரன்ன அளவிறந்த செயற்பாடுகளில் அப் பேரரசர் ஈடுபட்டுப் பெருமளவு வெற்றி கண்டமையால் இந்தியாவை ஆண்ட அரசர்கள் யாவருள்ளும் (ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் நீங்கலாக) தலைசிறந்தவர் என்பது வெள்ளிடை மலையாகும். இவ்வளவு சாதனைகளுக்கும் அடிப் படையாக நின்றது பேரரசு. ஆகவே, அப் பேரரசை அமைப்பதில்-விரிவாக்குவதில் - எவ் வகைகளைக் கைக்கொண்டேனும் பகைவர்களை அழித்து ஒழிப்பது முதலிய செயற்பாடுகளை முதற்கண் மேற்கொண்டார்.

அக்பருடைய பெருமைகளைமட்டும் எண்ணி அவர் ஈடுபட்ட சிறுமைகளை மறக்கவோ, மறுக்கவோ, அதுவும் இயலாமல்போனால் மறைக்கவோ பலர் முற்படுவர். இவையெல்லாம் வரலாற்றாளர் களுக்கு உடன்பாடாகா. அவர் சிறு வயதில் மன்னிக்க முடியாத பல குற்றங்களைச் செய்தவர். அவரது நற்பெயரைக் காப்பாற்று வதற்காகப் பொறுப்பினை அக் காலத்தின்மீது போடுவதும் பிற அரசர், அரசியர் உதாரணங்களை எடுத்துக் காட்டுவதும் ஈண்டைக்குப் பயன்படா. 1563-ல் யாத்திரிகர் வரியை நீக்கிப் புனிதமான சீர்திருத்தம் ஒன்றைச் செய்து அதற்கு அடுத்த ஆண்டில் (அப்பொழுது அவருக்கு வயது 22) ஒரு ஷேக்கை வற் புறுத்தி அவர் மனைவியை அவரிடமிருந்து பிரித்துப் பேரரசர் மணந்துகொண்டார். இதையடுத்து அவர் விரும்பிய மகளிரை யெல்லாம் அந்தப்புரத்தில் அடைக்கும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. இது காரணமாக அவரைக் கொல்லுதற்கு நடத்தப்பட்ட சூழ்ச்சிகள் தோற்றன. அன்றியும், அரசர்க்கு அஃது ஒரு படிப்பினை யாயிற்று. அவர் தமது வாழ்நாளின் பிற்பகுதியில் அருவருக்கத் தக்க இச் செயல்களில் ஈடுபடுவதைக் குறைத்துக்கொண்டார்.

கி. பி. 1564-ல் சாண்டேல அரசியான துர்காவதி என்பாளி டமிருந்து கோண்டுவானாப் பிரதேசம் வென்று கொள்ளப்பட்டது. அவ் வரசி மானத்தைக் காத்துக்கொள்வதற்காகத் தற்கொலை செய்துகொண்டாள். கோண்டுவானாவை வென்றவர் அஸாஃப் கான் என்னும் இராணுவத் தலைவர். துர்காவதியின் மைந்தனான வீரநாராயணன் என்பான் நாட்டைக் காத்துப்போரிட்டு மடிந் தான். இவ் வெற்றியைத் தொடர்ந்து மாளவத்திலும் ஜான்புரி யிலும் இருந்த உஸ்பெக் கவர்னர்களான அப்துல்லாகான், கான்ஸமான் என்பார் அடக்கப்பட்டனர். 1566-ல் அக்பருடைய

மாற்றாந்தாய் மைந்தனான மகம்மது ஹக்கிம் பஞ்சாப்மீது படையெடுக்கத் தொடங்கிவிட்டு அக்பர் நினைவு வந்தவுடன் காபூலுக்குத் திரும்பினான்.

இந்துஸ்தானத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள மாளவம், கோண்டுவானா முதலிய பிரதேசங்களைத் தம் வயப்படுத்திக் கொண்ட பிறகு (இது பிற்காலத்தில் தக்காணத்தைத் தாக்குதற்கு முன்னோடியாய் அமைந்தது) இராஜபுதனத்தின்மீது தமது பார்வையைத் திருப்பினார். 1567-ல் உதயசிங் ஆண்டு வந்த மேவாரை அவர் தாக்கியதற்கு நாடு பிடிக்கும் பேராசை ஒன்றே காரணம். உதயசிங் உதயபுரி என்னும் அழகிய நகரத்தை நிர்மாணித்தவர். அவர் ராணாசங்காவின் மகன். தந்தையைப் போல் வீணுக்குச் சண்டையிட்டு மடிவதைவிட மொகலாயப் படை வருமுன் ஓடிவிடுவது நல்லது என்று உதயசிங் மேவாரை விட்டு நீங்கினார். 1568-ல் சித்தூர்க்கோட்டை கைப்பற்றப் பட்டது. சித்தூர்ப்போர் கடுமையாக நடந்தது. ஜெயமல், பட்டாசிங் என்னும் இரு வீரர் சித்தூரைப் பிடிவாதமாகத் தற்காத்தனர். அவர்களுடைய வீரத்தால் சித்தூரின் வீழ்ச்சி தடைப்பட்டது. இதனால் கடும்சினம் கொண்ட பேரரசர் சித்தூரிலிருந்த மக்கள் யாவரையும் கொன்றுவிடும்படி பயங்கர உத்தரவிட்டார். ஆயினும், அவ் விரு வீரர்களுக்கும் ஆக்ராவில் சிலை எழுப்பினார். 1569-ல் ரந்தம்பூரும், கலிஞ்சாரும் கைப் பற்றப்பட்டன. உதயசிங் 1572-ல் இறந்தார். அவர் மகனார் பிரதாப்சிங் மொகலாயரிடம் கடும்பகை பூண்டிருந்தார். ஆங்காங்குச் சிற்சில இராஜபுத்திரர்களுடைய அரிய முயற்சிகள் நாளடைவில் பயனற்றுப் போயின. இராஜபுதனம் முழுவதும் அக்பர் ஆட்சிக்கு அடங்கவேண்டும் அல்லது பேரரசரிடம் நட்புப் பூண வேண்டுமென்னும் நிலை தோன்றிற்று.

1569-ல் சிக்ரி என்னுமிடத்தில் புதியதொரு தலைநகரத்தை ஆக்கிக்கொண்டார். 1573-ல் குஜராத்தை அவர் கைப்பற்றிய பிறகு அந் நகரத்திற்கு ஃபடேபூர் (வெற்றித் திருநகர் அல்லது விசய நகரம்) என்று பெயரிடப்பட்டது. அப்பொழுது மொகலாயப் பேரரசின் தலைநகரான ஃபடேபூர் சிக்ரி 1855 வரை அந் நிலையில் இருந்தது.

இவற்றிற்கிடையே அவர் மத சம்பந்தமான தீர்வுகள் காண்பதிலும் மொகலாய அரச வம்சத்தின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திப்பதிலும் பொழுது போக்கினார். இருவேறு சமயத்தைச் சேர்ந்த அடியார் கூட்டங்களில் தம்முட் கருத்து வேறுபட்டுக்

கலகம் விளைவிப்பாராயினும் அவர்களைச் சமாதானப்படுத்துவதற்கு ஒரேவழி அவ் விரு குழுவினரும் சண்டையிட்டு முடிவு காண்பதுதான் என்று நினைத்த அக்பர் அவர்களைச் சண்டையிடச் செய்து அக் கொடுமையைக் கண்டு களித்தார். 1569-ல் அவருக்கு 27 வயதே ஆகியிருந்தது. ஆனால், அதுகாறும் அவருக்கு மகப்பேறு இன்மையால் வருத்தம் உண்டாயிற்று. ஆதலால், சிக்ரியிலிருந்த ஷேக் சலீம் என்பாருடைய அறிவுரைக்கு இணங்க ஆண்டவனை வேண்டிப் பலகாலும் தொழுததன் பலனாக 1569-ல் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு அப் பெரியாரின் நினைவாக சலீம் என்றே பெயரிடப்பட்டது. அவனே பிற்காலத்தில் ஜஹாங்கீராக இந்துஸ்தானத்தை ஆண்டான். 1570-ல் முரதும் 1572-ல் தானியலும் பிறந்தனர். குஜராத்தில் அரசியல் நிலைமை சற்றுக் குழப்பமாயிருந்தது. அங்கு அப்பொழுது மூன்றும் முஸாபர் (1562-1572) ஆண்டுவந்தார். 1572-ல் மொகலாயப் படைகள் குஜராத்தைத் தாக்கின. முஸாபர் 1572-ல் ஆமதாபாத்தில் அக்பருக்கு அடங்கினர். பிறகு சூரத்நகரம் முற்றுகையிடப்பட்டுக் கைப்பற்றப்பட்டது. குஜராத்தில் சூரத் பிரதேசத்தில் ஆண்டு வந்த மிர்ஸா வம்சத்தினர் மறுபடியும் கலகம் செய்யவே அக்பர் குஜராத்திற்கு விரைந்து சென்று கலகத்தை யடக்கிக் குஜராத்தைப் பேரரசோடு இணைத்துக்கொண்டார். தோடர்மால் என்னும் அதிகாரி ஷெர்ஷா ஆட்சியில் தாம் கற்றுக்கொண்ட வருவாய்த்துறை சீர்திருத்தங்களைக் குஜராத்தில் புகுத்தினர். அங்கு அவர் செயற்படுத்திய நிலவரித் திட்டத்தால் மொகலாய கஜானாவிற்கு அம் மாகாணத்திலிருந்துமட்டும் 50 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்தது. கடற்கரைப் பிரதேசமான குஜராத் மொகலாயர் ஆட்சிக்கு உட்பட்டமையால் அப் பேரரசின் கடல் வாணிகம் மிகுந்தது. 1573-74-ஆம் ஆண்டுகளில் மன்சப்தாரி முறையும், புதுவகை நிலவரித் திட்டமும் செயற்படுத்தப்பட்டன.

வங்காளத்தில் ஷெர்ஷா காலத்திற்குப் பிறகு ஆப்கானியர்கள் ஆண்டு வந்தனர். 1572-ல் சுலைமான் கரரானி என்னும் ஆப்கானிய சுல்தான் இருந்தார். அவருக்குப்பின் தாவூத்கான் என்பவர் வங்காள ஆட்சியை மேற்கொண்டார். அவர் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அன்றியும், அக்பர் ஆட்சிக்கு உட்பட்ட காசிப்பூர் அருகிலுள்ள ஸமானியா என்னுமிடத்தைக் கைப்பற்றினர். இது கண்டு சினமுற்ற அக்பர் பாட்னவரை சென்று அந் நகரத்தைக் கைப்பற்றினர்; பேரரசர் மட்டும் தலைநகருக்குத் திரும்பினர். ஆனால், மொகலாயப்படை வங்காளத்தை நோக்கி முன்னேறித் தாவூத்கானைத் துக்காராய்

என்னுமிடத்தில் தோற்கடித்து அவனைப் பணிய வைத்தது. மொகலாயப் படைத் தலைமை பூண்டிருந்த முனிம்கான், தோடர் மால் என்னும் இருவரில் முந்தியவர் தாவூத்கானுக்குச் சாதகமாக இருந்தார். இதனால், ஊக்கமடைந்த தாவூத்கான் அடுத்த ஆண்டும் கலகம் செய்தார். ஆனால், மொகலாயப் படைத் தலைவரான கான்ஜஹான் என்பவர் அக் கலகத்தை யடக்கி தாவூத்கானை வென்று கொன்று வங்காளத்தை யாண்ட ஆப்கானிய சுல்தானியத்தை ஒழித்தார். இராஜபுதனத்தில் உதய சிங்கின் மகனான பிரதாப்சிங் மொகலாயர் ஆதிக்கத்தை எதிர்த்து வந்தார். அவரை இராஜா மான்சிங் ஹால்டிகாட் கணவாய் அருகில் (உதயபுரிக்கு வடமேற்கே யுள்ளது) தோற்கடித்தார். ஆயினும், பிரதாப்சிங் தமது எதிர்ப்பைக் குறைத்துக்கொள்ள வில்லை. மொகலாயர்களோடு எவ்விதத் தொடர்பும் கொள்ள மறுத்தார். அவர் 1597-ல் இறந்தார். அதிலிருந்து சுதந்தர மேவாரின் வரலாறு முற்றிற்று.

கி.பி. 1581-ல் அக்பரின் தம்பியான மகம்மது ஹக்கீம் பஞ்சாப்மீது படையெடுத்தார். அவரைத் தடுக்க அக்பர் காபூலை நோக்கிப் படையெடுத்தார். அப் படையெழுச்சியில் மான்சராட் பாதிரியார், அபுல் பசல், நிஸாம் உத்தீன் அகம்மது முதலியோர் கலந்துகொண்டனர். ஷாமான்சூ என்னும் நிதி மந்திரி பகைவனுக்குச் சாதகமாகக் கலகம் செய்தமையால் அக்பர் அவரைக் கொல்வித்தார். அக்பர் காபூல்வரை சென்று அவ் வரசாட்சியை மகம்மது ஹக்கீமின் சகோதரியான பக்துனிஸாபேகம் என்பாள் வசம் ஒப்புவித்துவிட்டுத் திரும்பினார். ஆயினும், ஹக்கீம் 1585-ல் தான் இருந்தவரை காபூலில் ஆட்சி செலுத்தினார். குஜராத்தில் மூன்றாம் முஸர்பர் 1572-ல் அக்பருக்கு அடிபணிந்திருந்தாரா யினும் அவர் மறுபடியும் கலகம் செய்யவே மொகலாயப் படைகள் 1591-ல் அவரைச் சிறைபிடித்து வந்தனர். அப்பொழுது அவர் தற்கொலை செய்துகொண்டார். அலகாபாத் அருகில் 1583-ல் அக்பர் நிறுவிய கோட்டையருகில் வளர்ந்ததே இன்று விளங்கும் அலகாபாத் என்னும் நகரம். போர்த்துகீசியர்களுக்குச் சொந்தமான டாமன், டையூ என்னும் மேலைக் கடற்கரை நகரங்களை மொகலாயப் படைகள் கைப்பற்ற முயன்றும் பயனில்லை. 1585-ல் மகம்மது ஹக்கீம் இறந்தபிறகு காபூல் அரசு மொகலாயப் பேரரசில் அடங்கிற்று. 1583-ல் ஆங்கிலேய அரசியான முதலாம் எலிஸபெத்திடமிருந்து அக்பருக்கு மூன்று இலண்டன் வணிகர்கள் வாயிலாகக் கிடைத்த கடிதத்தில் அக்பரின் பெருமைகள் பேசப் பட்டுள்ளன. 1585-ல் காஷ்மீர்மீது படையெடுக்கப்பட்டது. படைதாங்கிச் சென்றவர் ஜெய்பூரைச் சேர்ந்த இராஜா பகவன்

தாஸ். மொகலாயர் ஸ்ரீநகரைக் கைப்பற்றிக் காஷ்மீரைப் பேரரசில் இணைத்தனர். அப்பொழுது காஷ்மீரில் சுல்தானுக இருந்த யூஸுப்கானையும் அவன் மைந்தன் யாகூப்கானையும் அக்பர் நடத்திய விதம் மோசமானது. பதௌனி அதைக் கண்டிக் கின்றார். பகவன்தாஸ் 1589-ல் இறந்தார். அவருடைய மருமகனுன மான்சிங் வங்காளத்தில் கவர்னராகி மன்சப்தாரி 7000 மாகவும் உயர்த்தப்பட்டார். இராஜா மான்சிங் 1614-ல் இறந்தார். அதுவரை அவர் பேரரசிற்குத் தம்மால் இயன்ற பணிகளைச் செய்தார். 1599-க்குப் பிறகு பல பிரதேசங்கள் பேரரசில் இணைந்தன. பைராம்கானின் மைந்தரான அப்துர் ரஹீம் கான்கனுன் சிந்துமீது படையெடுத்து 1591-ல் அவ்வரசைக் கைப்பற்றினர். தக்காணத்துச் சுல்தானியங்களான கான் தேசம், அகமது நகர், பீஜபூர், கோல்கொண்டா ஆகிய அரசுகளோடு அவர் நல்லுறவு பூண்டார். இதற்கு அடுத்தாற்போல மான்சிங் ஆப்கானிய ஆட்சியாளர்களிடமிருந்து ஒரிஸ்ஸாவை வென்றார். கான்தேசத்தைத் தவிர ஏனைய தக்காணச் சுல்தானியங்கள் அக்பருடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் அகம்மது நகர்மீது போர் தொடுக்கப்பட்டது. அப் போரில் 1596-ல் அகமது நகரத்து சாந்த்பீபி பேரார் நகரத்தை மொகலாயருக்கு விட்டுக்கொடுத்துச் சமாதானம் செய்துகொண் டாள். இதனுலும் போர் முடிந்தபாடில்லை. 1597-ல் கான் தேசத்து ராஜா அலிகான் என்பவருடைய உதவிகொண்டு அப்துர் ரஹீம் மறுபடியும் அகமது நகர்மீது படையெடுத்தார். அப் பொழுது மொகலாயருக்குக் கிடைத்த வெற்றியில் சாந்த்பீபி தற்கொலை செய்துகொண்டதோடு அகமது நகரின் பெரும் பகுதி மொகலாயர் வசமாயிற்று. இதற்கிடையே மக்ரான் கடற்கரை உட்பட பலுசிஸ்தானும் கைப்பற்றப்பட்டது. 1622-ல் பாரசீகப் பேரரசரான ஷா அப்பாஸ் ஜஹாங்கீரிடமிருந்து அதைத் திருப்பப் பெற்றவரை அப் பிரதேசம் மொகலாயர் வசமிருந்தது. மத்திய ஆசியாவில் பொக்காராவிலிருந்த உஸ்பெக் அரசர் இரண்டாம் அப்துல்லாகான் இந்தியாவைப் படையெடுக்கும் எண்ணம் வைத் திருந்தாராகையால் மொகலாயப் பேரரசைக் காக்க வேண்டி 1585-லிருந்து 1598 வரை அக்பர் லாகூரிலேயே தங்கியிருந்தார். அப்துல்லாகான் இறந்தபிறகு அக்பர் ஆக்ராவைத் தலைநகராக்கிக் கொண்டு அங்கிருந்து ஆளத்தொடங்கினர். கடைசியாக அக்பர் அடைந்த இராணுவ வெற்றி, அஸிர்கார் கோட்டையைக் கைப் பற்றியதுதான். அக் கோட்டை போர்த்துகீசியருடைய பீரங்கிப் படையால் பாதுகாக்கப்பட்டமையால் அக்பரால் அதைக் கைப்பற்ற முடியவில்லை. ஆனல், அளவிறந்த லஞ்சத்தைக் கொடுத்து அவர் கோட்டையைக் கைப்பற்றினர். அகமது நகர்,

பேரார், கான்டேஷ் ஆகிய பிரதேசங்களை ஒன்றாகச் சேர்த்து மாளவத்தையும், குஜராத்தையும் அவற்றோடு இணைத்து அம் மொத்தப் பகுதிக்கு இளவரசரான தானியலைத் தக்காணத்து அரசப்பிரதிநிதியாக நியமித்தார். இதற்குப் பிறகு மூன்று ஆண்டுக்காலம் பேரரசர் உயிர் வாழ்ந்திருந்தார். ஆனால், அக் காலம் அவருக்கு இன்னல்கள் மிகுந்திருந்தன. 15 மாகாணங்களைச் சேர்த்துப் பேருருவான பேரரசை யாண்ட அக்பர் தம் மூத்த மைந்தனை-தவப்புதல்வனை-சலீமின் கலகத்தை - அடங்காமையை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

அக்பருக்குப் பெருதவியாக அமைந்தவர்கள் ராஜா பீர்பால், ராஜா தோடர்மால், அபுல்பசல், ராஜா மான்சிங், ராஜா பகவன் தாஸ், அப்துர் ரஹீம் என்போர் ஆவர். இவர்களில் எல்லாருமே ஒவ்வொரு காலத்தில் மன்னருக்கு இராணுவ உதவி புரிந்திருக்கிறார்கள். ராஜா பீர்பால் 1528-ல் பிறந்தார். அவர் ஓர் அந்தணர். மகேஷ்தாஸ் என்னும் பெயரினர்; அவர் ஒரு கவிஞர்; இசைப் புலவர்; நகைச்சுவைப் புலவர். அவரோடு உரையாடிக் கொண்டிருப்பதை அக்பர் விரும்பினார். பேரரசரையும் எதிர்த்து அவரையே தாக்கி நகைச்சுவையோடு பேசும் உரிமை அவருக்கே இருந்தது. அக்பர் அவருக்குக் கவிராஜ் என்னும் பட்டத்தைக் கொடுத்து மன்சப்தார் 2000 பதவியையும் அளித்தார். ஒரு முறை பீர்பால் வழக்கம்போல் புகையிலையைக் குதப்பிக் கொண்டிருப்பதைக் கண்ட அக்பர், 'புகையிலையைக் கண்டால் கழுதைகளும் வெறுக்கும்' என்றார். அதற்கு பீர்பால், 'ஆமாம் புகையிலையைக் கண்டால் கழுதைகளே.வெறுக்கும்' என்றார்.[1] மற்றொரு முறை அக்பர், 'பிராமணர்களும் கழுதைகளும் ஏன் மன அமைதியில்லாம லிருக்கிறார்கள்?' என்று கேட்டதற்கு ஒரே வார்த்தையில் 'லோட்டா நை' என்று பதில் கூறினார். அதாவது லோட்டா என்றால் கீழே விழுந்து புரளுதலென்றும், நீர் குடிக்கும் கோப்பை யென்றும் இரு பொருள்படும். கழுதைகள் கீழே விழுந்து புரளாவிட்டால் 'திருப்தி' அடையாவென்றும் பிராமணர்களுக்குத் தண்ணீர் குடிக்கக்கூட ஒரு கோப்பையில்லை; அதாவது அவ்வளவு ஏழைகளென்றும் கூறினார். பீர்பால் ஒருமுறை ஆப்கானியர்களை எதிர்த்துப் படை தாங்கிச் சென்றார். அப்போது (1586) நடந்த போரில் இறந்து போனார். இறுதியில், அச் சண்டையைத் தோடர்மாலும், மான்சிங்கும் வென்றார்களாயினும் அக்பர் பீர்பால் இறப்பால் அடைந்த இழப்பு ஈடுகட்ட முடியாததாயிற்று.

[1] இது கட்டுக்கதை யென்பர். ஏனெனில் புகையிலையே முதன் முதலாக 1604-ல் தான் இந்தியாவில் புகுத்தப்பட்ட தென்பர்.

ராஜா பகவன்தாஸ் ஜெய்பூரைச் சார்ந்தவர். அவர் அக்பருக்கு மைத்துனர் உறவினராயினர். ராஜா மான்சிங்கி னுடைய மாமன் மான்சிங்கை இவர் தத்து எடுத்துக்கொண்டார். இராஜபுத்திர அரச குடும்பங்களுக்கும், மொகலாயர் வமிசத்திற் கும் முக்கியமான தொடர்பாக அவர் விளங்கினார். அவர் 1589-ல் இறந்தார்.

ராஜா தோடர்மால் ஷெர்ஷா காலத்திலேயே வருவாய்த் துறை நிர்வாகத்தில், நிலவரி அமைப்புகளில் பயிற்சி பெற்றிருந் தார். அக்பர் குஜராத்தை வென்றபிறகு புதிய நிலவரித் திட்டத்தை அமைத்துச் செயற்படுத்தியதிலிருந்து தோடர்மால் புகழ் பெற்றார். அவர் பிறகு பீஹாரையும் வங்காளத்தையும் வென்ற மொகலாயப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். அவர் நிதியமைச்சராகவும், முதலமைச்சராகவும் விளங்கினார். மன்சப்தார் 7,000 வரை அவர் பதவி உயர்ந்தது. 1580-க்குள் ளாகப் பேரரசின் நிதித்திட்டத்தை அவர் செம்மையாக வகுத் தார். பாரசீக மொழியிலும் எழுத்திலுமே நிலவரிக் கணக்குகள் வைக்கப்படவேண்டுமென்று விதித்தார். அவர் இந்துக்களும் பாரசீக மொழியைக் கற்பதற்கு இவ்வாறு வழிவகுத்தார். மொகலாயப் பேரரசில் போர்க்கள வெற்றி கண்ட மான்சிங், அப்துர் ரஹீம் போன்றார், ஒருபுறமிருக்க மன்னரைப் புகழ்வதும், அப் புகழ்ச்சியை நூலாக எழுதி வைப்பதுமே தொழிலும் பொழுதுபோக்குமாகக் கொண்டிருந்த அபுல்பசல் போன்றார் ஒரு புறமிருக்க, இச் செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கிய அக்பரும் ஒரு புறமிருக்க, உருப்படியாகப் பேரரசிற்கு வருவாய்த்துறை அடித்தளம் அமைத்து நிர்வாக மேற்கோப்பினையும் கட்டிய தோடர்மாலின் பெருமை அளப்பரிது. தோடர்மால் 1589-ல் இறந்தார்.

ராஜா மான்சிங் இராஜபுத்திரக் குடும்பத்திலிருந்து வந்த பிரபுக்களில் ஒருவர். அவர் நிகரில்லாத போர்வீரர். வங்காளத்துக் கவர்னராயிருந்த மன்சப்தார் 7,000 தகுதி பெற்றார். அக்பரின் கடைசிக் காலத்தில் மான்சிங் சலீமை நீக்கிவிட்டு அவர் மைந்தன் குஸ்ரூவைப் பேரரசராக்கும் முயற்சியில் சற்று ஈடுபட்டார். இதை அறிந்திருந்தும் சலீம் தனது ஆட்சியில் மான்சிங்கிற்கு எந்தவித மான தீங்குமிழைக்கவில்லை. மான்சிங்கும் பேரரசிற்குக் கடைசி வரையில் தமது விசுவாசத்தைக் காட்டி 1614-ல் இறந்தார்.

பேரரசை உருவாக்குவதற்கு மான்சிங்கும் அப்துர் ரஹீமும் பெருமுயற்சி எடுத்தனர். அதை நிலைப்படுத்துவதற்குத்

தோடர்மால் தனிப் பொறுப்பு ஏற்றார். இத்தகைய பயன் பாட்டுச் செயல்கள் யாதொன்றும் செய்யாமலே அக்பரை ஒரு கடவுளென்று மதித்து, புகழ்ந்து உடனிருந்து, அறிவுரை கூறி வந்த அபுல் பசல் மற்றெல்லாரையும்விட அதிக செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருந்தார். அக்பரையும் அபுல் பசலையும் ஈருடல் ஓருயிரென்று கூறலாம். அக்பருடைய பெருமைக்கு அவர் ஓரளவு காரணர் என்றால், அவர் சிறுமைக்கும் அவரே காரணர் எனலாம். ஷேக் முபாரக் என்பவருடைய மைந்தராய் - அபுல் ஃபெய்சி என்பாருடைய தம்பியாய் 1551-ல் பிறந்த அபுல்பசல் வயதில் அக்பருக்கு ஒன்பதாண்டு சிறியவர். 1574-ல் முதன் முதலாகப் பேரரசரைக் கண்டு அவரால் போற்றப்பட்டார். அப்பொழுது அவர்கள் இருவரிடையே தோன்றிய நட்பு 1602-ல் அபுல்பசல் இறந்தவரையில் மறையவுமில்லை; மங்கவுமில்லை. அபுல்பசல் மன்சப்தார் 4000 தகுதியை அடைந்தார். அக்பர் கண்ட தீன்-இலாஹி சமயத்தை உருவாக்கியவர் அபுல்பசலே. வரலாற்றாளர்கள் இன்றும் அவரிடம் நன்றி உடையராய் இருத்தற்குக் காரணம் அவர் இயற்றிய அக்பர் நாமா, அயினி அக்பரி என்னும் இரு நூல்களே ஆம். அவர் தம் சுயசரிதத்தையும் ஓரளவு எழுதி வைத்துள்ளார். அவர் பாரசீக மொழியில் செய்யுளியற்றுதலிலும், உரைநடை எழுதுதலிலும் வல்லவர். மன்னருடைய மனதைக் கெடுப்பவர் அபுல்பசல் என்னும் முடிவிற்கு சலீம் வந்துவிட்டார். அக்பர் தாமாக இறக்கமாட்டார் என்னும் அச்சமும் அவருக்குத் தோன்றிற்றுபோலும். ஆகவே, அவர் கி.பி. 1600-ல் தாம் கவர்னராயிருந்த அலகாபாதில் பேரரசுப் பட்டத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு செலாவணிக் காசுகளையும் தம் பெயரில் வழங்கினார். இந் நிலையை எப்படிச் சமாளிப்பது என்று ஆலோசனைக்காகத் தக்காணத்திலிருந்த அபுல்பசலுக்கு அக்பர் கடிதமெழுதிக் கேட்டார். அபுல் பசலும் தக்காணத்திலிருந்து ஆக்ராவிற்குப் புறப்பட்டார். இதையறிந்த சலீம் அபுல்பசல் போகும் வழியில் குவாலியரையடுத்த நார்வார் என்னுமிடத்தில் 1602-ல் பீர்சிங் என்னும் இராஜபுத்திரரைக் கொண்டு கொலைசெய்வித்தார். இதைக் கேள்வியுற்ற அக்பர் அடைந்த வெகுளி கட்டுமீறிற்று. மூன்று நாள் வெளியே தலை காட்டவில்லை. துக்கத்தில் ஆழ்ந்திருந்தார். கொலை எப்படி நிகழ்ந்தது என்று கண்டறிய விசாரணைக்குழு அமைத்தார். ஒன்றும் புலப்படவில்லை. சலீம் ஜஹாங்கீரான பிறகு கொலைகார பீர்சிங்கிற்குப் பதவி உயர்வு கிடைத்தது. அபுல்பசலின் அண்ணனான ஃபெய்சி புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர். சமய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த அக்பருக்குப் பல தத்துவ நூல்களிலிருந்த உண்மைகளையெல்லாம் திரட்டி எடுத்துக் கூறிய பெருமை

யுடையவர். அப்துர் ரஹீம் பைராம்கானின் மகன். கான் இறந்த வுடனேயே அப்துர் ரஹீம் அக்பருடைய அவைக்களத்திற்குக் கொணரப்பட்டு அங்கேயே வளர்ந்தார். அவர் சிந்துவையும், அகமது நகரையும் வென்ற மொகலாயப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். பைராம்கானுக்கு அக்பர் செய்த துரோகம் அவர் மைந்தனுக்குச் செய்த நன்றியால் ஓரளவு நீக்கப்பட்டது.

அக்பர் வாழ்க்கையில் கடைசி 5 ஆண்டுகள் சோகம் நிறைந்த தாயின. தவம் கிடந்து பெற்ற பிள்ளை தன்னை நஞ்சிட்டு கொல்ல ஏற்பாடுகள் செய்து வருவதாக 1591-லேயே கேள்விப் பட்டிருந்தார். தந்தையின் உடல்நலம் மகனுக்குத் தீராத துக்கத் தைக் கொடுத்தது. 1604-ல் இளவரசர் தானியல் மணமுடித்துக் கொண்டவுடனேயே பரலோகம் சென்றார். மூத்தவரான மூரத் அவரை முந்திக் கொண்டிருந்தார். அவ் விருவரும் மிதமிஞ்சிக் குடித்ததால் அகாலத்தில் இறந்தவர்கள். 1604-லேயே அக்ப ருடைய தாய் அவளது 77வது வயதில் இறந்து போனாள். 1601லிருந்து 1605 வரை அக்பரும் சலீமும் ஒருவர்க்கு எதிராக ஒருவர் போர்த்துகீசியருடைய ஆதரவைத் தேடிய நாடகம் பரிதவிக்கத் தக்கதாயிருந்தது. 1603-ல் பேரரசர்க்கும் சலீமிற்கும் இடையேயிருந்த மனத்தாங்கல் சற்றுக் குறைந்தது. சலீம் அலகாபாத்தில் தொடர்ந்து அடங்காமலிருந்து வந்தார். 1604-ல் சலீம் அக்பரை ஆக்ராவில் நேரில் சந்தித்து வணங்கினார். அக்பர் வணங்கியெழுந்த மகனைத் தூக்கி நிறுத்தி அறைந்தார்; நையப் புடைத்தார் ; ஆத்திரம் தீரத் திட்டினார்; சிறையில் அடைத் தார். இந்த அரிய மருந்துகள் சலீமின் தன்மையைச் சற்று அடக்கி வைத்தன. 1605-ல் அக்பருக்கு வயிற்றுக் கடுப்புக்கண்டு நான்கு வாரங்கள் துன்பப்பட்டார். தமக்கும் தம் மகனுக்கு மிடையே எவ்வளவோ நிகழ்ந்திருந்தும் தமக்குப்பின் சலீமே பட்டத்திற்கு வரவேண்டும் என்று பரந்த மனப்பான்மையே உருவெடுத்த பேரரசர் விரும்பினார். இறக்கும் தருவாயில் ஆண்டவன் பேரைச் சொல்ல முயன்றார் போலும். ஆண்டவன் யாரென்று தெரியாமலேயே அவர் வாழ்க்கையை நடத்திவிட் டார். இஸ்லாமில் ஐயம், பிற மதங்களில் நம்பிக்கை பிறக்காத நிலை, அறிவு ஒன்றைக்கொண்டே ஆண்டவனை அறிய முடியும் என்னும் அகந்தையால் பிறந்த பேதைமை, தனக்குத் தோன் றியதே பேருண்மை என்னும் நோக்கத்தில் ஒரு மதத்தை நிறுவி விட்டு அந் நிலையிலும் அமைதி காணாத வண்ணம் இறக்கும் தருவாயில் அவர் உள்ளத்தில் 'என்னென்ன எண்ணங்கள் ஓடினவோ! இந்தியாவை ஆண்ட பேரரசர்கள் யாவருள்ளும் சிறந்தவர் தம் மகன் கொடுத்த நஞ்சுக்கு ஆளாகி இறந்தாரா?

அன்றி, மகனுடைய துரோகத்திற்கு ஆளாகி நண்பனையும் தாயையும் இழந்து வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தாமே நஞ்சுண்டு இறந்தாரா—இதுகாறும் ஒருவரும் அறியார். அவர்தம் இறுதிக் கடன்கள் எளிய முறையில் நடத்தப்பட்டன. அவருடைய சமச் சடங்குகளை சலீமே முன்னின்று நடத்தி வைத்தார். அவர் இறந்து அடக்கம் செய்யப்பட்ட பிறகும் அவருடைய எலும்புகளுக்கும் அமைதியில்லை. 1691-ல் ஜாட்டியர்கள் என்னும் இந்து மதவெறியர்கள் சிலர் அக்பருடைய எலும்புகளை அவருடைய சமாதியை விட்டு அகற்றி, எரித்துச் சாம்பலாக்கி விட்டனர்.

அக்பருக்குத் தொடக்கத்திலிருந்தே ஒரு வகை ஆத்ம விசாரம் ஏற்பட்டிருந்தது. கல்வி அறிவு இன்மையால் பெரிய உண்மைகளை அறிதற்குக் கேள்வி அறிவை நம்பவேண்டியதாயிற்று. அவர் கற்றிலராயினும் மிகவும் கேள்விச் செல்வம் உடையவராக இருந்தார். அதற்காகவே அறிஞர்கள் பலரை அமர்த்திக்கொண்டார். அவ் வறிஞர்கள் கூடுதற்கு 'இபாதத்கானு' என்னும் ஒரு மண்டபத்தைக் கட்டினர் (1575). தொடக்கத்தில் அவர் நல்ல முஸ்லிமாகவே இருந்தார். மெக்காவிற்குப் போவதற்குப் பிறரை ஊக்கியதோடு (உதாரணமாக பைராம்கான்) தாமும் ஒரு காலத்தில் போக வேண்டுமென்று விரும்பியிருந்தார். 1579-க்கு முன்பாக அவர் பக்தி நிறைந்த சுன்னி முஸ்லிமாக விளங்கி வந்ததற்குச் சான்று உண்டு. 1578-ல் ஒருமுறை அவருக்கு ஆன்ம அனுபவங்கள் ஏற்பட்டன. அவற்றை அடுத்து அவை பன்முறை தோன்றின. கடவுள், படைப்பு, வாழ்க்கை ஆகிய பேருண்மைகளைப்பற்றிய தத்துவங்களை அறிந்துகொள்ளுதற்குக் கல்வி, கேள்வி ஆகிய ஞானங்களின் உதவி இன்மையால் நேரடி அனுபவ வாயிலாக—மகம்மது நபிக்கு ஏற்பட்டது போல்—சில ஆன்ம உணர்ச்சிகள் அவருக்கு ஏற்பட்டன போலும்! அவற்றைத் தத்துவ ஆன்ம நிலையில் வைத்துப் பாராமல் வெற்று உடல்நிலையில் வைத்து அவற்றை ஒரு வகை வலிப்பு என்று டாக்டர் ஸ்மித் கருதுவார். உண்மையை அறிதல் எளிதன்று. தத்துவ விசாரத்தின் வாயிலாக உண்மையை அறிந்து கொள்ளவேண்டுமென்று விரும்பிய அக்பர் அத்தகைய ஆராய்ச்சிக்கென்றே தத்துவ சமய ஆராய்ச்சிக் கூடமொன்றை அமைத்தார் (1575). அம் மண்டபம் இபாதத்கானு எனப்படும். அதில் பல சமயத்தலைவர்களையும் அழைத்துத் தங்கள் சமயக் கருத்துகளை எடுத்துரைக்க வற்புறுத்தினர். முஸ்லிம்களுக்குள்ளேயே பல கட்சிக்காரர்கள் தம் உட்சமயக் கருத்துகளை வற்புறுத்திக் கலகம் விளைவித்துக்கொண்டதைக் கண்ட பேரரசர் கிறிஸ்து

வர்கள், ஜைனர்கள், இந்துக்கள் முதலியோரின் கருத்துகளையும் ஆய்ந்தார். இந்துக்களில் வைதிக சமயத்தின் சார்பாக பிராமணர்கள் யாராவது அக்பரோடு அச் சமயத்தை எடுத்துக் கூறியுள்ளனரா என்பது விளங்கவில்லை. ஆனால், பௌத்தர்கள் ஒருவரையும் அவர் அறிந்ததில்லை என்பது தெளிவு. கிறிஸ்துவ மதம் சாரதூஷ்டிலர் சமயம் (பார்ஸிகளுடைய மதம்) என்பவற்றை அவர் அறிந்திருந்தார். 1579-ல் அவர் சமயத் துறையில் அரியதொரு நடவடிக்கை யெடுத்தார். படேபூர் சிக்ரி மசூதியில் அக்பர் தாமே தொழுகைச் சொற்பொழிவாற்றி, 'அல்லாஹு அக்பர்' என்று இரு பொருள்படக் கூறினர். அஃதாவது 'கடவுளே எல்லாம் வல்லவர்' என்றும் 'அக்பரே கடவுள்' என்றும் இரு பொருள்படும். இப்படிக் கூறச் சொல்லிக் கொடுத்தவர் அபுல் ஃபய்சி யென்று கூறுவர். அக் கருத்தை யொட்டிப் பேரரசராகிய அக்பர் சொல்லிலும் செயலிலும் தவறியிருக்க முடியாது; அதாவது பேரரசர் தவற்றிற்குப் புறம்பானவர் என்னும் கொள்கைகள் நிறுவப்பட்டன. மான்சராட் பாதிரியார் முதலியாரோடு அக்பருடைய தொடர்புகள் நெடுங் காலம் தொட்டு அக்பர் உண்மையான முஸ்லிம் என்னும் நிலையிலிருந்து மாறிவிட்டார் என்பது டாக்டர் ஸ்மித்தின் கருத்து. இதை வற்புறுத்துவதுபோலச் சில முஸ்லிம் சமயக் கலகங்கள் தோன்றின (1580). அவை எளிதில் அடக்கப்பட்டன வாயினும் பேரரசருடைய சமயக் கொள்கை குடிமக்கள் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை யென்பது தெளிவு. அவர் பல சமயங்களில் தாம் சிறந்தன என்று கண்ட கோட்பாடுகளை வரவேற்றாராயினும், எந்தச் சமயத்திலும் காணாத ஒரு புது உண்மையை அவராலோ, அவருடைய போதகர்களான அபுல் பசல் முதலானவர்களினாலோ காணமுடியவில்லை; சமயத் துறையில் அவருக்கு மன நிறைவையும், அமைதியையும்விடக் குழப்பமும், ஐயமும், அதிருப்தியும்தான் மிகுந்திருந்தன எனத் தெரிகின்றது. அவர் முஸ்லிம் சமயத்தின் பல கருத்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்து ஆசாரங்களின் சதிபோன்ற பழக்கவழக்கங்களையும் அவர் வெறுத்தார். இதற்கிடையே மான்சராட் பாதிரியார் 'தாம் ஒரு முஸ்லிம் அல்லர்,' என்று அக்பரே தம்மிடம் கூறியதாகக் கூறி வைத்திருக்கிறார். முஸ்லிம் மரபுகள் சிலவற்றை அவர் எதிர்த்தாரே யன்றி ஒரு சடங்கு வாயிலாக அவர் மதம் மாற்றிக்கொண்டார் என்பதற்குச் சான்றில்லை. 1582-ல் தெய்வீக சமயம் என்று ஒரு மதத்தை அக்பர் நிறுவினர். அதோடு இபாதத்கானவில் சமயத் தலைவர்கள் கூடிப் பேசும் பழக்கமும் நின்றது. அக்பர் நிறுவிய சமயத்திற்குத் 'தீன் இலாஹி' என்பது பெயர். அதனைத் 'தொஹித் இலாஹி' என்றும் கூறுவர்.

இஸ்லாம், சமணம், இந்தியம், சாரதுரஷ்ட்ரியம், கிறிஸ்துவம் முதலிய பல சமயங்களில் தாம் விரும்பியவற்றைச் சேர்த்துப் புதியதொரு சமயத்தை நிறுவியமையே அது. ஈ. பி. ஹாவல் முதலிய ஆசிரியர்கள் அதனை அரசியல் அறிவுடைமையின் சிகர மாகக் கருதுவர். தாம் கண்ட உண்மையைக் கசப்பாயிருப் பினும் அஞ்சாமலிருக்கக்கூடும் தன்மை வாய்ந்த வின்சென்ட் ஸ்மித், 'அக்பர் சமயம் நிறுவியமை அரசியல் அறிவீனத்தின் சிகரம்; ஆதிக்க ஆணவத்தின் அறிகுறி யென்று கூறுவர். அக்பரைக் குறை கூறுகிறவர்களில் பதௌனிக்கு அடுத்தாற்போல் ஸ்மித்தைச் சொல்லலாம். ஆயினும், இவ் வறிஞர்கள் கூற்று முற்றிலும் புறக்கணிக்கத் தக்கதன்று. அக்பர் நிறுவிய சமயத் தைப்பற்றி மூன்று கருத்துகள் நினைவுகூர வேண்டும். ஒன்று, அவர் அந்தச் சமயத்தில் சேரும்படி ஒருவரையும் வற்புறுத்த வில்லை. அந்தச் சமயத்தின் பெருமைகளை யுணர்ந்து நாடே அதை மேற்கொள்ளும் என்று நினைத்தார்போலும். மொத்தத் தில் ஐந்து பேர்கள் அந்த மதத்தில் சேர்ந்தார்கள், அதாவது அபுல்பசல், பீர்பால் உள்பட. அரசர்க்கு மிகவும் அணுக்கமான மான்சிங்கும் புது மதத்தில் சேர மறுத்துவிட்டார். ஒருவரை யும் வற்புறுத்தாத பெருமை அக்பரிடத்தில் காணவேண்டும். ஆயினும், ஒருவராலும் வரவேற்கப்படாத தன்மையை அந்த மதத்தில் காணவேண்டும். பிராமணர்களது ஆரிய சமயத்தி லிருந்து நேற்று வந்த கிறிஸ்துவம்வரையில் புத்தர்பிரானது பெருமுயற்சிகள் உட்பட எச் சமயமும் இந் நாட்டுப் பெருமக் களைத் தம்வயப்படுத்தியதில்லை என்னும் வரலாற்று உண்மையை நூற்படிப்பில்லாத, தமக்குத் தெரிந்தவற்றில் பெரும்பாலான வற்றை அபுல்பசல் ஒருவரிடமிருந்தே கற்றறிந்து கொண்ட அக்பர் இவ் வரலாற்று உண்மையைத் தெரிந்துகொண்டிருக்க முடியாது.

இரண்டாவதாக, இந்தியா அறிந்திருந்த எந்தச் சமயமும் கூறுத புதியதொரு உண்மை எதனையும் 'தீன் இலாஹி' கூறி விடவில்லை. ஒவ்வொரு மதத்திலும் எது சிறந்தது யென்று கருதிக் கொள்வது அவரவருடைய தன்மையைப் பொறுத்தது; நம்பிக்கை யையும் பொறுத்தது. மூன்ருவதாக, புத்த மதத்தை அவர் அறிந்திருந்தாராயின் அவரும் ஓர் அசோகராயிருப்பாரோ என் பதற்கு விடை கூறமுடியாது. ஏனெனில், அவர் அம் மதத்தை அறியவில்லை. சீர்திருத்தத் துறைகளில் அரசியல் வெற்றி ஒன்றைக் கருதியே அக்பர் பல காரியங்களைச் செய்தார் என்னும் கொள்கை ஓரளவு உண்மைபோல் தோன்றினும், அத்துணை இராணுவ பலமும் அரசியல் ஆதிக்கமும் பெற்ற ஒரு பேரரசர்க்கு

இந்தச் சூழ்ச்சிகள் தேவையில்லை யென்பது புலனுகும். அலாவுதீன் கில்ஜிக்கு இவை தேவைப்படவில்லை. உண்மையான திறமையும் இனங்காண முடியாத ஒரு தந்திரமும் இணைந்து ஓர் உருவாயிருந்த பேரரசர் இந்திய வரலாற்று ஆசிரியர்களிடையே பெரும்பான்மை யாக நன்மதிப்புப் பெற்றிருப்பதில் வியப்பில்லை. 'தீன் இலாஹி' அக்பருடைய தனிப்பட்ட ஆன்ம உணர்ச்சி என்பதாயின், அவரு டைய தன்மையைப்பற்றிக் கூறுமிடத்து அதைச் சுருக்கமாகக் கூறிவிடவேண்டும். அன்றி, அவர் ஆட்சியின் ஒரு சிறந்த அம்ச மாக அதைப்பற்றி எடுத்துப்பேச முயன்ருல் வின்செட் ஸ்மித் கூறியதைத்தான் கூறவேண்டும். இம் மதத்தை நிறுவியதன் வாயிலாக இந்திய மக்களிடையே தேசிய ஒற்றுமை ஏற்பட்டுவிடு மென்று அக்பர் கருதினுர் என்று சில வரலாற்ருளர்கள் கூறுவது நகைப்புக்கு இடமாகும். அக் காலத்தில் தேசியம் என்னும் கருத்தே ஒருவர்க்குமில்லை யென்பதை முதற்கண் நாம் உணர வேண்டும். அக் கருத்து இந்தியாவின் 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது. இரண்டாவதாக, 1582-க்கு முன்பு இல்லாத ஒற்றுமையொன்று அதற்குப் பிறகு ஏற்பட்டுவிட்ட தென்ருே அதற்கு முன்பிருந்த வேற்றுமை உணர்ச்சிகள் அதற்குப் பிறகு மறைந்து போயினவென்ருே கூறமுடியாது.

அக்பருக்குத் தாம் ஓர் அவதார புருஷர் என்னும் எண்ணம் இருந்தது. முஸ்லிம்களிடையே மகம்மது நபிக்குப் பிறகு 1000 ஆண்டுகள் கழித்து இன்னுமொரு நபி பிறப்பார் என்னும் ஒரு நம்பிக்கை இருந்தது. மகம்மது நபிக்கு ஏறத்தாழப் பத்து நூற்ருண்டுகள் கழித்து அக்பர் வாழ்ந்தமையால் தாமே ஒரு வேளை இரண்டாவது நபியோ என்கிற ஐயம் அவருக்குப் பிறந் திருக்கக்கூடும். அதை வைத்துத்தான் அவர் 'அல்லாஹு அக்பர்' என்றும் கூறியிருக்கலாம். சிலர், அக்பருடைய சமய வாழ்க்கையை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கூறுவர். 1579-ல் அவர் பேரரசர் ஆணையின் குற்றமற்ற நிலையை வற்புறுத்திப் பிறப்பித்த கட்டளையை அதற்கு முன்பு அவர் இருந்த வைதிக முஸ்லிம் என்னும் நிலையிலிருந்து சற்று மாற்றுகிறதென்று கூறுவர். ஆகவே, 1579-க்கு முன்பு ஒரு நிலையும், அதற்கு பின்பும் தீன் இலாஹியை நிறுவிய 1582-க்குப் முன்பு இரண்டாவது நிலையும் 1582-க்குப் பிறகு மூன்ருவது நிலையும் என்று பாகு படுத்துவர். இந்த மூன்று நிலைகளில் ஏற்பட்ட முக்கியமான மாறுதல்கள்: 1. தம்முடைய பூரண அரசியல் ஆதிக்கத்தைச் சமய ஆதிக்கத்தின் மூலமாக நிறுவிக் கொண்டமையால் பாரசீக மன்னர் முதலானேருடைய மேலாதிக்கம் நீக்கப்பட்டது.

2. இபாதத்கானா விவாதங்கள் முடிவுற்றமையால் சமய ஆராய்ச்சி நிலையிலிருந்து சமய நிறுவன நிலைக்கு மன்னர் வந்துவிட்டார்.

அக்பருடைய ஆட்சி போர்க்கள வெற்றி ஒரு புறமும் நிர்வாக அமைதி மற்றொரு புறமும் ஒருசேர நிகழும் வகையில் அமைந்தது. அவருடைய அரசு காஷ்மீரிலிருந்து அகமது நகர் வரையிலும், வங்காளத்திலிருந்து பலுசிஸ்தானம்வரையிலும் பரவியிருந்தது. அவர் ஆட்சி மத்திய ஆட்சி, மாகாண ஆட்சி, தல ஆட்சி யென்று மூவகைப்பட்டது. மத்திய ஆட்சியில் பேரரசர்க்கு அடங்கி வக்கீல் என்று ஒரு முக்கிய மந்திரியும், வஜீர் அல்லது திவான் என்னும் பெரிய நிதி மந்திரியும், மீர்பக்ஷி என்ற இராணுவ அமைச்சரும், சாதர் என்னும் மத அமைச்சரும், காஸி என்னும் நீதிபதியும் முக்கிய அதிகாரிகளாய் இருந்தனர். இந்த அமைச்சர்கள் மன்னருடைய ஆட்சிக்கு உதவினார்கள். முக்கிய மான அறிவுரைகளும் கூறப்பட்டன. 1580-ல் பேரரசு 12 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அந்த மாகாணங்களுக்கு சுபா என்று பெயர். காபூல், லாகூர், மூல்தான், டெல்லி, அஜ்மீர், அகமதாபாத், மாளவம், ஆக்ரா, அவுத், அலகாபாத், பீகார், வங்காளம், இவற்றோடு காஷ்மீரம், சிந்து, ஒரிஸ்ஸா, கான்தேசம், பேரார், அகமது நகர் ஆகிய மாகாணங்களையும் சேர்த்துக் கடைசியில் 18 மாகாணங்களாகப் பேரரசு பிரிக்கப் பட்டது. இந்த சுபாக்களுக்கு அரசப் பிரதிநிதிகள் சுபாதார் என்னும் பெயருடன் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு சுபாதாரும் தம்முடைய சுபா அளவிற்குப் பாதுஷாபோல நடந்துகொண் டனர். மாகாணங்களிலும் திவான்கள் இருந்தனர். தல ஆட்சி சர்க்கார் எனப்பட்டது. அதை இக் காலத்து மாவட்டத்துக்குச் சமமாகக் கொள்ளலாம். அதன் தலைவர் ஃபௌஜ்தார். ஃபௌஜ்தார் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் தற்காலத்திலும் போல ஒரு கலெக்டர் மாஜிஸ்டிரேட்டின் அலுவல்களை மேற் கொண்டார். அவர் மாவட்டத் துருப்புகளுக்கும் தலைமை தாங் கினர். சர்க்காரை பர்காணக்கள், தாசில் என்றெல்லாம் பிரித் தனர். பர்காணாவின் தலைவர் சௌத்திரி. நகர ஆட்சியைக் கொத்தவால் என்பவர் மேற்கொண்டார். அக் காலத்தில் காவல் துறையும், சிவில் நிர்வாகத் துறையும், நீதித் துறையும், சிறையிருத்தித் தண்டமிறுக்கும் துறையும், பல அதிகாரிகளிடம் ஒன்றாய் அமைந்திருந்தன. குற்றவாளிகள் என்று கண்டவர் களுக்குக் கழுவேற்றுதல், சிரச்சேதம், யானையின் காலால் இடறுதல், அங்கங்குறைத்தல் முதலிய கடும் தண்டனைகள் விதிக் கப்பட்டன. தோலையுரிக்கும் பழக்கம் பிரிட்டிஷ் ஆட்சி வரும் வரையில் இந்திய அரசுகளால் ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்டது. மொகலாயர் ஆட்சியும் அதற்கு விலக்கன்று.

அக்பர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான சீர்திருத்தம் அவருடைய திவானுயிருந்த ராஜா தோடர்மால் புகுத்திய நிலவரித் திட்டம். அத் திட்டம் முதன்முதலில் குஜராத்தில் 1574-75-ல் புகுத்தப்பட்டது. 1579-80-ல் அது பேரரசு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத் திட்டப்படி நிலங்கள் ஒழுங்காக அளக்கப்பட்டன. அளப்பதில் கயிற்றுக்குப் பதிலாக இரும்பு வளையங்களில் பிணைக்கப்பட்ட கம்புகள் உபயோகப்படுத்தப்பட்டன. இவ்வாறு அளந்த பிறகு நிலங்கள் மூன்று வகையாகத் தரம் பிரிக்கப்பட்டன. நிலத்தின் மகசூலில் ⅓ அரசைச் சாரும். சாகுபடி செய்யப்பட்ட நிலத்திற்கு மட்டும் நிலவரி வசூலிக்கப்பட்டது. நிலவரியை நிர்ணயிக்கும் போது உழவர்க்கும், அரசுக்கும் நேரடித் தொடர்பு இருந்தமையால் இத் திட்டத்தைச் சிலர் ரயத்வாரித் திட்டமென்றே கூறுவர். ஆனல், அக் காரணத்தால் அதனைச் சென்னையில் மன்ரோ புகுத்திய நிலவரி ரயத்வாரித் திட்டத்தோடு நாம் ஒப்பிடுதல் நேரிதன்று. நிலவரியைக் காசாவும் கட்டலாம்; சாகுபடிப் பொருளாகவும் கட்டலாம். ஒரு முறை ஏற்படுத்தப்பட்ட நிலவரி நிர்ணயம் 10 ஆண்டுகளுக்குப் பொருந்துவதாயிற்று. நிலவரிக் குறிப்புகள், மற்றப் பத்திரங்கள் முதலியவை ஏறத்தாழ அதிக மாறுதல் இல்லாமல் ஆங்கிலேயர் ஆட்சியால் பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அவர்களது கஜானு, தாசில், ஜப்தி முதலிய முறைகள் அப்படியே மேற்கொள்ளப்பட்டன. ஆனல், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நிலவரித் துறையில் கலெக்டர் வேலை பார்த்து வந்த வின்ஸென்ட் ஸ்மித் கூறுகிறுர் : ' நிலவரி இலாகாவில் திட்டமும், சட்டமும் ஒருபுறமிருக்க நடைமுறை அவற்றினின்றும் மிகவும் வேறுபட்டு இருப்பது இயற்கை. ஆங்கிலர் ஆட்சிக் காலத்திலேயே இவ்வாருயின் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் இவ் வேறுபாடு மிகுந்தே இருந்திருக்கும். நிலவரி, வருமானத்தில் ⅓ ஆக இருந்தமையால் உழவருக்கு நிலவரிப் பளு மிகுந்திருந்ததென்பது தெளிவு. பண்டைய இந்திய விதியான ⅙ போல் இது இரு மடங்கு என்பதை நினைவு கூரவேண்டும். அக்பர் ஜிஸியா முதலிய வரிகளை நீக்கிவிட்டமையால் அதை நிலவரியை மிகுதிப்படுத்தியே சரிக்கட்ட வேண்டியிருந்தது'.

அக்பர் ஆட்சி முறையில் ஏற்படுத்திய இன்னெரு முக்கியமான சீர்திருத்தம் மன்சப்தாரித் திட்டம் என்பதாகும். இத் திட்டப்படி புதியதொரு அதிகார வர்க்கம் உருவாக்கப்பட்டது. அது இராணுவத் திட்டம். ஓரளவு ராணுவத் தகுதியும் ஓரளவு நிலச்சுவான்தார் தகுதியும் பெற்ற அதிகாரிகள் சேர்ந்து இவ் வர்க்கம் உருவாயிற்று. இடைக்கால ஐரோப்பியர் வரலாற்றில்

காணப்படும் படை மானியத் திட்டத்தோடு இதனை ஒப்பிடலாம். மன்சப்தார் என்பவர் அரசு தமக்குக் கொடுக்கும் சம்பளம் அல்லது மானியத்திலிருந்து குறிப்பிட்ட ஓர் எண்ணிக்கையுள்ள குதிரைப்படையினை வைத்திருந்து பேரரசருக்குத் தேவைப்படும் போது அதனை ஒப்படைக்கவேண்டும். மன்சப்தார் பத்து என்பவர் 10 குதிரைகள் கொண்ட ஒரு சிறு படையினை வைத்திருப்பவர். இவரே கடைநிலை மன்சப்தார். மன்சப்தார் 1000, 5000 என்போர் எல்லாரும் இவ்வாறே 1000, 5000 பரிகளை வைத்திருந்தவர்கள். விதிமுறை இதுவே யாயினும் நடைமுறை சற்று மாறியிருந்தது. (1) மன்சப்தாரி 10,000 முதலிய முதல் மூன்று நிலைகளும் அரச குலத்தவருக்கே உரியவை: (2) மன்சப்தார் 5,000 முதலியவர்களுக்கு அவர்கள் அதற்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள குதிரைகள் வைத்திருந்தால் போதும் என்று ஆளைப் பொறுத்துச் சலுகை காட்டப்பெற்றது. (3) மன்னருடைய மிக நெருங்கிய நண்பர்களுக்கு முழுச் சலுகையும் அளிக்கப்பட்டது. ஆதலால், மன்சப்தாரி முறை ஒவ்வோர மையத்தில் ஒரு மானியம் அல்லது பட்டம் என்னும் அளவில் நின்றுவிட்டதும் உண்டு. இத் திட்டத்தால் மொகலாயர் ஆட்சி ஒரு வகை இராணுவத் தன்மையை எய்திவிட்டது. ஐரோப்பியப் படை மானியத் திட்டத்தோடு இதனை முற்றிலும் ஒப்பிட முடியாவிடினும் அத் திட்டத்தின் தீய அம்சங்களெல்லாம் இதிலும் காணப்பட்டன. படைஞர்கள் மன்சப்தாரிடம், காட்டிய விசுவாசம் மன்னரிடம் காட்ட வேண்டாத—முடியாத—நிலை ஏற்பட்டது. இறுதியில் மொகலாயப் பேரரசு பலவீனமடைவதற்கு இத் திட்டம் ஒரு காரணமாய் அமைந்தது. அடுத்து ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்திலேயே இதன் தீய சக்திகள் செயற்படலாயின. மகபத்கான், ஜஹாங்கீரைச் சிறைபிடிக்கக்கூடிய நிலையும் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் எதிர்நோக்கி அரசு மையப்படவேண்டும். இராணுவம் அரசரிடம் நேரடி விசுவாசம் கொள்ளவேண்டும் என்றெல்லாம் ஷெர்ஷா செய்த ஏற்பாடுகளின் பெருமை விளங்கும். தெரிந்தோ தெரியாமலோ அக்பர் தமது தக்காணக் கொள்கை வாயிலாகவும் மன்சப்தாரித் திட்டத்தை நிறுவியதாலும் தாம் நிறுவிய மொகலாயப் பேரரசின் சீர்குலைவிற்கான வித்துகளைத் தாமே இட்டுவிட்டார்.

அக்பர் காலத்தில் இலக்கியம் போற்றப்பட்டது. அபுல் பசல் பாரசீக மொழியில் சிறந்த எழுத்தாளர். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் படௌனி மொழிபெயர்த்தார். ஃபய்சி லீலாவதி யென்னும் கணிதநூலைப் பாரசீகத்தில் பெயர்த்தார். ஃபய்சியை அமிர் குஸ்ருவிற்கு அடுத்தாற்போல் வைத்து

மதிப்பர். மான்சிங், அப்துர் ரஹீம் ஆகியோர் இந்தி எழுத்தாளர்களைப் போற்றினர். தோடர்மால் போன்ற அரசாங்க அலுவலர்களும் இந்தியில் செய்யுள் யாத்தனர். கங்கா பிரசாத்



என்னும் ஒரு புலவர் இயற்றிய ஒரு பாடலுக்கு அப்துர் ரஹீம் 36 லட்சம் ரூபாய் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. மான்சிங் இவ்வாறே ஒரு பாடலுக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுத்த

தாகக் கேள்வி. கேசவதாஸ் என்பவர் செய்யுள் இயற்றுவதிலும் செய்யுள் இயலிலும் வல்லவர். துளஸிதாஸ் இராமருடைய கதையை 'இராமசரிதமனஸ்' என்னும் நூலில் அழகாகக் கூறியுள்ளார். இந்திய இலக்கியம் முழுவதிலுமே துளஸிதாஸரே மிக முக்கியமான கவியென்று ஸ்மித் கூறுகின்றார். இக் கூற்று காளிதாஸரையும், கம்பரையும் மறந்தோ தெரியாமலோ கூறிய கூற்று. துளஸிதாஸைப் போல ஸுர்தாஸென்பவர் மற்றொரு புலவர். அவர் துளஸிதாஸினும் பெரியர் என்று சிலர் கருதுவர். மாலிக் மகம்மது ஜெய்ஸி என்பார் பத்மாவதி என்னும் கவியில் அலாவுதீன் கில்ஜியை மேவார் ராணி பத்மினி ஏமாற்றியதாகச் சொல்லப்பெறும் கதையைக் கவிதையாகக் கூறுகின்றார். அக்பர் கட்டடக் கலையில் பெருமுயற்சிகளை மேற்கொண்டார். அவர் படேபுர் சிக்ரியில் கட்டிய பல கட்டடங்கள் சிறப்பானவை. ஜமி மசூதி, ஷேக் சலீம் ஷிஷ்டியின் மசூதி, திவானிகாஸ் என்னும் அரச சபை, ஜோதிபாயின் அரண்மனை, சலீமுக்காகக் கட்டப்பட்ட ஜஹாங்கிரி மஹால் என்பவையெல்லாம் அவர் காலத்து முக்கியமான கட்டடங்கள். சிவப்புக்கல்லால் அக்பர் காலத்தில் தோன்றிய கட்டடங்கள் ஷாஜஹான் காலத்தில் பளிங்குக் கல்லால் கட்டப்பட்ட கட்டடங்களைப்போல அவ்வளவு எழிலுள்ளவை அல்லவாயினும் அவற்றிற்கு ஒரு வகையில் அவை முன்னோடிகளாயிருந்தன என்பது உண்மை. அக்பர் ஓவியக் கலையைப் போற்றினார். அப்துஸ் சமாத், தஸவந்த் முதலியோர் அக் காலத்து ஓவியர்கள். அவர் இசைக்கலையைப் போற்றினார். அன்றியும், அதைத் தாமே பயின்றார். அவர் காலத்து இசைவாணர்களில் தலையாயவர் தான்சேன் என்பவரே.

24. ஜஹாங்கீர் (1605-1627)

அக்பரை அடுத்து சலீம், நூருதீன் முகம்மது ஜஹாங்கீர் என்னும் பட்டப்பெயரோடு 1605-ல் மொகலாயப் பேரரச ரானார். அவருடைய தாய் அக்பர் மணந்த ஓர் இராஜபுத்திர இளவரசி. அவரை அரைப் பங்கு இந்து எனலாம். அவர் தந்தை கல்லாத கல்வியெல்லாம் கற்றார். பாரசீகம், துருக்கி, இந்தி முதலிய மொழிகளிலும், வரலாறு, புவிஇயல், தாவர வியல் ஆகிய கலைகளிலும் மற்றும் பல நுண்கலைகளிலும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். ஓவியக் கலையை அவர் போற்றினார்; பயின்றார். 1585-ல் அவர் மணிபாய் என்னும் இராஜபுத்திர இளவரசியை மணந்தார். 1587-ல் குஸ்ருவும், 1589-ல் பார் விஸும் பிறந்தனர். அவருடைய முஸ்லிம் மனைவியான ஜகத் கோஸேன் என்பாள் 1592-ல் குர்ரம் என்னும் மகனை ஈன்றாள். குர்ரமே பிற்காலத்தில் ஷாஜஹான் என்னும் பட்டத் தோடு பேரரசை ஆண்டார். ஜஹாங்கீர் தம் 28-வது வயதிற் குள்ளாக 20 மனைவியரை மணந்திருந்தார். 1605-ல் அவருக்கு ஷாரியத் என்னும் நான்காம் புதல்வன் பிறந்தான். ஜஹாங்கீர் நாள் குறிப்பு வைத்திருந்தார். அஃது அவருடைய ஆட்சிக் காலத் தின் வரலாற்றை அறிதற்குப் பயன்படும். அவர், ஆட்சி தொடங்கிய உடனேயே அபுல் பசலைக் கொன்றார். அபுல் பசலைக் கொன்றவர்க்குப் பதவி உயர்வு கொடுத்ததோடு இதிமாத் உத்தௌலா ஜமானுபேக் (மகபத்கான்) என்பாரை உயர் பதவிக்கு நியமித்தார்.

தொடக்கத்திலிருந்தே ஜஹாங்கீருக்கும் அவர் மகன் குஸ்ரு விற்கும் தகராறு இருந்து வந்தது. அக்பரின் கடைசிக் காலத்தில் சலீமை நீக்கிவிட்டு குஸ்ருவைப் பேரரசராக்க வேண்டுமென்று மான்சிங் செய்த முயற்சியில் தொடங்குகிறது, இத் தகராறு. தரம் பட்ட மெய்தியபோது குஸ்ருவை மன்னித்து விடுவதாக வாக்களித்திருந்த போதும் அவனிடம் நம்பிக்கையின்மையால்

ஆக்ரா கோட்டையில் அவனைச் சிறைவைத்திருந்தார். சிறை யிருக்கப் பிடிக்காமல் 1606-ல் சிறையிலிருந்து தப்பி ஓடிய குஸ்ரு, மக்கள், தந்தையைவிடத் தன்னை அதிகமாக ஆதரிப்பார்கள் என்னும் எண்ணத்தைக் கொண்டு பஞ்சாப்மீது படையெடுத்து லாகூரை முற்றுகையிட்டார். இந்தச் செயற்பாடுகளில் குரு அர்ஜுன் அவருக்குப் பேருதவி புரிந்தார். மகனின் அடங்காமை யைக் கண்டு ஆத்திரமுற்ற அரசர் அவனைப் படைகொண்டு துரத்திச் சென்று காபூல்வரை ஓடியவனைப் போரிட்டுத் தோற் கடித்துச் சிறைபிடித்து மறுபடியும் சிறையிருத்தினர். அவனுக்கு உதவியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பேரரசர் உத்தரவுப்படி குரு அர்ஜுன் கொலையுண்டிறந்தார். 1607-ல் மறுபடியும் கலகத்தில் கலந்து கொண்ட குஸ்ருவைக் குருட னாக்கிய போதிலும் அவ் விளவரசன் திருந்தவில்லை. 1616-ல் தம் மூத்த மகனை குர்ரம்வசம் ஒப்படைத்தார். குர்ரம் தமக்கும் மொகலாய அரியணைக்கும் இடையே இடையூறாக இருந்த குஸ்ரு வைக் கொன்றுவிட்டுக் குஸ்ரு நோயால் இறந்ததாகப் பொய் கூறினர்.

உதயபூர் என்று பெயர்பெற்ற மேவாரை பிரதாப் சிங்கிட மிருந்து அக்பரால் உறுதியாகக் கைப்பற்ற முடியவில்லை என்பதை மேலே கண்டோம். பிரதாப் சிங்கை யடுத்து அவர் மைந்தர் அமர்சிங் 1597-ல் மேவாரை ஆளத்தொடங்கினர். எவ்வாறே னும் மேவாரைக் கைப்பற்றியே தீரவேண்டுமென்று தீர்மானித்த ஜஹாங்கீர் 1613-ல் அஜ்மீர் அருகில் முகாமிட்டார். இளவரசர் குர்ரமின் போர்த்திறமையால் ராணா அமர்சிங் சமாதானம் செய்துகொண்டார். அமர்சிங் மொகலாயருக்கு அடங்கிய சிற்றரசரானர். இராஜபுத்திர அரசுகளுக்கும், மொகலாயப் பேரரசுக்கும் அப்பொழுது தொடங்கிய நல்லுறவு 1680 வரையில் நீடித்தது.

முதன் முதலாகத் தக்காணத்தில் ஒரு தவருன அரசியல் கொள்கையின் முடிவாகத் தலையிடத் தொடங்கியவர் அக்பர். அகமது நகரின் ஒரு பகுதியும், பேராரும் பேரரசில் சேர்க்கப்பட்ட பிறகு அப் பகுதிகளைப் பேரரசில் தொடர்ந்து வைத்துக்கொள்ளு தற்கு மேலும் மேலும் தக்காணத்தில் வெற்றிகள் தேவைப் பட்டன. அகமது நகர் அரசியலில் அப்போது முக்கியமாக விளங் கியவர் மாலிக் ஆம்பர் என்பவர். அவர் மராட்டியர்களுடைய உதவிகொண்டு பேரரசுப் படைகளுக்கு மிகுந்த எதிர்ப்புக்காட்டி வந்தார். இந்த நிலைமையை மாற்றுதற்கு 1608-ல் ஜஹாங்கீரின் தக்காணப்போர் தொடங்கப்பட்டது. ஆயினும், 1610-ல்

அகமதுநகர் முழுவதையும் இழக்க நேரிட்ட பேரரசர் அப்துல்லா கான், கான்ஜஹான் லோடி, இராஜா மான்சிங் என்பார் மூவரிடமும் தக்காணத்துப் போரின் பொறுப்பை ஒப்படைத்தார். 1614-ல் மான்சிங் இறந்தார். தக்காணத்துப் போர் வெற்றியை நோக்கி நகரவில்லை. அதற்குக் காரணம் மாலிக் ஆம்பர் முதலானோரின் திறமை மட்டுமன்றி மொகலாயப் படைஞரிடையே இருந்த பல பிளவுகளுமாம். 1616-ல் இளவரசர் பார்விசை நீக்கிவிட்டுக் குர்ரத்திடம் தக்காணப் படைத்தலைமை ஒப்படைக்கப்பட்டது. இராஜபுத்திரப் போரைத் திறமையோடு வென்ற குர்ரம் தக்காணத்தையும் அடிப்படுத்துவாரென்று நம்பப் பட்டது. பேரரசரும் 1617-ல் மாண்டு அருகில் முகாமிட்டார். சில மாதங்களில் குர்ரத்தின் திறமையால் மாலிக் ஆம்பர் அகமது நகர் முழுவதையும் விட்டுக்கொடுக்க முன்வந்தார். குர்ரமின் பெருவெற்றி காரணமாக அவருக்கு ஷாஜஹான் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. ஷாஜஹான் என்றால் 'உலகத்தின் பேரரசர்' என்பது பொருள். தக்காணத்தில் மொகலாயர்களாலோ மற்றவர்களாலோ உருப்படியாக முன்னேற முடியாமைக்குக் காரணம் தக்காணத்து மராட்டியர்களோ, மற்றவர்களோ போரிலும் அரசியல் தந்திரத்திலும் தகுதி பெற்றவர்களென்றோ அன்றி அக்பருக்குப் பின்வந்த மொகலாயப் பேரரசர்களிடம் தகுதிக் குறைபாடோ, கொள்கைக் குறைபாடோ காணப்பட்டது என்பது பொருளன்று. இந்தியாவில் இயங்கும் எந்தப் பேரரசின் பரப்பிற்கும் இயற்கை விதிக்கும் எல்லை ஒன்றுண்டு. அதை மீற முயலும் பேராட்சிச் சக்திகள் தோற்றுப்போவது இயற்கை. எப்படி மொகலாயர்களால் தற்காலிகமாக அன்றி நிரந்தரமாக ஊன்றிக் கொள்ள முடியவில்லையோ அதேபோல மராட்டியர்களாலும் விந்தியத்திற்குத் தென்பால் தங்களை ஊன்றிக்கொள்ள முடியவில்லை யென்பது காண்க. மாலிக் ஆம்பர் ஷாஜஹானிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை 1620-ல் மீறினர். ஆயினும், அவருடைய கலகமும் விரைவில் ஷாஜஹானால் மறுபடியும் அடக்கப்பட்டது. 1617-லிருந்து தக்காணம் பேரரசின் உண்மையான பகுதியாயிற்று. இப் போர்களின் முடிவாகப் பெருமளவு புதுப்பிரதேசங்கள் மொகலாயப் பேரரசில் சேர்க்கப்பட்டபோது ஆண்டுதோறும் 50 லட்சம் ரூபாய் கப்பமும் வசூலாயிற்று. 1612-ல் வங்காளத்தை ஆண்ட ஊஸ்மான்கான் இறந்துபோன பிறகு வங்காளம் மொகலாயர் ஆட்சியில் நன்கு அடங்கிற்று. அஸ்ஸாமின் சில பகுதிகளும் 1612-ல் பேரரசைச் சேர்ந்தன. 1592-ல் இராஜா மான்சிங் தொடங்கிய கலிங்க வெற்றிகள் 1617-ல் பூர்த்தி செய்யப் பெற்றன. காஷ்மீரத்தில் கிஷ்ட்வாரும், பஞ்சாபில் காங்ராவும் 1620-ல் கைப்பற்றப்பட்டன. பஞ்சாப்

வெற்றி பேரரசர்க்குப் பெரு மகிழ்ச்சியளித்தது. ஏனெனில், மகா அக்பர் உட்பட ஒருவராலும் அப் பகுதியை அதுவரையில் வெல்ல முடியவில்லை.

1607-ல் ஜஹாங்கீர் கோவாவிற்கு ஒரு நட்புத் தூது அனுப்பினர். ஆயினும், உடனடியாக ஆங்கிலேயரான ஹாக்கின்ஸிற்கும் மொகலாயப் பேரவையில் நல்வரவளித்தமையால் சினமுற்ற போர்த்துகீசியர்கள் சூரத் அருகே இருந்த சில மொகலாயக் கப்பல்களைக் கைப்பற்றியமையால் போர் மூண்டது. டாமன் முற்றுகையிடப்பட்டது. பேரரசில் வாழ்ந்துவந்த போர்த்துகீசியர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களுடைய சமயப் பிரசாரகர்கள் கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்வதினின்றும் தடுக்கப்பட்டனர். மொகலாயர் அவையில் ஆங்கிலேயர் செல்வாக்கு மிகுந்தது. 1615-ல் ஒரு கடற்போரில் போர்த்துகீசியரை ஆங்கிலேயர் வென்ற பிறகு போர்த்துகீசியர்கள் மொகலாயர்களோடு சமாதானம் செய்துகொண்டனர். ஆயினும், போர்த்துகீசியர்களிடம் மொகலாயர்களுக்கு இருந்த நன்மதிப்பு குறையவில்லை.

ஆங்கில அரசி எலிஸபெத்திடமிருந்து அக்பரிடம் முதன் முதலாகத் தூது வந்தது. அதனை யடுத்து 1609-ல் காப்டன் ஹாக்கின்ஸ் என்பவர் ஜஹாங்கீர் அவைக்கு வாணிகச் சலுகைகள் பெறும் நோக்கத்தோடு வந்தார். அவர் ஜஹாங்கீரின் நண்பரானர். பேரரசர் அவரை மன்சப்தார் 400 ஆக நியமித்தார். ஆயினும், அவர் வாணிக நோக்கங்கள் ஒன்றும் கைகூடவில்லை; சர். தாமஸ்ரோ என்னும் ஆங்கிலேயர் ஆங்கில அரசரான முதலாம் ஜேம்ஸின் தூதராக மொகலாயர் அவைக்கு வந்தார். அவர் ஆங்கில வாணிகத்திற்குச் சில சலுகைகளைப் பெற்றார். இந்திய அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் அமைதியோடு வாணிக நலன்களைமட்டும் கவனிக்கும் கொள்கையை சர். தாமஸ் ரோ ஏற்படுத்தினர். அக் கொள்கை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் நெடுநாளைக்குக் பின் பற்றப்பட்டது. 1618-லிருந்து பேரரசில் பல தீமைகள் தோன்றின. முதலாவதாக, 1618-ல் ஔரங்கசீப் பிறந்தார். மற்றும் இன்புளுவன்ஸா நோயும், பிளேகும் பேரரசின் பல பகுதிகளில் பரவிப் பலரை வாட்டிற்று.

பாரசீகத்தில் பேரரசராயிருந்த ஷா அப்பாஸ், என்பாருக்கும் ஜஹாங்கீருக்குமிடையே நல்லுறவு நிலவிற்றுயினும் முந்தியவர் 1622-ல் காந்தஹாரை முற்றிக் கைப்பற்றினர். காந்தஹார்

நியாயமாகப் பாரசீகத்தைச் சேர்ந்தது என்பது ஷா அப்பாஸின் கொள்கை. அதனை அவர் ஜஹாங்கீருக்குத் தெளிவுபடுத்தினார்.

ஜஹாங்கீர் வாழ்க்கையில் தோன்றிய பல நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது அவர் நூர்ஜஹானைக் கண்டு, காதலித்து, மணந்துகொண்டமையேயாம். கியாஸ்பேக் என்னும் பாரசீகர் 1577-ல் அக்பரது அவைக்களத்தில் அலுவலாளராக அமர்ந்தார். ஜஹாங்கீர் பேரரசரானபோது அவருக்குப் பதவி உயர்வு கொடுத்தார். 1577-ல் கியாஸ் பேக்கிற்குக் காந்தஹாரில் பிறந்த அறிவறிந்த மகளே பிற்காலத்தில் நூர்ஜஹானாக விளங்கியவள். அவள் தனது 17-வது வயதில் அலிகுலி என்னும் பாரசீகரை மணந்துகொண்டாள். அலிகுலி ஒரு முறை ஒரு புலியைக் கொன்றமையால் ஷெர் ஆப்கன் என்னும் பட்டம் பெற்றார். அப்போது வங்காளத்தில் கவர்னராக இருந்தவர் குத்புதீன் கோகா என்பவர். பேரரசர் ஷெர்ஆப்கானை வங்காளத்திற்கு அனுப்பிக் கோகாவிடம் வேலைக்கு அமர்த்தினார். அவர்களிடையே தோன்றிய சண்டையொன்றில் ஷெர் ஆப்கன் கவர்னரைக் குத்திக் கொன்றார். கவர்னரின் மெய்க்காப்பாளர் ஷெர்ஆப்கனைக் கொன்றனர். கைம்பெண்ணான மெஹ்ருன்னிஸா (மகளிர் குல ஞாயிறு) ஆக்ராவிற்கு வந்து அங்குப் பேரவையில் அலுவல் பார்த்திருந்த தந்தையான கியாஸ் பெக் ஆதரவில் வாழ்ந்து வரலானாள். 1611-ல் அவளது 34-ஆம் வயதில் அவளைக் கண்ணுற்றுக் காமுற்ற காவலர் அவளை மணந்துகொண்டார். முதலில் அவளுக்கு நூர்மஹால் (அரண்மனையின் ஜோதி) என்னும் பட்டம் வழங்கப்பட்டது. 1616-ல் அவள் நூர்ஜஹான் (உலக ஜோதி) ஆனாள். அக்பர் வாழ்ந்த காலத்திலேயே ஜஹாங்கீர் (அப்பொழுது சலீம்) மெஹ்ருன்னிஸாவைக் கண்டு காதலித்ததாகவும் அவள் அவரைப் புறக்கணித்துவிட்டு ஷெர்ஆப்கனை மணந்துகொண்டதாகவும் இந்த ஏமாற்றத்தை என்றுமே மறவாத சலீம் தாம் பேரரசரான பிறகு ஷெர் ஆப்கனின் கொலைக்குக் காரணமாயிருந்து மெஹ்ருன்னிஸாவைத் தன்னுடைய அரண்மனையில் அலுவல் பார்க்க நியமித்துக்கொண்டதாகவும் அவளை அப்பொழுது பேரரசர் மணந்துகொள்ள விரும்பிய விருப்பத்தை அப் பெண் திறமையோடும், வீரத்தோடும் நான்கு ஆண்டுகள் எதிர்த்தாளென்றும் அதன் பிறகு அவள் மனமிரங்கி ஜஹாங்கீரை மணந்துகொண்டாள் என்றும் கூறப்படும் கட்டுக் கதைகள் ஒன்றற்கும் அக் கால வரலாற்று மூலங்களில் யாதொரு சான்றுமில்லை என்பதை ஜஹாங்கீரின் வரலாற்றைத் திறம்பட எழுதிய பேணி பிரசாத் என்பவர் ஐயத்திற்கு இடமின்றி எடுத்துக் காட்டியுள்ளார். மணமான நாளிலிருந்து ஏறத்தாழக் கடைசிவரையில்

பேரரசரைத் தனது கைப்பாவையாக அவள் ஆட்டிவைத்தாள் என்பது வரலாற்ருளர் கூறும் ஒரு செய்தி. ஆனல், ஜஹாங்கீரின் தன்மையை உள்ளபடி உணர்ந்தவர்கள் இக் கூற்றினைச் சற்று மாற்றிக் கூறுவர். ஜஹாங்கீரும், நூர்ஜஹானும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்த நாளெல்லாம் அவர்களிடையே அரசியல் கொள்கை நிலைகளிலிருந்து அரண்மனைச் சிற்றேவல் நிலைவரை எப்போதும் எவ்வித கருத்து வேறுபாடும் இருந்ததில்லை என்பதை யும் பேரரசின் நன்மைக்கும், பேரரசரின் புகழுக்கும் சலியாது அவள் பாடுபட்டதையும், மன்னர் இயல்பினையும் உணர்ந்தவர்கள் அவர் தம் விருப்பப்படியே ஆட்சியின் ஆதிக்கத்தை நூர்ஜஹான் கையில் ஒப்படைத்துவிட்டு அவள் ஆட்சியைக் கண்டு அவர் மகிழ்ந் தார் என்று கூறுதல் ஏற்புடைத்தாகும். ஒரு முறை பேரரசரே கூறினர்: 'அரசின் ஆதிக்கத்தை நூர்ஜஹானிடம் ஒப்படைத்து விட்டேன். எனக்கு வேண்டியதெல்லாம் ஒரு சேர் மதுவும் அரைசேர் உணவும்தான்.' உண்மையில் ஆட்சியைத் தாமே நடத்தவேண்டிய ஜஹாங்கிர் அதில் ஓரளவு பங்குகொள்ள நூர்ஜஹாணுக்கு இடம் கொடுத்தார் என்பதே நிகழ்ச்சியாகும். பேரரசின் அவைக்களத்தின் பெருமை நூர்ஜஹானின் நாகரிகத் தால் உயர்ந்ததேயன்றிக் குறையவில்லை. சில காலத்திற்கு நூர்ஜஹான் பெயரால் நாணயங்கள் வழங்கப்பட்டன. அவை யில் அவளது தந்தையான இதிமாத் உத்தௌலாவும், அவளுடைய சகோதரனை அபுல்ஹஸானும் (அஸப்கான்) அவ் அபுல்ஹஸானின் மகளான அர்ஜுமந்த் பானு என்பாளும் அவளை மணந்த இள வரசர் குர்ரமும் நூர்ஜஹானின் ஒத்துழைப்போடு மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள். 1618-க்குப் பிறகு அரண் மனையில் ஆதிக்கப்போட்டி தொடங்கிற்று. ஜஹாங்கீரின் உடல் நலம் அளவிறந்த குடியால் பாதிக்கப்பட்டது. அவர் இறந்து போவாரோ என்னும் அச்சமும் மிகுந்தது. மன்னர் மறைந்து போய் ஷாஜஹான் பட்டத்துக்கு வந்துவிட்டால் தான் வழக்க மாகச் செலுத்திய ஆதிக்கம் குறைந்துபோகுமே என்று அஞ்சிய நூர்ஜஹான் ஷெர்ஆப்கனல் தான் பெற்ற மகளை ஜஹாங்கீரின் மகனை ஷாரியத்திற்கு மணம் புரிவித்தாள். அதன் பிறகு குர்ரத்தை நீக்கிவிட்டு ஷாரியத்தைப் பேரரசராக்கும் திட்டத்தில் ஈடுபட்டாள். அதற்கு இதிமாத் உத்தௌலாவின் ஆதரவும் கிடைத்தது. இதற்கிடையே 1622-ல் அவளுடைய தந்தை இறந்தார். பேரரசுப் பட்டத்திற்குப் பார்விஸ் பெருங்குடிகாரன் ஆதலின், ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. அவ் வாண்டு குஸ்ருவும் இறந்துபோனர். அதாவது ஷாஜஹானின் சூழ்ச்சி யால் கொலை செய்யப்பட்டார். போட்டிக்கு விஞ்சியவர்கள் ஷாஜஹானும், ஷாரியரும்தான். ஷாஜஹானை நீக்கி ஷாரியரை

மன்னராக்கும் முயற்சியில் நூர்ஜஹான் அசகாயமாக ஈடு பட்டாள். நூர்ஜஹானின் சூழ்ச்சிகளை முற்றிலும் அறிந்திருந்த ஷாஜஹான் எதிர்ச் சூழ்ச்சிகள் செய்யத் தயங்கவில்லை. காந்த ஹாரை பாரசீகர்கள் முற்றுகையிட்டபோது அதை விடுவிக்க ஷாஜஹானை அனுப்ப நூர்ஜஹான் திட்டமிட்டாள். ஷாஜஹான் தலைநகரைவிட்டுச் செல்ல மறுத்துவிட்டார். நூர்ஜஹானின் தூண்டுதலால் ஜஹாங்கீர் குர்ரத்தின் ஜாகீர்களைப் பிடுங்கிக் கொண்டார். ஷாஜஹானை அடக்குவதற்கு மகபத்கானைப் படைத் தலைவராக நியமித்தார். அவர் ஷாஜஹானைத் தக்காணத்திற்குத் துரத்தினார். ஷாஜஹான் அகமது நகர், கோல்கொண்டா, ஒரிஸ்ஸா, வங்காளம் முதலிய இடங்களைச் சுற்றித் திரிந்தார். தம்மைத் துரத்தியவர்களைச் சில இடங்களில் வென்றாராயினும் அலகாபாத்தில் பெருமளவு அவர் தோல்வியடைந்தார். இதற் கிடையே தக்காணத்திலிருந்த மாலிக் ஆம்பருக்கும் பேரரசு படை யினருக்கும் சண்டை வலுத்து மாலிக் ஆம்பர் பல வெற்றிகளைக் கண்டார். அவர் ஷாஜஹானைத் தம்முடைய உதவிக்கு அழைத் தார். ஷாஜஹான் உதவியைக்கொண்டு புர்ஹான்பூரை 1625-ல் தாக்க வேண்டுமென்பது மாலிக் ஆம்பரின் திட்டம். ஆனால், புர்ஹான்பூரின் தற்காவலுக்குப் பேரரசுப் படைகளோடு மகபத் கான் வந்து சேர்ந்ததும் நிலைமை சற்று மாறிவிட்டது. ஷாஜஹான் நூர்ஜஹானின் ஆணைக்கு இணங்கினார். தம் மக்களான தாரா, ஔரங்கசீப் இருவரையும் ஆக்ராவிற்கு அனுப்பிவைத்தார். அவர் தாமே நாஸிக்கிற்குப் போய்விட்டார்.

மகபத்கானை நூர்ஜஹான்தான் மொகலாயப் படைத் தலைமைக்கு நியமித்தார். ஆயினும், அப் படைஞருக்கு அவ் வரசிமீது தீராத பகைமையும், வெகுளியும் இருந்தன. நூர் ஜஹான் தன் சகோதரனை அஸப்கானின் உதவிகொண்டு மகபத்கானை அடக்க முயன்றாள். ஆயினும், நூர்ஜஹானுக்கும், அஸப்கானுக்கு மிடையேயும் அடிப்படை நோக்க வேறுபாடிருந் தது. நூர்ஜஹான் தன் மருமகனை ஷாரியரைப் பேரரசராக்க வும் அஸப்கான் தன் மருமகனை ஷாஜஹானைப் பேரரசராக்க வும் தனித்தனியே முயன்று வந்தனர். மகபத்கானோ எனில், பார்விஸை ஆதரித்தார். இம் மூவரிடையே அதாவது, ஷா ஜஹான், பார்விஸ், ஷாரியர் என்பாரிடையே இருந்த வேறுபாடு கள் ஷாஜஹான் ஆட்சியின் இறுதிக் காலத்தில் தோன்றிய பெரிய பட்டப்போட்டியை ஓரளவு ஒத்தது. ஆனால், இப்பொழுது நடந்த ஆதிக்கப்போட்டியில் அவ்வவரர்களுடைய ஆதரவாளர் களே போட்டியில் இறங்கினர். மகபத்கானை எவ்வாறேனும் ஒழித்துவிட வேண்டுமென்று நூர்ஜஹான் திட்டமிட்டாள்.

அரசாங்க நிதியைக் கையாண்டதாக அவர்மீது குற்றம் சாட்டப் பெற்றது. தன்னைக் காத்துக் கொள்ள வேண்டி 1626-ல் லாகூரிலிருந்து காபூலுக்குச் சென்று கொண்டிருந்த பேரரசரை யும் நூர்ஜஹானையும் மகபத்கான் சிறைபிடித்தார். நூர் ஜஹான் தப்பிவிட்டதோடு மகபத்கானுக்கு அடங்கியதாக நடித்து மிகுந்த திறமையோடு மகபத்கான் பிடியிலிருந்து பேரரசரை விடுவித்துக்கொண்டாள். இதற்கிடையே பார்விஸ் இறந்து போனான். ஜஹாங்கீர் விடுதலையடைந்ததும் மகபத் கானின் ஆதிக்கம் அடங்கிற்று. அவர் ஆக்ராவிலிருந்து மேவா ருக்கு ஓடி ஷாஜஹானின் நட்பை நாடினர். 1627-ல் அவர்களி டையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இக் கூட்டுறவால் நூர்ஜஹா னின் திட்டங்கள் பலவீன மடைந்தன. 1626-ல் மாலிக் ஆம்பர் இறந்துபோனர். அத் திறமை வாய்ந்த பகைவர் இருந்தவரை யில் மகபத்கானின் சேவை மொகலாய அரசுக்குத் தேவைப் பட்டது. அதன் பிறகு அத் தேவை நின்றுவிட்டது. அன்றியும், மாலிக் ஆம்பரின் மகனை பத்கான் மொகலாயருக்கு அடிபணிந் தான். இப் பணிவினுல்கூட ஜஹாங்கீரின் தக்காணப் போர்கள் ஒரு திருப்தியான முடிவை எய்திவிட்டதாகக் கூறமுடியாது. அகமது நகரிலிருந்த ஹமீதுகான் காஞ்ஜஹானை லஞ்சம் கொடுத் துத் தன்வயமாக்கி மொகலாயர் ஆதிக்கத்தின் பளுவை அகமது நகரம் உணராதபடி செய்தார்.

ஜஹாங்கீர் தமது உடல்நிலை திருந்துவதற்காக 1627-ல் காஷ்மீரத்துக்குச் சென்றார். ஆயினும், உடல்நிலை திருந்தவில்லை. திரும்பி வரும் வழியில் லாகூர் அருகில் அவர் இறந்தார். ஷாஜஹானும் அஸப்கானும் உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டு நூர்ஜஹானின் ஆதிக்கத்தை யொழித்து அவளுக்கு ஆண்டுதோறும் 2 லட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்து அரசியலினின்றும் விலக்கினர். மொகலாய அரசுரிமையைக் கைப்பற்றுவதற்கு ஷாரியர் முயன்றார். ஆனல், அவர் முயற்சி தோற்றது. அவருடைய எதிரிகள் அவரைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டனர்.

நூர்ஜஹான் அறிவிலும், அழகிலும், சிறந்து விளங்கிய அரசி. அவள் குதிரையேற்றம், வேட்டம் முதலியவற்றைத் தேர்ச்சியோடு கடைப்பிடித்தார். இலக்கியங்களிலும், நுண் கலைகளிலும் அவளுக்கு ஆர்வமும் பயிற்சியுமுண்டு. அரசு நடத்த வேண்டிய ஓர் ஆண் பிள்ளைக்குத் தேவையான மனவன்மையை யும், உடல் திண்மையையும்விடச் சற்று மிகையாகவே அவளிடம் அப் பண்புகள் காணப்பட்டன. அழகுக் கலையை ஆதரித்த அவ்

வரசி ஏழை எளியவர்களை ஆதரித்தாள். அவள் தனக்கிருந்த ஆற்றலாலும் தன் உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்த திறமையாலும் ஆட்சியை நல்ல முறையில் நடத்தினளென்றே கூற வேண்டும். ஷாஜஹானின் பகைமைக்குக் காரணம் முஸ்லிம் ஆட்சியில் பொதுவாகவும், மொகலாயர் ஆட்சியில் சிறப்பாகவும் நிர்ணயமான அரசுடைமைச் சட்டமோ, மரபோ இன்மையே. மகபத்கானின் துணிச்சலான பகைமைக்கு அக்பர் [illegible] மன்சப்தாரித் திட்டத்தைக் காரணம் கூறவேண்டும். [illegible] நகரில் நடந்த அரசியல், இராணுவக் குழப்பங்களுக்கு மொகலாயர்களுடைய தக்காணக் கொள்கையே அடிபடைக் காரணமாம். அக் கொள்கையை உருவாக்கியவர் அக்பர். ஆதலால், அக்பரின் அரசியற் கோட்பாடுகளைப் புகழ்கிறவர்கள் நூர்ஜஹானைக் குறைகூறமுடியாது.

ஜஹாங்கீர் படித்தவர்; அழகுக் கலைகளில் ஈடுபட்டவர்; வாழ்க்கையை மேற்போக்காக நடத்த விரும்பியவர். அரசியலில் அதிகப் பிடித்தமில்லாதவர். ஆயினும், அவரைக் குடிகாரரென்றும் அரசியல், இராணுவத் திறமையில்லாதவரென்றும், தையற்சொல் கேட்டுப் பேரரசைப் பலவீனப்படுத்தியவரென்றும் பலவாறாகக் கூறுதல் தவறு. அக்பர் அபுல்பசல்மூலம் ஆட்சி நடத்தியமாதிரி ஜஹாங்கீர் நூர்ஜஹான்மூலம் ஆட்சி நடத்தினார். தந்தைக்கும் மகனுக்குமிடையே தோன்றிய கலகங்களுக்கு அபுல்பசல் காரணராயிருந்ததுபோல ஜஹாங்கீர் ஆட்சியில் நூர்ஜஹான் அரண்மனைக் குழப்பங்களைப் போற்றி வந்தார். தோட்டங்கள் அமைப்பதிலும், பூச்செடிகளையும், பழமரங்களையும் வளர்ப்பதிலும் அவர் நிகரற்று விளங்கினார். அவர் தம் தந்தையாரின் சமயக்கோட்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். அவர் நீதி வழங்குவதில் ஷெர்ஷாவைப்போல மிகுந்த அக்கறை காட்டினார். அவர் அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி கட்டிய சங்கிலி ஒன்று தொங்கியது. பெரும்பான்மை முஸ்லிம் அரசர்களைப்போல அவர் தண்டனையளிப்பதில் கொடியவராய் இருந்தார். அவர் மிகவும் குடித்தாராயினும் அவர் காலத்துப் பாரசீக மன்னரான ஷா அப்பாஸைப் போலப் புகையிலையைச் சுருட்டாகப் பயன்படுத்துவதைத் தடுத்தார். ஜஹாங்கீர் இஸ்லாமைப் பின்பற்றினார். அவர் முஸ்லிம்களுக்குப் பிடிக்காத சில காரியங்களையும் செய்தார். உதாரணமாக அவர் குரானை மொழிபெயர்க்க உதவினார். அவர் வேதாந்தத் தத்துவங்களுக்கும் சூபி கொள்கைகளுக்கும் ஆதரவளித்தார். அக்பரைவிட அதிகமாகவே அவர் கிறிஸ்துவப் பாதிரிகளைப் போற்றினார்.

கட்டடக் கலையை ஜஹாங்கீரும் நூர்ஜஹானும் போற்றினர். சிக்கந்தராவிலுள்ள அக்பருடைய மசூதி, ஜஹாங்கீருக்காக நூர்ஜஹான் கட்டிய மசூதி, ஆக்ராவில் கட்டப்பட்ட இதிமாத் உத் தௌலா மசூதி முதலியவை அவர் காலத்து முக்கியமான கட்டடங்கள். கடைசியில் கூறப்பட்ட கட்டடம் முதன் முதலாக வெண்பளிங்குக் கல்லால் முற்றிலுமியன்ற கட்டடம். தோட்டக் கலையில் அவருக்கிருந்த ஆர்வமும் திறமையும் அளவிறந்தன. ஓவியக் கலையையும் இசைக்கலையையும் அவர் போற்றினாராயினும் ஓவியக் கலையை அவர் பயிலவும் பயின்றார். ஜஹாங்கீர் காலத்து நாணயங்கள் வெள்ளியிலும் பொன்னிலுமானவை. மொகலாயர் காசுகள் யாவற்றுள்ளும் ஜஹாங்கீர் காலத்துக் காசுகளே மிகச் சிறந்தவை. ஐந்து ஆண்டுக் காலத்துக்கு நூர்ஜஹான் பெயரால் காசுகள் வழங்கினர். அவருடைய காசுகள் ஒன்றில் பேரரசர் கையில் மதுக்கோப்பையோடு காணப்படும் காசு அருமையானது.

25. ஷாஜஹான் (1628-1658)

ஷாஜஹான் 1592-ல் பட்டமெய்தினர். அவர் 1612-ல் மும்தாஜ் மஹால் (அரண்மனையின் அணிகலன்) என்னும் புகழ் பெற்ற அர்ஜுமந்த் பானு என்பாளை மணந்துகொண்டார். ஜஹனுரா, தாரா, ஷுஜா, ரோஷனுரா, ஔரங்கசீப், மூரத் பக்ஷ், கௌஹராரா என்போர் அவருடைய மக்கள். அவர்களில் மூத்தவளான ஜஹனுராவினிடமும் முதல் மகனான தாராவிடமும் அவருக்குத் தனிப்பட்ட பற்றுதல் உண்டு. சூர்ரம் சிறந்த போர் வீரரென்பது அவருடைய உதயபூர் போர்களிலும் தக்காணத்துப் போர்களிலும் தெளிவாயிற்று. அவர் தம் மாமனரான அஸப் கானின் உதவியால் பேரரசரானுர் (பிப்ரவரி 4, 1628). அஸப் கான் முதல் மந்திரி ஆக்கப்பட்டார். மகபத்கான் பதவி உயர்வு பெற்று கான்கனன் என்னும் உயரிய பட்டமும் பெற்றார். அவர் பட்டமெய்திய உடனேயே அக் காலத்திலேயே ஒரு கோடி ரூபாய் மதிப்புடையதாயிருந்த மயிலாசனம் செய்து முடிக்கப்பட்டது. தக்காணத்தில் மகபத்கானுக்குப் பிறகு படைத் தலைவராயிருந்த கான்ஜஹான் முதலில் சில காலம் பேரரசு ஆதிக்கத்திற்கு அடங் காமலிருந்து பிறகு அடங்கினர். மறுபடியும் அகமது நகரி லிருந்த அமீதுகானேடு சேர்ந்துகொண்டு பேரரசின் நலனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யத் தொடங்கியமையால் அவரை ஆக்ரா விற்குத் திரும்ப அழைத்தனர். ஆயினும், அங்கிருந்து தப்பித்துக் கொண்டு அவர் தக்காணத்துக்கே வந்து ஷாஜஹானுக்கு எதிராகப் போர்த் தொழிலில் ஈடுபடலானர். அவர் காலத்தில் தான் முதல் முதலாக மராட்டியர் ஷாஜி பான்ஸ்லே வாயிலாகத் தக்காணத்தில் சிறிது சிறிதாக ஆதிக்க வேட்டையில் இறங்கினர். நைஸாம் ஷாவோடு பகைத்துக்கொண்ட ஷாஜி பான்ஸ்லே மொகலாயரை ஆதரித்தார். அவர் மன்சப்தார் 5,000 பதவியை அடைந்தார். நைஸாம் ஷாவின் எதிர்ப்புகளை முரியடிக்க

மொகலாயப் படை பெருமுயற்சி மேற்கொண்டது. இதில் பெருமளவு வெற்றியும் கிட்டியது. 1631-ல் மாலிக் ஆம்பரின் மகனை மூன்றும் பாத்கான் ஹுசேன் என்பாரை அகமது நகர் சுல்தானாக்கி ஷாஜஹானுக்கு அடிபணிய வைத்தார். மன்னருக்குப் பணியாத பீஜபூரை 1632-ல் மொகலாயர் அஸப்கான் தலைமையில் படையெடுத்து மிகுதியான நாசம் விளைவித்தனர். ஆயினும், பீஜபூரைக் கைப்பற்ற முடியாமையால் அஸப்கானுக்குப் பதிலாக மகபத்கான் படைத்தலைமை பூண்டார். அவர் தௌலதாபாத்தை முற்றுகையிட்டு 1633-ல் கைப்பற்றினர். அகமது நகர சுல்தானான மூன்றும் ஹுசேன், பீஜபூரைச் சேர்ந்த பாத்கான் இருவரும் சிறையிருத்தப்பட்டனர். அதற்குமேல் பீஜபூரில் தொடர்ந்து தோன்றிய கலகங்களை—இவற்றில் பெரும்பாலானவற்றை மராட்டியர்கள் தூண்டினர்—அடக்க முடியவில்லை. வயதான மகபத்கானிடம் ஷாஜஹான் தக்காணத்துத் தோல்விக்கு அவரே காரணமென்று குற்றம் சாட்டினர். ஆயினும், அப் படைத்தலைவர் 1634-ல் இறந்து போனர். அதன் பிறகு ஷாஜஹான் தாமே தௌலதாபாத்திற்கு வந்து தக்காணத்து நிலைமையைச் சீர்படுத்தினர். 1636-ல் பீஜபூர்கள் மொகலாயருக்கு அடங்கி நடப்பதாக ஒப்புக்கொண்டனர். நைஸாம் ஷாஹியின் அகமது நகரப் பிரதேசங்கள் பீஜபூருக்கும் மொகலாயருக்குமாகப் பிரிக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் 1656 வரையில் நடைமுறையில் இருந்தது. 1636-ல் கான்டேஷ், பேரார், தெலுங்கானா, தௌலதாபாத் ஆகிய நான்கு மாகாணங்கள் கொண்ட தக்காணத்து மொகலாய அரசப் பிரதிநிதியாக ஔரங்கசீப் நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவருக்கு வயது 18. பீஜபூரோடு திருப்திகரமான உடன்படிக்கை செய்துகொண்டபிறகு கோல்கொண்டாவோடு வேறு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அவ் வொப்பந்தப்படி ஆண்டுதோறும் 8 லட்ச ரூபாய் கோல்கொண்டா மொகலாயருக்குக் கப்பம் கட்ட வேண்டுமென்றும். அந் நாட்டில் ஷியா மதத்தை ஒடுக்கவேண்டுமென்றும், ஒப்பந்தத்தில் காணப்பட்டது. ஷாஜியால் அகமது நகரத்து சுல்தானாக்கப்பட்ட மூன்றும் முட்டாஸா 1637-ல் மொகலாயரால் பிடித்துக் குவாலியரில் சிறையிருத்தப்பெற்றார்.

ஷாஜஹானுக்கும் இந்தியாவில் குடியேறிய போர்த்துகீசிய வணிகர்களுக்கும் உறவு கசந்தது. ஹுப்ளியிலிருந்த போர்த்துகீசியர்கள் ஷாஜஹான் இளவரசராக இருந்தபோது அவரை மதிக்கவில்லை. அரசியான மும்தாஜ் மஹாலின் அடிமைப் பெண்கள் இருவரை விலைக்கு வாங்கி விற்றுவிட்டனர். இதையெல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு ஷாஜஹான் ஹுப்ளியிலிருந்த

போர்த்துகீசியரைத் தாக்கிச் சிறைபிடித்தார். அவர்களில் பலர் ஆக்ராவிற்குக்கொண்டு செல்லப்பெற்றுத் துன்புறுத்தப்பட்டனர். அவர்களை வற்புறுத்தி மதம் மாற்ற முயன்றனர். 1634-ல் காஷ்மீர் அருகிலுள்ள பலுசிஸ்தான் பேரரசில் சேர்க்கப்பட்டது. பண்டேல்கண்டிலிருந்த ஜுஜார்சிங் கோண்டுவாணவைச் சேர்ந்த சிலரால் கொல்லப்பட்டார். அவருடைய குடும்பம் அடிமையாக் கப்பட்டது. 1638-ல் அஸ்ஸாமில் தோன்றிய கலகம் ஒடுக்கப் பட்டது. பண்டேல்கண்டில் ஆண்டுவந்த சம்பத்ராய் என்பவர் பயனின்றிக் கலகம் செய்தார். அவர் பிறகு பேரரசு அலுவலாள ராகக் வேலை மேற்கொண்டார். அவர் மைந்தனான சத்ரசால் பண்டேலா என்பவர் ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் பேரரசை எதிர்த்துக் கலகம் செய்தமை மேலே காணப்படும். 1654-ல் உதயபூர் ராணா மொகலாயரோடு முன்பு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறினார். ஆதலால், அவருடைய கோட்டை கொத்தளங்கள் இடிக்கப்பட்டன. அவரும் பேரரசரிடம் அடி பணிந்தார். உத்தரப் பிரதேசத்தின் மலைநாடான கார்வால் என்னும் பகுதியில் ஆண்ட அரசர்மீது மும்முறை போர்தொடுத்து இறுதியாக 1656-ல் அவரை அடக்கினார். 1638-ல் காந்தஹாரில் பாரசீகக் கவர்னராயிருந்த அலிமர்தன்கான் என்பவர் காந்தஹார் கோட்டையை மொகலாயர் பக்கம் ஒப்படைத்தார். அதனால் அவருக்குக் காஷ்மீரத்துக் கவர்னர் பதவி அளிக்கப்பட்டது. அக்பர் ஆட்சிக் காலத்திலேயே மத்திய ஆசியாவில் இருந்த, முன்பு தைமூருக்குச் சொந்தமாயிருந்த சில பிரதேசங்களைக் கைப்பற்ற முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், அப்துல்லாகான் உஸ்பெக் என்பாருடைய திறமையினால் அம் முயற்சிகள் தோற்றன. 1639-ல் ஷாஜஹான் மீண்டும் அம் முயற்சிகளில் ஈடுபட்டார். இளவரசர் மூரத்பக்ஷ் தலைமையில் அனுப்பப்பட்ட ஒரு மொகலாயப்படை ஆப்கானிஸ்தானம்வரையில் முன்னேறியது. பிறகு அவர் ஆக்ராவிற்குத் திரும்பினார். அவருக்குப் பதிலாக ஔரங்கசீப் படைத்தலைமையை மேற்கொண்டார். அவர் உஸ்பெக்குகளைத் தோற்கடித்தாராயினும் ஆக்ஸஸ் நதியைக் கடத்தல் ஆபத்தானது என்று அறிந்து காபூலுக்கே திரும்பினார். 1649-ல் பாரசீகர்கள் காந்தஹாரைத் திரும்பவும் கைப்பற்றிக்கொண்டனர். அப் போது பாரசீகத்தில் இரண்டாம் ஷா அப்பாஸ் என்பவர் அரச ராய் இருந்தார். அதற்குப் பிறகு மொகலாயர்களால் காந்த ஹாரைத் திரும்பக் கைப்பற்றவே முடியவில்லை. மலைப்பிரதேசங் களான ஆப்கானிஸ்தானப் பகுதிகளைத் தொலைவிலுள்ள தலை நகரிலிருந்து ஆளமுடியாது என்பதை இந் நிகழ்ச்சிகள் காட்டு கின்றன.

ஷாஜஹானின் ஆட்சியின் பிற்பகுதியின் முக்கியத்துவம் அப்பேரரசரின் செயற்பாடுகளால் ஏற்படாது, ஔரங்கசீபின் அரசியல் போர்ச் செயல்களால் ஏற்பட்டிருந்தது. அதாவது ஷாஜஹானின் ஆட்சியின் பிற்பகுதியில் பேரரசரைவிட இளவரசர் (ஔரங்கசீப்) முக்கிய நிலையை எய்திவிடுகிறார். அவர் வடமேற்கு இந்தியாவில் ஊஸ்பெக்குகளையும் பாரசீகர்களையும் எதிர்த்து நடத்திய போர்களாலும், தக்காணத்தில் இருமுறை அரசப் பிரதிநிதியாக நடத்திய ஆட்சியாலும் பேரரசிலேயே மிக முக்கியமானவர் என்னும் நிலையை எய்திவிட்டார். அன்றியும், 1658-ல் தொடங்கிய அரசுரிமைப் போராட்டக் காலத்திலேயே ஷாஜஹான் அரசியல் கட்டத்திலிருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டார். 1658-ல் ஔரங்கசீப் பேரரசுப் பட்டத்தை ஏற்றுக்கொண்டபின் ஷாஜஹான் ஒரு கைதியாக வாழ்ந்தாராதலின் அரசியல் பொதுவாழ்க்கையினின்றும் அறவே அகற்றப்பட்டார். ஆதலால், ஏறத்தாழ 20 ஆண்டுக் காலத்திற்கு ஷாஜஹான் ஆட்சியும், ஔரங்கசீபின் அரசியல் தலைமையும் இணைகின்றன.

ஔரங்கசீப் 1618-ல் பிறந்தார். ஷாஜஹான் 1626-ல் ஜஹாங்கீரிடம் பணிந்து போனபோது இவ் விளவரசர் ஆக்ராவிலேயே இருந்து வரலாயினர். இளவயதிலேயே ஒரு நல்ல முஸ்லிமிற்குத் தேவையென்று கருதப்பட்ட எல்லாக் கலையையும் கல்வியையும் நன்கு பயின்றார். தமது பதினைந்தாவது வயதில் அவர் ஒரு யானையோடு சண்டையிட்டாராதலின் அவருக்கு பகதூர் என்னும் பட்டம் அவர் தந்தையால் அளிக்கப்பட்டது. இதனை யடுத்து அவர் ஒரு மன்சப்தார் 10,000 ஆனார். 1636-ல் ஔரங்கசீப் தக்காணத்து அரசப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவருடைய இராணுவ முயற்சியால் ஷாஜிபான்ஸ்லே தாம் சுல்தானாக நியமித்த நைஸாம் ஷாவை மொகலாயரிடம் ஒப்படைத்துவிட்டுத் தாமும் சரணடைந்தார். 1637-ல் அவருக்கு முதல் திருமணமாயிற்று. தக்காணத்தை ஆளுவதில் தோன்றும் தொல்லைகள் யாவற்றையும் ஔரங்கசீப் அறிந்திருந்தார். செல்வாதாரத்தில் தன்னிறைவில்லாத தக்காணத்தைப் பேரரசின் நிதி உதவியில்லாமல் ஆளமுடியாது என்பது தெளிவாயிற்று. தொடக்கத்திலிருந்தே ஔரங்கசீபிற்குப் பிறருடைய ஆதரவு கிடைத்ததில்லை ; அவரும் அத்தகைய ஆதரவுகளைத் தேடியதுமில்லை; அவ்வாறு ஆதரவு தர முன் வந்தவர்களை நம்பியதுமில்லை. ஔரங்கசீபின் சகோதரர்களில் மூத்தவரான தாரா ஷாஜஹானின் செல்வப் புதல்வர். அவருக்கும் ஔரங்கசீபிற்கும் இடையே எப்பொழுதும் நல்லுறவு இருந்ததில்லை. அவருடைய தூண்டுதலால் பேரரசரும் ஔரங்கசீபைத் தம் பகைவர்

போலவே நடத்திவந்தார். தந்தை, உடன்பிறந்தார் என்போர் ஒருவருடைய ஆதரவும் இல்லாமையால் ஔரங்கசீப் தம்முடைய மதியாலேயே தம் வாழ்க்கையை வகுத்துக்கொள்ளவேண்டிய தாயிற்று. அன்றியும், அவருக்கு அன்பு மனப்பான்மையைவிட வெறுப்பு மனப்பான்மை மிகுந்திருந்தது. பிறரை நம்பிப் பிறருடைய நம்பிக்கைக்குத் தாமும் பாத்திரமாய் இருப்பதைவிடத் துரோகச் செயல்கள் புரிவது அவருடைய இயல்பாயிற்று. பரந்த மனப்பான்மையை விட்டுக் குறுகிய மனப்பான்மை மிகுந்தது. 'தன் கைவாளே தனக்குதவி', 'தன் புத்தியே தனக்கு ஆதரவு' என்னும் நிலைக்கு வந்துவிட்ட ஔரங்கசீப் ஒன்றைவிட ஒன்று கூர்மையான தம் கத்தியையும் புத்தியையும் கொண்டே எல்லா வித இடையூற்றிற்கும் தாம் ஓர் இடையூறாய் நின்று சகோதரர்களைக் கொன்று தந்தையைச் சிறையிருத்திப் பேரரசுப் பதவியை அடைந்தார்.

தக்காணத்தில் அவருடைய முதல் அரசப் பிரதிநிதித்துவ காலத்தில் (1636-1644) அவர் கண்ட அரசியல் போர்க்கள வெற்றிகளை நோக்கி அஞ்சிய, பொறாமை கொண்ட தாராவின் தூண்டுதலால் அவர் தக்காணத்தினின்றும் அகற்றப்பெற்றார். அந்த வருத்தம் தாங்காமல் அவர் துறவியாய்ப் போய்விடத் துணிந்தார் என்று கூறப்படுவது ஒரு கதை. 1645-லிருந்து 1647 வரை குஜராத்திலும் 1648 முதல் 1652 வரை மூல்தான், சிந்துவிலும் அவர் கவர்னரா யிருந்தார். 1652 முதல் 1658 வரை அவர் இரண்டாம் முறையாகத் தக்காணத்து அரசப் பிரதிநிதியானார். அப்பொழுதும் முன்பிருந்த செல்வாதாரத்தொல்லைகள் குறையவில்லை. 20ஆண்டுகளுக்கு முன்பு தக்காணத்தை வாட்டிய கொடிய பஞ்சத்தின் விளைவுகளிலிருந்து அந் நாட்டு மக்கள் விடுபடவில்லை. அரசின் வருமானத்தில் 20 லட்ச ரூபாய்வரையில் பற்றாக்குறை இருந்தது. அந் நிலையில் ஔரங்கசீப் மூர்ஷித் குலிகான் என்னும் திவானின் அரிய உதவியைக் கொண்டு தக்காணத்து நிலவரித் திட்டத்தை நேர்மையான முறையில் மாற்றி யமைந்தார். அன்றியும் சிவில், இராணுவ நிர்வாகம் சீர்திருத்தப்பட்டமையால் அரசின் செலவினங்கள் குறைந்து ஆட்சியின் தன்மை உயர்ந்தது. அவர் செய்த நிலவரித் திட்டச் சீர்திருத்தம் தோடர்மாலின் திட்டத்தை ஏறத்தாழப் பின்பற்றியது.

ஔரங்கசீபின் அரசியல் வாழ்க்கையின் தொடக்க காலத்தோடு பிரிவு அற இணைந்துவிட்ட மீர்ஜும்லா என்பவரைப்பற்றி ஈண்டு நாம் அறியவேண்டும். மீர்ஜும்லா கோல்கொண்டாவில்.

அப்துல்லா குடுப்ஷாவின் பிரதம மந்திரியாக அமர்ந்தார். அவர் தென்னாட்டில் மிகுதியான வெற்றிகளைக் கண்டார். கோவில்களைக் கொள்ளையிட்டுப் பணம் சேர்த்தார். அங்கிருந்த செப்புப் படிமங்களை உருக்கிப் பீரங்கிகளாக மாற்றினார். அவர் பெரிய செல்வராக விளங்கினார். மன்னரைவிட வலுப்பெற்றிருந்த மந்திரியை அப்துல்லா குடுப்ஷா அடக்க முயன்றார். இந் நிலையில் மீர்ஜும்லா தற்காத்துக் கொள்வதற்காகப் பீஜபூர், பாரசீக மன்னர்களுடைய ஆதரவையும் ஔரங்கசீபின் உதவியையும் நாடினார். கோல்கொண்டாவைப் பணிய வைப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்று அறிந்த ஔரங்கசீப் மீர்ஜும்லாவிற்குப் பேரரசுப் பாதுகாப்பு அளித்தார். மீர்ஜும்லாவும் அவர் மகனும் முறையே மன்சப்தார்கள் 5000, 2000 ஆக நியமிக்கப் பட்டார்கள். மீர்ஜும்லாவை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது என்று கோல்கொண்டா சுல்தானுக்குப் பேரரசின் கட்டளை பிறந்தது. ஔரங்கசீபிற்கும், கோல்கொண்டா சுல்தான்மீது மதம் காரணமாகப் பகைமை இருந்தது. பல காரணங்கள் சேர்ந்து 1656-ல் ஔரங்கசீபின் கோல்கொண்டா படையெடுப்பு முடிந்தது. இப் படையெடுப்பை ஷாஜஹான் முற்றிலும் விரும்பவில்லை. ஔரங்கசீப் அதைப் பெரிதும் விரும்பினார். பேரரசரின் உத்தரவுப்படி போர் நிறுத்தப்பட்டது. ஔரங்கசீபின் மைந்தரான மகம்மது சுல்தான் கோல்கொண்டா சுல்தானின் மகளை மணந்தார். அன்றியும், கோல்கொண்டா கப்பம் கட்ட ஒப்புக்கொண்டதோடு ஒரு மாவட்டத்தையும் மொகலாயருக்கு விட்டுக்கொடுத்தது. ஔங்கரசீப் விரும்பிய அளவிற்குக் கோல்கொண்டா போரில் அவர் திருப்திகரமான வெற்றியடையவில்லையாயினும் அவருடைய கோல்கொண்டா முயற்சி தோல்வியுற்றதுபோல் சிலர் எழுதுவது பொருந்தாது. மீர்ஜும்லா சாதுல்லாகானை யடுத்து ஆக்ராவில் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார் 1657-ல் ஔரங்கசீப் மீர்ஜும்லாவின் உதவிகொண்டு பீஜபூர்மீது படையெடுத்தார். அப்போது அங்கு ஆண்டுவந்த இரண்டாம் அலி அடில் ஷா என்பவருக்கு அரசுரிமை இல்லை யென்று தீர்மானித்துவிட்ட ஔரங்கசீப் அந் நாட்டின்மீது படையெடுக்கத் தீர்மானித்துவிட்டார். அதன் விளைவாகப் பீதரும், கல்யாணியும் கைப்பற்றப்பட்டன. அலி அடில் ஷா பீதரையும், கல்யாணியையும் மொகலாயருக்கு விட்டுக் கொடுத்துப் போரில் நஷ்டஈடாக ஒரு கோடி ரூபாயும் தந்தார். 1658-ல் தொடங்கிய அரசுரிமைப் போருக்குச் சற்று முன்பாக சிவாஜி முதன்முதலாக மொகலாயர்களோடு சண்டையிட்டுத் தோற்று ஔரங்கசீபிடம் பணிந்தார்.

ஷாஜஹான் திறமைமிக்க போர்வீரர், அன்றியும், தக்காணத்தை மொகலாயர் ஆட்சியில் நிலைப்படுத்திய பெருமை அவரைச் சாருமென்பதையும் மேலே கண்டோம். அவர் மாலிக் ஆம்பரை இருமுறை வென்றார். காந்தஹாரும் மத்திய ஆசியப் பிரதேசங்களும் கையிகந்து போனமைக்குக் காரணம் அரசருடைய பலமோ, பலவீனமோ அன்று. அவை தலைநகரிலிருந்து நெடுந் தொலைவில் உள்ளமையே காரணம் என்பதையும் கண்டோம். அவருக்குக் கலைகளில் - முக்கியமாகக் கட்டடக் கலையில் மிகுந்த ஆர்வம் உண்டு. அவர் மும்தாஜ் மஹாலை வரலாறு புகழும் முறையில் காதலித்து மணந்துகொண்டு அவள் இறந்தபின் இந்தியாவிலேயே மிக அழகான கட்டடம் என்று கருதப்படும் தாஜ்மஹாலை எழுப்பியமையும் அவர் உள்ளத்து நெகிழ்வைக் காட்டுமாயினும் உடன் பிறந்தானாகிய குஸ்ருவைக் கொன்று விட்டமை அவரது கல்நெஞ்சினைக் காட்டும். தம் நான்கு மக்களில் ஒருவரான தாராவிடம் தனிப்பட்ட அன்பு செலுத்திய மையால் தாராவின் தூண்டுதலால் ஔரங்கசீபைப் பகைத்துக் கொண்டமையால் அரண்மனையில் அரசியல் புகுந்து நாட்டையும் வீட்டையும் பிளந்தது. தாராவைக் கல்வியிலும், அறிவிலும் சிறந் தவராகச் செய்தார். ஆனால், அவர் பேரரசின் ஆதரவையே பெரி தும் நம்பிவிட்டிருந்தமையால் அந்த ஆதரவு இல்லாமலிருந்த ஔரங்கசீபிற்கு நிகராகாமல் போய்விட்டார். சமயத்துறையில் ஜஹாங்கீர் அளவிற்குப் பரந்த மனப்பான்மையுடையவர் அல்லர் ஷாஜஹான். மும்தாஜ் மஹால் வைதீக முஸ்லிம் கொள்கைகளை உடையவள். அத் தன்மை ஷாஜஹானையும் பாதித்தது. கிறிஸ்துவர்களையும் இந்துக்களையும் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தி அவர்களுடைய வழிபாட்டு இடங்களை அழித்த சிறுமை அவரைச் சாரும். அந்த வகையில் அவர் ஔரங்கசீபிற்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். கட்டாய மதமாற்றமும் அவர் காலத்தில் நிகழ்ந்ததே ஆயினும், இந்துக்களோடு தாராஷுகோ பழகியதை அவர் தடுக்கவில்லை.

அக்பர் காலத்திலிருந்த பேரரசு நிர்வாகம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதிக மாறுதல் அடையவில்லை. தோடர்மாலின் ஜப்தித் திட்டம் தக்காணத்தில் மூர்ஷித் குலிகானின் உதவியோடு ஔரங்சீபாலும் வங்காளத்தில் ஷுஜாவாலும் பரப்பப்பட்டது. ஆயினும், பலவிடங்களில் ஜாகீர் முறையும் வளர்ந்துகொண்டே வந்தது. பொதுவாழ்க் கையின் ஒரு புறத்தில் மன்சப்தாரித் திட்டம் நடைமுறையில் இருந்தபொழுது நிலவரித் திட்டத்தில் ஜாகீர் முறை தோன்றுவது இயற்கையே. நிலவரி மொத்த மகசூலில் ½-லிருந்து ⅓ பங்காயிற்று.

மொத்த வருமானம் இதனால் மிகுந்ததாயினும் வரிப்பளுவும் உழவர்களின் செல்வாதார இன்னல்களும் மிகுந்தன. இந் நிலையில் வரிவசூலிக்கும் அதிகாரிகளை ஷாஜஹான் நன்கு கண்டித்து வைத்திருந்ததால் நிலைமை மோசமாகவில்லை. அவருடைய நீதி, நிர்வாகம் பலரால் புகழப்படுகின்றன. ஆனால், அவருடைய தண்டனைகள் மிகக் கொடுமையாக இருந்தன. ஆயினும், அதைக் கூறிப் பயனில்லை. பிரிட்டிஷ் ஆட்சி தொடங்குவதற்கு முன்பு இந்தியாவில் நடந்துவந்த தண்டனைச் சட்ட நிர்வாகத்தைப் பற்றிப் பேசுங்கால் மிகுதண்டம், மிகாத்தண்டம் என்று கூறுவன வெல்லாம் ஒருவனை உயிரோடு தோலையுரித்து விடுவதற்கும், உயிரோடு உறுப்புகளைக் களைந்து விடுவதற்குமுள்ள வேறுபாடுதான். ஷாஜஹான் ஆட்சியை மொகலாயர் ஆட்சிக் காலத்துப் பொற்கால மென்பர். ஆனால், அக் காலத்தில் இந்தியாவிற்கு வந்திருந்த பர்னியர் என்னும் பிரெஞ்சுக்காரர் மொகலாயர் ஆட்சியில் குடியானவர்களுடைய நிலையை எடுத்துக் கூறியிருக்கிறார். அதை நோக்குங்கால் அந்த எளியவர்களுக்கும் வரலாற்றுளர்கள் புகழும் பொற்காலத்திற்கும் ஏதேனும் தொடர்புண்டா என்று ஐயுறத் தோன்றுகின்றது.

கட்டடக் கலையில் ஷாஜஹானுக்கிருந்த ஆர்வம் இணையற்றது. அவருடைய முக்கியமான கட்டடங்கள் டெல்லியிலும் ஆக்ரா விலும் உள்ளன. 1638-க்கும் 1648-க்குமிடையில் அவர் டெல்லி யில் ஷாஜஹானுபாத் என்னும் நகரத்தை நிர்மாணித்தார். அதையே பேரரசின் தலைநகராக்கினார். டெல்லியிலுள்ள ஜாமி மசூதி இந்தியாவிலுள்ள எல்லா மசூதிகளிலும் மிகப் பெரியதும் சிறந்ததுமானது. ஆக்ராவில் அவர் கட்டிய மோதி மசூதி (முத்து மசூதி) ஜாமி மசூதி என்பவை தவிர இணையற்ற தாஜ்மஹாலும் அவருடைய கட்டடக்கலைச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. மும்தாஜ் மஹாலும் ஷாஜஹானும் தாஜ்மஹாலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். மான்ரிக் பாதிரியார் என்பவர் 'பெரோனியோ என்னும் ஓர் வெனிஸ் நகரத்தவரால் தாஜ் மஹாலின் அமைப்பு நிலைக்கப்பட்டது' என்று கூறுவர். இந்தியக் கலைவளர்ச்சியில் புறத்தார் பங்குகொண்டார் என்பதை ஏற்றுக் கொள்ள விரும்பாத இந்திய வரலாற்றுளர்கள் மான்ரிக் பாதிரி யாரின் கூற்றை ஏலார். உஸ்தாத் ஈஸா என்பாருடைய மேற் பார்வையில் ஷாஜஹானின் கட்டடங்கள் வெண்பளிங்குக் கற் களால் ஆனவை. அவர் காலத்தில் ஓவியமும், இசையும் ஓரளவு பயிலப்பட்டனவாயினும் கட்டடக் கலையே சிறப்புற்று விளங் கியது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தை ஒரு பொற்காலம் என்று பலர் கூறுவதற்குக் காரணம் மொகலாயர் அரசு அக்பர்

காலத்தில் இருந்ததைவிடப் பரப்பில் மிகுந்திருந்தது, கலைகள் போற்றப்பட்டன ; வெளிநாட்டிலிருந்து வந்து பார்ப்பவர்களுக்கு பிரமிக்கத்தக்க முறையில் மயிலாசனம், கோஹினூர் முதலிய விளம்பரக் கலைப் பொருள்கள் மிகுந்திருந்தன என்னும் காரணங் களேயாம். அடுத்து வந்த ஔரங்கசீபின் ஆட்சிக்காலம் கலை வறட்சியைத் தெளிவாகக் காட்டியபடியாலும் அவ் வாட்சி பொற்காலம் எனப்படுகின்றது. ஔரங்கசீப் முடிசூடிய பிறகு 8 ஆண்டுக்காலம் ஷாஜஹான் வாழ்ந்துவந்தார். சமுகார் சண்டைக்குப் பிறகு ஔரங்கசீப் ஷாஜஹானை ஆக்ராவில் சிறை யிருத்தினுர். அந் நிலையிலிருந்துகொண்டே தம் மூத்த மகளான ஜஹனுராவைத் தவிர வேறு ஒருவரும் தமக்கு ஆதரவு இல்லாமல் 1666-ல் ஷாஜஹான் இறந்தார்.

26. அரசுரிமைப் போர்

1658-ல் ஷாஜஹான் உடல்நிலை கெட்டுவிட்டது என்று ஒரு வதந்தி கிளம்பியது. அவருடைய நான்கு மக்களில் தாரா, தந்தை அருகிலேயே இருந்தார். அவர் வடமேற்குப் பகுதியை ஆளுவதாக ஐதீகம். ஷூஜா வங்காளத்தில் கவர்னராயிருந்தார். மூரத் பக்ஷ் மேற்கு மாகாணங்களை மேற்பார்த்து வந்தார். ஔரங்கசீப் தக்காணத்தில் அரசப்பிரதிநிதியா யிருந்தார். இந் நால்வருக்குமே ஒருவர்மேல் ஒருவருக்கு நம்பிக்கை யில்லை; பொறாமை இருந்தது. ஒவ்வொருவரும் பேரரசுப் பதவியை அடைய விரும்பினர். ஆயினும், தாராவுக்கும் ஔரங்கசீபிற்கும் இருந்த பகைமை தனிச்சிறப்புடையது. ஷாஜஹானுக்கும் ஔரங்கசீபிற்கு மிடையேயும் உறவு கசந்திருந்தமையால் ஷா ஜஹானின் ஆதரவோடு தாரா பேரரசுப் பதவியை எளிதில் எய்தி விடுவார் என்று அஞ்சிய ஔரங்கசீப் அப்படி ஒரு காரியம் நடந்து விட்டால் தமது நிலைமை யாதாகும் என்பதையும் அறிந்தே இருந்தார். அத்தகைய நிலைமை யொன்று உருவாவதற்கு முன்பு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை யெடுக்க விரும்பினர். ஔரங்கசீப் 1657-ல் ஷாஜஹான் டெல்லியிலிருந்து ஆக்ராவிற்கு வந்துவிட்டார். ஷூஜாவும், மூரத்தும் முறையே வங்காளத்திலும் குஜராத்திலும் தங்களைப் பேரரசர்களென்று அறிவித்துக் கொண்டனர். தாராவும் மீர்ஜும்லாவின் உதவிகொண்டு போர் ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினர். ஔரங்கசீப் மூரத் தோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதாவது, இருவரும் சேர்ந்து தாராவைத் தோற்கடிப்பதென்றும் பிறகு அவர்கள் பேரரசைப் பங்கு போட்டுக்கொள்வதென்றும் அவ் வொப் பந்தம் ஏற்பாடாயிற்று. பேரரசரின் உடல் நிலைமை தேறிவிட்ட தென்று வெளிப்படையாக அறிவித்துவிட்டுத் தாரா போர் முயற்சிகளைச் செய்துகொண்டே இருந்தார். ஆயினும், பேரரசர் இறந்துபோய்விட்டார் என்னும் வதந்தி எங்கும் பரவிற்று. இந் நிலையில் இனித் தாமதிக்கக்கூடாது என்ற நிலையில் ஔரங்கசீப்

தக்காணத்தைவிட்டு நீங்கி வடஇந்தியாவை நோக்கி ஓடிவந்தார். தாரா மீர்ஜும்லாவைத் திரும்ப அழைத்திருந்தமையாலும் மீர் ஜும்லா அவருக்கு உதவினுல் தமது நிலை பலவீனமடையும் என்றும் உணர்ந்துகொண்ட ஔரங்கசீப் மீர்ஜும்லாமீது பல குற்றங்களைச் சாட்டிச் சிறையிருத்தினுர். தம்முடைய குடும்பம் டெல்லியிலிருக்கும்போது அவர்களுக்குத் தீங்கு விளையும் வண்ணம் தாராவைப் பகைத்துக்கொள்ளுவது தம்முடைய எண்ணமன்று என்று வெளிப்படையாகக் கூறினுர். இதையெல்லாம் நம்பிய மீர்ஜும்லாவும் ஔரங்கசீபால் முற்றி லும் ஏமாற்றப்பட்டார். தம்முடைய மைந்தரான முவாஸம் என்பவரை ஔரங்காபாதில் இருத்திவிட்டு ஔரங்கசீப் உஜ்ஜயின் அருகில் தம் படைகளை அணிவகுத்துக்கொண்டார். அங்கு மூரத்தும், ஔரங்கசீபும் தாராவிற்கு எதிராகப் போர் புரியும் முயற்சியில் இணைந்தனர். இதற்கிடையே ஜோத்பூர் மன்னரான ஜஸவந்தசிங் இவ் விரு படைகளையும் எதிர்த்துப் போருக்கு வந்தார். உஜ்ஜயின் அருகே தர்மத் என்னுமிடத்தில் நடந்த பெரும்போரில் ஔரங்கசீப் முற்றிலும் வென்றுர். தாரா வின் மைந்தரான சுலைமான் ஷுகோ ஷுஜாவின் படைகளைக் காசியருகில் தோற்கடித்தார். ஔரங்கசீப் தர்மத் வெற்றிக்குப் பிறகு ஆக்ராவையடைந்து சமுகாரில் தாரோவோடு போரிட் டார். கடும்போருக்குப் பின் ஐயத்திற்கிடமில்லாது வெற்றி பெற்றுர். தாரா டெல்லியை நோக்கிப் பின்வாங்கினுர். சமுகார் வெற்றிக்கு மூரதே பொறுப்பாளி என்று கூறி அவரைப் புகழ்ந் தார் ஔரங்கசீப். ஆக்ரா அருகில் அந் நகருக்குக் குடிதண்ணீர் வசதி செய்யும் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்டு ஆக்ரா மக்களைத் தம் தந்தை உட்பட தாகத்தால் தவிக்கும்படி செய்தார் ஔரங்கசீப். சில நாள்களில் ஷாஜஹான் ஆக்ராக் கோட்டையை ஔரங்கசீப்வசம் ஒப்படைத்தார். அதன்பிறகு மைந்தன் தந்தைக்காற்றிய உதவி ஷாஜஹானை ஆக்ராவிலேயே ஒரு சிறை யில் இருத்தியமையேயாம். மூரத் பேரரசைப் பங்கிட்டுக் கொள்வதைப்பற்றி வெளிப்படையாகப் பேச்சைத் தொடங்கவே ஔரங்கசீப் அவரைச் சிறைபிடித்துக் குவாலியருக்கு அனுப்பினுர். 1661-ல் மூரத் குவாலியரில் ஔரங்கசீப் உத்தரவுப்படி கொலை யுண்டு இறந்தார், தாரா டெல்லியைக் கைவிட்டு லாகூருக்குப் போய்விட்டார். ஔரங்கசீப் டெல்லியை அடைந்து 1658 ஜுலை 31-ல் ஆலங்கீர் என்னும் பட்டத்தோடு மொகலாயப் பேரரசின் முடிசூடிக்கொண்டார். அதோடு ஷாஜஹானின் ஆட்சி முடி வுற்றது. சமுகார் வெற்றியோடும் ஆக்ராவைக் கைப்பற்றிய தோடும் ஔரங்கசீபின் வெற்றி முழுமையடைந்துவிட்டதா யினும் தாராவும், ஷுஜாவும் உயிரோடு இருக்கும்வரை தமக்கு

நிம்மதியிராது என்பதை யுணர்ந்த ஔரங்கசீப் தாராவை லாகூருக்குத் துரத்திச் சென்ருர். லாகூரைவிட்டு ஓடிய தாரா மூல்தானுக்குப்போய் அங்கிருந்து சிந்துவிற்கு ஓடினுர். மூல்தானுக்குமேல் தாராவைத் துரத்துவதற்குப் பிற ராணுவ அதிகாரிகளை நியமித்துவிட்டு ஔரங்கசீப் வங்காளத்திலிருந்து தம்மை எதிர்த்து வந்த ஷுஜாவை எதிர்நோக்கிச் சென்ருர். கோரா அருகில் இளவரசரான மகம்மது சுல்தான், மீர்ஜும்லா ஆகியோர் ஔரங்கசீபோடு சேர்ந்துகொண்டனர். கோரா அருகில் கஜ்வா என்னுமிடத்தில் நடந்த போரில் (1659, ஜனவரி 14-ல் இடப்பட்ட போரில்) ஷுஜா முற்றிலும் தோற்ருர். ஓடிய ஷுஜாவை மகம்மது சுல்தான் துரத்திச் சென்ருர், சிந்துவரையில் சென்ற தாரா அங்கு ஒரு பெரும் படை திரட்டிக்கொண்டு அகமதாபாத் வழியாக அஜ்மீரையும் தாண்டித் தேவராயில் ஔரங்கசீபோடு இறுதிப்போர் புரிய ஆயத்தமானுர். அப் போர் 1659, மார்ச் 22-24 வரை நடந்தது. அப் போரிலும் தோல்வியுற்று ஓடிய தாராவைப் பிடித்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டு அவர் டெல்லிக்குத் திரும்பிவந்து மறுபடியும் முடிசூட்டிக்கொண்டார். சிந்துவிலிருந்து காந்தஹாரை நோக்கி ஓடமுயன்ற தாரா வழியில் தம் மனைவியை இழந்தார். மனம் உடைந்து போனவர் அங்கொரு ஆப்கானியரிடம் தஞ்சம் புகுந்தார். அவ் வாப்கானியரை முன்பொரு காலத்தில் தாரா ஷாஜஹான் விதித்த சிரச்சேதத் தண்டனையிலிருந்து காப்பாற்றியிருந்தார். அந் நன்றியை மறவாமல் அவ் வாப்கானியர் இப்பொழுது தமக்கு உதவுவாரென்று அவர் எண்ணினுர். ஆனுல், அவர் நன்றி கொன்று தாராவை ஔரங்கசீபின் அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டார் (ஜூன் 19, 1659). தாரா டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஔரங்கசீப் தாராவைச் சிரச்சேதம் செய்து அவர் தலையை டெல்லியில் ஊர்வலம் செய்வித்தார்.

தாரா ஷுகோ பல நற்பண்புகள் உடையராயினும் திறமை குன்றியவர். ஔரங்கசீபிடம் காணப்பட்ட மதவெறி என்னும் தீக்குணம் அவரிடமில்லையாயினும் போரிலும், ஆட்சியிலும் ஔரங்கசீபின் திறமை அவருக்கு இல்லையாதலின் ஔரங்கசீபிற்குப் பதிலாக தாரா ஷுகோ பேரரசராயிருந்தால் மொகலாயப் பேரரசு அழிந்து போயிராது என்று சிலர் கூறுவது பொருத்தமுடையதன்று. தாரா ஷுகோ இந்துமதத்தை ஆதரித்தாராயினும் வேதாந்தத்தையும், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டையும் விரும்பிக் கற்ருராயினும் அவர் அக்பர் போலல்லாமல் நல்ல முஸ்லிமாகவே இருந்தார். காசியிலிருந்து வரவழைக்கப்பட்ட

பண்டிதர்களின் உதவிகொண்டு பல உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார். ஆந்திர அறிஞரான ஜகந்நாத பண்டிதராஜர் என்பவரை ஆதரித்தார்.

தோற்று ஓடிய ஷூஜாவை மகம்மது சுல்தானும் மீர்ஜும்லாவும் துரத்திச் சென்றனர். பீஹாரில் சிறிது காலம் அவர் நிலையாக இருக்கமுடிந்தது. மகம்மது சுல்தானையும் ஷூஜா தம் பக்கலுக்கு இழுத்துக்கொண்டார். அவர் ஒருமுறை மொகலாயப் படைவீட்டிற்குத் திரும்பியபோது அவரைப் பிடித்து ஆயுள் காலத்திற்குச் சிறையிருத்திவிட்டனர். மீர்ஜும்லாவின் தாக்குதல்களுக்குப் பொறுமல் ஷூஜா டாக்காவிற்கு ஓடி அங்கிருந்து சிட்டகாங்கிற்குப் போய் அரக்கான் அரசரால் 1661-ல் கொலை செய்யப்பட்டார். தாரா ஷூகோவின் மகனுன சுலைமான் ஷூகோ 1658-ல் ஷூஜாவைத் தோற்கடித்தாராயினும் ஔரங்கசீபின் படைகள் கிழக்கு நோக்கி வந்தமையால் அவரால் ஆக்ராவிற்கோ, டெல்லிக்கோ போகமுடியவில்லை. கார்வல் அரசரிடம் தஞ்சம் புகுந்த சுலைமான் ஷூகோ அவ் வரசரால் 1661-ல் ஔரங்கசீபிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் உடனே குவாலியரில் சிறையிருத்தப் பெற்றுர். அவருக்கு யாதொரு தீங்கும் செய்வதில்லை என்று வாக்குக் கொடுத்திருந்தும் ஔரங்கசீபின் உத்தரவுப்படி 1662-ல் அவரது 27-வது வயதில் அவர் கொலைசெய்யப்பட்டார். ஓராண்டுக் காலத்திற்குள்ளாக மூன்று சகோதரர்களையும் பல வேறு மாகாணங்களில் நான்கு போர்களில் தோற்கடித்து மொகலாயப் பேரரசின் பட்டத்தை எய்தினுர் ஔரங்கசீப்.

ஔரங்கசீப் ஆட்சியின் முற்பகுதியில் மிகப் பெரிய போர் வீரராகவும், அரசியலாளராகவும், அவருடைய உறுதுணையாகவும் விளங்கியவர் மீர்ஜும்லா. அவர் கோல்கொண்டாவோடு கொண்டிருந்த தொடர்பை மேலே கண்டோம். 1660-ல் அவர் வங்காளத்துக் கவர்னரானுர். அவர் அஸ்ஸாம்மீது படையெடுத்து அந் நாட்டின் ஒரு பகுதியை மொகலாயப் பேரரசில் இணைத்தார். ஆயினும், மலையும் காடும் நிறைந்த அந் நாட்டு வழியே போர் முயற்சியில் ஈடுபட்டிருந்த மீர்ஜும்லா டாக்காவிற்குத் திரும்பு முன்பே 1663-ல் இறந்தார். மீர்ஜும்லா காலத்திற்குப் பிறகு அவர் வென்ற பிரதேசங்களை அஹோமியர்கள் திரும்பக் கைப்பற்றிவிட்டனர். ஷெயிஷ்டகான் வங்காளத்து கவர்னராயிருந்தபோது (1664) அவர் இழந்த பகுதிகளில் சிலவற்றைத் திரும்பக் கைப்பற்ற முடிந்தது. மீர்ஜும்லா ஒரு வைர வியாபாரியாக வாழ்க்கையைத் தொடங்கினுர். கோல்கொண்டாவின் முதன் மந்திரியாகவுமானுர். சில காலம் கழித்து

மொகலாயப் பேரரசின் முதன் மந்திரியாகவுமானுர்; போரிலும் அறிவுரை கூறுதலிலும் நிகரற்று விளங்கினுர். ஔரங்கசீப் அவருடைய அருங்குணங்களை அறிந்திருந்தார்; அவற்றைக் கண்டு அஞ்சியுமிருந்தார். மகபத்கானுக்குப் பிறகு மொகலாயப் பேரரசில் தோன்றிய பெரிய வீரரென்னும் பெருமை மீர்ஜும்லாவைச் சேர்ந்தது.

27. சீக்கியர் தோற்றம்

வட இந்தியாவில் 13 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ரஸாநந்தர் தொடங்கி ஏற்பட்டுப் பரவிய பக்தி இயக்கம் பல உருவங்களை எடுத்தது. அதில் சைதன்யர், இராமதாசர் முதலிய பக்திமான் களையும் காணலாம். அன்றியும், இஸ்லாமின் ஊடுருவலால், அதன் செல்வாக்கில் இந்து சமயத்தில் ஏற்பட்ட இருவகை மாறுதல் களில் ஒன்றான கலப்பு பக்தி இயக்கம் கபீர்தாஸர் போன்றவர் களிடம் காணப்படும். அதன் மற்றொரு உருவம் சூபி இயக்கம் என்று இஸ்லாமில் உபநிடதத்தின் செல்வாக்கால் ஏற்பட்டது. கபீர்தாஸர் இஸ்லாம், இந்து சமயம் இவற்றிடையே ஓர் ஒற்றுமையைக் கண்டார்; அன்றியும், அதுவரை காணாத ஓர் ஒற்றுமையைத் தோற்றுவிக்கவும் விழைந்தார். இம் முயற்சியில் பஞ்சாபிற்குச் சீரிய பங்கு உண்டு. அந் நாட்டில் தோன்றிய குருநானக் என்பவர் பாபர் காலத்தவர்; அவர் ஏறத்தாழக் கபீருடைய கருத்துகளையே கொண்டிருந்தாராயினும், இஸ்லாம், இந்து சமயம் ஆகிய இரண்டினின்றும் விலகி அவற்றில் தமக்குச் சீரியவை என்று பட்ட கருத்துகளை மேற்கொண்டு புதியதொரு சமயத்தை நிறுவ முற்பட்டார் நானக். நானக்கின் மாணவர் களும் அவரைப் பின்பற்றியவர்களும் போற்றியவர்களும் சீக்கியர்கள் (சிஷ்யர்கள்) எனப்பட்டனர். ஆரம்பகாலத்தில் அவர்கள் அரசியலிலோ, சமயத்தோடு படாத பிற சமுதாய நெறி களிலோ ஈடுபடாமல் அமைதியோடு தங்கள் சமயக் கருத்துகளை மட்டும் பரப்புநராயிருந்தனர்; ஆயினும், அது மொகலாயர் ஆட்சியைப் பேரரசாக அமைத்துக்கொண்டிருந்த காலம். இஸ்லாம் அல்லாத சமயத்தினர் தற்காப்பிற்காகப் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்த காலம். அதே காரணத்திற்காகச் சீக்கியர்களும் தம்மிடையே இராணுவ அமைப்பைப் பின்பற்றி ஒருவகைச் சமுதாய ஏற்பாட்டை ஆக்கிக்கொண்டனர். அக்பர் ஆட்சி புரிந்த காலத்தில் சீக்கியரிடையே இராமதாஸ் என்பவர் குருவாக இருந்தார். அக்பர் அவரைப் பெருமதிப்போடு

நடத்தினார். அன்றியும், அமிர்தசரஸில் சீக்கியர்களுக்குப் பெரிய கோவில் ஒன்று அமைத்துக் கோடற்கு அனுமதியும் அளித்தார். தடாகமும் கோயிலுமாக அக் காலத்தில் அவர்கள் அமிர்தசரஸில் கட்டிக்கொண்டதே இன்று புகழொடு விளங்கும் ' அமிர்தசரஸ் சீக்கியர் பொற்கோயில் ' என்பது. அப்போதிலிருந்தே சீக்கியர்களுக்குச் சிறந்த புண்ணியத்தலமாக அமிர்தசரஸ் விளங்கி வருகிறது.

சீக்கியர்களுடைய ஐந்தாவது குருவான குரு ஆர்ஜுனர் என்பவர் அவர்களுடைய 'ஆதிகிரந்த'த்தைத் தொகுத்தார். அதில் குருநானக் முதலியோருடைய பக்திப்பாடல்களும் கருத்துகளும் அடங்கின. அதுவே அவர்களுக்கு வேதம் போன்ற நூல். சீக்கியர்களிடையே பெரியதோர் ஒற்றுமை தோன்றிற்று. அவர் அவர்களுடைய சமுதாயத்தை வலுப்படுத்தினார். பல இடங்களிலிருந்து நிதிதிரட்டி அச் சமயத்தை அம் முறையிலும் தன்னிறைவு எய்தச் செய்தார். இத்துணையிருந்தும் அவருக்கு அக் காலத்தில் மொகலாயர் பேரரசராயிருத்த ஜஹாங்கீரின் பகைமை ஏற்பட்டது. அப் பேரரசரின் மகனான குஸ்ருவை ஆதரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அவர் சித்ரவதை செய்து கொல்லப்பெற்றார். அப்பொழுது சீக்கியர்களுக்கும் மொகலாயர்களுக்கும் இடையே தோன்றிய பெரும் பகை எளிதில் தணியவில்லை.

குருஅர்ஜுனரை அடுத்து ஹரகோவிந்தர் என்பவர் அவர்களுடைய குருவானார். அவருக்கு இயல்பாகவே போர்ப் பண்புகள் அமைந்திருந்தன. காலநிலையும் அவர் இயல்பை ஆதரித்து ஊக்கிற்று. ஆகவே, அவர் தம் சமயத்தவர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சியளித்தார்; போர்த்துறையில் பயிற்றுவித்தார். அவர் ஜஹாங்கீரிடம் அலுவல் பார்த்துவந்தார்; ஆயினும், அவர் தந்தையாருக்கு மொகலாய அரசு விதித்த தண்டத்தொகை செலுத்தபடாமையால் அவர் சிறையிருக்க வேண்டுவதாயிற்று. அவர் பன்னீராண்டுக் காலம் சிறையிருந்தார். அதனால் அவருக்கும் மொகலாயருக்கும் தீராப்பகை ஏற்பட்டது. சிறையினின்றும் விடுதலை யடைந்த ஹரகோவிந்தர் படை திரட்டி மொகலாயரோடு பொருதார். 1628-ல் அவர் மொகலாயப் படையை அமிர்தசரஸ் அருகே வென்றார். ஆயினும், அதற்குமேல் அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை; அவர் பஞ்சாபைவிட்டு நீங்கிக் காஷ்மீரில் சிலவாண்டுகள் இருந்து அங்கு 1645-ல் இறந்தார்.

சீக்கியர்களுடைய ஒன்பதாவது குரு டேக்பஹதூர் என்பவர். அவர் ஔரங்கசீப் காலத்தில் சீக்கியர் குருவாயிருந்தார். அவர்

முன்பு மொகலாயப் படையில் அலுவல் பார்த்திருந்தார். அவர் பஞ்சாபிற்குத் திரும்பிவந்த பிறகு ஔரங்கசீபின் தீவிர சமயக் கொள்கையைத் தீவிரமாக எதிர்க்கலாயினர். இதனால் கோப மடைந்த ஔரங்கசீப் டேக்பஹதூரைச் சிறைபிடித்து டெல்லிக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அவர் பேரரசருக்குப் பணிய மறுத்தமையால் அவர் ஆணைப்படி கொலை யுண்டிறந்தார். டேக்பஹதூருக்குப் பிறகு குருகோவிந்தசிங் என்பவர் சீக்கியர்களுடைய குரு ஆனர். அவரே சீக்கியர்களுடைய பத்தாவது குரு; அவருக்குப் பிறகு அவர்களுக்குக் குரு என்னும் பட்டத்தோடு தலைவர்கள் இல்லை; அதாவது குருகோவிந்தரே அவர்களுடைய கடைசி குரு. அவர் சீக்கியர்களை ஒன்றுபடுத்தி வலுப்படுத்தப் பெருமுயற்சி மேற்கொண்டார். அவர்கள் போர்ப்பயிற்சியிலும் மிக்கு விளங்கியமையால் மொகலாயப் படைகளையும் துணிவோடு எதிர்க்கும் அளவிற்குத் தகுதி பிறந்தது. அவர் சீக்கியர்களுக்குச் சில அடிப்படை விதிகளை அமைத்தார்; அவர்களுக்கும் பிற சமயத்தவர்களுக்கும் கண்ட அளவிலேயே யாவர்க்கும் வேறுபாடு புலனாகும் முறையில் இவ் விதிகள் அமைந்தன. இவ் விதிகளைச் சீக்கியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் கண்டிப்பாகவும் தீவிரமாகவும் பின்பற்றவேண்டியமையால் அவர்களிடையே ஒற்றுமையும் மிகுந்தது. அவர் விதித்த விதிகளை யொட்டிச் சீக்கியர்கள் நீள்முடி, இரும்புவளைகள், குறுவாள், குறுங்காற் சட்டைகள் என்பவற்றை எக்காலும் அணியவேண்டும். அவர்கள் முடியைத் திருத்தி வைத்துக்கொள்வதற்குச் சீப்பும் வைத்திருத்தல்வேண்டும். கள் குடித்தல், புகையிலை சுவைத்தல் ஆகியவை நீக்கப்படல்வேண்டும். சீக்கியர் குழாம் 'கல்ஸா' என்னும் பெயர் பெற்றது.

இவ் வமைப்புகளால் சீக்கியரிடையே பிறர் எதிர்க்கவும் தடுக்கவும் இயலாத அளவு வலுப்பிறந்துவிட்டது என்று எண்ணிய குருகோவிந்தர் மொகலாயரோடு போர் தொடங்கினர். ஆயினும், மொகலாயப் படைகளை அவரால் மிகுதியாக ஒன்றும் செய்துவிட முடியவில்லை. இதன் விளைவாக மொகலாயர்கள் அவருடைய இரு மக்களையும் பிடித்து வதைத்துக் கொன்றனர். அவருடைய வேறு இரு மக்களும்கூட மொகலாயர்களோடு சண்டையிட்டு இறந்தனர். ஔரங்கசீப் இறந்தபின் மொகலாய அரசில் தோன்றிய குழப்பத்தில் குருகோவிந்தர் பஹதூர்ஷாவை ஆதரித்தார். அவர் 1708-ல் தக்காணத்திற்குச் சென்றர்; அங்கு ஓர் ஆப்கானியனல் கொல்லப்பட்டார். அவர் இறந்த பிறகு அவர் இயற்றிய பாடல்களையும் சேர்த்துப் பிறிதொரு 'கிரந்த' மாகத் தொகுத்து வைத்துக்கொண்டனர். அவருக்குப்பின்

சீக்கியர்களுக்கு மத குரு என்பவர் ஒருவர் இல்லாமற் போயினும், அவர்களுடைய சமுதாய, சமயத்தன்மையால் இயற்கையாகவே ஓர் ஒற்றுமை ஏற்பட்டுப் பஞ்சாபில் முன்புபோல் இன்றும் அவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

28. ஔரங்கசீப் (1658-1707)

ஔரங்கசீப் 1658-லிருந்து 1707 வரை ஆண்டார். மாபெரும் மொகலாய மன்னர்கள் என்னும் நால்வரில் அவர் கடைசியானவர். அவருக்கு மனைவியர் நால்வர். அவருக்கு ஐந்து ஆண் மக்களும் ஐந்து பெண்மக்களு மிருந்தனர். ஆண் பிள்ளைகள், முகம்மது சுல்தான், முஆஸம் (ஷாஆலம்) ஆஸம், அக்பர், காம்பக்ஷ் என்பவர். இவர்களில் முகம்மது சுல்தான் போர்த்திறமை வாய்ந்தவர்; அரசுரிமைப் போர்க்காலத்தில் கீழைப்பகுதியில் பல வெற்றிகளைக் கண்டவர். 1660-ல் அவர் ஷுஜாவோடு சேர்ந்து கொண்டார் என்று சந்தேகப்பட்டுப் பேரரசர் அவரைச் சிறையிலிருத்தினர். சிறையிலிருந்தவாறே அவர் 1676-ல் இறந்து போனார். இரண்டாவது மைந்தரான முஆஸம் ஔரங்கசீப் இறந்தபிறகு 1707-ல் பகதூர்ஷா என்னும் பட்டத்தோடு மொகலாயப் பேரரசரானார். அவருடைய பெண்மக்கள் எல்லாருமே சிறந்த பண்புடையவர்கள். அவர்களில் ஸெபுன்நிஸா என்னும் மூத்தவள் கல்வியிற் சிறந்து விளங்கினாள்; கவிதைகள் இயற்றினாள்; அறிஞர்களை ஆதரித்தாள்; பேரரசரிடம் சென்று பொருளுதவி கேட்க அஞ்சிய கவிஞர்கள் அவளால் ஆதரிக்கப்பட்டனர். இளவரசரான அக்பர் பேரரசரின் கோபத்திற்கு ஆளாகியிருந்த காலத்தில் அவ் விளவரசரிடம் ஆதரவு காட்டிய குற்றத்திற்காக ஸெபுன்நிஸாவும், அவள் 1702-ல் இறந்தவரையில், சிறையிருத்தப்பெற்றாள். ஸீனத் உன்னிஸா என்னும் மற்றொரு மகள் தெய்வபக்தியும், கருணை உள்ளமும் படைத்தவள். அவளுடைய நன்முயற்சியால் ஔரங்கசீப் அவைக் களத்தில் வளர்ந்துவந்த ஸாஹு (சிவாஜியின் பேரன்; சாம்பாஜியின் மகன்) நன்கு பராமரிக்கப்பட்டான். அவள் 1721-ல் இறந்தாள்.

1659-ல் இரண்டாவது முறையாக முடிசூட்டிக்கொண்ட ஔரங்கசீப் பிறப்பித்த கட்டளைகளால் அவரது சொந்தத்

தன்மையும், அவர் நடத்த இருந்த ஆட்சியின் தன்மையும் நன்கு புலனாயின. அவர் முஸ்லிம்களில் ஸுன்னி பிரிவினரை ஆதரிப்பவ ராயிருந்தார். அவர் மதுபானங்களையும், லாகிரிப் பொருள் களையும் விலக்கினார். மக்கள் நன்னடத்தையுடையவர்களாய் இருக்கிறார்களா என்பதை அறிந்து அதற்கு ஆவன செய் வதற்காகச் சில அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கொரானில் கூறியுள்ள நன்னடத்தைக் கோட்பாடுகளைப் பற்பல முக்கியமான நகரங்களில் பலரும் அறியும்வண்ணம் பிரகடனப்படுத்தக் கட்டளை பிறப்பித்தார். சட்டத்தின்மூலம் மக்களை நல்வழிப்படுத்த முடியாது என்பதை அவர் உணரவில்லையென்று சிலர் குறை கூறுவர். அக் கூற்றில் ஓரளவு உண்மை இருப்பினும் ஔரங்கசீப் இஸ்லாமிற்குச் செய்ததை அசோகர் பௌத்தத்திற்குச் செய்தார் என்பதை நினைவுகூரவேண்டும். ஔரங்கசீப் ஆட்சியில் முஸ்லிம் அல்லாதவர்கள் எப்போதுமே அவரை எதிர்த்தார்கள் என்று கூற முடியாது. பண்டேல்கண்டைச் சேர்ந்த சம்பத்ராய் என்பவர் முதலில் ஔரங்கசீபை எதிர்த்துக் கலகம் செய்து பிறகு அவரு டைய நிர்வாகத்திலேயே அலுவலராகச் சேர்ந்து, உழைத்து மறு படியும் கலகம் செய்து அது வெல்லாமையால் தற்கொலை செய்து கொண்டார். இராஜபுத்திரர்களும் அவருடைய தீராப் பகைவ ரென்று கூறமுடியாது. அவரைப் பகைத்தவர்களும் உண்டு; அவரிடம் நட்பாடியவர்களும் உண்டு. உதாரணமாக, ஜெய்சிங் அவர் சார்பில் சிவாஜியை எதிர்த்துப் போரிட்டார். தக்காணத் தில் கலகம் செய்வதற்கென்றே பிறந்த ஷாஜி பான்ஸ்லே பல முறை அவரிடம் பணிந்திருக்கிறார். சிவாஜியும் அவர் தனி அரசை நிறுவியவரையில் ஔரங்கசீபின் மேல்ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டே இருந்தார். ஐரோப்பிய வணிகர்களோடும், கோல்கொண்டா போன்ற பிற முஸ்லிம் அரசுகளோடு மற்ற மொகலாய மன்னர்களும் போர் புரிந்திருக்கிறார்கள். அதனால் தான் இப் போர்களாலும், கலகங்களாலும் பேரரசின் நிலைமை கெட்டுவிடவில்லை.

ஔரங்கசீபின் ஆட்சியை இரண்டாகப் பிரிக்கலாம், 1658-லிருந்து 1681 வரை முதற்பகுதியாகவும் 1681-லிருந்து 1707 வரை இரண்டாவது பகுதியாகவும். அவர் ஆட்சி தொடங்கிய உடனேயே சிவாஜியின் தாக்குதல்களும் தொடங்கின. 1659-ல் அவர் அப்ஸல்கானைக் கொன்றதிலிருந்து துணிவு பிறந்து புதிய தொரு இராணுவ வாழ்க்கையைத் தொடங்கினார். அதைத் தொடர்ந்து ஔரங்கசீப் தம் தாய்மாமனான ஷெயிஸ்டகானை 1660-ல் தக்காணத்து அரசப் பிரதிநிதியாக நியமித்தார். மொக லாயர்கள் பூனாவைக் கைப்பற்றினார்கள். ஆனால், 1663-ல் சிவாஜி

ஷெயிஸ்டகானின் பூனு முகாமில் இரவுத் தாக்குதல் செய்து கானின் மகன் ஒருவனைக் கொன்று கானையும் சேதப்படுத்திவிட்டுத் திரும்பினார். ஷெயிஸ்டகான் ஔரங்காபாத்திற்குத் திரும்பினார்; பேரரசர் அவரை வங்காளத்திற்கு மாற்றினார். இத்தகைய தம் செயற்பாடுகளால் எல்லாம் மொகலாயப் பேரரசு பலவீன மடைந்துவிட்டதென்றும் தம் விருப்பப்படி கொள்ளையடிக்கலாம் என்றும் எண்ணிய சிவாஜி சூரத்தைத் தாக்கிப் பெருங்கொள்ளை யடித்தார். ஷெயிஸ்டகானை யடுத்து இளவரசர் மூ ஆஸம் தக்காணத்து அரசப்பிரதிநிதி யானார். சிவாஜியை எவ்வாறேனும் அடக்கவேண்டும் என்று கருதிய ஔரங்கசீப் மொகலாயர் ஆட்சியில் அலுவல் பார்த்த ஜெய்சிங் (ஜெய்ப்பூரைச் சேர்ந்தவர்) என்பாரைத் தக்காணத்துக்கு அனுப்பினார். அவர் புரந்தர்க் கோட்டையை முற்றுகையிட்டு மராட்டியர்களை நெருக்கினார். முராரி பாஜி பிரபு என்னும் மராட்டிய வீரர் உயிரிழந்தார். 1665-ல் சிவாஜி ஜெய்சிங்கிற்குக் கீழ்ப்படிந்தார். அவர்களிடையே ஏற்பட்ட புரந்தர் உடன்படிக்கைப்படி புரந்தர் உட்படப் பல கோட்டைகளை விட்டுக்கொடுத்துப் பீஜப்பூருக்கு எதிராக மொகலாயர்களுக்கு உதவுவதாக வாக்களித்தார். ஜெய்சிங்கின் இந்த வெற்றியால் பேரரசுப் படைகள் பெரு முயற்சி எடுக்குங்கால் சிவாஜிபோன்ற திடீர்த் தாக்குதல்காரர்களால் போரில் வெற்றி காண்பது அரிது என்பது புலனாகும். ஜெய்சிங்கும் சிவாஜியும் சேர்ந்தும்கூடப் பீஜப்பூரைக் கைப்பற்ற முடியாமையால் ஜெய்சிங் ஔரங்காபாத்திற்கே திரும்பிவிட்டார். தக்காணத்தை விட்டு வங்காளத்துக்குக் கவர்னராய்ச் சென்ற ஷெயிஸ்டகான் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் பல வெற்றிகளைக் கண்டார். அவர் சிட்டகாங்கைப் போர்த்துகீசியர்களிடமிருந்து 1666-ல் கைப்பற்றினார். புரந்தர் உடன்படிக்கைக்குப் பிறகு ஜெய்சிங் சிவாஜியை ஆக்ராவிற்குச் சென்று பேரரசரை நேரில் காணும்படி அறிவுரை கூறினார். சிவாஜியும் ஒப்புக்கொண்டு தம் மகன் சாம்பாஜியையும் அழைத்துக் கொண்டு ஆக்ராவிற்குச் சென்றார். அரசவையில் அவர் எதிர்பார்த்த மரியாதை கிடைக்காமையால் அவைக்கள இங்கிதம் தெரியாமல் சிவாஜி நடந்துகொண்டமையால் அவர் சிறையில் இருத்தப்பெற்றார். மூன்று மாத காலம் சிறையிலிருந்த சிவாஜியும் அவர் மகனும் தின்பண்டக் கூடைகளில் ஒளிந்துகொண்டு சிறையை விட்டு வெளியேறினர். சிவாஜி துறவி வேடம் பூண்டு மதுரா, அலகாபாத், காசி, கயா, கோண்டுவானா, கோல்கொண்டா வழியாகத் திரும்பிவந்தார். 1666-ல் ஆக்ராவிலிருந்து திரும்பிய சிவாஜி 3 ஆண்டுக் காலம் அமைதியாக இருந்தார். அவர் ராஜா என்னும் பட்டத்தைச்

சூட்டிக்கொண்டமை ஔரங்கசீபால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1670-ல் சிவாஜி புரந்தர் உடன்படிக்கையை மீறினர். அவர் மறுபடியும் சூரத்தைத் தாக்கினர். அவ் வுடன்படிக்கைப்படி மொகலாயர்களுக்கு விட்டுக்கொடுத்த கோட்டைகளையெல்லாம் திரும்பக் கைப்பற்றினர். சூரத்திலிருந்த மக்களிடம் சிவாஜி சௌத் என்னும் வரியை வசூலித்தார். சௌத் என்பது நான்கில் ஒன்று. இதனை மொகலாய ஆட்சிக்குட்பட்ட குடிமக்களிட மிருந்து அவர் தண்டினர். அங்ஙனம் செய்வதற்கு அவருக்கு என்ன உரிமை உண்டு என்னும் வினா இந்திய வரலாற்றில் பலமுறை கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு விடை சிவாஜியே தந்திருக்கிறார். தம்முடைய நாட்டையும் நாட்டாரையும் படைகொண்டு தாக்கவேண்டிய நிலையில் பேரரசர் தம்மை வைத்திருந்தமையால் அப் படைக்கு ஆகும் செலவினைப் பேரரசருடைய குடிமக்கள் தாமே கட்டவேண்டும் என்பது அவருடைய விளக்கம். இந்தத் தர்க்கம் எவ்வளவு நியாயமானது என்னும் ஆராய்ச்சியை மேற் கொள்ளும்போது பெரும்பான்மை வரலாற்றாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு விடுவதுண்டு. சிவாஜி இத்தகைய தண்டலைத் தமது உரிமையென்று கருதியதுபோல் ஔரங்கசீப் அதனைக் கொள்ளை என்று கருதினர். தாம் பிறந்த சிவனர்க் கோட்டையைக் கைப் பற்ற முயன்று 1673-ல் தோற்றார். அவர் மொகலாயர்களோடு தமக்கு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் சண்டையிட்டு வந்தாராயினும் மொகலாயர், மராட்டியர் ஆகிய இருசாராரின் நிலையும் மிகுதியாக மாறிவிடவில்லை. 1678-ல் மூன்றும் முறையாக சிவனர்க் கோட்டையைக் கைப்பற்ற முயன்று தோற்றார். அந்தக் கோட்டையின் மொகலாயக் காவலர் சிவாஜிக்குப் பின்வருமாறு எழுதினர்: 'நான் இந்தக் கோட்டையைக் காத்திருக்கும்வரையில் உம்மால் இதைக் கைப்பற்ற முடியாது.' 1679-ல் சிவாஜி ஜிஸியா என்னும் தலைவரியை ஔரங்கசீப் விதித்ததை எதிர்த்து அப் பேரரசர்க்கு ஒரு கடிதம் எழுதினர். மொகலாயருக்கு அறிவுரை கூறிவந்த சிவாஜியின் அருமை மைந்தரான சாம்பாஜி மராட்டி யரைவிட்டு நீங்கி மொகலாயர் பக்கம் சேர்ந்துகொண்டார். சில மாதங்கள் கழித்து சாம்பாஜி திரும்பிவந்தாராயினும் சிவாஜி நிறுவிய சுயராஜ்யத்தைக் காக்கக்கூடியவர் அவரல்லர் என்பது தெளிவாயிற்று. 1679-க்குப் பிறகு சிவாஜி மொகலாயர்களுக்கு எதிராகப் பீஜப்பூருக்கு உதவினர். ஆனல், அவருடைய முயற்சி கள் வெற்றிபெறவில்லை. ஔரங்காபாத் அருகிலுள்ள ஜல்னமீது அவர் தாக்கிய படையெடுப்பு, தோல்வியில் முடிவடைந்தது. அங்குக் கொள்ளையடித்தவற்றை இழந்துவிட்டதோடு தாமும் மிகுந்த பிரயாசைப்பட்டுத் தப்பி ஓடிவந்தார். 1680-ல் சிவாஜி இறந்தார். சிவாஜி இருந்தபோது பேரரசின் வேர்களைக் களைந்து

விடவில்லையாயினும் அவர் இறந்தபிறகு தக்காணத்து விவகாரங்களைச் சீர்படுத்தவேண்டும் என்னும் எண்ணம் ஔரங்கசீபிற்கு உண்டாயிற்று. அன்றியும், அதுவரையில் பாரசீகர்களோடும், ஆப்கானியக் குடிகளோடும் பல போர்களை நிகழ்த்தி, அமைதி நாட்டவேண்டிய நிலையில் அவர் இருந்தார். இரண்டாம் ஷா அப்பாஸ் என்னும் பாரசீகப் பேரரசர் ஔரங்கசீபிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவருக்குத் தேவையானால் தமது உதவியை நாடலாம் என்று எழுதியிருந்தார். இதைக் கண்டு ஆத்திரமுற்ற ஔரங்கசீப் தமக்கு யாருடைய உதவியும் தேவையில்லை யென்றும் தாம் ஆண்டவன் ஒருவனையே நம்பி இருப்பதாகவும் விடையிறுத்தார். அதுகண்டு கொதித்தெழுந்த ஷா அப்பாஸ், 'உமக்குப் பெயர்தான் ஆலங்கீர்; அதாவது உலகத்தை வென்றவர். நீர் பெற்ற வெற்றியெல்லாம் உம் தந்தையைச் சிறையிருத்தியதும், சகோதரர்களைக் கொன்றதுமேயாம். சட்டத்தை மீறி எங்கும் திரியும் கலகக்காரர்களை (சிவாஜியை மனத்தில் வைத்துக்கொண்டு கூறியதுபோல) அடக்க உம்மால் முடியவில்லை.' இவ்வாறு இரு பேரரசர்களிடையேயும் நடந்துவந்த கசப்பான கடிதப் போக்குவரத்து 1667-ல் ஷா அப்பாஸ் இறந்தபோது நின்றது. 1667-லிருந்து 1675வரையில் அவர் ஆப்கானியக் குடிகளோடு பல முறை போரிட்டு அவர்களை அடக்க வேண்டியிருந்தது. 1674, 75-ல் பேரரசர் தாமே வடமேற்கு இந்தியாவிற்குச் சென்று அங்கு நடந்த சண்டைகளை மேற்பார்த்தார். இறுதியில் காபூலில் அரசப் பிரதிநிதியாயிருந்த அமீர்கானின் திறமையால் ஆப்கானிஸ்தானத்தில் அமைதி நாட்டப்பெற்றது. ஆப்கானியப் போர்களால் பேரரசின் செல்வாதார நிலைமை பாதிக்கப்பட்டது. வடமேற்கு இந்தியாவில் தம் படைகளையும் கவனத்தையும் செலுத்தியமையால் சோழ மண்டலத்தில் சிவாஜி நடத்திய போர்களைத் தடுக்க முடியவில்லை. அன்றியும் பிறகு இராஜபுத்திரர்களோடு போரிட நேர்ந்தபோது ஆப்கானியப் படைகளுடைய உதவி பேரரசிற்குக் கிடைக்காமல் போயிற்று.

ஔரங்கசீபின் போர்கள் யாவற்றுள்ளும் மிகவும் சுவையானது அவர் இராஜபுத்திரர்களோடு நடத்திய போர். 1667-ல் ஜெய்சிங் இறந்துபோனார். அதற்கு அடுத்த ஆண்டு ராணாயசவந்த சிங்கும் இறந்துபோனார். இவ் விரு இராஜபுத்திரர்களும் தங்கள் நாட்டின் தனிப்பெரும் பிரதிநிதிகளாக இருந்ததோடு மொகலாயப் பேரரசிற்கும் விசுவாசத்தோடு சேவை செய்துவந்தனர். அந்தச் சமயத்தில் ஔரங்கசீப் ஜிஸியாவை விதித்தமையால் இந்துக்களாகிய இராஜபுத்திரருக்கும் ஔரங்கசீபிற்குமிடையே பகைமை தோன்றிற்று. 1679-ல் ஔரங்கசீப் மார்வாரைக்

கைப்பற்றினர். அதனை யடுத்து மறுபடியும் மார்வாரில் கலகம் தோன்றியமையால் அங்கிருந்த முக்கியமான இராஜபுத்திரரான துர்காதாஸை அடக்குவதற்கு ஔரங்கசீப் தம் மைந்தரான அக்பரை அனுப்பினர். அக்பர் அஜ்மீர் அருகில் குஷ்கர் என்னு மிடத்தில் இராஜபுத்திரரைத் தோற்கடித்தார். மற்றும் மொகலாயப் படைகள் உதயபுரியையும் சித்தூரையும்கூடக் கைப் பற்றின. இராஜபுத்திரத் தலைவர்கள் மலைகளில் ஓடி ஒளிந்தனர். அங்கிருந்து திடீர்த் தாக்குதல்கள் நடந்துகொண்டிருந்தன. இத் தாக்குதல்களால் மொகலாயப்படை பெரிதும் சேதமுற்றது. இதைக்கண்ட ஔரங்கசீப் அக்பர் இராஜபுத்திரர்களை எதிர்த்துப் போரைச் சரியாக நடத்தவில்லை யென்று வெகுண்டார். அதனல் அக்பர் மேவார், மார்வார் ராணுக்களோடு சேர்ந்துகொண்டு தம்மை மொகலாயப் பேரரசர் என்று அறிவித்துக்கொண்டார். திறமைசாலியான மொகலாயப் படைத்தலைவர் தகவூர்க்கானைத் தம் படைத்தலைவராக நியமித்துக்கொண்டார். அதன்மேல் அவர் அஜ்மீரை நோக்கி முன்னேறினர். இதையறிந்த ஔரங்கசீப் அஜ்மீர் அருகில் போருக்குத் தயாரானர். அன்றியும், தகவூர்க் கானைத் தம் பக்கம் சேரும்படியாகச் செய்தார். தகவூர்க்கான் ஔரங்கசீபோடு சேர்ந்துகொண்டு அக்பரும் தாமும் இராஜ புத்திரர்களுக்கு விரோதமாகக் குறிப்பிட்டு அக்பருக்கு ஒரு கடித மெழுதி அதைத் துர்காதாஸிடம் சேரும்படியாகச் செய்தார். அக்பரும் தகவூர்க்கானும் சேர்ந்து தமக்கு எதிராகச் சதி செய்வ தாகக் கண்டிருந்த கடிதத்தைப் பார்த்த இராஜபுத்திரர்கள் அக்பர் கடைசியாக ஔரங்கசீபையே சேர்ந்துவிட்டதை யறிந்து அஜ்மீரிலிருந்து ஓடிப் போயினர். இளவரசர் அக்பரும் ஓடிப் போனர். பேரரசர் தம்மை ஏமாற்றிவிட்டதை யறிந்த துர்கா தாஸ் அக்பரோடு சமாதானமாகி அவரை மகாராஷ்டிரத்தி லிருந்த சாம்பாஜியின் அவையில் கொண்டுபோய் விட்டார். அக்பர் சில நாள் அங்கிருந்துவிட்டுப் பாரசீகத்திற்குப் போய் விட்டார். ஔரங்கசீப் இராஜபுத்திரர்களோடு சமாதானம் செய்துகொண்டார். துர்காதாஸின் அரண்மனையில் வளர்ந்து வந்த அக்பரின் மகள் நல்ல முஸ்லிமாக வளர்க்கப்பட்டு ஔரங்கசீபின் அவைக்களத்திற்கே அனுப்பப்பட்டாள், சாம் பாஜியின் மைந்தனை ஸாஹூ சிலகாலம் ஔரங்கசீபின் அரண்மனையில் இந்துவாகவேயிருந்து பூனவுக்குத் திரும்பியது போல. 1707-ல் ஔரங்கசீப் இறந்தபிறகு இராஜபுத்திர அரசுகள் சுதந்தரமெய்திவிட்டன.

1680-ல் ஔரங்கசீப் தக்காணத்தை இறுதியாக வென்று அடக்கவேண்டு மென்று தீர்மானித்தார். அப்போது அவருடைய

ஆட்சியில் இரண்டாம் பகுதி தொடங்கிற்று. தக்காணத்தைத் தாக்கிப் பிடிக்க வேண்டுமென்று அவர் கருதியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஷியா முஸ்லிம்களான கோல்கொண்டா அரசர்கள் எப்போதுமே ஔரங்கசீபின் ஆத்திரத்திற்கு ஆளாகி இருந்தனர். அவர்கள் ஷியா மதத்தைக் கைவிட்டு வைதிக முஸ்லிம்களாக மாறுவிட்டால் அவர்களுடைய நாடு பேரரசில் இணைக்கப்படவேண்டு மென்று அவர் எண்ணினர். மற்றும், மராட்டியர்களுடைய எதிர்ப்பை இறுதியாக முறியடிக்கவேண்டும் என்றும் விரும்பினர். இவ் விரு விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக மொகலாயப் படைகள் 1685-ல் தக்காணத்தில் இறங்கின. சாம்பாஜிக்கு விரோதமாகத் தாம் நடத்தப் போகும் போரில் தமக்கு ஆதரவு தரவேண்டுமென்று பேரரசர் பீஜப்பூரைக் கேட்டிருக்க, பீஜப்பூர் வெளிப்படையாகவே சாம்பாஜிக்கு உதவ முன்வந்தது. 1685-ல் இளவரசர் ஆஸாம் பீஜப்பூரை முற்றுகை யிட்டார். அதே சமயத்தில் மொகலாயப்படைகள் ஹைதரா பாத்தைக் கைப்பற்றிவிட்டமையால் கோல்கொண்டாவிலிருந்து பீஜப்பூருக்கு உதவ வழியில்லாமல் போயிற்று. ஓராண்டுக்காலம் பீஜப்பூர் முற்றுகையைச் சமாளித்துப் பார்த்தது. 1686-ல் ஔரங்கசீப் தாமே முற்றுகையை மேற்பார்த்து பீஜப்பூரைக் கைப் பற்றினர். அப்போது அங்கு ஆண்டுவந்த சிக்கந்தர் என்பானுக்கு உதவிப் பணமளித்துச் சாகும்வரையில் சிறையிலிருத்தினர். அவன் 1700-ல் இறந்தான். அதுகாறும் சுதந்தரநாடாக இருந்து வந்த பீஜப்பூர் மொகலாய பேரரசின் ஒரு மாகாணமாகிவிட்டது.

தக்காணத்து அரசப் பிரதிநிதியாக இருந்தபோது ஔரங்கசீப் கோல்கொண்டாமீது படையெடுத்தார். அது முற்றுப்பெறுவண்ணம் ஷாஜஹான் தடுத்துவிட்டார். இப்போது தடுப்பாரின்மையால் அவர் கோல்கொண்டாமீது படையெடுத் தார். அப்பொழுது கோல்கொண்டாவில் சுல்தானுக இருந்தவர் அபுல் ஹஸன் என்பவர். அவருக்குத் தானேஷா என்று மற்றொரு பெயர். அவர் பிராமணர்களை அரசாங்க வேலையில் வைத்துக் கொண்டார். ஜிஸியா என்னும் வரி விதிக்கவில்லை. சாம்பாஜி யோடு உறவாடினர். அவருக்கு ஒரு லட்சம் பவுன் கடன் கொடுத் தார். அவர் ஷியாவாக இருந்தார்; இசைப் புலவர்களை ஆதரித் தார். இந்துக்களுடைய கோவில்களை இடிக்கவில்லை. அவரிடம் தாஸில் அலுவல் பார்த்த ராம்தாஸ் என்பவர் ராமர் கோயி லொன்றைக் கட்டினர். இவற்றில் ஒன்றும் ஔரங்கசீபிற்குப் பிடிக்காது. அன்றியும் ஔரங்கசீப் பீஜப்பூரை முற்றுகையிட்ட போது தானேஷா கூறினர், 'பீஜப்பூர் அரசர் சிறுவராய் இருப்ப தால் அவ் வூரை மொகலாயர்கள் எளிதில் கைப்பற்றிவிட்டார்கள்'

என்று. கோல்கொண்டா முற்றுகை 1687-ல் தொடங்கியது. அம் முற்றுகை தேவையில்லை என்று கருதிய இளவரசர் ஷா ஆலம் சிறையிருத்தப்பெற்றார். 1695-ல்தான் அவருக்கு விடுதலை கிடைத்தது. மிகவும் பொறுமையோடு முற்றுகையை நடத்திக் கோல்கொண்டாவை ஔரங்கசீப் கைப்பற்றிக்கொண்டார். அபுல்ஹஸன் சிறைப்படுத்தப்பட்டார். சுகவாழ்க்கையைத் தவிர வேறொன்று மறியாத தானேஷா மொகலாயர் சிறையின் அகப் புறத்தை அனுபவிக்க வேண்டிவந்தது. கோல்கொண்டா வீழ்ச்சிக் குப் பிறகு சாம்பாஜியைப் பிடித்துத் தண்டிப்பதில் ஔரங்கசீபின் கவன மிருந்தது. தம்மைச் சூழ்ந்து ஆபத்து இருந்தபோதிலும் தம்முடைய தீய பழக்கங்களில் ஒன்றையும் குறைத்துக்கொள்ளா மலிருந்த சாம்பாஜியை ரத்தினகிரி மாவட்டத்திலுள்ள சங்கமேஸ்வர் என்னு மிடத்தில் முகாரப்கான் என்னும் மொக லாயர் படைத்தலைவர் சிறைபிடித்தார். அந்த நிலையிலும் ஔரங்கசீபிடம் அவமரியாதையாகப் பேசிய சாம்பாஜி முதலில் இழிவுபடுத்தப்பட்டுப் பிறகு சித்திரவதை செய்யப்பட்டு அதன் பிறகு கொல்லப்பட்டார். ஔரங்கசீபின் படைத்தலைவரான ஸுல்பிகர்கான் ரெய்காரைக் கைப்பற்றிச் சாம்பாஜியின் மனைவியையும் மகனை ஸாஹுவையும் சிறைபிடித்துச் சென்றார். அதோடு மராட்டிய அரசு தாற்காலிகமாக முடிவுற்றது.

வடமேற்கு இந்தியாவிலும், இராஜபுதனத்திலும், மகாராஷ் டிரத்திலும், ஷியா மன்னர்கள் ஆண்ட பிரதேசங்களிலும் ஔரங்கசீபிற்கு மிகுந்த எதிர்ப்புகள் தோன்றின என்பதைக் கண்டோம். இவையே அன்றிப் பலவேறு சில்லறைக் கலகங்களும் ஆங்காங்குத் தோன்றின. அவற்றுள் சத்ரசாலின் கலகமும், ஜாட்டியர்களின் கலகமும் குறிப்பிடத்தக்கவை. சத்ரசால் என்பவர் பண்டேல்கண்டைச் சேர்ந்த சம்பத்ராயின் நான்காவது மகன். 1661-ல் அவர் செய்த கலகத்தை ஔரங்கசீப் அடக்கி விட்டார். பிறகு அவர் ஔரங்கசீப் ஆட்சி நிர்வாகத்தில் வேலை யில் அமர்ந்தார். 1665-ல் சிவாஜியை எதிர்த்து ஜெய்சிங் நடத்திய போரில் இவரும் கலந்துகொண்டார். இந்து சமயத்தை எதிர்த்து ஔரங்கசீப் ஜிஸியாவை விதித்து, கோவில்களை இடித்தமையால் ஆத்திரம் கொண்ட பண்டேல்கண்ட் (இந்துக்களுடைய தலைவராக இவர் விளங்கினர்) சிவாஜியைப் பின்பற்றி மொகலாயப் பிரதேசங் களைத் தாக்குவதிலும் சௌத் வசூலிப்பதிலும் ஈடுபட்டார். இவர் கலிஞ்சார்க் கோட்டையைக் கைப்பற்றினர். ஆயினும், 1705-ல் பேரரசரோடு இவர் நட்புப்பூண்டார். ஔரங்கசீபும் இவரை மன்சப்தார் 4000 மாக நியமித்தார். இவர் ஔரங்கசீபிற்குப் பிறகும் உயிர் வாழ்ந்தாராகையால் இவர் இறப்பதற்குள்

பண்டேல்கண்ட் சுதந்தரமடைந்தது. இவர் வாழ்க்கையின் பிற்பகுதியில் பேஷ்வாவான முதலாம் பாஜிராவுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார்.

ஜாட்டியர்களும் 1685-ல் இராஜாராம் ஜாட் என்பவருடைய தலைமையில் கலகமிட்டனர். இக் கலகத்தின் காரணமாக அக்பரின் எலும்புகள் அவருடைய மசூதியிலிருந்து அகற்றப்பட்டு நாசமாக்கப்பட்டன. ஆகவே, ஜாட்டியருடைய கலகம் ஔரங்கசீபை எதிர்த்துமட்டும் செய்யப்பட்டதாகக் கொள்ள இடமில்லை. அது மொகலாயர்களையும் பொதுவாக முஸ்லிம்களையும் எதிர்த்துச் செய்யப்பட்டதாகும். மம்மூது கஜினியை எதிர்த்தே ஜாட்டியர்கள் நடவடிக்கை எடுத்தனர் என்பதிலிருந்து அவர்கள் எப்போதுமே முஸ்லிம்களை எதிர்த்துவந்த தீவிர இந்துக்கள் என்பது பெறப்படும். இக் கலகங்களைத் தவிர மாளவம், கோண்டுவாளு, பீகார் முதலிய இடங்களிலும் சிறு கலகங்கள் அவ்வப்போது தோன்றின.

ஔரங்கசீபிற்கும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்களுக்கும் பெரிய அளவு தகராறு இருந்தது. 1651-ல் ஆங்கிலேய வணிகர்கள் வங்காளத்தில் ஹூப்ளியில் ஒரு வாணிகத் தலத்தை ஏற்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அங்கிருந்து பட்டு, சர்க்கரை போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்வதில் அவர்கள் ஈடுபட்டனர். அப்போது வங்காளத்தில் கவர்னராயிருந்த ஷூஜா அவர்களிடமிருந்து மொத்தமாக 3,000 ரூபாய் பெற்றுக்கொண்டு வியாபாரத்தை அனுமதித்தார். அவர்கள் ஏற்றுமதி, இறக்குமதி வரி கட்டத் தேவையில்லை என்பது அப்போதைய விதி. ஆனால், 1665-ல் அவ் வரி மொகலாயப் பேரரசிலுள்ள எல்லா வணிகர்களுக்கும் விதிக்கப்பட்டது. அதாவது முஸ்லிம்கள் 2½ சதவிகிதமும் இந்துக்கள் ஜிஸியா உட்பட 5 சதவிகிதமும் கட்டவேண்டுமென்று ஆயிற்று. இதையொட்டி ஆங்கிலேய வணிகர்களுக்கு 3½ சதவிகிதம் வரி கட்டவேண்டும் என்று உத்தரவாயிற்று. ஆனால், கம்பெனியார்கள் ஷூஜா காலத்தில் அவர்கள் கட்டிய 3,000 ரூபாயைத் தவிர வேறொன்றும் கட்டத் தேவையில்லையென்று வாதாடினர். ஆனால், பேரரசர் உத்தரவிற்கு எதிராக மாகாணக் கவர்னருடைய உத்தரவு செல்லுபடி ஆகாது என்பது தெளிவு. இந்த நடவடிக்கைகளால் ஆத்திரமுற்ற ஆங்கிலேயக் கம்பெனியின் ஏஜெண்டான ஜாப் சார்னக் என்பவர் ஹூப்ளி நகரத்தைத் தீக்கிரையாக்கி மொகலாயர் கப்பலொன்றையும் கைப்பற்றினர். இது நிகழ்ந்தது 1686-ல். இதையடுத்து வங்காளத்தில் கவர்னராய்

இருந்த ஷெயிஸ்டகான் ஹூக்ளியிலிருந்த ஆங்கிலேய வாணிகத் தலங்களைக் கைப்பற்றிக்கொண்டு கம்பெனியார்களை விரட்டி விட்டார். ஆயினும், ஓராண்டு கழித்துச் சமாதானம் ஏற்பட்டது.

அதன் முடிவாகக் கம்பெனியார்கள் ஹூக்ளியில் மறுபடியும் வாணிகம் செய்யலாமென்றும் ஷுஜா செய்த ஏற்பாட்டின்படி 3000 ரூபாய் ரொக்கத் தொகை கட்டினால் போதும். சூரத்

திலும் இவ்வாறே மொகலாயர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் விரோதம் ஏற்பட்டது. அவர்களிடையே நடந்த சண்டையில் கடல் வலுவில் ஆங்கிலேயர்களும், நிலப்படை வலுவில் மொகலாயர்களும் சிறந்திருந்தனர். சர் ஜோஸையா சைல்ட் என்னும் கம்பெனித் தலைவர் ஆங்கிலேயர்களைச் சூரத்திலிருந்து பம்பாய்க்குப் போய்விடுமாறு கட்டளையிட்டார். ஆனால், மொகலாயர்கள் ஆங்கிலேய வியாபாரிகளைச் சிறையிருத்தி, சூரத்திலேயே நிறுத்திக் கொண்டனர். இந்தியாவிலிருந்த கம்பெனி அதிகாரியான சர் ஜான் சைல்ட் என்பவர் ஒரு கடற்போரில் மொகலாயர் கடற்படையை வென்றார். ஆனால், அவர்களுடைய வாணிகத் தலங்களைக் கைப்பற்றிக்கொண்ட மொகலாயர்களோடு அவர்கள் சமாதானமாகப் போக வேண்டியிருந்தது. அதன் முடிவாக 1690-ல் சமாதானம் ஏற்பட்டது. சண்டைக்கு முன்பிருந்த நிலைமை திரும்பிற்று. ஆங்கிலேயர்கள் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் நஷ்டஈடு தரவேண்டி இருந்தது. தக்காணத்தை வென்று முடித்த ஔரங்கசீப் 1682-ல் தமது வெற்றியை முற்றுவிக்கப் படையோடு ஆங்காங்குச் சென்றுகொண்டிருந்தார். 1692-லிருந்து 1695 வரை அவர் பீஜப்பூர் அருகே முகாமிட்டிருந்தார். 1695-ல் டாக்டர் கரேரி என்னும் இத்தாலியர் பேரரசருடைய முகாமிற்கு வந்து அவரைக் கண்டார். அப்பொழுது அவர் நேரில் கண்ட பேரரசரைப்பற்றிய செய்திகளும், விவரங்களும் சுவையாயுள்ளன. அப்பொழுது பேரரசருக்கு வயது 77. ஆனால், அவர் படிப்பதற்கோ எழுதுவதற்கோ கண்ணாடி தேவைப்படவில்லை. சற்றுக் கூனல் முதுகினராய் இருந்தார். அதிக விலைமதிப்புள்ள ஆடைகளையோ அணிகளையோ அணியவில்லை. சமயச் சடங்குகளைச் சரிவரச் செய்து தம் காரியங்களை எதற்கும் பிறரை எதிர்பார்க்காத - நம்பாத - தன்மையுடையவர் என்பது தெளிவாகத் தெரிந்தது என்று கரேரி கூறுகிறார். பீஜப்பூரை விட்டு ஔரங்கசீப் பண்டரிபுரத்தின் அருகிலுள்ள பிரம்மபுரி என்னும் ஊருக்குச் சென்றார். அங்கு நான்கு ஆண்டுக் காலம் தங்கினார். பிரம்மபுரியின் பெயர் இஸ்லாம்புரி ஆயிற்று. 1699-ல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்ட ஔரங்கசீப் குல்பர்கா மாவட்டத்திலுள்ள சாகருக்கு அருகேயுள்ள சில கன்னடியர்களை அடக்கிக் கிருஷ்ணா நதிக்கும் பீமா நதிக்கும் இடைப்பட்ட அவர்களுடைய நாட்டை வென்று 1705-ல் மொகலாய அரசில் சேர்த்தார். இதுவே அவரடைந்த கடைசி வெற்றி. இதனை அடைவதற்குப் புகழ் பெற்ற படைத்தலைவரான ஸுல்பிகர்கான் உதவினார். அப்பொழுதே அவருக்கு உடல்நலம் குறைந்துவிட்டது. 1706-ல் அவர் அகமது நகருக்கு வந்து சேர்ந்தார். அகமது நகருக்கு வந்து ஓராண்டுக்காலம் கழித்து 1707-ல் வெள்ளிக்கிழமையன்று

தமது விருப்பப்படியே ஜபமாலையை உருட்டிக் கொண்டே—கலிமாவை வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே—தமது 89 ஆவது வயதில் ஔரங்கசீப் இறந்தார். அவர் தௌலதாபாத் அருகில் அடக்கம் செய்யப்பட்டார். அவருக்கு முன்பே 1702-ல் அவருடைய மூத்த மகளும் 1704-ல் இளவரசர் அக்பரும் இறந்து போயினர். இளவரசர் ஆஸாமிற்கும், காம்பக்ஷிக்கும் இடையே பகைமையிருந்தது. தாம் இறப்பதற்குச் சில நாள்கள் முன்பு அவர் எழுதிய ஒரு கடிதத்தில் அவர்கள் தம்மிடையே இருந்த வேற்றுமைகளை மறந்துவிடவேண்டுமென்றும், அவர்களிடையே சண்டையிட்டுக் கொள்ளக் கூடாதென்றும், தேவையானல் பேரரசைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தி எழுதினர். அவர் தம் வாழ்நாளில் இவ் வறிவுரை ஒன்றையும் கடைப்பிடிக்கவில்லை; அனுபவத்தால் உணர்ந்து எழுதினர் என்று கொள்ளலாம். கடைசிக் காலத்தில் அவருடைய உள்ளம் பலவித ஐயங்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாயிற்று. அவர் எழுதி வைத்தார்: 'நான் இந்த உலகத்தில் துணையின்றி வந்தேன்; இதனை விட்டுத் துணையின்றிப் போகின்றேன். எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை எனக்குச் சிறிதுமில்லை. பாதரசத்தைப் போலத் துடிக்கின்ற நிலையிலிருக்கின்றேன். நான் இந்த உலகிற்கு ஒன்றையும் கொண்டு வரவில்லை. இதை விட்டுப் போகும்போது நான் செய்த பாவங்களைமட்டும் கொண்டு செல்கின்றேன். ஆண்டவன் என்னை எப்படித் தண்டிப்பாரோ, தெரியாது.' இறக்கும் தறுவாயில் அவருக்குக் கழிவிரக்கமிருந்தது. கடவுள் நினைப்பிருந்தது; தாம் செய்த பாவங்களை நினைந்திருந்தார். இறக்கும்போது எந்தக் கடவுளை எந்த உருவில் நினைப்பது என்பதே அறியாமல் ஒரு கடவுளை நினைக்க முயன்றும் முடியாமல் இறந்துபோன அக்பருடைய நிலைமையை ஔரங்கசீபின் நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். மொகலாயப் பேரரசர்களில் அக்பருக்குச் சமமாகக் கொள்ளக்கூடிய பெருமையுடைய ஔரங்கசீபின் ஆட்சி இவ்வாறு முற்றுப்பெற்றது.

மொகலாயர் ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட வடமேற்கு எல்லைப்புறக் கொள்கைகளையும், தக்காணக் கொள்கைகளையும் நன்கு அறிந்து கொண்டாலன்றி அவர்களுடைய பேரரசிற்கு அத்திசைகளிலிருந்து அவ்வப்போது தோன்றிய பிரச்சினைகளை நன்கு அறிந்துகொள்ள இயலாது. அவற்றை முறையே கீழே காண்போம்:

(1) மொகலாயப் பேரரசின் வடமேற்கு எல்லைப்புறத்தில் வாழ்ந்துவந்த ஆப்கானியக் கூட்டத்தினர் இந்துஸ்தானத்தை

ஆண்ட பேரரசர்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தனர். அக்பர் அடிக்கடி அவர்களோடு போர் தொடுத்து அடக்கி வைத்திருந்தார். ஆனால், அவர்கள் ஓரளவிற்கு அமைதி யாக இருந்தனரே யன்றித் திருப்தியடையவில்லை. சமயம் வாய்க்கும்போது தொல்லைதர எப்போதுமே ஆயத்தமாயிருந் தனர். ஷாஜஹானின் ஆட்சியின் முடிவில் வடமேற்கு மாகாண நிர்வாகம் சற்றுத் தளர்ச்சியடைந்துவிட்டபோது ஆப்கானியர்கள் மறுபடியும் போரிடத் தொடங்கினர். ஔரங்கசீப் பேரரச ரான பிறகு நிலைமை இராணுவ முயற்சியிலேயே திருத்தப்பட வேண்டியதாயிற்று. ஆப்கானியர்களுக்குப் பணமும் மற்றச் சலுகைகளும் கொடுத்து அவர்களை அமைதிப்படுத்தப் பேரரசர் முயன்றும் அம் முயற்சி பயனின்றிக் கழிந்தது. கி.பி. 1667-ல் யூசுப்சாயிகள் என்போர் பாகு என்பான் தலைமையில் கலகமிடத் தொடங்கினர். அவர்கள் சிந்து ஆற்றினைக் கடந்து, ஹஸாரா மாவட்டத்திற் புகுந்து அங்கிருந்த குடிகளிடம் வரிவசூலிக்கத் தொடங்கினர். மொகலாயப் படைகள் தாக்கப்பட்டன. அங்கிருந்த அதிகாரிகள் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் பேரரசரிடம் முறையிட்டுக் கொண்டனர். ஔரங்கசீப் தம் படைத் தலைவர்களில் மூவரை யனுப்பி ஆப்கானியர் கலகத்தை அடக்க உத்தரவிட்டார். விரைவில் ஆப்கானியர் தோற்கடிக்கப் பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். தாற்காலிகமாகக் கலகக்காரர் கள் அமைதியை மேற்கொண்டனர்; பேரரசரும் ராஜா யசவந்த சிங் என்பாரை வடமேற்கில் கவர்னராக நியமித்தார்.

கி.பி. 1672-ல் ஆப்ரிடிகள் என்னும் ஒரு கூட்டத்தார் அக்மல்கான் என்பான் தலைமையில் கலகம் செய்தனர். அமீன்கான் என்னும் பேரரசுப் படைத்தலைவர்களில் ஒருவன் அக் கலகத்தை ஒடுக்க முயன்று அலிமசூதி என்னுமிடத்தில் படுதோல்வி யடைந் தான்; அத் தோல்வியில் பத்தாயிரம் மொகலாயப் போர் வீரர் களுக்கு மேலாக இறந்தனர். இன்னும் பலர் போரில் சிறை பிடிக்கப்பெற்று மத்திய ஆசிய நாடுகளில் அடிமைகளாக விற்கப் பெற்றனர். இது போதாதென்று ‘கடக்கர்கள்’ என்னும் வேறொரு கூட்டத்தாரும் அதே தருணத்தில் கலகமிட்டனர். நிலைமை கைவிஞ்சி விடுவதற்குமுன் அதனைச் சமாளிக்க விரும்பிய பேரரசர் தாமே வடமேற்கு முனைக்குப் படையோடு விரைந்தார். படைபலம் கொண்டு சில பகைவர்களையும், தந்திரத்தாலும் லஞ்சத்தாலும் மற்றக் கலகக்காரர்களையும் அடக்குவதற்கு அவருக்கு ஓராண்டிற்கு மேலாயிற்று. கி.பி. 1675-ல் கலகம் ஏறத்தாழ ஓய்ந்துவிட்டது. இக் கலகங்களாலும் பேரரசர் நேரடியாக அங்குச் சென்று தங்கிவிட நேர்ந்தமையாலும், அக்

கலகத்தை அடக்குவதற்குத் தக்காணத்திலிருந்த படைகளையும் வருவித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டமையால் தக்காணத்தில் மொகலாயர் பலம் குன்றிற்று. இந் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சிவாஜி தலைமையில் மராட்டியர்கள் தக்காணத்தில் தங்கள் விருப்பப்படி மொகலாயப் பிரதேசங்களில் சூறையாடித் தொந்தரவு கொடுக்க முடிந்தது. தக்காணத்தில் மொகலாயர் வலுக்குறைவதற்கும் சிவாஜி 'சுயராஜ்யம்' அமைப்பதற்கும் வடமேற்கு நிலைமை மறைமுகமாகக் காரணமாயிருந்தது. இது காரணமாகவே 1680-க்குப் பிறகு ஔரங்கசீப் தக்காணப் படையெடுப்பில் இறங்கவேண்டியதாயிற்று.

(2) மொகலாயருடைய தக்காணக் கொள்கை அக்பர் காலத்தில் தொடங்கியது. பேரரசை வட இந்திய எல்லைக்குள் அடக்கிக் கொள்ளாமல் விந்தியத்தைத் தாண்டி அதன் தென்பாலும் அகமது நகரம் உட்பட விரிவடையச் செய்ததன் பொறுப்பு அக்பருடையதே. இக் கொள்கையைப் பின்பற்றி மொகலாயர் தங்கள் அரசப் பிரதிநிதி ஒருவரைத் தக்காணத்தில் நியமிக்கத் தொடங்கினர். தக்காணத்தில் இருந்த பாமினி அரசு சிதறி அகமது நகரம் முதலிய ஐந்து சிறு அரசுகளாகப் பிரிந்திருந்த நிலைமையில் மொகலாயப் பேரரசு அங்குப் படைகொண்டு புகுந்தபோது தக்காண அரசியலில் மேலும் மேலும் தலையிடுதல் தவிர்க்கப்படாததாயிற்று. ஷாஜஹான், ஔரங்கசீப் இருவரும் தக்காணத்தில் அரசப் பிரதிநிதி நிலையில் இருந்து அப் பேரரசின் நலனைப் பார்த்துக்கொண்டனர். பீஜப்பூர், அகமது நகரம் ஆகிய இரு அரசுகளும் பேரரசின் மேலாதிக்கத்தை ஓரளவு ஏற்றுக் கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. பான்ஸ்லேக்களின் கலகக் கொள்கையும், ஔரங்சீப் பேரரசரான பிறகு ஷியா, சுன்னி வேறுபாடுகள் காரணமாகப் பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களை அவர் அடக்க விரும்பியமையும் கி.பி. 1680-ல் அவர் தக்காணத்தில் வந்து தங்கி அப் பகுதிகளைக் கைப்பற்றிப் பேரரசில் சேர்த்துக்கொள்ள விரும்பியமைக்குக் காரணங்களாகும். தக்காணக் கொள்கையை உருவாக்கியவர் ஔரங்கசீப் அல்லர். அவர் முன்னோர்கள் வகுத்த கொள்கையின் பின்விளைவே அவர் அக் கொள்கையை மேலும் வளர்த்துக்கொண்டு போரில் ஈடுபட்டுத் தமது ஆட்சியின் பின் கால்நூற்றாண்டைச் செலவிட வேண்டியதாயிற்று.

29. மொகலாயர் ஆட்சி முறை, சமுதாயநிலை, கலையும் இலக்கியமும்

தோற்றுவாய்

மொகலாயர் ஆட்சி ஏறத்தாழ அவர்களுடைய முன்னோர்கள் ஆட்சியைப்போலவே அமைந்தது. ஆயினும், ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் மன்னர் தம் கையிலேயே குவித்துக்கொண்டமையாலும் தக்காணத்து அரசுகளையும் வென்று சேர்த்துப் பேரரசினை மிகப் பெரிய அரசாகச் செய்துவிட்டமையாலும் ஆட்சியின் தரம் குறைந்தது. பேரரசில் 21 மாகாணங்கள் அடங்கி யிருந்தன. அவையாவன: கான்தேசம், பேரார், அகமது நகர் (ஔரங்காபாத்), பீதர், பீஜப்பூர், கோல்கொண்டா (ஹைதராபாத்), காபூல் (ஆப்கானிஸ்தான்), காஷ்மீர், லாகூர், மூல்தான், சிந்து, அஜ்மீர், டெல்லி, ஆக்ரா, அலகாபாத், அவுத், பீஹார், வங்காளம், ஒரிஸ்ஸா, மாளவம், குஜராத் என்பன. 1580-ல் பன்னிரண்டே மாகாணங்கள் அடங்கியிருந்த பேரரசில் இப்பொழுது 21 மாகாணங்களிருந்தன. ஔரங்கசீப் காலத்தில் நிலவரிமட்டும் 33 கோடி ரூபாய். அக்பர் காலத்து நிலவரியைப் போல் அது ஏறத்தாழ மூன்று மடங்கு ஆகும். ஜாகிர் நிலங்களிலிருந்து 27 கோடி ரூபாயும் அரசு நிலங்களிலிருந்து 6 கோடி ரூபாயும் கிடைத்தன. ஔரங்கசீப் ஆட்சியின் கடைசிக் காலத்தில் 15,000 மன்சப்தார்கள் இருந்தனர். இது அக்பர் காலத்து மன்சப்தார் எண்ணிக்கையைப்போல் 10 மடங்கு ஆகும். ஔரங்கசீப் காலத்து நிர்வாக நிலைமையைப்பற்றி பர்னியர் கூறுவது நோக்கத் தக்கது: 'அந்தப்புரமகளிர் ஆட்சியின் தரத்தை மிகவும் பாதித்தனர்; அரசு மிகப் பெரிதாகிவிட்டதால் தொலைவிலிருந்த கவர்னர்களுடைய கொடுங்கோன்மையை, லஞ்சப் பழக்கங்களை வலுவற்ற மன்னர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை; இந்துக்களே பெரும்பான்மை வாணிகத்தை நடத்திவந்தனர். மன்சப்தார்களுடைய

வாரிசு இல்லாத சொத்துகள் மன்னரைச் சேர்ந்தன. காலாள்கள் துப்பாக்கிகளைப் பயன்படுத்தத் தயங்கினர், அவை உண்டாக்கும் நெருப்பால் தங்கள் தாடி பற்றிக்கொள்ளுமென்று; எவ்வளவு பெரிய மொகலாயப் படையாயிருந்தாலும் சிறிது குழப்பம் ஏற்பட்டுவிட்டால் அவை திரும்பிச் சேருவதே இல்லை. எந்த இந்தியப் படையையும் ஒரு பிரெஞ்சுப்படை மிக எளிதில் தோற் கடித்துவிடும்; அந் நாட்டு மக்களிடம் நல்ல சட்டங்கள் இல்லை யென்று சொல்லமுடியாது. ஆனால், சட்டங்களை மதிக்காத மக்களிடையேயும் அவர்களை மதிக்க வைப்பதற்கு வழி ஒன்று மில்லாத நிலையிலும் நல்ல சட்டங்களிருந்து என்ன பயன்? எளிய வர்களைப் பொறுத்தவரையில் நியாயம் ஒழுங்காகவே வழங்கப் பட்டது. ஏனெனில், அவர்களால் லஞ்சம் கொடுக்க முடியாது; பொய்ச் சாட்சிக்காரர்களுக்குக் கூலி கொடுக்கமுடியாது.'

அக்பர் ஏற்படுத்திய தீன் இலாஹி அவரோடு செத்துவிட்டது. ஔரங்கசீப் காலத்தில் இஸ்லாம் அளவுக்குமீறிப் போற்றப் பட்டது. இந்துக்களை மதம் மாற்றுதலும், அவர்களுடைய கோவில்களை இடிப்பதும் மரபாயின. ஔரங்கசீப் தீவிர சுன்னி முஸ்லிம். அவர் ஷியாக்களை அழிக்க விரும்பினார். கோல்கொண்டா சுல்தான்மீது போர் தொடுத்ததற்கு அஃது ஒரு காரணம். சீக்கிய மதம் 17ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி யடைந்ததை மேலே கண்டோம். ஔரங்கசீப் தேஜ்பகதூரைக் கொலை செய்வித்ததன் மூலம் சீக்கியர்களின் தீராப் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டார். இந்துக்களிடையே பக்தி மார்க்கத்தைப் பின் பற்றிய ராதா வல்லபிகள், வல்லபாச்சாரிகள் என்று பல வகையினர் இருந்தனர். சைதன்யருடைய உபதேசங்களால் புனித மடைந்த ஹரிதாஸர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். சத்நாமிகள் அல்லது முண்டியர் என்பவர்கள் தலையையும் புருவத்தையும் சிரைத்துக் கொண்டு 'கடவுள் ஒருவரே' என்று நம்பி வந்த ஒரு கூட்டத்தினர். அவர்களில் சிலர் 1672-ல் மொக லாய அரசை எதிர்த்துக் கலகமிட்டனர். ஔரங்கசீப் காலத்தில் கலையும் இலக்கியமும் இழிந்த நிலைமை எய்தின. 17ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஜஹாங்கீரும், ஷாஜஹானும் வழங்கிய காசுகள் பலவகைப்பட்டதோடு மிகுந்த உயர்தரமாயு மிருந்தன. இலக்கியப் புலவர்களைப் போற்றியவர்களில் தாரா ஷுகோ முதன்மையானவர். ஔரங்கசீப் அத்தகைய காரியங்களில் ஈடுபடுவதில்லை. அவர் கட்டடக்கலையில் அடைந்த வெற்றி மிகக்குறைவே. இசைக்கலை அவர் கையில் அகப்பட்டு மாண்டது.

மொகலாயப் பேரரசு ஔரங்கசீப் காலத்திற்குப் பிறகு வீழ்ச்சியுற்றது. இதற்கு முக்கியமான காரணராயிருந்தவர் ஔரங்கசீபும் அவருடைய சமயக் கொள்கையுமே என்று பல ஆசிரியர்கள் ஒருமனதாகக் கூறுவர். உண்மையில் எந்தப் பேரரசும் வீழ்ச்சியுறுதற்கு அவ் வீழ்ச்சிக்கு முன்பிருந்தவர்கள் பொறுப்பாக முடியாது. வீழ்ச்சிக்காலத்திலிருந்தவர்கள்தாம் பொறுப்பாக முடியும். ஔரங்கசீப் காலத்தில்தான் பேரரசு மிகப் பெரிதாயிருந்தது. அதையே அதன் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகவும் கூறுவர். ஆனால், அது பெரியதாயிருந்தமை அதன் வீழ்ச்சிக்குக் காரணமாகாது. அப் பெரிய அரசைக் கட்டி ஆளுதற்குப் போதுமான திறமையுடையவர்கள் ஔரங்கசீபைத் தொடர்ந்து மொகலாயப் பேரரசை ஆளவரவில்லை என்பதுதான் காரணமாயிருக்க முடியும். ஔரங்கசீபின் சமயக்கொள்கை அவ் வீழ்ச்சிக்குக் காரணமென்பர். அப்படியானால், சுல்தானியத்தின் வீழ்ச்சிக்கு பிரூஸ் துக்ளக்கின் சமயக் கொள்கைதான் காரணமென்று கூறவேண்டும். முஸ்லிம் ஆட்சிக்காலத்தில் இந்துக்களுடைய கோயில்களை இடித்தலும் வற்புறுத்தி மதம் மாற்றுதலும் சர்வசாதாரணமான காரியங்கள். அப்படி இருந்தும் அவ் வாட்சி 7, 8 நூற்றாண்டுகளுக்கு இந்தியாவில் நடைபெற்றிருக்கிறது. ஔரங்கசீபின் தனிப்பட்ட திறமையை ஒருவரும் குறைத்து மதிப்பிடுவதில்லை. ஆகவே, மொகலாயப் பேரரசு 18 ஆம் நூற்றாண்டில் தளர்ந்து போய் 19 ஆம் நூற்றாண்டில் அற்றுப் போனதற்குக் காரணம் யாதென்று வேறு வகையில் ஆராய வேண்டும். மராட்டியர்கள், சீக்கியர்கள், ஐரோப்பிய வணிகர்கள் என்ற பலதரப்பட்டாருடைய எதிர்ப்புகளை ஒரே சமயத்தில் மேற்கொண்டு முறியடிக்கக் கூடிய திறமையுள்ள பேரரசர் அக் குலத்தில் ஔரங்கசீபிற்குப் பிறகு ஒருவரும் தோன்றவில்லை. அளவுக்கு விஞ்சி அரசைப் பெரிதுபடுத்திவிட்ட தவறு அக்பர் காலத்தில் ஏற்பட்டதாகும். மன்சப்தாரி முறை அக்பரால் நன்கு அமைக்கப்பட்டது. ஜஹாங்கீர் காலத்தில் இம் முறையால் ஏற்பட்ட கேடுகளைக் கண்டோம். இராணுவத்தில் மன்சப்தாரி முறை, நிலவரித்திட்டத்தில் ஜாகீர் முறை என்பவை அரசையும் நிர்வாகத்தையும் பலவீனப்படுத்தப் போதுமானவை. இப் பல காரணங்களால் 18 ஆம் நூற்றாண்டிலிருந்து மொகலாயப் பேரரசு வலுவிழந்து நின்றது.

(அ) ஆட்சிமுறை

மொகலாயர் இந் நாட்டில் நிறுவிய ஆட்சிமுறை பண்டைய இந்து, பௌத்த ஆட்சிமுறைகளை அப்படியே பின்பற்றியதுமன்று; முற்றிலும் புதுமையானதுமன்று. அவ் வாட்சியினை முதன் முதல்

பெரிய முறையில் இந்துஸ்தானத்தில் நிறுவிய அக்பர்கூட அதன் விவரங்களைத் தாமே எண்ணிப் புதிதாகப் புகுத்திவிடவில்லை. அவர் காலத்திற்கு முன்பு வட இந்தியாவை ஆண்டுவந்த ஷெர்ஷா என்னும் சூர் வமிச மன்னரும், அவருக்கும் மூன்று நூற்றாண்டு களுக்கு முன்பு ஆண்ட அலாவுதீன் கில்ஜி என்பாரும் புகுத்தி யிருந்த ஆட்சிமுறைகளைச் சற்றுத் தழுவியும் சற்று மாற்றியும் ஆக்கிய ஆட்சிமுறையே அக்பர் ஏற்படுத்தியதாகும். அவ் வாட்சி முறையில் சிறந்த அமிசங்களும் இருந்தன; குறைபாடுகளும் இருந்தன. மொகலாயர் ஆட்சி முடிந்தபின் ஏற்பட்ட ஆங்கில ஆட்சியாளர்களும் அவர்களுடைய ஆட்சியின் பல அமிசங்களை ஏற்றுக்கொண்டனர்.

மொகலாயர் ஆட்சிமுறையில் பண்டைய இந்தியப் பஞ்சா யத்து முறைகளின் பல அமிசங்களும், முஸ்லிம் அரசுகளின் பேரரசு ஆட்சி நிலையங்களும் ஓரளவு கலந்து தோற்றமளித்தன. அதனை 'இந்தியச் சூழ்நிலையில் அமைக்கப்பெற்ற பாரசீக - அராபிய அரசு முறை' என்று ஜதுநாத சர்க்கார் விவரித்துள்ளார். டெல்லி சுல்தானிய ஆட்சிக்கும், மொகலாயர் ஆட்சிக்கும் முக்கியமாகச் சில வேறுபாடுகள் இருந்தன என்றும், முந்தியதைவிடப் பிந்தியது ஒன்றிய ஆட்சிமுறை யென்றும், தேசிய ஆட்சிமுறை என்றும் சில வரலாற்றுளர்கள் வருணிப்பர். ஆனல், அவ் விருவகை ஆட்சி முறைகளும் அடிப்படையில் இராணுவ பலத்தைக் கொண்டு நடத்தப் பெற்ற அசகாய [1] மன்னர்களின் ஆட்சியே என்பதில் ஐயமிருக்க முடியாது. படைமானியத் திட்டத்தைப் போன்ற தோர் அரசியல் சமுதாயத் திட்டம் அமலில் இருந்தது. மன்ன ருக்குப் போர்க் காலங்களில் உதவுதற்குப் பிரபுக்கள் குதிரைப் படைகளைத் தரவேண்டும் என்னும் ஏற்பாடு அலாவுதீன் கில்ஜி காலத்திலேயே நடைமுறையில் இருந்தது என்பதும், அம் முறை யால் பல பிரபுக்கள் மன்னரைப் பல வகைகளில் ஏமாற்ற முற் பட்டனர் என்பதும், அந் நிலையை மாற்றுவதற்குக் குதிரை களுக்குச் சூடு போடுதல் முதலிய சீர்திருத்தங்களை அலாவுதீன் கில்ஜி ஆக்கினர் என்பதும் சுல்தானியத்தின் வரலாறு அறிந்தோர் அறிந்ததாகும். உண்மையில் அலாவுதீன் கில்ஜியும், ஷெர்ஷா வும் தவிர்க்க முயன்ற படைமானியத் திட்ட மரபுகளை மன்சப்தாரி முறை என்னும் பெயரில் அக்பரே புகுத்திவிட்டார். கடைசியில் மொகலாய ஆட்சி வீழ்ந்துபோனதற்கு இதுவும் ஒரு காரண மாகும். இஃதிவ்வாருக, எல்லா முறைகளிலும் மொகலாயர்

[1] பிறர் சகாயம் அல்லது உதவி அல்லது அதிகாரப் பங்கின்றி நடத்தப் பெறுவது.

ஆட்சி மரபு சுல்தானிய ஆட்சி முறைகளைவிடச் சிறந்தது என்று பொருள்படக் கூறுதல் பொருந்தாது. ஆனால், ஒரே மொழி (அரசியலில் பாரசீகம், பேச்சு மரபில்; அவைக்களத்திலும் பிற இடங்களிலும் உருது), ஒரே ஆட்சிமுறை, ஒரே வகைச் சட்ட திட்டங்கள் என்பவை மொகலாயர் ஆட்சிக் காலத்தில் ஏற் பட்டவையாகையால், அவர்கள் காலத்தில் 'தேசீய ஆட்சி' என்பதொன்று தொடங்கி வைக்கப்பட்டதாகக் கருதலாம்.

மொகலாயர் ஆட்சியில் பேரரசர் முழு அரசியல், இராணுவ ஆதிக்கத்திற்கும் இருப்பிடமாய் இருந்தார்; அவரே அரசின் தலை வர்; அவர் ஆதிக்கத்திற்குக் குறைபாடு ஏற்படுத்த வேறு எந்த நிலையுமில்லை. நடைமுறை நிர்வாகத்தில் பலமுறை மந்திரிகளைக் கலந்துகொண்டே அவர் ஆட்சி நடத்தினர் எனில், வேறுவிதமாக ஆட்சி நடத்தவே முடியாது என்னும் காரணத்தால்தான் அவ் விதம் நடந்தது. அவர்கள் மட்டற்ற ஆதிக்கம் செலுத்தினர். ஆயினும், மக்களின் நன்மையை உட்கொண்டே ஆண்டனர் என்பர் சிலர். ஆயினும், தங்கள் நன்மையும் மக்கள் நன்மையும் ஒன்றுக அமையும் சமயங்களில்மட்டும் அவ்வாறு நடந்துகொண் டனர் என்பதும் தெளிவு. அன்றியும், மொகலாயர் ஆட்சிமுறை யைப்பற்றிக் கூறும்பொழுது அக்பரிலிருந்து ஔரங்கசீப் ஈறுக ஆண்ட நான்கு பேரரசர்களின் ஆட்சி மரபுகளையும் நினைவிற் கொண்டே அதனை மதிப்பிட வேண்டும். அன்றியும், அவர்கள் ஆட்சியில் கிராமப்புறங்களில் காவல் படைகளும், நீதி நிர்வாகமும் செம்மையாக அமைக்கப்படவில்லை; அவர்களுடைய குற்றச் சட்டங்கள் மிகக் கடுமையாக இருந்தன; அநாகரிகமான தண்டனைகளைக் குற்றவாளிகளுக்கு அளிப்பதற்கு அவர்களுடைய ஆட்சி மரபு இடம் தந்தது. அவர்களுடைய போர்ப் படைகளில் கட்டுப்பாடு இல்லை; அன்றியும், பீஜப்பூரில் படைகளை நல்ல முறை யில் இயக்குதற்குப் போதிய வீரர்கள் இல்லை; கடற் கொள்ளைக் காரர்களை அடக்குவதற்குப் போதிய கப்பற் படையும் இல்லை. இந் நிலையில் நிலத்திலும் நீரிலும் ஆங்கிலேயர்களிடம் மொகலாயர் தோற்றுத் தமது பேரரசை இழந்துவிட்டமை வியப்புக் குரியதன்று.

மொகலாயர்களுடைய ஆட்சித் திட்டத்தில் நீதி நிர்வாகமும் நிலவரிச் சீர்திருத்தங்களுமே மிகச் சிறந்தவை.

(ஆ) நீதி நிர்வாகம்

அவர்கள் குற்றங் குறைகளினின்று நீங்கிய நீதித்துறையை அமைத்துக் குடிமக்கள் யாவருக்கும் சிறந்த முறையில் நீதி

நிர்வாகம் செய்ய விரும்பினர். மன்னரிடம் உண்மையான நியாயம் கிடைக்குமென்று எந்தக் குடிமகனும் நம்புகின்ற முறையில் ஆட்சி அமையவேண்டும் என்று விரும்பிய ஜஹாங்கீர் தமது அரண்மனை வாயிலில் ஓர் ஆராய்ச்சி மணியைக் கட்டி வைத்திருந்தார்.

பேரரசர் நீதி நிர்வாகத்தின் மையமாக அமைந்திருந்தார். அரண்மனையில் ஒரு நீதி அவை இருந்தது; அது அப்பீல் வழக்கு மன்றமாகப் பெரும்பாலும் இயங்கிற்று. ஆயினும், வழக்குகளைத் தொடர்வதற்கும் அவ் வவையில் இடமிருந்தது. மன்னரே முக்கியமான வழக்குகளை விசாரிப்பதுண்டு; அவருக்கு அடுத்தபடியாக ஸாதர்-உஸ்-ஸுதூர் என்னும் நீதி அதிகாரி இருந்தார்; அவர் மன்றத்தில் பெரும்பான்மை சமயத்தோடு தொடர்புபட்ட வழக்குகளே விசாரிக்கப்பட்டன. பேரரசருக்கு அலுவல் மிகுதியால் அல்லது விருப்பமின்மையால் வழக்குகள் விசாரிக்கப்படாவாயின், காஸி-உல்-காஸத் (தலைமைக் காஸி) என்பவர் அவ் வழக்குகளை விசாரிப்பது மரபு. மாநில (சுபா)த் தலைநகரங்களில் உதவி-காஸிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் சிவில், குற்றச் சட்டம் ஆகிய இருவகை வழக்குகளும் விசாரித்தனர். சட்டங்கள் பொதுமக்களுக்கு நன்கு தெரியும் வகையில் எழுதி வைக்கப்படவில்லை; வழக்காடுதற்கு வழக்கறிஞர்களும் இல்லை. முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட குற்றச் சட்டங்களே இந்துக்களுக்கும் பயன்படுத்தப்பட்டன; ஆனால், சிவில் வழக்குகளில் இந்துக்களின் சாத்திரங்களையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றி நீதி செலுத்தப்பட்டது. ஔரங்கசீப் மேற்பார்வையில் முஸ்லிம் சட்டம் ஓரளவு தொகுத்தமைக்கப்பட்டது. குற்றச் சட்டங்கள் மிகுதண்டம் அளிப்பதைத் தடுக்கவில்லை. உறுப்புக் குறைத்தல் முதலிய அநாகரிகத் தண்டனைகள் சாதாரணமாக அளிக்கப்பட்டன. பேரரசர் சம்மதமின்றிக் கொலைத் தண்டனை விதிக்கக் கூடாதாயினும் பேரரசர் எண்ணிறந்த சமயங்களில் அத் தண்டனையைத் தாமே விதித்துவந்தார். காஸிகளுக்கு அடுத்தபடியாக, கிராமங்களில் நீதி மன்றங்கள் இயங்கவில்லையாதலால், நாட்டுப்புறத்தார் தங்கள் வழக்குகளைப் பஞ்சாயத்துகள் மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று. நீதி நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில் பேரரசின் ஆதிக்கம் கிராமப் புறங்களில் பெயரளவிற்கே இயங்கிற்று எனல் வேண்டும்.

(இ) நிலவரிச் சீர்திருத்தங்கள்

மொகலாயர் புகுத்திய ஆட்சி நிர்வாகச் சீர்திருத்தங்கள் யாவற்றுள்ளும் நிலவரிச் சீர்திருத்தங்களே மிக முக்கியமானவை,

டெல்லி சுல்தானிய ஆட்சியில் நீர்வரித் தீர்வை நாடு முழுவதும் ஒன்றுபோல் அமையவில்லை. அவர்களுடைய நிலவரிக் கணிப்பு முஸ்லிம்களின் சமய நூலான கொரானில் கூறியாங்கு அமைந்தது; ஆயினும், நடைமுறையில் அதிகாரிகள் தங்கள் விருப்பப்படி நடந்துகொண்டனர். இத்தகைய நடைமுறை மொகலாயர் ஆட்சிக் காலத்திற்கும் பொருந்துவதேயாம். அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் மொத்த நிலவரி (எந்த நிலமுள்ள குடிமகனும் செலுத்த வேண்டியது) ஒருவனுடைய மொத்த மகசூலில் பாதி அளவாகும்; மகம்மது-பின்-துக்ளக் ஆட்சியில் இது சற்று அதிகமாகவே இருந்தது. ஆனுல், பிரூஸ் துக்ளக் மன்னரானதும் இருபத்தாறு வகை வரிச் சுமைகளை நீக்கினுர் என்பதிலிருந்து அவர் ஆட்சிக் காலத்திற்கு முன்பு வரிச்சுமை எவ்வளவாக இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். நிலவரி வசூலிக்கும் உரிமை ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள் என்பாரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது; ஆகையால், அவர்கள் எவ்வளவு நிலவரி மக்களிடமிருந்து வசூலித்தபோதிலும் அதைத் தடுக்க சுல்தான்களுக்கு உரிமையோ, விருப்பமோ இருந்ததில்லை.

சூர் ஆட்சிக் காலத்தில் ஷெர்ஷா சாகுபடி நிலங்களை அளக்கும் முறைகளிலும், நிலவரியை நிர்ணயிக்கும் வகைகளிலும் பல சீர்திருத்தங்களை ஆக்கினுர். உண்மையில், அக்பர் காலத்தில் ஏற்பட்ட முக்கியமான நிலவரிச் சீர்திருத்தங்களை ஏற்படுத்திய தோடர்மால் என்பாரும் ஷெர்ஷாவின் நிலவரித் திட்டத்தை நன்கு கற்றறிந்து அதனை நடைமுறைப்படுத்தியவரே யாவர். பிற பல ஆட்சி முறைகளிற்போல, நிலவரித் திட்டத்திலும் அக்பர் ஷெர்ஷாவிற்குப் பெரிதும் கடமைப்பட்டவரே யாவர். தொடக்கத்தில் பிற அதிகாரிகளைக் கொண்டு நிலவரித் திட்டத்தைச் சீர்திருத்த அக்பர் முயன்றுர். ஆனுல், தோடர்மால் நிதி அமைச்சராகப் (திவான்) பதவி ஏற்ற பிறகே உண்மையான சீர்திருத்தங்கள் தொடங்கின. அதுவரையில் ஒவ்வோர் ஆண்டும் அவ் வாண்டு மகசூலின் அளவையும் நடைமுறை விலை நிலவரத்தையும் உட்கொண்டு நிலவரி தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, நிலவரியின் அளவு ஆண்டுதோறும் வேறுபட்டுக்கொண்டே வந்தது. இந்த முறையை மாற்றிச் சாசுவத நிலவரித் திட்டம் ஒன்று தோடர்மாலால் வகுக்கப்பட்டது. அதன்படி பேரரசின் பரப்பில் உட்பட்டிருந்த சாகுபடி நிலம் முழுவதும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன: (1) ஆண்டுதோறும் விளைவிக்கப்பட்ட நிலம், (2) மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குத் தரிசாக விட்டு வைக்கப்படும் நிலம், (3) அவ்வப்பொழுது தரிசாக விடப்பட்டுத் தேவையானபோது உழுது சாகுபடி செய்

யப்பட்ட நிலம், (4) ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு அளவில் தரிசாகக் கிடக்கும் நிலங்கள். இவ்வாறு அடிக்கடி சாகுபடி செய்யப்படும் நிலங்களை அவற்றின் செழுமை, சராசரி மகசூல் என்பவற்றைப் பொறுத்து மூன்று தரங்களாகப் பிரித்தார். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட சராசரி மகசூலின் மூன்றில் ஒரு பகுதியே நிலவரியாகத் தீர்மானிக்கப்பட்டது. அன்றியும் மகசூலின் தன்மையைப் (அளவன்று) பொறுத்தும் நிலவரி நிர்ணயிக்கப்பட்டது. நிலவரி காசாகவேனும் பொருளாகவேனும் தரப்படலாம். இதற்கு ஜப்தி முறை என்று பெயர். இது நிலச்சுவான்தாருக்கும் அரசுக்கும் நேரடித் தொடர்பை ஏற்படுத்திற்று. இம் முறை வட இந்தியா முழுவதிலும், குஜராத்திலும் தக்காணத்தின் சில பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப் பெற்றது. இம் முறை பேரரசில் எல்லா சுபாக்களிலும் அமல்படுத்தப் பெறவில்லை என்பது நினைவுகூரவேண்டும்; உதாரணமாக சிந்து, காபூல், காச்மீரம், வங்காளம் ஆகிய சுபாக்களில் வேறு வகை நிலவரித் திட்டங்கள் நடைமுறையில் இருந்தன.

மொகலாயரின் நிலவரி ஏற்பாட்டின் சிறந்த அம்சம் யாதெனில், வரி வசூலிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்படவில்லை; குடியானவர்க்கும் அரசுக்கும் நேரடி ஏற்பாடாக இது அமைந்தது. நிலவரியை வசூலிக்கும் முறையில் ஷெர்ஷாவின் திட்டத்தைப் பின்பற்றுவோர் யாவருமே நல்லாட்சி புரிந்தவர்களாகக் கருதப்படுவர். ஷெர்ஷா, ‘நிலவரியை நிர்ணயிக்கும் பொழுது குடியானவனுக்குச் சாதகமாக நிர்ணயிக்க வேண்டும்; ஆனால், அதனை வசூலிக்க முற்படும்போது கண்டிப்போடு நடந்து கொள்ளவேண்டும்,’ என்று விதித்தார். மொகலாய மன்னர்களும் நேரில் விதிகளை ஏற்படுத்தியிருந்தனர்; ஆயினும், நடைமுறையில் அவை எவ்வாறு ஆளப்பட்டன என்பதற்குப் போதிய சான்றுகள் இல. வரி வசூலிக்கும் அதிகாரிகள் அநியாய அதிகப்படி வரிகளை வசூலித்தனர் என்பது அத்தகைய அதிகாரிகள் பலர் பல முறை தண்டிக்கப்பட்டதிலிருந்து புலனாகின்றது.

மொகலாயர்களுடைய ஆட்சி பரந்த நிலப்பரப்பை உட்கொண்டியங்கிற்று. காபூலிலிருந்து அஸ்ஸாம் வரையிலும் காஷ்மீரத்திலிருந்து அகமதுநகர்வரையிலும் பரந்து கிடந்த பேரரசு அக்பர் ஆட்சியில் பதினைந்து சுபாக்களாகப் பிரிக்கப்பட்டது; அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில் பேரரசு இருபத்தொரு சுபாக்களாகப் பிரிக்கப்பட்டது. இச் சுபாக்கள் சிபா-சாலர்கள் என்னும் கவர்னர்களால் ஆளப்பெற்றன. அவர்களுக்கு சுபேதார் என்பதும் பெயர். அவர்களிடம் சிவில், இராணுவ அதிகாரங்கள்

இரண்டுமே இருந்தன. அவர்கள் பாரம்பரியமாகவல்லாமல் அவரவர் தகுதியை யொட்டி நியமிக்கப்பட்டனர். அவர்களுக்குச் சம்பளம் காசாகத் தரப்பட்டதே யன்றி நிலமாக அளிக்கப்படவில்லை. அவர்கள் அலுவல்களைப்பற்றி நேரடியாகப் பொறுப்பேற்று விசாரிப்பவர் பேரரசரே. இந்தக் கவர்னர்களுக்கடுத்தபடியாகத் திவான் முக்கியமான அலுவலராயிருந்தார். அவர் நிதி இலாகா, நிலவரி வசூல் இலாகா என்னும் துறைகளை மேற்பார்ப்பவர். அன்றியும், மாகாணங்களில் கிடைக்கும் அரசியற் செய்திகளைத் திரட்டிப் பேரரசருக்கு அறிவிப்பதற்கும் சில அதிகாரிகள் இருந்தனர். இவ்வளவு இருந்தும் மாகாண ஆட்சியாளர்கள் சில சமயங்களில் அளவுக்கு மீறி அதிகாரங்களைக் கைப்பற்றிக்கொண்டு ஆங்காங்குக் குட்டிப் பேரரசர்களாக விளங்குவதைத் தடுக்க முடியவில்லை.

நகரங்களில் காவல்புரிதற்கும் அமைதியைப் பாதுகாப்பதற்கும் கொத்தவால் என்னும் நகர்க்காவலர் படை அமைக்கப்பட்டது. அவர்கள் நகர்களைக் காவல் புரிந்ததோடு நிர்வாகமும் செய்ய வேண்டியவர்கள். ஒற்றர்கள் அவர்கள் ஆதிக்கத்தில் அலுவல் பார்த்தனர். நகரங்களுக்குப் புறம்பே அமைந்து கிடந்த நாட்டுப்புறங்களில் அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்பு பௌஜ்தார்கள் என்னும் அதிகாரிகளின் வசம் இருந்தது. கிராமங்களில் தலையாரியும் அவருடைய ஏவலர்களும் காவல் அலுவல்களை நடாத்தி வந்தனர். இவ்வளவு ஏற்பாடுகள் இருந்தும் திருடர் பயமின்றி எப்போதும் எவ்விடத்திலும் அப் பேரரசில் அமைதி நிலவிற்று என்று கருத இடமில்லை.

மொகலாயர் ஆட்சியையும் நிர்வாகத்தையும்பற்றிப் பொதுவாகப் பேசுமிடத்து அபுல் பசல் முதலியோருடைய குறிப்புகளையும் நூல்களையும் பார்ப்பதைவிட வெளிநாட்டார் இங்கு வந்து, தாம் கண்ட, கேட்ட விவரங்களை எழுதிவைத்துள்ள குறிப்புகளே மிகுதியும் பயனுடையவை என்று கருதலாம். அவர்கள் குறிப்புகளிலிருந்து பேரரசர் கருத்துகள் யாவையேயாயினும் அரசின் பல பகுதிகளிலும் சட்ட திட்டங்களையும் மீறி ஆங்காங்கு யதேச்சாதிகாரம் நடைபெற்று வந்தது என்னும் கொடிய உண்மை புலனுகின்றது. ஜஹாங்கீர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்த ஸர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேயர் அப் பேரரசர் ஆட்சியில் நிர்வாகத் திறமையின்மையும் லஞ்சமும் மிகுந்திருந்தமையை எடுத்துக் கூறுகின்றார். ஷாஜஹான் ஆட்சியில் நாட்டுப்புற நிர்வாகம் செவ்வனே நடைபெறவில்லை என்பதை பெர்னியர் என்னும் பிரெஞ்சுக்காரர் எடுத்துக்காட்டுகிறார். இத்தகைய

ஆட்சிக் குறைபாடுகளால் குடியானவனும் தொழிலாளியும் வாழ்க்கைக்குத் தேவையான ஆதாரப் பொருள்களும் கிடைக்காமல் வருந்தினர் என்பதும் அவரால் கூறப்பட்டதேயாம். ஆதலால், ஆட்சி நிர்வாகத்தைப்பற்றிய விதிமுறைகள் செவ்வனே அமைக்கப் பெற்றிருந்தால் போதாது. அவற்றை நடைமுறைப் படுத்துவோர் செவ்விய தன்மையராய் இருத்தலும் வேண்டும் என்பது விளங்கும்.

(ஈ) சமுதாய நிலை

மொகலாயர் ஆட்சிக் காலத்தில் வட இந்திய சமுதாயம் எந் நிலையில் வாழ்ந்து வந்தது என்பதை யறியப் பெரிதும் உதவுபவை வெளிநாட்டார் குறிப்புகளே. அக் குறிப்புகள் கொண்டு பார்க்குமளவில், அச் சமுதாயம் இரு வகையில் பலவாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது விளங்கும். முதன்மையாகத் தொன்று தொட்டு நாட்டில் அமைந்திருந்த சாதிப் பிரிவினை மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்தது; அடுத்தபடியாக, அதிகார வர்க்கமும் மேலதிகாரிகள், இடைத்தர அலுவலர்கள், கீழ்த்தர ஊழியர்கள் என்று பலவகையாகப் பிரித்திருந்தனர். அரசனும் அவனது அவையும் அதைச் சூழ்ந்து அதன் தயவில் வாழ்ந்துவந்த பிரபுக்களும் மேலதிகாரிகளும் அவர்களைச் சார்ந்தோரும் எனப் பணக்காரக்கூட்டம் ஒன்று தலைநகரிலும் நகர்ப்புறங்களிலும் செழித்திருந்தது; இதற்கு நேர் மாறாக, கிராமப்புறங்களிலும் ஏழை, எளிய குடியானவ மக்கள் சொல்லொணு வறுமையில் வாடியிருந்தனர். பணக்காரர்கள் தங்கள் காலத்திற்குப் பிறகு தங்கள் செல்வத்தில் மிகப் பெரும் பகுதி அரசைச் சார்ந்துவிடும் என்பதை அறிந்திருந்தார்கள். ஆதலின், தங்கள் செல்வத்தைத் தங்கள் காலத்திலேயே மிக ஆடம்பரமாகச் செலவிட விரும்பி அங்ஙனமே செய்தனர். பெர்னியர் என்பார், மொகலாய ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இடைத்தர வகுப்பினர் என்னும் சமூகப் பிரிவினரே இருக்கவில்லை என்று கூறுகிருர். சில இந்திய வரலாற்றுசிரியர்கள், 'வியாபாரிகளையும், கணக்கர்களையும், மருத்துவர்களையும் இடைத்தர வகுப்பினராகக் கணக்கிடவேண்டும்,' என்று கருதுகின்றனராயினும், இவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகத் தாழ்ந்திருந்ததாதலின் இவர்களை இடைத்தர வகுப்பினராகக் கருதுதல் பொருந்தாது. நாட்டுப்புற வாசிகளான ஏழை மக்களின் வாழ்க்கை மிகவும் பரிதவிக்கத்தக்கதாயிருந்தது. அவர்கள் மண் குடிசைகளில் வாழ்ந்தனர் ; உண்டியும் உடையும் தேவையான அளவு பெற இயலாத நிலையில் இருந்தனர். சில்லறைக் கடைக்காரர்கள், வேலையாட்கள், கூலிக்காரர்கள்

என்போர் வாழ்ந்த வாழ்க்கை அடிமை நிலையினின்றும் பெரிதும் வேறுபட்டதன்று. கட்டாய வேலையும் குறைந்த கூலியும் மிகுந்து காணப்பட்டன. ஷாஜஹான் ஆட்சி முடியும் தருவாயில் குடியானவர்களின் நிலையும் இக் கதியை அடையவே விவசாயம் நலிவுற்றது. பண்டங்களின் விலை ஏறிற்று. மக்கள் மேலும் வருந்தினர்.

இந்துக்கள், முஸ்லிம்கள், புதிதாகத் தோன்றிய சீக்கியர்கள் என்னும் பிரிவினரே வட இந்திய சமுதாயத்தின் முக்கியமான பிரிவினர். இவர்களில் இந்துக்கள் பெரும்பான்மையினோர்; இவர்கள் பழைய நம்பிக்கைகளைக் கைவிடாமல் புராதனவாழ்க்கை வாழ்ந்துவந்தனர். பசுவை வணங்குவதும், காசிக்குச் செல்வதும் ஜோசியத்தில் நம்பிக்கை வைப்பதும் அவர்களுடைய வழக்கம். இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறுவதும், பாலிய விவாகமும், வரதட்சிணை வாங்குவதும் இந்து சமூகத்தை வாட்டிய சில பழக்கங்கள். இவற்றில் முந்தியதை ஒழிக்க அக்பர் ஓரளவு முயன்றாராயினும் அவரால் இயலவில்லை. முஸ்லிம்களிடமிருந்து இந்துப் பெண்கள் முகமூடி யணியும் பழக்கத்தை மேற்கொண்டனர். ஹோலி போன்ற இந்துப் பண்டிகைகளில் முகம்மதியர்கள் கலந்து கொள்வதும், மொகரம் போன்ற முஸ்லிம் பண்டிகைகளில் இந்துக்கள் கலந்துகொள்வதும் நகர்ப்புறங்களில் சாதாரண நிகழ்ச்சிகளாயின.

மொகலாயர் காலத்தில் வட இந்தியாவில் பொருளாதார நிலைமை ஒருவிதத்தில் மிகச் செழிப்புற்றிருந்ததென்றே கூற வேண்டும். இவ் விவரங்கள் பெரும்பாலும் அபுல் பசலின் அயினி அக்பரி வாயிலாகவும், இந்தியாவிற்கு வந்து சென்ற வணிகர்களின் குறிப்புகளிலிருந்தும் தெரியவருகின்றன. இந்திய நாட்டில் பூமி செழிப்புற்றிருப்பதால் விளைபொருள்கள் மிகுந்து அவற்றைப் பெரும் அளவில் வாங்க வரும் வெளிநாட்டு வணிகர்கள் பொன்னும் வெள்ளியும் கொடுத்து அவற்றை வாங்கிச் செல்வதால், இந் நாட்டில் மிகுதியாகப் பொன்னும் வெள்ளியும் குவிந்து கிடந்தன என்பது அவ் வணிகர் கூற்றால் நாம் அறிகிறோம். இந் நாட்டோடு வாணிகம் நடத்துவதற்கு ஐரோப்பியர்களும், அராபியர்களும், சீனர்களும் போட்டியிட்டனர். நாட்டில் செல்வங்கொழிக்கும் பெருநகரங்கள் பல இருந்தன. டெல்லி, ஆக்ரா, சூரத், லாகூர் என்பன இத்தகைய பெருநகரங்களாக விளங்கின.

வேளாண்மை செழிப்புற்றிருந்தது; நிலவரி அரசின் மொத்த வருமானத்தில் மிகப் பெரும் பகுதியாயிற்று. பெரும்பாலும்

எப்போதும் சாகுபடி செய்யப்படும் பயிர்களைத் தவிரப் பருத்தி, அவுரி, கஞ்சா, புகையிலை ஆகிய இலாபகரமான பயிர்களும் இடப்பட்டன. புகையிலை சாகுபடி இந்தியாவில் முதன் முறையாக 1604-ல் புகுத்தப்பெற்றது. பருத்தி நூலால் மெல்லிய நேர்த்தியான துணிகளை நெய்தல் முக்கிய கைத்தொழிலாய் இருந்தது. காசி, ஆக்ரா, ஆமதாபாத் முதலிய இடங்களிலும் பொதுவாக வங்காளத்திலும் இக் கைத்தொழில் மிகுந்து வளர்ந்தது. டாக்காவில் நெய்யப்பட்ட மெல்லிய மஸ்லின் துணி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. பட்டு நெசவும் வங்காளத்தில்தான் அதிகமாக நடைபெற்றது. கம்பளிகளும் கம்பளங்களும் காஷ்மீரத்தில் மிகவும் உற்பத்தி செய்யப்பட்டன. வெடியுப்பு பீகாரிலிருந்து ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இவ்வளவிருந்தும் இப் பொருளாதார ஏற்பாட்டில் பெரியதொரு குறைபாடு இருந்தது. அதாவது பயன்படு பொருள்களை உற்பத்தி செய்தவர்கள் இப் பொருளாதார முயற்சிகளால் மிகுந்த பயனை அடையவில்லை. நகர்ப்புறத்து வியாபாரிகளே எல்லா இலாபமும் அடைந்தனர். ஊராருக்கெல்லாம் ஆடை நெய்து கொடுத்த நெசவாளர்கள் அரை நிர்வாணமாகவே இருந்தனர்; ஊராருக்கெல்லாம் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்த உழவர்கள் அரைப்பட்டினியாகவே உழன்றனர். பிரபுக்களும் அரசாங்க அலுவலர்களும் தாங்கள் விரும்பிய பொருள்களைத் தாங்கள் விரும்பிய விலைக்கே வாங்கிக்கொண்டனர். ஆதலால், அப் பொருளாதார ஏற்பாடு தொழிலாளர்களையும் கூலிக்காரர்களையும், முதலாளிகளும் அதிகாரிகளும் சமூகத்தில் தங்களுக்கிருந்த மிகை ஆதிக்கத்தின் உதவியால் சுரண்டித் துன்புறுத்தி வந்தனர் என்பது புலப்படும்.

மொகலாயர் காலத்தில் அயல்நாடுகளுடன் இந்தியா பரந்த வாணிகம் நடத்தி வந்தது. ஐரோப்பிய வணிகர்கள் இங்கு வாணிகத் தலங்களை ஏற்படுத்திக்கொண்டபிறகு இந்திய வாணிகத்தின் அளவும் தன்மையும் மிகுந்தன. வெடியுப்பு, சீனி, மிளகு, பருத்தித் துணிகள், கஞ்சா, அவுரி முதலிய பொருள்கள் பெருவாரியாக ஏற்றுமதியாயின. வெள்ளியும், பொன்னும், பரியும், பட்டும், உயர்தரக் கற்களும், கருநிற அடிமைகளும், சீனத்து மட்பாண்டங்களும் மிகுதியும் இறக்குமதியாயின. பெரும்பாலும் இந்த வாணிகத்தால் இந்தியாவிற்கே பலன் அதிகமாகக் கிடைத்தது. சூரத், புரோச், பம்பாய், கொச்சி, கள்ளிக்கோட்டை, சிட்டகாங், மசூலிப்பட்டினம் என்பவை இவ் வெளிநாட்டு வாணிகத்திற்கு உதவிய துறைமுகங்கள்.

பொதுவாகக் கூறுமிடத்து, அக் காலத்தில் ஏறத்தாழ எக் காலத்திலுமேபோல இந்தியாவில் பொருளுக்கோ பணத்திற்கோ பஞ்சமில்லையாயினும், அச் செல்வாதாரத்தில் மக்களின் எல்லா வகுப்பினருக்கும் நிலையினருக்கும் ஏறத்தாழக்கூடச் சமமான பங்கு இல்லை ; சமமான பங்கைப் பெறகூடிய வாய்ப்பும் இல்லை. பஞ்சங்கள் வந்த காலத்தில் எளிய மக்கள் மிகுந்த துன்பத்திற்காளாயினர். இதன் விளைவாக ஏழைகள் பலர் தங்களை அடிமைகளாக விற்றுக்கொண்டனர்.

(உ) கலையும் இலக்கியமும்

மொகலாயர் ஆட்சிக் காலத்தை இந்திய வரலாற்றிலேயே கட்டடக் கலையிலும் ஓவியத்திலும் இசையிலும் இலக்கியத்திலும் தலைசிறந்த காலமாகக் கருதலாம். முக்கியமாக ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தை ஒரு பொற்காலம் என்று வரலாற்றுளர்கள் உரைப்பர் எனில் அதில் உண்மை உண்டு. அக்பர் காலத்தில் தொடங்கிய கலைச்செல்வம் ஔரங்கசீப் ஆட்சி தொடங்கும்வரையில் மேலும் மேலும் வளர்ந்து வந்தது ; பல துறைகளிலும் செழித்தது. ஔரங்கசீப் கலைகளின்-முக்கியமாக-நுண்கலைகளின் பகைவர். அவர் கற்ற கலை கையெழுத்துக் கலை ஒன்றே. இசைக் கலையை வெறுத்தார். மதத் தொடர்புடைய கட்டடக் கலையை ஓரளவு ஆதரித்தார். ஹுமாயூன் காலத்திலிருந்து ஷாஜஹான் காலம் முடிய மொகலாயர் ஆட்சியில் பல கலைகளும் நன்கு வளர்ந்தன.

கட்டடக்கலைதான் மிகவும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப் பட்ட கலையாகும். அதுவும் சிறப்பாக ஷாஜஹான் காலத்தில். இக் கலை பழைய, இந்து பௌத்த கட்டடச் சிற்பக் கலைகளினின்றும் பெரிதும் வேறுபட்டதாக டெல்லி சுல்தானியக் காலத்தில் உருவாயிற்று. குதுப்மினாரிலிருந்து ஹுமாயூன் சமாதிவரையில் இப் பழக்கம் பெரிதும் இந் நிலையிலேயே இருந்தது. அக்பர் காலம் தொடங்கிச் சிறிது சிறிதாக இந்தியா பாரசீகக் கட்டடக் கலை மரபுகள் இணைந்து உருவெடுக்கத் தொடங்கின. இவற்றை இந்திய-சாரஸனிக் அல்லது இந்திய-பாரசீகக் கட்டடக்கலை மரபுகள் என்பர்; ஆயினும், இவற்றில் இந்து மரபுகளைவிட முஸ்லிம் கட்டடக்கலை மரபுகளே மிகுதியாகத் தோன்றின. தற்காலத்தில் சில வரலாற்றுளர்கள் இந் நிலையை மாற்றி முஸ்லிம்களுடைய கட்டடக்கலை மரபுகளேயன்றிப் பல கட்டடங்களேகூட இந்துக்களால் முன்பே கட்டப்பட்டன என்றும் அவற்றைக் கைப்பற்றிச் சிற்சில மாறுதல்களைமட்டும் ஆங்காங்குச் செய்துவிட்ட அவை

முஸ்லிம்களால் எழுப்பப்பட்ட கட்டடங்கள் என்று தவருகப் பிறரால் வருணிக்கப்படுகின்றன என்றும் கூறி வருகின்றனர். இங்ஙனம் கூறுபவர்களில் பி.என். ஒக் என்பவர் சிறந்தவர். இவ்வாறு கூறுதல் வரலாற்று உண்மையோடு மாறுபடுவதாகவே காணப்படுகிறதாகையால் அக் கட்டடங்கள் யாவையும் அவ்வம் முஸ்லிம் மன்னர்களாலேயே நிர்மாணிக்கப்பட்டவை என்று கொள்ளுதலே சிறந்தது.

பாபர் கட்டடக் கலையை மிகுதியும் வளர்த்தார் என்று கூறுதற்கில்லை. இந்தியர்களை அக் கலையில் சிறந்தவர்களாக அவர் கருதவில்லை. அவரால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களில் இன்று நாம் முக்கியமாகக் காண்பவை இரண்டேயாம்; அவை பானிப்பட்டிலுள்ள காபுலிபாக் என்னும் மசூதியும், ஸம்பாலிலுள்ள ஜாமி மசூதியுமேயாம். ஹுமாயூனுடைய ஆட்சியில் நிகழ்ந்த அரசியல் குழப்பங்களால் அமைதிக் காலச் சாதனைகளைச் சேர்ந்த அருங்கட்டடக் கலையில் ஈடுபட அவருக்கு இயலவில்லை. பஞ்சாபில் படேபாத் என்னுமிடத்திலுள்ள ஒரு மசூதி அவர் காலத்ததாம். ஹுமாயூனை வென்ற ஷெர்ஷா அழகான கட்டடங்கள் பலவற்றைக் கட்டியவர்; அவர் காலத்திற்கு முந்தியிருந்த கலையை அவர் பெரிதும் சீர்படத் திருத்தியவர். அவருடைய கட்டடங்களில் டெல்லியருகிலுள்ள புராணகிலாவிலிருக்கும் ஒரு மசூதியும் பீகார் மாநிலத்திலுள்ள ஸஸாராம் என்னுமிடத்துக் கட்டப்பெற்றுள்ள ஷெர்ஷா மசூதியும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் பிற்கூறப்பட்டது உண்மையிலேயே மிக அழகான கட்டடம் ஆகும். அதில் பாரசீகக் கட்டடக் கலையின் சாயல் பெருமளவு தெரிகிறது.

ஷெர்ஷாவில் தொடக்கப்பட்ட கட்டடக்கலைச் சீர்திருத்த முயற்சிகளை மொகலாயப் பேரரசரான அக்பர் மேலும் மேற்கொண்டார். அக்பர் கட்டிய கட்டடங்களில் பெரும்பாலானவை செம்மண் கற்களால் கட்டப்பெற்றவை. அவர் காலத்துக் கட்டடங்களில் சிறந்தவை படேபூர் சிக்ரி என்னும் தலைநகரத்தில் (ஆக்ராவிலிருந்து 26 மைல் தொலைவிலுள்ளது) காணப்பெறுபவை. டெல்லியிலுள்ள ஹுமாயூன் மசூதி, ஆக்ராவிலுள்ள திவான்-இ-ஆம், திவான்-இ-காஸ், ஜஹாங்கீரி மகால் என்பவை சிறந்தவை. சிற்சில இந்துக் கட்டடக் கருத்துகளையும் மேற்கொண்டு இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன வாயினும், அடிப்படையிலும் இயற்றுதல் முறையிலும் இவை இஸ்லாமியக் கட்டடக் கலையையே பெரிதும் பின்பற்றுகின்றன என்பதில் ஐயமின்று. படேபூர் சிக்ரியிலுள்ள ஷேக் ஸலீம் சிஷ்டி

யின் மசூதி, புலந்து தர்வாஸா (176 அடி உயரமுள்ள வாயில் வளைவு) என்பவை அழகிய கலை ஆக்கங்கள். இவற்றில் பிந்தியது அக்பர் குஜராத்தை வென்றதற்கு அறிகுறியாகக் கட்டப் பெற்றது. அங்குள்ள ஜோதிபாய் அரண்மனையும், அக்பரால் திட்டமிடப்பெற்று ஜஹாங்கீரால் கட்டப்பெற்ற, ஸிகந்தராவி லுள்ள அக்பர் மசூதியும் குறிப்பிடத்தக்கவை.

அக்பரை யடுத்து ஆண்ட ஜஹாங்கீர் காலத்தில் கட்டடக் கலை களுக்கு அதிக ஆதரவு தரப்படவில்லை. ஸிகந்தராவில் கட்டப் பெற்ற அக்பர் மசூதியும் நூர்ஜஹான் அவள் தந்தை (இதிமாத்-உத்-தௌலா)க்கு எழுப்பிய மசூதியும் குறிப்பிடத்தக்கவை. ஆனால், ஜஹாங்கீரின் ஆர்வம் எல்லாம் ஓவியக் கலையிற் சென்றது. ஓவியக்கலை ஹுமாயூனால் ஓரளவும் அக்பரால் பெரிய அளவிலும் ஆதரிக்கப்பெற்றது. அக்பர் காலத்தில் பதினேழு சிறந்த ஓவி யர்கள் இருந்ததாக அபுல்பசல் கூறுவார். ஆனால், அவர்களில் பலர் இந்துக்கள்; சிலர் முஸ்லிம்கள். முஸ்லிம்களில் அப்துஸ் ஸமாஸ், பரூக் பேக் என்பவர்கள் புகழ் பெற்றவர்கள்; இந்து ஓவியர்களில் தச்வனுத், பஸவன் முதலியோர் பெயர் பெற்று விளங்கினர். ஓவியக் கலையில் அக்பரைவிட ஜஹாங்கீருக்கு அதிக ஆர்வம் இருந்தது. அவர் அதை ஆதரித்ததோடு பயிலவும் பயின்றார். அவர் அவையில் பல புகழ்பெற்ற ஓவியர்கள் இருந்த னர். அவர் காலத்தில் வாழ்ந்த முக்கியமான ஓவியர்களில் ஆகாரேஜா, முகம்மது நாதிர், முகம்மது மூரது என்பவர்கள் சிறந்தவர்கள். உஸ்தாத் மான்ஸுர் என்பவர் பறவைகளின் ஓவியம் தீட்டுவதில் சிறந்து விளங்கினார். மக்கள் உருவங்களை ஓவியம் தீட்டுவதில் தன்னிகரின்றி விளங்கியவர் விஷேன்தாஸ் என்பவர். ஜஹாங்கீர் இறந்தபின் ஓவியக்கலை ஆதரிப்பாரற்றுச் சீர்கெட்டது. ஷாஜஹானுக்குக் கட்டடக் கலையில் இருந்த ஆர்வம் ஓவியத்தில் இல்லை.

ஔரங்கசீப் பிற கலைகளைப் புறக்கணித்தது போலவே கட்டடக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றையும் புறக்கணித்தார். ஓவியக்கலை இஸ்லாமின் கொள்கைகளுக்குப் புறம்பான கலை என்பது அப் பேரரசரின் கருத்து. ஆனால், அவருடைய அண்ணனை தாராஷுகோ ஓவியக் கலையை ஆதரித்தார்.

ஷாஜஹான் கட்டடக் கலையை மிக உன்னத நிலைக்குக் கொணர்ந்தவர். அவர் எழுப்பிய கட்டடங்கள் பல வடஇந்தி யாவின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றனவாயினும், ஆக்ரா, டெல்லி என்னுமிடங்களிலேயே அவருடைய பெரும்பான்மைக்

கட்டடங்கள் காணப்பெறும். டெல்லியிலுள்ள திவான்-இ-ஆம், திவான்-இ-காஸ், ஜாமி மசூதி என்பவை அழகிலும் அமைப்பிலும் சிறந்தவை. செம்மண் கற்களைக் கொண்டு அவரது முன்னோர்கள் பெரும்பான்மைக் கட்டடங்களைக் கட்டினர். ஆனால், ஷாஜஹான் பளிங்குக் கற்களைக் கொண்டு கட்டடம் கட்டுவதில் முனைந்தார். ஆக்ராவிலுள்ள மோடி மசூதி (முத்து மசூதி), தாஜ்மஹால் என்பவை உலகப் புகழ்பெற்றவை. அவர் தாஜ்மகாலைத் தம் மனைவி மும்தாஜ் மஹாலின் நினைவுச் சின்னமாகக் கட்டினார். மும்தாஜும் ஷாஜஹானும் தாஜ்மஹாலிலேயே அடக்கம் செய்யப்பெற்றுள்ளனர். இம் மஹாலின் அழகைக் கண்டு அதனை உலக அற்புதங்களில் ஒன்றாகக் கொண்டாடுவர். அக் கட்டடத்தை எழுப்புதற்குத் திட்டமிட்டு அதனை நிறைவேற்றியவர் வெரோனியோ என்னும் வெனிஸ் கலைஞரா அன்றி உஸ்தாது இஸ்ஸா என்னும் முஸ்லிம் கலைஞரா என்பது கருத்து வேறுபாட்டிற்குரியதாம்.

இவ்வாறு மொகலாயர்களால் ஆதரிக்கப்பெற்ற கலைகளில் கட்டடம், ஓவியம் என்பவை சிறந்து விளங்கியதுபோல, இராஜபுத்திர நாட்டிலும் ஓவியக்கலை பெரிதும் வளர்ந்து சிறப்புற்றது. இராஜபுத்திரவகை ஓவியக்கலை என்றே தனியொரு ஓவிய மரபு தோன்றிற்று. ஷாஜஹானுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஔரங்கசீப் கையெழுத்துக் கலையை ஆதரித்தார்; பயின்றார். அன்றிப் பிற கலைகளைப் புறக்கணித்தார். ஓவியம், இசை போன்ற கலைகளை வெறுத்தார். அக்பர் காலத்தில் இசைக் கலை பெரிதும் போற்றப்பெற்றது ; தான்சேன் அவர் காலத்தவரே. ஆனால், ஔரங்கசீபின் நீண்ட ஆட்சிக் காலம் முழுவதிலும் புறக்கணிக்கப்பட்ட இசைக் கலை மறுபடியும் செழிப்பதற்கு நீண்ட காலம் ஆயிற்று.

மொகலாயர் ஆட்சியில் இலக்கியம் வளர்ந்தது ; புலவர்கள் போற்றப் பெற்றனர். சில புரவலர்களும் இலக்கியம் இயற்றினர். பாபர், ஜஹாங்கீர் என்போர் தமது வாழ்க்கைக் குறிப்புகளைத் தினசரியாகவே எழுதி வைத்திருந்தனர். ஔரங்கசீப் கல்வியிற் சிறந்தவர். முஸ்லிம் சமய நூல்களை அவர் நன்கு பயின்றிருந்தார். அக்பருக்குக் கேள்வி அறிவு இருந்ததேயன்றிக் கல்வியறிவு இல்லை. எழுதவும் படிக்கவும் தெரியாத நிலையில் இருந்தவர் அவர். ஆனால், அவருடைய அத்தையான குல்பதாம் பேகம் என்பாள் ஹுமாயூன் நாமா என்னும் வரலாற்று நூலின் ஆசிரியை. அக்பர் அபுல்பைசி என்னும் புலவரையும் அபுல் பசல் என்னும் அறிஞரையும் போற்றி ஆதரித்தார். துளசிதாஸ்

என்னும் இந்திக் கவி ஓர் அக்பர் காலத்தவர் என்பது நினைவுகூரத் தக்கது. மொகலாயர் ஆட்சியில் முஸ்லிம் வரலாற்றிலக்கியம் பெரிதும் வளர்ச்சியுற்றது. அப்துல் ஹமீது லகோரி என்பாருடைய பாதுஷா நாமா, காபிகான் இயற்றிய முண்டகாப் உல்-லுபாய் என்பவை சீரிய வரலாற்று நூல்கள். அபுல்பசலின் அக்பர் நாமா, அயினி அக்பரி என்பவையும் ஓரளவு இலக்கியத்தின் பாற் பட்டவையே. ஔரங்கசீபின் ஆதரவில் பட்வாயி-ஆலங்கிரி என்னும் முஸ்லிம் சட்டத் தொகுப்பு இயற்றப்பெற்றது. அக்பர் அவைக்களத்திலிருந்த அப்துர் ரஹிம் கானிகனன் என்பார் இந்துஸ்தானிக் கவி இயற்றுவதில் சிறந்து விளங்கினர். சூர்தாஸ், கேசவர், பீகாரிலால் முதலியோர் மொகலாயர் காலத்து இந்துஸ்தானிப் பெரும் புலவர்களில் சிலர்.

பகுதி III

30. மராட்டியர் தோற்றம்

(அ) சிவாஜி

தக்காண அரசியலில் ஒரு முக்கியமான அம்சமாக மராட்டியர் உருவெடுத்தது 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில். அதாவது, அக்பர் தக்காணத்தின் அரசியலில் தலையிடத் தொடங்கிய சில ஆண்டுகளுக்கெல்லாம் அம் மொகலாய ஆதிக்கத்திற்கு பெரிய எதிர்ப்புத் தெரிவிக்க இருந்த மராட்டியரும் தோன்றி விட்டனர். இந்தியாவில் நிறுவப்பட்ட நன்கு அமைக்கப்பெற்ற பேரரசுகளில் ஒன்றாகக் கருதக்கூடிய மொகலாயப் பேரரசையே எதிர்க்கும் அளவிற்கு வாய்ப்பும், திறமையும் பெற்ற பகைவர்கள் மராட்டியபராய் இருந்தமைக்குச் சில காரணங்கள் உள்ளன.

அவையாவன: மராட்டியர் நாடு மலைநாடு. நாகபுரிக்குச் சற்று வடபாலிலிருந்து தெற்கே கோவாவரையிலும் மேற்கே டாமன்வரையிலும் உள்ள பிரதேசமும் அவற்றிற்கும் மேல் கடலுக்கும் இடைப்பட்ட நாடும் மராட்டியருடைய ஆதி நாடாகக் கொள்ளலாம். கி.பி. 16 ஆம் நூற்றாண்டில், தற்போது நாஸிக், பூனா, சதாரா மாவட்டங்களும், அகமதுநகர்-ஷோலாபூர் மாவட்டங்களின் பகுதிகளும், வட கொங்கணமும் உள்ளடக்கியதாகக் கொள்ளலாம். மட்டமான உச்சிகளை உடைய சையாத்ரி மலைத் தொடர் எதிரிகளால் எளிதில் அணுக முடியாத கற்கோட்டைகளைக் கட்டுதற்கு மிகவும் வசதியாக இருந்தது. மலைவாசமே மராட்டியர்களுக்குப் போரில் உற்சாகத்தைக் கொடுத்தது; தங்களை எதிர்த்தவர்களை எதிர்க்கும் மனஉறுதியைக் கொடுத்தது; உடல் வலுவையும் அளித்தது. இயற்கைப்பொருள் உற்பத்தி குறைவாயிருந்தமையால் மக்கள் உழைப்பு மிகுந்ததோடு

கூடச் சிக்கனமும், இவ் வுற்பத்தி இயற்கையாக மிகுந்துள்ள அண்டை, அயல் பிரதேசங்களிலிருந்து கொள்ளையடித்தேனும் தங்கள் வருவாயை மிகுவித்துக்கொள்ளவேண்டும் என்னும் எண்ணமும் அவர்களிடமிருந்தன. அவர்கள் வாழ்ந்த மலைகளின் அமைப்பு கோட்டைகளிலிருந்து திடீரென்று புறப்படும் குதிரை வீரர்களின் மலையடிவாரப் பிரதேசங்களிலுள்ள எதிரிப்படைகளை மின்னல் வேகத்தில் சிதற அடிக்கும் வசதியும் அப் போர்களில் தோற்றுப்போனால் அதிக நஷ்டமின்றி அதே வேகத்தோடு திரும்பவும் வந்து அக்கோட்டைகளில் புகுந்துகொள்ளும் வசதியும் இருந்தன.

இவ் வியற்கை வசதியைத் தவிர, சமயத் துறையில் பக்தி இயக்கம் தோன்றி இந்து மதத்தைப் புதுப்பித்து இந்துக்களை எதிர்த்த துருக்கர்களை அத் துறையிலும் எதிர்க்கும் மனப்பான்மை வளர்ந்தது. பழைய பிராமண மதத்தைப்போல் அல்லாமல் பக்தி இயக்கம் மக்களிடையே பரவலாகப் பரவிற்று. இந்து மதத்தில் நேரடியான ஆழ்ந்த ஈடுபாடு பொதுமக்களில் எல்லாப் பிரிவினர்க்கும் உண்டாகும் வகையில் அமைந்தது அவ் வியக்கம். இவ் வியக்கத்தின் மையம் பண்டரிபுரம். இக் காரணங்களால் மராட்டியரிடையே ஒருவகை ஒற்றுமை தோன்றிற்றாயினும் அவ் வொற்றுமை இஸ்லாமை எதிர்க்கும் அடிப்படையில்தான் வளர்ந்தது ; பிற்காலத்தில் இந்திய தேசிய ஒற்றுமையான ஓர் இணைக்கமான பகுதியாக இருந்ததா என்பது ஐயுறுதற்குரியது.

மற்றும், தமிழகத்தைப்போல மகாராஷ்டிரத்திலும் கிராம சமுதாய வாழ்க்கை மராட்டியருடைய சமூகத் தனித்தன்மையை வற்புறுத்திற்று. இங்குக் கூறிய காரணங்களால் சிவாஜி தோன்றி மராட்டியரை ஒரே மக்களாக அமைக்கு முன்பே அதற்கான வித்துகளிருந்தன.

ஷாஜி பான்ஸ்லே என்பவர் பாபாஜி என்பாருடைய மைந்தராக 1602-ல் பிறந்தார். சிலர் 1594 என்றும் கூறுவர். இஸ்லாமிய ஞானியான ஷா ஷெரீப் என்பவருடைய பெயர் அவருக்கு இடப்பட்டது. அவர் 1620-ல் ஜிஜாபாய் என்பாரை மணந்தார். அவருடைய மாமனார் யாதவ் ராவ் நைஸாம் ஷாவிடம் வேலை பார்த்தவர். தேவகிரியில் ஆண்ட யாதவ குலத்தின் வழித்தோன்றல். ஷாஜி தம் மாமனாேடு சேர்ந்துகொண்டு மாலிக் ஆம்பருடைய மொகலாய எதிர்ப்பிற்கு உதவினர். பிறகு யாதவராவ் நைஸாம் ஷாவிற்கு எதிராக மொகலாயரிடம் நட்புப் பூண்டார். அதையும் ஷாஜி எதிர்த்தார். அவர் பூனைவைக் கைப்

பற்றி அதையே நைஸாம் ஷாவிடமிருந்து ஜாகீராகப் பெற்ருர். அவர் மாலிக் ஆம்பரிடம் அலுவல் பார்த்த காலத்தில் நிர்வாக அனுபவங்களைப்பற்றிப் பிற்கால மராட்டிய ஆட்சி முறைக்கு அரசியல் அடிப்படையாக அமைத்தார். அவர் பீஜப்பூருக்குச் சென்று அடில்ஷாவின் ஆதரவில் அமர்ந்தார். அவருக்குப் பூனு ஜாகீரை ஒட்டி மகாராஜா என்னும் பட்டம் கிடைத்தது. அவர் ஒருவரிடமும் எந் நிலையிலும் நிலைத்து நிற்கவில்லை. அடில்ஷாவின் ஆதரவிலிருந்து விலகிக்கொண்டு அவர் மறுபடியும் நைஸாம் ஷாவின் பக்கம் சேர்ந்தார். அங்கும் கலகம் செய்யத் தொடங்கவே பீஜப்பூர்ப் படைகள் அவரைப் பூனுவிலிருந்து விலக்கின. அவர் பூனு மாவட்டத்திலுள்ள சிவனரை அடைந்தார். அதே ஆண்டில் ஷாஜஹான் அவரை மன்ஸப்தார் 5,000 ஆக நியமித்தார். 1630-ல் அவருக்குப் பிறந்த ஆண்மகவிற்கு அதன் தாயின் பெயரையே இட்டு சிவா என்று அழைத்தார். 1632-ல் அவர் பேரரசு அலுவலிலிருந்து விலகிக்கொண்டார். 1633-ல் நைஸாம் ஷாஹி அரச வம்சம் முடிவுற்றதால் அகமது நகரின் சில பகுதிகளைக் கைப்பற்றி மூன்ரும் மூர்த்தஷா என்பாரை அகமது நகரின் ஆட்சிக்கு ஏற்படுத்த முயன்ருர். மூன்று ஆண்டுகள் கழித்து அவர் ஷாஜஹானுக்கு அடங்கிஞர். பீஜப்பூர் அரசராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார். 1636-க்குப் பிறகு ஷாஜி தக்காணத்திலும் கர்நாடகத்திலும் நடந்த போரில் மேலும் மேலும் முக்கியமான பங்கு கொண்டார். 1648-ல் திருமலை நாயக்கருக்கும் பீஜப்பூர் படைத்தலைவர் முஸ்தாபர்கானுக்குமிடையே நிகழ்ந்த போரில் தலையிட்டு அவர் சிறைபிடிக்கப்பட்டார். 1652-ல் அவர் மீர்ஜும் லாவைத் தோற்கடித்தார்; பேனுகொண்டாவைக் கைப்பற்றி ஞர். மதுரை நாயக்கர்களின் பிரதிநிதிகள் ஆண்டுவந்த திருச்சியைக் கைப்பற்ற முடியவில்லை யாயினும் 1659-ல் தஞ்சையைக் கைப்பற்றிஞர். 1661-ல் கடலூரையும், பரங்கிப் பேட்டையையும் கைப்பற்றி மதுரை நாயக்கரான சொக்கநாத நாயக்கரால் அவர் செஞ்சிவரையில் பின்வாங்க வேண்டியதா யிற்று. அவருடைய கடைசிக் காலத்திற்குள்ளாக அவர் மைந்தர் சிவாஜி தமக்கென ஒரு நிலையையும் பெயரையும் நிலைப்படுத்திக் கொண்டார். பீஜப்பூர்ப் போரில் அவரும் பங்குகொண்டு 1664-ல் பஸவப் பட்டணத்திற்கு அருகில் ஒரு குதிரையிலிருந்து விழுந்து இறந்தார். ஷாஜிக்குத் துக்காபாய், ஜிஜாபாய் என்று இருவர் மனைவியர். துக்காபாயின் மைந்தன் வெங்காஜி. ஜிஜாபாயின் மக்கள் சாம்பாஜி, சிவாஜி, என இருவர். இவரில் சாம்பாஜி 1658-ல் இறந்துபோனர். ஷாஜி விசயநகரப் பேரரசின் இறுதி யான அழிவிற்குப் பல காரணர்களில் ஒருவர். அவர் தஞ்சையைப் பலவீனப்படுத்திவிட்டதால் 1675-ல் அதனை வெங்காஜி கைப்

பற்றுவது எளிதாயிற்று. அவர் மராட்டியருடைய நிர்வாக முறைகளைக் கர்நாடகத்திற்குப் பரப்பினார். அவர்தம் அவைக் களப் புலவராயிருந்த ஜெயராம் என்பவர், 'ராதா மாதவ விலாஸ சம்பு' என்னும் நூலை இயற்றினார். ஷாஜியின் அரசியல் அனுபவங்களும் தன்மையும் அவருடைய மைந்தரான சிவாஜி யைப் பெருமளவு பாதித்தன. ஷாஜி சிவாஜியின் ஆசிரியராகவும் மேற்பார்வையாளராகவும் தாதாஜிகொண்ட தேவ் என்பவரை நியமித்திருந்தார். 1649-ல் தம் பணியாளர்களில் மிகத் திறமை யுள்ளவரான கன்ஹோஜி ஜேதே, கிருஷ்ணலோஹேகரே என்பவர் களையும் சிவாஜிக்கு உதவுமாறு அனுப்பினார். ஷாஜியின் அறிவுரையை மேற்கொண்டு ரெய்காரைத் தலைநகர் ஆக்கிக் கொண்டார். இவ்வளவு இருந்தும் துக்காபாயும், வெங்கோஜியும் ஜிஜாபாய், சிவாஜியைவிட ஷாஜியிடம் நெருங்கியிருந்தனர் என்பது உண்மையே. சிவாஜியின் முன்னோர்கள், அவர்களது ஜாதி முதலியவற்றைப்பற்றி வேறுபட்ட கருத்துகள் பல நிலவு கின்றன. சப்பாசாத் என்பவர் இயற்றிய பக்கர் என்னும் ஒருவகை நூலில் சிவாஜியை ஒரு க்ஷத்திரியரென்றே கூறுகின்றார். காபிகான் அவரைச் சித்தூர் ராணுக்களோடு தொடர்புபடுத்து கிறாராயினும் அவர்களுடைய முன்னோர்களில் ஒருவர் ஓர் இழிகுல மாதின் வழியே பெற்ற மக்கள் தக்காணத்திற்கு வந்து மராட்டி யரை மணந்துகொண்டனர் என்பர். இவ் வரலாறு ஃபெரிஷ்டா முதலியவர்களாலும் கூறப்படுகின்றது. அவர் 44 வயதான போது 1674-ல் முடிசூட்டிக்கொண்டபோது உபநயனம் செய்து கொண்டார். ஜெய்சிங் ஓரிடத்தில் 'சிவாஜி இழிகுலத்தவர்; அவரோடு இருந்து நாங்கள் விருந்துண்டோம்' என்று கூறுகின்றார். சப்பாசாதும் சிவாஜி ஒரு க்ஷத்திரியர் என்னும் 'உண்மை' 1674-ல் தான் கண்டுபிடிக்கப்பட்டது என்பது ஐயத்தைக் கிளப்புவதா யிருக்கிறது.

சிவாஜி தம் தாயின் ஆதரவிலேயே வளர்ந்தவராகையால் அவருடைய சமயப் பண்புகளைப் பெற்றிருந்தார். தந்தையிட மிருந்து அரசியல் நுண்ணறிவைப் பெற்றார். தாதாஜி கொண்ட தேவ் பூனா ஜாகீரை நிர்வகித்த முறை சிவாஜியின் பிற்கால நிர்வாக அமைப்பிற்கு உறுதுணையாயிருந்தது. அவர் இயல் பாகவே யாருடைய கட்டிற்கும் அடங்காதவர். 1646-க்குப் பிறகு அவருடைய அரசியல் ஆசைகள் அளவுகடந்து வளர்ந்தன. 1646-ல் தோர்னா கோட்டையைச் சூழ்ச்சியால் பிடித்ததும், 1647-ல் தாதாஜி இறந்த பிறகு புரந்தர்க் கோட்டையை ஏமாற் றிப் பிடித்ததும், 1656-ல் சதாரா மாவட்டத்திலுள்ள ஜாவ்லி

கோட்டையைப் பல பாதகங்கள் இழைத்துத் தம்வயப்படுத்திக் கொண்டமையும் எதிர்காலத்தில் அவர் செய்யப்போகும் பல அரசியல், ராணுவக் காரணங்களுக்கு வழிகாட்டியாய் அமைந்தன. 1657-ல் அவர் மொகலாயர் ஆட்சிப் பிரதேசங்களைச் சூறையாடத் தொடங்கினார்; ஜுன்னாரைக் கொள்ளையடித்தார். ஆனால், அகமதுநகர் அவர் வயப்படவில்லை. பீஜப்பூர் ஔரங்கசீபிற்கு அடங்கிப்போனபோது அவர் தாணா, கொலாபா ஆகிய மாவட்டங்களிலுள்ள கல்யாண் போன்ற இடங்களைப் பற்றிக் கொண்டார். 1659-க்குள்ளாக அவர் தம் பழைய பூனா, சதாரா மாவட்டங்களைத் தவிர மிகுதியான புதுப் பிரதேசங்களையும் தமது ஆட்சியில் சேர்த்துக்கொண்டார்.

பீஜப்பூர் அரசில் சிவாஜி செய்துவந்த அதிக்ரமச் செயல்கள் அடக்குவாரின்றி அதிகரித்தன. அந் நிலையில் அவரை அடக்க அப்துல்லா பக்காரி (அவரை அப்ஸல்கான் என்றழைப்பர்) என்பவர் பீஜப்பூரினின்றும் புறப்பட்டுப் படைகொண்டு வந்தார். வழியில் அவர் துலஜாபூரிலுள்ள பவானி கோயிலை இடித்தார். முஸ்லிம் அரசுக்கும் சிவாஜிக்கும் நேர்ந்த முதல் நேரடி மோதல் இதுவே. சிவாஜி அப்ஸல்கானுக்கு இணங்க மறுத்துப் பிரதாபுகார் அருகில் தம்மைச் சந்திக்குமாறு அப்ஸல்கானுக்குச் சொல்லி அனுப்பினார். கான் சிவாஜியைக் கொன்றுவிடத் தீர்மானித்திருந்தா ரென்றும் அதை முன்கூட்டியே அறிந்திருந்த சிவாஜி அவரை முந்திக்கொண்டு தாமே அவரைச் சூழ்ச்சியால் கொன்றுவிடத் தீர்மானித்தா ரென்றும் ஒருசார் ஆசிரியர் கூறுவர். வியாக்ரநகம் (புலி நகம்) என்னும் ஒருவகைக் கைவிடாப் படையை விரல்களில் அணிந்துகொண்டிருந்த சிவாஜி தம்மைத் தழுவிய அப்ஸல்கானைக் கொன்றார். காபிகான் முதலியோர் இதனைப் படுகொலை என்பர். ஆனால், சப்பாசாத் முதலியோர் தற்காப்புக்காகச் செய்யப்பட்ட கொலை என்பர். எந்த முறையில் பெறப்பட்டதாயினும் சிவாஜியைப் பின்பற்றியவர்களுக்கு அச் செயல் ஒரு வெற்றியாகவே அமைந்தது.

1659-ல் இந்த வெற்றிக்குப் பிறகு சிவாஜியின் துணிச்சல் மிகுந்தது. 1660-ல் அவர் முதன்முதலாக ஆங்கிலேய வர்த்தகர்களோடு சண்டையிட்டார். பன்ஹாலா என்னும் கோட்டையை அவர் முற்றுகையிட்டு அதைக் கைப்பற்ற முடியாதாகையால் பீஜப்பூர்களால் துரத்தப்பட்டுத் தப்பி ஓடினார். ஆயினும், அவர் விஸால்காரை அடைவதற்குமுன் கஜபுரிக் கணவாய்க்கு அருகே பீஜப்பூர்ப் படைகளால் அகப்படுத்தப்பட்டார். ஆனால், பாஜி பிரபு என்பவர் அக் கணவாயைக் காத்துச் சிவாஜியைத் தப்ப

வைத்தார். இந்தப் போரினை மராட்டியர் தர்மோபைலே என்பர். இவ் வுவமை பொருந்தாது. ஏனெனில், 'தர்மோபை' லேயில் ஒருவருமே தப்பவில்லை யென்பது காண்க.

அதே ஆண்டில் ஷயிஸ்டகான் சிவாஜியை எதிர்த்துப் போர் தொடங்கினார். ஷயிஸ்டகான் ஔரங்கசீபின் மாமன்; தக்காணத்தில் அரசப்பிரதிநிதியாயிருந்தவர். இதற்கிடையே சிவாஜி பீஜப்பூரிலுள்ள ரத்தினகிரி மாவட்டம் முழுவதையும் வென்று தமது ஆட்சியில் அடக்கினார். 1663-ல் ஷயிஸ்டகானின் படை நிலையை இரவில் தாக்கி அழித்தார். அதனால் அவ் வயோதிகரான கான் மொகலாயப் பேரரசரால் திரும்ப அழைத்துக்கொள்ளப்பட்டார். 1664-ல் சிவாஜி தற்காப்பில்லாத சூரத் நகரத்தைத் திடீரென்று தாக்கிக் கொள்ளையடித்தார். சூரத்திலிருந்த மக்களிடமிருந்து கடைசிக் காசுவரையில் கைப்பற்றுவதற்கு அவர் எந்த வழியைக் கைப்பற்றவும் தயங்கவில்லை. அவர்களைச் சித்திரவதை செய்து பணத்தைக் கைப்பற்றினார். இவ் வகையில் அவர் ஒரு கோடி ரூபாய்க்குமேல் சேர்த்தார். இந்தக் கொலையையும், கொள்ளையையும் பற்றிச் சில வரலாற்றாசிரியர்கள் பெருமையோடு பேசுவார்கள். மகன் செய்த இந் நற்காரியங்களைக் கேட்ட சில நாள்களுக்கெல்லாம் ஷாஜி இறந்து போனார். சிவாஜி 'ராஜா' என்னும் பட்டத்தை ஏற்றுக்கொண்டார். அவ் வாண்டிலேயே அவர் பீஜப்பூர் அருகிலுள்ள முதோல் என்னுமிடத்தைக் கைப்பற்றி அங்கிருந்த பாஜிகோர்பாடே என்பாரை அவர் குடும்பத்தோடு கொலை செய்தார். அவர் முன்னொரு காலத்தில் ஷாஜியைச் சிறைபிடித்தார் என்னும் காரணத்திற்காகப் பிறகு அவர் சவந்தவாடி, ஹுப்ளி முதலிய இடங்களைக் கொள்ளையடித்தார். மேலைக் கடற்கரை ஓரத்திலுள்ள நகரங்களைக் கொள்ளையடிப்பதற்காக ஒரு கப்பற்படையையும் அமைத்தார். அக் கப்பற்படையின் உதவிகொண்டு தென்கன்னட நாட்டிலுள்ள பார்க்கலோரே என்னும் ஊரைக் கொள்ளையடித்துத் திரும்புகையில் மர்மகோவா அருகில் போர்த்துகீசியர்களால் தோற்கடிக்கப்பட்டார். இதன் பிறகு சிவாஜியின் இத்தகைய முயற்சிகளை நிறுத்த ஔரங்கசீப் ஜெயசிங் என்னும் இராஜபுத்திரரைப் படையோடு அனுப்பினார். புரந்தர்க் கோட்டையில் சிக்கிய சிவாஜி தப்ப முடியாத நிலையில் ஜெயசிங்கோடு பேச்சு நடத்தத் தொடங்கினார். அதன் முடிவாக அவர் ஜெயசிங்கிற்கு அடங்கி மொகலாய அவைக்களத்திற்குச் செல்ல ஒப்புக்கொண்டார். இதற்கிடையே பன்ஹலா, கோவா என்னுமிடங்களில் தோல்வி கண்டார். ஆதலால், அவர் ஆக்ராவிற்குச் சென்று மொகலாயப் பேரரசரின் நல்லெண்ணத்தைப் பெற விழைந்தார். 1667-ல் ஆக்ராவிற்குச் சென்று அங்கு

ஔரங்கசீப் அவைக்களத்தில் அகௌரவப்படுத்தப்பட்டுச் சிறைப் படுத்தப்பட்டார். சிறையில் சிலகாலம் இருந்தபின் சிறைக் காவலர்களை ஏமாற்றித் தப்பிய சிவாஜி காசி முதலிய கிழக்கத்திய ஊர்கள் வழியாகப் பூனுவிற்குத் திரும்பினார். 1667-69-ல் அமைதி நிலவிற்று. 1668-ல் அவர் கோவாவைக் கைப்பற்ற முயன்று தோற்றார். சிவனர், ஜஞ்சிராக் கோட்டைகளைக் கைப்பற்ற முயன்று தோற்றார். சூரத்தை மறுபடியும் தாக்கினார். ஆயினும், தக்காணத்திலிருந்த மொகலாயப் படைகளைப் பன்முறை தாக்கித் துன்புறுத்தினார்.

1674, ஜூன் 6ஆம் நாளில் சிவாஜி சத்திரபதி என்னும் பட்டத்தோடு 'ஸ்வராஜ்யம்' என்னும் மராட்டிய அரசை நிர்மாணித்து முடிசூட்டிக்கொண்டார். அவர் தம்மை அரசரென்று கூறிக்கொண்டபோதிலும் உண்மையில் பீஜப்பூர் ஆட்சியை எதிர்த்து, சுதந்தரம் கொண்டாடிய கலகக்காரர்; மொகலாயப் பேரரசர்க்குச் சேரவேண்டிய தக்காணத்துக் கப்பங்களைத் தம தாக்கிக் கொண்டவர்; சர்தேஷ்முகி என்னும் கொள்ளை வருவாயால் ஓர் அரசை நடத்தியவர் என்பதுதான் அவருடைய நிலை. ஆயினும், போர்க்கள வெற்றியால் ஒரு புதிய அரசை அமைக்க அவருக்கு உரிமை இருந்தது. அவர் ஒரு வேளை தம்மைக் கடைசி விசயநகரப் பேரரசரான மூன்றாம் ஸ்ரீரங்காவின் அரசியல் வாரிசு என்று கருதிக்கொண்டார்போலும். 50 லட்சம் ரூபாய் செலவில் நடத்தப்பட்ட முடிசூட்டு விழாவில் அவரை க்ஷத்திரியர் என்று நிரூபிக்கக் காசியிலிருந்து அந்தணர் அழைக்கப்பட்டார். இம் முடிசூட்டு விழாவைத் தொடர்ந்து சில கேடுகள் நிகழ்ந்தமையால் மறுபடியும் ஒரு முடிசூட்டு விழாவை அவர் நடத்திக்கொண்டார். 1677-78-ல் கர்நாடகத்தையும், கீழ மண்டலக் கரையையும் படையெடுத்துத் தாக்கிக் கைப்பற்றிச் சூறையாட விரும்பிய சிவாஜி தஞ்சையில் ஆண்ட வெங்கோஜியைக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு தாக்குதலைத் தொடங்கினார். அப்போது கர்நாடகமும், சோழமண்டலமும் குழப்பமான நிலையிலிருந்ததால் இவருடைய முயற்சிகளுக்கு வெற்றி வாய்ப்பிருந்தது. அப்போது தஞ்சையில் வெங்கோஜியும், திருச்சியில் சொக்கநாதரும் சுதந்தரமாக ஆண்டனர். அரசியல் கொள்கைப்படி தமிழகத்தின் பெரும் பகுதி பீஜப்பூர் மன்னருக்கு அடங்கியிருந்தது. அன்றியும் மொகலாயப் படைத்தலைவர் தென்னாட்டில் பேரரசின் நலன்களை மேற்பார்த்தார். இந் நிலையில் தென்னகத்தே ஆண்டுவந்த சிற்றரசுகள் யாவையும் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரர்களின் உதவியை நாடின. இத்துணைக் குழப்பங்களுக்கிடையேதான் சிவாஜி படையெடுப்பு நிகழ்ந்தது. அவர் மொகலாயப் படைத்

தலைவர்க்கு லஞ்சம் கொடுத்துப் பீஜப்பூர் மன்னரோடு நட்புற வாடி அவர்கள் தம்மைத் தடுக்காதவாறு ஏற்பாடு செய்து கொண்டு சோழமண்டலத்தில் புகுந்த சிவாஜி செஞ்சிக்கோட்டை மீது பேரிடி எனத் தாக்கினார். பிறகு திருவாடி, புவனகிரி, செஞ்சி முதலிய இடங்களையெல்லாம் கைப்பற்றினார். வெங்கோஜி அவருக்கு இணங்காமல் தப்பினார். சிவாஜி கர்நாடகத்தைச் சந்தாஜி என்பார்வசம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பினார். 1678-ல் சிவாஜி மறுபடியும் சிவனரில் தோற்றார். அவர் அருமை மகன் சாம்பாஜி மொகலாயரை ஆதரிக்கத் தொடங்கினார். கடைசியாக அவரிட்ட போர் ஜல்னாவை எதிர்த்து நடந்தது. அது வெற்றியளிக்கவில்லை. சாம்பாஜி எப்பொழுதும்போல் உதவாக் கரையாக இருந்தார். 1680-ல் சிவாஜி இறந்தார்.

சிவாஜி சுயராச்சியத்தை அமைத்த பிறகு ஆட்சி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த விழைந்தார். அவருடைய ஆட்சி இராணுவத்தை நம்பியிருந்தது. குதிரைப் படையும், காலாட் படையுமே முக்கியமாக அவருடைய இராணுவத்தின் பகுதிகளாக அமைந்தன. அவருடைய கடற்படை ஒரு தொடக்க முயற்சியே ஆயினும் சிற்சில சமயங்களில் அக் கடற்படையும் மேலைக் கடலில் வெற்றிகளைக் கண்டது. அவர் தமது படையின் ஒழுக்கமுறைகளில் சில முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்தார். மகளிரோ அல்லது படையோடு நேரடியான தொடர்புகள் இல்லாதவர்களோ படையோடு போர்க்களத்துக்குச் செல்லக்கூடாது; பாசறையில்கூட அவர்கள் காணப்படலாகாது; பகைவர்களுடைய மகளிரையோ, சமய சம்பந்தமான சின்னங்களையோ துன்புறுத்தவோ, அழிக்கவோ கூடாது; போர் நடக்கும் காலத்தில் புலவர், மகளிர், வணிகர், அந்தணர், பசுக்கள் இவை பாது காக்கப்படல் வேண்டும். இவை எல்லாம் அவர் இட்ட கட்டளைகள். இந் நாகரிகப் போர் முறை அக் காலத்துப் பல படைகளில் கண்டறியாதவை. சிவாஜியின் அரசில் நாட்டைக் காக்க 240 கோட்டைகள் இருந்தன. கோட்டைகளுக்குத் தேவையான, போதுமான நீர்வசதி, உணவு வசதி, படை வீரர் இருக்க இடங்கள் முதலியவை போற்றப்பட்டன. கோட்டையைக் காக்கப் பல எந்திர சாதனங்கள் பயன்பட்டன. கோட்டைக்குள் ஒளிந்து தற்காத்துக்கொண்டு செய்யப்படும் போர், குதிரைப் படையைக் கொண்டு திடீர்த் தாக்குதல் என்பவையே சிவாஜியின் தலைமையில் மராட்டியர் உகந்த போர் முறைகள். நால்வகைப் படையோடும் சமவெளிகளில் இடும் போர் அவர்களுக்கு ஒத்து வராது. ஔரங்கசீப் ஆட்சியின் முற்பகுதியில் சிவாஜி பல வெற்றிகளைக் கண்டமையும் அதன் பிற்பகுதியில் குறிப்பாக அவர் தக்காணத்

துப் போர்களைத் தொடங்கியமையும் அவர்கள் தோல்விகளைக் காணத் தொடங்கியமையும் இதற்குச் சான்றுகள்.

சிவாஜி அரசின் எல்லை எப்போதும் ஒருபடித்தாக இல்லை. அது மிகக் குறைவாக இருந்த காலத்தில் பூனா, சதாராவைச் சூழ்ந்திருந்த பிரதேசங்களாகவும், அது மிகுந்திருந்த காலத்தில் தெற்கே தென்கன்னடத்திலிருந்து வடக்கே தப்தி நதி வரையிலும் பரந்திருந்தது. சோழ மண்டலப் போருக்குப்பின் மைசூரின் கீழைப்பகுதிகளும், தமிழகத்தின் வட பகுதிகளும் அவராட்சியில் அடங்கின. அமைதிக்கால ஆட்சிக்கு ஏற்ற சூழ்நிலை இல்லையென்பதோடு சட்டப்படி அமைக்கப்பட்ட ஆட்சியை எதிர்க்கும் இயல்பு ஒன்றையே கொண்ட சிவாஜிக்குப் போர் முறைகள் கைவந்த அளவிற்கு ஆட்சிமுறை கைவரவில்லை. அவருடைய ஆட்சிமுறை மீர்ஜும்லாவின் ஆட்சி முறையையும் பொதுவாக மொகலாயர் ஆட்சி முறையையும் பின்பற்றிற்று. அவருடைய நிர்வாகத்தில் 1647-க்கு முன்பு நான்கு அமைச்சர்களும், 1674-ல் எட்டு அமைச்சர்களும் இருந்தனர். அவர்கள் முக்கியப் பிரதானி அல்லது பேஷ்வா, அமாத்யா, மந்திரி, சச்சிவா, சுமந்திரி, சேனாபதி, தண்டநாயகா, ஞாயாதீஸர் என்பவர். சேனாபதியைத் தவிர மற்றவர்கள் பெரும்பாலும் அந்தணர்களாய் இருந்தனர். ஆனால், இந்த மந்திரிகள் சத்ரபதியின் உத்தரவில்லாமல் யாதொன்றும் செய்ய இயலாதவர். முக்கியப் பிரதானிக்கு பேஷ்வா என்பதும் பெயர். அவர் ஆட்சியில் 14 மாவட்டங்கள் இருந்தன. அவற்றின் மையம் கோட்டைகள். நிர்வாகத்தின் அடிப்படை எப்போதும் எங்கும்போல் கிராமங்கள். சிவாஜியின் நிதி இலாகாவின் செயற்பாடுகள் பல ஆசிரியர்களால் பல வகையில் எடுத்துப் பேசப்பட்டிருக்கின்றன. அவற்றில் சௌத், சர்தேஷ்முகி என்னும் இருவகை வரிகள் மராட்டியரின் கொடுங்கோன்மைக்கு எடுத்துக்காட்டென்பர். சௌத் என்பது வருவாயில் நான்கில் ஒரு பங்கு. இது மராட்டியர் ஆட்சி வரம்பிற்கு அப்பாற்பட்ட இடங்களிலிருந்த பிற அரசுகளின் குடிமக்களிடமிருந்து வலுவாகக் கைப்பற்றப்பட்ட வரி. இவ் வரி எந்தச் சட்ட நியாய வரம்பிற்கும் உட்பட்டதில்லை. இதேபோல இவர் விதித்த மற்றொரு வரி சர்தேஷ்முகி. இது சிவாஜி தம்மை மொகலாயப் பேரரசரின் வரி வசூலிக்கும் அதிகாரியாகக் கருதிக்கொண்டமையால் ஏற்பட்டது. ஆதலால், பேரரசரின் உத்தரவு இன்றியே அவ் வரசின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்களிடமிருந்து அவர் பத்தில் ஒரு பங்கு வரி வசூலித்தார். அவருடைய இந்த வரி வசூல் முறைகளைப் பிற்காலத்திலிருந்த

வெல்லஸ்லியின் துணைப்படைத் திட்டத்தோடு ஒப்பிடுவது உண்மையான வரலாற்று முறையாகாது.

சிவாஜி அக் கால மரபையொட்டிக் கற்றோரை ஆதரித்தார். கோவில்களுக்கும், மசூதிகளுக்கும்கூட அறக்கட்டளைகள் ஏற்படுத்தினார். அவருடைய நீதி நிர்வாகம் மிக எளிய முறையில் அமைந்தது. பஞ்சாயத்துகள் கிராமங்களில் நீதி நிர்வாகத்தை மேற்கொண்டன. நீர்வழியேயும், நெருப்பு வழியேயும் சாட்சிகளை ஆய்தல் முறை மேற்கொள்ளப்பட்டது. இவற்றை மேற்பார்க்க ஒரு பிரதானி இருந்தார்.

சிவாஜியின் மகன் சாம்பாஜி (சம்பூஜி என்னும் பெயர் அவ்வாறு மருவிற்று) 1657-ல் பிறந்தார். 1659-ல் அவர் தந்தையின் அரசியல் வாரிசாக நியமிக்கப்பட்டார். 1665-ல் மொகலாய மன்சப்தார் 5000 ஆக நியமனம் பெற்றார். அவர் தந்தையோடு ஆக்ராவிற்குச் சென்றார். ஆனால், சிவாஜி திரும்பும்போது அவரை மதுராவில் விட்டு வந்தாராயினும் விபத்தின்றி அவர் ஊருக்குத் திரும்பினார். அவர் தந்தை இறக்கும் தறுவாயிலிருந்த போது அவரைப் பார்க்க விரைந்த சாம்பாஜி அவரை உயிரோடு பார்க்கவில்லை. அவரைத் தருணம் கடந்து அவர் வந்ததற்குக் காரணமாயிருந்த அவர் இவர்ந்து வந்த ஒட்டகத்தின் தலையை வெட்டித் தம் கோபத்தைத் தணித்துக்கொண்டார். சிவாஜி இறந்த பிறகு சாம்பாஜியின் சிற்றன்னையான சோயிராபாய் தன் மகன் ராஜாராமை மராட்டிய மன்னராக முடிசூட்டினாள். அப்போதிலிருந்து தொடங்கியது மராட்டிய அரசியலில் ஒரு பிளவு; ராஜாராம் தலைமையில் ஒரு கட்சியும், சாம்பாஜி தலைமையில் மற்றொன்றுமாக. ஔரங்கசீபின் தக்காணப் போர்கள் தொடங்கியபோது மராட்டியர் ஆட்சி ஏறத்தாழ அழிந்து போயிற்றென்றே சொல்லலாம். சாம்பாஜி ஔரங்கசீபால் கொல்லப்பட்டபிறகு அவருடைய மகன் இரண்டாம் சிவாஜியின் சார்பாகப் பேரளவுக்கு ராஜாராம் ஆட்சி நடத்தினார்.

சிவாஜிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சாம்பாஜி நிலையான நிர்வாகத்தை நடத்தமுடியவில்லை. பல இன்னல்களுக்கும் சதிகளுக்கும் இடையே அவர் தம்மையும் தமது அரசையும் காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், அவருடைய பண்பும் நடத்தையும் மிகவும் கெட்டவையா யிருந்தமையால் அவருடைய வாழ்க்கை ஒரு கொடிய முடிவினின்றும் தப்பமுடியாமல் போயிற்று. ஔரங்கசீபின் சினத்திற்கு அஞ்சி அவர் மகன் அக்பர் தக்காணத்துக்கு ஓடிவந்துவிட்டார். அவர் சாம்பாஜியிடம்

எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை. 1685-ல் ஔரங்கசீப் தக்காணப் போர்களைத் தொடங்கினர். 1686-லும் 1687-லும் பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் முறையே வென்று மொகலாயப் பேரரசில் அவர் சேர்த்தார். மொகலாயர் பேரரசரின் நேரடியான தலைமையின்கீழ் மராட்டியர் அரசை அழிக்க வலுவான முயற்சிகளைத் தக்காணத்தில் செய்துகொண்டிருந்த போது அம் முயற்சிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாகப் போர்த்துகீசியர்மீதும் ஜஞ்சீராவிலிருந்த அரபுக்கள் மீதும் பயனில்லாத போர்களைத் தொடுத்துவந்தார். கோல்கொண்டாவை ஏற்கெனவே கைப்பற்றியிருந்த ஔரங்கசீப் தம் படைத் தலைவர் இதிகாத்கான் (ஸுல்பிகர்கான்) என்பாரைப் படையோடு அனுப்பி ரெய்காரை கைப்பற்றச் செய்தார். ரெய்காரின் வீழ்ச்சிக்குப்பின் சாம்பாஜி மொகலாயப் படைகளால் சிறைப்படுத்தப்பெற்று ஔரங்கசீபின் முன் கொணரப்பெற்றார். அம் முஸ்லிம் பேரரசர் முன் சாம்பாஜி சிவபிரானைப் புகழ்ந்தார். மகமது நபியையும் ஔரங்கசீபையும் இகழ்ந்தார். 'இஸ்லாம் வேண்டுமா? சாவு வேண்டுமா?' என்று பேரரசர் கேட்ட கேள்விக்கு 'உன் மகளே வேண்டு'மென்று இறுமாப்புடன் பதிலளித்தார். சினம் மிகுந்த ஔரங்கசீபின் ஆணைப்படி அவர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். ஏற்கெனவே சாம்பாஜியின் மகன் ஸாஹுவும் அவன் தாயும் முன்பே சிறையிருத்தப்பட்டனர். மராட்டியர் அரசு மறைந்துவிட்டதென்றே தோன்றிற்று.

சாம்பாஜியின் பண்புகளைப்பற்றி வரலாற்றுளர்கள் விரிவாக எழுதுவர். அவர் மன உறுதியும், கொள்கைப்பற்றும், நிர்வாகத் திறமையும், ஆட்சி அறிவும் முற்றிலும் அற்ற ஒரு கயவர். அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்த கயமைக்குப் பூரணமான உருக்கொடுத்துக் கயமையில் பல புதுப்பாடங்களையும் கற்பித்தவர் கவி கலசர் என்பவர். ஔரங்கசீபின் முன்னிலையில் சாம்பாஜியும் கவி கலசரும் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்ட போது ஔரங்கசீப் அரியணையிலிருந்து இறங்கி வந்து அவ் விரு மராட்டியர்களையும் ஒறுப்பதற்கு ஆணையிடத் தொடங்கிய போதும் கவிகலசர் வழக்கம்போல சாம்பாஜியைப் புகழ்ந்தார். 'மராட்டிய மன்னரான சாம்பாஜியைக் கண்டதும் மொகலாய மன்னர் தமது சிம்மாசனத்தைவிட்டு இறங்கிவந்துவிட்டார்' என்று பொருள்படப் புகழ்ந்தார். மொகலாய அரசர் வெகுளி வாய்ப்பட்டுக் கவிகலசரின் நாவைத் துண்டிக்க உத்தரவிட்டார். அவர் முறையே சித்திரவதை செய்யப்பட்டு இறுதியில் சாம்பாஜியோடு அவரும் கொல்லப்பட்டார்.

ஸுல்பிகர்கான் ரெய்காரைக் கைப்பற்றியபிறகு இராஜாராம் செஞ்சிக்கு ஓடினார். மொகலாயர் 1698-ல் செஞ்சிக்கோட்டையையும் கைப்பற்றியபோது இராஜாராம் மகாராஷ்டிரத்திற்குத் திரும்பினார். அவர் ஸாஹுவின் பிரதிநிதியென்ற முறையில் மராட்டியப் பொம்மை அரசிற்குத் தலைமை வகித்தாராயினும் இராமச்சந்திரப் பவடேகர் என்பவரும் பிரகலாத நிராஜி என்பவரும் உண்மையான ஆட்சியாளர்களாக விளங்கினர். இவர்களில் பிந்தியவர் அந்தணர்; தம் நலம் கருதாது மராட்டியர் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர். அவர் ஒருமுறை இராஜாராம் அளவுக்கு விஞ்சிக் கண்டிக்கப்பட்டமையால் தற்கொலை செய்துகொண்டார். (1697). இராஜாராம் 1700-ல் இறந்தார். அதன் பிறகு அவர் மனைவியான தாராபாய் மராட்டியர் ஆட்சியை மேற்கொண்டார். இராஜாராம் மராட்டியர் அரசினை நடத்தியபோது அவ்வரசு எதிர்மறைமுகத்தான் பேரளவிற்கே இருந்தது. மையப்பட்ட, நிலையான, வலுவுள்ள அரசு ஒன்று இயங்கவில்லை. ஆகையால், படைமானிய முறைகளைக் கையாண்டு சிறுசிறு குதிரைப் படைகளை ஆங்காங்கு வைத்துக்கொண்டு மொகலாயர்களுக்குத் தொந்தரவு கொடுப்பது ஒன்றையே கருத்தாகக்கொண்டு இயங்கிய ஆட்சி ஒன்றே நடந்தது. பிற்காலத்தில் பேஷ்வாக்கள் தோன்றிய போது பான்ஸ்லே என்பாரின் பேரளவு ஆதிக்கத்தின்கீழ் பேஷ்வா முதலிய ஐவராட்சி தோன்றிய அரசு சிதறுண்டதற்கு அடிப்படை இப்போது இடப்பட்டது. இராஜாராமை மராட்டிய அரசின் இரண்டாம் நிறுவனர் என்றெல்லாம் புகழ்வது வெற்றுக் கூற்றும்.

தாராபாய் ஹம்பீரராவ் என்பார் மகள். அவர் தம் கணவன் இராஜாராமோடு மராட்டிய நாட்டைவிட்டு ஓடினார். அவர் இராஜாராம் செஞ்சியிலிருந்தபோது. விஸால்காரில் தங்கியிருந்தார். பிறகு இராமேஸ்வரம், புதுச்சேரி வழியாக அவரும் செஞ்சி வந்து சேர்ந்தார். அங்கிருந்து துரத்தப்பட்ட இராஜாராமுடன் அவரும் மகாராஷ்டிரத்திற்கு வந்து சேர்ந்தார். இராஜாராம் இறந்தபிறகு அவர் மகன் மூன்றும் சிவாஜி முடிசூட்டப்பெற்று அவ் விளையவருக்கு ஆட்சிக் காவலராகத் தாராபாய் தம்மையே நியமித்துக்கொண்டாள். அவருக்குத் துணிவும், திறமையும் இருந்தது. அவருடைய திறமையைக் காபி கானும் புகழ்வார். அவர் இராஜாராம் விட்ட இடத்திலிருந்து மொகலாயர் எதிர்ப்பை மேற்கொண்டு நடத்தினார். அவர் தம் மகன் சிவாஜியையே தொடர்ந்து மன்னராக்க விரும்பியமை கைகூடவில்லை. ஏனெனில், மராட்டிய நாட்டைக் கைப்பற்றிய மொகலாயர் சாம்பாஜியின் மகனான ஸாஹுவை 1707-ல் விடுதலை செய்ததும் அவரையே மராட்டியர் தமது அரசியல்

தலைவராக ஏற்றுக்கொண்டனர். அப்போதிலிருந்து தாராபாயும், மூன்றும் சிவாஜியும் மராட்டியர் வரலாற்றிலிருந்து சிறிது சிறிதாக மறைந்தனர்.

(ஆ) தஞ்சையில் மராட்டியர்

ஷாஜி பான்ஸ்லேயின் மற்றொரு மகனான வெங்கோஜி (1676-85) துக்காபாய் என்பாளுக்குப் பிறந்தவர் என்பதையும் 1664-ல் அவர் தம் தந்தையின் கர்நாடக ஜாகீருக்கு வாரிசானார் என்பதையும் முன்பே கண்டோம். 1677-ல் அவர் தஞ்சை ஆட்சியைக் கைப்பற்றினார். அவருக்கு முன்பு தஞ்சையில் ஆண்டவர் நாயக்கர். அங்குக் கடைசியாக ஆண்டவர் செங்கமலதாஸ் என்பவர். அந்தத் தாஸைத் தஞ்சை அரியணையில் இருத்த பீஜப்பூர் சுல்தானின் ஆணையை மேற்கொண்டுவந்த வெங்கோஜி 1675-ல் சொன்ன வண்ணம் செய்தாராயினும் அடுத்த ஆண்டு ஆட்சியைத் தாமே மேற்கொண்டார். 1677-ல் அவர் சிவாஜியோடு பொருதார். அதில் அவர் வெற்றி காணவில்லையாயினும் சிவாஜி வென்றார் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அப்பொழுது தொடங்கியது கி.பி. 1855 வரை தொடர்ந்தது. அதன் பிறகு தஞ்சை ஆங்கிலர் ஆட்சியில் அடங்கிற்று.

வெங்கோஜி மைசூரை எதிர்த்துச் சொக்கநாத நாயக்கர்க்கு உதவினார். அவர் மிகுந்த வரி விதித்தும், கோயிற் சொத்தைக் கொள்ளையிட்டும் வந்தார். அவருக்கு நிதித்துறையில் பல இன்னல்கள் இருந்தன என்பதை இது காட்டும். பெரும்பாலும் அவர் நாயக்க மன்னர்களின் ஆட்சி முறைகளைப் பின்பற்றினார். அவருக்குப் பிறகு இருந்த மராட்டிய மன்னர்களின் கலாசார மரபுகளுக்கு அடிப்படையிட்டவர். வெங்கோஜியின் மூத்த மைந்தரான இரண்டாம் ஷாஜி (1685-1712) ஆட்சிக் காலத்தில் பங்களூர் மைசூருக்கு விற்கப்பட்டது. 1694-ல் தஞ்சை மொகலாயர் ஆட்சிக்குக் கீழ்ப்படிந்தது. 1700-ல் ஷாஜி மதுரை நாயக்க மங்கம்மாளால் தோற்கடிக்கப்பட்டார். அவர் கிறித்துவ சமயத்தை ஆதரிக்கவில்லை யென்று மனுச்சி கூறுவார். ஷாஜி கற்றோரை ஆதரித்தவர். அவரே அதிநவபோஜர் என்னும் பட்டத்தோடு விளங்கியவர். அவர் அவைக்களப் புலவர் இராமபத்ர தீக்ஷிதர் என்பவர் ஜான்கி பரிணயம் என்னும் நாடகம், பதஞ்சலி சரித்திரம் என்னும் காவியம் முதலிய நூல்களையும் இயற்றினார். அவர் பல அறிஞர்களும் உறைவதற்காக ஷாஜிராஜபுரம் என்னும் ஒரு கிராமத்தை மானியமாக விட்டார். இரண்டாம் ஷாஜி 1712 வரை ஆண்டார்.

31. இந்தியாவில் ஐரோப்பிய வணிகர்

(அ) போர்த்துகீசியர்

இந்தியாவில் முதன் முதலாகக் கடல் வழியாக வந்து குடியேறிய ஐரோப்பியர்கள் போர்த்துகீசியரே. 15, 16ஆம் நூற்றாண்டுகளில் உலகத்தின் புதுப்புதுப் பிரதேசங்களைக் கண்டு பிடிப்பதற்கு இத்தாலியர், ஸ்பானியர், போர்த்துகீசியர், ஃபிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், உலாந்துக்காரரான டச்சுக் காரர், பெல்ஜியர் என்பேர் முனைந்தனர். இவர்களில் போர்த்து கீசியரே முதன் முதலாக ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சுற்றி இந்தியாவின் மேலைக்கடலை அடைந்தவர்கள். வாஸ்கோடகாமா என்னும் மாலுமி 1497, 98-ல் கள்ளிக்கோட்டையை அடைந்தார். கள்ளிக்கோட்டையை ஆண்ட ஜாமரின் அரசருக்கும் போர்த்து கீசியருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் இருதரத்தார்க்கும் வாணிக முறையில் பயனுள்ளதாயிருந்தது. காப்ரால் என்பவர் 1500-ல் கள்ளிக்கோட்டையில் நிலைத்துக்கொள்ள முடியாமல் கொச்சியை அடைந்தார். போர்த்துகீசியருடைய வாணிகக் கப்பலை அராபிய வியாபாரிகளும், ஜாமரினுடைய கடற்படையும் அடிக்கடி தாக்கித் துன்புறுத்தி வந்தமையால் ஆயுதம் தாங்கிய வாணிகக் கப்பல் படை தேவைப்பட்டது. 1502-ல் மறுமுறை யாக இந்தியாவிற்கு வந்த வாஸ்கோடகாமா கொச்சியில் ஒரு வாணிக ஸ்தலத்தை நிறுவி, கண்ணனூரரைப் புதுப் பீரங்கிகள் கொண்டு வலுப்படுத்திப் போர்த்துகீசியர் வாணிகத்தை மேலைக் கடற்கரை ஓரத்தில் நிலைப்படுத்தினர். 1503-ல் அல்பான்ஸோ ஆல்புகர்க் என்பவர் கொச்சின் கோட்டையை ஜாமரின் தாக்குதல் களினின்றும் காத்து அந்த வாணிகத் தலத்தை ஓர் இராணுவத் தலமாக மாற்றினர். கி.பி. 1505-லிருந்து ஆண்டுதோறும் அனுப்பப்படும் அரசியல் வர்த்தகக்குழு நிறுத்தப்பட்டது. அப்போது பிரான்ஸிஸ்கோ டி அல்மேடா என்பவர் போர்த்து கீசிய அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அல்மேடா

போர்த்துக்கீசியரின் கடல் ஆதிக்கத்தை வற்புறுத்தினர். அவர் இந்தியாவில் கோட்டைகள் கட்டுவதைத் தேவையில்லையென்று கருதினர். அன்றியும் கீழைநாடுகளில் ஒரு பெரிய அரசினை நிறுவுதல் போர்த்துகீசியருடைய வசதிகளுக்கும், வன்மைக்கும் புறம்பானது என்று கூறினர். 1506-ல் அவர் ஜாமரினைக் கடற் போரில் தோற்கடித்து அவர் கடற்படையை அழித்தார்.

ஆல்புகர்க் (1505-1515) : அல்மீடாவையடுத்துப் போர்த்து கீசியப் பிரதிநிதியாக இந்தியாவில் ஆண்டவர் ஆல்புகர்க் என்பவர். உண்மையில் அவருடைய நிலைமையை வாணிகத் தலைமை என்னுது அரசியல் ஆட்சி எனவே கூறவேண்டும். போர்த்துகீசிய வாணிகத் தலங்களையெல்லாம் கோட்டை கொத்தளங்களாக்கிப் படைஞர் கொண்டு பாதுகாக்கப்படும் நிறுவனங்களாக மாற்ற வேண்டுமென்று அவர் விழைந்தார். இக் கொள்கையை ஒப்புக் கொள்ளாத அல்மீடா ஆல்புகர்க்மீது அவர் இந்தியா முழுவதையும் ஆள விரும்பினர் என்று குற்றம் சாட்டினர். கோவாவைக் கைப்பற்றி அதனையே போர்த்துகீசியரின் முக்கிய வாணிகத் தலமாகவும் போர்த்துகீசிய-இந்திய அரசின் தலைநகராகவும் ஆக்குமாறு போர்த்துகலை வற்புறுத்தினர். அவர் போர்த்துகீசிய இந்தியக் கலப்பு மணத்தை ஆதரித்தார். வென்று குடியேற்றம் செய்யமுடியாத இடங்களில் கோட்டைகள் கட்டினர். இந்திய மன்னர்களுக்கும் போர்த்துகீசிய அரசர்களுக்கும் நட்புறவு ஏற்படுத்தினர். விசயநகரத்திற்கும் போர்த்துகீசிய அரசுக்குமிடையே நல்லுறவை ஆக்கினர். 1510-ல் அவர் விசயநகர அரசர்களோடு நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டார். அதே ஆண்டில் கோவாவை கைப்பற்றிப் பலப்படுத்தினர். பிற்காலத்தில் அதுவே போர்த்துகீசிய-இந்தியாவின் தலைநகராயிற்று. ஆல்புகர்க் நவீன வகை அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்தினர். மாவட்ட அதிகாரிகளுக்கென்று நிதி, நீதி (குற்றச் சட்டத்தைப் பொறுத்த அளவில் அதாவது சிவில் அல்லாத வழக்குகள்) ஆகிய இருவகைத் துறையையும் மேற்பார்த்தனர். அவர் இந்திய நாணய முறையை மாற்றவில்லை. கிராம ஆட்சியை இந்தியர்களிடமே விட்டுவைத்தார். மேனுட்டுக் கல்வி முறையைப் புகுத்தினர். வரிவசூலும் வாணிகத்தல நிர்வாகமும்கூட இந்துக்களிடம் விடப்பட்டன. 30 கிராமங்கள் கோவாவின் ஆட்சியில் அடங்கியிருந்தன. பிரிட்டிஷ் இந்தியாவின் 1829-ல் பென்டிங் பிரபு, சதி என்னும் கொடிய பழக்கத்தை அரசாங்க உத்தரவால் தடுத்தார். ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பாகவே அத் தேவையான சீர்திருத்தத்தைக் கோவாவில் ஆல்புகர்க் செய்துவிட்டார். ஆல்புகர்க் அரசியலிலும் போரிலும் சிறந்து விளங்கினர். அவர் விசயநகரோடு கொண்

டிருந்த வெளிநாட்டுக் கொள்கை சாலச் சிறந்ததாம். அதனுல் போர்த்துகீசியரின் வாணிகம் மிகுந்தது; பாதுகாப்பும் மிகுந்தது. அவர் இந்தியாவில் ஆண்ட போர்த்துகீசியர்கள் யாவருள்ளும் சிறந்தவர் என்று கருதத்தக்கவர். பிரெஞ்சுக்காரருடைய ட்யூப்ளெக்ஸைவிட ஆல்புகர்க் கண்ட வெற்றிகள் சிறந்தவை. 1515-ல் ஆர்மஸில் இருந்து கோவாவிற்கு வரும் வழியில் அவர் இறந்துபோனுர்.

1524-ல் வாஸ்கோடகாமா கடைசி முறையாக இந்தியாவிற்கு வந்தார். இப்பொழுது அவர் அரசப் பிரதிநிதியாக வந்தார். ஆனுல், 1524-ல் அவர் கொச்சியில் இறந்துபோனுர். நூநோடகுஞ்சா (1529-1538) என்பவர் போர்த்துகீசியத் தலைநகரைக் கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினுர். அவர் காலத்தில்தான் டையூ குஜராத் சுல்தானிடமிருந்து பெறப்பட்டது. 1542-ல் ஃபிரான்ஸிஸ் ஸேவியர் போப் ஆண்டவரின் பிரதிநிதியாக இந்தியாவிற்கு வந்தார். அவர் 10 ஆண்டுக்காலம் கிறித்துவ மதத்திற்குத் தொண்டு செய்தார். டிகாஸ்ட்ரோ என்பார் ஆண்ட காலத்தில் (1545-48) டையூவைக் குஜராத் சுல்தான் கைப்பற்ற முயன்று தோற்றுர். 1548-ல் பீஜப்பூர் சுல்தானேடு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. டிபிரகான்ஸர் (1558-61) என்பார் ஆட்சிக் காலத்தில் குஜராத் மன்னரிடமிருந்து டாமன் பெறப்பட்டது. போர்த்துகீசியர்கள் மொகலாயர்களோடு நட்புறவே பூண்டிருந்தனர். ஆயினும், 16ஆம் நூற்றுண்டின் இடைக்காலத்திலேயே அவர்களது வீழ்ச்சி தொடங்கிவிட்டது. தொடக்க காலத்தில் பிற ஐரோப்பிய நாடுகளின் போட்டியின்மையால் போர்த்துகீசியர் வெற்றி காண முடிந்தது. கடல் ஆதிக்கம் போர்த்துகீசியர் கையிலேயே இருந்தபோது அவர்களை வெல்லப் பிறர் ஒருவரும் இல்லை. அவர்கள் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதில் முனைந்திருந்தபோது இந்துசமயத்தையும் ஒடுக்கினர். இது இந்துக்களுடைய எதிர்ப்பை எளிதில் சம்பாதித்துக் கொண்டது. ஆல்புகர்க் போன்றவர்கள் இந்தியாவில் வாணிகத் தலங்களையே யன்றி ஓர் அரசையும் நிறுவ வேண்டும் என்று விரும்பினர். 16ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், 17ஆம்நூற்றுண்டின் முழுவதிலும் இங்கிலாந்து, ஹாலந்து ஆகிய நாடுகளின் கடல் ஆதிக்கம் மிகுந்துவிட்டது. அவர்களும் இந்தியாவில் வாணிக நிமித்தம் புகலாயினர். அவர்களுடைய திறமை மிக்க போட்டி போர்த்துகீசியர்களைப் பலவீனப்படுத்தியது. இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசிய அதிகாரிகளுக்குக் குறைந்த சம்பளமும் நிறைந்த லஞ்சமும் கிடைத்தன. ஆண்டொன்றிற்கு 300 பவுன் சம்பளம் வாங்கிய ஓர் அதிகாரிக்குச்

சட்டம் அனுமதிக்காத பிற வருவாய் 20,000 பவுன் ஆகும். இந்திய அரசியலும் இதற்கிடையே மாறிவிட்டது. போர்த்துகலும் ஸ்பெயினும் 60 ஆண்டுக்காலம் இணைந்திருந்தன (1580-1640). அக் காலத்தில் போர்த்துகீசியருடைய தேசிய உணர்ச்சி மங்கியிருந்தது. பழைய காலத்தில் போப்பாண்டவர் உத்தரவுப்படி அட்லாண்டிக் கடலின் மேற்குப் பகுதி ஸ்பெயினுக்கும் அக் கடலின் கிழக்கேயிருந்த நாடுகளோடு வாணிகம் செய்யும் உரிமை போர்த்துகீசியருக்கும் பிரித்து விடப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது இப் பிரிவு, சமயச் சீர்திருத்தத்திற்குப் பிறகு பிரிட்டன், ஹாலந்து முதலிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்னோரன்ன காரணங்களால் போர்த்துகீசியருடைய ஆதிகம் இந்தியாவில் குறைந்தது.

(ஆ) டச்சுக்காரர்

போர்த்துகீசியரைத் தொடர்ந்து உலாந்துக்காரர்களான டச்சுக்காரர்களும் கிழக்கிந்தியப் பிரதேசத்தில் வாணிகம் செய்ய முற்பட்டனர். லின்ஷோடன் என்னும் டச்சுக்காரர் கோவாவில் வசித்துவந்தார். அவருடைய முயற்சியால், ஆப்பிரிக்க நன்னம்பிக்கை முனையைச் சுற்றி முதல் டச்சு வாணிக மாலுமிகள் கிழக்கிந்தியாவிற்குப் பயணமாயினர் (1595-97). அங்ஙனம் சென்றவர்களின் தலைவராகக் கார்னீலியஸ் ஹூட்மன் என்பவர் ஜாவாவை அடைந்தார். அவ் வணிகர்கள் மிளகு, வால்மிளகு, ஏலக்காய், லவங்கம், முதலிய வாசனைப் பொருள்களைப் பெற்று வியாபாரம் செய்யும் நோக்கம் கொண்டிருந்தனர். மிக விரைவிலேயே அவ் வணிகர் குழாம் ஓர் அரசின் நிலையை எய்தியது. போர்ச் சாதனங்களைப் பெற்றுத் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான அரசியல் சட்டங்களையும் உலாந்து அரசாங்கம் ஆக்கியது. கோயன் முதலிய டச்சுக் கவர்னர்கள் ஜாவாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்தி மிகுவித்துக்கொண்டனர். கி.பி. 1623-ல் ஆங்கிலேய வணிகர் குழாத்திற்கும் ஜாவாவிலிருந்த டச்சுக்காரர்களுக்கும் வாணிகப் போட்டி காரணமாகப் பகைமை முற்றி, அம்பாய்னா என்னுமிடத்தில் டவர்ஸன் என்னும் ஆங்கிலேயரும் அவருடன் இருந்த ஒன்பது பேரும், ஒன்பது ஜப்பானியர்களும் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டனர். இதனை வரலாற்றில் 'அம்பாய்னா படுகொலை' என்பர். கொல்லப்பட்டவர் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஒரு கோட்டையைக் கைப்பற்றச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். இந் நிகழ்ச்சியைச் 'சட்டபூர்வமான கொலை' என்பர். அப்போது ஆங்கிலேய மன்னரா

யிருந்த முதலாம் ஜேம்ஸ் டச்சுக்காரருடைய நண்பராயிருந்தபடியால், அக் கொலையை அவர் பொருட்படுத்தாமலே இருந்தார். ஆனால், 17ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இங்கிலாந்தை ஆண்ட கிராம்வெல் 1654-ல் அக் கொலையுண்டவர்களின் சந்ததியார்களுக்கு 85000 பவுன் நஷ்டஈடு பெற்றார்.

டச்சுக்காரர்களுடைய வாணிக முயற்சிகள் ஜாவாவோடு நிற்கவில்லை. அவர்கள் இந்தியாவிலும் வாணிகத்திற்காகப் போட்டியிடத் தொடங்கினர். அவர்கள் 1605-ல் மசூலிப் பட்டினத்திலும், பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்துப் புழலேரிப் பக்கத்திலும், வாணிகத் தலங்களை நிறுவிக்கொண்டனர். புழலேரியில் அவர்கள் அமைத்த வாணிகத்தலத்தை 1612-ல் போர்த்துகீசியர் அழித்துவிட்டனர். பிறகு அவர்கள் 1617-ல் சூரத்தில் ஒரு வாணிகத்தலம் நிறுவிக்கொண்டனர்; வங்காளத்தில் சின்ஸுரா என்னுமிடத்தில் அவர்கள் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டு அதற்குக் குஸ்டாபஸ் கோட்டை என்று பெயரிட்டனர். 1638-58 காலத்தில் சிங்களத் தீவைப் போர்த்துகீசியரிடமிருந்து டச்சுக்காரர்கள் கைப்பற்றினர்; கி.பி. 1658-ல் தூத்துக்குடியும் அவர்கள் வசமாயிற்று; 1659-ல் நாகப்பட்டினத்தைக் கைப்பற்றினர். கிராங்கனூர், கொச்சி, கண்ணனூர் முதலிய இடங்களும் அவர்கள் வசமாயின. அவர்களுடைய மேலைக் கடற்கரையோர வாணிகத்தலங்களை மேற்பார்க்கும் பொறுப்புக் கொச்சியிலிருந்த டச்சு வணிகர்களிடமிருந்தது. 1689-ல் நாகப்பட்டினம் டச்சு இந்தியக் கவர்னரின் இருப்பிடமாயிற்று. புலிக்காட்டில் 1637-லிருந்து 1641 வரை வாழ்ந்து வந்த ஆபிரகாம் ரோஜர் என்னும் கிறித்துவப் பாதிரியார் பர்த்ருஹரியின் நீதி, வைராக்கிய சதகங்களை மொழிபெயர்த்தார்.

டச்சுக்காரர்கள் இந்தியாவில் முக்கியமாக நிலைத்துக் கொண்டு ஆட்சிபுரியவோ, நாடு பிடிக்கவோ கருதவில்லை. அவர்களுடைய எண்ணமெல்லாம் கிழக்கிந்தியத் தீவுகளான சுமத்ரா, ஜாவா, போர்னியோ என்பவற்றைப்பற்றியே. அங்குத் தாங்கள் நடத்த விரும்பிய வாணிகத்திற்கு அநுகூலமா யிருப்பதற்காகவே அவர்கள் இந்தியாவிலும் சில இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். அவர்களுக்கும் போர்த்துகீசியர்களுக்கும் முன்பே இருந்த பகைமை காரணமாக அவர்களோடு பொருது அவர்களுக்குச் சொந்தமாக இந்தியாவில் இருந்த இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். அவர்கள் கீழைநாடுகளில் பெருமளவு திறமையோடும் வெற்றியோடும் மற்ற ஐரோப்பியப் போட்டிக் கம்பெனியார்களையும் மீறி வாணிகத்திலும் அரசிய

லிலும் ஈடுபட முடிந்தமைக்குக் கோயன், வான்டீமன் போன்ற திறமைசாலிகளான டச்சுக்காரர்களே காரணராவர்.

இந்தியாவில் வாணிகம் செய்யும்பொருட்டு வந்த ஐரோப்பிய வர்த்தகக் குழுக்களின் எதிர்காலம் அவர்கள் இந்தியாவில் ஈடு பட்ட செயற்பாடுகளைவிட ஐரோப்பியாவில் நடந்த அரசியல் நிகழ்ச்சிகளாலேயே நிர்ணயிக்கப்பட்டது. நெப்போலியப் போர் களின் காரணமாக இந்தியாவிலிருந்த டச்சு உடைமைகள் யாவையும் முதன் முதல் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாகிப் பிறகு நெப்போலியன் தலைமையில் பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயரிடம் தோற்றுப்போனதால், அவ் வுடைமைகள் ஆங்கி லேயர் வசமாயின. டச்சுக்காரர் வாணிகத் தொடர்பும் இந்தியாவோடு அற்றுப்போயிற்று. ஆனால், அவர்களுடைய வாணிக, அரசியல் ஆதிக்கங்கள் கிழக்கிந்தியத் தீவுகளில் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம்வரையில் தொடர்ந் தன.

(இ) டேனிஷ் வணிகர்

டேனிஷ்காரர்கள் (அதாவது டென்மார்க் நாட்டவர்) கி.பி. 1616-ல் ஒரு கிழக்கிந்தியக் கம்பெனி[1]யை நிறுவிக்கொண்டு 1620-ல் தரங்கம்பாடியில் ஒரு வாணிக நிலையத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் அப்போது தஞ்சையில் ஆண்ட ரகுநாத நாயக்கரோடு நட்புறவு பூண்டனர். கிரேப் என்பவர் தரங்கம் பாடியை டேனிஷ்காரர்களுக்காக வாங்கினார். இந்த வாணிகக் கம்பெனியின் நோக்கம் இந்தியாவில் சரக்குகளை வாங்கிக் கிழக் கிந்தியத் தீவுகளில் விற்றல் என்பதே. இதனால் பெருத்த இலாபம் கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்தவண்ணம் கிடைக்கா விடினும், சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அவர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டனர். கலிங்க நாட்டில் உள்ள பாலஸோர் என்னுமிடத்தில் அவர்கள் கட்டியிருந்த கோட்டை அங்கிருந்த கவர்னராலேயே அழிக்கப்பட்டது. கல்கத்தாவில் செரம்போர் என்னுமிடத்தில் அவர்கள் ஒரு குடியிருப்பு ஏற்படுத்தினர் (1676). இறுதியில் டேனிஷ்காரர்களுக்கு இந்தியாவில் வாணிக நிமித்தமாகவேனும் அரசியல் காரணங்களாலேனும் நிலைத்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கி.பி. 1845-ல் அவர்கள் தரங்கம்பாடியையும் செரம்போரையும் பன்னிரண்டரை லட்சம் ரூபாய்க்கு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு விற்றுவிட்டனர்.

[1] இத்தகைய 'கம்பெனிக'ளைத் அக்காலத் தமிழர் 'கும்பினி' என்றனர்.

(ஈ) பிரெஞ்சுக்காரர்கள்

பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பதினான்காம் லூயி என்பவர் பிரெஞ்சு மன்னரானார். அவர் பிரான்ஸ் நாட்டை ஆண்ட பேரரசர்கள் யாவருள்ளும் முதற்கண் வைத்து எண்ணத் தக்க ஒரு சிலரில் ஒருவர். அவருக்குக் கால்பெர்ட் என்னும் பெரிய அறிவுடை அமைச்சர் ஒருவர் இருந்தார். அவர் அந் நாட்டின் நிதி நிர்வாகத்தையும் பொது நிர்வாகத்தையும் கவனித்தார். அவருடைய பெரு முயற்சியால் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி ஒன்று 1661-ல் ஏற்படுத்தப்பட்டது. 1668-ல் சூரத்திலும், 1669-ல் மசூலிப்பட்டினத்திலும் அவர்கள் வாணிகக் குடியேற்றங்களை நிறுவினர். அவர்கள் 1672-ல் செயின்ட்தோம் என்னுமிடத்தில் கட்டிய வாணிகக் கட்டடத்தைக் கி.பி. 1674-ல் டேனிஷ்காரர் கைப்பற்றினர். அதே ஆண்டில் பிரான்ஸ்வா மார்ட்டின் என்பவர் பாண்டிச்சேரி[1]யில் தங்கள் நிலையம் ஒன்றை ஷெர்கான் லோடி என்பானிடம் பெற்ற இடத்தில் அமைத்துக் கொண்டனர். 1677-ல் சிவாஜி சோழ மண்டலக்கரைமீது படையெடுத்தபோது, மராட்டியர்கள் பாண்டிச்சேரியைக் கொள்ளையடித்தனர். மார்ட்டின் 1686-ல் சூரத்திற்குச் சென்று திரும்பவும் பாண்டிச்சேரிக்கு வந்தார். கி.பி. 1690-ல் பிரெஞ்சுக்காரர்கள் வங்காளத்தில் சந்திர நகரில் ஒரு வாணிக நிலையத்தை ஏற்படுத்தினர். 1693-ல் டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியைக் கைப்பற்றினர்; அதைப் பிரெஞ்சுக்காரர்கள் திரும்பப் பிடிப்பதற்கு ஆறு ஆண்டுகள் ஆயின. மார்ட்டின் அந் நகரில் செயின்ட் லூயிக்கோட்டையைக் கட்டினார். இதற்கிடையே பிரெஞ்சுக்காரர்கள் சூரத், மசூலிப்பட்டினம் முதலிய வர்த்தகத் தலங்களை கைவிட்டனர். மார்ட்டின் முப்பத்தெட்டாண்டுகள் தமது நாட்டின் நலனுக்காக இந்தியாவில் உழைத்தார். அவர் கி.பி. 1706 டிசம்பர் 31ஆம் நாள் இறந்தார். இந்தியாவிற்கு வந்த பிரெஞ்சுக்காரர்களில் டியூப்ளேக்ஸுக்கு நிகராகக் கூறக் கூடியவர் மார்ட்டின்.

[1] புதுச்சேரி என்னும் சொல் பிரெஞ்சுக்காரர் கையெழுத்தில் 'பாண்டிச்சேரி'யாக மருவிற்று.

32. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி

இந்திய வாணிகத்தால் போர்த்துகீசியர் இலாபமும் செல்வாக்கும் பெற்று விளங்கியதைக்கண்ட ஆங்கிலேயர்களும் கிழக்கிந்தியாவோடு வாணிகம் செய்வதற்கு ஒரு கம்பெனியைக் கி.பி. 1600 டிசம்பர் 31 ஆம் நாள் அமைத்தனர். அதற்கான சாசனம் (பட்டயம்) அக் கால ஆங்கிலேய அரசியான முதலாம் எலிஸபெத்தால் அளிக்கப்பட்டது. அச் சாசனத்தின்படி அமைந்த கம்பெனிக்குக் 'கிழக்கிந்தியத் தீவுகளோடு வாணிகம் செய்யும் இலண்டனைச் சார்ந்த வாணிகக் கம்பெனியும் அதன் கவர்னரும்' என்பது பெயராயிற்று. நன்னம்பிக்கை முனையிலிருந்து கிழக்கிந்தியத் தீவுகள்வரையுள்ள நாடுகளோடு பதினைந்து ஆண்டுகளுக்கு வாணிகம் செய்யும் உரிமையை அக் கம்பெனி பெற்றது. அதன் விவகாரங்களை மேற்பார்க்க ஒரு கவர்னர், ஓர் உதவிக் கவர்னர், ஒரு நிதி அலுவலர், இருபத்துநான்கு உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு ஏற்பட்டது. இவர்கள் யாவரும் ஒரு பொதுப் பேரவையின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள். பங்குதாரர்களே அதன் அங்கத்தினர்கள். ஒரு பங்கு 500 பவுன் என்று நிர்ணயிக்கப்பட்டது. இச் சாசனத்தை எலிசபெத்தை யடுத்து இங்கிலாந்தில் ஆண்ட முதலாம் ஜேம்ஸ் என்பார் புதுப்பித்தபோது கம்பெனியின் நிலைமை மேலும் உறுதியாயிற்று. ஒவ்வொரு கடற் செலவின் முடிவிலும் ஏற்படும் இலாப நஷ்டங்கள் பங்குதாரரிடையே பகிர்ந்துகொள்வது முதற்கண் மரபாயிற்று. ஆயினும், 1661-லிருந்து இலாப நஷ்டங்கள் பயணங்களைப் பொறுத்திராமல் காலவரையறையைப் பொறுத்து அமையலாயின.

முதலாம் ஜேம்ஸ், அவர் மகன், முதலாம் சார்லஸ் என்பார் ஆட்சிக் காலங்களில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மன்னர்களாலன்றிப் பிறரால் ஆதரிக்கப்படவில்லை. ஆயினும், 1635-ல் சர் வில்லியம் கூர்ட்டன் என்பவர் ஒரு சாசனப்படி தனி வாணிகம் தொடங்கியது பழைய கம்பெனிக்குக் குந்தகமாயிற்று. ஆயி

னும், கி.பி. 1649-ல் அவ் விரு கம்பெனிகளும் தம்முள் ஒத்துக் கொண்ட பின் நிலைமை சற்றுச் சீர்திருந்திற்று.

கிராம்வெல் ஆங்கில நாட்டு ஆட்சியை மேற்கொண்டபின், கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலைமை ஒழுங்காயிற்று. கி.பி. 1654-ல் டச்சுக்காரர்களிடமிருந்து 'அம்பாய்னு படுகொலை'க்கு நஷ்டஈடு பெற்ற பின் ஆங்கிலேயர் எளிதில் கிழக்குப் பிரதேசங்களோடு வாணிகம் செய்ய இயன்றது. இரண்டாம் சார்லஸ் என்னும் மன்னர் அக் கம்பெனியை ஆதரித்து வளர்த்தார். 1661, 1669, 1677, 1683ஆம் ஆண்டுகளில் அந்த மன்னர் அளித்த சாதனைகளும் 1685 - 88 ஆண்டுகளில் இரண்டாம் ஜேம்ஸ் என்னும் அடுத்த மன்னர் அளித்த சாசனமும் கம்பெனிக்குப் பெரிய அளவு சுதந்தரமளித்தன. இச் சுதந்தரத்தால் கம்பெனியின் வருவாயும் இலாபமும் மிகவும் அதிகமாயின. கம்பெனி வளமுற்றதைக் காணச் சிலர் புழுங்கினர். ஸர் ஜோசையா சைல்டு, ஸர் ஜான் சைல்டு என்னும் கவர்னர்கள் கம்பெனியின் வியாபாரத் தனி உரிமையில் பிறர் தலையீட்டினைத் திறமையோடு தடுத்தமையாலும் கம்பெனிக்குப் பல பகைவர் தோன்றினர். அன்றியும், கம்பெனி ஔரங்கசீபோடு போரிட்டுப் பணியவேண்டி வந்ததை அவர்கள் சுட்டிக்காட்டிக் கம்பெனி அதிகாரிகளைக் குறை கூறினர். இப் பகைவர்கள் வேறொரு கம்பெனியை ஏற்படுத்திப் பழைய கம்பெனியின் வன்மையை ஒழிக்க முயன்றமை பலிக்கவில்லை. ஸர் ஜோசையா சைல்டு ஆங்கிலேயப் பார்லிமென்டு உறுப்பினர்களுக்கு ஏராளமாக லஞ்சம் கொடுத்துப் புதுச் சாசனம் ஒன்றைப் பழைய கம்பெனிக்கு வாங்கிக் கொடுத்தார். ஆயினும், பார்லிமென்டில், கிழக்கிந்திய நாடுகளோடு வாணிகம் செய்ய யாவருக்கும் உள்ள உரிமையை எடுத்துக் காட்டியமை பழைய கம்பெனிக்கு விரோதமாக முடிந்தது. 1698-ல் டவ்கேட் கம்பெனி என்று புதியதொரு கம்பெனி தோன்றிச் சாசனத்தையும் பெற்றுப் பழைய கம்பெனியோடு கடும் போட்டியிட்டது. ஆயினும், கி.பி. 1702-ல் அவ் விரு கம்பெனிகளும் தம்முள் உடன்பாடு செய்துகொண்டு அவ் வுடன்பாடும் 1708-ல் ஒரு பார்லிமென்டு சட்டத்தின்மூலம் உறுதிப்படுத்தப்பெற்றது. அஃது ஓர் ஐக்கியக் கம்பெனியாக உருவெடுத்தது. இதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர் கொடால்பின் பிரபு என்பவர்.

கப்பித்தான் (Captain) ஹாக்கின்ஸ் என்னும் ஆங்கிலேயர் ஆக்ரா அவைக்களத்தில் 1609-லிருந்து 1611 வரை இருந்தார். சூரத்தில் ஓர் ஆங்கில வாணிக நிலையத்தை நிறுவ அவர் முயன்றாராயினும் அம் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆயினும், 1612-ல்

ஆங்கிலக் கப்பல் தளபதியான பெஸ்ட் என்பவர் போர்த்து கீசியக் கடற்படையைத் தாக்கி வென்றமையைக் கண்ட மொகலாயர் ஆங்கிலேயரது வன்மையை உணர்ந்து சூரத்தில் வர்த்தகத் தலம் ஒன்றை நிறுவிக்கொள்ள அனுமதித்தனர். பிறகு வந்த ஆங்கிலேயத் தூதர் ஸர் தாமஸ் ரோ என்பவர். அவர் மொகலாயர் அவையில் 1616-லிருந்து 1618 வரை இருந்தார்; அவரால் இந்தியாவில் ஆங்கிலேயர் வாணிகத்திற்குச் சில சலுகைகளை மொகலாயரிடமிருந்து பெற முடிந்தது. அவர் கொள்கைப்படி இந்தியாவிற்கு வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் வாணிகம் ஒன்றைத்தான் கவனிக்க வேண்டுமே யல்லாமல் இந் நாட்டில் கோட்டை கட்டுவதும் போரிடுவதும் தவிர்க்கப்படல் வேண்டும் என்பது. புரோச், அகமதாபாத், ஆக்ரா முதலிய இடங்களில் நடந்த ஆங்கிலேயர் வாணிகத்திற்குத் தலைமை நிலையமாகச் சூரத் விளங்கிற்று. கி.பி. 1620-க்குப் பிறகு போர்த்துகீசியரைவிட ஆங்கிலேயரே கடல் வன்மையில் சிறந்தவர்கள் என்பது வெளிப் படையாயிற்று. கி.பி. 1625-ல் ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் சேர்ந்து பம்பாயிலிருந்த போர்த்துகீசிய ஆதிக்கத்தைக் கடற் போரால் அழித்தனர்; கி.பி. 1630-ல் நிலப்போரிலும் சூரத் அருகில் அவர்கள் தோற்றனர். ஐந்து ஆண்டுகள் கழித்து ஆங்கிலேயர்க்கும் போர்த்துகீசியர்க்கும் சமாதானம் ஏற்பட்டது.

கி. பி. 1661-ல் போர்த்துகீசிய மன்னர் தம் சகோதரியான காத்தரின் என்பாளை ஆங்கிலேய அரசர் இரண்டாம் சார்லஸ் என்பார்க்கு மணம் புரிவித்து, தமக்குச் சொந்தமாயிருந்த பம்பாய்த் தீவினை அன்னாருக்குச் சீதனமாகக் கொடுத்தார். இரண்டாம் சார்லஸ் அதனை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆண்டொன்றுக்கு பத்துப் பவுன் வாடகைக்கு விட்டார். 1669-லிருந்து 1677 வரை சூரத்தில் வாணிகத்தை மேற்பார்த்த ஜெரால்டு ஆஞ்சியர் என்பார் பம்பாய் நகரத்தை நல்லமுறையில் அமைத்தார். இந்தியாவின் மேல்கடல் ஓரத்தின் வடபகுதியிலிருந்த ஆங்கிலேயர்களுக்கும் சிவாஜிக்கும் பலமுறை மோதல்கள் நடந்தன. சிவாஜி சூரத்தைக் கொள்ளையடித்ததை மேலே கண்டோம். சர் ஜோசையா சைல்டு, சர் ஜான் சைல்டு இருவரும் பம்பாயிலும் சென்னையிலும் தங்கள் வாணிகத்தை வலுப் படுத்திக்கொள்ளவேண்டி, கோட்டைகளைக் கட்டும் எண்ணத் தைக் கொண்டனர். கி.பி. 1683-ல் ரிச்சர்டு கீக்வின் என்பவர் கலகம் செய்து பம்பாய்த் தீவினைக் கைப்பற்றினாராயினும், அவர் உடனேயே கீழ்ப்படிந்துவிட்டார். கி.பி. 1687-ல் மேற்கிந்தியாவில் ஆங்கிலேயர் நடத்திய வாணிகத்திற்கெல்லாம் தலைமை

நிலையமாக விளங்கியது பம்பாய். அவ் வாண்டிலேயே ஆங்கிலேயக் கம்பெனியில் மேலதிகாரிகள் ' இந்தியாவில் நெடுநாளைக்கு நிலைத்து நிற்குமாறு ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பிய ' தாகச் சென்னைக் கவர்னருக்கு ஒரு நிருபத்தில் தெரிவித்தனர். 1686-90-ல் மொகலாயப் பேரரசரான ஔரங்கசீபிற்கும் கம்பெனிக்கும் போர் மூண்டது. இதன் விளைவாகக் கம்பெனி பல சலுகைகளை இழந்து நஷ்டமுற்றது. அதன் பிறகு மொகலாயப் படைகளுக்கும் கம்பெனியாருக்கும் பகைமை தொடர்ந்து வந்தது. ஆயினும், கி.பி. 1683-ல் தலைச்சேரியில் ஒரு வாணிகத் தலமும் 1694-ல் திருவிதாங்கூரிலுள்ள அஞ்சுதெங்கில் ஒரு தலமும் அவர்களால் நிறுவிக் கொள்ளப்பெற்றன.

கி.பி. 1611-ல் ஆங்கிலேயர் மசூலிப்பட்டினத்தில் ஒரு வாணிகத்தலத்தை நிறுவினர். கி.பி.1639-ல் ஃபிரான்ஸிஸ் டே என்பவர் இப்பொழுது செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப் பட்டிருக்கும் இடத்தை விலைக்கு வாங்கினார். அங்குத் துணி மலிவாகக் கிடைத்தது என்னும் முக்கியமான காரணத்திற்காகவே அவ்விடம் வாங்கப்பட்டது. கி.பி. 1641-ல் அக் கோட்டை கட்டி முடிக்கப்பட்டது. வாணிகக் காரணங்கள் தவிரச் சில சொந்தக் காரணங்களுக்காகவும் ஃபிரான்ஸிஸ் டே சென்னையை விலைக்கு வாங்கினார். சென்னையை அடுத்த செந்தோமில் டேயின் காமக்கிழத்தி ஒருத்தி வாழ்ந்து வந்தமையும் ஒரு தனிக் காரணமாகும். செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டி, சென்னைக்கு அடிக்கல் நாட்டிய பெருமையில் டேயைத் தவிரக் கோகன் என்பாருக்கும் பங்கு உண்டு. 1641-லேயே செயின்ட் ஜார்ஜ் கோட்டை கீழைக்கரையில் அமைந்திருந்த ஆங்கிலேய வாணிகத் தலங்கள் யாவற்றிற்கும் தலைமைத் தலமாயிற்று. கி.பி. 1647-ல் கோல்கொண்டா அமைச்சரும் தளபதியுமான மீர்ஜும்லா என்பவர் சென்னையைச் சுற்றியிருந்த இடங்களை வென்று ஆங்கிலேயர் அனுபவித்து வந்த சலுகைளை உறுதி செய்தார். கி.பி. 1661-லிருந்து தொடர்ந்து கீழைக்கரையில் சென்னையே ஆங்கிலேயர்களுடைய மிக முக்கியமான வாணிகத்தலமாயிற்று. 1666-ல் ஜார்ஜ் ஃபாக்ஸ் க்ராஃப்ட் (Fox croft) என்பவர் செய்ன்ட் ஜார்ஜ் கோட்டையின் (சென்னை) முதல் கவர்னராக நியமனம் பெற்றார். கி.பி. 1672-1678-ல் சிவாஜி சோழ மண்டலத்தில் படையெடுத்தபோது ஆங்கிலேயர்கள் அவரோடு பகைத்துக் கொள்ளவில்லை. கி.பி. 1687-ல் கடலூரிலும், பரங்கிப்பேட்டையிலும் விசாகப்பட்டினத்திலும் ஆங்கிலேயர் வாணிகத்தலங்களை நிறுவிக்கொண்டனர். 1684-ல் செயின்ட்ஜார்ஜ் கோட்டைக் கவர்னருக்குத் 'தலைவர் மற்றும் கவர்னர்' என்பது பட்டமா

யிற்று. 1688-ல் சென்னை நகரம் ஒரு நகராட்சியாகி, அதற்கென ஒரு மேயரும், பன்னிரண்டு ஆல்டர்மென்களும்[1] நியமிக்கப் பட்டனர். கோல்கொண்டா அரசை வென்று கைப்பற்றிய மொகலாயப் படைத்தலைவர் சுல்பிகர்கான் சென்னையில் ஆங்கிலேயருடைய சலுகைகளை மேலும் வலியுறுத்தினர். 1690-ல் கடலூரில் செயின்ட் டேவிட் கோட்டை கட்டப்பட்டது.

வங்காளத்தில் ஹூக்ளியருகில், 1657-ல் ஓர் ஆங்கிலேய வாணிகத் தலம் நிறுவப்பெற்றது. அதனையடுத்துப் பாட்னு, காசிம்பஜார், டாக்கா என்னுமிடங்களிலும் வாணிகத் தலங்கள் தோன்றின. ஔரங்கசீபோடு கம்பெனியார் செய்த போரின் விளைவாக ஆங்கிலேயர்கள் தாற்காலிகமாக வங்காளத்தை விட்டு நீங்க வேண்டியதாயிற்று. ஆயினும், விரைவில் வங்காளத்திற்கே திரும்பி வந்துவிட்ட கம்பெனியாரின் சார்பில் ஜாப் சார்னுக் என்பவர் கல்கத்தா நகரத்தை அமைத்தார். கி.பி. 1696-ல் அங்கு ஒரு கோட்டை கட்டப்பட்டது. அதனை அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டுவந்த மூன்றும் வில்லியம் என்பவர் பெயரால் வில்லியம் கோட்டை என்றனர். கி.பி. 1700-ல் அக் கோட்டைக்கு ஸர் சார்லஸ் அயர் என்பவர் முதல் கவர்னரானர்.

[1] நகராட்சியின் தலைவர் மேயர் எனப்படுவார்; அவருக்கு நிர்வாக உதவி செய்வதற்கும் அறிவுரை கூறவும் நியமிக்கப்படும் உறுப்பினர்களை ஆல்டர்மென் என்பர். ஆல்டர்மென் என்னும் சொல் 'முதியோர்' என்றே பொருள்படும்.

1. சோழர்கள் மரபுவழிப் பட்டியல்



2. சாளுக்கிய–சோழர்கள் (1071-1279)

(1) முதலாம் குலோத்துங்கன் (1071-1122)
(இராஜகேசரி)
|
(2) விக்கிரம சோழன் (1118-1135)
(பரகேசரி)
|
- (3) இரண்டாம் குலோத்துங்கன் (இராஜகேசரி) (1133-1150)
  - |
  - (4) இரண்டாம் இராஜராஜன் (பரகேசரி) (1146-1173)
- ஒரு மகள்
  - |
  - (5) இரண்டாம் இராஜாதிராஜன் (இராஜகேசரி) (1163/66-1179/82)
  - |
  - (6) மூன்றும் குலோத்துங்கன் (பரகேசரி) (1178-1217/18)
  - [(5), (6): உறவு முறை தெரியவில்லை]
  - | (அநேகமாக மகனுயிருக்கலாம்)
  - (7) மூன்றும் இராஜராஜன் (இராஜகேசரி) (1216-1260)
  - | (அநேகமாக மகனுயிருக்கலாம்)
  - (8) மூன்றும் இராஜேந்திரன் (பரகேசரி 1246-1279)

3. பேரரசு பாண்டியர்

வீரபாண்டியன் — விக்கிரம பாண்டியன்

- முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் (1190-c–1215/16) — மூன்றும் குலோத்துங்கரின் சமகாலத்தவர்
- முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1238)
  - இரண்டாம் ஜடாவர்மன் குலசேகரன் (1236)
  - இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1238-1253)
    - ஜடாவர்மன் வீரபாண்டியன்
    - ஜடாவர்மன் விக்கிரமபாண்டியன்
    - முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251-1268)
      - மாறவர்மன் குலசேகரன் (1268-1308)
        - சுந்தரபாண்டியன்
        - வீரபாண்டியன்

மாலிக்காபூரின் சமகாலத்தவர்கள் (கி.பி. 1311-ல் மதுரையைத் தாக்கினர்)

4. ஹொய்சளர்

(1) நிருபகாமர் (1022-1047)

(2] விநயாதித்யர் [1047-1098)

(3) ஏரெயங்கர் 1063-1100)

(4) முதலாம் பல்லாளர் (1100-1110)

(5) விஷ்ணுவர்த்தனர் (1110-1152)

உதயாதித்யர்

(6) முதலாம் நரசிம்மர் (1152-1173)

(7) இரண்டாம் பல்லாளர் (1173-1220)

(8) இரண்டாம் நரசிம்மர் (1220-1238)

(9) சோமேசுவரர் (1233-1267)

(10] மூன்றும் நரசிம்மர் (1254-1292)

(11) மூன்றும் பல்லாளர் (1291-1342)

(12) நான்காம் பல்லாளர்

இராமநாதர் (1254-1295)

விசுவநாதர் (1295-1300)

5. காகதியர்கள்

(1) முதலாம் பேடா (1000-1030)

(2) முதலாம் ப்ரோலா (1030-1075)

(3) இரண்டாம் திரிபுவனமல்ல பேடா (1075-1110)

(4) இரண்டாம் ப்ரோலா (1110-1158)

(5) முதலாம் ப்ரதாபருத்ரர் (1158-1196) — (6) மகாதேவா (1196-1199)

(7) கணபதி (1199-1262) — மயிலாம்பா

(8) ருத்ராம்பா (1262-1296) — கணபாம்பா

மும்மதாம்பா = மகாதேவா

(9) இரண்டாம் ப்ரதாபருத்ரா (1295-1326)

6. பாமினி சுல்தான்கள்

- (1) அலாவுதீன் பாமன்ஷா (1347-1358)
  - (2) முதலாம் மகம்மது (1358-77)
    - (3) முஜாஹித் (1377-78)
    - பாத்கான்
  - (4) தாவுத் (1378)
  - அகமதுகான்
    - (8) பீரூஸ் (1397-1422)
    - (9) அகமது (1422-35)
      - (10) அலாவுதீன் (1436-1458)
        - (11) ஹுமாயூன் (1458-61)
          - (12) நிஜாம்ஷா (1461-63)
          - (13) மூன்றாம் மகம்மது (1463-82)
            - (14) மம்மூது (1482-1518)
              - (15) அகமது (1518-1521)
              - (16) அலாவுதீன் (1521)
              - (17) வாலிஉல்லா (1521-24)
              - (18) கலிமுல்லா (1524-27)
          - அகமது
        - ஹஸன்கான்
      - மகம்மது
  - மம்மூதுகான் → (5) இரண்டாம் மகம்மது (1378-97)
    - (6) கியாஸுதீன் (1397)
    - (7) ஷாம்ஸுதீன் (1397)

7. விசயநகர அரசு

(அ) சங்கமர் குலம்



(ஆ) சாளுவர் குலம்

சாளுவ நரசிம்மர் (1486-91)

- திருமலை
- தம்மராயர் (அல்லது) இம்மடி நரசிம்மர்

(இ) துளுவர் குலம்

ஈசுவர நாயக்கர்

நரஸ நாயக்கர்

- வீரநரஸிம்மர் (1505-9)
- கிருஷ்ண தேவராயர் (1509-29)
  - திருமலைதேவி = அளியராமராயர்
  - திருமலைராயர்
- அச்சுத தேவராயர் (1529-42)
  - வேங்கடர் (1542)
- சங்கர்
  - ஸதாசிவர் (1542-76)

(ஈ) அரவீடுகுலம்


அரவீடு புக்கர்
இராமராயர்
ஸ்ரீரங்கர்
அளியராமராயர்
(1) திருமலை (1570-72)
வேங்கடாத்ரி
பெத்ததிருமலை
ஸ்ரீரங்கர்
(2) முதலாம் ஸ்ரீரங்கர் (1572-85)
(3) இரண்டாம் வேங்கடர் (1586-1614)
(4) இரண்டாம் ஸ்ரீரங்கர் (1614)
(5) இராமதேவராயர் (1618-30)
ஸ்ரீரங்கர்
கோபாலராயர்
(6) பெத்தவேங்கடர் (மூன்றாம் வேங்கடர்) (1630-41)
சென்னவேங்கடர்
(7) மூன்றாம் ஸ்ரீரங்கர் (1642-49)

8. அடிமை வமிசம்
(1206—1290)



9. கில்ஜிகள்

- யாக்ருஷ்கான்
  - ஷிஹாப் உத்தீன்
    - (3) அலாவுதீன் முகம்மது (1296-1316)
      - கிஸிர்கான்
      - ஷாதிகான்
      - (5) குத்புதீன் முபாரக் (1316-1320)
      - (4) ஷிஹாப் உத்தீன் (1316)
      - உமர்பரித் கான்
      - உஸ்மான் கான்
      - முகம்மது கான்
      - அபுபக்கர் கான்
    - அல்மாஸ்பேக் உலுக்கான்
    - குட்லு திகின்
    - முகம்மது ஆகத்கான்
  - (1) ஜலாலுதீன் பிருஸ் (1290-1296)
    - இக்தியார் உத்தின் கான்கனன்
    - (2) ருக்குனிதின் இப்ராஹிம் அர்க்கலிகான் (1296)
    - காதர் கான்
  - மாலிக் காமுஷ் யாக்ருஷ்கான்
    - அஸத் அத்தீன்

10. துக்ளக்குகள்


(1) முதலாம் கியாஸுதீன் துக்ளக் (1320-25)
சிபாசலார் ரஜப்
(2) மகம்மது (1325-51)
குத்தாவந்த் ஸதா = குஸ்ரு மாலிக்
தாவர் மாலிக்
(3) பிரூஸ் (1351-88)
குத்புதின்
இப்ராஹிம்
பத்கான்
(4) முகம்மது
ஸாபர்
(5) இரண்டாம் கியாஸுதீன் துக்ளக் (1388-89)
(8அ) நஸ்ரத்ஷா
(7) உரிமையிலான்
அலாவுதீன் சிகந்தர் (1394)
(8) நஸிருதீன் மகம்மது (1394-1412)
(6) அபுபக்கர் (1389-90)

11. சைய்யதுகான்

- (1) கிஸர்கான் (1414-1421)
  - (2) முயிஸுத்தீன் முபாரக்
  - பரீத்கான்
    - (3) மகம்மதுஷா
      - (4) அலாவுதீன் ஆலம்ஷா (—1453)

12. லோடிகள்

- (1) பஹலுல் லோடி (1451-1489)
  - பார்பக்ஷா
  - (2) நிஜாம்கான் (ஸிகந்தர் லோடி) (1489-1517)
    - (3) இப்ராஹிம் லோடி (1517-1526)
  - ஆலம்

13. மொகலாயர்


(1) பாபர்
(2) மகம்மது ஹுமாயூன்
கம்ரான்
ஹிண்டால்
அஸ்கரி
(3) ஜலாலுதீன் அக்பர்
மிர்ஸா ஹகீம்
(4) நூருதீன் மகம்மது ஜஹாங்கீர்
முராத்
தானியால்
குஸ்ரு
பார்விஸ்
(5) குர்ரம் (ஷாஜஹான்)
ஷாரியர்
தாராஷுகோ
ஷுஜா
(9) அவுரங்கசீப் (ஆலங்கீர்)
முராத்

மேற்கோள் நூற்பட்டியல்

(BIBLIOGRAPHY)

1. E. Thomas —Chronicles of the Pathan Kings of Delhi
2. A.B.M. Habibullah—Foundations of Muslim Rule in India
3. Mohd. Hussain —Rise and Fall of Md. bin Tughluq
4. I H Qureshi —Administration of the Sultanate of Delhi
5. J.S King —History of the Bahmani Dynasty
6. K.A.N. Sastri —The Cholas
7. ,, ,, —History of South India
8. ,, ,, —The Pandyan Kingdom
9. B.A. Saletore —Social and Political life in the Vijayanagar Empire
10. R. Sewell —A Forgotten Empire
11. A. Qanungo —Sher Shah
12. Iswari Prasad —Life and Times of Humayun
13. S. Lane Poole —Muhammedan Rule in India
14. Bruce —Annals of the East India Company
15. Sir William Foster —English Factories in India
16. H D Love —Vestiges of Old Madras
17. V.A. Smith —Akbar the Great Moghul
18. W.H. Moreland —India at the death of Akbar
19. Paramarta Saran —The Provincial Government of the Moghuls
20. Beni Prasad —History of Jahangir

21. Banarsi P Saksena —History of Shah Jahan of Delhi
22. J.N. Sarkar —History of Aurangzeb (5 Volumes)
23. G. S. Sardesai —New Histry of the Marathas
24. Grant Duff —History of the Marathas
25. S. Lane Poole —Aurangzeb
26. W. Irvine —Army of the Indian Mughals
27. V.A. Smith —Oxford History of India (Part II) (Revised by I.B. Harrison)
28. R.C. Majumdar (ed.)—History of Indian People and Culture
29. Cambridge History of India Vols. III & IV.

கலைச்சொற்கள்

(தமிழ்—ஆங்கிலம்)

அ

அந்தப்புரம்	—	Harem
அரச ஆணை	—	Farman
அரசகாப்பாளர்	—	Regent
அரசத் துரோகம்	—	Treason
அரசவமிசம்	—	Dynasty
அரசவை	—	Darbar
அரசு எய்தல்	—	Accession
அராசகம், ஆட்சியின்மை	—	Anarchy

ஆ

ஆதிபத்தியம்	—	Sovereignty

இ

இடைக்காலம்	—	Middle Ages
இராச்சியம், அரசு	—	Kingdom
இஸ்லாமியர் தொழுகைச் சொற்பொழிவு	—	Kutba

உ

உடன்கட்டை ஏறுதல்	—	Sati
உள்நாட்டுப் போர்	—	Civil War

ஒ

ஒற்று	—	Espionage

ஓ

ஓவியங்கள்	—	Paintings

க

கட்டடக்கலை — Architecture
கடல் ஆதிக்கம் — Maritime supremacy
கல்லறை — Tomb
கலகக்காரர் — Rebel
கலகம் — Rebellion
காலவரன் முறை — Chronology
காலிசெய்தல், வெளியேற்றம் — Evacuation
குலமுறை — Genealogy
கையெழுத்துக்கலை — Calligraphy
கொடுமைப்படுத்துதல் — Persecution

ச

சமயப்பொறை — Sulh-i-Khul
(சமயப்) பொறை — Toleration
சிரச்சேதத் தண்டனை — Capital punishment

த

தபால் — Dak
தல ஆட்சி — Local Government
தலைவரி — Poll tax
தலைவரி — Jizya
தவறு இயல்புள்ள — Infalliable
தனி வல்லாட்சி — Autocracy
திறை — Tribute

ந

நாணய முறை — Coinage
நிதி — Finance
நிர்வாகத் துறை — Department
நிர்வாகம், ஆட்சி — Administration
நிர்வாகர், ஆட்சியாளர் — Administrator
நிலஉரிமை முறை — Land Tenure
நிலமானியத் திட்டம் — Feudalism
நிறுவனங்கள், நிலையங்கள் — Institutions
நீர்ப்பாசனம் — Irrigation
நுண்கலைகள் — Fine Arts
நேர் குடிவாரம் — Ryotwari

ப

பக்தி வழிபாட்டு இயக்கம்	—	Bhakti Cult
பஞ்சம்	—	Famine
பாதுகாவலர்	—	Guardian
பிழையாமைக் கட்டளை	—	Infallibility Decree
பீரங்கிப் படை	—	Artillery
பேரரசர்	—	Emperor
பேரரசு	—	Empire

ம

மசூதி	—	Mosque
மாற்றுந்தாய்	—	Foster mother
மானியம்	—	Fief
முடிசூட்டு விழா	—	Coronation
முடியாட்சி	—	Monarchy
மூத்தமகன் வாரிசுரிமை	—	Primogeniture

வ

வரம்பிலா ஆட்சிமுறை	—	Absolutism
வரலாற்றுளர்	—	Historian
வரலாறு வரைவியல்	—	Historiography
வல்லாட்சி	—	Despotism
வலியத் தாக்குதல்	—	Aggression
வஸீர்	—	Vazir

கலைச்சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Absolutism	—	வரம்பிலா ஆட்சிமுறை
Accession	—	அரசு எய்தல்
Administration	—	நிர்வாகம், ஆட்சி
Administrator	—	நிர்வாகர், ஆட்சியாளர்
Aggression	—	வலியத் தாக்குதல்
Anarchy	—	அராசகம், ஆட்சியின்மை
Architecture	—	கட்டடக்கலை
Artillery	—	பீரங்கிப்படை
Autocracy	—	தனி வல்லாட்சி

B

Bhakti Cult	—	பக்தி வழிபாட்டு இயக்கம்

C

Calligraphy	—	கையெழுத்துக்கலை
Capital punishment	—	சிரச்சேதத் தண்டனை
Chronology	—	காலவரன்முறை
Civil War	—	உள்நாட்டுப் போர்
Coinage	—	நாணய முறை
Coronation	—	முடிசூட்டு விழா

D

Dak	—	தபால்
Darbar	—	அரசவை
Department	—	நிர்வாகத்துறை
Despotism	—	வல்லாட்சி
Dynasty	—	அரசவமிசம்

E

Emperor	— பேரரசர்
Empire	— பேரரசு
Espionage	— ஒற்று
Evacuation	— காலிசெய்தல், வெளியேற்றம்

F

Famine	— பஞ்சம்
Farman	— அரசஆணை
Feudalism	— நிர்மானியத் திட்டம்
Fief	— மானியம்
Finance	— நிதி
Fine Arts	— நுண்கலைகள்
Foster mother	— மாற்றாந்தாய்

G

Genealogy	— குலமுறை
Guardian	— பாதுகாவலர்

H

Harem	— அந்தப்புரம்
Historian	— வரலாற்றாளர்
Historiography	— வரலாறு வரைவியல்
Infallibility Decree	— பிழையாமைக் கட்டளை

I

Infallible	— தவறு இயல்புள்ள
Institutions	— நிறுவனங்கள், நிலையங்கள்
Irrigation	— நீர்ப்பாசனம்

J

Jizya	— தலைவரி (ஜிஸியா)

K

Kingdom	— இராச்சியம், அரசு
Kutba	— இஸ்லாமியர் தொழுகைச் சொற்பொழிவு

L

Land Tenure	— நிலஉரிமை முறை
Local Government	— தல ஆட்சி

M

Maritime supremacy	— கடல் ஆதிக்கம்
Middle Ages	— இடைக்காலம்
Monarchy	— முடியாட்சி
Mosque	— மசூதி

P

Paintings	— ஓவியங்கள்
Persecution	— கொடுமைப்படுத்தல்
Poll tax	— தலைவரி
Primogeniture	— மூத்தமகன் வாரிசுரிமை

R

Rebel	— கலகக்காரர்
Rebellion	— கலகம்
Regent	— அரசு காப்பாளர்
Ryotwari	— நேர் குடிவாரம்

S

Sati	— உடன்கட்டை ஏறுதல்
Sovereignty	— ஆதிபத்தியம்
Sulh-i-Khul	— சமயப் பொறை

T

Toleration	— (சமயப்) பொறை
Tomb	— கல்லறை
Treason	— அரசத் துரோகம்
Tribute	— திறை

V

Vazir	— வஸீர்